பிஸ்மில்லாஹ்.

ஷலாகியத்தி சுல்தான் அப்துல்காதிறு லெப்பை
ஆலிம் ஆரிபு பில்லாசாகிபு ஒலியுல்லா
என்னும் இயற்பெயரையுடைய
குணங்குடி

மஸ்தான்சாகிபு அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு

இதற்கு
பிரபன்ன வித்துவான் காஞ்சீபுரம்
ம-ா-ா-ஸ்ரீ,
இராமஸ்வாமிநாயுடு அவர்கள்
இயற்றிய
பதவுரை முதலியவும்
அடங்கியிருக்கின்றன.

இவைகளை
திருநெல்வேலிஜில்லா செவ்வல்மாநகரம்
மகாவித்துவான்
எம். ஏ. நெயினுமுகம்மது பாவலர்
அவர்களால்
நன்கு பிழையறப் பரிசோதித்ததை,

அமரம்பேடு
இரங்கசாமிமுதலியார் குமாரர்
முத்துவடிவேல் மு;

சென்னை:
பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1925.



குணங்குடி மஸ்தான்சாகிபு

முகவுரை.

இந்நூலாசிரியராகிய அலாஙியத்தி சுல்தான் அப்துல்காதிறு குணங்
மஸ்தான்சாகிபு ஒலியுல்லா அவர்கள் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அ
கிவ சல்லமவர்கள் அருளிச்செய்த வொரியத்துக ளனைத்தையும் ெ
னரியாமாலை என்னுந் திருநாமத்துடன் தமிழ்ச்செய்யுளா யருளிச்செ
வித்துவானந்த சிரோமணி மின்ஹனா றுத்தீன் புலவரவர்களின் மரபிலுள்
வர்கள். இவர்கள் தந்தையின் நாமம் நெயினாமுகம்மது. இவர்கள் அ
தரித்த நகரம் பாண்டிமண்டலத்திலுள்ள காயற்பட்டினம். இவர்கள் பாலி
பருவத்தே கீழக்கரையில் அறபாகமங்களில் தேர்ச்சியடைந்த மகாஞானி
ஷெய்கு அப்துல்காதிறு லெப்பை ஆலீம்சாகிபு அவர்களிடம் சுயமார்க்
வித்யாதிகளெல்லாம் ஐயந்திரிபறக்கற்று ஹிஜ்ரி 1228-ம் ஹு திரிசிர
மடைந்து அங்கு நாடோறும் அநேக காரண திருஷ்டாந்தங்களைக்காட்டி
கலறத்துஷாம்சாகிபு அவர்களிடம் முறீதென்னும் உபதேசம்பெற்று, இ
வுலக மாயையையற முற்றத்துறந்து காயசித்தியடைந்து மௌனியா
பின்னர், மதராஸ் இராயபுரத்தில்வந்து அங்கே பாவாலெப்பை அவர்கள
தோட்டத்தின்கண்ணே கட்டிய ஞானசமாதி கட்டடத்தில் வெளிவராம
முன்னர் மூன்றுவருஷமும், பின்னர் பன்னிரண்டுவருஷமும் உணவு மு
லியன ஒன்றுமில்லாதிருந்து அநேக அற்புதங்களைச்செய்து, நாற்பத்தே
வது வயதில் இவ்வுலகவவாழ்வை விட்டும் நிரியாணதிசை யடைந்தார்க
பின்னர் அவர்களினது சிஷர்களெல்லாங்கூடி மேற்படி சமாதியை
"கபுர்" என்னும் சமாதி செய்துவிட்டார்கள். அவ்விடமே இன்ன
தறுக்காவெனப் பேர்பெற்று வருஷாவருஷம் உறுஸ் முதலியன நடந்
வருகின்றன. இதுநிற்க,

மஸ்தான்சாகிபு அவர்கள் ஜீவதிசையில் அருளிச்செய்த திருப்பாட
றிரட்டு என்னும் இந்நூலை அச்சிட்டு ஏறக்குறைய அறுபது வருஷங்களா
யும் இதற்கொருவரும் உரையெழுதி வெளிப்படுத்தாதிருந்ததினால் இ
பொழுது வேதாந்தநூல்களில் தேர்ச்சியுடையவரும், தாயுமானசுவாமிக
திருப்பாடற்றிரட்டு முதலிய நூல்களுக்கெல்லாம் உரை எழுதியவருமாகி
பிரபன்ன வித்துவான் — காஞ்சீபுரம், ம-ா-ா-ஸ்ரீ, இராமஸ்வாமி நாயுட
களைக்கொண்டு பதவுரை விசேஷவுரைமுதலியன எழுதுவித்தும், திருநெ
வேலிஜில்லா செவ்வல்மாநகரம், மகாவித்துவான் எம். எ. நெயினாமுக
மதுப் பாவலரவர்களைக்கொண்டு நன்கு பிழையறப் பரிசோதித்ததை உ
ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சிட்டு மஸ்தான்சாகிபு அவர்கள் திருவ
வப்படமும் சேர்த்து அழகாய் பைண்டு கட்டப்பட்டு காபிரைட் ரிஜிஸ்,
செய்து விற்பனைக்குத் தயாராயிருப்பதால் வேண்டிய புண்ணியவான்க
கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மற
வென்பது மனிதனின் இயற்கையாதலால் ஏதும் வழுவுறினும் உறலா
பார்க்கும் நண்பர்கள் திருத்தி வாசித்துக்கொள்ளும்படியாக ஒவ்வொ
கனவான்களையுங் கேட்டுக்கொள்ளுகின்றேன். இங்ஙனம்:

அ. முத்துவடிவேல முதலியார்
நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை

இது

மதராஸ் இராயபுரம் காஸியும்

"தைக்கா" கலீபாவுமாகிய நலறத்து

ஷாஂ முகம்மது இஷயத்துல்லா லெப்பை ஆலிம்சாகிபு

அவர்கள் எழுதிய

நல்வசனம்.

இந்தக் குணங்குடி மஸ்தான்சாகிபு அவர்கள் திருப்பாடற் றட்டிற்கு: பிரபன்ன வித்துவான், காஞ்சீபுரம், ம-ா-ா-ஸ்ரீ, ராமஸ்வாமி நாயுடவர்கள் உரை எழுதியிருக்கிறதையும், ஷை நாயு வர்கள் எழுதும்போது அறபாகமத்தைத் தழுவி விட்டிருந்த தலிரண்டு கவிகளுக்கும், எமது முஸ்லிம் கௌன்ஸலென்னும் யர்சங்கத்துத் தலைமைப்புலமை திருநெல்வேலிஜில்லா செவ்வல்மா நரம் மகாவித்துவான் எம். ஏ. நெயினாமுகம்மதுப் பாவலரவர்கள் ழுதிய பதம் விசேஷ முதலிய உரைகளும், இறபானுடைய ஆராய்ச் க்கும், "லுகாத்து" முதலிய ‥ இஸ்திலாகாத்துஸ்ஸூபிய்யா" க்கும் நன்றாகவே எமது நோக்கத்திற்குச் சரிதோன்றுகின்றன. ஆகலின்),

இந்நூல், ஞானந் தெளிவோர்க்கு அவசியம் வேண்டிய பொரு ாயிருக்கிறது.

இங்ஙனம்:

அல்அப்துல் பகீறு இஸாறுகுமத்தில்லா ஹில்கதீர்,

காஜீ. ஷாஂ முகம்மது இஷயத் துல்லா லெப்பை

ஹில்காதிரீ கானல்லாஹுலஹுல்பாரீ.

நூலினுட்பிரிவு.

சிறப்புப்பாயிரம்.

காதிரி - சென்னை புத்தகபரிபாலனத்தலைவர்

காதிரி-கண்ணருமதுமகுதூமுகம்மதுப்புலவர்

அவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்வளருஞ் சோலையெனு மாதவண்மே லாசைகொண்டு
 சீமூத மாம்புருடன் வந்து சேர்ந்தே
யேர்வளரும் படிசயனித் திருந்துசுக போகந்துய்த்
 தின்பானந் தத்தினொடு விடுநீ ரிந்தப்
பார்வளரும் படிநிரம்பு தடாகநனி சூழ்ந்துசெல்வம்
 பரவுதிரு நெல்வேலிப் பேட்டை வாழ்ந்து
பேர்வளரும் பங்காள முகம்மதுரா வுத்தருள்
 பிள்ளைமகு தண்ணரா வுத்த ரென்போர். (க)

பொன்வளருஞ் சென்னையினின் முன்னவர்க ளச்சிலிட்ட
 புகழ்பெருகு குணங்குடிமஸ் தான்சாகி
பென்னுமொலி யவர்கடிருப் பாடலினைப் பிழையாக
 வெத்தனையோ பதிப்புகளை யச்சிலிட்டு
நன்னெறிக ளறியாதார் கல்வியிலார் பொருள்வேட்டு
 நலந்தீது தெரியாது நாளும்விற்கு
மன்னவைகண் டறிவுடையார் பலர்நீவி ரிதையழகா
 யச்சிலிட்டுத் தாருமென்ற வருமை யோர்ந்தே. (உ)

ஒருமொழியும் பிசகாது பலர்மொழியும் பார்த்துரைக்கு
 முண்மையொடு பஞ்சலட் சணப்பெ ருக்குந்
தருமியதி யுளசிந்தைச் சண்முகப் பிள்ளையெனச்
 சாற்றரிய வித்துவா னேக்கத் தோடு
பொருணனிகொண் டெவ்வெவரு மிகுமிகுநற் றிறமையெனப்
 புகழ்ந்துவிழி சிரசினிடை பொருத்தி முத்த
வருமையொடு மச்சிடுவித் தளித்தனம்பா லுமவ
 ருதியரு ளுண்டாகி வாழிதானே. (ங)

திருமயிலை - வித்துவான்

சண்முகம்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நீர்காட்டும் வயல்காட்டுந் தென்மதுரை தன்மருங்கு நிலவுங் காட்டி, யேர்காட்டுந் தமிழ்ச்சங்க நனியிலங்க விலமதிகாட் டிருஞ்ச டைக்காட், டார்காட்டு மணிமுடியா ரெண்ணெண்ணா டல்கள்காட்டு மழிவில் சீர்த்தி, பார்காட்டும் படியென்றும் பஞ்சவனின் றாண்டு வரும் பாண்டி நாடு. (௧)

சொல்லையவா வியபொருள்போ லென்னெஞ்சந் தானவாந் தோன்றலின்று, வல்லையொரு வேய்நல்கு முத்தரென யாருநனி வழங்கநின்று, முல்லையவாம் புன்மூரன் முறுவலுமை மனமகிழ முன்னி யோங்கும், நெல்லையெனும் பதிக்கொருசார் நெல்வெலிப் பேட்டை யொன்று நிலவுமன்றே. (௨)

அறங்காட்டுந் துறையனைத்து நபிமார்க ளுரைத்தனர்மற் றம லன்சீர்த்திக், திறங்காட்டு நிலைபிதென மக்கநகர் தனின்மேவித் தெரித்த நங்கள், மறங்காட்டுங் கூரியதோர் வாளேந்தும் பெருந் தகைபோர் மன்னி நின்ற, நிறங்காட்டுந் தார்வேய்ந்த முகம்மதிரா வுத்தர் நெடுநோன்பின் மாதோ. (௩)

தறைசெய்தவப் பயனெனவந் தெம்மனோர் நனிவியக்குந் தகைமையாளன், பொறையீகை வாய்மைமுத லனகுணங்கள் கோட்டி கொளும் புனிதனென்று, மிறைவனடிக் கன்பனெனு மகுதண்ணாரா வுத்த னென்றியற்பேர், அறைதரு நண்பனும்பரிவி னனிநாடிப் பிழைதபுத்திட் டளித்தியென்ன. (௪)

வணங்குவார்க் கின்னருளை வழங்குபெரு வாழ்வினான் மாயநெஞ் சோர், இணங்கறியாக் கொள்கையினா னிருமையுமெம் மோர்க்குதவு மெழிலிபோல்வான், குணங்குடியா ருருயிருக் கருள்சுரந்த தமிழ்ச் செய்யுள் குலவுஞான, மணங்குடிகொண் டதுமுன்னே ரச்சிட்ட வாறுநனி வழங்கினனால். (௫)

பொன்னிவரு மணிமாடம் பொலிகாயற் பட்டணத்துட் பொலி ந்து வாழ்வோன், பன்னருஞ்செந் தமிழ்வண்ணப் பாப்புலமை பாடி வரும் பண்பினனொற், கின்னினிய நண்பன் சீறுவினைவா சகமாக விய வல்லோன், தன்னனைய கண்ணகு மதுமருதூ முகம்மதுவாந் தமிழ் வல்லோனே. (௬)

பேறை - தசாவதானம்

செகநாதப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பணங்குடியாந் தலையரவும் பாணனுமே சிரகரகம் பணத்தைச் செய்யக், குணங்குடி மஸ்தான்சாகி பருளியதண் ணருட்பாடல்குவ லயத்தே, யெணங்குடிலத் தவர்பதித்த வதிவிரித்துப் பிரதிசுத்தமி னையவா றெண்ணி, மணங்குடிமை மருதண்ணா ராவுத்த ரச்சிலிந் நாள் வயங்கினரால்.

குணங்குடி.

மஸ்தான்சாகிபு அவர்கள்பேரில்

மகா வித்வான் திருத்தணிகை

சரவணப் பெருமாளையரவர்கள் பாடிய

நான்மணிமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

எண்சீர்க் குணங்குடியா னென்னுங் குருமணிமேல்
வண்சீர்த் தமிழ்நான் மணிமாலை-பண்சீர்கொள்
கற்பனைசேர் பொற்பினவில் கைக்குப் பலவகையாங்
கற்பனைதீர் சிற்பரன்றாள் காப்பு.

நூல்.

நேரிசை வெண்பா.

பொன்னாதி யாம்பொய்ப் பொருளினுறு புன்சுகத்தை
மின்னாமென் றெள்ளா விரகிலிகே-ளின்னே
குணங்குடியா னஞ்செய் குறிவாளி நல்க
வணங்குடியா னஞ்செய் வழுத்து. (க)

கட்டளைக் கலித்துறை.

வழுத்துந் தொழும்புடை யன்பமைந் தோர்தமை மாநிலருள்
பழுத்துங் குணங்குடி யான்கரை காண்டரு பண்புடைத்தாய்
முழுத்தும் பவக்கட லைக்கடப் பித்திசை முற்றுறவே
யழுத்தும் கரைபெற வில்லாத வானந்த மாங்கடலே. (உ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கடல்சூழ் புவியி லுளத்திருளைக்
கருணை யொளியி னாற்களைந்து
விடல்சூழ் பவரிற் குணங்குடியான்
மிக்கோ னெனற்கோர் தடையுளதோ
மிடல்சூழ் புறத்தின் விழிமறைத்து
மேவு மிருளை விரிகதிராங்
கடல்சூழ் பொருள்கள் பலவுறினு
மலறி யுயர்வாய்த் தோன்றுறுமே. (௩)

நேரிசை யாசிரியப்பா.

தோன்றுபல் பாதகத் தொகுதியா மைந்தரை
யீன்று வளர்க்குமா வென்னுமிக் கலிதனிற்
காட்சியிற் புலப்படாக் கடவுளுண் டெனலு
மாட்சியி னவனையா மருவலுண் டெனலு
முடலமீ தன்றிவே றுயிருள தெனலுந்
துயிலுண வொழித்துத் தொடர்புல னடக்கிப்
பயிலு மிஞைலயம் பண்ணலுண் டெனலுங்
கண்டவர் யாரிவை கட்டுரை யாமெனக்
கொண்டரு நூலையுங் குருவையும் பழித்துத்
தவத்தொழில் சிறிதுந் தழுவாது கைவிட்
டவத்தொழின் முழுவது மஞ்சாது புரியுங்
கொடியவர் கெட்டுளங் குலைந்துடல் விதிர்ப்ப
வொடிவரு பத்தியி னுற்றவர் தமக்கெலாங்
கடவுளை யவனடி காண்டகு திறத்தினைச்
சடமுறு முயிரவன் றன்னின்வே றன்மையை
வியத்தகு மைம்புலன் வென்றுமன னடக்குறு
நயத்தகு மியோகமெய்ஞ் ஞானநல் வியல்பினை
யையந் திரிபற வருளினு முள்ளங்
கையுறு நெல்லிக் கனியென வுணர்த்து
மிணங்கு மெய்ப் புகழொடு மிசைந்தான்
குணங்குடி யானெனக் குலவுமா தவனே. (௪)

நேரிசை வெண்பா.

மாதவஞ்சேர் மேலோர் வழுத்துங் குணங்குடியான்
றீதவஞ்சேர் நம்மவித்தை தீர்க்குமெனக்—காதல்
விரைந்துபுகழ்ந் தோரிகழ்ந்தோர் மேவுவர்மெய்ப் போதம்
வரைந்து பிழைக்கும் வழி. (௫)

கட்டளைக் கலித்துறை.

வழிசேர் குணங்குடி யானெனு மாரியன் மல்கருள்கூர்
விழிசேர் திருமுகத் திங்கள்கண் டார்க்கன்றி மேவலுண்டோ
பழிசேர் மனவிந்து காந்த முருகுறும் பண்பினொடு
மொழிசேரஞ் ஞான மெனுமிரு ணீங்கு முறைமையுமே. (௬)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முறைமுறைவந் தரசரெல்லாம் வணங்கச் சீர்சான்
முடிபுனைந்து புடவிமுழு தாளும்பேறு

மறைதருமோர் வீட்டினுக்கே யவாவுண் மேவி
யரைக்கருங்கோ சிகமொழித்துக் கந்தை சூழ்ந்து
பொறையுறுநின் றிருவருள்பெற் றைய மேற்றுண்
புண்ணியரா லொருபொருளென் றெண்ணற் காமோ
குறைவறுநற் புகழ்பரம யோகி யென்னுங்
குணங்குடியா னேவிளங்கக் கூறு வாயே. (எ)

நேரிசை யாசிரியப்பா.

வாயினுற் பலநூல் வகைதெரிந் துரைத்துங்
காயமேல் வெண்பொடி கவினுறப் பூசியுஞ்
செய்யகல் லாடையைத் திகழ்ந்திட வுடுத்துந்
துய்ய சடைமுடி துதைதர முடித்துந்
தண்டுக மண்டலஞ் சால்புறத் தாங்கியு
மண்டல மிசைவிரி மான்றோல் லிருந்தும்
படர்புலச் சூறையிற் படுசிறு துரும்பென
விடர்கெழு மனத்தரா யிருக்கின் றனர்பலர்
தெளிதிரைக் கடல்சூழ நெடும்பெரும் புவிமிசை
யளிவளர் குணங்குடி யானெனு மமல
சாற்றுமச் சாதனந் தொனுன் றிலாமலும்
போற்று முனதருள் பொருந்திய வொருசில
ரொருதம தியல்புணர்ந் திருவினை யகற்றி
மூவா சைத்திற மேவாது விடுத்து
நாற்கதி நணுகுறு மேற்கதி விரும்பி
யைம்பொறிக் கெதிர்வற வெம்புல னடக்கி
யறுசம யங்களி னெறிநிலை தேறி
யெழுபிறப் பிகந்ததென் விழுமிய செருக்கிற்
பத்தியாற் படரெலா மொருவி
நித்திய நந்த நிலையரா யினரே. (அ)

நேரிசை வெண்பா.

ஆயுங்கா லன்பி னழியாத் துணையாகுங்
காயுங்கா லன்படர்ந்து காதவுடன்—மாயுங்கா
னீதிக்கும் போதயனை நேராங் குணங்குடியான்
போதிக்கும் போதப் பொருள். (௯)

கட்டளைக் கலித்துறை.

பொருட்செல்வம் புல்லிய தென்றே விடுத்திந்தப் பூதலத்தி
னருட்செல்வ மெய்துங் குணங்குடி யானரு ளாதரித்தோர்

தெருட்செல்வ நன்கெய்தி யைம்புலன் மாளச் செகுத்தினியா
மிருட்செல்வ மல்ல மெனவே மகிழ்வுற் றிருப்பர்களே. (க0)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நள்ளுண்டுங் கொலைபுரிந்துங் கபடஞ் செய்துங்
கணிகையர்தம் புணர்ப்பினுறு காம நோயா
லெள்ளுண்டுந் திரிகொடும்பா தகத்தோர் தாமு
மிணையில்குணங் குடியானே யிறைவா வுன்றன்
விள்ளுண்ட கமலவடி படிந்து ளொன்று
மேற்படப்பெற் றிடினவர்வெவ் வினைக ளெல்லாந்
தள்ளுண்டு சிறுசிலையொன் றெடுத்து வீசத்
தருநிறைபுட் குழாமெனவே பறந்து போமே. (கக)

நேரிசை யாசிரியப்பா.

மேதகு நிலையினை மேவிவாழ் வித்தக
வோதக விருடனை யொழிக்கு மாமணியே
யன்பினர் மகிழ்கொள வருள்பொழி முகிலே
யின்பகன் குதவுறு மினியதெள் ளமுதே
துகளற வோங்கிய துறவினர்க் கரசே
திகழறந் தாங்குபு சேர்குணங் குடியாய்
நின்னை வணங்கினோர் நெஞ்சா லயந்தொறு
முன்னை யிருத்திவே றுரைகின் றனையா
லொருவனோ பலரோ வொருநீ
தெரிதரப் புகல்கநின் றிருவுள மகிழ்ந்தே. (கஉ)

நேரிசை வெண்பா.

தேவருக்கு மெய்தரிய சிற்சுகத்தைத் தற்புகழ்ந்தோர்
யாவருக்கும் பாரினுழி யாதெளிதி-னீவனயந்
தொப்பில் பெருந்தவத்தி னேங்கு குணங்குடியான்
செப்பும் வினையனைத்துந் தீர்த்து. (கங)

கட்டளைக் கலித்துறை.

துதியும் பழியு மமுதமும் புற்கையுந் துப்புமப்பு
நிதியுஞ் சிலையுங் கலவையுஞ் சேறு நிகருறவே
வதியுந் திறத்திற் குணங்குடி யானருள் வாய்த்தவன்பாற்
பதியுங் கருத்துடையார்கள் கருத்துடைப் பார்கண்மெய்யே. (கச)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மெய்யுறுசீர்க் குணங்குடியா னெனும்பவனே யாரினிவ்
விரிநீர் வைப்பி
னய்யுறுபித் தொடுவாத மல்கியைய மேலிடினு
நாடி நோக்கி
யுய்யுநன் னிலைபெறவோர் மாத்திரைதன் னுளமிரங்கி
யுரைத்தல் செய்யும்
பொய்யிறுமிப் பவநோயை யொழிந்திணையி லாதசுகம்
பொருத்து மாறே. (௧௫)

நேரிசை யாசிரியப்பா.

மாறுகொண் டென்மன மாகிய பரியை
வீறுகொண் டவாவெனும் வீரனிங்கொருவ
னழுக்கா றெனுங்கல் லணைமிசை யார்த்தாங்
கிழுங்கா றுடைசின மெனுங்கலி னஞ்சேர்த்
தளியறு செருக்குமிக் காகிமே லிவர்ந்து
வளியெனும் வாதுவன் வாய்ந்துடன் றொடர்தரப்
பொறியெனுங் கொடுவழி புகுந்திடச் செய்தலு
நெறிபிறழ்ந் தப்பரி நீள்புலக் கான்புகுந்
தரிவையர் முயக்கெனு மளற்றினுள் வீழ்ந்துந்
தெரிபொன் னெனும்வனத் தீமிதித் தழுங்கியும்
பகர்மண் ணெனுங் கொடும் பாறைதாக் குற்று
மிகுபெருந் துன்பொடு மெலிந்துழல் கின்றதா
லின்குணங் குடியா னெனுந்தவர்க் கரசே
நன்குமற் றதனைநீ நல்வழி திருப்பியே
யருளெனும் வாளினவ் வீரனைத் துமித்துக்
கருதுமக் கல்லணை யாதிகள் களைந்தொழித்
தென்வச மாங்குவை யெனின்யா
னின்வச மாகுவ னினதியல் புகழ்ந்தே. (௧௬)

நேரிசை வெண்பா.

புகழ்ந்து குணங்குடியான் பொங்கிசையை நெஞ்சந்
திகழ்ந்துபுல வீர்பாடல் செய்மி—னிகழ்ந்து
மலத்திருக்கை மாற்றிநிலை மாறுவின் பெய்தி
நலத்திருக்கை நல்கு நயந்து. (௧௭)

கட்டளைக் கலித்துறை.

நயமேவு கஞ்ச முகமுங் கருணை நயனமுஞ்சீர்ப்
பயமேவு செம்பொ னுறழ்மே னியுமெழிற் பாதுகைசேர்
சயமேவு தாளுந் தலைவிரி கோலமுஞ் சார்ந்தன்பரி
தயமேவு மென்றுங் குணங்குடி யானெனுஞ் சற்குருவே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

குருவா யடுத்தோர்க் கருள்சுரக்குங்
கோதில் குணஞ்சேர் குணங்குடியா
னுருவா யருவா யுபயமுமா
யொன்றாய்ப் பலவா யறிஞர்விழை
திருவாய் விளங்கும் பரநிலையைத்
தெரிந்து மௌனின்மற் றவன்பெருமை
ஒருவா யுடையோ னும்புகழ்வே
னோரா யிரம்வா யுறினொருங்கே. (க௯)

நேரிசை யாசிரியப்பா.

ஒருங்கிய மனத்தொடு மொருகாசு மிலனுக்
கருங்கடற் புவிமிசைக் காதன்மீ தூர
வழுத்தி யன்புடை வந்திரக் கின்றவ
னெழிற்குணங் குடியா னெனுமருட் செல்வ
தன்னையு மிழப்ப தல்லா
லென்னை யவன்பெற வியம்பருள் சுரந்தே. (உ0)

நேரிசை வெண்பா.

சுரக்குமணற் கேணியினீர் தோண்டுந் தொறுமைந்
தரக்குங் குணங்குடியா னன்பர்க்-கிரக்கமொடு
மானந்தத் தேறல் வரப்புகல்வ தால்தோறு
மானந்தத் தேறல்சுரப் பாம். (உக)

கட்டளைக் கலித்துறை.

ஆந்துணை நாடிற் குணங்குடி யானென் றறிந்தவன்பாற்
போந்துணை யாடன்பு செய்தவர் செய்தவர் பூதலத்திற்
சாந்துணை யுங்கை வருடிச்செவ் வாய்ச்சியர் தாட்கமலப்
பூந்துணை யூட லொருத்தாங்குப் புல்லினர் புல்லினரே. (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

புல்லியு மல்லி சேர்ந்து பொலிவுறு மணத்த தாகுந்
தொல்லியல் வழுவா வண்மை தொடர்குணங் குடியா னென்னும்
நல்லியன் ஞான மூர்த்தி நாமமுற் றிடுத லாலே
சொல்லிய வெனது சொல்லுந் தோன்றுறுஞ் சிறப்பி னுற்றே. (உ௩)

நேரிசை யாசிரியப்பா.

உற்றுளங் கெழுமிய நற்றிற வன்பொடுங்
குணங்குடி யானருட் கிணங்கினோ ரியார்க்கும்
பகைமையுங் கேண்மையும் புகலிலை யெனலெ
னெடுங்கா லந்தமை நீங்காது பழகிய
கொடுங்கேண் மாயையைக் கொல்பெரும் பகைவராய்க்
கதுவிய கேண்மையிற் கலப்பர்
புதிதென வெய்திய போதந் தனக்கே.

நேரிசை வெண்பா.

தனக்குத்தா னேநிகரான் தத்துவவத் துவனு
மினக்குத்தா னன்றி யெவர்க்குண்டு-நினைக்குங்காற்
கூறு மணிசேர் குணங்குடியா னேவிமலா
தேறுதவ யோகமுயல் சீர்.

கட்டளைக் கலித்துறை.

சீரை விரும்பினர்க் கின்றுமு லோபமெய் சேருநகை
போரை விரும்பினர்க் கின்று மனநிலை பூவையர்த
மேரை விரும்பினர்க் கின்றுங் குணங்குடி யானிடஞ்செய்
நாரை விரும்பினர்க் கின்று முலகர் நவிலவரே. (௨௬)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நவிலுமிள மையுமதனை யுறுமுடலு மதனையுள
நயந்து காக்கக்
குவிபொருளும் புனற்குமிழி போலநிலை யல்லவெனுங்
குணத்தை யோர்ந்து
புவிபுகழு மெஞ்ஞானக் குணங்குடியான் றிருவருளைப்
பொருந்தற் கெண்ணார்
தவலறுசீ ரகண்டபரி பூரணமாஞ் சிற்பரன்றாள்
சார்தலுண்டே. (௨௭)

நேரிசை யாசிரியப்பா.

உண்டு முடித்து முறுபொரு ளீட்டியு
மெண்டகு வாழ்நா ளியாவையுங் கழித்தே
யணங்குசெய் வினைமுய லசடருக் கறிவருங்
குணங்குடி யானருட் குரிசி லிசையிசை
நாவாய் நாவா யாகு
மோவாப் பவக்கட லொழிந்துகரை பெறற்கே. (௨௮)

நேரிசை வெண்பா.

பெறற்கரும்பே றென்றுளதோ பேருலகில் யார்க்குந்
தெறற்கருமா யைக்கழிவு செய்யும்-விறற்கிசைந்த
மன்னருளங் கொண்டு மதிக்குங் குணங்குடியான்
றன்னருளங் குற்றோர் தமக்கு. (௨௯)

கட்டளைக் கலித்துறை.

குவலைய மெஃகு மொருசாண் வயிற்றின் குழிநிறைப்பக்
கவலை யடைந்திரைக் கேயுழல் வீர்பயன் கண்டதுண்டோ
நவலைய நீக்குங் குணங்குடி யானரு ளைக்கிலிழித்
திவலைய ருவன்பிற் சேரினுண் டாங்கடை தீர்சிறப்பே. (௩0)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சிறக்கும் புகழு மடுத்தோங்குஞ் செறிதீ வினைகளெலாம் விடுத்துப்
பறக்கும் வித்தை யிருணீங்கும் பத்தியுளத்தின் மேன்மேலும்
பிறக்கு மதீதப் பெருவாழ்வு பெருகு முலகிற் பேதநிலை [ர்க்கே.
துறக்கு முறவோன் குணங்குடியான் சொல்லுநெறியைத் துன்னின

நேரிசை யாசிரியப்பா.

துன்னுறு திரைக்கடல் சூழ்பெரும் புவிமிசை
பன்னுறு நிலைநெழு பலசம யங்களு
ளச்சம யத்தெவ ரெவ்வா றுகருதினு
மச்சம யத்தவர்க் கவ்வா றிருந்தருள்
பலவடி வங்களும் பலநா மங்களு
நலமுற மருவிய நாயக னாகியு
முருவும் பெயருமொன் றுறு துவே றாகிச்
செருவளர் சமயா தீதமுற் றொளிருஞ்
சிற்பரம் பொருளினைத் தெரிக்கு
நற்குணங் குடியா னெனுநா யகனே. (௩௨)

நேரிசை வெண்பா.

நாயகனார் நல்வரவை நாடுங் குலமகள்போற்
றூயகமாந் தற்பரனைத் தாங்காண—நேயமுளங்
கொண்டோர்க் கலது குணங்குடியான் கண்ணருட்பே
றுண்டோவிப் பூதலத்தி னுள். (௩௩)

கட்டளைக் கலித்துறை.

உள்ளினுங் கண்மு னெழுதினுங் காதி னொருவர்சொலக்
கொள்ளினு நாவினிற் கூறினு மின்பங் கொழிக்குமுன்பேர்
கள்ளினு நெஞ்சை யழிக்கின்ற காமங் கரிசிலரைத்
கள்ளினுஞ் சூழுங் குணங்குடி யானெனுந் தற்பரனே. (௩௪)

கலிவிருத்தம்.

பரம யோகியைப் பற்றொன் றிலான்றனைக்
கரவி லாதக ருணைக் கடலினைக்
குரவ னாகுங் குணங்குடி யான்றனைப்
பரவி னார்க்குப் பவப்பிணி யில்லையே. (௩௫)

நிலமண்டில வாசிரியப்பா.

இல்லையோ வுளதோ விடையென மருண்டு
முல்லையி னரும்பே முறுவலென் றுரைத்துங்
கொங்கையைச் செம்பொனிற் குடமென வியந்துஞ்
செங்கையைக் காந்தட் செழுமல ரென்றும்
விழியைக் கூர்நெடு வேற்படை யென்று
மொழியை நறுஞ்சுவை முதிரமிழ் தென்று
மிதழினைக் கொவ்வையி னெழிற் கனியென்று
நுதலினைப் பிள்ளைப் பிறையென நுவன்றும்
வனிதையர் முயக்கிடை மயங்கிவீழ்ந் தழுந்துந்
துனியுறு வோர்மனச் சோர்வினை யொழித்திட
மறைபுகன் ஞான வளமினி தருளுங்
குறைவரு நற்குணங் குடிகொண் டிருத்தலா
லுன்பெயர்க் காரணத் துறுபொரு ளுணர்ந்தனங்
கொன்பெறு புகழ்வளர் குணங்குடி யானே. (௩௬)

நேரிசை வெண்பா.

யானென தென்னுஞ் செருக்கற் றியாவுமொரு
தானெனவே கொள்ளுந் தகையாகு—நானிலத்திற்
கூருங் கருணைக் குணங்குடியான் சந்நிதியி
னேருங் கருத்தோர் நிலை. (௩௭)

கட்டளைக் கலித்துறை.

நிலையுறு சத்துச்சித் தாநந்த மாக நிறைபொருளைக்
கலையுறு மாட்சியிற் றுனுற்றி யாரையுங் காட்டவல்லோன்
புலையுறு மியாக்கை வருந்துற நோக்கும் புனிதர்புகழ்
தலையுறு சீர்கொள குணங்குடி யானெனுஞ் சற்குணனே. (௩௮)

கலிவிருத்தம்.

குணங்குடி யானருள் கூடி னலத்தி
னிணங்கிய சிந்தைய ரேத மகற்றி
யணங்கறு மின்பி னமர்ந்துல கத்தோர்
வணங்கி வழுத்துறு மாண்பொடு வாழ்வார். (௩௯)

நிலமண்டில வாசிரியப்பா.

வார்தரு கூந்தலார் வரிவிழிக் கணையு
மேர்தரு மதனவே ளெறிமலர் கணையு
முறுசெயப் பெறு தொளிர்திரு மேனியோய்
கூறுபல் புகழ்வளர் குணங்குடி யானே
இயலுறு மன்புகொண் டெய்தினோ ரியார்க்கும்
மயர்வறு மதிநிலை யருள்செய நின்று
மண்ணுல கந்தனில் வழங்குகின் றனைநீ
விண்ணுல கந்தனில் விளங்குபொன் னெனவே. (௪0)

இஃது குணங்குடி மஸ்தான்சாகிபு அவர்கள்மீது
மேற்படியார் மாணாக்கராகிய சிவயோகி

ஐயாசாமி முதலியாரவர்கள் பாடிய

தோத்திரப்பா.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தண்ணுத கத்தின் குணமழல விக்குந்
தன்மையா யிருந்துமோர் கடத்தி
னண்ணிய போதவ் வழலினைற் கொதித்து
நலிவுறு நியாயம்போ லுடலில்
புண்ணிய வான்மா பொருந்தியிந் தியத்தாற்
புன்மையாய் விளங்குவ தல்லா
லெண்ணிய பந்த மாதிய வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (க)

மதிதன துருவிற் களங்கமில் லாமல்
வான்மிசை வயங்குறப் புவியின்
விதமுறு சாயை யாற்களங் குளதாய்
விளங்குறுந் தகைமைபோ லான்மா
சதிசெயு மனதால் விகற்பசங் கற்பத்
தன்மைகொண் டியங்குவ தல்லா
லிதமகி தத்துட் சார்வன வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (உ)

மன்னிய படிக மிட்களங் கமதாய்
வயங்கினுஞ் சகசமாய்த் தோன்றுந்
தன்னிழற் சாயை யாற்கறுப் புளதாய்த்
தயங்குறுந் தன்மைபோ லான்மா
துன்னுமா ணவத்தி னலைபிமானச்
சுழலினின் றியங்குவ தல்லா
லின்னல்செய் துவித பேதம துளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (ங)

மாசிலா தொளிரும் பெருவெளி யாய
வானிடை நீனிற மதுதா
னேசுறு மித்தியா ரோபமாய்த் தோன்றி
யிலகுறு முறைமைபோ லான்மா
வாசுறு மவித்தியா மலசகி தத்தா
லவத்தையிற் றியங்குவ தல்லா
லீசனுஞ் சீவனு மிரண் டுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (ச)

வானிடை யொளியைப் பரப்புமே பரிதி
மன்னிய சலத்தினுட் டோன்றி
லானதி னுருவ மச்சல மசையி
னசைவுறுஞ் செய்கைபோ லான்மா
கானலை நிகர்த்த புனலிடை யந்தக்
கரணமோ டிலங்குவ தல்லா
லீனமாந் தனுவா தியபல வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (ரு)

பகரும் புனறன் னிறம்வெளுப் புடைய
பான்மையோ டிருக்கினும் பார்க்கிற்
சகசமாய்க் கரிய நிறமுற விளங்குந்
தன்மைபோ னித்திய வான்மா
தகையுறு மாயா மயக்கொடு தியங்கித்
தனைமறந் துறங்குவ தல்லா
லிகழுறு மமதை யகந்தைக ளுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (சா)

அழிவுறும் பிருதி வேகமா யிருந்து
மசலமே முதலிய பலகல்
லெழிலுறு முறுக்க டோன்றிநின் றிலங்கு
மியற்கைபோ னித்திய வான்மா
வொழிவுறு காணு விதமுறு நாம
ரூபமோ டுறைகுவ தல்லா
லிழிவுறுஞ் சிருட்டி யாதிய வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (எ)

வெள்ளைவா கனத்தின் விளங்குவெண் மதிதன்
மேற்பறந் தோடுதன் முகிலென்
றுள்ளுறத் தெளியா தொளிர்மதி யோடு
தெனச்சொலு முவமைபோ லான்மா
கள்ளவஞ் ஞான மாதிய வவத்தை
களுக்குள்ளாய்க் கலங்குவ தல்லா
லெள்ளுறுங் கொடிய சஞ்சல முளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (அ)

எங்கணு மாகா யம்விரி வாகி
யிருந்துமண் ணாதிய பலவின்
சங்கமாய் மறைபட் டதினதி னுருவாய்த்
தடித்தொளிர் தன்மைபோ லான்மா
பொங்கிய தாதான் மியத்திரை யதனுட்
பொருந்திநின் றிலங்குவ தல்லா
லிங்குள தங்கே யிலையென லாமோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (கூ)

சுடரில கியசெந் தீப்புகை யின்றிச்
சொலும்பிர காசமோ டிருந்து
மடருறும் விறகாற் புகையுள தாகி
யவிர்தரும் பான்மைபோ லான்மா
மடமையஞ் ஞான விருத்திபே தத்தான்
மாசடைந் திலங்குவ தல்லா
லிடர்பகை யுறவா தியதுய ருளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (௧௦)

நிந்தைசெய் மாயை யெனுங்கரு வியினு
னிகழ்தரும் ப்ரபஞ்சதே காதி
நந்துறு நானு விதமுறு ரூப
நண்ணிய நாமமா திகளே
முந்துறக் கான னீரெனச் சிருட்டி
முதலிய தொழிற்பரப் பியது
னிந்திர சால மல்லவோ வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (௧௧)

என்னகத் திருக்கு மெனக்குணீ யுனக்கு
ளிருந்ததும் யானெனை மறந்தே
யென்னகத் திருக்கு மெனையன்றித் தேடி
யெங்கெங்கு மோடியா னிளைத்தே
னென்னகத் திருக்கு மெனையன்றி யாவு
மிலையிலை யிலையென வறிந்தே
னென்னகத் திருந்து மெனக்கொளித் ததுவென்
னியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (௧௨)

மாசிலா மணியே முனிவர்க ளிறையே
வள்ளலாய் வந்தகண் மணியே
தேசிக ஞானத் திரண்டுரு வெடுத்த
சித்தனே யொளிர்சிந்தா மணியே
ஈசனே தேசோ மயந்தந்தாட் கொண்ட
வென்னுயிர்க் குயிரதாந் துணையே
போசனே வாழி குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௧)

இகபர மிரண்டி னுயிரினுக் குயிரா
யியங்கிய வாசியா மலரை
முகந்தக மகிழ்ந்து நாதகீ தங்கண்
முழங்கிய பேரின்ப வீட்டிற்
சுகமுறச் சும்மா விருக்கவா வெனவென்
றுயர்பவக் கடல்கடப் பித்தாய்
புகழ்பிர காசக் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௨)

பெருகுமட் டாங்க யோகமெய்ஞ் ஞானப்
பேரின்பக் கடலமு தூட்டிக்
குருமணி யணிந்த மார்பினி லணைத்துக்
கொண்டுபின் முத்திதந் துவப்பாய்
மருவியென் றனக்கு விருந்தென வளித்த
வாதியாம் வந்திரு நிலையின்
புரிமயச் சுடராங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (ங)

மூலத்து ளெழுந்த நாடிமூன் றுடனே
முயங்கிய நாதவா யுவினுட்
சிலமா முக்கண் குவித்தகக் கண்ணைத்
திறந்தொளிர் வாசியை நோக்கி
மேலுமே னடனச் சிலம்பொலி காண
விளக்கியெற் கின்னமு தளித்தாய்
போலுரு தடருங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (ச)

நதிரில கியதூண் டாமணி விளக்கின்
கதிர்தரு மண்டப மதனுட்
டுதியுறு விருத்தி யின்னமு தளித்துத்
துன்னுமேழ் பவத்தொடர் பகற்றித்
ததும்புறு தென்னைத் தயவுதந் தாண்டாய்
சச்சிதா நந்தநற் பரமாம்
பொதுமையா மின்பக் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (ரு)

குறிகுணா தீத வகண்டிதா காரங்
கொண்டுளங் கனிந்தமு தொழுகிச்
செறிமணி நாத விளக்கினல் விளக்குந்
திகழ்சுழு முனையெனு மனையின்
னெறியிலே நிறுத்தி யென்னையாட் கொண்டாய்
நித்தனே நின்மலா நந்தப்
பொறிபொரி தயருங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (சா)

நண்ணிய சுவாச மெனும்பொரு ளதனை
நாளுக்கு நாட்புறைந் திடவென்
றெண்ணியே நொள்ளைக் களவுசெய் கள்வ
ரென்னுநாள் வரையுமே பிடித்துத்
திண்ணுறும் வாசி நூல்விலங் களித்துச்
சிக்கெனச் சிறையினி லடைத்தாய்
புண்ணிய னென்னுங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே (எ)

உடலுயிர்க் குயிரா யுறைந்ததே பொருளென்
றுரையுவ மையுமிலா திறைபைத்
திடமுறக் கரத லாமல கம்போற்
றெளிவறத் தெளிந்தெனுட் காட்டிச்
சடமசித் தியம்பொய் பொய்யெனத் தேருந்
தரமளித் தாயிரு வினையைப்
பொடிபொடி யாக்குங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௯)

சுத்தவட் டாங்க யோகமே காட்டிச்
சுடரினைத் துலங்கிடக் கூட்டிச்
சித்தசாஞ் சல்ய மின்றியுண் ணூட்டித்
திகழ்தரத் தெளித்தரு ளூட்டி
வத்துதா னென்னு நிலையினிற் பூட்டி
வருமம தைகளற வோட்டும்
புத்திதந் தாண்டாய் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௰)

எந்தனை லறியப் படும்பொரு ளியாவு
மெனக்கசித் தியமென விசைத்து
மந்திர வைம்பத் தோரெழுத் ததனின்
மருவியா னினைவையு மறக்கத்
தந்திர மாக வோர்மொழி மொழிந்தாய்
தற்பரா நந்தமெய் யோகம்
புந்தியி னொளிருங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௧௦)

பிரிவிலா முகந்தரப் பணத்திரு மையினைப்
பெற்றுமோர் முகமெனு மதுபோற்
குறியிலாப் பரமே சீவனைய் விளங்குங்
கொள்கையீ திரண்டல வெனவென்
னறிவினை விளக்கி யகண்டமாய் விளங்கு
மங்நெறி நெறியென நிறுத்தாய்
பொறுமைசே ரின்பக் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே. (௧௧)

சணங்குடி நேய தந்தைதன் தாயார்
தன்மக்க ளொடுமனை வியினைற்
பணங்கொடு தேடும் பவக்கட னீந்திப்
பரவெளி யெனும்பெரும்பாழ் கடந்து
பிணங்கிடா திணங்கும் பின்னொடு முன்னிற்
பேரின்ப வீட்டினைக் காட்டும்
குணங்குடி வாழு மௌன தேசிகவெங்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம். (௧௨

கீர்த்தனம்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

அவனன்றியோரணுவு மசையாதென்ப
தறியாயோ நெஞ்சமே.

அநுபல்லவி.

தவநின் றொளிருமறந் தாங்கி வளருமோன
தற்பர நித்யசிற் போதன்-மகி
மூற்புத மானவி னோதன்-என்று
செப்புங் குணங்குடி நாதன் (அவனன்றி)

சரணங்கள்.

க. ஈயெறம் பாதி தொடாமலெந் நேரமு
மேதுக்கிவ் வாக்கையை நாடி-யதில்
நேய மாகவே நீயபிமானித்து
நின்றனை யேநிதந் தேடி-சுடுந்
தீயஞ்சும் வெஞ்சொல் லெனும்பொய் யுரைத்துத்
தியக்குறும் புன்னிதிக் கோடி-சற்றுந்
தூயதொன் றின்றிப் புவிமிசை நின்றுழ
வாசையற் றோய்ந்துமெய் வாடி-யுழல்
மாய மொழிந்திடக் கூடி-யரு
ளீயுங் குணங்குடி நாதன் (அவனன்றி)

உ. நன்மைவந் துற்றாலுந் தின்மைவந் துற்றாலு
நானென்று நின்றுகொள் ளாமல்-நாளும்
புன்மை நிறைந்திடும் வாரியில் மூழ்கிப்
புதைத்தனை யேதுதள் ளாமல்-புகல்
இம்மை மறுமை யிரண்டற வொன்றான
தென்றதை யின்றேவிள் ளாமல்-இகழ்
மன்னுந் தொழிற்செய நேர்ந்தனை யோகெடு
வாழ்விதென் றெண்ணிமெள் ளாமல்-அகந்
தன்னைக் கடிந்துகிள் ளாமல்-நின்ற
தென்னே குணங்குடி நாதன் (அவனன்றி)

௬. பொறியும் புலனைந்து பூதமும் பேதமும்
புகல்கரணங்கடந் தோனே-மலஞ்
செறியுஞ்சஞ் சலமென்னும் பொருளும் வினையிரண்டுஞ்
செய்யுந் தொழிலுமிடந் தோனே-நல்ல
நெறியும் பலசமயக் குறியு நாதாந்தத் துண்
ணிவினையு நனவும்படர்ந் தோனே-யோகத்
தறியுங் குறியுந்துண் ணிறையும் பரவெளியென்
றடரும் கடலில் நடந் தோனே-விட்டுப்
பிரியாத வருள்தொடர்ந் தோனே-எனக்
கறிவாங் குணங்குடி நாதன் (அவனன்றி)

மஸ்தான்சாகிபு அவர்கள்மீது

வேங்கடராயப்பிள்ளைக் கவிராயரவர்கள் பாடிய

தோத்திரப்பா.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எல்லா மறிந்து மனமிலையோ விரக்க மிலையோ வுன்னெஞ்சங்
கல்லா வுரைக்க வாயிலையோ காண வருத்தங் கண்ணிலையோ
பொல்லா ரெனினு மடிமையென்று புகுந்த வடியார் தமைக்காக்க
வல்லா யலவோ குணங்குடியாய் வாழு மமுதே மகதேவே. (௧)

மாவே தனையி லடியார்கள் வருந்தப் பார்த்து மனமிரங்காக்
கோவே நினக்கு மெவர்கள்குணங் குடியா னெனவும் பெயர்தொடுத்
பூவே மணமே யுன்னுமம் பொருந்தும் வகைநீ புரியாயே [தார்
ளீவே றெனவு முலகமெலா நிந்தை கூறு மிதுநிசமே. (௨)

வேத னிலையோ வரியிலையோ வேணி யரனு மிலையோ வோர்
நாத னிலையோ பலகோடி நாமம் படைத்த தேவர்களும்
போத மிலையோ முறையிடற்கேட் போரு மிலையோ பொருளிலையோ
நீத மிலையோ குணங்குடியாய் நீயு மிலையோ புகலாயே. (௩)

கருணை மறந்துங் காவாய்நீ தரணி மிசைநின் னடியார்க்குக்
கருணை புரியுங் குணங்குடியாங் கடவுளென்ப தழகேயோ
பெருகு மிலவு காத்தகிளி பெறும்பே றலதென் பயன்கொளுவா
ரருமை யொடுநின் பதம்பரவி யழுது கனியுந் தொண்டர்களே. (௪)

ஏச மனமும் வரவில்லையே யியார் புகழ்பே சாதுன்புகழ்
பேச மனமும் வரவில்லையே பெருகு பசிக்கு மோய்வில்லையே
வாச மிலகு குணங்குடியாய் வருத்து மிவையெல் லாமறக்கப்
பாச நமனும் வரவில்லையே பாவியடியேன் படுவதென்னே. (௫)

கல்லா ருறவும் பெரும்பசியுங் கழிந்து போகும் வகையுரைத்து
நல்லா ருறவு மின்பதமு நாயே னடையும் படிபுரிவா
யெல்லா ராலு மறியவொண்ணு விறைவா விந்த வேழையொடு
மல்லா டுவதென் குணங்குடியாய் வாழு மமுதே மகதேவே. (௬)

அடியே னிந்நா ளுரைத்தவண்ண மாக விதையு மெண்ணியிருந்
திடலார் கதிசொல் குணங்குடியா யெல்லாங் கடவு ளறியாதோ
கொடியா ரிடத்திற் சென்றுமனங் கூசிக் கைகா லலைந்தலைந்து
மடியாப் பிணம்போன் மடிவதற்கோ வகுத்தா னென்னைநான் முகத்
[தோனே. (௭)

செய்யும் வகையுந் தெரியவில்லை தேவர் மனமுந் தெரியவில்லை
வைய மடையர் தமையடுத்து வாழ்த்தித் துதித்துப் பற்காட்டிக்
கையு மேற்க மனமுமில்லை கருத்து நிலையா நிற்கவில்லை
பெய்யுங் கருணைக் குணங்குடியாய் பேதை யேற்கோர் வழியருளே.

சொந்த மில்லையோ பன்னாளுந் தொழுத தில்லையோ வடிமையெனும்
பந்தமில்லையோ பிள்ளைகளைப் படைத்த தில்லையோ வருந்துமலர்
சிந்தை யறியுஞ் செயலில்லையோ தேவா வாழுங் குணங்குடியாய்
முந்த வினைக ளைத்தடுக்க முதல்வா வேண்டுந் தருண மிதே. (௯)

பெரியோ ரெவரும் புகழ்ந்தேத்தும் பெரிய வுனையிப் பேதையனுந்
தெரியா வறிஞ னேதேதோ நினைத்துக் கவியாற் சொன்னவெலாஞ்
சரியா யுரைக்குந் துதியெனவே தங்கு முனது மனங்கொண்டு
பரிவா யருளக் குணங்குடியாய் பல்கா லுன்னைப் பணிவேனே. (௧௦)

நீயே யீன்ற தாய்தந்தை நீயே குருவி னெடுதெய்வ
நீயே யடியார்க் குதவுபொரு ணீயே சமய மறியும்வஸ்து
நீயே ஞான நெறிவிளக்க நீயே விளங்குங் குணக்குன்ற
நீயே யெங்குங் குணங்குடியாய் நிறைந்திவ் வடிமையைக் காப்பதுவே.()

மஸ்தான்சாகிபு அவர்கள்மீது

மீகாவளம் - அருணாசல முதலியாரவர்கள் குமாரர்

சபாபதிமுதலியாரவர்கள் பாடிய

ப ஞ் ச ர த் ன ம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஏர்பூத்த நயமுகமு மருள்பூத்த விருவிழியு மெழிற்செவ் வாயும், தார்பூத்த மணிமார்பு மடியாரைப் பரிந்தணைத்துத் தாங்குங் கையு, நீர்பூத்தமலர்த்தாளுங் கண்டெளியேன்தொழுவதென்றோ நிகழ்த்தல் வேண்டுஞ், சீர்பூத்த சென்னையில்வாழ் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே. (க)

வையமதி லெனக்கெனவந் திடும்பாழாங் கொடியவிருண் மாயை நீங்கத், துய்யவினை தருமேனுக்கே விளக்கெனவந் தடுத்தினியுன் றனை ந்தா ணல்காய், மெய்யடியா ருளத்தின்முளைத் திடுகரும்பே மதுர மெல்லாம் விளைந்த தேனே, செய்யமணிச் செழுஞ்சுடரே குணங் குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே. (உ)

பாவநெறிக் குடன்படுத்து மடமாதர் மயக்கில்விழும் பதகனேனை வாவெனநின் றிருநோக்கா லழைத்திடுதலெந்நாளோ வழுத்தல்வேண்டு மாவலுறும் பழவடியா ருண்ணுகின்ற பொருளனைத்து மளிக்க நாளுந் தேவதரு வாய்விளங்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே.

பருதிதேர்ப் பாகனைவந் திருளணுகு மோவினது பதுமத் தாளைக் கருதுமடியவர்கள்குழாத்திருக்குமெனை யஞ்ஞானங்கலப்பதுண்டோ சுருதிகளுமுணர்வரிய பரம்பொருளேயேழுவகைத் தோற்றத்திற்குந் திருதியாய் நின்றளிக்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே.

தொல்வினையாந் திரையெறியும் பவக்கடலிற் சுழலுகின்ற துரும்பனேனை கல்வியினைத் தந்தறிய ஞானவழிகாட்டலுன்றன் கடமையையா[ற்குக் பல்வளஞ்சேர் சென்னைநக ருறைவாழ்வே பேரின்பப் பரமா நந்தச் செல்வமே தவப்பேறே குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே.()

மஸ்தான்சாகிபு அவர்கள்மீது
காயற்பட்டணம் செய்கப்துல் காதிர் நயினார்லெப்பை
ஆலிம்புலவ ரவர்கள் பாடிய
ஒருபாவொருபஃது.

பதினான்குசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருவுருவ முருவுருவ மிருவுருவ முடனமையு
மடனுலவை யெரிய புனும்மேல்
அறைபுனலும் விரிமணலு மறைவெளியு மெனவிவைகள்
அணுவினணு வினுமளவிலா
மருவுருவ மலைகடலு மெறழ்புடவி படர்தகனு
மதியினொடு கதிர்பரிதியும்
மணியினிதி யுலகுமெரி நரகுமவண் முயலமரர்
வகையுமிவை நனிபல னுறஉம்
ஒருவுருவ மனுவுமெதிர் பநையுருவ கணமுமமை
ஒருவனருள் பெருகு நபிகள்
உரைபொழுகி வருமுதிய வறிஞரினு முயர்பதவி
யொளிதவென நிலைமை புரிவீர்
வெருவுருவ முளமுடைய நமதடியர் துயரகல
விழிகருணை யானோக்கியே
வேதா குணங்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே. (க)

காணாத நீர்கான லானாகு மாறுய
காலோக மாமா யையும்
காயாது பூவாது தானேக மாமேயொடு
காலேற வாவா னதும்
நாணாது கோணாது நானேய லாதேதெ
னவாணு வாகா ரமும்
நாடாத பாலோடி யூடாடு தீவேக
நாயோடு பேயா னதும்
தோணாது பாழாக மேலேகு மான்மாசு
ரூபாகி சாலோக மெய்
சூழாத சாமீப சாரூப மாய்வாழி
தூய்தான மேல்வாழ் குவீர்
வீணான வீணாள ராகாம னோராக
விழிகருணை யானோக் கியே

வேதா குணக்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (௨)

துதிமொழிக ளோயாது மனவுறுதி சாயாது
தொழுகைநிலை மாயா துசீர்
தொடர்நியம மாடாது விரதமுறை கோடாது
சுருதிநயம் வாடா தமேல்
குதிகொள்வினை காணாது கசடுபல பூணாது
கொடுமைவலி வேணா துவீண்
குலவுநடை பாவாது பலபொருளின் மேவாது
கொலைகளவு தாவா துநே
அதிகருண மாயோக தவமுயலு மேலோர்க
ளருமையொடு மாறாதுறும்
அடியிணைக ளேசூடி யினியபல பேறுன
தணிபவர்க ளேகோ டியே
விதிமறையி னுலானு மொருவனரு டானென
விழிகருணை யானேந் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (௩)

மனுநீதி யுணராத பெருமூடர் முதியோர்கள்
மரியாதை தெரியா தவர்
மதிவேறு மொழிவேறு பொருள்வேறு படுவார்கள்
மலிகோர நிறைநா வினச்
சினமூறு மனமாய மறியார்கள் குறியாத
சிறியோர்கள் வெறியாள் பவர்
திருமாது பகையாளர் மலர்மாது வசையாளர்
திறமாது மறமாள் பவர்
துனிசேரு நடையாளர் பெரியோர்க ளடையாளர்
துயர்வாழு மிடையா ளர்கள்
தொழுதாலு மகலாத கெடுபாவ முடையார்கள்
சுகமேது பெறுவார் களோ
வினவாத வினையாவு மொருபோது மணுகாமல்
விழிகருணை யானேக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (௪)

பேராத வன்புடைய தாய்தந்தை தந்துணைவர்
பேராசை தந்த மனையார்
பேறுன மைந்தர்புடை சூழ்சால் பெருங்கிளைஞர்
பேரா நிறைந்த வுறவார்

ஆராரிருந்திடினு மாராரு வந்திடினும்
ஆதார மொன்று மிலையால்
ஆகாத வன்செயலி னாலே யெதிர்ந்தவினை
யாடாத கன்றொ ழியமேற்
சாராது வெம்பவ மெலாமோட வெங்கணிலை
தாழாதி நம்ப ரமுநீர்
தாமாக நின்றருளி னால்வீர்க ளொன்றுமது
சார்பா யடைந்த வெளிமேயம்
வேராதி கொண்டமன மார்பா விரிந்தமலர்
விழிகருணை யானைக் கியே
வேதா குணங்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே.

சுற்றிப் பிடித்தகொடி யொத்துப் பெருத்தபல
சுற்றத்தர் மற்று ளர்களும்
துக்கச் சுகித்துடை யுடுங்கத் தரிக்கநகை
சுட்டுத் தடுத்தி டுதலால்
பற்றித் தொடத்தொடமு னைத்துப் பசப்புமொழில்
பச்சைக் கிளிக்கு தலையார்
பட்சத் திடத்துயிர்தி னைப்பச் செறுத்தறிவு
பட்டுப் புறப்ப டுதலால்
எற்றித் தவத்தினைமு றித்துக் கருத்தினை
யெடுத்துக் குலப்ப கைமையமேல்
எட்டிப் பிடிக்கமதி யற்றுப் பவத்தொழி
லிழைத்துப் பிழைத்து ழல்வரே
வெற்றிக் குணங்குரிசி லெத்திக்கு மெய்ப்பனிறை
விழிகருணை யானைக் கியே
வேதா குணங்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே.

முன்பொன்றி நின்றுறுதி பின்சிந்தை விந்தையின்
மொழிந்தகண்டு நின்ற முதியோர்
முங்கும் பொருந்துறையி ருந்தங் கெழும்புகழ்
முகந்திங் கிதம்பொ ழியவே
அன்பொன்று நின்றபல னன்றன் றுவந்துமகிழ்
வங்கம் பெருந்த கையுளார்
அங்கந்த மன்பதைக ளும்பந்த முங்குளிர்
அகங்கொண்டு வந்து தொழவே
என்பொன்று மின்பநிலை கண்கண் டிழிந்தகுண
மெங்குங் கடிந்த ரசர்கள்

எம்பந்த மெம்பொருள்கள் நந்தஞ்ச மென்றடியி
னென்றுஞ் சரண்பு குதவே
மின்பொன் றலங்குகுண நன்கின் றருங்குரிசில்
விழிகருணை யானைக் கிளே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
வினைதா புரந்த ருள்கவே. (எ)

பாற்றேட்டைத் தேத்திரளை மாச்சோற்றைத் தீக்கனிகள்
பாற்சோற்றைத் தேட்ட மதுபோல்
பார்த்தூட்டற் கேய்ப்பவறி வாற்றேக்கித் தேற்றநெறி
பாற்சேர்த்துக் காத்தி டுதலால்
காற்றேட்டக் கேத்திரமெய் மேற்போக்குக் கீழ்க்கிழிவு
காற்பாச்சப் பூட்டி நடுவிற்
காப்பாக்கக் கோட்டைவெளி கூத்தாட்டுக் கோட்டைநனி
காப்பாற்றிக் காட்டு தவினால்
தோற்றூட்சிக் காக்கியது பார்ப்போக்குப் பார்க்கரிய
தோப்பாய்க்கத் தாத்த கையதாய்த்
தூர்த்தாக்கிற் பூத்தநனி காய்த்தாக்கத் தாற்குலவு
சூழ்ப்பேட்டைப் போக்கி டுதலால்
வேற்றூட்டத் தோற்றரவு சீத்தோட்டிப் போற்றிசெய
விழிகருணை யானைக் கிளே
வேதாகு ணங்குடியி னுதா வருந்தவ
வினைதா புரந்த ருள்கவே. (அ)

வையமொரு கையினுற மெய்யியல்கள் பொய்யினுற
மையல்வலை பெய்யு மடவார்
வள்ளியிடை விள்ளுமுரை வெள்ளவிழி துள்ளவரு
வள்ளமுறு கள்ளை விடலால்
பையமதி தொய்யவறி வுய்யவுணர் வையநெறி
பையவிடு கைய தனினால்
பள்ளமிகு வெள்ளமிசை தள்ளவிழு முள்ளழிகொள்
பள்ளையர்த முள்ள நிலையாய்த்
துய்யமகள் செய்யமகள் மெய்யின்மகள் கையின்மகள்
தொய்யிலணி வைய மகளும்
துள்ளிமல ரள்ளியெதிர் கொள்ளுமது பள்ளியிடை
துள்ளவிசை தெள்ளி யுறலால்
வெய்யவினை நையவருள் செய்யுமென தையநிறை
விழிகருணை யானைக் கிளே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
வினைதா புரந்த ருள்கவே. (கூ)

கண்ணுமதி யுண்ணளினை யி னண்ணுமன வெண்ணமது
கண்ணுடயி லொண்ணு பொழுதும்
கண்ணன்மொழி யன்னநடை மின்னினிடை பொன்னனையர்
கன்னிநல மன்னு பொழுதும்
ஒண்ணிதிக ளுண்ணுதொழில் பண்ணுபொழு தன்னமுத
வுண்ணலொடு தின்னு பொழுதும்
உம்மைபல திம்மையுள தெம்முறையும் வெம்மையற
வும்மருவல் பம்மு பொழுதும்
தண்மையொடு மெண்மையொடு பெண்மையொடு மொண்மை
தண்மையொடு திண்மை கொளலால் [யழி
தன்மகிமை யின்மைபெற வன்மையற நின்மையொடு
தன்மைபுரி சொன்மை யருள்வீர்
விண்ணுலகு மண்ணுலகு மெண்ணவரு மண்ணல்நிறை
விழிகருணை யானோக்கியே
வேதாகு ணங்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே. (௧0)

வண்டனைச் சண்டனைக் கொடியனைக் கடியனை
வாதாடு மொழிகேடனை
வஞ்சனைப் புஞ்சனைக் கோபியைப் பாபியை
மாபாத கத்தொழிலனை
மிண்டனைக் கண்டனைக் கதியனைக் கொதியனை
வீணான வீணாளனை
வெஞ்சனைக் கொஞ்சனைக் கொலையனைப் புலையனை
வேகா வருங்கண் ணனை
அண்டனைக் கண்டனைத் தண்டனைத் தொண்டனை
யாகாத புன்செ யலனை
ஆதியி னிடத்திரந் தன்பினொடு மென்பிழை
யகன்றொழிய வருள்பு ரிகுவீர்
விண்டலமு மண்டலமு மெண்டிசையு மண்டுபுகழ்
விழிகருணை யானோக்கியே
வேதாகு ணங்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே. (௧௧)

இதுவுமப்புலவர் பாடிய

தோத்திரப்பா.

ஆதியொரு வன்கருணை யக்கட விடைப்படிந்
தாவியுட லின்செ யலெலா
மமையுமுறை போனிறீஇ யெழுவகைத் தோற்றத்தி
னுடுமெழு பண்பி னியல்பே
நீதியொடு மொருமைப் படக்கண்டு முருவங்க
ளிலைபெறு தலைமா றிடா
நீடொளிவி னுதயநில னென்றுகொண் டும்பொருளை
நிச்சயித் தொன்று படவே
சோதியுள நினைவினா லைம்பூத வியல்பையுஞ்
சோரவிட் டும்பெ றுகுணந்
தோன்றலான் முழுமையு மாய்ந்துசுய வஸ்துவாய்த்
தூய்மைபெற நின்ற வொளியே
போதிய குணக்குடிக் குரிமைபூண் டுயர்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௧)

குவியுமுய ரறிவினாற் பலவாக நினைவினைக்
கும்பித்து வாயு வுடனே
குறிபெற நிறுத்தியுள் ளெழுதாத விசையினிற்
கூர்ந்துடலி னியல்பொ ழித்துச்
செவியொலி யொதுக்கிவிழி தெரியா தடக்கிவரு
தேகபரி சந்த னைத்துந்
தேற்றுறு வாசனைக ளோர்சுவையு மேற்றுறு
சிந்தையா நந்த முறவே
கவினிரவு பகலற்று நிற்குநிலை நின்றுயிர்
கலந்திடத் தபசு செய்தீர்
காளையம் பருவத்தி னுலகந் துறந்துவெகு
காரணம் விளைத்த வொளியே
புவிபுகழு நற்குணக் குடிகொண்ட பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்

போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௨)

கருதரிய வஸ்துவாய் நின்றவொரு வன்கருணை
கனிதர வெழுந்த கடலிற்
கதிர்பல விரித்தமுத் தாகிவரு நபிநாதர்
கதிபெற வளித்த நெறியிற்
பெரிதுதவு முறையெலாங் கண்டுகண் டுலகநனி
பிரிசத்தி நிற்க வகையாய்ப்
பிரிவிலா தறிவொடு புகட்டுவித் திருமையது
பேற்றினை யெடுத்தருள்செயு
மரியமன நிறையன்பு மாதரவு மொருமையுமெய்
யணியுமு றுதித்த குதியு
மவரவர்க டஞ்சிந்தை தன்னிலே தோற்றவெளி
யாகுநடை கொண்ட முகிலே
பொருவரிய நற்குணங் குடிகொண் டருஞ்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௩)

வன்மைதரு மொழிவிட்டு மனவாஞ்சை மதிவிட்டும்
வார்மையொடு சீர்மை விட்டு
மருவுசுவை யினைவிட்டு நல்லுடைக டொடர்விட்டு
மணமோங்கு பொருள்கள் விட்டும்
பன்மைதரு தொழில்விட்டு நன்மைகொளு முறைவிட்டும்
படருரிமை பாசம் விட்டும்
பற்றுடைய வினைவிட்டும் வித்தைகொளு முறைவிட்டும்
பண்ணிசையி னினைவும் விட்டு
மின்மையடு குணம்விட்டு மன்னெறிகண் மதம்விட்டு
மிருமைதரு வகைகள் விட்டு
மேற்குமுட வினைவிட்டு நோக்குவன பலவிட்டு
மேகநிலை விட்டி டாமற்
புன்மையடர் நற்குணங் குடிவிட்டி டாச்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௪)

எங்கினு மிருந்துவரு வார்மனமு மேத்துத
லெடுத்து வருவார்க டொழிலு
மிகவுள மதித்துவரு வார்குணமு நன்மையி
னியைந்துவரு வார்க ணெறியு
மங்கமணி கோலமிக மேய்ந்துவரு வார்நிலையு
மண்டிவரு வார்க ணடையு
மறிவின்முறை கொண்டுவரு வார்திறமு மற்றுலக
மகலவரு வார்கள் விதமு
மிங்கித முடன்றெரிந் தந்தந்த நிலைகளுக்
கிசைகின்ற துறைக ணோக்கி
யின்பத்தி னார்பமொடு கண்டித்து மேலேறி
யியல்போடு நிற்கு மறிவே
புங்கநிலை பொங்குநற் குடிகுணங் கொடிசென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௫)

சொல்லினா லறிவுமுது பொருளினா னயமுமதி
தொடர்பினா லுயர்ஞா னமுந்
துதியினா லொருமையெழு நினைவினா லிறுதியுந்
துறவினா னனிவாழ்க் கையு
மல்லினாற் றனிமையும் பகலினாற் கவலலும்
மருளினா லிகப ரமுமே
யன்பினாற் பேறுமடு துன்பினாற் சுகமுமற்
றுவியால் யோக நிலையு
மல்பினாற் கொண்டோங்கு மாதவர்க் கொருமா
மணிச்சுட ரெனத்தி கழுவே
மகிமையொடு செய்தவப் புஞ்சமே யஞ்சுமன
மருளற்ற தெளிவ ருளுவீர்
புல்லினாற் பெருகுசுக நற்குணங் குடிசென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (௬)

கோவைதரு சொற்றொடரி னாங்கவிதை யுஞ்சீர்மை
கொண்டிடுமு னாஜாத் துகாட்

கொளுவார மோதிடுது வாவுமிறை யோனருள்
குலாமதிக் கும்ப லபலத்
தேவுக ளொடுங்கிவந் தடிதொழச் செயுமறைத்
திருவாக்கி யத்தின் சுகமே
சேருமடி யோர்க்காக வற்பினுற் செய்துமித்
தேசத்த ருந்த மிழினுற்
பாவகை யனந்தமு மியற்றிவளர் நல்வழி
பயிற்றிமுறை யாலுல கெலாம்
படர்கீர்த்தி யறிவினொடு துறவுமா யொன்றுபோற்
பரிவுற் றெழுந்த வொளியே
பூவுலகி லுயர்குணங் குடிபெற்ற பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (எ)

எங்கெந்த திசைதோறு முறுஞான யோகிக
ளிசைந்தடி பணிந்து நெறியி
னியல்புநடை யொழுகுமதன் வகையுமிக வியமா
யெப்போது முற்ற றிந்து
சந்தந்த ருஞ்சிந்தை யானந்த வாரியிற்
றாழ்ந்துவந் தினிது போற்றுந்
தக்கவர் செறிந்தவனு மந்தக்கு டிக்குள்வளர்
தருசெய்கு சாகிப் போரா
மந்தந்த சமயமுற் றினுமுள்ள சூட்சிக
ளனைத்துமொரு மதிம திக்க
வறிவா லொதுங்கிவிட் டொருசார மும்பற்றி
யடராது கண்டித் துமேற்
பொங்கென்று நற்குணங் குடிகொண்ட பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே. (அ)

மகிழோங்க வுள்ளமறி வுகளோங்க நன்னிலையின்
வழியோங்க மொழியு மோங்க
மறையோங்க வுண்மையது துறையோங்க மாதவமெய்
வகையோங்க மிசையு மோங்க

விகமோங்கு தீவினையி னிகமோங்கு முலகநடை
பெதிரோங்கி டாம னுடலி
னியல்போங்கு மைம்பொறிக ளயர்போங்க விட்டுறுதி
யிகமோங்க மகமோங் குவீர்
அகமோங்கு பாவமன முகிழோங்கு பன்னினைவி
னடலோங்க விடமா றிநின்
றகமோங்க வெந்துயரி னகையோங்கிடக் குழறி
யழுதோங்கன் முறையா குமோ
புகழோங்கு நற்குணக் குடியோங்க வுஞ்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சாகிபே. (௯)

நலனேர்ந்த முகிலினிறை கடலினுங் காட்டினுயிர்
நனிதுன்று திரிக டமினும்
நாள்செய்கதிர் மதியினுந் தாரகை கணத்தினும்
நகுமணிகொள் பொற்ப தியினும்
வலனேர்ந்த மற்றுள்ள செல்வத்தி னும்பேற்றின்
வகையினும் பலபே தமாய்
வழிகின்ற வோரொளியை வெளிகின்ற வரிவது
வரம்பினாற் றடைய டுத்திப்
பலனேர்ந்த செய்குசுல்த் தானப்துல் காதிர்லெப்
பையாலி மென்ற புகழைப்
பல்லோர்க ளும்பித்தன் மஸ்தா னெனப்புவி
பயிற்சிகொளு மாநா தரே
புலனேர்ந்த நற்குணக் குடிகொண் டருஞ்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சாகிபே. (௰)

மேற்படி புலவர் பாடிய

வாயுறை வாழ்த்து.

நேரிசை யாசிரியப்பா.

நார்நனி விசும்புங் கதிரு மதியு
நீர்நனி கடலு நிலனு மலையு
மைம்பெரும் பூதமு மவற்று ளோங்குந்
தம்பெருங் குணமுந் தழூஉஞ்சர மசரமுஞ்
சென்ற வாணையிற் சிதையா நிலையினு
நின்ற முறையே நிகழ்தலி னாலு
மேறுமா றாகா வேறுவே றாக
மாறுகூ றாகா மன்னுரை யாலுஞ்
சாதியுந் தொழிலுந் தக்கன பண்பும்
பேதியா தியங்கும் பெறுமுறை யாலுந்
நோன்மையிற் பாகங் கொள்ளுங் கூட்டின்
பான்மையொன் றில்லா வல்லபத் தாலே
யொன்றே யனைத்தையு முடையவுண் மைப்பொரு
ளொன்றே மறைவிலா தியங்கு கின்றதை
விதிபடு திரைகளால் விளங்கா தாய்ந்துங்
கதிபடு மனத்தாற் கலங்கு மக்கா
ணேர்வழி முயல்வா னிலைத்த சிந்தையி
னோர்வழி முயல்வா னுணரு மக்காள்
பதையா திருக்கும் பண்புடைச் சான்றீ
ரிதையா சனஞ்சித் திலங்கிய சான்றீர்
நற்கருத் துடையீர் நனியறி வுடையீ
ரெற்கருத் தியம்புவ னினிதினிற் கேண்மின்
பதியிற் சிறந்த பதியா மதுரைப்
பதியிற் பிரபல மநேகம் படைத்தவ
ரருங்கலைக் கடலை யகமெனுங் கலத்தா
லொருங்களந் தறியா வுயர்கரை கண்டவ
ராலயக் கபாடத் தலைதா டிறக்க
மேலவர் துதிதரப் பாடிய வென்றிய
ரலைவா யுளமருண் டரித்த வரியினை
யுலைவாய்ப் பொய்யா தொருபுறம் பெய்யுந்
தங்கையைக் கண்டு தகாதென யாழொடு
சங்கித முயற்சியைத் தகர்த்துவிட் டெறிந்தவ

றுயர்நபி நயினா ரோதிய வொசிய்யத்
தியறர வெவர்க்கு மியற்றமிழ் செய்தவர்
நவலரு மின்னா நூறாத் தீனென்
றெவரு மேத்து மிருந்தவ மேலவர்
பயனார் மரபிற் பலன்கொள வந்த
நயினார் முகம்மது சாகிபு நாத
ரருளிய சுல்த்தான் அகுமது சாகிபு
தருமேசய் செய்கு மீரான் சாகிபு
செய்யுந் தவமு நேர்மையுந் திரண்டு
வையம் விளங்க வருமொரு மாதவ
ரில்லந் துறவற மிருவகை யொழுங்கு
நல்லற மாக நடக்கு நடக்கையர்
மலையும் வனமு மறைபடு தலமும்
நிலைய முணர்வா னிட்டை யோகம்
வணக்கங் காட்சி வகைபல கொண்டு
முணக்கு முடலோ டொருமுகந் தொடர்ந்து
மிருபத் தைந்தாண் டிதுசஞ் சாரந்
தருபத் தியினார் தந்நிலை விளங்குங்
காரண வொலியாய்க் கமலகொண் டானிற்
பூரண மடைந்த புண்ணிய மூர்த்தி
நன்றிசால் செய்கு நயினார் முகம்மது
வென்றிசா லரும்பயன் விளங்க வந்த
நற்குணங் குடிகொ ணயினார் முகம்மது
இக்குணங் குடியி லிருந்தவக் குன்றாய்
நலம்பெற விதித்த நன்மக வானோர்
தவம்பெறு முறைமையைச் சாற்றக் கேண்மின்
சிறுபரு வத்தே தெளிதரு வேதத்
துறுபய னெல்லா மோதி யுணர்ந்து
மரபி னிலக்கணத் தாவன வெவையு
மறுவறத் தேரு மதியின ராகி
யொப்பில் குணத்தி னோங்கிய சுல்த்தான்
அப்துல் காதிரி லெப்பை யாலிம்
எனப்பெயர் விளக்க மெழுந்து வருகையில்
வனப்புறாஉம் வாலை வயதுபதி னேழிற்
றந்தைதா டொழுது தருங்கரம் பற்றி
முந்த வுபதேச மொழிநலம் பெற்றுத்
தன்னிலை திரியாத் தவத்திய லெடுத்து
மன்னிலை கொள்ளு மனக்கி னானே

தவத்தின தியல்புந் தாபத ரியல்பு
நலத்துறை யுணர்ந்து நன்னூற் பலவுங்
கைதருங் கிழக் கரைதனில் வாழுஞ்
செய்கப்துல் காதிறொலியுல்லை
யாலீமிடத் தருளிற் றோதிச்
சாலவுந் தேறித் தாபத முறைகொண்
டருணபி கிசுறத் தாயிரத் திருநூற்
டிருபதோ டிருநான் காண்டினி லுலகை
முற்றுந் துறந்து முறைபல கடிந்து
பற்றற் றவையும் பயன்பட வொழுகித்
தேங்கமழ் சோலைத் திரிசிர புரத்தி
லோங்கிய வறிவா லுயர்ந்த ஆலீம்
தன்னிலை யுணருந் தன்மையுங் குணமு
முன்னிலை யியல்பு முழுதும் பதிந்து
பூமியி லெவர்க்கும் பொருளா மௌலவி
சாம்சா கிபு தம்மைத் தொடர்ந்து
மாட்சிமை தருநெறி வகைநலந் துலங்கத்
தீட்சை பெற்றுச் சிறந்தன பெற்றுத்
தனிநிலை பொறுமையைத் தாங்கி யிருவினைத்
துனியினை யொருவி மும்மலந் தொலைந்து
நாற்குணந் தெளிவுற் றைம்புல னடக்கி
யேற்கு முப்பகை யாவையு மெறிந்து
பாதக மேழையும் பசையறப் பறித்து
மேதகு தவத்துறைப் பெட்டையு மேவி
யிரத மொன்பதி னெடுப்பன வெடுத்து
விரதம் பத்தென விளங்கிய துறவே
பொருளாக் கொண்டு பொருந்தி வருகையில்
இருளாப் பகலா விதுவே நோக்கமாய்ப்
பகலெலா நோன்பு மிரவெலாந் தொழுகையு
மகலா நன்முறை யாகவுஞ் சிலநா
ணீர்நசை யூணசை நீங்கிய வாக்கைக்
கோர்நசை யுங்கொடா தோர்ப்புந் தாங்கி
வாய்வா ளாமையா வருநாட் கிடையினிற்
போயொதுக் கொருங்கு புருங்தொழிற் திருப்பச்
சிந்தையிற் றுணிந்து சிங்கந் தாடங்கிய
மந்திர மருங்கின் மண்பல மொன்று
மறந்தாங்கி யூர்ப்புறத் தடுக்கல கத்துந்
திறந்தாங்கி யோராறு திங்களுந் தொண்டியின்

மாதுல ரடங்கிய வாழைத் தோப்பினு
மேதமொன் றனுகா தீரிரு திங்களும்
மரைக்கா றுழியி னமிழ்தா னென்பா
யுரைக்காது கல்வத்தி யோகத் திருந்தன
ருள்ளிருந் தொருங்கு காணுங் காட்சியும்
வெள்ளிடை விரிந்து பரந்த காட்சியும்
தள்ளா தேகமாத் தன்னை யமிழ்த்தலின்
விள்ளா துணர்வினு மெய்ம்மை வினோதமே
காணுங் கருத்தரா மௌனகண் டிதரா
நாணும் பித்தர்போற் றன்னடை கொண்டு
ஊர்ந்தெழு சதுர கிரியினும் புருவின்
வளர்ந்த மலையினு நாக மலையினும்
யானை மலையினு மிருங்குகை செறிந்த
வேனை மலையினு மிருளடை வனத்தும்
பல்விலங் காடிய பனமரப் பொதும்பு
நல்விலங் காடிய பொழினதிக் கரையினு
மறிமட மசுதூ பாகத் திருந்துஞ்
செறிபட யோகியர் சேநர நீத்துஞ்
சருகுங் கிழங்குந் தழையுங் குழையுங்
கருகுங் கனியுங் காயும் புசித்து
மாசன விகற்பத் தாகிய யோகமும்
மோசன மறியாப் பொழுதடு நேமமு
மேலாங் காலுங் கீழாந் தலையும்
பாலா முடலுமாப் பல்பட வணங்கியு
மொருபக லன்றிப் பல்பகல் விரதமும்
பலவிர வன்றி யோரிரா வொழிபு
முடையார் னுடையதோர் சம்மதத் துணர்வி
னடையா னன்றித் தண்ணடை யின்றியு
மறையாக் கருத்துங் குறையா வறிவி
னிறையான் மாய்ந்த காய நிலையைக்
குணங்குடி மஸ்தா னெனக்குறி யிட்டும்
பிணங்கா திணங்கா தொருபெயர் தரித்து
மிப்பெய ராற்பல புதுமை யியற்றியு
மப்பெய ரான்மனத் தெருணிலை யமைத்து
மளவிலாக் காரண மவரவர் காணக்
களவிலா மெய்ந்நிலைப் பயனது கனிந்து
மிவ்வண மேழாண் டாகவித் திசைதிரிந்
தவ்வண நிலையான் வடதிசைக் கடைந்து

கண்டா ரெவருங் களிகூர்ந் துள்ளந்
தொண்டாய்த் தொழுதிடத் தோற்றுமா தவராய்ப்
பன்னா டவரும் பலன்பெறத் தரிசனந்
தன்னா லுயர்ந்தவந் தாங்குரு வினராய்
மன்னுணர் வினுஞ்சில வதியுணர் வினுஞ்சில
தன்னுணர் வினுஞ்சில நடைபயில் நையராய்
நேர்மையி னுள்ள கேர்ந்தவ ரெவர்க்கு
மேர்மை புரியு முயர்தே சிகராய்ப்
பொன்னைமா நிதியையும் போற்றலிற் போற்றுஞ்
சென்னைமா நகரஞ் சிறப்பொடு புகுந்தார்
முன்னைய நினைவினும் புறவுணர் முளைத்துந்
தன்னய முறைபோற் றடைபடா துலவியுஞ்
சிலபகல் வெளிப்படத் திரிந்து மறைபடச்
சிலபக லடங்கியு மௌனமாய்த் திரிந்துஞ்
சுட்டிக் காட்டியு மெண்ணிற் றொகுத்து
மெட்டிக் காட்டியு மெழுதிக் காட்டியு
மியல்பின் வேண்டுவ வெவையும் விளக்கியும்
பயிலுஞ் சிலராற் பலன்பெற யாருமே
பாவா லெப்பை யெனும்பிர பலவான்
காவார் தோட்டத்திற் கதிநலம் பெறுவான்
மங்க ளுவந்து மனப்பொருத் தங்கொண்
டெக்கா லும்புகழ் பெறவினி தினல்கிய
தலத்தினைத் தைக்கா வாகத் தகைத்து
நலத்தொடு கல்வத்து நாடிப் புகுந்தா
ரயன மொருமூன்று மதனுட் டனித்துப்
பயனுறு மியோகப் பண்பி னிருந்தா
ரரவ முதலா வூர்வன வடைபட்
டுரைக ளுணரா துணர்வினி னின்ற
நிலையே புதுமை நிரம்ப விளக்கக்
கலையே கலையாக் கண்ணொடு வெளிவந்
தூங்குமு ரீதி லுயர்வழி யவரது
தாங்குங் காதி ரிய்யாத் தன்னை
யாக்கிய முகியித்தீ னாண்டவர் பேர்க்கொரு
தேக்கரும் பாத்திகாச் சிறப்பிற் செய்தார்
நாடின பேர்க்கரு ணயன நோட்டங்
கூடின பேர்க்குளக் கருணை நல்கியு
நினைத்த காரியம் நிறைவேறப் படுத்தியுந்
தனைத்தொடர் பவர்க்கா வனமுறை தொகுத்துஞ்

வாயுறை வாழ்த்து

சிலபக லியாருந் தெரிய விருந்துஞ்
சிலபக லொளிந்துந் தெரியா திருந்தும்
பின்னர் தம்மிடம் பிடித்தனோன் புடனே
நன்னர் பயப்ப நயந்தடைந் தனராற்
கண்டகண் டிதமாய் நாளினைக் கணித்துங்
கொண்டகண் டிதமெய் யோகங் கொண்டுந்
துண்டிடு கண்டுந் தூய்பாற் சிறிதுங்
கொண்ட பொழுதுங் கொள்ளாது மிகுதியு
மொருவர்க்குங் காணா வொதுக்கமும் பதுக்கமு
மிவர்க்கே காணு மேகமு மாகத்
தூங்காது தூங்கிச் சுகத்தொடு தன்னிலை
நீங்கா திருந்த நிலைமையென் சொல்வேன்
பதையா திம்முறை பன்னிரண் டாண்டுஞ்
சிதையா திருந்த செய்கையென் சொல்வே
னரிதரி தம்ம வகமொரு நிலைபட
லரிதரி தம்ம வருமையென் சொல்வேன்
பேரின்ப வெள்ளப் பெருக்கி லழுந்தியு
மாரின்பு மீறிய தான்றொன் றுதியிற்
றொடருயிர் காந்தத் தொடரய மென்னப்
படர்தரு மாசைப் பற்றங் கிழுப்பத்
தழல்படு கரியே தழலா யினும்பெயர்
கழல்பட லிலையாற் கழன்றா லன்றி
யொன்றா காவென் றுரைக்கு முறைபோல்
வென்றாள் கடத்தை விடுத்து நீங்கி
யிருவகை யிறப்பு மிறந்துபு மப்பு
மொருவகை சுடரு மொளியும்போல
காரண மெவையுங் கலவா தகன்ற
பூரணத் தொடுபரி பூரண மடைந்தா
ரேற்படு குறைமுடி வெய்த மாவயது
நாற்பது மேழு நிறைய நடந்ததே
யித்தகை வத்தி னேறிய தாபதர்
பத்தியிற் பயின்று பலப்பல முயற்சி
கொண்டு வருநாட் டன்னிற் குமிழி
மண்டுமா நந்த வெள்ள மல்கிப்
பொங்கி வழிந்து புறம்பொழி வதுபோ
லிங்கித நாவி னெழுந்தசில் கவிக
ளயன்பெறு மவற்றை நால்வரு முணர்ந்து
பயன்பெற வச்சிற் பதிப்பிக்க நாடிக்

கண்ணோட்ட மிட்டரு டருகெனக் கனிந்து
வெண்ணோட்ட நன்மையே யிசைந்த கருத்தின
ரவர்களுக் குரிய வன்பறு பத்தரி
லெவர்களு மதிப்ப விடங்கு நேர்மைய
ரிருபோது மவர்பெய ரேத்தி யேத்தி
யொருபோது மறவா வுறுதிச் சிந்தையர்
மருவளர் பூவன மல்க மல்கிய
திருவளர் செழுந்தடச் சீய மங்கலப்
பதிவளர் செல்வப் பதியரு ணாசல
முதலியா ரினிய முயன்று கேட்ப
வுலக முற்றுந் துறந்த வுள்ளமு
முலக மணுவுந் துறவா வுள்ளமு
மொருவகை யானு மொன்றா கதுபோ
லிருவகைப் பட்ட விதய னாயினும்
வாத்தின ரருணலம் வருவழி யென்றே
திரத்தி னோர்ந்து னுவந்து துணிந்தனன்
சொல்லு மதுவே பொருளு மதுவே
புல்லுந் தொகையும் புணர்ப்பு மதுவே
யன்றி யொன்று மமைத்தே னல்ல
னன்றி யொன்று நடைகொ ளடியி
னின்றி திடரினைப் பெயர்த்தலு நிரைபடச்
சென்ற வெழுத்தினைச் சேர்த்தலும் வழுவா
வழிபோன் மாறி நிறுத்தலும் வழங்க
மொழிபோற் பதித்தலு முற்றப் படுத்தலுங்
குறிப்பிற் றுறையுங் கோத்த வதிகாரமும்
பெறப்படச் செய்தலும் பின்முன் கவிகளை
மாலை புணர்க்க மாட்டலுங் குறைந்த
காலை நிலைக்கக் கட்டலும் வெறுத
பாலும் பழமுந் தேனும் பருகுதல்
போலுஞ் சேரப் பொருத்தலுந் திருத்தலும்
பார்ப்போர் பார்க்கப் பயன்படு முறையுஞ்
சேர்ப்போ ருள்ளஞ் சிறக்கு முறையுங்
கொண்டொழு கினனுற் களிகூர்ந் துயர்ந்தோர்
கண்டொழு குவதே கடனு மன்னோ
குணங்குடி யார்சொற் குணங்குடித் திடமின்
மணங்குடி திருமனை வாழிவாழ்ந் திடுக

வாயுறை வாழ்த்து

வறந்தாங்கி யார்சொ லறந்தாங் கிடுமின்
இறந்தாங் குயர்பதம் வாழி சேர்ந்திடுக
வொருவை படித்த லுண்டா முண்டா
இருமைப் படித்த லின்று மின்றும்
பொய்மைத் தொடர்வினை போகும் போகு
மெய்ம்மைத் தொடர்வினை மேவும் மேவும்
புறத்தும் வையாளி போடும் போடு
மகத்திரை யுள்ளும் மாடு மாடும்
விண்ணு மண்ணும் விரியும் விரியுஞ்
சென்னாந் திண்ணாந் திரியுந் திரியுந்
துவித மலவத் துவித மென்றே
யெவிதத் தானு மிதயந் தெளிமே
கொட்டுந் தொடாதுஞ் சொற்றவை யுணர்ந்தாற்
கிட்டு மொருமை கிருபையி னறிக
வென்னிய லுணர்வா னிதய முளதே
லந்நிலை யுரைப்ப னருளீர் கேண்மி
னரும்பதி காய லறிவா ளரினுயர்
பெரும்பதி மாணுப் பிள்ளையி லப்பை
யாசீ முதலிய வருண்மணி பலகலை
ராலி னணிமுறை நோற்றனு பவித்த
மேவதாந் தங்கடன் மெய்ஞ்ஞா னப்பொரு
ளுதாந் தச்சுடர் நவமிகப் பொதிந்த
சித்த ராகு மன்றியுஞ் சீவன்
முத்தர் கபீபு முகம்மதி லப்பை
செய்தவத் துதித்த செல்வன் குணங்குடி
மெய்தவத் தினர்க்கு வித்தையிற் றேழன்
பயன்பெறு புராணமும் பலபிர பந்தமு
நயன்பெறப் புனையு நாவல னெவர்க்கு
முண்மைப் பொருள்வழி யோம்புந் தேசிகன்
வண்மைக் கரத்துடை வள்ள லிறகுல்
செப்பிய வழிபுனை செய்கு
அப்துல் காதிரி லப்பையா லிமே.

தொகைச்சொல் விளக்கம்.

ஒருமை - ஒன்றுபடுந் தன்மையாதல், அது இறையுணர்வு. இருவினை - நல்வினை, தீவினை. மும்மலம் - ஆணவம், மாயை, காமியம். நாற்குணம் - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி. ஐம்புலம் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். உட்பகையாறு - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். பாதகமேழு - அகங்காரம், உலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல், சோம்பல். தவத்துறுப்பெட்டு - ஊணசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத்தல், இடம்வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை. இரதமொன்பது - சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம். விரதம் பத்துறுப்பினது துறவு - யாக்கைக்கு மாவிக்கும் வேண்டிய பொருள்களில் விதித்தன கொள்ளல், விலக்கியன நீக்கிவிடுதல், இறைவன்பாற் பற்றுநிலைத்தல், மாயமருளின் மயக்கறுத்தல், அவனையே விசுவசித்தல், வேறுமியல்புகளை யொதுக்குவித்தல், தன்னியல்பை நினைந்தெப்போதுஞ் சஞ்சலம் பதித்தல், தன்பிழைபொறுக்குந் தகைமைதேடல், அவனது வல்லபத்திற்குத் தன்னேலாமையை நோக்கியிரங்கல்.

நேரிசை வெண்பா.

பெரியோர் கருத்தைப் பெயர்த்தறிய லாக
வுரியோ ரெவைக்கு முரியோர் - பெரியோர்க்குச்
சொல்லும் பொருளுந் தொடரா திரண்டாகும்
புல்லும் பொழுதிற் பொருள்.

பிசுமில்லாகி வொபிகி நஸ்த்தகீன்.

குணங்குடி.

மஸ்தான்சாகிபு அவர்கள்

திருப்பாடற்றிரட்டு

மூலமும் உரையும்.

பிசுமில்லாகி அலாநியத்து சுல்தான்

அப்துல்காதிர் முகியித்தீன்

துருவணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இணங்குமெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலி
　　னின்னமு தெடுத்தெமக் களிப்போன்
பிணங்கிய கோச பாசமா மாயைப்
　　பின்னலைப் பேர்த்தெறிந் திடுவோன்
வணங்கிய தவத்தி னோர்க்கருள் புரிய
　　வள்ளலாய் வந்தமா தவத்தோன்
குணங்குடி வாழு முகியித்தீ னாமெம்
　　குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

பதவுரை. இணங்கும் — (எல்லார்க்கும்) பொருத்தமாகிற, மெய்ஞானம்— மெய்ஞ்ஞானத்தாலுண்டாவதாகிய, பேரின்பக்கடலின் — பேரானந்த சமுத்திரத்தின், இன் அமுது எடுத்து — இனிய அமிர்தத்தையெடுத்து, எமக்கு அளிப்போன் — எமக்குக் கொடுத்தருள்வோன், பிணங்கிய — மாறுபாடான, கோசபாசமாம் மாயைப் பின்னலை — கோசபாசமாகிய மாயவலையை, பேர்த்து எறிந்திடுவோன் — கிழித்தெறிந்திடுவோன், வணங்கிய — தன்னை வணங்கிய, தவத்தினோர்க்கு — தவசிகளுக்கு, அருள் புரிய — அருள் செய்யும் பொருட்டு, வள்ளலாய்வந்த — வள்ளலாய் எழுந்தருளின, மாதவத்தோன் — பெருந்தவத்தையுடையவன், குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழ்கின்ற, முகியித்தீன் ஆம் — முகியித்தீனாகிய, எம் குருபதம் — எமது குருவின் திருவடிகளை, சிரத்தின்மேல் கொள்வாம் — சிரமேல் தாங்குவோம். எ—று.

விசேட உரை. மெய்ஞ்ஞானம் மக்களுயிர்க்குறுதியாய், அஞ்ஞானத்தாலுண்டாவதாகிய துன்பப்பிறவியை யொழித்துப் பேரின்பத்தைத் தரவல்ல

தாய் இதஞ்செய்தலால், அதனை, 'இணங்குமெய்ஞ்ஞானம்' என்றும், அந்த மெய்ஞ்ஞானத்தா லுண்டாவதாகிய இன்பம் மிகப்பெரிதாதலால், அதனைப் 'பேரின்பக்கடல்' என்றும், இந்த ஞானநந்தங்களுக்குத் தடையாயிருத்தலால் பஞ்சகோசமயமாகிய சரீரப்பற்றை, 'பிணங்கிய கோசபாசமா மாயைப் பின்னல்' என்றும், பிறவிக்கேதுவாகிய இருவகைப்பற்றை முற்றமுடித்த தவத்தினர் வணங்குதற்குரிய பெருந்தவத்தினனாதலால், 'வணங்கிய தவத்திஞேர்க் கருள்புரிய வள்ளலாய்வந்த மாதவத்தோன்' என்றும், இத்தகைய பெரியோனை வெளிஇற் கண்டுய்யலாமென்றதற்கு, 'குணங்குடிவாழும்' என்றும், அவன் திருநாமம் யாதென்று வினவுவார்க்கு விடையாக 'முகியித்தீன்' என்றும், அவன் எனக்கேயன்றி நம்மெல்லார்க்கும் குருவென்றற்கு 'எங்குரு' என்றும், அவனை யாம் வழிபடுமாறென்னென்று வினவுவார்க்கு விடையாக அவனது 'பதம் சிரத்தின்மேற் கொள்வாம்' என்றும் கூறினர். ஞானம் — அறிவு, பொய்யறிவை யொழித்தற்கு 'மெய்ஞ்ஞானம்' என்றார். பேரின்பக் கடலி னின்னமுது என்றது பிரமப்பொருளை. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் பஞ்ச கோசமயமாகிய சரீரப்பற்றே மாயையினுருவாதலால் அது மாயைப்பின்னல் எனப்பட்டது. தவத்திஞேர் என்றது உண்டி சுருக்கல் முதலியவற்றால் உடம்பை வருத்துவோரை. வள்ளல் — உதாரகுணத்தாற் சிறந்தவன், 'இன்னமுதெடுத் தெமக்களிப்போன்' என்றதனால் அவனது பெருங்கருணையுடைமையும், 'பின்னலைப்பேர்த் தெறிந்திடுவோன்' என்றதனால், அவனது பேராற்றலுடைமையும், 'தவத்திஞேர்க் கருள்புரியவந்த மாதவத்தோன்' என்றதனால், அவனது பெருந்தவமுடைமையும் இனிது விளங்குகின்றன. 'எமக்களிப்போன்' என்றும், 'எம்குரு' என்றும் கூறியது தம்போல்வார் யாரையும் உளப்படுத் துய்வித்தற்பொருட்டென்க. 'குணங்குடிவாழும்' என்பதற்கு நற்குணங்களெல்லாங் குடிகொண்டு வாழ்தற்கிடனாயிருக்கின்ற என்றும், நற்குணமாகிய ஊரில் குடிகொண்டு வாழ்கின்ற என்றும் பொருளுரைத்துக் கொள்க. இவ்வாறன்றி குணங்குடியென்னும் ஊரில்வாழ்கின்ற எனினுமாம். குருபதம் — வடநூன்முடிபாதலால் இயல்பாயிற்று. எவ்வகை வழிபாட்டினுஞ் சிறந்தது திருவடியைச் சிரமீதேற்றுக் கோடலாதலால், 'குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்' என்றார்.

ஆநந்தமாகிய பேரின்ப வனுபோகநிலையாற்கூறிய இப்பத்துக்
கவியுங் குருபரனை யொருபரனைக் கொண்டாடிக்
கொண்டாடித் தோத்திரஞ்செய்தது.

வஸ்து நயத்திநைநந்கம்.

மகுலியத் தானதாத் துல்கிபுறி யாவில்
மறைந்தகன் ஜுல்ம குபியாம்
மஸ்கூத்து அன்குல்க நிமுல் அமாவான
மஹாஜூலு தெனஞ்சி ருடமிலே

அகதியத் துகதாகி வாகிதிய் யத்தான
ஆலம்அறு வாகா னதில்
ஆலம்மி தாலாகி ஆலம்அஜ் சாமான
ஆலம்இன் சாஞன பின்
பகுதியத் தில்லா ஜலாலொடு ஜமாலும்
பதீஉல்க மாலு மாகி
பகுதுகபு லற்றலா கூத்துஜப றாத்தில்
பகாவான ருவியத் திஞல்
நகுசியத் தற்றமுன் றாளினிழல் பெற்றடிமை
நானினைவு மற்றுய் வனே
நற்குணங் குடிகொண்ட பாதுஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. மகுலியத்தான — கலப்பற்ற பாலைப்போற் றெளிவான, தாத்துல் கிபுறியாவில் — பெருமையான உண்மையின்கண், மறைந்த — மறைவாகிய, கன்ஜால் மக்பியா — புதையற் பொருளாம், மஸ்கூத்து — அதைத் தொட்டும் வாய்திறக்கக் கூடாத, அன்குல் கதீமுல் — பூர்வீகமென்னும், அமாவான — இருளாகி, மவ்ஜூது என்னும் — நின்றெவைக்கு முடைத்தான, சிறபுலே — துப்புரவானதோர் வஸ்துவிலே, அகதியத்து — குறிப்பற்ற ஒருமையாகி, வுகதியத்து — ஒன்றாங் குறிப்பாகி, வாகிதியத்து — இரண்டாங் குறிப்பான ஒருமையினின்றும், ஆலம் அறுவாகு ஆனதில் — ஆத்ம உலகமாகி, ஆலமிதாலாகி — அவ்வாத்மம் பின் பல கோலங்களைக் கொண்ட ஆலமாகி, ஆலம் அஜ்ஸாம் ஆன — கண்டிப்பான ஸ்தூலமாகி, ஆலம் இன்ஸாஞனபின் — மறவியைக்கொண்ட ஆலத்தளவில் வந்ததின்பின், பகுதியத்தில்லா — மட்டில்லாத, ஜலால் ஓடு ஜமாலும் — காந்தியோடு குளிரும், பதீஉல் — சேர்ந்து விநோதமாகி, கமாலுமாகி — பரிபூரணமாகி, பகுது கபுலற்ற — முன்பின்னில்லாத, லாகூத்து ஜபறாத்தில் — லாகூத்தென்னு மகாமிலும் ஜபறூத்தென்னும் மகாமிலும், பகாவான — தரிபாடான, ருவியத்திஞல் — உண்மையெனும் பெயரிஞல், நகுசியத்து அற்றும் — கேடளவிற் சார்தலில்லாதும், உன் தாளின் நிழல் — நினது பாத நிழலை, பெற்ற அடிமை — பெற்றுக்கொண்ட அடிமையான, நாவினைவுமற்று உய்வனே — நான் உன் நினைப்பைவிட்டால் உய்வதென்கொல்!, நற்குணம் — நல்ல குணங்களையே, குடிகொண்ட — இருப்பிடமாய்க்கொண்ட, பாதுஷா ஆன — தலைமை பூண்ட, குருநாதன் முகியித்தீனே — எனக்கு குருநாதஞய்வந்த முகியித்தீனே. எ—று.

வி—ரை. அல்லாகுத்த ஆலா ஆத்துமாக்களை சிருஷ்டிக்க முன்ஞல், தன்னிற் றுஞகவே யிருந்தான் அங்ஙன மிருந்ததைத்தான் மறுத்தபத்துக் குன் குதாத்தென்றும் "குன்குல் கக்" கென்றும் "மறுத்தபத்துல் அகதிய்யத்" தென்றும் "மறுத்தபத்துல் அமா" வென்றும் "மறுத்தபத்து லாத்து

ஜஇன்" என்றும் "மறுத்தபத்துல் இத்துலாக்" கென்றும் "தாத்து" மஃ லென்றும் "உஜூது" முதுலக்கென்றும் கூறப்பெறும். ஆனுல் மனிதப் பன்பின் பொருட்டால் அம்மகத்திற்கு மேற்கூறிய நாமங்களைத் தவிர இன்னுமநேக நாமங்களுமுண்டு, அவைகளுக்கு விபரங்களுமுண்டு, ஆனுலது ஒருங்கு குறிப்பற்றதுதான். ஆக, தானுக இருந்தவொன்றுக்கு நாமமொன் றில்லாதிருந்ததெவ்விதம்? எனக் கேட்பாருஞ் சிலருளர். அதற்குப் பதிலாவது சராசரமியற்றற்குக் காரணமானது அரூபவொலித்தலாகலானும், "மறுத்தபத்துல் அமா" வென்னும் இருளினிடத்து புதைத்த மறுத்தபாவென்ற இடுகுறிக்காரணத்தானும், அறபியலாகமத்தார்களாகிய "இமாம்" களுக்கது உன்பாடாகலானும் அஃதிருந்த பரமதானம் தொனியெனவும், வெளியெனவும், நோக்கமெனவும், ஒளியெனவும், ஒன்றுமற்ற இடமாகலானும், நாட்டமென்னுங் கடப்பிடியால் வத்துவென்று கூறலாம். ஆனுல் வத்துவென்று மனிதர்கட்கும் பெயரிருப்பதால், அதூஉம் அங்ஙனம் பொருந்தாது. (ஆகவின்) அதற்கு அகதிய்யத்தென்ருர். இனி, கல்க்குகள் கண்டிப்பாகவும், குறிப்பாகவும், படைப்பாகவும், இருப்பதால், ஒன்றுக்கொன்று குறிப்பாக்குவான் வேண்டி ஒவ்வொரு நாமம் வைத்துக்கொள்ளாவிடின் தெரியாதல்லவா? ஆகலின் அதற்குமொருபெயர் வரப்பெறும் பொருட்டாய் ஒன்ருங் குறிப்பென்னும் உகதத்தென்ருர். இவ்வுகதத்தே "அல்லா" என்னுந் திருநாமத்தைப் பெறவந்தது (உதாரணம்.) "அகதியத்திஸ்முகூவாம் அதிலிருந் தொலித்துவந்த வுகத்நாமம் அல்லாஃ" என்ருர் குஞ்சுமூசுப்புலவரும். இனி இவ் அல்லாவென்னும் இஸ்மில் இருந்துதான் சகலமும் வெளியாயிற்று. ஆகலின் புத்திமான்களுக்கு இவ்வளவு போதும் இதனை விரிப்பதற் கணக் கற்ருற்போற் பல்குமாகலின் உய்த்துணர்க. (க)

வஸ்துதயநிலத்திருநந்தம்.

பறுதானி யத்திலோ சுபுநானி யத்தெனப்
பகர்பரா பரம தனிலோ
பற்பல விதங்கொண்ட அஇயானி யத்திலோ
பரிபூர ணந்தன் னிலோ
அரிதான தாத்திலோ அலிபெனுஞ் சுகவாரி
யாகும்நுக் தாவ தனிலோ
அடலல்உ லாவான ஆலமலக் கூத்திலோ
ஆலம்அசு பல்தன் னிலோ
குறிகுணு நீதவட் டாங்கயோ கத்திலோ
கோடானு கோடி மறையாற்
கூறரிய சிவராச யோகத்தி லோவருட்
குறையாப் பெருங்க டலிலோ

நரலைநிக ரருளாள னேநீ யிருப்பதிந்
நாயினேற் கருள்செய் குவாய்
நற்குணங் குடிகொண்ட பாதுஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. பறுதானியத்திலோ — தனிக்குமிடத்தோ, சுபுகானியத்து என—துப்புரவானதென்று, பகர் — சொல்லும், பராபரமதனிலோ — சைதன்ய மூத்தியினிடத்தோ, பல்பலவிதங்கொண்ட — பலபலவிதமெல்லாம் பொருந்து, அதியானியத்திலோ — பூதத்துவாரங்களிடத்தோ, பரிபூரணந் தன்னிலோ — நிறையாநிற்கும் வெளிகளினிடத்தோ, அரிது ஆனதாத்திலோ — சொல்லற்கரிய உண்மையினிடத்தோ, அலிபு என்னும் சுகவாரியாகும் — அகாரதொனிகளாற் சுகாநந்தம் பொருந்திய கடலாகிய, நுக்தா அதனிலோ — ஒற்றுகளினிடத்தோ, அஉலல் உலா ஆன — உயர்த்திகளுக்கெல்லா முயர்த்தியான, ஆலமலக் கூத்திலோ — மலக்கூத்தென்னும் மூலத்தினிடத்தோ, ஆலம் அஸ்பல் தன்னிலோ — தாழ்மைக்கெல்லாந் தாழ்மையான ஆலத்தினிடத்தோ, குறிகொள் நாவு அசீதம் — நடுவிற் குறியாநிற்கும் நாவின் தொனியாகிய, அட்ட அங்கயோகத்திலோ — இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டு அங்கங்களாலுஞ்செய்யும் யோகத்தினிடத்தோ, கோடானுகோடிமறையால் — கோடாகோடி வேதங்களாலும், கூறரிய — சொல்வதற்கரிய, சிவராசயோகத்திலோ—ஸ்தூல உரு வெளிப்படும்படியான அரச யோகத்தினிடத்தோ, அருள் குறையா — அருள் குறையாத, பெருங்கடலிலோ — பெரிய கடலினிடத்தோ, நரலை நிகர் அருள் ஆளனே — அருளிற் கடலைப்போன் றுதவும்படியானவனே, நீ — நீயாகிறவன், இருப்பது — இருக்குந்தலம், இந்நாயினேற்கு — இந்த நாயாகியவனுக்கு, அருள் செய்குவாய் — தெரியச்செய்திடுவாய், நற்குணம் — நல்லகுணங்களையே, குடிகொண்ட — இருப்பிடமாய்க்கொண்ட, பாதுஷா ஆன — தலைமைபூண்ட, குருநாதன் முகியித்தீனே — எனக்குக் குருநாதனாகவந்த முகியித்தீனே. எ—று.

வி—ரை. பரிபூரண மென்னும், "கமாலியத்து" எங்கும் நிறைந்திருப்பதாய், ஓரிடம் என்று குறித்தற் காகாதென்னும் சாதனைக்காக, அஃதோ இஃதோ என்றார். (உதாரணம்.) "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்றார் தாயுமானாரும். ஆகலின் குருநாதனைக் கொண்டாடிக் கொண்டாடி ஐயமறப் பாடி யாண்டருள்வான் வேண்டி கூறியது. இதை விரித்துக் காட்டப்புகின் மிகவும் விரியுமாகலின் சுருக்கி முடித்தேம். (உ)

விளையாட்டின் நந்தம்.

அண்டகோ டிகளுமோர் பந்தெனக் கைக்குள்
ளடக்கிவிளை யாட வல்லீர்
அகிலமோ ரேழினையு மாடுங் கறங்குபோ
லாட்டிவிளை யாட வல்லீர்

மண்டலத் தண்டரை யழைத்தரு கிருத்தியே
வைத்துவிளை யாட வல்லீர்
மண்ணகமும் விண்ணகமு மணுவைத் தொளைத்ததின்
மாட்டிவிளை யாட வல்லீர்
கண்டித்த கடுகிலெழு கடலைப் புகட்டிக்
கலக்கிவிளை யாட வல்லீர்
கருதரிய சித்தெலாம் வல்லநீ ரடிமையென்
கண்முன்வரு சித்தில் லையோ
நண்டளந் திடுநாழி யாவனோ தேவரீர்
நல்லடிக் காளா கியும்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முனிவித் திநே.

ப—ரை. அண்ட கோடிகளும் — கோடி யண்டங்களையும், ஓர் பந்து என — ஒருபந்துபோல, கைக்குள் அடக்கி விளையாட வல்லீர் — கைக்குள்ளே யடக்கி விளையாட வல்லீர், அகிலம் ஓர் எழினையும் — எழுலகங்களையும், ஆடும் கறங்குபோல் — சுழலாநின்ற கறங்குபோல, ஆட்டி விளையாடவல்லீர் — ஆட்டி விளையாடவல்லீர், அண்டரை மண்டலத்து அழைத்து — தேவர்களை யிவ்வுலகத்துக்கழைத்து, அருகு இருத்தி வைத்து — சமீபத்தி லிருத்தி வைத்து, விளையாட வல்லீர் — விளையாட வல்லீர், மண்ணகமும் விண்ணகமும் — மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும், அணுவைத் தொளைத்து — அணுவைத் தொளைசெய்து, அதில் — அத்தொளையில், மாட்டி விளையாட வல்லீர் — அடக்கி விளையாட வல்லீர், கண்டித்த கடுகில் — பிளந்த கடுகில், எழுகடலைப் புகட்டி — சப்தசாகரங்களையுஞ் செலுத்தி, கலக்கி விளையாட வல்லீர் — கலக்கி விளையாட வல்லீர், கருது அரிய சித்து எல்லாம் வல்ல நீர் — நினைத்தற்கரிதாகிய சித்துக்களெல்லாம் செய்யவல்லீராகியநீர், அடிமையென் கண் முன்வரு சித்து இல்லையோ — அடிமையாகிய எனது கண்ணுக்கெதிரே வருதற்குரிய சித்து இல்லையாயினீரோ, தேவரீர் நல் அடிக்கு ஆளாகியும் — தேவரீரது நல்ல திருவடிகாட்பட்டும், நண்டு அளந்திடும் நாழி ஆவனோ — நண்டளக்கும் நாழியாவேனோ, நல்குணம் குடிகொண்ட — நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன — மஹாராஜனாகிய, குரு நாதன் — என் குருசிரேஷ்டனே யெழுந்தருளின, முனிவித்திநே — முனிவித்தின் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. அண்டம் — உலகு. கோடி — ஓர்பேரெண்; அன்றி வரிசை யெனினுமமையும். கறங்கு — காற்றாடி, ஓலைச்சுருள் எனினுமாம். கண்டித்தல் — பிளத்தல். எழுகடல் என்றது — உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்பவற்றா னியன்ற கடலேழினை. உலகு முட்டை வடிவாயிருத்தலால் அதனை அண்டம் என்றார்; இது உவமையாகுபெயர்.

கோடி — மிகப்பலவாகிய எண்ணைக்குறிக்குஞ்சொல் என்றலுமொன்று. அண்டம் — ஆகாயம், அது அங்குள்ள வுலகையுணர்த்தலால் இடவாகுபெயர். தேவர் அவ்விண்ணுலகி லுள்ளோராதலால் அவரை அண்டர் என்றார். நண்டளந்த நாழியானது அளக்கப்பட்ட நண்டுகள் வெளிப்பட்டபிறகு அந்த நாழி வறிதாதல்போல நானும் வறியனாவேனோ என்பது தோன்ற, "நண்டளந்திடு நாழியாவனோ" என்றார். பிறவிக்கடல் கடத்தும் மரக்கலமாகியும் பிறவிப்பிணிக்கு மருந்தாகியுமிருத்தலால் திருவடியை "நல்லடி" என்றார். (௩)

தன்னியலிறைநந்தம்.

ஐயோ வென்னைப்போலு மாப்பெரும் பாவியில்
வகிலத்தி லெங்கு மில்லையே
அநியாய மநியாய மென்பெரும் பாதகம
தார்பா லெடுத்தோ துவேன்
மையான கண்ணியர் வலைக்குள் ளகப்பட்ட
மாபாவி தீபா வியான்
மகுரூபு சுபுகானி யானவுமை நாடாத
மடமைகுடி கொண்ட பாவி
பொய்யான வாழ்வதனை மெய்யாக நம்பியுன்
பொன்னடி மறந்த பாவி
பொல்லார்க ணேசமே யல்லாது நல்லோர்
புறக்கணித் திட்ட பாவி
நையுமோர் பொய்யுலக னாகியே யுமதடிமை
நாயினுங் கடையா வனே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. ஐயோ — அந்தோ, என்னைப்போலும் — என்னை நிகர்த்த, மாபெரும் பாவி — மிகப்பெரியபாவி, இ அகிலத்தில் — இவ்வுலகத்தில், எங்கும் இல்லையே — எவ்விடத்துமில்லையே, அநியாயம் அநியாயம் — அநியாயம் அநியாயம், என் பெரும் பாதகம் — என் மஹாபாதகத்தை, ஆர்பால் — எவரிடத்தில், எடுத்து ஓதுவேன் — எடுத்துச்சொல்லுவேன், மை ஆன — மை யெழுதப்பெற்ற, கண்ணியர் — கண்களையுடைய மாதரது, வலைக்குள் அகப்பட்ட — ஆசைவலையிற்சிக்கின, மாபாவி தீபாவி யான் — பெரும்பாவியும் கெட்ட பாவியுமாகிய நான், மகுரூபு சுபுகானி ஆன — மகுரூபு சுபுகானியாகிய, உம்மை — தேவரீரை, நாடாத — நினையாமைக் கேதுவாகிய, மடமை குடி கொண்ட பாவி — அறியாமை குடிகொண்ட பாவியும், பொய் ஆன வாழ்வதனை — பொய்யாகிய உலகவாழ்வை, மெய்யாக நம்பி — மெய்யென்று நம்பி, உன் பொன் அடி மறந்த பாவி — உன் பொன்னடியை மறந்த பாவியும், பொல்லார்கள் நேசமே அல்லாது — துஷ்டர்களுடைய சிநேகமேயன்றி,

நல்லோர் புறக்கணித்திட்ட பாவி — நல்லோரையும் அவமதித்த பாவியும், உமது அடிமை — உமது அடிமையும் ஆகிய நான், நையும் — வருந்துதற்குரிய, பொய் உலகின் ஆகி — பொய்யுலகினனாகி, நாயினும் கடை ஆவனோ — நாயினும் கடைப்பட்டவனாவேனோ, நல்குணம் குடிகொண்ட — நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன — மஹாராஜனாகிய, குருநாதன் — என் குரு சிரேஷ்டனா யெழுந்தருளின, முகியித்தீனே — முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. ஐயோ — இரக்கக்குறிப்பு உணர்த்துஞ்சொல். இவ்வகிலத்தில் என்றதமையாது எங்கும் என்று மேலுங்கூறியது வேறெவ்வுலகத்திலும் என்றற்கு. பாவி — பாவஞ்செய்தோன். மாபெரு என்ற விசேடணங்களால் பாவத்தின் மிகுதி தோன்றுகின்றது. ஆர்பாலெடுத்தோதுவேன் என்ற வினா உன்னிடத்தோதலே தகுதியென்னும் பொருளை யுட்கொண்டது. வலை — ஆசையாகிய வலை. நையுமோர் பொய்யுலகன் என்பதற்கு நிலையில்லா தழிந்தொழிகின்ற பொய்யுலகன் என்றுரைப்பினும் பொருந்தும். 'நாயினுங் கடையாவனோ' என்றது மிக்க இழிவைக் காட்டவந்தது. (௪)

மகிமையினாநந்தம்.

மாதவர்க் கரசான மன்னர்க்கு மன்னாக
வந்தமக ராஜ னீயே
மண்டிசையும் விண்டிசையு மெண்டிசையு நின்றசையும்
வாசனும் போஜ னீயே
ஆதிநீ மகுருக்கு றெகுமானு நீயெனக்
கானமகு பூபு நீயே
அக்கா னியத்திலே ரொக்குமிறா சாதுதந்
தருள்செய்ய வந்த நீயே
வேதநீ வேதவே தாந்தநீ யெனையாளும்
வித்தகன் றானு நீயே
மெய்ஞ்ஞான வீடுநீ வீட்டின் விளக்குநீ
விரிகதிர்ச் சுடரு நீயே
நாதனீ நவநாத சித்தர்நீ முத்தனீ
நாதாந்த மூர்த்தி நீயே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. மாதவர்க்கு அரசு ஆன — பெருந்தவத்தார்க்கு அரசாகிய, மன்னர்க்கு மன் ஆக — அரசர்க்கரசனாக, வந்த — எழுந்தருளின, மகராஜன் நீயே — மஹாராஜனானவன் நீயே, மண் திசையும் விண் திசையும் எண் திசையும் — மண் திசையிலும் விண் திசையிலும் எண் திசையிலும், நின்று அசையும் — நிலைபெற்று விளங்குகின்ற, வாசனும் போஜன் நீயே — வாசனும் போஜ

னும் நீயே, ஆதி நீ — (இவை யாவுக்கும்) முதல்வனும் நீயே, மஉ ரூக்கு றெகு மானும் நீ — மஉ ரூக்கு றெகுமானும் நீயே, எனக்கு ஆன மருபூபும் நீயே — எனக்கிதஞ்செய்பவனாகிய மருபூபும் நீயே, அக்கானியத்திலே — அக்கானியத்திலே, சொக்கும் — சொக்குகின்ற, இறுஷாது தந்து — இறுஷாது தந்து, அருள் செய்யவந்த நீயே — அருள் செய்ய வந்ததும் நீயே, வேதம் நீ — வேதமும் நீயே, வேத வேதாந்தம் நீ — வேத வேதாந்தமும் நீயே, என்னை யாளும் — என்னை யாண்டருள்கின்ற, வித்தகன் தானும் நீயே — வித்தகனும் நீயே, மெய்ஞ்ஞான வீடு நீ — மெய்ஞ்ஞான வீடும் நீயே, வீட்டின் விளக்கும் நீ — அந்த வீட்டின் விளக்கும் நீயே, விரிகதிர் சுடரும் நீயே — அந்த விளக்கின் விரிந்த ஒளியையுடைய சுடரும் நீயே, நாதன் நீ — எமக்குத் தலைவனும் நீயே, நவநாதசித்தர் நீ — நவநாதசித்தரும் நீயே, முத்தன் நீ — முத்தனும் நீயே, நாதாந்த மூர்த்தி நீயே — நாதமுடிவில் நின்ற திருவுருவும் நீயே, நல் [...]குணம் குடிகொண்ட — நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன — [...]ஹாராஜனாகிய, குருநாதன் — என் குருசிரேஷ்டனா யெழுந்தருளின, முகி [...]யித்தீனே — முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. மாதவர்க்கரசான மன்னர்க்கு மன்னாக வந்த மகாராஜன் என் [...]து சக்ரவர்த்தி யென்றபடி. மண்டிசையும், விண்டிசையும், மெண்டிசையும் [...]றது பத்துத் திக்கிலும் என்றபடி. வித்தகன் — ஞானசொரூபன். வீடு — [...]க்ஷம். வீட்டின்விளக்கு — மோக்ஷவிளக்கு. சுடர் — சுவாலை. நவநாதசித் [...]ஒன்பதுசித்தர்; அவர் அநாதிநாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோர [...]க்ர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளி [...]குருன்பவர். (௯)

௩௦

வலிமையினாநந்தம்.

[...]ரிய தவத்தினர்க் கருடந்த குருவுநீ
மன்ன[...]ரா பிதாவு நீயே
மா[...]உ[...] பவக்கட லெலைக்குமொரு கவிமா
மட்டற்[...]லைமு நீயல் லவோ
மரக்[...]ரானபிர பஞ்சமாம் பெருநெருப்
அந்நியம த[...]தம் பெரும்பா லமா
படர்[...]னேனைப்பெற்ற வப்பனே யருடந்த
அன்புட[...]வனு நீயல் லவோ
வாண்ட[...]
என்னையுனை [...]ன்றியினி யாரெவரெவ ரையனே
யெந்தை[...]ய யெம்பி ரானே
இகபர பிரச[...]ணடினுஞ் சுகதுக்க மற்றியா
னீடேற [...]வருள்புரி யவே
நன்னிலய மாக[...]வென் முன்னிலையில் வந்துமெய்
நாளும்ரட்[...]சித்தருள் வையே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. மன்னிய தவத்தினர்க்கு அருள் தந்த — நிலைபெற்ற தவத்தோர்க்கு அருள் செய்த, குருவும்நீ — குருவும் நீயே, மாதா பிதாவும் நீயே — தாய் தந்தையரும் நீயே, மட்டு அறு — எல்லையற்ற, பவக்கடல் தொலைக்கும் — பிறவிக்கடலைக் கடத்துகின்ற, ஒரு — ஒப்பற்ற, கவிழா மரக்கலமும் நீ அல்லவோ — கவிழாத கப்பலும் நீயல்லவா, அந்நிய மது ஆன — வேறுகிய, பிரபஞ்சம் ஆம் — உலகமாகிய, பெரு நெருப்பு — பெருந்தீயை, அடக்கும் — அடக்குதற்குரிய, பெரும் பாலமா — பெரும் பாலமாக, அன்புடன் — அன்போடு, என்னைப் பெற்ற — என்னை யீன்ற, அப்பனே — உபகாரகனே, அருள் தந்த — அருள் செய்த, ஆண்டவனும் நீ அல்லவோ — ஆண்டவனும் நீயல்லவோ, இனி — இனி, என்னை — அடியேனை, உன்னை யன்றி — உன்னை யல்லாமல், ஆள்வர் எவர் — ஆள்வோர் யார், ஐயனே — ஐயனே, எந்தையே — என் தந்தையே, எம்பிரானே — எம்பெருமானே, இகபரம் இரண்டிலும் — இகபரங்களாகிய இரண்டிடத்தும், சுக துக்கம் அற்று — சுக துக்கங்களொழிந்து, யான் ஈடேற அருள்புரிய — நான் ஈடேறும்படி அருள் செய்யும்பொருட்டு, நல்நிலயமாக — நல்ல நிலையாக, என் முன்னிலையில் வந்தும் எனக்கெதிரே யெழுந்தருளியும், எந்நாளும் — எக்காலத்தும், ரக்ஷித்தருள் வையே — காத்தருள்வையோ, நல்குணம் குடிகொண்ட — நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன — மஹாராஜனுகிய, குருநாதன் — என் குரு சிரேஷ்டனு யெழுந்தருளின, முகியித்தீனே — முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. அகலம் நீளம் ஆழம் முதலியவை உவர்க்கடல் முதலியபோல அளவிடப்படாமையால், பிறவிக்கடலை 'மட்டறுபவக்கடல்' என்றார். மட்டு — எல்லை (அளவு). கவிழ்தல் — குப்புறல். பாலம் — வாராவதி (அணை) இதனை சேது என்பர் வடநூலார். பிரான் — உபகார குணமுள்ளவன். இகபரம் - இம்மை மறுமை. சுகதுக்கம் — இன்ப துன்பங்கள். ஈடேறுதல் — கடைத்தேறுதல். நிலயம் — நிலைமை. (௬)

இரக்கத்திருநந்தம்.

நல்லுமொரு போதிற் கரைந்துருகு மென்மனந்
　நற்கரைவ தில்லைய யனே
நவலைகளை யிவளவென் றெந்நாளு மென்னாற்
　கணித்துமுடி கூடு திலையே
அல்லுபக லாகவென் னவகீர்த்தி யவகீர்த்தி
　யம்மம்ம வென்சொல் லுகேன்
ஆறுனு மார்க்காக வடிமைகொண் டாயிந்த
　வடியனே னுய்யும் வண்ணஞ்
சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கடலை யுண்டியான்
　சும்மா விருக்க வருள்வாய்
சுத்தபரி பூரணச் சுகவாரி தன்னிலோர்
　சொட்டாகி லுந்தொட்ட பேர்

நல்லவர்க ணல்லவர்க ணல்லவர்க ளென்றைக்கு
நானுநல் லவனு வனே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. கல்லும் ஒருபோதில் கரைந்து உருகும்—கல்லும் ஒருகாலத்தில் கரைந்துருகும், என் மனக்கல் கரைவதில்லை—என்னெஞ்சக் கல்லானது கரைவதேயில்லை, ஐயனே—ஐயனே, கவலைகளை—விசனங்களை, இவ்வளவு என்று—இத்தனையென்று, எந்நாளும்—எக்காலத்தும், என்னால்—அடியேனால், கணித்து—அளவிட்டு, முடிகூடுது இல்லையே—முடிவேறபடவில்லையே, அல் பகல் ஆக—இராப்பகலாக, என் அவகீர்த்தி அவகீர்த்தி—என் அபகீர்த்தி அபகீர்த்தி, அம்மம்ம—ஆச்சரியம் ஆச்சரியம், என்சொல்லுகேன்—என்னென்று சொல்லுவேன், ஆனாலும்—ஆயினும், ஆர்க்காக அடிமைகொண்டாய்—யாருக்காக அடிமை கொண்டனை, இந்த அடியனேன்—இந்த அடியேன், உய்யும்வண்ணம்—உய்யும்படி, சொல்லும்—அறிஞரால் புகழ்ந்து சொல்லப்பட்ட, மெய்ஞ்ஞானம்—மெய்ஞ்ஞானத்தாலுண்டாவதாகிய, சுகக்கடலை—இன்பக்கடலை, உண்டு—குடித்து, யான்—அடியேன், சும்மா இருக்க அருள்வாய்—சும்மாவிருக்கக் கிருபை செய்வாயாக, சுத்த பரிபூரணம்—சுத்த பரிபூரணமாகிய, சுகவாரி தன்னில்—இன்பக்கடலில், ஓர் சொட்டு ஆகிலும் தொட்டபேர்—ஒரு துளியாயினுந் தொட்டபேர்கள், நல்லவர்கள் நல்லவர்கள் நல்லவர்கள்—முக்காலும் நல்லவர்களே, நானும்—அடியேனும், என்றைக்கு—எக்காலத்தில், நல்லவன் ஆவனே—நல்லவனுவேனே, நற்குணங் குடிகொண்ட—நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன—மஹாராஜனாகிய, குருநாதன்—என் குருசிரேஷ்டனா யெழுந்தருளின, முகியித்தீனே—முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. கல்லும் என்றது வண்மையிற் சிறந்ததெனப் பொருள் தருதலால் உம்மை உயர்வுசிறப்பு. கணித்தல்—அளவிடல். அல் எனற்பாலது அல்லு என உகாரச்சாரியை பெற்றது. இந்த அடியனேன் என்றது—இந்த ஏழையாகிய அடிமை யென்றபடி. சும்மா விருத்தலாவது அகப்புறக்கருவிகள் அசையாதிருத்தல். இதனை, "சும்மா விருக்கச் சுகஞ்சுகமென்று சுருதியெல்லாம்—அம்மா நிரந்தரஞ் சொல்லவும்" "சும்மாவிருக்கச் சுகமுதயமாகுமே" "சும்மாவிரு சொல்லற வென்றலும்" என்றற் றொடக்கத் தான்றோர் திருவாக்குக்களானுமுணர்க. சொட்டு—துளி. தொட்டபேர்—நக்கினபேர். நானும் என்பது நல்லவனல்லாத நானும் எனப் பொருள்படுதலால் உம்மை இழிவுசிறப்பு. இறந்தது தழீயதுமாம். (எ)

பெருமையினுநந்தம்.

சொல்லான் முழக்கமிட் டோலமிடு வேதமுஞ்
சொன்னது டனின்ன மின்னஞ்
சுருதிமுத லாகம புராணகலை யோதிய
சுலோகங்க ளென்சொல் லுகேன்

பல்லா யிரங்கோடி யண்டபகி ரண்டமும்
பாதபங் கயமல் லவோ
பரிபூர ணனந்த மேயுனது முடியெனப்
பகர்வதும் பொய்யா குமோ
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தல்லாது
மற்றவர் தமக்கு முளதோ
வானவர் தினந்தினம் வந்துன் பதமபணியு
மகிமைசொல வாயு முண்டோ
நல்லார் தமக்கலா தெல்லார் தமக்குமுனை
நவிலுதற் கெளிதா குமோ
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. சொல்லால் முழக்க மிட்டு—சொற்களால் முழங்கி ஓலமிடு, வேதமும்—முறையிடுகின்ற வேதமும், சொன்னதுடன்—சொன்னதோடு, இன்னம் இன்னம்—மேலும் மேலும், சுருதிமுதல்—அந்தச் சுருதி முதலாக, ஆகமபுராண கலை ஓதிய—ஆகமபுராண கலைகள் சொன்ன, சுலோகங்கள் என்சொல்லுகேன்—சுலோகங்களை யென்னென்று சொல்லுவேன், பல் ஆயிரம் கோடி—பல ஆயிரங்களாகிய கோடி யென்னுந் தொகையுள்ள, அண்டபகிரண்டமும்—அண்டபகிரண்டங்களும், பாதபங்கயம் அல்லவோ—பாத தாமரையல்லவா, பரிபூரண ஆநந்தமே—பரிபூரணமாகிய ஆநந்தமே, உனது முடியென பகர்வதும்—உன் திருமுடி யென்று அறிஞர் சொல்லுவதும், பொய் ஆகுமோ—பொய்யாய் விடுமோ, வல்லான் என்னும் பெயர்—வல்லவன் என்கிற பெயர், உனக்கு உள்ளது அல்லாது—உனக் குள்ளதன்றி, மற்றவர் தமக்கும் உளதோ—மற்றையருக்கு முண்டோ, வானவர்—தேவர்கள், தினந்தினம் வந்து—நாள்தோறும் வந்து, உன் பதம் பணியும்—உன் திருவடியை வணங்குகிற, மகிமை சொல்ல—மகிமையைச் சொல்ல, வாயும் உண்டோ—வாயுமுளதோ, நல்லார் தமக்கு அல்லாது—நல்லாருக்கேயன்றி, எல்லார் தமக்கும்—எல்லாருக்கும், உன்னை நவிலுதற்கு—உன்னைப் புகழ்ந்து சொல்லுதற்கு, எளிது ஆகுமோ—எளிதாகுமோ, நல்குணம் குடிகொண்ட—நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன—மஹாராஜனாகிய, குருநாதன்—என் குருசிரேஷ்டனா யெழுந்தருளின, முகியித்தீனே—முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. சொல்லுருவா யிருத்தலால் வேதத்தை "சொல்லால் முழக்க மிட் டோலமிடு வேதமும்" என்றார். அண்டம்—உலகு. இவ்விடத்து அண்டம் என்றது துருவமண்டலத்துக்குட்பட்ட வுலகை. பகிரண்டம்—வெளியண்டம். அது துருவ மண்டலத்துக்கு மேற்பட்ட வுலகை. உளதோ என்னும் ஓகாரம் எதிர்மறை. உண்டோ என்பது—மது ஆகுமோ என்பது மது. (அ)

தன்னிலையினுகந்தம்.

நித்திரை தனிற்செத்த பொய்யான மெய்யுடலை
நிலைபதென் றிடுவ தல்லால்
நிலையாத காயமென் றெண்ணவோர் கனவினு
நிசமாக யான றிகிலேன்
எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினு
மென்மன திணங்கு திலையே
எதென் றெடுத்துரைப் பேனெமக் கிறைவனே
யெங்கோ னெனும் பிரானே
மற்றவர்க ளெத்தனை யராயினு மென்கொடிய
வல்வினை யகற்ற வலரோ
மலையிலக் கெனநம்பி னேனம்பி னேனென்று
வந்தெனுட் குடிகொள் வையோ
நற்றவமு முத்தியுஞ் சித்தம்வைத் தருள்செய்ய
நாட்செல்லு மோவ றிகிலேன்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. நித்திரைதனில் — நித்திரையில், செத்த பொய்யான் — இறந்த பொய்யாகிய, மெய் உடலை — மெய்யென்னும் பெயருள்ள உடம்பை, நிலை பது என்றிடுவதல்லால் — நிலையுள்ளதென்று எண்ணுவதல்லாமல், நிலையாத காயம் என்று எண்ண — நிலையாத சரீரமென்று நினைப்பதற்கு, ஓர் கனவினும் — ஒரு சொப்பனத்திலும், நிசமாக — உண்மையாக, யான் அறிகிலேன் — நான் உணர்ந்திலேன், எத்தனை விதங்கடான் — எத்தனை வகையாலும், கற்கினும் கேட்கினும் — கற்றாலும் கேட்டாலும், என் மனது இணங்குது இல்லையே — என்மனம் இசைகின்ற தில்லையே, எது என்று எடுத்து உரைப் பேன் — (இந்த அநியாயத்தை) யாதென்று எடுத்துச் சொல்லுவேன், எமக்கு இறைவனே — எமக்குத் தலைவனே, எம்கோன் என்னும் பிரானே — எம் அரசனென்று சொல்வதற்குரிய உபகார சீலனே, மற்றவர்கள் எத்தனையர் ஆயினும் — மற்றவர்கள் எத்தனைபேரிருந்தாலும், என் — எனது, கொடிய — கொடுமையாகிய, வல்வினை — வலிய வினையை, அகற்ற வல்லரோ — நீக்கவல் லரோ, மலை இலக்கு என — மலையை லக்ஷியமாக்கினாற்போல, நம்பினேன் நம்பினேன் — மிகவும் நம்பினேன், என்று வந்து — எந்நாள் வந்து, என் உள் குடிகொள்வையோ — என்மனத்திற் குடிகொள்வாயோ, நல் தவமும் முத்தி யும் — நல்ல தவத்தையும் அதன்பயனாகிய முத்தியையும், சித்தம்வைத்து அருள்செய்ய — திருவுளம்வைத்து அருள் செய்வதற்கு, நாள் செல்லுமோ — பல நாட்கள் கழியுமோ, அறிகிலேன் — உணர்கிலேன், நல்குணம் குடி கொண்ட — நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன — மஹாராஜ னாகிய, குருநாதன் — என் குருசிரேஷ்டனா யெழுந்தருளின, முகியித்தீனே — முகியித்தீன் என்னும் ஆண்டகையே. எ—று.

வி—ரை. நித்திரை — தூக்கம். பொய்யுடலை மெய்யுடலென்றது மங்கல வழக்கு. வல்வினை அகற்றவசமோ என்றும் பாடம். அதற்கு ஒருவர் வசமோ என்றுரைத்துக்கொள்க. கனவினும் என்ற உம்மை இறந்ததுதழீஇயது. கற்கினும் கேட்கினும் என்ற உம்மைகள் உயர்வுசிறப்பு. மலை இலைக்கு என என்ற உபமானத்தால் என் நம்பிக்கைக்குப் பயன் தவறாது எனப் பொருள்படுகின்றது. நற்றவமும் முத்தியும் என்றது நற்றவத்தானன்றி முத்தி யெய்துதல் அரிதென்பது காரணகாரிய முறையால் விளங்கவைத்தபடி. நாட்செல்லுமோ என்பதற்கு நெடுங்காலஞ்செல்லுமோ என்றுரைப்பினுமமையும். (௯)

காரணத்திருநந்தம்.

கடலிற் கவிழ்ந்ததோர் கப்பலா லாத்துடன்
கடுகிவர வேயழைத்தீர்
கம்பமுட னோடியே வந்ததோர் கப்பலைக்
கடிபூனை யாக்கி வைத்தீர்
குடிகொண்டு கர்ப்பவறை யுள்ளிருக் கையிலுமைக்
கொலைசெய்ய வந்த முனியைக்
குதிகொண்டு வெளிசென் றிருதுண்டு கண்டுபின்
கூர்கர்ப்ப வறைபுகுந்தீர்
பிடியிற் பிடித்துண்ட பிள்ளைரந் தியாசிருடர்
பிறிவர வேயழைத்தீர்
பிரியம்வைத் தெனையாள வென்னிடத் திந்தவிரு
பேரையுந் தூது விட்டீர்
நடனமிடு பாதார விந்தமென் சென்னியுற
நாட்செல்லு மோசொல் லுமே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வாலகுரு
நாதன் முகியித் தீனே.

ப—ரை. கடலில் கவிழ்ந்தது — கடலிற் கவிழ்ந்துபோனதாகிய, ஓர் கப்பல் — ஒரு கப்பலானது, ஆலாத்துடன் — ஆலாத்துடனே, கடுகிவர — விரைந்துவரும்படி, அழைத்தீர் — அழைத்தீர், கம்பம் உடன் — கம்பங்களோடுகூடி, ஓடி வந்ததோர் கப்பலை — ஓடிவந்ததாகிய ஒரு கப்பலை, கடி பூனை ஆக்கி வைத்தீர் — கடிக்கின்ற பூனையுருவாகச் செய்தீர், கர்ப்ப அறையுள் குடிகொண்டு இருக்கையில் — கர்ப்பமாகிய அறையிலே குடிகொண்டிருக்குங் காலத்தில், உம்மை கொலை செய்யவந்த முனியை — உம்மைக் கொலைசெய்வதற்காக வந்த முனியை, குதிகொண்டு — குதித்து, வெளிசென்று — வெளியேவந்து, இருதுண்டு கண்டு — அந்த முனியை இரண்டு துண்டங்களாகச் செய்து, பின் — பிறகு, கூர் — மிகுந்த, கர்ப்ப அறைபுகுந்தீர் — கர்ப்ப அறையில் பிரவேசித்தீர், பிடியின் பிடித்து உண்டபிள்ளை — பிடியினால்பற்றி

உண்டுவிட்ட ஒரு குழந்தையானது, சந்நியாசி குடர் – சந்நியாசியின் குடலை, பீறிவர அழைத்தீர் – கிழித்துக்கொண்டு வரும்படியாகக் கூப்பிட்டீர், பிரியம் வைத்து என்னை ஆள – பக்ஷம்வைத்து என்னை யாளும்பொருட்டு, என்னிடத்து – என்னிடத்திற்கு, இந்த இருபேரையும் – இந்த இரண்டுபேர்களையும், தூதுவிட்டீர் – தூதனுப்பினீர், நடனம் இடு – நடனஞ் செய்கிற, பாத அரவிந்தம் – உன் பாததாமரை மலர், என் சென்னி உற – என் சிரசிற் பொருந்துதற்கு, நாள் செல்லுமோ – நெடுங்காலஞ் செல்லுமோ, சொல்லும் – சொல்லுவீராக, நல்குணம் குடிகொண்ட – நற்குணங் குடிகொண்டிருக்கிற, பாத்துஷா ஆன – மஹாராஜனாகிய, குருநாதன் – என் குருசிரேஷ்டனாயெழுந்தருளின, முகியித்தீனே – முகியித்தீன் என்னும் ஆண்டகையே.

வி—ரை. இந்நூலாசிரியருக்கு ஆசிரியரான முகியித்தீன் என்பவர் கடலில் முழுகின ஒரு கப்பலைக் கொடிக்கம்பத்துடன் விரைந்துவரும்படி செய்தவரும், கம்பத்துடன் ஓடிவந்த ஒரு கப்பலை பூனையாகச் செய்தவரும், கர்ப்பத்திலிருக்கும்போது தம்மைக் கொல்லவந்த ஒரு முனியைக் கொல்வதற்காகக் கர்ப்பப் பையினின்று வெளிவந்து அந்த முனியை இருதுண்டாக்கி மீண்டும் கர்ப்பப்பையைச் சேர்ந்தவரும், ஒரு சந்நியாசி ஒரு பிள்ளையைப் பிடியில் பிடித்துண்டுவிட அப்பிள்ளை அந்தச் சந்நியாசியின் குடலைக் கிழித்துக்கொண்டு வெளிவரும்படி அழைத்தவரும், தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு அழைத்துவரும்படி இரண்டு தூதர்களை யனுப்பினவருமாதலால் அம்மகிமைகளை இச்செய்யுளின்கண் தொகுத்துரைத்தார். ஆலாத்து – கொடிமரம் அன்றிப் பாய்மர மெனினுமாம். கடிபூனை – வினைத்தொகை நிலைத்தொடர். கர்ப்ப அறை – தாய் வயிறாகிய வீடு. முனி என்றது ஜடா முனியை. குடர் – குடல் என்பதன் போலி. பீறுதல் – கிழித்தல். பாதாரவிந்தம் என்சென்னி உற என்பதற்கு பாதாரவிந்தத்தை என் சிரமானது சரணடைய என்றுரைப்பினுமாம். (௧0)

ஏகவறிவாகிய வள்ளலிரசூலைத் தொடர்ந்தவ ரருள்பெறும் பொருட்டாக முன்னிலைக் குருவாகிய முகியித்தீன் ஆண்டகையைத் தோத்திரஞ் செய்து குறையிரந்துவந்து பாடிய சதகம்.

குரு வணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உணர்ந்துதற் பரமா உரைக்க கோசரமா
யுயிர்க்குயி ரானசா காமாய்
இணங்குசிற் பரமா யணுக்கடா பரமா
யேகமா கியபரா பரமாய்
வணங்கிக பரமாய்க் கிளைத்தநா றுமுகம்
மதுநல விளக்கொளி கொழிக்குங்
குணங்குடி வாழு முகியித்தீ னெமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

ப—ரை. உணர்ந்து — எல்லாவற்றையுமறிந்து, தற்பரமாய் — தற்பரமாகி, உரைக்கு அகோசரம் ஆய் — சொல்லுக்கு அடங்காததாகி, உயிர்க்கு உயிர் ஆன சாகரமாய் — உயிர்க்குயிராகிய இன்பக்கடலாய், இணங்கு சிற்பரமாய் — பொருந்திய சிற்பரம்பொருளாகி, அணுக்கள் தாபரம் ஆய் — அணுக்களும் தாபரங்களுமாகி, ஏகம் ஆகிய பராபரமாய் — ஒன்றாகிய பராபரப்பொருளாகி, வணங்கு இகபரம் ஆய் — தன்னை வணங்குகின்ற இகபரங்களாய், கிளைத்த — செழித்த, நாறு முகம்மது — நாறுமுகம்மது என்னும் பெயரையுடைய, நல்ல விளக்கொளி கொழிக்கும் — நல்ல விளக்கொளியை வீசுகின்ற, குணங்குடி வாழும் — குணங்குடியி லுறைகின்ற, முகியித்தீன் ஆம் — முகியித்தீன் ஆண்டகையாகிய, எம் குருபதம் — எமது குருநாதனது திருவடியை, சிரத்தின் மேல் கொள்வாம் — எமது சிரத்தின்மீது வைத்துக்கொள்வோம். எ—று.

வி—ரை. உணர்ந்து — அறிஞராலுணரப்பட்டு எனினுமாம். கோசரம் — அறியப்படுவது. அகோசரம் — அறியப்படாதது. சிற்பரம் — ஞானரூபமாகிய பரம்பொருள். இகபரம் — இம்மை மறுமைகள். கிளைத்த — ஓங்கின எனினுமாம். கொழித்தல் — வீசுதல். (க)

வணங்குவார்க் கிணங்கு பெரியபே ரின்ப
வாரியிற் படிந்துவாய் மடுத்தே
உணர்ந்துணும் பொருட்டாய் வலியவந் தெனைபாண்
டுவந்துளங் கனிதர மகிழ்ந்தே

அணைந்தணைந் தெடுக்குங் கருணைகொப் புளிக்கு
மலகிலா வருளடை கிடக்குங்
குணங்குடி வாழு முகியித்தீ னாமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

ப-ரை. வணங்குவார்க்கு — தம்மை வழிபடுவார்க்கு, இணங்கு — இசைகின்ற, பெரிய — பெருமையுள்ள, பேரின்பவாரியில் படிந்து — பேரானந்தக் கடலில் மூழ்கி, வாய் மடுத்து — வாய்வைத்து, உணர்ந்து உண்ணும் பொருட்டாய் — அறிந்து உண்ணும் பொருட்டாக, வலிய வந்து — பலாத்காரமாக வந்து, என்னை ஆண்டு — என்னை யாண்டருளி, உள்ளங் கனிந்து — மனங் கனிந்து, அற மகிழ்ந்து — மிகமகிழ்ந்து, அணைந்து அணைந்து எடுக்கும் — அணைத்தணைத்தெடுக்கின்ற, கருணை கொப்புளிக்கும் — அருள்பெருகுகின்ற, அலகு இல்லா — அளவற்ற, அருள் அடைகிடக்கும் — அருளால் காப்பாற்றுதற்குரிய, குணங்குடி வாழும் முகியித்தீன் ஆம் — குணங்குடியில் வாழ்பவனாய் முகியித்தீன் என்னும் பெயரையுடையவனாகிய, எம் குருபதம் சிரத்தின்மேல் கொள்வாம் — எம் குருநாதனது திருவடியைத் தலைமேல் வைத்துக்கொள்வோம். எ—று.

வி-ரை. வணங்குதல் — வழிபடுதல். இணங்குதல் — இணக்கமாயிருத்தல். பெரிய பேரின்பமென்றதனால் இன்பத்திற்கு ஓரெல்லை யில்லையென்றதாயிற்று. அணைத்து அணைத்து எனற்பாலது அணைந்தணைந்தென்று மெலிந்தது எதுகை யின்பநோக்கி யென்க. அடைகிடைத்தல் — காப்பாற்றுதல்.

அணைந்துயிர்க் குயிரா யலர்மட லவிழ்ந்த
வகண்டிதா காரமா மலரின்
மணங்கமழ் நயினார் முகம்மது வென்னு
மௌனதே சிகனுட னென்னையுந்
துணிந்துமா மாயைத் துணியெலாங் கிழித்துத்
துறவறந் தாங்கியா னாக்குங்
குணங்குடி வாழு முகியித்தீ னாமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

ப-ரை. உயிர்க்கு உயிர் ஆய் அணைந்து — உயிர்க்குயிராய்ப் பொருந்தி, அலர் மடல் அவிழ்ந்த — மலர்மடல் விரிந்தாற்போன்ற, அகண்டித ஆகாரமாம் — அகண்டரூபமாகிய, மலரின் மணம் கமழ் — மலரின் மணம்போலப் பரிமளிக்கிற, நயினார் முகம்மது என்னும் — நயினார் முகம்மது என்று சொல்லப்படுகிற, மௌன தேசிகனுடன் — மௌன குருவோடு, என்னையும் — அடியேனையும், துணிந்து — நிச்சயித்து, மாமாயை துணி எல்லாம் கிழித்து — பெரிய மாயையாகிய துணிமுழுதுங் கிழித்து, துறவறம் தாங்கி யான் ஆக்கும் — துறவறம் பூண்டவனாகச் செய்த, குணங்குடி வாழும் முகியித்

தீன் ஆம் — குணங்குடியில் வாழ்பவனாய் முகியித்தீன் என்னும் பெயரை யுடையவனாகிய, எம் குருபதம் சிரத்தின்மேல் கொள்வாம் — எம் குருநாதனது திருவடியைத் தலைமேல் வைத்துக் கொள்வோம். எ—று.

வி—ரை. அகண்டிதாகாரமாகிய பரம்பொருள் உயிர்க்குயிராய் எங்கும் வியாபித்திருத்தலால் 'அனைத்துயிர்க்குயிராய் அலர்மடலவிழ்ந்த வகண்டிதாகாரமா' என்றார் நயினார் முகம்மது. இந்நூலாசிரியரோடு துறவறம் பூண்டவர்; இவ்விருவரும், முகியித்தீன் ஆண்டகையின் சீடர் என்பதறிக. துறவு + அறம் = துறவறம்; இது இருவகைப் பற்றுக்களையும் முற்றத்துறத்தலாகிய தருமம் எனப் பொருள்படுவதோர் சொல். (ரு)

நூன்முகம்.

மாயா விநோத மெல்லா மறைந்து
தூயாதி யுண்மைச் சுயம்பிர காசிக்கக்
காரணக் குருவின் கருணையந் தொடர்பால்
ஆரணக் குருவே யருள்கவென் றிரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

ஆதிமுன் னிற்கவே யகதுகது வாகிநிய
 யத்தெனது முன்னிற் கவே
யத்துவித வஸ்துமுன் னிற்கவே யறிவகண்
 டாகார முன்னிற் கவே
போதமுன் னிற்கவே போதமனு காதபரி
 பூரணம் முன்னிற் கவே
பொங்குசிவ ஞானமுன் னிற்கவே வானாதி
 பூதலய முன்னிற் கவே
நாதமுன் னிற்கவே நாதவொளி பெற்றநபி
 நாயகம் முன்னிற் கவே
நானுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
 னன்மைதந் தாளு தற்கே
மாதா வினுங்கருணை யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப—ரை. ஆதி முன் நிற்க — முதல்வன் என் எதிரே நிற்க, அகதுகது வாகி — அகதுகதுவாய், நிய்யத்து — நிய்யத்தானது, எனது முன் நிற்க— என் எதிரே நிற்க, அத்துவித வஸ்து — அத்துவித வஸ்துவானது, முன் நிற்க — என் எதிரே நிற்க, அறிவு அகண்டாகாரம் — ஞான அகண்டரூபமா

னது, முன் நிற்க — என் எதிரே நிற்க, போதம் முன் நிற்க — ஞானம் என் எதிரே நிற்க, போதம் அணுகாத பரிபூரணம் முன் நிற்க — ஞானத்துக்கு எட்டாத பரிபூரணமானது என் எதிரே நிற்க, பொங்கு — விளங்குகின்ற, சிவஞானம் முன்நிற்க — சிவஞானமானது என் எதிரேநிற்க, வான்ஆதி பூத லயம் முன்நிற்க — ஆகாய முதலிய பூதங்கள் லயிக்குமிடமானது என் எதிரே நிற்க, நாதம் முன் நிற்க — நாதமானது என் எதிரே நிற்க, நாதன் ஒளி பெற்ற — நாதனது பிரகாசத்தைப் பெற்ற, நயிநாயகம் முன் நிற்க — நயிநா யகம் என் எதிரே நிற்க, நானும் முன் நிற்க — நானும் எதிரே நிற்க, நன்மை தந்து ஆளுதற்கு — எனக்கு நன்மையைத்தந்து ஆள்வதற்காக, அடியேனும் உம்மை நம்பினேன் — அடியேனும் உம்மையே நம்பினேன், மாதாவினும் கருணை உள்ள நீர் பின்தொடர — தாயைப்பார்க்கினும் விசேஷித்த கிருபை யுடைய நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரணகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வள ரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இரு கண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. அகண்டாகாரம் — கண்டிக்கப்படாத ரூபம். பரி பூரணம்— மிக்க நிறைவு; பரி — மிகுதிப் பொருளதாகிய வடசொல், இதனை உபசர்க்க மென்பர். 'வானாதி பூதலயம்' என்றது ஆகாய முதலிய பஞ்சபூதங்களு மொடுங்குமிடத்தை; அது பிரமப்பொருள். நாதம் — நாததத்துவம். நயிநாய கம் — நபித்தலைவர். (க)

நீக்கமற வெங்கெங்கு நின்றுநிறை கின்றபொரு
　　ளேநிலென் முன்னிற் கவே
நிர்விஷய சுத்தமா சற்பர வெளியான
　　நிர்க்குணமென் முன்னிற் கவே
தாக்கிமா கோடிமறை வாங்கியப் பறையுமா
　　தத்வமென் முன்னிற் கவே
தத்துவா திகளற்ற முத்திக்கு வித்தான
　　சற்குருவென் முன்னிற் கவே
போக்குவர வற்றபரி பூரணா னந்தமெய்ப்
　　போதமென் முன்னிற் கவே
புன்மைகுடி யானவடி யேனுமுமை நம்பினேன்
　　பொய்மை தீர்த்தா ளுதற்கே
வாக்குமா றுதநாக் குள்ளநீர் பின்றொடர
　　வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
　　மணியே முகியித் தீனே.

ப—ரை. நீக்கம் அற — நீங்குதலில்லாமல், எங்கெங்கும் — எவ்வெவ்விடத்தும், நின்று நிறைகின்ற பொருள் — நிலைபெற்று நிறைந்த பொருளானது, நேரில் — நேராக, என் முன் நிற்க — என் எதிரே நிற்க, நிர்விஷயம் — நிர்விஷயமாயும், சுத்தம் — சுத்தமாயுமிருக்கிற, மாசு அற்ற — களங்கமற்ற, பரவெளி ஆன — பரவெளியாகிய, நிர்க்குணம் — நிர்க்குணமானது, என் முன் நிற்க — என் எதிரே நிற்க, மா — பெருமைபொருந்திய, கோடி — பலவாகிய, மறைவாக்கியம் — வேதவாக்கியங்களால், தாக்கி பறையும் — எடுத்துச் சொலப்படுகின்ற, மா தத்துவம் — பெரிய உண்மைப்பொருளானது, என் முன் நிற்க — என் எதிரே நிற்க, தத்துவாதிகள் அற்ற — தத்துவம் முதலியவை நீங்கின, முத்திக்கு வித்து ஆன — மோக்ஷபீஜமாகிய, சற்குரு — சற்குரு நாதன், என் முன் நிற்க—என் எதிரே நிற்க, போக்குவரவு அற்ற—போக்குவரவு இல்லாத, பரிபூரண ஆனந்தம்—மிகப்பெரிய இன்பம், எப்போதும் என் முன் நிற்க—எப்போதும் என் எதிரே நிற்க, பொய்மை தீர்த்து ஆளுதற்கு—என் பொய்யொழுக்கங்களை நீக்கி யாண்டருளும்பொருட்டு, புன்மை குடியான அடியேனும்—தாழ்வுகளெல்லாம் குடியிருக்கப்பெற்ற அடியேனும், உம்மை நம்பினேன்—உம்மையே நம்பினேன், வாக்கு மாறாத நாக்கு உள்ள — சொல்தவறாத நாவையுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதார குணமுடைய, இறசூல்வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போலவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. நீக்கம் — நீங்குதல்; இது தொழிற் பெயர்; நீங்கு — பகுதி. நிர்விஷயம் — சப்தாதி விஷயங்களில்லாமை, நிர் என்னும் வடமொழி உபசர்க்கம் இன்மைப் பொருளுணர்த்தும். சுத்தம் — தூய்மை. பரவெளி — மேலான வெளி. நிர்க்குணம் — குணமின்மை. தத்வம் — உண்மை. முத்திக்குவித்து— மோட்சத்துக்குக் காரணம். சற்குரு — நல்ல ஆசாரியன். புன்மை — இழி குணங்கள். (உ)

இகபர மிரண்டொன்றும் வகையுண்டு வெளிகண்ட
வீசனென் முன்னிற் கவே
ஏகமா கியபரா பரமெனது முன்னிற்க
வெப்பொருளு முன்னிற் கவே
வகைதொகுத் தோலமிடு மறைகண்முற சறைகின்ற
வள்ளலென் முன்னிற் கவே
வானாதி பூதமுந் தானாகி நின்றபெரு
மானெனது முன்னிற் கவே
அகமகிழ வந்துகுடி கொண்டகுரு நாதனடி
யாருமென் முன்னிற் கவே

அன்றுமின் றென்றுமடி யேனுமுமை நம்பினே
    னண்டிவந் தாளுதற்கே
மகிழ்துன்னு புன்னகைப் புள்ளநீர் பின்றொடர
    வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
    மணியே முகியித் தீனே.

ப—ரை. இகபரம் இரண்டு—இம்மை மறுமைகளிரண்டும், ஒன்றும் வகை—பொருந்தும் வகையாக, உண்டு—உட்கொண்டு, வெளிகண்ட—மீண்டுந் தோற்றுவித்த, ஈசன் என் முன் நிற்க—ஈசன் எதிரே நிற்க, ஏகம் ஆகிய பராபரம்—ஒன்றாகிய பராபரவஸ்து, என்முன் நிற்க—என் எதிரே நிற்க, எப்பொருளும் முன் நிற்க—எல்லாப்பொருள்களும் என் எதிரே நிற்க, வகை—பல வகைகளாக, தொகுத்து—தொகுக்கப்பட்டு, ஓலம் இடும்—முறையிடுகின்ற, மறைகள்—வேதங்களால், முரசு அறைகின்ற—முரசறையப்படுகிற, வள்ளல்—வள்ளலானவன், என் முன் நிற்க—என் எதிரே நிற்க, வான் ஆதிபூதமும் தான் ஆகி நின்ற—ஆகாய முதலிய பூதங்களுந் தானேயாகி நின்ற, பெருமான்—எம்பெருமான், எனது முன் நிற்க—என் எதிரே நிற்க, அகம் மகிழவந்து—மனமகிழவந்து, குடிகொண்ட—அதனிடத்துக் குடிகொண்ட, குருநாதன் அடியாரும்—குருநாதனது அடியார்களும், என் முன் நிற்க—என் எதிரே நிற்க, அன்றும் இன்று என்றும்—அன்றும் இன்றும் என்றும், அண்டிவந்து ஆளுதற்கு—நெருங்கிவந்து ஆளும்பொருட்டு, அடியேனும் உம்மை நம்பினேன்—அடியேனும் உம்மையே நம்பினேன், மகிழ் துன்னு புன்னகைப்பு உள்ள—மகிழ்ச்சிமிக்க புன்சிரிப்பையுடைய, நீர் பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. முரசறைதல்—பலரறியத் தூற்றல். இன்று என்பதன் ஈற்றில் உம்மை சேர்த்து உரைக்கப்பட்டது. அண்டுதல்—கிட்டுதல். புன்னகை—சிறுநகை. (௫)

நோக்குநோக் கொண்ணாத நோக்குநோக் காநின்ற
    நோக்கெனது முன்னிற் கவே
நோக்கிப் புராதனப் பொருளான நுண்ணறிவி
    னுட்பமென் முன்னிற் கவே
நீக்கமற வங்கிங் கெனாதுவெங் கெங்குமொரு
    நிறைவெனது முன்னிற் கவே

நேசித்த நெஞ்சமே குடிகொண்ட வான்கருணை
நேயமென் முன்னிற் கவே
போக்கொடு வரத்தொடு விகாரமில தாய்நின்ற
புநிதமென் முன்னிற் கவே
புல்லறிவ ஞனவடி யேனுமுமை நம்பினேன்
போதுநென வாளு தற்கே
வாக்குமன மொத்தமர புள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. நோக்கு — நோக்கொண்ணுத, நோக்கினல் — நோக்க வொண்ணுத, நோக்கு — நோக்காநின்ற, நோக்கினல் — நோக்கப்படுவதாகிய, நோக்கு — பார்வையானது, என் முன் நிற்க — என்னெதிரேநிற்க, நோக்கின்— ஆராயுமிடத்து, புராதன பொருளான — பழம்பொருளாகிய, நுண் அறிவின் நுட்பம் — நுண்ணறிவினும் நுட்பமானபொருள், என் முன் நிற்க — என்னெதிரே நிற்க, நீக்கம் அற — நீக்கமில்லாமல், அங்கு இங்கு என்னுது — அங்கிங் கென்று சொல்லாதபடி, எங்கெங்கும் ஒருநிறைவு — எவ்வெவ்விடத்தும் ஒரு நிறைவாயிருக்கும்பொருள், என்முன்நிற்க — என்னெதிரேநிற்க, நேசித்த நெஞ்சமே — விரும்பின மனத்தையே, குடிகொண்ட — குடிகொண்டிருக்கிற, வான் — மேலான, கருணை நேயம் — கருணையோடு கூடிய அன்பு, என் முன் நிற்க — என்னெதிரே நிற்க, போக்கொடு வரத்தொடு விகாரமிலது ஆய் நின்ற — போக்கும் வரவும் விகாரமு மில்லாததாய் நின்ற, புனிதம் — பரிசுத்தவஸ்து, என் முன் நிற்க — என்னெதிரே நிற்க, போதுக என ஆளுதற்கு— வாவென்றழைத்து ஆண்டருளும் பொருட்டு, புல்லறிவனுன அடியேனும்— அற்ப அறிவினனுகிய அடியேனும், உம்மை நம்பினேன் — உம்மையே நம்பி னேன், வாக்கு மனம் ஒத்த மரபு உள்ள நீர் பின் தொடர — வாக்கும் மனமும் ஒன்றுகிய மரபினையுடைய நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதார குணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல் பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. நோக்கு நோக் கொண்ணுத என்பதற்கு — முகக் கண்ணுல் நோக்க வொண்ணுத என்றும், நோக்கு நோக்காநின்ற என்பதற்கு — அகக் கண்ணுல் நோக்கப்படுகிற என்றும், பொருளுரைத்துக்கொள்க. நோக்கெ னது முன்னிற்க என்பதில்: நோக்கு — அருட்பார்வை யெனக்கொள்க. அங் கிங்கெனுது என்பதற்கு — அங்குள்ளது இங்கில்லையென்று சொல்லாதபடி யென்பதுபொருள். எங்கெங்கு மொருநிறைவு — பரிபூர்ணம். விகாரம்— வேறுபாடு. புல்லறிவன் — சிற்றறிவன். மரபு — இயற்கை (சுபாவம்.) (ச)

எற்றாத மாயைதனை யெற்றும்பே ரெற்றும்பே
ரின்பமென் முன்னிற் கவே
ஏகமா யொருகாலு மழியாத வொளியான
வெம்பிரான் முன்னிற் கவே
புத்திக்கு மெட்டாத வட்டாங்க யோகமழை
பொழிவதென் முன்னிற்கவே
பூதமுத னாதமுட னேதுமது வானவான்
பொருளெனது முன்னிற் கவே
குற்றமின் னற்குணங் குடியா னெனுங்குணக்
குன்றெனது முன்னிற் கவே
கொடுமைகுடி கொண்டவடி யேனுமுமை நம்பினேன்
குறைவுதீர்த் தாளு தற்கே
வற்றா வருட்செல்வ முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. எற்றாத மாயைதனை — ஒருவராலும் வெல்லப்படாத மாயையை, எற்று — அழிக்கின்றதும், பேர் எற்று — அதன்பேரையும் அழிக்கின்ற, பேரின்பம் — பேரானந்தமானது, என் முன் நிற்க — என்னெதிரேநிற்க, ஏகமாய் — ஒன்றாகி, ஒருகாலும் அழியாத ஒளியான — ஒருகாலத்திலும் அழியாத ஒளியாகிய, எம்பிரான் — எம்பெருமானானவர், முன் நிற்க — என்னெதிரே நிற்க, புத்திக்கும் எட்டாத — மனத்துக்கு மெட்டாத, அட்டாங்க யோகமழை பொழிவது — அஷ்டாங்க யோகமாகிய மழையைச் சொரிவதாகிய மேகம், என் முன் நிற்க — என்னெதிரேநிற்க, பூதம்முதல் நாதமுடன் ஏதும் — பூதமுதல் நாததத்துவமீறாயுள்ள எல்லாம், அது ஆன — தானேயாகிய, வான் பொருள் — மேலானபொருள், எனது முன் நிற்க — என்னெதிரேநிற்க, குற்றம் இல் — குற்றமற்ற, நல் — நல்ல, குணங்குடியான் என்னும் — குணங்குடியானென்கிற, குணக்குன்று — குணமலை, எனது முன்னிற்க — என்னெதிரேநிற்க, குறைவு தீர்த்து ஆளுதற்கு — குறையைநீக்கி யாளும்பொருட்டு, கொடுமை குடிகொண்ட அடியேனும் — கொடுமைகுடிகொண் டிருத்தற்கிடமாகிய அடியேனும், உம்மை நம்பினேன் — உம்மையே நம்பினேன், வற்றா அருள் செல்வம் உள்ள — குறையாத அருட்செல்வத்தையுடைய, நீர் பின் தொடர — நீர்பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இரு கண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. எற்றுதல் – வெல்லுதல், அட்டாங்கயோகம் – எண்வகையுறுப்புகளோடு கூடினயோகம். எண்வகை யுறுப்புகளாவன:—இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்பன. மழைபொழிவது என்றமையால் மேகம் வருவித்து உரைக்கப்பட்டது. பூதமுதனாதமுடன் என்றது பிருதிவிமுதல் நாததத்துவமீறாயுள்ள தத்துவத்தொகுதியை. "அசையாமைபற்றி குணத்தைக் குன்று என்றார்" குணமென்னுங்குன்றேறி நின்றார் என்பது திருக்குறள் "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்றபடியே அருட்செல்வம் எக்காலத்துங் குறையாதாதலால் வற்றாவருட்செல்வம் என்றார். (கூ)

ஊறற்று நாமரூ பத்துடன் பற்றற்
றுயர்ந்ததென் முன்னிற் கவே
ஒன்றற் றிரண்டற்று வாக்கற்று மனமற்
றுதித்ததென் முன்னிற் கவே
கூறுகுண மற்றுமொளி யுற்றும்வெளி தத்திக்
குதித்ததென் முன்னிற் கவே
குறியற்று மறிவற்று நிறைவுகுறை வற்றுங்
குலாவியதென் முன்னிற் கவே
ஈறுமுத லற்றுமின் றற்றுநா ளையுமற்
றிருப்பதென் முன்னிற் கவே
ஏதுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னின்பமுற் றானு தற்கே
மாறிலா நற்கருணை யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருநண்
மணியே முகியித் தீனே.

ப–ரை. ஊறு அற்று – துன்பமற்று, நாமரூபத்துடன் பற்று அற்று– நாமரூபங்களோடு பற்றுமற்று, உயர்ந்தது – உயர்ந்திருப்பதாகிய வஸ்து, என்முன் நிற்க – என்னெதிரே நிற்க, ஒன்று அற்று இரண்டு அற்று – ஒன்றற்று இரண்டற்று, வாக்கு அற்று – சொல்லற்று, மனம் அற்று – மனதற்று, உதித்தது – உதயஞ்செய்ததாகிய வஸ்து, என்முன்நிற்க – என்னெதிரே நிற்க, கூறு குணம் அற்றும் – சொல்லப்பட்ட குணமற்றும், ஒளி உற்றும்– ஒளியைப்பெற்றும், வெளிதத்திக்குதித்தது – வெளியில்தாவிக்குதித்ததாகிய வஸ்து, என்முன்நிற்க – என்னெதிரே நிற்க, குறி அற்றும் அறிவு அற்றும்– அடையாளமற்றும் அறிவற்றும், நிறைவு குறைவு அற்றும் – நிறைகுறைகளற்றும், குலாவியது – விளங்கினதாகிய வஸ்து, என்முன்நிற்க – என்னெதிரே நிற்க, ஈறுமுதல் அற்றும் – முடிவுமுதலுமற்றும், இன்று அற்றும்– இன்றற்றும், நாளையும் அற்றிருப்பது–நாளையும் அற்றிருப்பதாகிய பொருள்,

ட

என்முன்நிற்க — என்னெதிரேநிற்க, எதும் முன் நிற்க — எல்லாம் முன்னிற்கும்படி, இன்பம் உற்று ஆளுதற்கு — மகிழ்ந்து என்னை யாளும்பொருட்டு, அடியேனும் உமை நம்பினேன் — அடியேனும் உம்மைநம்பினேன், மாறிலா— மாறுபடாத, நல் கருணை உள்ள — பெருங்கருணையையுடைய, நீர் பின்தொடர — நீர்பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக— றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே— எனது இரண்டுகண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. நாமரூபம் — பெயரும் உருவமும். பற்று — ஆசை, குணம் முக்குணம். அவை: சாத்துவிகம், ராஜஸம், தாமசம் என்பன. குலாவுதல்— விளங்குதல். (௬)

தேடியே வந்தரு டந்தடிமை கொண்டவென்
றேசிகன் முன்னிற் கவே
சிற்பர வெளிக்கொளி கொழிக்குமா கற்பூர
தீபமென் முன்னிற் கவே
நாடரிய செஞ்சுடர் பரப்புகுரு நாதனெந்
நாளுமென் முன்னிற் கவே
நாலு விதங்கொண்ட வாசா மகோசரா
நந்தமென் முன்னிற் கவே
ஈடேசாடற்றசிற் சத்தியா மெம்பிரா
னென்னெதிரின் முன்னிற் கவே
ஏற்கைமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னிங்குவந் தாளு தற்கே
வாடாத சமநிலை முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. தேடிவந்து — தேடிக்கொண்டேவந்து, அருள் தந்து — கிருபை செய்து, அடிமை கொண்ட — அடிமைகொண்டருளின, என் தேசிகன்— என் சற்குருநாதன், முன்நிற்க — என்னெதிரேநிற்க, சிற்பரவெளிக்கு — சிற்பரவெளியில், ஒளிகொழிக்கும் — ஒளிவீசுகின்ற, மா கற்பூரதீபம் — பெரிய கற்பூரதீபமானது, என் முன் நிற்க — என்னெதிரேநிற்க, நாடு அரிய— நோக்குதற்கரிய, செஞ்சுடர் பரப்பு — செவ்வொளியை விரிக்கின்ற, குரு நாதன் — குருநாதனானவன், எந்நாளும் — எக்காலத்தும், என் முன் நிற்க— என்னெதிரே நிற்க, நாலுவிதம்கொண்ட — நாலுவிதத்தைக் கொண்டிருக்

கிற, வாசாமகோசரம் — வாசாமகோசரமாகிய, ஆநந்தம் — இன்பம, என் முன் நிற்க — என்னெதிரேநிற்க, ஈடு சோடு அற்ற — ஈடுசோடில்லாத, சிற்சத்தியும் — சிற்சத்தியாகிய, எம்பிரான் — எம்பெருமான், என் எதிரில் முன் நிற்க — என்னெதிரே முன்னிற்க, எற்கை முன்நிற்க — அடியேனை எற்றுக் கொள்ளுவது எதிரேநிற்க, இங்குவந்து ஆளுதற்கு — இவ்விடத்து எழுந்தருளி என்னை யாட்கொள்ளும் பொருட்டு, அடியேனும் உமைநம்பினேன் — அடியேனும் உம்மையே நம்பினேன், வாடாத சமநிலயம் உள்ள — குறையாத சமநிலையுள்ள, நீர் பின்தொடர — நீர்பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணக்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீனை ஆண்டகையே. எ—று.

வி—ரை. தேடியேவந்து — தடுத்தாட்கொள்ளத் தேடிவந்து என்றபடி. சிற்பரவெளி — ஞானமயமாகிய பரமாகாசம். நானாவிதம் — பலவகை. வாசாமகோசரம் — வாக்குக்கெட்டாதது. சிற்சத்தி — ஞானசத்தி. நிலயம் — நிலை. ()

அருளகண் டாகார வாநந்த பூர்த்தியெனு
மாதார முன்னிற் கவே
அதிசொப்ர காசவரு டேசோம யந்தந்த
வாதிக்க முன்னிற் கவே
குருநாத னுகமெய்ப் பிரணவ சொரூபக்
கொழுந்தெனது முன்னிற் கவே
கூறரிய சாலம்ப ரகிதமா கியதிவ்ய
குணசாந்த முன்னிற் கவே
நிருவிகா ரத்துடன் றளதலென நின்றொளிர்
நிராமயம் முன்னிற் கவே
நிலயமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னேயம்மைத் தாளு தற்கே
மருமலர் மணக்கோல முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. அருள் — அருளோடுகூடிய, அகண்டாகாரம் — அகண்ட ரூபத்தையுடைய, ஆனந்த பூர்த்தி என்னும் — ஆனந்தபூர்த்தியென்கிற, ஆதாரம் — ஆதாரப்பொருள், முன் நிற்க — என்னெதிரே நிற்க, அதி சொப்ரகாச அருள் — மேலான ஸ்வப்ரகாச அருளோடுகூடிய, தேஜோ மயம் தந்த — தேஜோமயப்பொருளை யருள்செய்த, ஆதிக்கம் — மேன்மையான பொருள்,

முன் நிற்க — என்னெதிரேநிற்க, குருநாதனாக — குருசிரேஷ்டனாக, மெய் சொரூபக்கொழுந்து — உண்மையாகிய பிரணவரூபக்கொழுந்தானது, எனது முன்னிற்க — என்னெதிரே நிற்க, கூறரிய — சொல்லுதற்கரிய, சாலம்பரகித மாகிய — சாலம்பமற்றதாகிய, திவ்யகுண சாந்தம் — திவ்யகுண சாந்தமானது, முன் நிற்க — என்னெதிரே நிற்க, நிருவிகாரத்துடன் — விகார மின்மையோடு, தளதளென நின்றொளிர் — தளதளவென்று நிலைபெற்றுப் பிரகாசிக்கிற, நிராமயம் — நிராமயமானது, முன் நிற்க — என்னெதிரேநிற்க, நிலயம் முன்னிற்க — நிலையான பொருள் எதிரேநிற்க, நேயம் வைத்து ஆளுதற்கு — அன்புவைத்தாளும் பொருட்டு, அடியேனும் உம்மை நம்பினேன் — அடியேனும் உம்மையே நம்பினேன், மருமலர் மணக்கோலம் உள்ள — வாசனை பொருந்திய மலரையணிந்த மணக்கோலத்தையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல்என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. ஆனந்தபூர்த்தி — இன்ப நிறைவு. ஆதாரம் — தானம். சொப்ரகாசம் — தானாகவே பிரகாசிப்பது. ஆதிக்கம் — மேலானது. பிரணவம் — ஓங்காரம். சொரூபம் — வடிவு. சாலம்பம் — பற்றுக்கோடு. ரகிதம் — இல்லாமை. குணசாந்தம் — சாந்தகுணம். நிராமயம் — நோயில்லாதது. (அ)

பலவுமா யொன்றுமா யொன்றுமாய் நின்றதற்
பரமெனது முன்னிற் கவே
பரமான தெப்பொருளு மதுவாய் முளைத்துவிளை
பயிரெனது முன்னிற் கவே
நிலைசரமொ டிகபரமு முயிரினுக் குயிராகி
நின்றதென் முன்னிற் கவே
நேரிட்ட ஞானகு ருபனு யுதித்தநன்
னெறியெனது முன்னிற் கவே
அலையுலகு கானலின் னீரெனத் தோன்றுமெய்
யறிவெனது முன்னிற் கவே
அய்யனே யஞ்சியடி யேனுமுமை நம்பினே
னாதரித் தாளு தற்கே
மலையிலக் கானகுறி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. பலவும் ஆய் — பலபொருள்களுமாகி, ஒன்றும் ஆய் — ஒரு பொருளுமாகி, என்றும் ஆய் — எக்காலமுமாகி, நின்ற — நிலைபெற்ற, தற்பரம்— அந்தமேலானபொருள், எனது முன்னிற்க — என்னெதிரே நிற்க, பரமானது எப்பொருளும் — மேலானதாகிய எப்பொருளும், அது ஆய் முளைத்து விளை — அதுவாகி முளைத்து விளைகின்ற, பயிர் — பயிரானது, எனது முன்னிற்க — என்னெதிரே நிற்க, நிலை சரமொடு — நிலையாகிய சரத்தோடு, இகபரமும் — இம்மையிலும் மறுமையிலும், உயிரினுக்கு உயிர் ஆகி — உயிருக்குயிராகி, நின்றது — நின்றதாகிய பொருள், என்முன்னிற்க — என்னெதிரே நிற்க, நேரிட்ட — எதிர்ப்பட்ட, ஞானசூரியனாய் உதித்த — ஞானசூரியனாகி உதயஞ்செய்த, நல் நெறி — நன்னெறியானது, எனது முன்னிற்க — என்னெதிரே நிற்க, அலை உலகு — கடல்சூழ்ந்த உலகமானது, கானலின் நீர் எனத்தோன்ற — கானல் நீர்போலத் தோன்றும்படி, மெய் அறிவு — மெய்யறிவானது, எனது முன்னிற்க — என்னெதிரே நிற்க, ஆதரித்து ஆளுதற்கு—ஆதரித்தாளும்பொருட்டு, அய்யனே—ஐயனே, அஞ்சி — பயந்து, அடியேனும் உமை நம்பினேன் — அடியேனும் உம்மை நம்பினேன், மலைஇலக்கு ஆனகுறி உள்ள — மலையிலக்காகிய அடையாளமுள்ள, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை—வளரும் அருள்நிறைந்த குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. பயிர் என்றது சிவபோகத்தை. அலை உலகு என்பதற்கு — கிரியாநின்றவுலகு என்றுரைப்பினுமமையும், கானலினீர் — பேய்த்தேர், இதனை 'மருமரீசிகை' என்றும் 'பசாசரதம்' என்றும் கூறுவர் வடநூலார். (கூ)

உடல்பொருளோ டாவியுங் கைப்பற்றி யெனையாளு
முத்தமன் முன்னிற் கவே
ஊனாகி யுயிராகி யூனுயிர்க் குயிரான
வுண்மையென் முன்னிற் கவே
திடமாயை தொடரா தடர்ந்தேறு மெய்ஞ்ஞான
தீரமென் முன்னிற் கவே
திவ்யகரு ணாகர மும்மத ரெனும்மருட்
செல்வமென் முன்னிற் கவே
கொடியோடு கொழுகொம்ப தாகநீர் வந்துகுதி
கொண்டெனது முன்னிற் கவே
கொத்தடிமை யானவடி யேனுமுமை நம்பினேன்
கொண்டணைத் தாளு தற்கே

வடிவிளங்கு நடனவடி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. உடல்பொருளொடு ஆவியும் கைப்பற்றி – உடல்பொருள் என்பவற்றோடு உயிரையும் கைக்கொண்டு, என்னை ஆளும் உத்தமன் – என்னையாண்டருளுகின்ற உத்தமன், முன்னிற்க – என்னெதிரே நிற்க, ஊன் ஆகி – உடம்பாகி, உயிர் ஆகி – உயிராகி, ஊன் உயிர்க்கு உயிர் ஆன – உடம்போடு கூடிய உயிருக்குயிராகிய, உண்மை – மெய்ப்பொருள், என் முன்னிற்க – என்னெதிரே நிற்க, திடம் மாயை தொடராது – உறுதியாகிய மாயையானது தொடராதபடி, அடர்ந்து ஏறு – அதனையழித்து மேற்படுகின்ற, மெய்ஞானதீரம் – மெய்ஞ்ஞான தீரமானது, என்முன்னிற்க – என்னெதிரே நிற்க, திவ்யம் – அழகாகிய, கருணாகரம் – கருணைக்குப் பிறப்பிடமாகிய, முகம்மதர் எனும் – முகம்மதர் என்று சொல்லப்படுகிற, அருள் செல்வர் – அருட்செல்வரானவர், என்முன்னிற்க – என்னெதிரே நிற்க, கொடி ஓடு – கொடியோடிப் படர்தற்குரிய, கொழுகொம்பது ஆக – கொழுகொம்புபோல, நீர்வந்து – நீர் எழுந்தருளி, குதிகொண்டு – குதித்து, எனது முன்னிற்க – என்னெதிரே நிற்க, கொண்டு அணைத்து ஆளுதற்கு – கொண்டணைத்தாளும்பொருட்டு, கொத்தடிமையான – குடியடிமையாகிய, அடியேனும் உமை நம்பினேன் – அடியேனு மும்மை நம்பினேன், வடிவு இளகு – அழகு விளங்குகிற, நடனவடிவுள்ள – நடனரூபத்தையுடைய, நீர் பின்தொடர – நீர்பின்தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை – வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் – குணங்குடியில்வாழும், என் இரு கண்மணியே – எனது இரண்டுகண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. சற்குருநாதன் சற்சீடனை யடிமை கொண்டு உபதேசிக்குங் காலத்தில் அவனது உடல் பொருள் ஆவிகளாகிய மூன்றையும் ஏற்றுக் கொள்ளுதல் மரபாதலால், உடல்பொரு ளொடாவியுங் கைப்பற்றி யென்னை யாளு முத்தமன் என்றார். மாயையைவெல்லுதல் அரிதென்பது தோன்ற, திடமாயை என்றார். தீரம் – தைரியம் "கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்" என்றார் தாயுமானவரும். கொழுகொம்பு – கொடிகள் ஆதரவாய்ப்பற்றிப் படரும்பொருட்டு அவற்றிற்கிடையே நடுவதாகிய ஒருகோல். (௧௦)

ஆக பாடல் - 24.

அப்பொரு டானே யெப்பொருட் குணமு
மொப்பியு மொப்பா தாகிய வுண்மையைப்
பிரியாது தெரிசிக்கப் பிரியமா யெனக்குங்
கருணைகூர்ந் தருள்கெனக் கனிந்துநின் றிரந்தல்.

ஆசிரியவிருத்தம்.

நித்தமாய் நன்னிருவி கற்பநிட் டாபரர்க
ணெற்றிநே ரிட்ட பொருளை
நிச்சய வகோசரத் தாதார பேதநிலை
நின்றுநிறை கின்ற பொருளை
முத்திக்கு வித்தாய் முளைத்துவிளை பொருளையருண்
மொய்த்தசுட ருற்ற பொருளை
மும்மண்ட லங்களுங் கொண்டமூ லாதார
மோனவடி வான பொருளை
புத்திக்கு மெட்டாது புத்திக்கு ணின்றிலகு
போக்குவர வற்ற பொருளை
போதவருள் புரியவடி யேனுமுமை நம்பினேன்
புனிதமுட னாளு தற்கே
மத்தமத யானைநிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. நித்தம் ஆய் — நித்தியமாகி, நல் — சிறந்த, நிரு விகற்ப நிட்டா பரர்கள் — நிருவிகற்ப நிஷ்டாபரர்களுடைய, நெற்றிநேரிட்ட பொருளை — நெற்றியிற் சந்தித்த பொருளை, நிச்சயம் அகோசரத்து — நிச்சயமாய் அகோசரமாய், ஆதாரபேத நிலைநின்று — ஆதாரபேத நிலையில் நின்று, நிறைகின்ற பொருளை — பூர்ணமாகிய பொருளை, முத்திக்கு வித்து ஆய் முளைத்து விளை பொருளை — மோட்சத்துக்கு பீஜமாகி முளைத்துப் பயிராகிற பொருளை, அருள் மொய்த்த சுடர் உற்ற பொருளை — அருள் மிகுந்த ஒளி சிறந்த பொருளை, மும்மண்டலங்களும்கொண்ட — மும்மண்டலங்களையுங்கொண்ட, மூலாதாரம் — மூலாதாரமாகிய, மோனவடிவு ஆனபொருளை — மௌனரூபமாகிய பொருளை, புத்திக்கும் எட்டாது — புத்திக்கு மெட்டாமல், புத்திக்குள் நின்று இலகு — புத்திக்குள்ளே நின்று விளங்குகிற, போக்கு வரவு அற்ற பொருளை — போக்கு வரவுகள் இல்லாதபொருளை, போத அருள் புரிய — மிகவுங் கருணைசெய்யும் பொருட்டு, அடியேனும் உமைநம்பினேன் — அடியேனும் உம்மையே நம்பினேன், புனிதமுடன் ஆளுதற்கு — பரிசுத்தமாயென்னை யாளும் பொருட்டு, மத்தமதயானை நிகர் உள்ள — மத்தமத

யானைக்கு நிகராயிருக்கிற, நீர் பின்தொடர — நீர் பின்னே தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, மூகியித்தீனே — மூகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. நித்தம் — அழியாமை. நிருவிகற்பம் — வேறுபாடில்லாமை. நிட்டாபரர்கள் — நிஷ்டை செய்வோர். நெற்றியென்றது — புருவ நடுவை. ஆதாரம் — தாங்குவது. மும்மண்டலங்கள் — சந்திரமண்டலம் சூரியமண்டலம் அக்கினிமண்டலம் என்பன. புத்தி — அறிவு. போக்கு வரவு — போதல் வருதல். மத்தம் — களிப்பு. (க)

பெந்தமொடு முத்திய மகிழ்ச்சியு மிகழ்ச்சியும்
பின்னுமுன் னுங்கெட்டதைப்
பெரிதுசிறி தருவுருவொ டதுவிதென் பதுவும்
பிறப்பிறப் புங்கெட் டதை
நிந்தித்த லோடுவந் தித்தலும் பொய்மையொடு
நிசமென்ப துங்கெட் டதும்
நீநான்னெ னலுமொன் றிரண்டெனலு நீதமொட
நீதமென லுங்கெட் டதை
அந்திபகல் போக்குடன் வரவுமன வாக்கொடிங்
கங்கென்ப துங்கெட் டதை
அறியாம லறியவடி யேனுமுமை நம்பினே
னறிவுதந் தாளு தற்கே
வந்தடிமை கொள்ளமன முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. பெந்தமொடு முத்தியும் — பந்த மோக்ஷங்களும், மகிழ்ச்சியும் இகழ்ச்சியும் — மகிழ்வும் இகழ்வும், பின்னும் முன்னும் — பின்னும் முன்னும், கெட்டதை — இல்லாததை, பெரிது சிறிது — பெரியது சிறியது, அரு உருவொடு — அருவம் உருவத்தோடு, அது இது என்பதும் — அது இது என்னும் வேறுபாடும், பிறப்பு இறப்பும் கெட்டதை — பிறப் பிறப்புக்களும் இல்லாததை, நிந்தித்தலோடு வந்தித்தலும் — நிந்தனை செய்தலும் வாழ்த்துதலும், பொய்மையொடு நிசம் என்பதும் கெட்டதை — பொய்யொடு மெய்யென்பது மில்லாததை, நீ நான் எனலும் — நீ நான் என்பதும், ஒன்று இரண்டு எனலும் — ஒன்று இரண்டு என்பதும், நீதமொடு அநீதம் எனலும் —

நீதியோடு அநீதியென்பதும், கெட்டதை — இல்லாததை, அந்திபகல் — இரவு பகல், போக்குடன்வரவு — போதலோடு வருதல், மனவாக்கொடு — மனவாக்குக்களோடு, இங்கு அங்கு என்பதும் கெட்டதை — இவ்விடம் அவ்விடம் என்பதும் இல்லாததை, அறியாமல் அறிய — அறியாதறியும் பொருட்டு, அடியேனும் உமை நம்பினேன், அறிவு தந்து ஆளுதற்கு — அறிவு கொடுத்தாளும் பொருட்டு, வந்து அடிமை கொள்ள மனம் உள்ள — வந்தடிமை கொள்ள விருப்பமுள்ள, நீர் பின்தொடரா — வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை— வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பெர்தம் — பர்தம் என்பதன்மரூஉ, பொருள்கட்டு. பின்முன்— இறுதிமுதல். நிந்தித்தல் — இகழ்தல். வந்தித்தல் — புகழ்தல். அறியாமலறிதலாவது — எதிரிட் டறியாதறிதல். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எவ்வளவு விரிவாயெழுதினும் விளங்காமல் அநுபவத்தாலறிய வேண்டியதாதலால் சற்குருகடாட்சத்தா லறிந்து கொள்க. (௨)

முத்தைநவ மணியையொளி பத்திபா யும்மணியை
மோனமணி ஞான மணியை
மொய்த்தகதிர் மாசிலா மணியைவா னாதியா
மூவுலகு மான மணியைச்
சித்திமணி யைச்சித்தி தருமுத்தி மணியையென்
சிந்தைகுடி கொண்ட மணியைத்
திவ்யகுரு மணியா யிழைத்தசிங் காசனச்
சிகரத்தி னுச்சி மணியைப்
பத்தர்கட் கெய்துசூ டாமணியை நிறைபார்த்த
பரமார்த்த மான மணியைப்
பணிபூண்டு பார்க்கவடி யேனுமுமை நம்பினேன்
பணிபூட்டி யாளு தற்கே
வைத்ததீ பத்தினிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. முத்தை — முத்தினை, நவமணியை — நவரத்தினத்தை, ஒளிபத்தி பாயும் மணியை — ஒளிவரிசையாய் வியாபித்தற் குரியமணியை, மோனமணி ஞானமணியை — மோனமணியை ஞானமணியை, மொய்த்த கதிர் மாசிலாமணியை — மிக்க ஒளியையுடைய குற்றமற்ற மணியை, வான் ஆதியாம்—

ஆகாசாதிகளாலுண்டாகிய, மூவுலகும் ஆனமணியை — மூன்றுலகங்களுமான

மணியை, சித்திமணியை — சித்திகொடுக்கு மணியை, சித்திதரும் முத்தி மணியை — சித்தியால் தரப்பட்ட முத்திமணியை, என்சிந்தை குடிகொண்ட மணியை — என்மனத்தில் குடிகொண்ட மணியை, திவ்ய குருமணியால் இழைத்த சிங்காசனச் சிகரத்தின் — அழகிய நிறமுள்ள மணிகளால் செய்யப்பட்ட சிங்காசனத்தின், உச்சிமணியை — முடிமணியை, பத்தர்கட்கு எய்து சூடாமணியை — பத்தருக்குக் கிடைக்கும்படியான சிகாமணியை, நிறைபார்த்த — நிறுக்கப்பட்ட, பரமார்த்தமான மணியை — மேலான அர்த்தமுள்ளமணியை, பணிபூண்டு பார்க்க — ஆபரணமாகப் பூண்டுபார்க்க, அடியேனும் உமைநம்பினேன் — பணிபூட்டி ஆளுதற்கு — பணியை யெனக்குப் பூட்டியாளும்பொருட்டு, வைத்த தீபத்தின் நிகர் உள்ள — வைத்த விளக்குக்கு நிகராயுள்ள, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. பத்தி — வரிசை. வானாதி — ஆகாயம் வாயு அக்கினி அப்பு பிருதிவி என்பன. மூவுலகு — சுவர்க்கமத்தியபாதாள லோகங்கள். சித்தி—அஷ்ட சித்திகள்; அவை — அணிமா மகிமா கரிமா லகிமா பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்வம் என்பன. குரு — நிறம். சிங்காசனம் — சிங்கங்கள் சுமக்கும்படி செய்த ஆசனம். (௯)

காரா றெனப்பே ரருட்கடலி னீருண்டு
கவிகின்ற கருணை முகிலைக்
ககனவட் டப்பெரு வெளிக்குமப் பானின்று
காலூன்று கின்ற முகிலைத்
தாராத வருடந்த குருமௌன முகிலையென்
றுயிற் சிறந்த முகிலைச்
சண்டமா ருதமென்ன வருள்பொழியு முகிலைச்
சராசரங் கொண்ட முகிலைப்
பாராதி பஞ்சவன் னப்பகுதி யாகப்
பரந்துவரு டித்த முகிலைப்
பரவிவரு டிக்கவடி யேனுமுமை நம்பினேன்
பருவம்வந் தாளு தற்கே
வாரா நெறிக்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. கார் ஆறு என — கரியமேகமார்க்கம் போல, பேரருள் கடலின் நீர் உண்டு — பெரிதாகிய அருட்கடலின் நீரைக்குடித்து, கவிகின்ற கருணை முகிலை — மூடுகின்ற கருணைமேகத்தை, ககனவட்டப் பெருவெளிக்கும் அப்பால் நின்று — ஆகாயமண்டலப் பெருவெளிக்கும் அப்புறத்து நின்று, கால் ஊன்றுகின்ற முகிலை — வேரூன்றுகின்ற மேகத்தை, தாராத அருள் தந்த — தரவொண்ணாத அருளைத்தந்த, குருமௌனமுகிலை — மௌனகுருவாகிய மேகத்தை, என்தாயின் சிறந்த முகிலை — என் தாயினுஞ்சிறந்த மேகத்தை, சண்டமாருதம் என்ன — சண்டமாருதம் போல, அருள்பொழியும் முகிலை — அருள் மழையைப் பொழிகின்ற மேகத்தை, சராசரம் கொண்டமுகிலை — சராசரங்களைத் தன்னிடத்திற் கொண்ட மேகத்தை, பாராதி பஞ்சவன்னப்பகுதியாக — நிலமுதலாகிய பஞ்சவர்ணப் பகுப்போடு, பார்ந்து வருடித்த முகிலை — படர்ந்து மழைபொழிந்த மேகத்தை, பரவிவருடிக்க — படர்ந்துமழைபொழியும் பொருட்டு, அடியேனும் உமை நம்பினேன் —, பருவம் வந்து ஆளுதற்கு — பருவமுண்டா யென்னையாளும் பொருட்டு, வாராநெறி கருணைஉள்ள — வாராத நெறியாகிய கருணையையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல் பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. காராறு — மேகத்தின்வழி. (மேகம் போல) கவிதல் - மூடுதல். காலூன்றுதல் — வேரூன்றுதல். சண்டமாருதம் — வேகமான காற்று (கடுங்காற்று.) சராசரம் — சரம் அசரம். சரம் — சஞ்சரிக்கும் பொருள். அசரம் — சஞ்சரிக்காத பொருள். இவைகளில், தேவர் மக்கள் முதலிய பொருள்கள் சரம் எனவும், மரம் மலை புல் முதலிய பொருள்கள் அசரம் எனவும் கூறுவர்; இவ்விரண்டனையும் இயங்கியற் பொருள் நிலையியற் பொருள் என்றும் கூறுவர். (ச)

தத்திமிய கந்தறப் பெருகிவரு மானந்த
சமரசப் பெருவா ரியைச்
சார்ந்தன்ப ரிதயங் களிக்கவே பொங்கிவரு
சந்ததச் சுகவா ரியைச்
சுற்றிக் கவிந்துகொண் டெங்குமொரு மிக்கவே
சூழ்கருணை நிறைவா ரியைச்
சொப்பிரகா சந்தரு சுபஞ்சோதி யாய்நின்ற
சோமசுந் தரவா ரியை
எத்தனை விதங்கொண்டு சொல்லினுஞ் சொல்லொணு
வினியபூ ரணவா ரியை

ஏப்பமிட வூட்டவடி யேனுமுமை நம்பினே
னெட்டிவந் தாளு தற்கே
மத்திபத் தீபநடு வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. தத்தி — தாவி, கங்கு அற — கரை யழிய, பெருகி வரும் — பிரவகித்து வருகிற, ஆனந்தம் — இன்ப வுருவாகிய, சமரசப் பெருவாரியை — சமரசப் பெருங்கடலை, சார்ந்த அன்பர் இதயம் களிக்க — அடைந்த அன்பரது இதயங்களிக்கும்படி, பொங்கிவரு — பொங்கிவருகிற, சந்ததச் சுகவாரியை—சதாகால இன்பக்கடலை, சுற்றிகவிந்துகொண்டு—சுற்றிமூடிக்கொண்டு, எங்கும் ஒருமிக்க — எவ்விடத்திலும் ஒருமிக்க, சூழ்கருணை நிறைவாரியை— வளைந்து கொள்ளுகிற நிறைந்த கருணைக்கடலை, சொப்ரகாசம் தருசுயம் சோதியாய் நின்ற — சொப்ரகாசத்தை வீசுகின்ற சுயஞ் சோதியாய் நின்ற, சோமசுந்தரவாரியை—சோமசுந்தரக்கடலை, எத்தனை விதம் கொண்டு சொல்லினும் சொல்லொணா — எத்தனைவகையாற் சொன்னாலுஞ் சொல்லொண்ணாத, இனிய பூரணவாரியை — இனிதாகிய நிறை கடலை, ஏப்பமிட ஊட்ட— ஏப்பமிடும்படி உண்பிக்கும் பொருட்டு, அடியேனும் உமை நம்பினேன்—, எட்டி வந்து ஆளுதற்கு — கிட்டிவந்தாளும் பொருட்டு, மத்திபத் தீபநடுவுள்ள — இடை நிலைத்தீபம் போலுள்ள, நீர் பின்றொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டுகண் மணியைப்போல்பவரே, முகியித்தினே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. தத்துதல் — தாவுதல் கங்கு — கரை. சமரசம் — சமநிலை. சந்ததம் — எப்பொழுதும். சுயஞ்சோதி — தன்சோதி. சோமசுந்தரவாரி — அழகிய சந்திர மண்டலத்தி னின்றும் பெருகிவரும் அமிர்தக் கடல். ஏப்பமிடுதல்— தேக்கெறிதல். எ-று. (௫)

அன்புப் பெருக்கைநல் லறிவுப் பெருக்கைமெய்ஞ்
ஞானுயிர் தப்பெ ருக்கை
அணையற்ற பேராசை வெள்ளப் பெருக்கையறி
வாகார வான்பெ ருக்கை
இன்பப் பெருக்கையருள் பொங்கும் பெருக்கைவெளி
யெங்கெங்கு மொளிர்பெ ருக்கை
ஏகப் பெருக்கையநு போகப் பெருக்கைநல்
லினியசெந் தேன்பெ ருக்கைத்

தென்புப் பெருக்கை வெகு டம்பப் பெருக்கைமா
திவ்யமது ரப்பெ ருக்கை
சேரப் புகட்டவடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளுத ற்கே
வன்புப் பெருக்குவடி வுள்ளநீர் பின்றொடரா
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்
மணியே முகியித் தினே.

ப-ரை. அன்புப் பெருக்கை — அன்பாகிய பெருக்கை, நல் அறிவுப் பெருக்கை—நல்ல அறிவாகிய பெருக்கை, மெய்ஞ்ஞான அமிர்தப் பெருக்கை—மெய்ஞ்ஞானமாகிய அமிர்தப் பெருக்கை, அணை அற்ற பேராசை வெள்ளப் பெருக்கை — கரையற்ற பேராசையாகிய வெள்ளப்பெருக்கை, அறிவு ஆகாரம் வான்பெருக்கை — அறிவுருவாகிய பெரியபெருக்கை, இன்பப் பெருக்கை—சுகப் பெருக்கை, அருள் பொங்கும் பெருக்கை — அருள் பெருகுகின்ற பெருக்கை, வெளி எங்கெங்கும் ஒளிர் பெருக்கை — வெளியிடமாகிய எவ்வெவ்விடங்களிலும் பிரகாசிக்கிற பெருக்கை, ஏகப்பெருக்கை — ஏகமாகிய பெருக்கை, அநுபோகப் பெருக்கை — அநுபோகமாகிய பெருக்கை, நல் இனிய செந்தேன் பெருக்கை — நல்ல இனிமையான செந்தேன் பெருக்கை, தென்புப் பெருக்கை — தென்பாகிய பெருக்கை, வெகு டம்பப் பெருக்கை—மிகுடம்பமாகிய பெருக்கை, மாதிவ்யமதுரப் பெருக்கை — பெரிய அழகாகிய இனிய பெருக்கை, சேரப் புகட்ட — ஒருமிக்கக் கூட்டி யூட்டும்படி, அடியேனும் உமை நம்பினேன்—, சித்தம் வைத்து ஆளுதற்கு — திருவுளம் வைத்தாளும்பொருட்டு, வன்புப் பெருக்கு வடிவுள்ள — வலிய பெருக் குருவமுள்ள, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல் பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பெருக்கு — பிரவாகம். ஆகாரம் — உருவம். வான் — மேன்மை. வெளி — ஆகாயம் எனினுமாம். ஏகம்-ஒன்று. தென்பு — தைரியம். டம்பம்—ஆடம்பரம். புகட்டல் — உட்செலுத்தல். வன்பு — வலிமை. (௬)

கண்டபொரு ளத்தனையு மாகிநின் றவைகளுங்
காணாத கார ணத்தைக்
கருதரிய சித்தாய்வி சித்ரமாய் நின்றிலங்
காநின்ற கார ணத்தை
அண்டகோ டிகளையுந் தன்னுள்வைத் தணுவினுக்
கணுவான கார ணத்தை

அறியாம லென்றெய்வ முன்றெய்வ மென்பார்க்கு
மவ்வகைக் கார ணத்தை
யெண்டிசை விளக்கின்ற வித்தா யிருந்துமோ
ரிடமற்ற கார ணத்தை
எய்திக் களிக்கவடி யேனுமுமை நம்பினே
னெதிர்காட்டி யாளு தற்கே
மண்டலமும் விண்டலமு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தினே.

ப-ரை. கண்ட பொருள் அத்தனையும் ஆகிநின்று — காணப் பட்ட பொருள்க ளெல்லாமாகி நின்று, அவைகளும் காணாதகாரணத்தை — அவைகளாலும் காணவொண்ணாத காரணத்தை, கருது அரிய சித்து ஆய் — நினைத்தற்கரிய சித்தாகி, விசித்ரம் ஆய் — விசித்திரமாகி, நின்று இலங்கா நின்ற காரணத்தை — நின்று விளங்குகின்ற காரணத்தை, அண்ட கோடிகளையும் தன்னுள் வைத்து — கோடி யண்டங்களையும் தன்னுள்ளே வைத்து, அணுவினுக்கு அணு ஆன காரணத்தை — அணுவுக் கணுவா யிருக்கிறகாரணத்தை, அறியாமல் — (உண்மையை) அறியாமல், என்தெய்வம் உன்தெய்வம் என் பார்க்கும் — என்தெய்வம் உன்தெய்வ மென்பவர்க்கும், அவ்வகைக் காரணத்தை — அவ்வவ் வகையா யிருக்கிற காரணத்தை, எண்திசை விளக்கின்ற வித்துஆய் இருந்தும் — அஷ்டதிக்குகளையு முண்டாக்குதற் குரிய விதையா யிருந்தும், ஓர் இடம் அற்ற காரணத்தை — தனக்கு இடமில்லாத காரணத்தை, எய்தி களிக்க — அடைந்து மகிழும்படி, அடியேனு முமை நம்பினேன்—, எதிர்காட்டி ஆளுதற்கு — எதிரே காட்டி ஆளும் பொருட்டு, மண்தலமும் விண்தலமும் உள்ள — மண்ணுலகும் விண்ணுலகும் உடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தினே — முகியித்தின் ஆண்டகையே. எ-று.

வி-ரை. காரணம் — மூலம். அவ்வகை — அவ்வகைத் தெய்வம். எதிர் காட்டி — பிரத்தியக்ஷமாகக் காட்டி. மண்டலம் — மண்ணாகிய இடம். விண் டலம் — விண்ணாகிய இடம். (எ)

நிலையுமுட னெங்கணுங் கோத்தநிலை குலையாது
நின்றதே சோம யத்தை
நெற்றிவிழி யூடுநிலை நின்றோ ருளந்தனி
னொளிர்ந்ததே சோம யத்தை

தொலையா திலங்குதுரி யாதீத மானவத்
துவிதமே தேசோம யத்தைத்
தொந்தங் கடிந்தவர்க ளுந்திக்குள் வண்டாய்த்
துவண்டமே தேசோம யத்தைச்
சலியாத வயிராக்ய தீரனை யனுப்பறச்
சாந்தமே தேசோம யத்தைச்
சாமுனெற் கருளவடி யேனுமுமை நம்பினேன்
சனுதிவந் தாளு தற்கே
மலிகருணை மிக்கவலு வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணக் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. நிலயமுடன் — நிலையாக, எங்கணும் கோத்தநிலை குலையாது — எவ்விடத்தும் வியாபித்த நிலை குலையாமல், நின்ற — நிலைபெற்ற, தேசோமயத்தை — தேஜோ ராசியை, நெற்றிவிழியூடு — நெற்றி விழியினுள்ளே, நிலை நின்றோர் உள்ளந்தன்னில் — நிலைநின்றோரது மனத்தில், நெளிந்த—தவழ்ந்த, தேசோமயத்தை — தேஜோ ராசியை, தொலையாது இலங்கு — முடியாமல் விளங்குகிற, துரியா தீதமான — துரியா தீதமாகிய, அத்துவித தேசோமயத்தை — அத்வைதமாகிய தேஜோ ராசியை, தொந்தம் கடிந்தவர்கள் உந்திக்குள் — பற்றுவிட்டவர்களுடைய வுந்தியில், வண்டு ஆய் துவண்ட — வண்டாய்ப் புரளுகின்ற, தேஜோ மயத்தை — தேஜோ ராசியை, சலியாத—அசையாத, வயிராக்யதீரனை — வயிராக்யமாகிய தீரத்தை யுடையவனை, அனுப்பு— அனுப்பின, அறச் சாந்தம் — மிகு சாந்தத்தையுடைய, தேசோமயத்தை— தேஜோ ராசியை, சாமுன் — இறக்குமுன்பே, எற்கு அருள — எனக்கருள் செய்ய, அடியேனு முமை நம்பினேன்—, சனுதிவந்து ஆளுதற்கு — விரைவில் வந்து ஆளும் பொருட்டு, மலிகருணை—மிகுகருணையாகிய, மிக்க வலுவுள்ள— மிக்க வலிமையுள்ள, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல்— உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணக்குடிவாழும் — குணங் குடியில்வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டுகண்மணியைப்போல் பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. தேசோமயம் — ஒளிப் பிழம்பு. நெற்றி விழியூடு — நெற்றிக்கு. நடு — புருவநடு. அத்துவிதம் — இரண்டற்றது. தொந்தம் — தொடர்பு. கடிதல் — நீக்குதல். உந்தி — நடு, அதாவது இதயம், இதனை இதய தாமரை யென்பராதலால் இதில் வாழ்கின்ற இறைவனை 'வண்டு' என்றார். சலியாத வயிராக்யதீரன் என்றது சற்குருவை, அவனை யனுப்பினது இறைவனாதலால் 'அறச்சாந்தன்' என்றார். அறச்சாந்தன் — தர்மரூபியாகிய சாந்தமூர்த்தி யெனினு மமையும். சனுதி — விரைவு இது திசைச்சொல். (அ)

எல்லைநிலை சொல்லரிய வல்லமையோ டெங்கணு
மிருந்தஞா னோதயத்தை
எப்பொருளு மெப்பொழுது மெவ்விடமு மவ்வடி
விலங்குஞா னோதயத்தை
அல்லினும் பகலினு மன்பர்மன வில்லினி
லடைந்தஞா னோதயத்தை
அழியாப் பதிக்குவந் தாள்குணங் குடியா
ரணைந்தஞா னோதயத்தைத்
தொல்லையறு நல்லறிஞர் சொல்லும்வழி செல்லின்வெளி
தோற்றுஞா னோதயத்தைத்
தொழுதெழாப் பாவியடி யேனுமுமை நம்பினேன்
றொண்டுகொண் டாளு தற்கே
வல்லபஞ் சொல்லவந் துள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. எல்லைநிலை சொல் அரிய வல்லமையொடு — எல்லையின் நிலையானது சொல்லுதற் கரிதாயிருக்கிற வல்லமையோடு, எங்கணும் இருந்த — எவ்விடத்துமிருந்த, ஞானோதயத்தை — ஞான உதயத்தை, எப்பொருளும் — எந்தப்பொருளும், எப்பொழுதும் — எக்காலமும், எவ்விடமும் — எவ்விடமும் ஆகிய, அவ்வடிவு — அவ்வுருவங்களாக, இலங்கும் — விளங்குகின்ற, ஞானோதயத்தை — ஞான உதயத்தை, அல்லினும் பகலினும் — இரவிலும் பகலிலும், அன்பர் — அன்பரது, மனம் — மனமாகிய, இல்லினில் அடைந்த — வீட்டிற் பொருந்திய, ஞானோதயத்தை — ஞான உதயத்தை, அழியாபதிக்கு வந்து — அழியாத இடத்தினின்றும் வந்து, ஆள் — என்னை யாண்டருளின, குணங்குடியார் — குணங்குடியார், அணைந்த — சேர்ந்த, ஞானோதயத்தை — ஞானஉதயத்தை, தொல்லை அறும் நல்அறிஞர் — பழவினைகளற்ற நல்ல அறிஞர், செல்லும்வழி சொல்லின் — போம் வழியைச்சொன்னால், வெளிதோற்றும் — வெளிப்படையாய்த் தோற்றுகிற, ஞானோதயத்தை — ஞான உதயத்தை, தொழுது எழா பாவி — தொழுதெழாத பாவியாகிய, அடியேனு முமை நம்பினேன் — தொண்டு கொண்டு ஆளுதற்கு — அடிமை கொண்டாளும் பொருட்டு, வல்லபம் சொல்ல வந்துள்ள — யாவரும் உமது வல்லமையைப் புகழ்ந்து சொல்லும்படி யெழுந்தருளியிருக்கிற, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதார குணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. அல் — இரவு. இல் — வீடு. பதிக்கு உருபு மயக்கம், அழியாப் பதி — மோக்ஷபூமி. தொல்லை — பழமை. அதுபழவினைக்காயிற்று. ஞானோ தயம் — ஞானத்தோற்றம் (ஞானவிடிவு.) (கூ)

தொலையாத வான்கருணை குடிகொண் டிருந்ததே
சோமயா நந்த குருவைச்
சொந்தமுட னென்றனையும் வந்தடிமை கொண்டே
சுகந்தந்த மௌன குருவை
நிலையாத மாயைநிலை குலையநிலை குலையாத
நெறிதந்த ஞான குருவை
நித்தியா நந்தசுக முற்றுமகு டூமதென்ற
நிட்டைநே ரிட்ட குருவைச்
சலியா தணைத்துமுத் தந்தர வெனைப்பெற்ற
தந்தையாய் வந்த குருவைத்
தழுவவறி யாதவடி யேனுமுமை நம்பினேன்
றயைபுரிந் தாளு தற்கே
மலைகள்பொடி படுநடையு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணக் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. தொலையாத—(சொல்ல)முடியாத, வான்கருணை—பெருங்கருணை, குடிகொண்டிருந்த—குடிகொண்டிருக்கிற, தேசோமயாநந்த குருவை-தேஜோ ரூபாநந்த குருவை, சொந்தமுடன் — சொந்தமாக, வந்து — எழுந்தருளி, என் றனையும் அடிமைகொண்டு — என்னையும் அடிமைகொண்டு, சுகம்தந்த — இன் பங்கொடுத்த, மௌனகுருவை—மோனகுருவை, நிலையாதமாயை நிலகுலைய— நிலையாத மாயையானது நிலை குலையும்படி, நிலகுலையாத நெறிதந்த — நிலை கெடாத நெறியையருள் செய்த, ஞானகுருவை நித்திய ஆநந்தசுகம் உற்று— நித்தியாநந்த சுகத்தை யடைந்து, மகுமூது என்ற — மகுமூது என்று சொல் லப்பட்ட, நிட்டை நேரிட்ட குருவை — நிஷ்டையை யடைந்த குருவை, சலியாது — வெறுக்காமல், அணைத்து—தழுவி, முத்தம்தர — முத்தங்கொடுக்க, என்னைப்பெற்ற தந்தையாய் வந்த குருவை — என்னையீன்ற பிதாவாய் வந்த குருவை, தழுவஅறியாத — அடைய அறியாத, அடியேனுமுமைநம்பினேன்—, தயைபுரிந்து ஆளுதற்கு — தயைசெய்து ஆளும்பொருட்டு, மலைகள் பொடி படு நடையையும் உள்ள — மலைகள் பொடியாகும்படியான நடையும் உடைய, நீர் பின்தொடர — நீர்பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இற சூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை—வள ரும் அருள்நிறைந்த, குணக்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இரு

கண்மணியே – எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே– முகியித்தீன் ஆண்டகையே. எ–று.

வி–ரை. நிலையாதமாயை – பொய்யாகிய மாயை. நெறி – ஞானநெறி. மலைகள் பொடிபடுநடை – கடுநடை. (கo)

ஆக பாடல் - 34.

பன்மையாய் விரிந்த பல்பொருளெலாமதன்
றன்மையா யிருந்த தகுதியை விளக்கும்
அருளொளி விளக்கினை யருள்நபெவன் ருசான்
றெருளொளிப் பதமலர் சிந்தைசெய் திரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

எங்குமருள் விரிவாகி யங்கிங் கெனுதாகி
யென்றன்பி ரானு மாகி
எண்ணரிய வண்டபகி ரண்டங்க ளாகிநின்
றிகபர மிரண்டு மாகிப்
பொங்கிவழி கொண்டுபல் கடமெலாம் பெருகுபரி
பூரணா னந்த மாகிப்
புனிதமெய்ஞ் ஞானவா னந்தமழை மாரியைப்
பொழிகருணை முகிலு மாகிக்
கங்குல்பக லில்லிரவி மதியாகி யெங்குமொரு
கங்கற்ற கங்கை யாகிக்
கனியுமொழி புரியவடி யேனுமுமை நம்பினேன்
கருணைவைத் தாளு தற்கே
மங்காத திங்களொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளன்ற ருல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப–ரை. எங்கும் – எவ்விடத்தும், அருள்விரிவுஆகி – அருளினது விஸ்தாரமாகி, அங்கு இங்கு எனுதாகி – அவ்விடம் இவ்விடம் என்று சொல்லப்படாததாகி, என்றன்பிரானும்ஆகி – என்பெருமானுமாகி, எண் அரிய – எண்ணுதற்கரிய, அண்டபகிரண்டங்கள் ஆகிநின்று–அண்டபகிரண்டங்களுமாகி நின்று, இகபரம் இரண்டும்ஆகி – இம்மை மறுமைகளென்கிற இரண்டுமாகி, பொங்கிவழிகொண்டு – பொங்கிவழிந்து, பல்கடம் எல்லாம் பெருகு – பலவாகிய கடங்களிலெல்லாம் பெருகுகின்ற, பரிபூரண ஆனந்தம் ஆகி – பரிபூர்ணசுகமாகி, புனிதம்–பரிசுத்தமான, மெய்ஞ்ஞானம்–மெய்ஞ்ஞான மென்கிற, ஆனந்த மழைமாரியைபொழி – ஆனந்த மழைமாரியைச் சொரிகின்ற, கருணைமுகிலும் ஆகி – கிருபாமேகமாகி, கங்குல் பகல்இல் – இராப்பகல்க

ளில்லாத, இரவி மதிஆகி — சூரியசந்திரர்களாகி, எங்கும் ஒருகங்கு அற்ற கங்கைஆகி — எவ்விடத்தும் ஒருகரையற்ற கங்கையாகி, கவியும் ஒளிபுரிய— மூடுகின்ற ஒளியைச்செய்ய, அடியேனு முமைநம்பினேன்—, கருணைவைத்து ஆளுதற்கு — கருணையைவைத்து என்னையாளும்பொருட்டு, மங்காத — மழுங் காத, திங்கள் ஒளி உள்ள — சந்திரகாந்தியுள்ள, நீர் பின்தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என் பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்ட கையே. எ-று.

வி-ரை. அருள்விரிவு—அருட்பரப்பு. வழிகொண்டு—ஒருசொற் றன்மைத் தாய் வழிந்து எனப்பொருள்பட்டு நின்றது. பல்கடம் எல்லாம் — பல இடங் களிலெல்லாம், பல சரீரங்களிலெல்லாம். மழைமாரி — மழைகாலத்துமழை. மங்காத — ஒளிமழுங்காத. (௪)

ஊனாகி யூனிலுயி ராகியெவ் வுலகுமா
யொன்று யிரண்டு மாகி
உள்ளாகி வெளியாகி யொளியாகி யிருளாகி
யூருடன் பேரு மாகிக்
கானாகி மலையாகி வளைகடலு மாகிமலை
கானக விலங்கு மாகிக்
கங்குல்பக லாகிமதி யாகிரவி யாகிவெளி
கண்டபொரு ளவையு மாகி
நானாகி நீயாகி யவனாகி யவளாகி
நாதமொடு பூத மாகி
நாடுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னன்மைசெய் தாளு தற்கே
வானோரு மடிபணித லுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. ஊன்ஆகி — உடல்களாகி, ஊனில் உயிர்ஆகி — உடலிலுயிராகி, எவ்வுலகும்ஆய் — எவ்வுலகுமாகி, ஒன்றுஆய் இரண்டும்ஆகி—ஒன்றாகி இரண்டு மாகி, உள்ஆகி வெளியாகி — அகமாகி புறமாகி, ஒளியாகி இருள்ஆகி — ஒளி யாகி இருட்டாகி, ஊருடன் பேரும்ஆகி — ஊரோடுபேருமாகி, கான்ஆகி மலைஆகி — காடாகி மலையாகி, வளைகடலும் ஆகி — வளைந்தகடலுமாகி, மலை— போர்செய்கிற, கானகவிலங்கும் ஆகி—காட்டுமிருகங்களுமாகி, கங்குல் பகல் ஆகி — இராப்பகல்களாகி, மதிஆகி ரவியாகி — சந்திரனாகி சூரியனாகி, வெளி

கண்ட பொருள் எவையும் ஆகி — வெளியாய்க் காணப்பட்ட பொருள்க ளெல்லாமாகி, நான் ஆகி நீ ஆகி — நானாகி நீயாகி, அவன்ஆகி அவள்ஆகி— அவனாகி அவளாகி. நாதமொடு பூதம்ஆகி — நாதத்தோடு பூதம் ஆகி, நாடும் ஒளிபுரிய—விரும்புதற்குரிய ஒளியைச்செய்ய, அடியேனுமுமை நம்பினேன்—, நன்மைசெய்து ஆளுதற்கு — நன்மைசெய்து என்னை யாளும் பொருட்டு, வானோரும் அடிபணிதல் உள்ள—தேவரும் அடிவணங்கும்படியான பெருமை யுள்ள, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுண முடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல் பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. ஊன் — மாமிசம், அது சினையாகுபெயராய் உடலையுணர்த் திற்று. வளைகடல் — உலகத்தை வளைந்தகடல். கானகவிலங்கு என்றது புலி சிங்கம் யானை முதலியவற்றை. வானோரும் என்பதில் வான்—ஆகாயம்; அது இடவாகு பெயராய் அங்குள்ள சுவர்க்கலோகத்துக்காயிற்று; "நிமலஞானம் தற்றால் வானும் வையமும்வந்து தாள் வணங்குதலியல்பாதலால்" வானோரு மடிபணிதலுள்ள நீர் என்றார். (உ)

அந்தமுதன் முன்பினொடு பக்கநடு வாகிநின்
றவைகளற் றதுவு மாகி
அருவாகி யுருவாகி யருவுருவ மற்றவறி
வாகார மோன மாகி
தந்தைதா யாகியரு டந்தகுரு வாகியென்
றன்னுயிர்க் குயிரு மாகித்
தாயிற் சிறந்தவந் நேயச் சிறப்பாய்ச்
சதாநந்த ஞான மாகிச்
சிந்தைசெய வந்ததிற மாகியெனை யாட்கொண்ட
தேசிகன் றானு மாகித்
தெளியுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
சித்திரந் தாளு தற்கே
வந்திருந் தருளுதயை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. அந்தம்முதல் — முடிவுமுதல், முன்பினொடு — முன்பின்புடன், பக்கம் நடு — பக்கம் நடுவாகிய யாவும், ஆகிநின்று — ஆகிநின்றும், அவைகள் அற்றதுவும்ஆகி — அவைகள் யாவு மொழிந்ததுவுமாகி, அருஆகி உருபுஆகி— ரூபமாகி அரூபமாகி, அருவுருவம் அற்ற — ரூபாரூபங்களற்ற, அறிவு ஆகார

மோனம்ஆகி – ஞானகாரமாகிய மௌனநிலையாகி, தந்தை தாய் ஆகி – பிதா மாதாக்களாகி, அருள்தந்த குருஆகி – அருள்செய்த குருவாகி, என்றன் உயிருக்கு உயிரும்ஆகி – என்னுயிருக்குயிருமாகி, தாயின் சிறந்த – தாயினுஞ் சிறந்த, அநேயச்சிறப்புஆய்—அந்த அன்பின் பெருமையாகி, சதாநந்தஞானம் ஆகி – சதாநந்த ஞானமாகி, சிந்தைசெய்யவந்த – சிந்திக்கும்படி யெழுந்தருளின, திறம்ஆகி – உறுதிப்பொருளாகி, என்னை ஆட்கொண்ட தேசிகன் தானும் ஆகி – என்னை யாட்கொண்டருளின சற்குருவுமாகி, தெளியும் ஒளி புரிய – தெளிகின்ற ஒளியைச்செய்ய, அடியேனு மூமைநம்பினேன்—, சித்தி தந்து ஆளுதற்கு – சகல சித்திகளையுந் தந்து என்னை யாளும்பொருட்டு, வந்திருந்தருளு – வந்திருந்தருளுதற்குரிய, தயைஉள்ள – கருணையுள்ள, நீர் பின் தொடர – நீர் பின்தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் – குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே – எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. ஆகாரம் – ரூபம். உயிர்க்குயிருமாகி யென்றது ஆத்மாவுக்கு அந்தராத்மாவாகி யென்றபடி. சதாநந்தம் – இடையறாத ஆநந்தம். சிந்தை செய வென்பது ஒருசொல். சிந்திக்க என்பது பொருள். திறம் – உறுதி; அது பண்பாகு பெயராய் அதனையுடைய பொருளை யுணர்த்திற்று. (கூ)

பாராகி யெப்பொருளு மாகியப் பார்தனிற்
 பஞ்சவன் னங்க ளாகிப்
பற்பல விதங்கொண்ட விந்துநா தத்துட்
 பதிந்துமுளை பருவ மாகி
வேரோடி யோகபூ மிக்குள் வளர்ந்தருள்
 விளைந்தொழுகு தருவு மாகி
விண்ணாகி மண்ணாகி யெண்ணாகி வெகுவாகி
 விரிவாகி மறைவு மாகித்
தூராதி தூரத்தி னுந்தூர மாகியதி
 சூழ்ச்சிச் சமீப மாகித்
தோற்றமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
 றாரிதமுட னாளு தற்கே
வாராரு மருண்மாரி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப-ரை. பார்ஆகி – பூமியாகி, எப்பொருளும்ஆகி – எல்லாப்பொருள்களு மாகி, பார்தனில் – அந்தப்பூமியில், பஞ்சவன்னங்கள்ஆகி – ஐந்துநிறங்களாகி,

பற்பலவிதம்கொண்ட—பற்பலவகையைக் கொண்ட, விந்துநாதத்துள்—விந்து நாதங்களில், பதிந்துமுளை பருவம் ஆகி—பதிந்து முளைக்கின்ற பருவமாகி, வேரோடி—வேரோடி, போக பூமிக்குள்வளர்ந்து—போகபூமியில் வளர்ந்து, அருள்விளைந்து ஒழுகு — அருளாகிய தேன்விளைந்து ஒழுகுகின்ற, தருவும் ஆகி—கற்பகத்தருவுமாகி, விண்ஆகி—ஆகாயமாகி, மண்ஆகி—பூமியாகி, எண் ஆகி—இலக்கமாகி, வெகுஆகி—பலவாகி, விரிவுஆகி—விஸ்தாரமாகி, மறைவும்ஆகி—மறைவுமாகி, தூராதிதூரத்தினும் தூரம் ஆகி—தூராதிதூரத்தினும் மிக்கதூரமாகி, அதிசூழ்ச்சி சமீபம் ஆகி—அதிக ஆராய்ச்சியில் சமீபமாகி, தோற்றும் ஒளிபுரிய — காணப்படுகிற ஒளியைச் செய்யும்பொருட்டு, அடியேனும் உமை நம்பினேன்—, துரிதமுடன் ஆளுதற்கு—விரைவில் என்னை யாளும்பொருட்டு, வார்ஆரும் அருள்மாரி உள்ள—பெருமைநிறைந்த அருள் மழையையுடைய, நீர் பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதார குணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பஞ்சவன்னங்கள் என்றது—ஐந்துநிறங்கள்; அவை: வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை என்பன. விந்துநாதம்—விந்துதத்வமும் நாததத்துவமும். வேரோடுதல்—நாற்புறத்தும் வேர்படர்தல். ஒழுகு என்றதனால் அருள் தேனுக்கி யுரைக்கப்பட்டது. தூராதி தூரத்தினும் தூரம்—மிக்கதூரம். துரிதம்—விரைவு. (ச)

பார்த்ததிக் கெங்குமொரு வெளியாகி யென்பரா
பரப்பிரம வெளியு மாகிப்
பற்றுமன வெளியாகி மனவெளி கடந்தமுப்
பாழான வெளியு மாகிக்
சூர்த்தவறி வத்தனையு மேற்றபடி கொள்ளவே
கொண்டகடு வெளியு மாகிக்
கோடானு கோடிபல வண்டபகி ரண்டமுங்
கொண்டபெரு வெளியு மாகிச்
சேர்த்தநிலை குலையுண்டு போகாது நிலையுண்ட
சிற்சத்தி வெளியு மாகிச்
செறியுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
தெளிவுதந் தாளு தற்கே
வார்த்தைதப் பாதநா வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே

ப-ரை. பார்த்ததிக்கு எங்கும் — பார்த்ததிசைகளி னெவ்விடத்தும், ஒரு வெளியாகி — ஒப்பற்ற வெளியாகி, என் — எனது, பராபரப்பிரம வெளியும் ஆகி — பராபரப்பிரம வெளியாகி, பற்றும் மனவெளிஆகி — பற்றுகின்ற மனவெளியாகி, மனவெளி கடந்த — மனவெளியைத் தாண்டின, முப்பாழ் ஆன வெளியும்ஆகி — முப்பாழாகிய வெளியுமாகி, கூர்த்தஅறிவு அத்தனையும்—நுண்ணிய அறிவுமுழுதும், எற்றபடி கொள்ளைகொண்ட — எற்றபடி கொள்ளையிட்ட, கடுவெளியும்ஆகி — கடுவெளியுமாகி, கோடானுகோடி — கோடானுகோடியாகிய, பலஅண்ட பகிரண்டமுங்கொண்ட — பலஅண்ட பகிரண்டங்களையும் தன்னுள்ளே யடக்கின, பெருவெளியும்ஆகி — பெருவெளியுமாகி, சேர்த்த — சேர்த்துவைத்த, நிலை — நிலையானது; குலையாது—குலையாமல், நிலையுண்ட — நிலைபெற்ற, சிற்சத்திவெளியும்ஆகி — சிற்சத்தி வெளியுமாகி, செறியும் ஒளிபுரிய-மிகுந்த ஒளியைச்செய்தற்கு, அடியேனும் உமைநம்பினேன்—, தெளிவுதந்து ஆளுதற்கு — தெளிவைக்கொடுத்து என்னை யாளும்பொருட்டு, வார்த்தைதப்பாத நாஉள்ள — சொல்தவறாத நாவையுடைய, நீர்பின்றொடர— நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. பார்த்த திக்கெங்கும் என்றது — பத்துதிக்கிலும் என்றபடி. பத்துத்திக்காவன: கிழக்கு முதலிய எட்டும் பூமியும் ஆகாசமும். பிரமப்பொருள் எல்லாவற்றையும் தன்னுள்ளே யடக்கிக்கொண்டு தானொன்றே நிர்விசேஷ சின்மாத்திரமாகிய பேரொளியாய் நிற்றலை இச்செய்யுளிலினிது விளக்கிய வாறு. சிற்சத்தி — ஞானசத்தி. (௫)

நடையுடன் கிடையாகி நண்ணுமிரு வினையாகி
நடைபடிக டாமு மாகி
நடுவே முளைத்தநீ நானென னு மாகிவரு
நாட்டங்க டாமு மாகித்
தடையாகி வைத்ததடை யற்றவிடை யாகிநற்
றுரணைக டாமு மாகித்
தலைமையொடு நிலைமையும் வலுமைகளு மாகிமெச்
சங்கதிக டானு மாகி
இடையாகி நடுவாகி நன்மைதீ மையுமாகி
யேகமுத லெவையு மாகி
இலகுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னிதமுரைத் தாளு தற்கே

மடமடென வடிநடன முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. நடையுடன் கிடைஆகி—நடையோடு கிடையாகி, நண்ணும் இரு வினையாகி — பொருந்திய இருவினைகளாகி, நடைபடிகள் தாமும் ஆகி—நடத்தைகளுமாகி, நடுவே முளைத்த நீ நான் எனலும் ஆகி — இடையிலே யுண்டாகிய நீ நான் என்பதும் ஆகி, வரும் நாட்டங்கள் தாமும்ஆகி — உண்டாகிய ஆராய்ச்சிகளுமாகி, தடைஆகி — தடையாகி. வைத்ததடை அற்ற இடை ஆகி — வைத்ததடை யொழித்த இடமாகி, நல்தாரணைகள் தாமும்ஆகி—நல்ல தாரணைகளுமாகி, தலைமையொடுநிலைமையும் — தலைமையொடுநிலைமையையும், வலுமைகளும்ஆகி — வன்மைகளுமாகி, எச்சங்கதிகள் தாமும் ஆகி — எந்தச் செய்திகளுமாகி, இடைஆகி — நடுவாகி, முடிவுஆகி — இறுதியாகி, நன்மை தீமையும்ஆகி — நன்மை தீமைகளுமாகி, ஏகமுதல் எவையும் ஆகி — ஏக முதலாகிய யாவையுமாகி, இலகும் ஒளிபுரிய — விளங்குகின்ற ஒளியைச் செய்ய, அடியேனுமுமை நம்பினேன்—, இதம் உரைத்து ஆளுதற்கு—இதஞ்சொல்லி யாளும்பொருட்டு, மடமடென — மடமட வென்று, அடிநடனமுள்ள — திருவடி நடனத்தை யுடைய, நீர் பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்— உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. நடை — நடத்தல். கிடை — கிடத்தல். நாட்டம் — ஆராய்ச்சி. இடை — இடம். தாரணை — எண்வகையோக வுறுப்பினுளொன்று. சங்கதி— செய்தி (சமாசாரம்.) இதம் — நன்மை. (௯)

மாயைமுத லாகியுயி ராகியற் புதமான
மன்னுயிர்க் குயிரு மாகி
வளருமிரு வினையாகி வினைதனக் கீடாகி
வாழ்பா ழுடம்பு மாகித்
தூயறிவு கலையாகி நிலையாகி நிலையாத
தொந்தங்க டாமு மாகித்
துறவாகி மூவாசை யுறவாகி மறைவாகி
சோதிப் பிரகாச மாகி
ஆயுமறை முடிவாகி யடியாகி நடுவாகி
ஆச்சரிய கூத்து மாகி
ஆடுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னன்புகூர்ந் தாளு தற்கே

வாயூறு தேனின் மொழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. மாயை முதலாகி—மாயை முதலியவைகளாகி, உயிர் ஆகி—உயிர்களாகி, அற்புதமான — ஆச்சரியமான, மன் உயிர்க்கு உயிரும் ஆகி—நிலைபெற்ற உயிர்களுக்குயிராகி, வளரும் இருவினையாகி—பெருகுகின்ற இருவினைகளாகி, வினைதனக்கு ஈடு ஆகி வாழ் பாழ் உடம்பும் ஆகி — வினைகளுக்கிருப்பிடமாய் வாழ்கின்ற பாழான உடலுமாகி, தூய அறிவு கலையாகி — பரிசுத்தமாகிய அறிவும் நூல்களுமாகி, நிலைஆகி — நிலை பேறுடையதாகி, நிலையாத தொந்தங்கள் தாமும்ஆகி — நிலையாத தொடர்புகளுமாகி, துறவுஆகி—துறவாகி, மூவாசை உறவு ஆகி — மூவாசைகளாகிய உறவாகி, மறைவுஆகி—மறைவாகி, சோதிப்பிரகாசம் ஆகி — சோதிப்பிரகாசமாகி, ஆயும் — ஆராயப்படுகிற, மறைமுடிவு ஆகி — வேதாந்தமாகி, அடி ஆகி — முதலாகி, நடு ஆகி—இடையாகி, ஆச்சரிய கூத்தும் ஆகி — வியப்பைத்தருகிற கூத்துமாகி, ஆடும் ஒளிபுரிய—ஆடுகின்ற ஒளியைச்செய்ய, அடியேனு முமை நம்பினேன்—,அன்பு கூர்ந்து ஆளுதற்கு — அன்பு மிகுந்து ஆளும் பொருட்டு, வாய் ஊறு — திருவாயிற் சுரக்கிற, தேன் இன் மொழி உள்ள — தேன்போலும் இன்சொல்லையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. ஈடு — இடம். அறிவின்றிக் கலைகளுணர வொண்ணா தென்பது தோன்ற அறிவு கலையாகி என்றார். தொந்தங்கள் — பற்றுகள். மூவாசை—மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை. சோதிப்பிரகாசம் — ஒளிவிளக்கம். கூத்து — நடனம். (எ)

கண்ணான கண்ணேயெ னன்னமே யென்றழுவர்
கண்டகண் காட்சி யாகிக்
கவலைகுடி கொண்டுதட் டழியார்க ணன்மனக்
கண்ணாடி தானு மாகி
மண்ணான வஞ்சநெஞ் சத்தினர்க் கேருது
மறைவுதரு புதைய லாகி
மதபேத மோதிமதி கெட்டவர்க் கெட்டாத
வான்கருணை வெள்ள மாகி
எண்ணாத வெண்ணமெண் ணரெடுத் தாண்ணுபே
ரின்பப் பெருக்கு மாகி

எய்துமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னின்புதந் தாளு தற்கே
வண்ணத் திருக்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. கண் ஆன கண்ணே — கண்ணாகிய கண்ணே, என் அன்னமே— என் அன்னமே, என்றழுவர் — என்றழுவோர்கள், கண்ட கண்காட்சி ஆகி— கண்ட கண்காட்சியாகி, கவலை குடிகொண்டு — துன்பங் குடிகொண்டு, தட்டழியார்கள் — தடுமாறுதவர்களுடைய, நல் — நல்ல, மனக்கண்ணாடிதானும் ஆகி — மனக்கண்ணாடியுமாகி, மண் ஆன வஞ்சநெஞ்சத்தினர்க்கு — மண்ணாகிய வஞ்சமனத்தினர்க்கு, ஏறாது — கையேறாமல், மறைவுதரு புதையல் ஆகி — மறைகின்ற புதையலாகி, மதபேதம் ஓதி மதிகெட்டவர்க்கு — மதபேதம்பேசி அறிவுகெட்டவர்க்கு, எட்டாத—எட்டவொண்ணாத, வான்கருணை வெள்ளம் ஆகி — மேலான கருணைப் பெருக்காகி, எண்ணாத எண்ணம் எண்ணார் — எண்ணாத எண்ணத்தை யெண்ணாதவர்கள், எடுத்து உண்ணு — எடுத்துண்ணுதற்குரிய, பேரின்பப் பெருக்கும் பெருக்கும் ஆகி — பேரானந்த வெள்ளமுமாகி, எய்தும் ஒளிபுரிய — அடைதற்குரிய ஒளியைச்செய்ய, அடியேனு முமை நம்பினேன்—, இன்புதந்து ஆளுதற்கு — இன்பந்தந் தாளும் பொருட்டு, வண்ணம்—அழகிய, திருக்கருணையுள்ள—திருக்கருணையையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை— வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கண்ணான கண்ணே என்பதற்கு — பெருமையுள்ள கண்ணே என்றும், ஆதாரமாகிய கண்ணே என்றும், பொருள் கொள்க. கண்காட்சி— சேத்திரோற்சவம். தட்டழிதல் — தடுமாறுதல். மண்ணான என்றது பயனற்ற என்றபடி. ஏறுதல் — கையிற் கிடைத்தல். புதையல் — நிக்ஷேபம். எண்ணாத எண்ணம் — கெட்ட எண்ணம். எடுத்துண்ணுதல் — மொண்டு பருகுதல். (அ)

வேதவே தாந்தமேல் வீடாகி நட்டநடு
வீட்டின் விளக்கு மாகி
வித்தக னிருக்குநவ மணிமாட மாகியொளி
விரிகதிர்ச் சுடரு மாகி
நாதகீ தம்பல முழங்கமிட் டோலமிடு
நாதநா தாந்த மாகி

நற்குணங் குடியா னெனப்பே ரெனக்கருளு
ஞான திரு நாம மாகி
ஆதிமுத லந்தமுந் தானாகி விரிவா
யகண்டிதா கார மாகி
அவிருமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னறிவுதந் தாளு தற்கே
மாதூய பாதமல ருள்ள நீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. வேதவேதாந்தம் — வேத வேதாந்தமாகிய, மேல்வீடு ஆகி — மேலான வீடாகி, நட்டநடுவீட்டின் விளக்கும் ஆகி — நட்டநடு வீட்டிலிட்ட தீபமுமாகி, வித்தகன் இருக்கும் — ஞானமயனாகிய இறைவனிருக்கிற, நவ மணி மாடம் ஆகி — நவரத்னமாளிகையாகி, ஒளிவிரி — ஒளிபரவிய, கதிர் சுடரும் ஆகி — கதிர்ச்சுடருமாகி, பலநாத கீதம் — பலநாத கீதங்களும், முழக்கமிட்டு ஒலமிடும் — முழங்கி ஓலமிடுகின்ற, நாதநாதாந்தம் ஆகி — நாத நாதாந்தங்களாகி, நற்குணங் குடியான் என — நல்ல குணங்குடியானென்று, எனக்கு பேர் அருளும் — எனக்குப் பேரருளின, ஞானதிருநாமம் ஆகி — ஞானத்திரு நாமமாகி, ஆதிநடு அந்தமும் தானாகி — முதல் நடு இறுதியும் தானாகி, விரிவாய் — விஸ்தாரமாகி, அகண்டிதாகாரமாகி — அகண்ட ரூபமாகி, அவிரும் ஒளிபுரிய — பிரகாசிக்கிற ஒளியைச்செய்ய, அடியேனு முமை நம்பினேன்—, அறிவுதந்து ஆளுதற்கு — ஞானத்தைக்கொடுத்து என்னையாளும் பொருட்டு, மாதூய பாதமலர் உள்ள — பெரிய பரிசுத்தமான பாததாமரை மலரையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியத்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. மேல்வீடு — முத்தி. நட்டநடு — சரியான நடு. (நடுமையம்.) வித்தகன் — ஞானவடிவன். அவிர்தல் — பிரகாசித்தல். (கூ)

கற்குப்பக லற்றவரு டங்குமெங் கெங்குநிறை
காரணக் கடவு ளாகி
கங்கறப் பொங்குகரு ணைக்கட லுமாகியென்
கரதலா மலக மாகி
சிங்கத்தை யொத்து வினைதன்னைச் செயங்கொண்ட
தேசிகன் றானு மாகித்

நேறுதீ ரக்குணங் குடிவாழ்க்கை யெற்குதவு
 திவ்யகுண மேரு வாகி
எங்கே யிருக்கினு மங்குவந் துதவிதரு
 மெங்கள் மகுமூது மாகி
இயையு மொளி புரியவடி யேனுமுமை நம்பினே
 னெளிதில் வந்தாளு தற்கே
மங்கள சவுந்தரிய முள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப—ரை. கங்குல்பகல் அற்ற அருள் தங்கும்—இராப்பகல்களற்ற அருள் தங்குதற்குரிய, எங்கெங்கும்நிறை—எவ்வெவ்விடங்களிலும் நிறைந்த, காரணக்கடவுள் ஆகி—காரண கர்த்தாவாகி, கங்கு அறபொங்கு—கரையறப் பொங்குகிற, கருணைக் கடலுமாகி—கருணை சமுத்திரமு மாகி, என் கரதலம் ஆமலகம் ஆகி—என்கையி னெல்லிப் பழமாகி, சிங்கத்தை ஒத்து—சிங்கம் போன்று, வினை தன்னை செயங்கொண்ட—வினையை வென்ற, தேசிகன் தானும் ஆகி—சற்குருநாதனுமாகி, தேறு—தெளிந்த, தீரம்—தைரியமுள்ள, குணங்குடி வாழ்க்கை—குணங்குடி வாழ்வை, எற்கு உதவு—எனக்கருள் செய்த, திவ்யம்—அழகாகிய, குண மேரு ஆகி—குண மேருவாகி, எங்கே இருக்கினும்—எவ்விடத் திருந்தாலும், அங்கு வந்து—அவ்விடத்தே எழுந் தருளி, உதவிதரும்—உதவி செய்கிற, எங்கள் மகுமூதும் ஆகி—எங்களுடைய மகுமூதுமாகி, இயையும் ஒளி புரிய—பொருந்தின ஒளியைச் செய்ய, அடியேனும் உமை நம்பினேன்—, எளிதில் வந்து ஆளுதற்கு—எளிதாய் வந்து என்னையாட் கொள்ளும் பொருட்டு, மங்கள சவுந்தரியம் உள்ள—மங்களமாகிய அழகுள்ள, நீர் பின் தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கரதலாமலகம்=கரதலம்+ஆமலகம். கைத்தலத்துள்ள நெல்லிப்பழம், இது பிரத்தியக்ஷம் என்பதற்கு எடுத்துக் காட்டுவதோருவமையளவை. மங்கலம்—மங்களம். (சுபகரம்) (௧0)

ஆக பாடல் - 44.

அருள்கூர்ந்த காட்சியாகிய வுண்மையும்
பொருள்கூர்ந்து காண்போன் வேறெனப் பொருந்தா
தொன்று முறைமை யோதுக விவ்விடை
யின்றாக வருள்கவென் றிரங்கி யிரந்தல்.

ஆசிரியவிருத்தம்.

பாரீரோ வென்னையென் னன்னையே யென்முகம்
பார்த்தருள் பழுத்தி டீரோ
பாவிகன் னெஞ்ச வஞ்சஞ்சிந்த வந்துமது
பாதத் திழுத்தி டீரோ
வாரீரோ வென்னெதிரில் வந்தெனக் கொருமுத்தம்
வாய்கொண் டளித்தி டீரோ
மகிழீரோ புகழீரோ கருணைகூர்ந் தென்னையாள
வாவென் றழைத்தி டீரோ
சேரீரோ வென்னையுஞ் சேர்ந்தோர்க்கு முமதருட்
டேறற் றெளித்தி டீரோ
சிந்தைநொந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வாரோ மெனச்சொன்ன துள்ளநீர் பின்றொடர
வள்ளவிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

பஃரை. என்னை பாரீரோ — என்னைப் பார்க்கமாட்டீரோ, என் அன்னையே — என் தாயே, என் முகம் பார்த்து — என் முகம் நோக்கி, அருள் பழுத்திடீரோ — அருள்கனி யீரோ, பாவி — பாவியாகிய, கல்நெஞ்சன் வஞ்சம் சிந்த — கன்னெஞ்சினே னதுவுஞ் சகுண மொழிய, வந்து — எழுந்தருளி, உமது பாதத்து இழுத்திடீரோ — உமது திருவடிக் கீழ் இழுத்துக்கொள்ள மாட்டீரோ, என் எதிரில் வாரீரோ — என்னெதிரே வரமாட்டீரோ, வந்து— வந்து, வாய்கொண்டு — உமது வாயினால், ஒரு முத்தம் அளித்திடீரோ — ஒரு முத்தந் தாரீரோ, மகிழீரோ — மகிழ மாட்டீரோ, புகழீரோ — புகழமாட்டீரோ, கருணை கூர்ந்து — கருணைமிகுந்து, என்னை ஆள — என்னை யாளும் பொருட்டு, வாவென்று அழைத்திடீரோ — வாவென் றழைக்க மாட்டீரோ, என்னையும் சேரீரோ — என்னையும் கலக்க மாட்டீரோ, சேர்ந்தோர்க்கும்— அடைந்தோர்க்கும், உமது அருள் தேறல் — உமது அருளாகிய தேனை, தெளித்திடீரோ— துளித்திடீரோ, சிந்தை நொந்து இடையும் — மனம் நொந்து வருந்துகிற, அடியேனும் உமை நம்பினேன்—, சித்தம் வைத்து ஆளுதற்கு— மனது வைத்து என்னையாளும் பொருட்டு, வாரோம் எனச் சொன்னது

உள்ள — வருகிறோ மென்று சொன்ன சொல்லையுடைய, நீர் பின் தொடர— நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே— எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. தேறல் — தேன். இடைதல் — வருந்துதல். வாரோம் — வருகிறோம் என்பதன் சிதைவு. சொன்னது — சொன்னசொல். (க)

எங்கட் குடிக்கரச ரேயுமது பாதமெற்
 கெய்தாத தென்ன குறையோ
என்றெய்வ முன்றெய்வ மென்றகுறை யோவல்ல
 திடிசாப மான குறையோ
பங்குகூ றிட்டகுறை யோபாவி வாழ்மனது
 பக்தியில் லாத குறையோ
பகலையிரு ளென்றகுறை யோவிண் படர்ந்தறப்
 படிநீல னான குறையோ
அங்குமிங் குங்கெட் டலைந்தகுறை யோதேடி
 யலையா திருந்த குறையோ
அறியாம லிடையுமடி யேனுமுமை நம்பினே
 னணைவுதந் தாளு தற்கே
வங்கமா யன்பாழி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப—ரை. எங்கள் குடிக்கு அரசே — எங்கள் குடிக்கு வேந்தரே, உமது பாதம் — உமது திருவடி, எற்கு எய்தாதது — எனக்கு கிடையாதது, என்ன குறையோ — என்ன குறையினுலோ, என்தெய்வம் உன் தெய்வம் என்ற குறையோ — என் தெய்வம் உன் தெய்வம் என்று சொன்ன குறைதானே, அல்லது — அல்லாமல், இடிசாபம் ஆன குறையோ — இடிசாபமாகிய குறை தானே, பங்கு — பாகத்தை, கூறு இட்ட குறையோ — கூறு செய்த குறை தானே, பாவிபாழ் மனது — பாவியாகிய என்பாழ் மனத்தில், பத்தியில்லாத குறையோ — பக்தி யில்லாத குறைதானே, பகலை இருள் என்ற குறையோ— பகலை யிருளென்று சொன்ன குறைதானே, விண்படர்ந்து — விண்காரியங்களில் வியாபித்து, அற — மிகவும், படி நீலனான குறையோ — படி நீலனான குறைதானே, அங்கும் இங்கும் — அங்கு மிங்குமாக, கெட்டு அலைந்த குறையோ — கெட்டலைந்த குறைதானே, தேடி — உன்னைத்தேடி, அலையா திருந்த குறையோ — அலையாமலிருந்த குறைதானே, அறியாமல் இடையும்—

அறியாமல் வருந்துகிற, அடியேனும் உமை நம்பினேன்—, அணைவுதந்து ஆளுதற்கு—சார்புதந்து என்னை யாளும் பொருட்டு, அன்பு ஆழி—அன்பாகிய கடலில், வங்கமாய் உள்ள—கப்பலா யிருக்கிற, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. குடி—சந்ததி. இடிசாபம்—இடி விழுந்தாற் போன்ற சாபம். படுநிலன்—படுநீலி யென்பதன் ஆண்பாற் பெயர். வங்கம்—கப்பல். ஆழி—கடல். (உ)

கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ வடிமையிரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ வுடலிலோ வுயிரிலோ
கதியான பூமி தனிலோ
அல்லிலோ பகலிலோ நல்லபத வில்லிலோ
அருவிலோ வுருமீ திலோ
அறிவிலோ வறியொணு மறையிலோ மறைகண்முத
லாகம புராணத் திலோ
செல்வமிகு துரைராஜ ரேதேவ ரீர்க்குநிலை
திவ்விய குணங் குடியிலோ
தெரியாம லிடையுமடி யேனுமுமை நம்பினேன்
சேர்ந்தணைந் தாளு தற்கே
மல்லிகை மலர்க்கந்த முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ—கல்லிலேயோ மண்ணிலேயோ ஆகாயத்திலேயோ, அடிமை இரு கண்ணீரிலோ—அடியேனது இருகண்ணீரிலோ, கரையிலோ—கரையிலேயோ, கடலிலோ—கடலிலேயோ, உடலிலோ—உடம்பிலேயோ, உயிரிலோ—உயிரிலேயோ, கதி ஆன பூமி தனிலோ—கதியாகிய நிலத்திலேயோ, அல்லிலோ—இரவிலேயோ, பகலிலோ—பகலிலேயோ, நல்லபதம் இல்லிலோ-நற்பதமாகிய வீட்டிலேயோ, அருவிலோ—அருவிலேயோ, உருமீதிலோ—உருவிலேயோ, அறிவிலோ—அறிவிலேயோ, அறியொணு மறையிலோ—அறிய வொண்ணாத வேதத்திலேயோ, மறைகள் முதல்—வேதங்கள் முதலாக, ஆகம புராணத்திலோ—

ஆகம புராணங்களிலேயோ, செல்வம் மிகு—செல்வமிகுந்த, துரை ராஜரே—துரை ராஜரே, தேவரீர்க்குநிலை—தேவரீருக்கு நிலையிடமா யிருப்பது, இவ்விய குணங் குடியிலோ — இவ்விய குணங் குடியிலேயோ, தெரியாமல் — தெரிந்துகொள்ளமாட்டால், அடியேனும் உமைநம்பினேன்—, சேர்ந்தணைத்து ஆளுதற்கு — சேர்ந்தணைத்தாளும் பொருட்டு, மல்லிகை மலர்க்கந்தம் உள்ள—மல்லிகைப் பூ மணமுள்ள, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. கதி — புகலிடம். கதியான பூமி யென்றது மோக்ஷபூமியை. ()

ஓயாதோ வென்கவலை யுள்ளுருகி யானந்த
முள்ளுள்ளே பாய்ந்தி டாதோ
ஒழியாதோ விழிமாயை யழியாதோ பாழாசை
யூழ்வினை யோய்ந்தி டாதோ
தீயாதோ வன்கருவி காயாதோ கரணங்க
ளவினைக டீர்ந்தி டாதோ
தேறாதோ பாழ்மனஞ் சாராதோ பேரறிவு
திவ்யகுணம் வாய்ந்தி டாதோ
போயாதோ வருண்மாரி வாயாதோ வான்கருணை
பேரின்ப நேர்ந்தி டாதோ
பெருகவின் றிடையுமடி யேனுமுமை நம்பினேன்
பெரியமுட னாளு தற்கே
வாயிற் சிறந்தமொழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. என் கவலை ஓயாதோ — என் துக்கம் ஒழியாதோ, உள் உருகி—மனமுருகி, ஆநந்தம்—ஆநந்த வெள்ளமானது, உள்ளுள்ளே பாய்ந்திடாதோ—உள்ளுக்குள்ளே பெருகிப் பாயாதோ, விழிமாயை ஒழியாதோ — கண்மாயை நீங்காதோ, பாழ் ஆசை அழியாதோ — பாழாசையானது நசிக்காதோ, ஊழ் வினைகள் ஒய்ந்திடாவோ—பழவினைகள் ஓய்ந்திடாவோ, வல்கருவி தீயாதோ—வலியகருவி தீய்ந்து போகாதோ, கரணங்கள் காயாவோ — கரணங்கள் உலர்ந்து போகாவோ, தீவினைகள் தீர்ந்திடாவோ — கொடு வினைகள் நீங்கிப் போகாவோ, பாழ்மனம் தேறாதோ—பாழாகிய மனந் தெளியாதோ, பேரறிவு சாராதோ — பேரறிவுண்டாகாதோ, திவ்யகுணம் வாய்ந்திடாதோ—நற்குணம்

வாய்க்காதோ, அருள் மாரி பேயாதோ — அருள் மழை பெய்யாதோ, வான் கருணை வாயாதோ — மேலான கருணை வாய்க்காதோ, பேரின்பம் சேர்ந்திடாதோ — பேரின்பம் கிடைக்காதோ, பெருக நின்று இடையும் — மிகுதியாக நின்று வருந்துகிற, அடியேனும் உமை நம்பினேன் —, பிரியமுடன் ஆளுதற்கு — அன்புடனே என்னை யாளும் பொருட்டு, வாயில் சிறந்த மொழி உள்ள — திருவாயில் மேலான சொல்லையுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறகுல் வருக — றகுல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பாய்ந்திடாதோ என்றமையால் ஆனந்தம் வெள்ள மாக்கியுரைக்கப்பட்டது. விழிமாயை — கண்வழியாக உண்டாகிற விடய விச்சை. கருவி — தத்துவம். கரணம்—மனமுதலிய அந்தக்கரணங்கள். திவ்ய குணம்— சமதமாதி ஆத்மகுணங்கள். வாயிற் சிறந்தமொழி — மகாவாக்கியம். (௪)

நாடுமோ முத்திவழி கூடுமோ நெற்றிவிழி
நல்லறிவு பந்தா டுமோ
நற்குணங் குடிமீது வீடுதர வென்றனைய
நாதனரு ளுந்தே டுமோ
ஆடுமோ அட்டமா சித்தியும் புத்தியு
மந்தவழி யைச்சா டுமோ
ஆரவா ரத்தையும் போடுமோ சித்தமா
நந்தநட னம்மா டுமோ
மாடகூ டங்களொடு மனையாட்டி தருமாசை
மாட்டேனென விட்டோ டுமோ
மனமுறிந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
வந்தனைந் தாளு தற்கே
வாடா மலர்க்குநிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. முத்திவழி நாடுமோ — மோக்ஷமார்க்கம் நாடப்படுமோ, நெற்றி விழி கூடுமோ — நெற்றியில் கண்ணிரண்டும் சேருமோ, நல் அறிவு பந்தாடுமோ — நல்லுணர்வு பந்தாடுமோ, நற்குணங் குடி மீது வீடுதரவென்று— நல்லகுணங்குடியில் வீடுதந்தருளவேண்டுமென்று, அனைய நாதன் அருளும் தேடுமோ — அந்த சற்குருநாதனது அருளும் என்னைத்தேடுமோ, அட்டமா சித்தியும் ஆடுமோ-அட்டமாசித்திகளும் ஆடக்கிடைக்குமோ, புத்தியும் அந்த

வழியைக்கூடுமோ — புத்தியும் அர்தவழியைச் சேருமோ, சித்தம்—மனமானது, ஆரவாரத்தையும் போடுமோ — ஆரவாரத்தையுஞ் செய்யுமோ, ஆநந்தம் நடநம் ஆடுமோ — ஆநந்தம் கூத்தாடுமோ, மாடகூடங்கள் எனும் — மாடகூடங்கள் வேண்டுமென்கிற, மனையாட்டிதரும் ஆசை—மனையாள் உண்டாக்குகிற ஆசையானது, மாட்டேன் என — இருக்கமாட்டேனென்று, விட்டு ஓடுமோ — என்னை விட்டோடுமோ, மனம் முறிந்து இடையும் — மனம் வெருத்து வருந்துகிற, அடியேனு முமை நம்பினேன்—, வந்து அணைந்து ஆளுதற்கு— வந்துசேர்ந்து என்னை யாளும் பொருட்டு, வாடாமலர்க்கு நிகர் உள்ள — வாடாத பூவை நிகர்த்திருக்கிற, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுண முடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. கூடுமோ நெற்றிவிழி என்றது கண்ணிரண்டும் புருவ நடுவிற் கூடுதல். புருவ நடுவானது யோகியர் தியானித்ததற்குரிய இடங்களில் ஒன்று. பந்தாடுதல் — குதித்தல். அட்டமாசித்தி — அணிமா மகிமா முதலியன. மன முறிதல் — மனம் வெறுத்தல். (௯)

ஆசாபசாசவலை யுள்ளகப் படுவேனோ
 வல்லது வெளிப்ப டுவேனோ
அகிலவாழ் வென்றிடு மளற்றில்வீழ்ந் திடுவேனோ
 வப்புற நடந்தி டுவேனோ
நாசாளை நோண்டுநதி கெட்டுநின் றிடுவேனோ
 கதியாளை நோண்டி டுவேனோ
கரையற்ற கப்பலென் னக்கலங் கிடுவேனோ
 கரையேறி நின்றி டுவேனோ
ஈசனடி செல்லா திருந்து சென்றிடுவேனோ
 வீசனடி சென்றி டுவேனோ
ஏங்கிமிக விடையுமடி யேனுமுமை நம்பினே
 னேக்கமற வாழு தற்கே
மாசிலா மணிமாலை யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப-ரை. ஆசாபசாச வலையுள் அகப்படுவேனோ — ஆசாபசாச வலைக்குள்ளே சிக்கிக்கொள்வேனோ, அல்லது வெளிப்படுவேனோ — அல்லது வெளிப்படுவேனோ, அகில வாழ்வு என்றிடும் — பிரபஞ்சவாழ்க்கை என்கிற, அளற்றில்

வீழ்ந்திடுவேனோ – சேற்றில் வீழ்ந்திடுவேனோ, அப்புறம் நடந்திடுவேனோ – (அதைக்கடந்து) அப்புறத்தே நடப்பேனோ, காசு ஆசைகொண்டு – பணத் தாசை பிடித்து, கதிகெட்டு நின்றிடுவேனோ - கதிகெட்டு நிற்பேனோ, கதி ஆசை கொண்டிடுவேனோ – கதியாசையே கொள்வேனோ, கரை அற்றகப்பல் என்ன – கரையேறாத கப்பல்போல, கலங்கிடுவேனோ – கலங்குவேனோ, கரை ஏறி நின்றிடுவேனோ – கரையேறி நிற்பேனோ, ஈசனடி செல்லாதிருந்து நின் றிடுவேனோ – ஈசன் திருவடியை யடையாதிருந்து நிற்பேனோ, ஈசன் அடி சென்றிடுவேனோ – ஈசன் திருவடியை அடைவேனோ, ஏங்கி–ஏக்கமடைந்து, மிக இடையும் – மிகவும் வருந்துகின்ற, அடியேனும் உமை நம்பினேன்—, ஏக்கம் அற – ஏக்கமற்றொழிய, வாழுதற்கு – வாழும் பொருட்டு, மாசு இலா மணிமாலை உள்ள–கலங்கமில்லாத மணிமாலையையுடைய, நீர் பின் தொடர– நீர் பின்தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல்வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை–வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் – குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே – எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி–ரை. அறுத்து வெளிப்படுத லரிதா யிருத்தலால் ஆசையை ஆசா பசாசவலை என்றார். அகிலம் – உலகம். அளறு – சேறு. கரையற்ற கப்பல்– கரைகாணாத கப்பல் எனினு மமையும். மாசிலாமணி மாலை–படிகமணிமாலை.()

புதல்வரெனு முதலைகள் பிடித்துங் கடித்துப்
புசிக்கக் கொடுத்து ழல்வேனோ
பொல்லாத காமக் கடற்புலா லென்னுமோர்
பூவைசைப் பட்டு ழல்வேனோ
கதகதென் றெரியும் பணத்தீ மிதித்தெனது
கால்கொப்ப ளித்து ழல்வேனோ
கட்டுபட் டாடைக ளொனுநமன் கைவலைக்
கட்டுண்டு நின்று ழல்வேனோ
சதசதென் றழுகுதுர்க் கந்தசாக் கடையான
சமுசார மதிலு ழல்வேனோ
தத்தளித் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சற்றுவந் தாளு தற்கே
மதலைபோற் கொஞ்சுகுண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப–ரை. புதல்வர் என்னும் முதலைகள் – புத்திரர் என்கிற முதலைகள், பிடித்து கடித்து புசிக்க – பற்றிக் கடித்துண்ண, கொடுத்து உழல்வேனோ –

என்னைக்கொடுத் துழல்வேனோ, பொல்லாத காமக்கடல்—பொல்லாத காமக் கடலிலுண்டாகிய, புலால் என்னும்—புலால் நாற்றமாகிய, ஓர் பூவை கைப் பட்டு உழல்வனோ—ஒருமாதின் கையிலகப்பட்டு உழல்வனோ, கதகதென்று எரியும்—கதகதவென்று எரிகிற, பணத்தீமிதித்து—பணமாகிய நெருப்பை மிதித்து, எனது கால் கொப்பளித்து உழல்வேனோ—, கட்டுபட்டாடைகள் என்னும்—கட்டப்படுகிற பட்டுவஸ்திரங்களென்கிற, நமன்கைவலைகட்டுண்டு நின்று உழல்வேனோ—யமனது கைவலையாற் கட்டுபட்டு நின்றுழல்வேனோ, சதசத என்று அழுகு—சதசதவென்று அழுகா நின்ற, துர்க்கந்தம்—தீநாற் றத்தையுடைய, சாக்கடை ஆன—சாக்கடையாகிய, சமுசாரத்தில் உழல் வனோ — சமுசாரத்திற்சிக்கி உழல்வேனோ, தத்தளித்து இடையும் — தத் தளித்து வருந்துகின்ற, அடியேனுமுமை நம்பினேன்—, சற்று வந்து ஆளு தற்கு—சிறிதுவந்து ஆளும்பொருட்டு, மதலைபோல் கொஞ்சு குணம் உள்ள—குழந்தைபோலக் கொஞ்சுங் குணத்தையுடைய, நீர் பின்தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்ப வர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்ட கையே. எ-று.

வி-ரை. கதகத சதசத என்பன—ஈரடுக் கொலிக் குறிப்பு. சதசதத் தல்—நொது நொதுத்தல். துர்க்கந்தம்—கெட்ட நாற்றம். சாக்கடை—சல தாரை. தத்தளித்தல்—தடுமாறுதல். (எ)

வண்டாய்ப் பறந்தெழுந் திடுவேனோ சிற்றின்ப
வாரியில் விழுந்தி டுவேனோ
மண்ணான காமக் குரோதமுண் டிடுவேனோ
மாயைதனை வென்றி டுவேனோ
பெண்டாசை யென்றபேய் கொண்டுசெத் திடுவேனோ
பேரின்ப முற்றி டுவேனோ
பிறத் றுருத்தியிற் பிரியமுற் றிடுவேனோ
பிரியங்க ளற்றி டுவேனோ
கண்டானந் திடுநாழி யாவேனோ குறைவினிறை
நாளுழி தானு வேனோ
நாளெலா மிடையுமடி யேனுமுமை நம்பினே
னன்மைகூர்ந் தாளு தற்கே
மண்டுபே ரின்பவொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. வண்டாய் பறந்து எழுந்திடுவேனோ—வண்டுபோலப் பறந்தெழுந்திடுவேனோ, சிற்றின்ப வாரியில் விழுந்திடுவேனோ—சிற்றின்பக்கடலில் விழுந்திடுவேனோ, மண் ஆன காமக்குரோதம் உண்டிடுவேனோ—மண்போன்ற காமக்குரோதங்களை யுண்பேனோ, மாயைதனை வென்றிடுவேனோ—மாயையை வெல்லுவேனோ, பெண்டு ஆசை என்ற — பெண்ணாசையென்று சொல்லப்பட்ட, பேய்கொண்டு செத்திடுவேனோ—பேயாற் பிடிக்கப்பட்டு சாவேனோ, பேரின்பம் உற்றிடுவேனோ—பேரானந்தத்தையடைவேனோ, பீறல் துருத்தியில்—பீறல் துருத்தியாகிய இந்தச் சரீரத்தில், பிரியம் உற்றிடுவேனோ—விருப்பத்தை யடைவேனோ, பிரியங்கள் அற்றிடுவேனோ—பிரியங்கள் ஒழியப் பெறுவேனோ, நண்டு அளந்திடும் நாழி ஆவேனோ—நண்டளந்த நாழிபோல் வறியனாவேனோ, குறைவு இல் நின்ற நானாழிதான் ஆவேனோ—குறைவில்லாத நாலு நிறை நாழி யாவேனோ, நாள் எல்லாம் இடையும்—கால மெல்லாம் வருந்துகின்ற, அடியேனும் உமை நம்பினேன்—, நன்மை கூர்ந்து ஆளுதற்கு—நன்மை மிகுந்து என்னையாளும் பொருட்டு, மண்டுபேர் இன்பம் ஒளிவுள்ள—மிக்க பேரானந்த வொளியமைந்த, நீர் பின்தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. வாரியில் வீழ்ந்தழுந்தாது பறந்து போஞ் சக்தியுளதாதலால் 'வண்டாய்ப் பறந் தெழுந் திடுவேனோ' என்றார். சிற்றின்பம்—அற்பசுகம். அது மாத ரின்பத்தைப் பெரும்பாலுங் குறிக்கும். பீறல்—கிழிச்சல். துருத்தி—தோற்பை. நிறைநாழி—நிறைபடி. (அ)

என்னக மிருக்கநா னென்வசப் படுவனோ
யென்னமோ சப்ப டுவனோ
இரவுபக லற்றவனு பூதிதனி லுறைவனோ
விதமகித மதிலுறைவனோ
தன்னைமதி யாதுமதி கேடுகெட் டிடுவனோ
தன்னையு மதித்தி டுவனோ
தாரான மாகவரு னையமுண் டிடுவனோ
தட்டிமருள் கொண்டி டுவனோ
என்னதான் செய்வதினி யென்றுமேங்கி டுவனோ
வேகாந்த மோங்கி டுவனோ
இப்படிக் கிடையுமடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம்வைத் தாளு தற்கே

மன்னுதவ முத்திநிலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. என் அகம் இருக்க — என்னுடைய பாவ மிருக்க, நான் என்வசம் படுவனோ — நான் என் வசமாவேனோ, என்ன மோசம் படுவேனோ — என்ன மோச மாவேனோ, இரவு பகல் அற்ற — இரவும் பகலு மில்லாத, அனுபூதி தனில் உறைவனோ — அனுபூதியிலிருப்பேனோ, இதம் அகிதம் அதில் உறைவனோ-இதம் அகிதம் என்பதியிலிருப்பேனோ, தன்னை மதியாது-தன்னை மதிக்காமல், மதிகேடுகெட்டிடுவனோ-அறிவு கேட்டால் கெடுவேனோ, தன்னையும் மதித்திடுவனோ-தன்னையும் மதிப்பேனோ, தாராளமாக அருள் நேயம் உண்டிடுவனோ — தாராளமாக அருள் நேசத்தை உண்பேனோ, தட்டும் மருள் கொண்டிடுவனோ — தடைசெய்யும் மருட்சியைக் கொள்வேனோ, இனி என்னதான் செய்வது என்றும் ஏங்கிடுவனோ — இனிமேல் என்னதான் செய்கிற தென்றும் ஏக்க மடைவேனோ, ஏகாந்தம் ஓங்கிடுவனோ — ஏகாந்தமா யிருப்பதில் உயர்வடைவேனோ, இப்படிக்கு இடையும் — இவ்விதமாக வருந்தும், அடியேனும் உமை நம்பினேன் — அடியேனும் உம்மையே நம்பினேன், இஷ்டம் வைத்து ஆளுதற்கு — விருப்பம் வைத்து என்னை ஆள்வதற்காக, மன்னுதவம் — முத்தி நிலையிலிருக்கப்பட்ட, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. அகம் - பாவம். அனுபூதி — ஆத்மானுபவம். இதம் அகிதம் — நன்மை தீமை. ஏகாந்தம் — தனியா யிருக்கும் நிலை. "தனியே யிருக்க நானெண்ணினேன் எண்ண மிது சாமிநீ யறியாததோ" என்றார் தாயுமான சுவாமிகளும். (௯)

கோணுமன் னரசர்கைக் கோலாவ னோபாவி
குருடர்கைக் கோலா வனோ
கூலாயி லாகயில் லல்லாகு வென்பனோ
குடிகெட்ட நிலையுண் பனோ
வேலையது வாய்முகம் மதுறசூ லென்பனோ
வேலையிது தானென் பனோ
வேதமே தாந்தமெய்ஞ் ஞானவீ டடைவனோ
வெறுவெளியி னின்றி டுவனோ
ஆலா விருக்ஷமென மேலாவ னோவுதி
ரதன்சருகு போலா வனோ

ஆனாலு மிடையுமடி யேனுமுமை நம்பினே
னாதரித் தாளு தற்கே
மாலார்க்கு வாலாய முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. பாவி — பாவியான நான், கோலும் — யாவரையுஞ் சூழும், மன்னிலைபெற்ற, அரசர் கைகோல் ஆவனோ—அரசர்களது கையிள்ள செங்கோலாவேனோ, குருடர் கைகோல் ஆவனோ — குருடர்களது கையிலுள்ள கோலாவேனோ, கூலாயி லாக யில்லல்லாகு என்பனோ — கூலாயிலாக யில்லல்லாகு என்று சொல்லுவேனோ, குடிகெட்ட நிலை யுண்பேனோ — குடிகெட்ட நிலையை யுண்பேனோ, வேலை அதுவாய் — அதுவே வேலையாய், முகம்மது றசூல் என்பனோ — முகம்மது றசூல் என்று சொல்வேனோ, வேலை இதுதான் என்பனோ — இதுதான் வேலை யென்று சொல்வேனோ, வேத வேதாந்த மெய்ஞ்ஞானவீடு அடைவனோ — வேத வேதாந்தங்கள் சொல்லும் மெய்ஞ்ஞான வீட்டை அடைவேனோ, வெறுவெளியில் நின்றிடுவனோ—வெற்றிடமான வெளியில் நிற்பேனோ, ஆலா விருக்ஷமென மேலாவனோ — ஆலமரத்தைப்போல மேன்மை யடைவேனோ, உதிர் அதன் சருகு போல் ஆவனோ — உதிரும்படியான அந்த ஆலமரத்தின் சருகைபோ லாவேனோ, ஆனாலும் இடையும் அடியேனும் உமை நம்பினேன் — ஆனபோதிலும் வருந்தும் அடியேனும் உம்மையே நம்பினேன், ஆதரித்து ஆளுதற்கு—ஆதரித்து என்னை ஆள்வதற்காக, மாலார்க்கு வாலாயமுள்ள — உமது விஷயத்தில் ஆசையுள்ளவர்களுக்கு வாலாய முடையவராகிய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. அரசர் கைக்கோல் சுதந்திரத்திற்கும், குருடர் கைக்கோல் பரதந்திரத்திற்கும் எடுத்துக்காட்டு முவமைகள். மேலாவனே என்பதற்கு உயர்வேனோ என்றுரைப்பினுமாம். மால்—விருப்பம். வாலாயம் — தாராளம்-வழக்கம் எனினுமாம். (௪0)

ஆக பாடல் - 54.

ஒன்றுஞ் சமாதி யோகமிம் முறையா
மென்றருள் பிரானே யிவற்றியல் பெல்லா
மெவற்றானு மசையா திசையப் படுத்திக்
தவத்தை யருள்கெனச் சரண்புகுந் திரந்தல்.

ஆசிரியவிருத்தம்.

பாயுமீ ராறுகலை பாயாது பக்குவம்
பண்ணிவைப் பதுசமாதி
பழவினை யிறக்கவுஞ் சுழுமுனை திறக்கவும்
பழகிவரு வதுசமாதி
ஓயாத கருவிகர ணாதியோய்ந் தொழியவிழி
யொளிகொழிப் பதுசமாதி
ஒன்றிரண் டென்றுமன முற்றுமுன றுதலைவிட்
டொன்றுபடு வதுசமாதி
ஈயெறும் பாதிக டமக்குடல் குழைந்துமு
னின்புருகு வதுசமாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வாயுவினு மதிவேக முள்ளநீர் பின்றொடர
வள்ளவிற லூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. பாயும் கலை ஈராறு பாயாது — பாயும் கலைகள் பன்னிரண்டு அங்குலத் தளவும் பாயாமல், பக்குவம் பண்ணி வைப்பது சமாதி—பக்குவஞ் செய்து வைப்பது சமாதி யாகும், பழவினை இறக்கவும் சுழுமுனை திறக்கவும் — பழமையான வினைகள் கெடவும் சுழுமுனை நாடியின் வழிதிறக்கும் படிக்கும், பழகி வருவது சமாதி — பழக்க மடைவது சமாதியாகும், ஓயாத கருவிகரணாதி ஓய்ந்து ஒழிய — ஓய் வடையாத கருவி கரணம் முதலானவைகள் ஓய் வடைந்து வழியும் படியாக, விழி ஒளி கொழிப்பது சமாதி — விழியின் ஒளியைக் கொழிப்பது சமாதியாகும், ஒன்று இரண்டு என்று மனம் உற்றும் — ஒன்றிரண்டென்று மனத்திலுணர்ந்தும், உனறுதலை விட்டு ஒன்று படுவது சமாதி—பிதற்றுதலைவிட்டு ஒரு வழிப்படுதல் சமாதியாகும், ஈ எறும்பு ஆதிகள் தமக்கு — ஈ எறும்பு முதலியவைகளுக்கு, உடல் குழைந்து முன் இன்பு உருகுவது சமாதி — சரீரங் குழைந்து முன்னே அன்பினா லுருகுவது சமாதியாகும், என்று—சமாதிவகை இப்படிப்பட்டதென்று, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் — அடியேனை நானும் அருளையுடைய உபகாரகனே உம்மையே நம்பினேன், ஆளுதற்கு இதுவேளை — என்னை யாள்வ

தற்கு இதுவே வேளையாகும், வாயுவினும் அதிவேகம் உள்ள — வாயுவைக் காட்டிலும் அதிக வேகமுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்— குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. சமாதி — நிஷ்டை. சமதமாதி ஆத்மகுணங்கள் எனினு மமையும். அவை: சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்பன. இவற்றை சமாதிஷட்க சம்பத்தி என்பர். கலை — இடைகலை, பிங்கலை. சுழுமுனை — நடுநாடி. (௯)

நாவினுனி தனைமடித் தந்நாள மோட்டிநிலை
நாட்டிவைப் பதுச மாதி
நாலிரண் டெட்டுமெட் டெட்டாகி யழியமுன்
ஞலாக்கு வதுச மாதி
ஓவியம் போலிருந் துள்ளுருகு நல்லமிர்த
மொழுகவுண் பதுச மாதி
உச்சிவெளி சென்றுமொளி கண்டுமிரு விழியையு
முட்குவிப் பதுச மாதி
ஏவலொடு விலகலெனு மிருவினையு மற்றதை
விலாதிருப் பதுச மாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாகு தற்கே
மாவேக மனவேக முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. நாவின் நுனிதனைமடித்து — நாவின் நுனியை மடித்து, அநாளம் ஓட்டி — அந்த உள் துளையில் ஓடச்செய்து, நிலைநாட்டி வைப்பது சமாதி — நிலையாக நாட்டிவைப்பது சமாதியாகும், நாலிரண்டெட்டும்—நாலிரண்டெட்டும், எட்டெட்டு ஆகி அழிய — எட்டெட்டாகி யழியும்படி, முன் நால் ஆக்குவது சமாதி — முன்னுனாக்குவது சமாதி, ஓவியம்போல் இருந்து — சித்திரம்போலிருந்து, உள் உருகும் நல் அமிர்தம் ஒழுக — உள்ளே யொழுகுகிற நல்ல அமிர்தம் ஒழுக, உண்பது சமாதி — அதை யுண்பது சமாதியாகும், உச்சிவெளி சென்றும் ஒளிகண்டும் — உச்சியினிடத்துள்ள வெளியில் சென்றும் ஒளியைக்கண்டும், இருவிழியையும் உள் குவிப்பது சமாதி — இரண்டு கண்ணையும் உள்ளே குவிப்பது சமாதியாகும், ஏவலொடும் விலகல் எனும் — ஏவலுடன் விலகுதல் என்று சொல்லும், இருவினையும்

அற்று — இருவினையுமில்லாமல், அசைவு இலாது இருப்பது சமாதி — அசையில்லா திருப்பது சமாதியாகும், என்று — என்று, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, மாவேகம் மனவேகம் உள்ள— பெரிய வேகமும் மனவேகமு முள்ள, நீர் பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே எ—று.

வி—ரை. நாவினுனி — உண்ணாக்கின் நுனி. தாளம் — மேல்வாய்த்தொளை. ஓட்டுதல் — செலுத்தல். ஓவியம் — சித்திரப்பாவை. உள்ளுருகு நல்லமிர்தம் என்றது சந்திரமண்டலத்தினின்றும் ஒழுகுகிற அமிர்தம். அமிர்தம் — சாவா திருத்தற் கேதுவானது, உச்சிவெளி — பிரமரந்திரம். அசைவிலா திருத்தல்— நிச்சலமாயிருத்தல். (உ)

இதயங் களித்துவரு வதையுங் கொளுத்திவெளி
யேறிவிடு வதுசமாதி
எட்டியெட் டாப்பொருளை யெட்டிப் பிடிக்கவடி
யெட்டிவைப் பதுசமாதி
பதியினதி பதியைவைத் ததிகதுதி யோதிப்
பதம்பணிகு வதுசமாதி
பரிபூர ணந்தனில் வருநார ணந்தனைப்
பார்த்துமகிழ் வதுசமாதி
எதுவந்து நேரினும் மாறினு மிரண்டுமொன்
றென்றிருப் பதுசமாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மதயானை போற்றீர முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. இதயம் களித்து வருவதையும் கொளுத்தி — மனங் களித்து வரும் வினைகளையுங் கொளுத்தி, வெளி ஏறி விடுவது சமாதி — வெளியில் ஏறிவிடுவது சமாதி யாகும், எட்டி எட்டாப் பொருளை எட்டிப் பிடிக்க—எட்டியு மெட்டாத பொருளை எட்டிப் பிடிப்பதற்காக, அடி எட்டி வைப்பது சமாதி—அடியை எட்டிவைப்பது சமாதியாகும், பதியின் அதிபதியைவைத்து— மனமாகிய பதியில் அதிபதியாகிய ஆண்டவனை வைத்து, அதிக துதி ஓதி—

அதிக துதிகளைச் சொல்லி, பதம் பணிகுவது சமாதி — அவரது திருவடியைப் பணிவது சமாதியாகும், பரிபூரணம் தன்னில் வரும் காரணம் தன்னை - பரிபூரணத்தில் வரும் காரணத்தை, பார்த்து மகிழ்வது சமாதி— கண்டு களிப்படைவது சமாதியாகும், எதுவந்து நேரினும் மாறினும் — எது வந்து சம்பவித்தாலும் மாறினாலும், இரண்டும் ஒன்றென்றிருப்பது சமாதி— அவ்விரண்டும் ஒன்றென்றெண்ணியிருப்பது சமாதியாகும், என்று அருள் பிரானே அடியனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—,மதம் யானை போல் தீரமுள்ள — மதத்தையுடைய யானையைப்போல தீரமுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் - குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. வெளியேறிவிடல் — வெளிப்பட்டிடல். இரண்டுமொன்றிருத்தல்—நடுவுநிலைமை, "கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக், கோடாமை சான்றோர்க்கணி" என்பது திருக்குறள். (௩)

வேரற்ற சுத்தபரி பூரணப்பேரின்ப
  வீடுபுகு வதுச மாதி
விரிகருணை தந்தகுரு நாதனடி யார்களென
  வேடமணி வதுச மாதி
போராடு மையற் குதங்கைக் கடந்தப்
  புறத்தினிற் பதுச மாதி
புகன்மறைப் பொருளைமற வாக்கட னமக்கென்று
  புந்திமகிழ் வதுச மாதி
ஈராறு கால்களையு மெட்டுக் கயிற்று
  மிறுக்கியறி வதுச மாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
  னிதுவேளை யாளு தற்கே
மார்பணியு முத்தார முள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

ப—ரை. வேர் அற்ற சுத்த பரிபூரணம் பேரின்ப வீடு புகுவது சமாதி— வேரற்றதான பரிசுத்தமான பரிபூரணமான பேரின்பமயமான வீட்டில் பிரவேசிப்பது சமாதியாகும், விரிகருணை தந்த குருநாதன் அடியார்கள் என— விரிந்த தனது கருணையைக் கொடுத்த குருநாதனுடைய அடியார்களென்று

சொல்லும்படி, வேடம் அணிவது சமாதி – வேஷங் கொள்வது சமாதி யாகும், போர் ஆடும் மையல் குதக்கைக்கடந்து – போர் செய்யும் மயக்க மாகிய குதக்கைக்கடந்து, அப்புறத்தில் நிற்பது சமாதி – அப்புறத்தே நின் றிருப்பது சமாதியாகும், புகல்மறைப்பொருளை மறவாக்கடன் நமக்கு என்று– சொல்லப்படும் வேதத்திலுள்ள பொருளை மறவாதகடமை நமக்காகுமென்று, புத்தி மகிழ்வது சமாதி – மனமகிழ்வது சமாதியாகும், ஈராறு கால்களை யும் எட்டு கயிற்றால் – பன்னிரண்டு கால்களையும் எட்டுக் கயிற்றினாலே, இறுக்கி அறிவது சமாதி – நெருக்கிக்கட்டி யறிவது சமாதியாகும், என்று –, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, மார்பு அணியும் முத்து ஆரம் உள்ள–மார்பிலணியும் முத்துமாலைகளையுடைய, நீர் பின்தொடர – நீர் பின்தொடரும்படி, வள்ளல்–உதாரகுணமுடைய, இற சூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை– வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் – குணங்குடியில் வாழும், என் இரு கண்மணியே – எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித் தீனை – முகியித்தீன் ஆண்டகையே. எ–று.

வி–ரை. வேர் – முதல். குதக்கு – சேறு. ஈராறுகால்கள் – பன்னிரண்டு கலைகள். எட்டுக்கயிறு – எண்வகை யோக வுறுப்பு. (ச)

சாதிபே தத்தையும் மாதர்போ கத்தையுந்
　　தள்ளிநிற் பதுச மாதி
சந்ததமு மொளிருமருண் ஞான வரு டேசிகன்
　　றன்னையறி வதுச மாதி
நீதிலருள் கொண்டதே சோமயத் துண்மனஞ்
　　சேர்ந்திருப் பதுச மாதி
செத்தசவ மதுபோ லிருந்துசெப தபமுஞ்
　　செயத்தனிப் பதுச மாதி
ஏதுமது வானகுரு நாதனிரு பாதமதி
　　லிச்சைவைப் பதுச மாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
　　னிதுவேளை யாளு தற்கே
மாதவர்க ளுக்குதவி யுள்ளநீர் பின்றொடர
　　வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
　　மணியே முகியித் தீனே.

ப–ரை. சாதி பேதத்தையும் – வருண பேதத்தையும், மாதர்போகத்தை யும் – பெண்கள் போகத்தையும், தள்ளி நிற்பது சமாதி – நிவர்த்தி செய்து நிற்பது சமாதியாகும், சந்ததமும் ஒளிரும் அருள் ஞான அருள் தேசிகன்

தன்னை அறிவது சமாதி — எப்போதும் விளங்கும் அருளையும் ஞான அருளையுமுடைய குருநாதனை யறிவது சமாதியாகும், தீது இல் அருள் கொண்ட— தீமையில்லாத அருளைக்கொண்ட, தேசோமயத்துள் மனம் சேர்ந்திருப்பது சமாதி — ஒளிமயமான பொருளில் மனஞ் சேர்ந்திருப்பது சமாதியாகும், செத்த சவம் அதுபோல் இருந்து — செத்த பிணம்போலிருந்து, செபதபமும் — ஜபத்தையும் தவத்தையும், செய்ய தனிப்பது சமாதி — செய்வதற்குத் தனித்திருப்பது சமாதியாகும், எதும் அதுவான குருநாதன் இருபாதமதில்— எப்பொருளிலும் அதுவாயிருக்கப்பட்ட குருநாதனது இரண்டு பாதங்களில், இச்சை வைப்பது சமாதி — விருப்பம் வைப்பது சமாதியாகும், என்று—, அருள் பிரானே யடியேனு முமை நம்பினே னிச்சைவைத் தாளுதற்கு—, மாதவர்களுக்கு உதவியுள்ள — பெருந்தவத்தை யுடையவர்களுக்கு உதவியாயுள்ள, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி-ரை. பேதம் — வேற்றுமை. போகம் — சுகானுபவம். தேஜோமயத்துள் மனஞ் சேர்ந்திருத்தலாவது — தேஜோமயமாகிய பிரமப்பொருளில் மனம் லயித்திருத்தல். தனிப்பது — ஏகாந்தமாயிருப்பது. செபம் — கடவுள் திருநாமத்தை உருப்போடல். தபம் — விரதாதிகளால் உடம்பை வருத்தல். ()

நிதியாசை யற்றுதற வதியாசை யுற்றுநன்
　　னிட்டைபுரி வதுசமாதி
நிலையாது காயமென் றெண்ணமொன் றென்றென்று
　　நிச்சயிப் பதுசமாதி
வதியுஞ்சவ் வாதுசந் தனமுமொன் றென்றுமனம்
　　வைத்துநிகழ் வதுசமாதி
வாராது வாராது வருவனவும் வருமென்று
　　வாட்டமொழி வதுசமாதி
இதமகித மற்றமதி பெற்றிதய முத்திநிலை
　　யேற்றுநிற் பதுசமாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
　　னிதுவேளை யாளுதற்கே
மதுரவின் பப்பெருக் குள்ளநீர் பின்றொடர
　　வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மெனிருகண்
　　மணியே முகியித் தீனே.

ப-ரை. நிதி ஆசை அற்று — திரவிய ஆசை நீங்கி, துறவு அதி ஆசை உற்று — துறவறத்தில் அதிக ஆசைபொருந்தி, நல் நிட்டைபுரிவது சமாதி— நல்ல நிஷ்டை செய்வது சமாதி யாகும், காயம் நிலையாது என்று — சரீரம் நிலைக்க மாட்டாதென்று, எண்ணம் ஒன்று என்று — சிந்தனையே ஒன்றென்று, நிச்சயிப்பது சமாதி — நிச்சயிப்பது சமாதி யாகும், வதியும் — சேரும் சவ்வாது சந்தனமும் — சவ்வாது கூட்டிய சந்தனமும், ஒன்றென்று மனம் வைத்து நிகழ்வது சமாதி — ஒன்றாகு மென்று மனத்திற் கொண்டு இருப்பது சமாதி யாகும், வாராது வாராது — வராதது வரமாட்டாது, வருவனவும் வரும் — வருமவைகள் வரும், என்று வாட்டம் ஒழிவது சமாதி—என்று வாட்ட மடைவதை யொழிந் திருப்பது சமாதியாகும், இதம் அகிதம் அற்ற மதிபெற்று — இது இதமானது இது இதமல்லாதது என்பதில்லாத ஞானத்தை யடைந்து, இதயம் முத்திநிலை எற்று நிற்பது சமாதி — மனத்தை முத்தி நிலையிற் சேர்த்து நிற்பது சமாதி யாகும், என்று—, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, மதுரம் இன்பப் பெருக்குள்ள—, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதார குணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. நிச்சயித்தல் — துணிதல். வாட்டம் — வாடுதல், (துன்பம்.) (௬)

எல்லையு மறந்துபல தொல்லையு மிறந்ததொ
ரிடத்திருப் பதுசமாதி
எனதியா னென்பதை யுடம்பொருளொ டேவன்முத
லீடழிப் பதுசமாதி
அல்லுபக லாகவெல் லும்மளவு நல்லறிஞ
ரடிபணிகு வதுசமாதி
ஆகமத் தின்படிச் சாதிக்க முதலெவையு
மற்றிருப் பதுசமாதி
இல்லாளு மைந்தருஞ் சுற்றமுஞ் சுற்றமா
யில்லையென் பதுசமாதி
என்றருள் பிரானேயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மல்லாடி னும்பொறுமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. எல்லையும் மறந்து—எல்லையையும் மறந்து, பல தொல்லையும் இறந்தது—பல தொல்லைகளும் இறந்ததான, ஓர் இடத்து இருப்பது சமாதி—ஒரு இடத்தி லிருப்பது சமாதி யாகும், எனது யான் என்பதை—என்னுடையது நான் என்பதை, இடம் பொருளோடு ஏவல் மூதல் ஈடு அழிப்பது சமாதி—இடம் பொருள் ஏவல் முதலிய வலிமை யோடு அழிப்பது சமாதியாகும், அல்லு பகலாக வெல்லும் அளவு—இரவு பகலாக வெல்லுமளவும், நல் அறிஞர் அடி பணிகுவது சமாதி—நல்ல அறிவுடை யோர்களின் அடிகளைப் பணிவது சமாதியாகும், ஆகமத்தின் படிச் சாதிக்க—சாஸ்திரத்தின்படி செய்து முடிக்க, முதல் எவையும் அற்று இருப்பது சமாதி—அதற்கு முதலாக வுள்ள எவற்றையும் இல்லாம லிருப்பது சமாதியாகும், இல்லாளும் மைந்தரும் சுற்றமும்—மனைவியும் மக்களும் பந்துக்களும், சுற்றமாய் இல்லை யென்பது சமாதி—உறவா யில்லை யென்பது சமாதியாகும், என்று அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, மல்லாடினும் பொறுமையுள்ள—போர் செய்த போதிலும் பொறுமையுடைய, நீர் பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. எல்லையு மறந்து பல தொல்லையு மிறந்த தோரிடத் திருத்தல்—வரம்பும் பல துன்பங்களு மற்றிருப்பதாகிய ஒப்பற்ற பிரமப்பொருளில் கூடியிருப்பது. தொல்லை—துன்பம். இடம்—இருப்பிடமாகிய மலை முழை மரத்தடி மட முதலியன. பொருள்—பொன் முதலியன. ஏவல்—வேலையாள் முதலியோர். அல்லு பகலாக வெல்லுதல்—இருளுருவாகிய அஞ்ஞானத்தை யடக்கி ஒளி யுருவாகிய ஞானத்தை உயரச் செய்தல். சுற்றமாயில்லை—உறவினராகார். (எ)

சலனசஞ் சலமற்று தொலைத்தருண் மலைப்புடையில்
சார்ந்திருப் பதுசமாதி
சர்வபரி பூரண வகண்டிதா காரமே
சாட்சியென் பதுசமாதி
நிலையம்விட் டலையாது நீவாத தீபமென
நிலையினிற் பதுசமாதி
நெற்றிவிழி ரண்டையு மொத்துநடு கொண்டொளியி
னேரில்வைப் பதுசமாதி
இலகுஞ் சதாகால நிட்டைபல் குந்துறவி
லெய்திநிற் பதுசமாதி
என்றருள் பிரானெயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே

மலைபோற் பெரும்பெருமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. சலன சஞ்சலமது தொலைத்து – அசைவிக்கும் சஞ்சலத்தைத் தொலைத்து, அருள்மலைப் புடையில் சார்ந்திருப்பது சமாதி – அருளாகிய மலையின் பக்கத்தில் சார்ந்திருப்பது சமாதியாகும், சர்வ பரிபூரண அகண்டிதா காரமே – எங்கும் நிறைந்த துண்டிக்கப்படாத உருவமே, சாட்சி என்பது சமாதி – சாட்சியென் றுரைப்பது சமாதி யாகும், நிலையம் விட்டு அலையாது – இருப்பிடம்விட்டு அலையாமல், நீவாத தீபமென நிலையில்நிற்பது சமாதி – நீவாத தீபம்போல நிலையில் நின்றிருப்பது சமாதியாகும், விழி இரண்டையும் ஒத்து நெற்றி நடு கொண்டு – கண்ணி ரண்டையுஞ் சேர்த்து நெற்றியின் நடுவிலிருத்தி, ஒளியின் நேரில் வைப்பது சமாதி – அங்குள்ள ஒளியின் நேரில் வைப்பது சமாதியாகும், சதாகாலம் இலகும் நிட்டை பலகும் – எப்போதும் விளங்கும் நிஷ்டை விர்த்தியாகும், துறவில் எய்தி நிற்பது சமாதி – துறவறத்தில் அடைந்து நிற்பது சமாதி யாகும், என்று அருள்பிரானே அடியேனும் உமை நம்பினேன் இது வேளை ஆளுதற்கு—, மலைபோல் பெரும்பெருமை உள்ள – மலையைப்போல பெரிய பெருமையுடைய, நீர் பின்தொடர – நீர் பின்தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல்வருக–றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும், அருள் நிறை–வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் – குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே – எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே–முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. புடை – சாரல் எனினுமாம். நீவாத தீபம் – காற்றிலாத விடத்துள்ள தீபம். வாதம் – காற்று. நிர் – எதிர்மறை யுபசர்க்கம். இது நிவாத தீபம் என வழங்குதலு முண்டு. அது இவ்விடத்து நீ வாத தீபம் என முதல் நீண்டது. (அ)

ஆரிருந் தென்னவார் போயென்ன வென்றுமன
மற்றிருப் பதுச மாதி
ஆராலு மறியாத சூதான வெளிசென்
றடைந்துபோ வதுச மாதி
வீரசூ ரங்கள்முத லதிகப்பிர சங்கமு
மெலியமெலி வதுச மாதி
வேதமே தாந்தமும் விட்டுநா தாந்தநடு
வீடுசெல் வதுச மாதி
ஏருறு மயிர்ப்பால மேறுமன மேமேபுறு
மேறுமென் பதுச மாதி

என்றருள் பிரானெனயடி யேனுமுமை நம்பினே
 னிதுவேளை யாளு தற்கே
வாரிபோல் வான்கருணை யுள்ளநீர் பின்றெடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளரும்மரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

ப-ரை. ஆரிருந்தென்ன — யாரிருந்தாலு மென்ன, ஆர் போய் என்ன என்று — யார் போனாலு மென்ன வென்று, மனம் அற்று இருப்பது சமாதி— மன மிறந்திருப்பது சமாதி யாகும், ஆராலும் அறியாத — யாராலும் அறியாத, சூது ஆன வெளி சென்று — சூதான வெளியிலே சென்று, அடைந்து போவது சமாதி — அடங்கிப் போவது சமாதி யாகும், வீரசூரங்கள் முதல் அதிகப்ரசங்கமும் — வீரசூரங்கள் முதலாகிய அதிக ப்ரசங்கமும், மெலிய மெலிவது சமாதி — மெலிவடையத் தான் மெலிவடைவது சமாதியாகும், வேதவேதாந்தமும் விட்டு — வேதவேதாந்தங்களும் விட்டு, நாதாந்த நடு வீடு செல்வது சமாதி — நாதாந்தமாகிய நடுவீட்டில் செல்வது சமாதியாகும், ஏர் உறும் மயிர் பாலம் — அழகு மிகுந்த மயிர்ப் பாலத்தில், ஏறும் மனமே ஏறும் ஏறும் என்பது சமாதி — ஏறக்கூடிய மனமே ஏறுமேறு மென்று சொல்வது சமாதியாகும் என்று, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, வாரி போல்வான் கருணை உள்ள— மேகம்போல உயர்ந்த கருணையுள்ள, நீர்பின்தொடர — நீர் பின்தொடரும் படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல்வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முயித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. சூது — ரகசியம். நடுவீடு — சுழுமுனை வழியே சென்றடையப் படுவதாகிய பரவெளி. மயிர்ப்பாலம் — மயிரிலு லமைந்த வாராவதி. இது நெருப் பாற்றின் மேலிருப்பது. இவ்விஷயம் குருமுகத்தா லறியத் தக்க தாதலால் விவரிக்கப் படவில்லை. (௩)

ஆழியென வருள்பொங்கு மாசையுற் றழுதழு
 தகங்களிப் பதுச மாதி
அதிசுகம் பெருவாரி யமிர்தமுண் டுண்டுதனை
 யாறிநிற் பதுச மாதி
பாழினிலை யற்றுமுப் பாழினிலை பெற்றுப்
 பதைப்பொழிப் பதுச மாதி
பலகோடி யண்டபகி ரண்டமுந் தன்னுயிரா
 பார்த்திருப் பதுச மாதி

எழுபுவ னத்தையுஞ் சுற்றியுஞ் சுற்றா
திருப்பிருப் பதுசமாதி
என்றருள் பிரானேயடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வாழிமகு மூதினரு ளுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. ஆழியென அருள் பொங்கும் ஆசை உற்று – சமுத்திரம்போல அருள் அதிகரிக்க வேண்டுமென்கிற ஆசையை யடைந்து, அழுது அழுது அகம் களிப்பது சமாதி – அழுதழுது மனங்களிப்படைவது சமாதியாகும், அதிசுகம் பெருவாரி அமிர்தம் உண்டு உண்டு – அதிக சுகரூபமான பெருங் கடலின் அமிர்தத்தைப் பலமுறையுமுண்டு, தகை ஆறிநிற்பது சமாதி– தளர்வு குறைந்து நிற்பது சமாதி யாகும், பாழின் நிலை அற்று – பாழாகிய நிலையொழிந்து, முப்பாழின் நிலைபெற்று – முப்பாழினு மேற்பட்ட நிலைமை யடைந்து, பதைப்பு ஒழிப்பது சமாதி – பதைத்தலை யொழிப்பது சமாதி யாகும், பலகோடி அண்ட பகிரண்டமும் – பல கோடியான அண்டமும் புற அண்டமும், தன் உள்ளே பார்த்து இருப்பது சமாதி – தனக்குள்ளே பார்த்திருப்பது சமாதி யாகும், எழு புவனத்தையும் சுற்றியும் – எழுலகங்களையுஞ் சுற்றியும், சுற்றாது இருப்பு இருப்பது சமாதி – சுற்றாயல் இருப்பிடத்தி லிருப்பது சமாதியாகும், என்று—, அருள் பிரானே அடியேனும் உமை நம்பினேன் இது வேளை ஆளுதற்கு—, வாழி மகு மூதின் அருள் உள்ள– வாழியையுடைய மகுமூதின் அருளையுடைய, நீர் பின்தொடர – நீர் பின் தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள்நிறை – வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் – குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே – எனது இரண்டுகண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்டவையே. எ-று.

வி-ரை. பாழின் நிலை – பாழாகிய பிறவித் துன்மாற்ற நிலை. முப்பாழினிலை – உடம்புக்குட் சூனியமாகிய மூன்றிடமாகிய நிலை. (சு௰)

ஆக பாடல்-64.

நாந்தமு மயமுங் கலந்தெனக் கலந்து
மாய்ந்த வுனக்கை மாயா தாகப்
போந்திடை முனைக்கும் புதுமைக ளெல்லாந்
தேய்ந்தற வருள்கெனச் சிந்தித் திரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

குவலயக் கவலைதரு மிருமடையர் கைகளைக்
கோத்துத் திரிந்த வம்பன்
கோட்டியுங் கேட்டையுஞ் சேட்டையுங் கூட்டியொரு
கோட்டையாய்க் கட்டு வம்பன்
தவிராத காயகற் பங்கொள்கி றேனினிச்
சாவனோ வென்ற வம்பன்
சந்யாச மென்றபொய் வேடந் தரித்தவர்க
டம்மைநிகர் சொன்ன வம்பன்
செபமாலை கைக்கொண்டு வாய்முணு முணுத்துமுப
தேசிநா னென்ற வம்பன்
தீதெலாந் தீரவடி யேனுமுமை நம்பினேன்
தீரவந் தாளு தற்கே
மௌனமெனு மோனவடி வுள்ளநீ பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. குவலயக் கவலை தரும் — உலகின் கவலையைக் கொடுக்கும், இருமடையர் கைகளை — பெரு மடையர்களின் கைகளை, கோத்து திரிந்த வம்பன் — கோத்துக் கொண்டு திரிந்த வம்பன், கோட்டியும் கேட்டையும் சேட்டையும் கூட்டி — கோட்டியையும் கெடுதியையும் மூதேவியையும் கூட்டி, ஒரு கோட்டையாய் கட்டும் வம்பன் — ஒரு கோட்டையாகக் கட்டும் வம்பன், தவிராத காயகற்பங் கொள்கிறேன் — தவறுதலில்லாத காயகற்பங்களை யுண்ணுகிறேன், இனி சாவனோ என்ற வம்பன் — இனி நான் சாவேனோ என்ற வம்பன், சந்யாசம் என்ற பொய்வேடம்தரித்து — சந்நியாச மென்கிற பொய் வேஷத்தைத் தரித்து, அவர்கள் தம்மை நிகர் சொன்ன வம்பன் — அவர்களை எனக்குச் சமானமாகச் சொன்ன வம்பன், செபம் மாலை கை கொண்டு வாய் முணு முணுத்து — ஜபமாலையைக் கையில் பிடித்துக் கொண்டு வாயில் முணு முணு என்று சொல்லிக் கொண்டு, நான் உபதேசி என்ற வம்பன் — நான் யாவருக்கும் உபதேசிப்பவன் என்று சொன்ன வம்பன், தீது எலாம் தீர — இப்படிப்பட்ட தீமையெலாம் தீரும்படியாக, அடியேனும் உமை நம்பினேன்—, தீரவந்து ஆளுதற்கு — அவைகள் தீரும்படி வந்து என்னை ஆள்

வதற்காக, மௌனம் எனும் மோன வடிவு உள்ள — மௌன நிலையென்று சொல்லும் மௌனவடிவுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — இறசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. குவலயம் — பூமண்டலம். மடையர் — மூடர். காயகற்பம் — உடம்பை யழியாதிருக்கச் செய்யும் மூலிகை முதலியவை. அவர் அந்த மெய் வேடம் பூண்ட அன்பர். (௧)

நெறியற்ற வம்பனல் லறிவற்ற வம்பனெதிர்
நிகரற்ற கொடிய வம்பன்
நிறையற்ற வம்பன்வரன் முறையற்ற வம்பன்வ
னெஞ்சனஞ் சாத வம்பன்
குறியற்ற வம்பனொரு சரியற்ற வம்பன்
குணக்கேட ஞன வம்பன்
கொடியரிற் சகசண்டி யானவம் பன்கெட்ட
கொலைபாவி யான வம்பன்
உறவற்ற வம்பன்மிகு வெறிபெற்ற வம்பனே
ஆர்க்குமா காத வம்பன்
உமதுபத மறியவடி யேனுமுமை நம்பினே
னுளமகிழ்ந் தாளு தற்கே
மறுகவலை யுறினுமுற வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. நெறியற்ற வம்பன் — நல்வழி யில்லாத வம்பன, நல் அறிவு அற்ற வம்பன் — நல்லறிவில்லாத வம்பன், எதிர் நிகர் அற்ற கொடிய வம்பன் — எதிருவமை யற்ற கொடிய வம்பன், நிறை அற்ற வம்பன் — நிறைவு இல்லாத வம்பன், வரன் முறை அற்ற வம்பன் — ஆதிகாலந் தொட்டு வரும் முறைமையற்ற வம்பன், வல் நெஞ்சன் அஞ்சாத வம்பன் — வலிய நெஞ்சை யுடையவனும் அஞ்சுத லில்லாத வம்பன், குறி அற்ற வம்பன் — ஒரு குறிப்பு யில்லாத வம்பன், ஒரு சரி அற்ற வம்பன் — ஒருவழியு மில்லாத வம்பன், குணம் கேடன் ஆனவம்பன் — குணமில்லாதவனுன வம்பன், கொடியரில் சகசண்டி ஆன வம்பன் — கொடியோர்களுக்குள்ளே சகசண்டியாகிய வம்பன், கெட்ட கொலைபாவி ஆன வம்பன் — கெடுதியுள்ள கொலைபாவி யான வம்பன், உறவு அற்ற வம்பன் — உறவில்லாத வம்பன், மிகு வெறி

பெற்ற வம்பன் — அதிக வெறியைக்கொண்ட வம்பன், ஓர் ஊருக்கும் ஆகாத வம்பன் — ஒரு ஆருக்கும் ஆகாத வம்பன், உமது பதம் அறிய — உமது திரு வடியறிய, அடியேனும் உமை நம்பினேன் —, உள்ளம் மகிழ்ந்து ஆளுத ற்கு—, மறுகவலை உறினும் உறவு உள்ள — வேறுகவலைகள் பொருந்தினும் உறவுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதார குணமுடைய, இறசூல் வருக — றசூல்என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்ப வரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. சரி — வழி. வெறி — பைத்தியம். (உ)

கல்லாத வம்பனறி வில்லாத வம்பனொரு
காசும் பெறாத வம்பன்
கடுவாயி னுங்கொடிய வம்பன் வெருட்டிக்
கடிக்குநா யான வம்பன்
பொல்லாத வம்பனுற வில்லாத வம்பன்
பொறுமையே கொண்ட வம்பன்
புன்மைகுடி கொண்டகெச போக்கிலிகள் சறுதாறு
போலுமுன் னேறு வம்பன்
மல்லாடு வம்பனசை பல்லாடு வம்பனிரு
மடையர்நடை யுடைய வம்பன்
வம்பெலா மகலவடி யேனுமுமை நம்பினேன்
மரபுதந் தாளுதற்கே
வல்லாண்மை யில்லாமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. கல்லாத வம்பன் — படிக்காத வம்பன், அறிவு இல்லாத வம் பன் — ஞானமில்லாத வம்பன், ஒருகாசும் பெறாத வம்பன் — ஒருகாசும் பெறாத வம்பன், கடுவாய் இன்னும் கொடிய வம்பன் — விஷமாய் அதனி னும் கொடுமையுடைய வம்பன், வெருட்டிக்கடிக்கும் நாய்ஆனவம்பன்—பயப் படுத்தி கடிக்கும் நாயான வம்பன், பொல்லாத வம்பன் — தீங்கையுடைய வம்பன், உறவு இல்லாத வம்பன் — உறவு இல்லாத வம்பன், பொறுமையே கொண்டவம்பன் — மனம் பொறுமையையே கொண்டிருக்கும் வம்பன், புன் மைகுடிகொண்ட — அற்பத்தன்மை குடிகொண்ட, கெச போக்கிலிகள் சறு தாறுபோலும் — கெஜபோக்கிலிகள் சறுதாறுபோல, முன் ஏறும் வம்பன்— முன்னே எதிர்செல்லும் வம்பன், மல் ஆடுவம்பன் — சண்டையிடும் வம்பன்,

அசைபல்லாடு வம்பன் — அசைபல்லாடு வம்பன், இருமடையர் நடையுடைய வம்பன் — பெரிய மடையர் நடத்தையையுடைய வம்பன், வம்பு எல்லாம் அகல — இப்படிப்பட்ட வம்புகளெல்லாம் நீங்க, அடியேனும் உமை நம்பினேன்—, மரபு — முறைமையை, தந்து ஆளுதற்கு—, வல் ஆண்மை இல்லாமை உள்ள — வலிய ஆண்மையில்லாமையுடைய, நீர் பின் தொடர — நீர்பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

(வி—ரை.) காசும் பெறாத — காசுக்கும் நிகராக மதிக்கப்பெறாத. கடு — விஷம். வெருட்டுதல் — அச்சுறுத்துதல். சறுதாறு — தலைவன். அசைபல்லாடு வம்பன் — அசைகின்ற பல்லைக் கடிக்கிற வம்பன். மரபு — நன்முறைமை. ()

அதிகப்பிர சங்கமே குடிகொண்ட வம்பனன்
பணுவுமில் லாத வம்பன்
அச்சமில் லாதவம் பன்றிட்டு நிட்டூர
வனியாய கார வம்பன்
கெதிகெட் டுருட்டுவம் பன்றிருட் டெருமைக்
கிடாவினு முரட்டு வம்பன்
கெண்டர்க்கு வண்டர்க்கு மிண்டவம் பன்சண்டை
கெக்கரிக் கொட்டு வம்பன்
விதிகெட்ட வம்பனிலை பதிவிட் டலைந்ததலை
விரிகோல மான வம்பன்
விடமெனா மொழியவடி யேனுமுமை நம்பினேன்
விரைவில்வந் தாளு தற்கே
வதலாள் விடாமலெனை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. அதிகப்பிரசங்கமே குடிகொண்ட வம்பன் — அதிகப் பிரசங்கஞ் செய்வதே குடிகொண்டவம்பன், அன்பு அணுவும் இல்லாத வம்பன் — அன்பானது அணுவளவேனு மில்லாத வம்பன், அச்சம் இல்லாத வம்பன் — பயம் என்ப திில்லாத வம்பன், திட்டு நிட்டூரம் அனியாயக்கார வம்பன் — தூஷித்தலும் நிஷ்டூரஞ் செய்தலும் அநியாயஞ் செய்தலுமுடைய வம்பன், கெதிகெட்டு உருட்டு வம்பன் — கெதிகெட்டுருட்டும் வம்பன், திருட்டு எருமைக்கிடாவினும் முரட்டு வம்பன் — திருட்டுத்தனமுடைய எருமைக்கடாவைப்பார்க்கிலும் முரட்டுத்தனமுடைய வம்பன், கெண்டர்க்கு வண்டர்க்கு

பிண்டவம்பன் — கெண்டர்க்கும் வண்டர்க்கும் மேற்பட்டவம்பன், சண்டை கெக்கரிக்கொட்டும் வம்பன் — சண்டைக்குக் கெக்கரிக் கொட்டும் வம்பன், விதிகெட்ட வம்பன் — விதியில்லாத வம்பன், நிலைபதிவிட்டு அலைந்த தலை விரிகோலம் ஆனவம்பன் — நிலைத்திருக்கும் பதியைவிட்டு அலைந்த தலைவிரி கோலமான வம்பன், விடம் எலாம் ஒழிய — விஷம்போன்ற தன்மையெல்லா மொழியும்படி, அடியேனும் உமை நம்பினேன் —, விரைவில் வந்து ஆளுத ற்கு வதலாள் விடாமல்—, என்னை உள்ள — என்னை யடிமையாக வுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகி யித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. அதிகப்பிரசங்கம் — உள்ளதுக்குமேலே பிரசங்கித்தல். கெண் டர் — துஷ்டர். வண்டர் — இடக்கரடக்க லில்லாதவர். கெக்கரிக் கொட்டு தல் — ஆரவாரித்தல். விதி — நியமம். (ச)

சதியா யிரஞ்செய்த வம்பனல் லிதமகித
சகசமறி யாத வம்பன்
றந்தைதாய் தம்மனதை நோவித்த வம்பன்
றாரதரங் கெட்ட வம்பன்
பதினா யிரந்தரஞ் சொல்லினுஞ் செவியுட்
படாதபிடி வாத வம்பன்
பாரவான் முதலான பேருமென் பேரையும்
பகரப் பயந்த வம்பன்
நிதிதேடு சீவச் சவங்கள்பட் சங்களே
நேசித்த தோஷி வம்பன்
நெரடெலாம் வளருமடி யேனுமுமை நம்பினே
னேயம்வைத் தாளு தம்கே
மதிதனிலு மதிகவொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. சதி ஆயிரம் செய்த வம்பன் — ஆயிரஞ் சதிகள் செய்த வம் பன், நல் இதம் அகிதசகசம் அறியாத வம்பன் — நல்ல இதம் அகிதம் என்ப வற்றின் சகசங்களை யறியாத வம்பன், தந்தை தாய் தம்மனதை நோவித்த வம்பன் — தந்தை தாய்களுடைய மனத்தை நோகச்செய்த வம்பன், தரா தரம்கெட்ட வம்பன் — தராதரமில்லாத வம்பன், பதினாயிரந்தரஞ் சொல்லி

னும் — பதினாயிரந்தரஞ் சொன்னபோதிலும், செவி உள்படாத பிடிவாத வம்பன் — செவியில் ஏற்றுக்கொள்ளாத பிடிவாதத்தை யுடையவம்பன், பாரவான் முதலிய பேரும் — பாரவான் முதலானவர்களும், என்பேரையும் பகரப் பயந்தவம்பன் — என்பேரையுங்கூடச் சொல்வதற்குப் பயப்படும்படியான வம்பன், நிதிதேடும் சீவம் சவங்கள் பட்சங்களே — பொருளைத்தேடும் உயிர்ப் பிணங்களின் பக்ஷங்களையே, நேசித்த தோஷி வம்பன் — விரும்பிய தோஷியான வம்பன், கொரடு எலாம் வளரும் — கொரடுக ளெல்லாம் விர்த்தியாகும், அடியேனு முமை நம்பினேன் நேயம் வைத்து ஆளுதற்கு—, மதிதனிலும் அதிக ஒளிவுள்ள — சந்திரனைக் காட்டிலும் அதிகபிரகாசமுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை— வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. சதி — வஞ்சனை. கெடுதி — தீங்கு. சகசம் — இயற்கை. தாரதம்— தாரதம்மியம். பிடிவாதம் — பற்றிவிடாது வாதித்தல். பாரவான் — ஒரு பெரிய துஷ்டன். (௯)

எண்சா ணுடம்புமொரு போதுமழியா தென்ற
வெண்ணமொழி யாத வம்பன்
ஏதுவந் தாலுமோ ரணுவிற்கு நிகரென்
றிடும்பைகள் பேசு வம்பன்
கண்சாடை கண்டுவில காதவம் பன்காசு
காசுகா சென்ற வம்பன்
கல்லுமொரு போதேனு முருகுமுரு காக்கருங்
கன்னெஞ்ச னான வம்பன்
பெண்சாதி பெண்சாதி பெண்சாதி யென்றே
பிதற்றுபேய் கொண்ட வம்பன்
பேயாட் டொழிக்கவடி யேனுமுமை நம்பினேன்
பிரியமுட னாளு தற்கே
வண்சீரு மென்சீரு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. எண் சாண் உடம்பும் ஒருபோதும் அழியாது என்ற — எட்டுச் சாணளவான உடம்பும் ஒருபோதும் அழியாது என்கிற, எண்ணம் ஒழியாத வம்பன் — எண்ணம் நீங்காத வம்பன், எது வந்தாலும் ஓர் அணுவிற்கு நிகர்

என்று—எது வந்தாலும் அது ஒரு அணுவுக்குச் சமானமென்று, இடும்பை கள் பேசும் வம்பன்—இடும்பைகளையே பேசும் வம்பன், கண்சாடை கண்டு விலகாத வம்பன்—கண்ணின் சாடையைக்கண்டு விலகிப்போகாத வம்பன், காசுகாசுகாசு என்ற வம்பன்—காசுகாசுகாசு என்று சொல்லுகிற வம்பன், கல்லும் ஒரு போதேனும் உருகும்—கல்லாயினும் ஒரு பொழுதாவது உருகும், உருகா கருங்கல் நெஞ்சன் ஆன வம்பன் — உருகாத கல்லைப்போல நெஞ்ச முடையவனான வம்பன், பெண்சாதி பெண்சாதி பெண்சாதி என்றே—, பிதற்று பேய் கொண்ட வம்பன்—பிதற்றுவதான பேய் பிடித்த வம்பன், பேய் ஆட்டு ஒழிக்க—இந்தப் பேயாட்டத்தை யொழிக்க, அடியேனும் உமை நம்பினேன் பிரியம் வைத்து ஆளுதற்கு—, வண் சீரும் எண் சீரும் உள்ள—உதாரத்துவமான சிறப்பும் எண்ணும்படியான சிறப்புமுடைய, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. கண்சாடை — கண்ணின் குறிப்பு. (௬)

அஞ்சாத வத்தொழி றன்னைப் புரியும் வம்பன்மா
வதிகாரி யான வம்பன்
ஆதரிக் காநின்ற பேர்களைத் தானே
யடுத்துக் கெடுத்த வம்பன்
பஞ்சமா பாதகம் முதலான தீதகம்
பயமறச் செய்த வம்பன்
பட்சம் வைத்தோர்தமக் கிச்சைமிக வோதிப்
பணம்பறிக் கின்ற வம்பன்
நஞ்செலா மொன்றாய்த் திரண்டுரு வெடுத்தநெடு
நாசச் சரீர வம்பன்
நாயினுங் கொடியவடி யேனுமுமை நம்பினே
னேட்டம் வைத்தாளு தற்கே
வஞ்சகம னுக்குநஞ் சுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. அஞ்சாது அவத் தொழில் தன்னைப் புரியும் வம்பன் — பயப் படாமல் வீணான தொழிலைச் செய்யும் வம்பன், மா அதிகாரியான வம் பன் —(வம்பர்களில்) பெரிய அதிகாரியான வம்பன், ஆதரிக்காநின்ற பேர்

களைத்தானே – ஆதரித்துக் கொண்டிருக்கு மவர்களைத்தானே, அடுத்து கெடுத்த வம்பன் – சேர்ந்து கெடுத்த வம்பன், பஞ்சமா பாதகம் முதலான தீது – பஞ்சமா பாதகம் முதலான தீமைகளை, அகம் பயம் அற செய்த வம்பன் – மனத்தில் பயமில்லாமல் செய்த வம்பன், பட்சம் வைத்தோர் தமக்கு – பிரீதிவைத்தவர்களுக்கு, இச்சை மிக ஓதி பணம் பறிக்கின்ற வம்பன் – அதிக ஆசையைச்சொல்லி (அவர்களிடத்தில்) பணத்தைப் பறிக்கின்ற வம்பன், நஞ்சு எல்லாம் ஒன்றாய்த் திரண்டு உருவு எடுத்த – விஷமெல்லாங் கூடி ஒன்றாகத்திரண்டு உருவெடுத்ததுபோல, கெடும் நாசம் சரீரம் வம்பன் – கெடுதியான நாசமடையும் சரீரத்தை யுடைய வம்பன், நாயினும் கொடிய – நாயைக் காட்டிலும் கொடுந் தன்மையுடைய, அடியேனும் உம்மை நம்பினேன் –, நாட்டம் வைத்து ஆளுதற்கு – அருட்கண் வைத்து ஆள்வதற்காக, வஞ்சம் சமனுக்கு நஞ்சு உள்ள – வஞ்சனையுள்ள யமனுக்கு விஷம்போல இருக்கும், நீர் பின் தொடர – நீர் பின் தொடரும் படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை – வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் – குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே – எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்டகையே. எ - று.

வி—ரை. அவத்தொழில் – வீண்செயல்கள். பஞ்சமாபாதகம் – ஐந்து பெரும் பாவங்கள்; அவை: திருடல், கொலைசெய்தல், கள்ளுண்டல், புலாலுண்டல், பிறனில்விழைதல் என்பன. (எ)

தையலர்க ளாசையெனு மையலில் விடாய்கொண்டு
 தாகித் தலைந்த வம்பன்
சாகா வரம்பெற்ற தேகத்த ளுனென்று
 தலைகெட்டு நின்ற வம்பன்
மெய்யாக வையகத் தாரெனக் கீடென்று
 வீண்மதம் பேசும் வம்பன்
வெறிகொண்ட நாய்போலும் வள்ளுவள் ளென்றியார்
 மேலும்விழு கின்ற வம்பன்
செய்யாத செய்கையே செய்தவம் பன்பொய்த்த
 சிற்றின்ப முற்ற வம்பன்
தீயும் பயந்தவடி யேனுமுமை நம்பினேன்
 சித்தம்வைத் தாளு தற்கே
வையமுழு துக்குமணை வள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித்தீனே,

ப-ரை. தையலர்கள் ஆசை என்னும் மையலில் — பெண்கள் ஆசை யென்னும் மயக்கத்தில், விடாய்கொண்டு தாகித்து அலைந்தவம்பன் — ஆசை கொண்டு தபித்து அலைந்த வம்பன், சாகாவரம் பெற்ற தேகத்தன் நான் என்று — சாகாத வரத்தைப்பெற்ற தேகத்தை யுடையவன் நானேயென்று, தலைகெட்டு நின்ற வம்பன் — தலை தடுமாறி நின்ற வம்பன், மெய்யாக வைய கத்து ஆர் எனக்கு ஈடு என்று—உண்மையாகப் பூமியில் யார் எனக்குச் சமான மென்றுசொல்லி, வீண்மதம் பேசும் வம்பன் — வீண் மதமான சொற்களைப் பேசும் வம்பன், வெறிகொண்ட நாய்போலும்—பயித்தியங்கொண்ட நாயைப் போல, வள்ளு வள்ளு என்று யார்மேலும் விழுகின்ற வம்பன் — வள்ளு வள்ளு என்று குலைத்துக்கொண்டு எல்லார் பேரிலும் விழுகின்ற வம்பன், செய் யாத செய்கையே செய்த வம்பன்—செய்யப்படாத செய்கைகளையே செய்த வம்பன், பொய்த்த சிற்றின்பம் உற்ற வம்பன் — பொய்யான சிற்றின்பம் பொருந்திய வம்பன், தீயும் பயந்த — நெருப்பும் பயமடைந்த, அடியேனும் உம்மை நம்பினேன் சித்தம் வைத்து ஆளுதற்கு—, வையம் முழுதுக்கும் அணைவு உள்ள — உலகம் முழுமைக்கும் அணைத்துக் காத்தலையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை— வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இரு கண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. தையலர்கள் — பெண்கள், (அலங்கரிக்கப்பட்டவர்கள்.) செய் யாத செய்கை — கொடிய செய்கை. தீயும் பயந்த — நெருப்பும் பயப்படுதற் குரிய (மிகக்கொடிய.) (அ)

கேடெலாங் கூடித் திரண்டுருந் தொண்டுருடி
　　கேடட லெடுத்த வம்பன்
கேட்டபேர் கண்டபேர் காதுகண் ணேறெடுந்
　　கின்றவடி யுண்ட வம்பன்
நாடெலா மிவனையு நாடலா மோவென்று
　　நகையாட லுண்ட வம்பன்
நாடோறு மாடுபோ லோடோடி யேதின்று
　　நாவுருசி கண்ட வம்பன்
மேடுமுட் டத்துருக் திங்குட் பருந்தைமிக
　　வெட்டியே வீசு வம்பன்
மெத்தவும் புற்றவடி யேனுமுமை நம்பினேன்
　　மேன்மைதந் தாளு தற்கே
மாடப்ப ஜம்பநடை யுள்ளநீர் பின்றொடர
　　வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. கேடு எல்லாம் கூடி திரண்டு உருகொண்டு — தீமைகளெல்லாம் கூடித்திரண்டு ஓருருவங்கொண்டு, குடிகேடு உடல் எடுத்த வம்பன்— குடிகெடுவதற் கிடமான சரீரத்தைக் கொண்ட வம்பன், கேட்டபேர் கண்டபேர் — கேட்டவர்களாலுங் கண்டவர்களாலும், காது கண் நோ எடுக்கின்ற அடி உண்ட வம்பன் — காதும் கண்ணும் நோயெடுக்கின்ற அடியை யுண்ட வம்பன்; நாடு எலாம் இவனையும் நாடலாமோ என்று — நாட்டிலுள்ளவர்களெல்லாம் இவனையும் நினைக்கலாமோ வென்று, நகையாடல் உண்ட வம்பன் — சிரித்தலையுண்ட வம்பன், நாள்தோறும் மாடுபோல் ஓடோடியே நின்று — நாள்தோறும் மாட்டைப்போல ஓடோடித் திரிந்து மேய்ந்து, நா உருசிகண்ட வம்பன் — நாக்கின் ருசியைக் கண்ட வம்பன், மேடுமுட்ட துருத்திக்குள் பருக்கை மிகவெட்டியே வீசவம்பன் — முகடு முட்டத் துருத்திக்குள்ளே சோற்றை மிகுதியாக எடுத்துத் துறத்துகின்ற வம்பன், மெத்த வம்பு உற்ற — அதிக வம்புகளையுடைய, அடியேனும் உம்மை நம்பினேன் மேன்மைதந்து ஆளுதற்கு—, மாடம்ப ஜம்ப நடையுள்ள — பெரிய டாம்பீகமான ஜம்பத்தையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள்நிறைந்த, குணங்குடி வாழும்- குணங்குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பஞ்ச பூதங்களா லெடுக்கப்பட்ட தன்றென்றற்கு, 'கேடெலாங் கூடித் திரண்டுருக்கொண்டு குடிகேடெ டெலடுத்த வம்பன்' என்றும், நல்லோருடைய காதுகளுக்கும் கண்களுக்கும் தீயோருடைய சரித்திரத்தைக் கேட்டலாலும் காண்டலாலும் உபத்திரவமுண்டாம் என்பது தோன்ற 'கேட்டபேர் கண்டபேர் கண்ணோ வெடுக்கின்ற வம்பன்' என்றும் கூறினர். (க)

தாயாதி முதலன்னை சுற்றங் கடம்மையுந்
சாரா தடித்த வம்பன்
தானதரு மங்களுந் தீறுதரு மங்களை
சாட்டிக் கெடுத்த வம்பன்
பேயாய்ப் பிடித்து வெறிநாயாய்க் கடித்துப்
பிடாரிபோ லலையும் வம்பன்
பிருநா னென்னவுப தேசங்கள் கூறினிலே
பேசித் திரிந்த வம்பன்
தூயமகு முதுநபி பாதமல ரைச்சென்னி
சூட்டறிவின் மோட்டு வம்பன்

துறவெய்த லெய்தவடி யேனுமுமை நம்பினேன்
சொன்னபடி யாளு தற்கே
மாயோக சித்திநெறி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. தாயாதி முதல் அன்னை சுற்றங்கள் தம்மையும் — தாயாதிகளாகிய தகப்பன் சுற்றம் முதல் தாய் சுற்றங்களையும், சாராது அடித்த வம்பன் — சேராமல் அடித்த வம்பன், தான தருமங்களுக்கு — தான தருமங்களுக்காக, ஈன தருமங்களே சாட்டி கெடுத்த வம்பன் — ஈனமான தருமங்களையே சாட்டிக் கெடுதி யுண்டாக்கிய வம்பன், பேய் ஆய் பிடித்து - பேயைப்போலப்பிடித்து, வெறி நாய் ஆய் கடித்து—வெறிகொண்ட நாயைப் போலக் கடித்து, பிடாரிபோல் அலையும் வம்பன் — பிடாரியைப் போல அலையும்வம்பன், பீரு நான் என்ன உபதேசங்கள் கூறி — நான் பீரு என்று உபதேசங்கள் சொல்லி, விலைபேசி திரிந்த வம்பன் — விலை பேசிக்கொண்டு திரிந்த வம்பன், தூயமகுமூது நபிபாதம் மலரை — பரிசுத்தராகிய மகுமூது நபியின் பாதங்களாகிய மலரை, சென்னி சூட்டு அறிவு இல் மோட்டு வம்பன் — சிரத்தில் சூட்டிக்கொள்ளும் அறிவில்லாத வம்பன், துறவு எய்தல் எய்த — துறவறங் கொள்ளுதலை யடையும்படி, அடியேனும் உம்மை நம்பினேன்—, சொன்னபடி ஆளுதற்கு — நான் கேட்டுக்கொண்டபடி ஆள்வதற்காக, மாயோக சித்தி நெறி உள்ள — பெரிய யோகசித்தி மார்க்கத்தையுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. சாட்டி — சமமாக்கி. (ஒப்பித்து) பிடாரி — கிராமதேவதை. பீரு — பெரியோன் (உபதேசி.) யோகசித்தி — யோகப்பலிப்பு. (௪௦)

ஆக பாடல் - 74.

பொருளிற்கு வேறுப் போந்தநா னென்னு
மருளை யத்தை மறக்கும் பவத்
திபங்கா முலவா தெங்குமில் லாது
வழங்கா தகற்றுக வள்ளலென் றிரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

வேதாந்த சாரமே சாரமென் றறியாது
வீணு டொலைத்த பாவி
மேன்மேலு மெய்ஞ்ஞான வின்பமணு காதபாழ்
மெய்ம்மைமெய் யென்ற பாவி
சோதிப்பிர காசச் சுயஞ்சோதி யணுகத்
தொழுந்துறைக ளற்ற பாவி
சுநிட்டை பாராத விழியெனு முகத்திலிரு
தொள்ளையொ டிருந்த பாவி
கோதிலும தடிபணிகி லாதசிர மென்றகற்
குன்றைச் சுமந்த பாவி
கொடியமா பாவியடி யேனுமுமை நம்பினேன்
குடியிருந் தாளு தற்கே
மாதவ வபேதநிலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. வேதாந்த சாரமே சாரமென்று அறியாது — வேதாந்தத்தின் சாரமே சாரமான தென்றறியாமல், வீண் நாள் தொலைத்த பாவி — வீணாக நாளைத் தொலைத்த பாவி, மேன்மேலும் மெய்ஞ்ஞான இன்பம் அணுகாத- மேன்மேலும் மெய்ஞ்ஞான இன்பத்தைச்சேராத, பாழ் — பாழான மெய்யை மெய் என்ற பாவி — மெய்யை மெய் என்று சொன்ன பாவி, சோதிபிரகாச சுயம் சோதி அணுக — மிக்க பிரகாசமாய் சுயஞ்சோதியானது கிட்டும்படி, தொழும் துறைகள் அற்ற பாவி — தொழவேண்டிய துறைகளில்லாதபாவி, சுகநிட்டைபாராத விழி என்னும் — சுகநிஷ்டையைக்காணாத கண்களென்று சொல்லும், முகத்தில் இருதொள்ளையொடு இருந்தபாவி — முகத்திலுள்ள இரண்டு தொளைகளோடிருந்தபாவி, கோது இல் உமது அடி பணிகிலாத - குற்றமில்லாத உமது திருவடியைப்பணியாத, சிரசு என்ற கல் குன்றை சுமந்தபாவி — தலை யென்கிற கல்மலையைச் சுமந்தபாவி, கொடியமாபாவி- கொடிய மஹா பாவியான, அடியேனும் உம்மை நம்பினேன்—, குடியிருந்து ஆளுதற்கு - என்னிடத்திற் குடியிருந் தாள்வதற்காக, மாதவ

அபேத நிலை உள்ள — பெருந்தவத்தால் அபேத நிலையையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்வரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. வேதாந்தசாரம்—வேதமுடிவின்சாரம் (சாரம்—பயன்.) தொலைத்தல் — கழித்தல். மெய் — உடம்பு. பொய்யாகிய உடம்பை மெய்யென்றது மங்கல வழக்கு. துறைகள் — வழிகள். தொள்ளை — தொளை. "கோளில் பொறியிற்குண மிலவே யெண்குணத்தான் — தாளை வணங்காத்தலை" எனப் பிற அறிஞர் கூறுதலால் இவரும், 'அடிபணிகிலாத சிரசென்ற கற்குன்று' என்றார். அபேதநிலை — வேற்றுமையில்லாதநிலை. (௪)

மட்டிகளி லுங்கெட்ட சுட்டிவால் வெட்டிபேய்
மட்டைரட் டித்த பாவி
வஞ்சகம லுங்குவா ரிக்கொடுத் திடவுடலை
வளமாய் வளர்த்த பாவி
சட்டிவைத் துச்சட்டி வாங்கும் பெருந்தொப்பை
சற்றும்வடி யாத பாவி
சண்டாள ருக்குமா சண்டாள ருக்குமா
சண்டாள னான பாவி
பொட்டையிபு லீசுகைக் குட்பட்ட பாவியொரு
போக்குநீக் கற்ற பாவி
போதாத பாவியடி யேனுமுமை நம்பினேன்
பொய்மைதீர்த் தாளு தற்கே
வட்டமதி வெட்குமுக முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. மட்டிகளினும் கெட்ட சுட்டி வால் வெட்டி பேய் மட்டை ரட்டித்தபாவி — மட்டிகளுள்ளும் கெட்ட சுட்டியும் வால் வெட்டியும் பேய் மட்டை ரட்டித்ததுமாகியபாவி, வஞ்சம் நமனுக்கு வாரிகொடுத்திட — வஞ்சனையுடைய யமனுக்கு வாரிக்கொடுத்துவிட, உடலை வளமாய் வளர்த்த பாவி — சரீரத்தை வளப்பமுடன் வளர்த்தபாவி, சட்டிவைத்து சட்டிவாங்கும் — சட்டியையேந்திச் சட்டிநிறையச் சோறுவாங்கும், பெரும் தொப்பை சற்றும் வடியாதபாவி — பெரிய தொந்தி சிறிதேனும் வாடாதபாவி, சண்டாளருக்கும் மாசண்டாளருக்கும் மாசண்டாளனான பாவி — சண்டாளருக்

கும் பெருஞ்சண்டாளருக்கும் பெருஞ்சண்டாளனுனபாவி, பொட்டை இபுலீசுகைக்கு உள்பட்டபாவி — பொட்டையான இபுலீசு வசமான பாவி, ஒருபோக்குநீக்கு அற்றபாவி — ஒருபோக்கும் நீக்குமில்லாத பாவி, போதாதபாவி — போதாதபாவி, அடியேனும் உம்மை நம்பினேன் பொய்மைதீர்த்து ஆளுதற்கு—, வட்டம் மதிவெட்கும் முகம் உள்ள — வட்டமான சந்திரன் வெட்க மடையும்படியான முகத்தையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. மட்டி — நிர்மூடன். சுட்டி — துஷ்டன். வால்வெட்டி — வால் வெட்டுண்ட நாய்போன்றவன். பேய்மட்டை ரட்டித்தபாவி — பேய் பிடித்த மடையனிலும் இரட்டைப்பங்கு அதிகமான மடையன். வடியாத — தொப்யாத. சண்டாளர் — நீசர். பொட்டை இபுலீசு — பொட்டை முண்டை. (பெண்) போதாத — சரண்புகுதாத. இது புகுதாத என்பதன் மரூஉ. வட்டம — யென்றதனுல் பூர்ணசந்திரன் எனக்கொள்க. என்னை? வெட்கு முகம் என்றதனுலென்க. (உ)

நாசச் சரீரத்தை நானு னெனக்குழறு
    நாசம் பிடித்த பாவி
  நானு விதங்கட்கு மேலான பாவியா
    னற்றவமு மற்ற பாவி
கூசாத பாவிவாய் பேசாத பாவிமா
    கோபம் படைத்த பாவி
  கொலைபாவி கொலைபாவி கொலைபாவி கோடானு
    கோடிகொலை செய்த பாவி
வேசியர்க ளாசையினை யகலாத பாவிதீ
    வினையுமக லாத பாவி
  வீணான பாவியடி யேனுமுமை நம்பினேன்
    மெய்மைதந் தாளு தற்கே
வாசாம கோசரத் துள்ளநீர் பின்றொடர
    வள்ளலிற சூல்வ ருகவே
  வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
    மணியே முகியித் தீனே.

ப—ரை. நாசம் சரீரத்தை — நாசமடையுஞ் சரீரத்தை, நான் நான் என குளறு — நான் நான் என்று குழறும், நாசம் பிடித்தபாவி — நாசங்கொண்ட

பாவி, நானாவிதங்கட்கு மேலான பாவியான் — பலவிதங்களுக்கும் மேலான பாவி நான், நல்தவமும் அற்றபாவி — நல்லதவமு மில்லாதபாவி, கூசாத பாவி — கூசமடையாத பாவி, வாய் பேசாத பாவி — வாயால் பேசாத பாவி, மாகோபம் படைத்தபாவி — பெரிய கோபங்கொண்டபாவி, கொலை பாவி - கொலைபாவி, கோடானுகோடி கொலைசெய்த பாவி—, வேசியர்கள் ஆசையினை அகலாதபாவி — வேசியர்கள் விஷயத்தில் ஆசைசெய்தலை விடாத பாவி, தீவினையும் அகலாத பாவி — தீவினையும் நீங்காத பாவி, வீணனபாவி அடியேனும் உமை நம்பினேன் மெய்ம்மைதந்து ஆளுதற்கு—, வாசாம் அ காசரத்து உள்ள — வாயினாலே சொல்லிப் புலப்படாத நிலையிலுள்ள, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இற சூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை - வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. நாசம் — அழிவு. நானாவிதங்கட்கு மேலானபாவி — பலவகைப் பாவங்களைச் செய்தலினுஞ் சிறந்தபாவி. கூசாத — தீவினை செய்தற்கஞ் சாத. (கூ)

பிரியாத பேரின்ப வனுபூதி யாசைப்
பிறப்புமறி யாத பாவி
பிரபஞ்ச வுறவைநெஞ் சம்மஞ்சி னோர்கடம்
பின்சென்றி டாத பாவி
அருமையா யறிகுறிக ளத்தனையு மெற்றிநல்
லறிகுறிக ளற்ற பாவி
அந்தகா ரத்தையே புந்தியுட் கொண்டுவெறு
மஞ்ஞானி யான பாவி
நரசென்ம மாகியும் நரர்குணங் கனவினிலு
நாடியறி யாத பாவி
நலமற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னன்புதந் தாளு தற்கே
வருகவலை யேகவழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. பிரியாத பேரின்ப அனுபூதி — நீங்காத பேரின்ப அனுபூதியில், ஆசைப்பிறப்பும் அறியாத பாவி — ஆசையுண்டாவது மறியாத பாவி, பிரபஞ்ச உறவை நெஞ்சம் அஞ்சினோர்கள் தம் — பிரபஞ்சத்தி னுறவை

நெஞ்சத்தில் அஞ்சினவர்களை, பின் சென்றிடாத பாவி — பின் செல்லாத பாவி, அருமையாய் அறிகுறிகள் அத்தனையும் எற்றி — அருமையாய் அறிகுறிக ளத்தனையும் கடந்து, நல் அறிகுறிகள் அற்ற பாவி — நல்ல அறிகுறிகளில்லாத பாவி, அந்தகாரத்தையே புந்தியுள்கொண்டு — இருட்டையே மனத்திற்கொண்டு, வெறும் அஞ்ஞானியான பாவி — வெறுமையான அஞ்ஞானியாகிய பாவி, நரசென்மம் ஆகியும் — நரசென்மமாகப் பிறந்தும், நரர்குணம் கனவினிலும்நாடி அறியாதபாவி — நரர்குணத்தைக் கனவிலும் விசாரித் தறிந்து கொள்ளாத பாவி, நலம் அற்றபாவி — நன்மையில்லாத பாவி, அடியேனும் உம்மை நம்பினேன் —, நண்புதந்து ஆளுதற்கு — உமது சிநேகத்தைத்தந்து ஆள்வதற்காக, வரு கவலை எக வழி உள்ள — வரும் கவலை போதற்குரிய மார்க்கத்தையுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்வரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டவையே. எ-று.

வி—ரை. பேரின்ப அநுபூதி — பேரானந்தாநுபவம். பிறப்பு — உற்பத்தியும். பிரபஞ்சம் — உலகம். அஞ்சினோர்கள் — வெறுத்தவர்கள். அறிகுறிகள் - அடையாளங்கள். எற்றுதல் — எறிதல் (வீசுதல்.) அந்தகாரம் — அஞ்ஞான இருட்டு. நரசென்மமாகியும் என்றதில் உம்மை மானிடப் பிறவியின் உயர்வைச் சிறப்பித்தலால் உயர்வுசிறப்பு. நரர்குணம் — முத்தியடைதற் கேதுவாகிய சமதமாதி ஆத்மகுணங்கள். கனவிலும் என்றதில் உம்மை நனவிலேயன்றி யெனப் பொருள் தருதலால் இறந்ததழீஇயது. (௯)

தேகாதி யகிலப்பிர பஞ்சமது பொய்யென்று
தேர்ந்தறிவி லாத பாவி
தீபாவி தீபாவி தீபாவி தீபாவி
திவ்வியகுண மற்ற பாவி
மாகவலை குடிகொண்ட பாவிவம் பாகவே
வாதாடு கின்ற பாவி
மாயப் பசாசுகொண் டலைபாவி வீணாக
வாழ்நாள் கழித்த பாவி
ஆகாத பாவியா னாகாத பாவியா
னார்க்குமா காத பாவி
அளவற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னண்டலைக் காளு தற்கே

வாகுவழி யேகவொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. தேக ஆதி அகில பிரபஞ்சம் அது — சரீரம் முதலிய எல்லா வுலகமும், பொய் என்று தேர்ந்து அறிவு இல்லாத பாவி — பொய்யென் றறிந்தும் அறிவில்லாதபாவி, தீபாவி தீபாவி தீபாவி தீபாவி — நெருப்பைப் போல கொடுமையுள்ள பாவி, திவ்விய குணம் அற்ற பாவி — நல்ல குண மில்லாதபாவி, மாகவலை குடிகொண்ட பாவி — பெருங்கவலை குடிகொண்ட பாவி, வம்பு ஆகவே வாது ஆடுகின்ற பாவி — வம்புக்காகவே வாதுசெய் கின்ற பாவி, மாயம் பசாசுகொண்டு அலைபாவி — மாயமாகிய பசாசுபிடித்து அலையும் பாவி, வீணாக வாழ்நாள் அகழித்தபாவி — வீணாகவே ஆயுள் நாளைக் கழித்த பாவி, நான் ஆகாத பாவி நான் ஆகாத பாவி—, ஆர்க்கும் ஆகாத பாவி—, அளவு அற்ற பாவி — கணக்கற்ற பாவத்தையுடையேனாகிய, அடி யேனும் உம்மை நம்பினேன்—, ஆண்டு அணைத்து ஆளுதற்கு — அடிமை கொண்டு ஆதரித்து ஆள்வதற்காக, வாகுவழி ஏக ஒளி உள்ள — நல்ல மார்க் கத்திற் செல்லுதற்காகப் பிரகாசமுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்ப வர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண் டகையே. எ—று.

வி—ரை. தேகாதி யகிலப் பிரபஞ்சம் என்றது தநுகரண புவன போகங்களை. வாகு — அழகு; அது இங்கு நன்மை யென்னும் பொருளில் வந்தது. (கூ)

மெய்யான பொய்யுடலை மெய்யென்று மெய்யான
மெய்யறிவு கெட்ட பாவி
மெய்யான மெய்யேது மறியாத பொய்யான
மெய்யைப் படைத்த பாவி
பொய்யான தையலரை யையோ வணைந்தசுக
போகமோ கித்த பாவி
பொய்யான புலையான கொலையான மலையான
பொய்த்தமொழி கற்ற பாவி
வையாத வையாசை யானதீ யானமா
மாயை குடிகொண்ட பாவி

மாகொடும் பாவியடி யேனுமுமை நம்பினேன்
வந்திருந் தாளு தற்கே
வையவிழி மையவெளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. மெய் ஆன பொய் உடலை மெய் என்று — மெய் என்னும் பெயரையுடைய பொய்யான சரீரத்தை மெய்யானதென்று, மெய் ஆன மெய் அறிவுகெட்ட பாவி — உண்மையான உண்மை யறிவில்லாத பாவி, மெய் ஆன மெய் எதும் அறியாத — உண்மையான உண்மையென்று மறியாத, பொய் ஆன மெய்யை படைத்தபாவி — பொய்யான சரீரத்தையுடைய பாவி, பொய் ஆன தையலரை ஞயோ அணைக்க — பொய்யான பெண்களை ஞயோ அணைப்பதற்காக, சுகபோகம் மோகித்த பாவி — சுகமான போகத்தில் மோகங்கொண்ட பாவி, பொய் ஆன புலை ஆன கொலை ஆன மலை ஆன — பொய்மையானதும் நீசமானதும் கொலைத்தன்மை யுள்ளதும் பெரிதானதுமான, பொய்த்த மொழி கற்றபாவி — பொய்யான சொற்கள் கற்ற பாவி, வையாத வைய ஆசையான — வெறுக்காத உலகத்தாசையாகிய, தீஆன மாமாயை குடிகொண்ட பாவி — நெருப்பைப் போன்றதான பெரிய மாயை குடிகொண்ட பாவி, மாகொடும்பாவி — பெரிய கொடிய பாவி, அடியேனும் உம்மை நம்பினேன் வந்திருந்து ஆளுதற்கு—, வைய விழிமைய வெளி உள்ள — கூர்மையாகிய கண்களை நடுவெளியில் வைத்த, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. எதும் — சிறிதும். அணைத்தல் — தழுவுதல். புலை - நீசத்தன்மை. உலகத்துப் பொருள்க ளெல்லாவற்றுள்ளும் மலைபெரிதாதலால், 'மலையான' என்பதற்குப் பெரிதான எனப் பொருளுரைக்கலாயிற்று. வைய + ஆசை = வையாசை என நிலைமொழி யீற்றகரம் தொகுத்தல் பெற்றது. வைய விழி யென்பதில் 'வைய' என்பது வை என்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். வை — கூர்மை. இது கண்ணுக்கு இயற்கையடை, மையவெளி — உச்சிநடுவெளி. மையம் — நடு. (சு)

பசுபாச வாசவினை யென்றவெறி கொண்டலை
பசாசாடு கின்ற பாவி
பால்பழங் கற்கண்டு சர்க்கரைகண் மொக்கியும்
பட்டமர மான பாவி

விசனமொடு துக்கமே குடிகொண்ட பாவிபொய்
வேடந் தரித்த பாவி
வித்தகன் திருவடி தனைத்தொழுது தொழுதழுது
மெய்யருளுறாத பாவி
நிசமாக வசைபேசு வார்கள்வாய் தன்னிலே
நிதமா யிருந்த பாவி
நிலையற்ற பாவியடி யேனுமுமை நம்பினேன்
நேயம்வைத் தாளுதற்கே
வசியமன வாசிவச முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. பசுபாசம் வாச வினை என்ற — பசுபாசம் வாசமான வினை என்கிற, வெறிகொண்டு அலை பசாசு ஆடுகின்ற பாவி — வெறிகொண்டலையும் பசாசாக ஆடுகின்றபாவி, பால் பழம் கற்கண்டு சர்க்கரைகள் மொக்கியும் — பாலும் பழமும் கற்கண்டும் சர்க்கரையும் ஆகிய இவைகளை விசேஷமாக உண்டும், பட்டமரம் ஆனபாவி — பட்டமரம் போலான பாவி, விசனமொடு துக்கமே குடிகொண்ட பாவி — விசனத்துடன் துக்கமே குடிகொண்ட பாவி, பொய்வேடம் தரித்தபாவி -- பொய்யான வேஷங்கொண்ட பாவி, வித்தகன் திருவடிதனை தொழுது — ஆண்டவருடைய திருவடியைத் தொழுது, தொழுது அழுது — வணங்கி யழுது, மெய் அருள் உறாதபாவி - உண்மையான அருளைப்பெறாத பாவி, நிசமாக வசை பேசுவார்கள் வாய் தன்னிலே — உண்மையான நிந்தை பேசுவார்கள் வாயிலே, நிதமாய் இருந்த பாவி — எப்போது மிருந்த பாவி, நிலை அற்றபாவி — நிலையில்லாதபாவி, அடியேனும் உம்மை நம்பினேன் நேயம் வைத்து ஆளுதற்கு—, வசியமன வாசி வசம் உள்ள — கைவசமான மனமாகிய குதிரையை வசமாகக் கொண்டிருக்கும், நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. பசுபாசம் — சீவர்களுடைய ஆசை. வாசம் — பழக்கம். பிற கனிகளுள வாயினும் பால் என்றதை யடுத்து வந்தமையால் பழம் என்றது வாழைக்கனியை யென்றறிக. பட்டமரம் — பசுமையற் றுலர்ந்தமரம், விசனம் — சிறுதுன்பம். துக்கம் - பெருந்துன்பம். பொய்வேடம் — பிறரை வஞ்சித்தற் பொருட்டுப் பூண்ட காஷாயாதி சின்னங்களோடு கூடிய பொய் வேஷம். வசை பேசுவார்கள் வாய்தன்னிலே நிதமா யிருத்தலாவது — நிர்

திப்பவர்கள் வாய்க்கு விஷயமாய் அவர்களால் எப்பொழுதும் நிந்திக்கப் படுதல். 'மனவாசிவசம் உள்ள' என்பதற்கு மனமும் வாயுவும் வசமாகப் பெற்ற என்றுரைத்தலும் பொருந்தும். (எ)

இதமகித மென்றவினை யுங்கொண்டலைந்துசிற்
றின்பவேம் புண்ட பாவி
எண்சா ணுடம்புவெறு நஞ்சான பாவிபே
ரின்பமணை யாத பாவி
பதமற்ற பாவிபக் கீறுதறி தலைமொட்டை
பரதேசி யான பாவி
பாவிப் பிணங்களைப் பாடித் துதித்துப்
பணம்பறிக் கின்ற பாவி
சதிகெடும் பாழாக்கு மதிகெடும் பாவிபொய்ச்
சத்தியஞ் செய்த பாவி
சர்ப்பநிகர் பாவியடி யேனுமுமை நம்பினேன்
சாரிவந் தாளு தற்கே
மதினமுத லும்வாச முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருநபே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. இதம் அகிதம் என்ற வினையுங்கொண்டு அலைந்து — இதம் அகிதம் என்கிற வினையுங் கொண்டலைந்து, சிற்றின்ப வேம்பு உண்டபாவி - சிற்றின்பமாகிய வேம்பை யுண்டபாவி, எண்சாண் உடம்பும் வெறும் நஞ்சு ஆன பாவி — எட்டுச் சாணளவான சரீரமும் வெறும் விஷம்போலான பாவி, பேர் இன்பம் அணையாத பாவி — பேரின்பத்தைச் சேராத பாவி, பதம் அற்ற பாவி — பதமில்லாத பாவி, பக்கீறுதறிதலை மொட்டை பரதேசி ஆன பாவி — பக்கீறும் தறிதலையும் தலைமொட்டையும் பரதேசியுமான பாவி, பிணங்களை பாடி துதித்து — பாவிகளான பிணங்களைப் பாடித் துதித்து, பணம் பறிக்கின்ற பாவி — பணம் பறிக்கிறபாவி, சதிகெடும் பாழ் ஆக்கும் மதிகெடும் பாவி — வஞ்சனையும் கெடும்பாழு முண்டாக்கும் மதிகெட்ட பாவி, பொய் சத்தியம் செய்த பாவி—, சர்ப்பம் நிகர் பாவி — பாம்பை யொத்த பாவி, அடியேனும் உம்மை நம்பினேன்—, சாரிவந்து ஆளுதற்கு — உலாவிவந்து என்னை யாள்வதற்காக, மதினம் முதலும் வாசம் உள்ள — மதின முதலான தலங்களிலும் எழுந்தருளியிருக்கிற, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என்

இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. அலைதல் — திரிதல். பேரின்பமாகிய அமிர்தத்தை நோக்க, சிற்றின்பம் கசக்குமாதலால் 'சிற்றின்பவேம்பு' என்றார். எண்சாணுடம்பும், என்பதில் உம்மை எஞ்சாமைப் பொருளாதலால் முற்றும்மை. பதம் - பக்குவம், தறிதலை — உடற்குறை, (கபந்தம்.) பாவிப் பிணங்கள் என்றது உலோபர்களை. பணம் பறித்தல் — பணம் பிடுங்குதல். சாரிவருதல் — உலாவி வருதல். மதீனம் என்பது மதினம் எனக் குறுகிற்று; இது ஒரு பெரிய புண்ணியதலம். மக்கநகரமும் இதுபோல்வது. (அ)

கைக்குள்வெண் ணெயைவைத்து நெய்க்கழுத பாவிகலை
கற்றுமறி வற்ற பாவி
கற்பக விருக்ஷத்தி னடியிலே காஞ்சிரங்
காய்தேடி நின்ற பாவி
கொக்குப் பிடிக்கநாய்க் குத்தெரியு மோவென்ற
கொள்கைகுடி கொண்ட பாவி
குருடர்களி யானையைக் கண்டகதை போலசற்
குருவையறி யாத பாவி
சர்க்கரை கரும்புகற் கண்டமு திருக்கக்
கசங்குடிக் கின்ற பாவி
தலைகெட்ட பாவியடி யேனுமுமை நம்பினேன்
றயையைவைத் தாளு தற்கே
மக்கநக ருக்குமண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. கைக்குள் வெண்ணெயை வைத்து நெய்க்கு அழுத பாவி - கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்காக அழுதபாவி, கலை கற்றும் அறிவு அற்றபாவி — சாஸ்திரங்களைக் கற்றும் அதற்குத் தக்கபடி ஞானமில்லாத பாவி, கற்பக விருக்ஷத்தின் அடியிலே — கற்பக விருக்ஷத்தின் அடியில், காஞ்சிரங்காய் தேடிநின்றபாவி — எட்டிக்காயைத் தேடிநின்ற பாவி, கொக்கு பிடிக்க நாய்க்கு தெரியுமோ என்ற — கொக்கைப் பிடிப்பதற்காக நாய்க்குத் தெரியுமோ என்கிற, கொள்கை குடிகொண்டபாவி - கொள்கையைக் கொண்டிருக்கும் பாவி, குருடர்கள் யானையை கண்ட கதைபோல — குருடர்கள் யானையைப் பார்த்த கதைபோல, சற்குருவை அறியாதபாவி — சற்குருவை யறிந்துகொள்ளாத பாவி, சர்க்கரை கரும்பு கற்கண்டு அமுது இருக்க — சர்க்கரையும் கற்கண்டும் அமிர்தமும் இருக்க,

கசம் குடிக்கின்றபாவி — தாழ்வான வஸ்துக்களை யுண்டபாவி, தலைகெட்ட பாவி — தலையில்லாத பாவி, அடியேனும் உம்மை நம்பினேன் தயையை வைத்து ஆளுதற்கு—, மக்கநகருக்கு மணம் உள்ள — மக்கநகரத்துக்கு மங்களகரமா யிருக்கப்பட்ட, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக் கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. கைக்குள் என்பதில் உள் எழனுருபு. கைக்குள் வெண்ணெயைவைத்து நெய்க்கழுதல் முதலிய குணங்கள் பாவத்தின் காரியமாகையால் பாவியென்றார். கற்பகவிருக்ஷம் — சுவர்க்கலோகத்துள்ள பஞ்ச தருக்களிலொன்று. கொள்கை — கோட்பாடு. (க)

குறைஷிக் குலக்கொழுந் தானமுகம் மதுநபி
கொள்கையறி யாத பாவி
கொறடா தனைக்கொண்டு மாட்டினு மறிஞர்பின்
கூடிநட வாத பாவி
அரிசிவிலை யுலையறியு மோவென்ற கதைபோல
வகலிற் படைத்த பாவி
ஆருங்கு வைத்தகூ ழாயினுஞ் சரிகாணி
லள்ளியடை கின்ற பாவி
விரிதருந் தொப்பையை விருப்பொடு வளர்த்தமேன்
மேலுமலை கின்ற பாவி
விதியற்ற பாவியடி யேனுமுமை நம்பினேன்
வேளையீ தாளு தற்கே
வரிசைநபி வரிசைமிக வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மெனிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. குரசிக் குலக்கொழுந்து ஆன — குரசிகுலத்துக் கொழுந்து போல்வரான மகுமூதுநபியின், கொள்கை அறியாதபாவி—கோட்பாட்டை யறியாதபாவி, கொறடாதனைக் கொண்டு மாட்டினும் — கொறடாவைக் கொண்டடித்தாலும், அறிஞர்பின் கூடி நடவாதபாவி — அறிவுடையோர்கள் பின்னே கூடிக்கொண்டு நடவாதபாவி, அரிசிவிலை உலை அறியுமோ என்ற கதைபோல — அரிசியின் விலையை உலை அறியுமோ என்கிற கதையைப் போல, அகல் இல் படைத்த பாவி — அகன்ற இடத்தைப் படைத்த பாவி,

ஆருக்குவைத்த கூழாயினும்சரி — ஆருக்காக வைத்த கூழாயிருந்தாலுஞ்சரி, காணில் அள்ளி அடைகின்ற பாவி — கண்டால் அள்ளி வயிறு நிறைத்துக் கொள்கின்ற பாவி, தரிதரும் தொப்பையை விருப்பொடுவளர்க்க — பெரி தாகும் தொந்தியை விருப்பத்துடன் வளர்க்கும் பொருட்டு, மேன்மேலும் அலைகின்றபாவி — அதிகமாக அலைகின்ற பாவி, விதி அற்ற பாவி அடியே னும் உம்மை நம்பினேன்—, ஆளுதற்கு வேளை ஈது — என்னை யாள்வதற் குச் சமயமிதுவே, (ஆதலால்) வரிசை நபி வரிசை மிக உள்ள — வரிசை நபியின் வெகுமானம் அதிகமாகவுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொட ரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்ட கையே. எ-று.

வி—ரை. குறைஷிக்குலம் — ஒரு குலவிசேடம். கொழுந்து என்றது அந்தக் குலத்துக்கு அக்கிரேசர் என்றபடி. கொள்கை — உட்கருத்து. கொறடா — சவுக்கு. மாட்டுதல் — அடித்தல். கூழ் — மாச்சாதம். (௯0)

ஆம் பாடல் - 84.

இதற்குமுன் சொன்ன விடையூ திரண்டிறைற்
பதைப்பற் றிராத பாவியுள்ளத் திலுங்
கென்செய்வ ளுனென் றிடைந்திடைந் தழுவதை
யின்செய்கை யாலொழிந் திடுகவென் றிரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

நனமாயை வினையென்ற சனியன் பிடித்துங்
கலங்கித் தவித்த முவனே
காலூன்றி மழைபொழிய வுங்கருணை முகிலினங்
கவியவிலை யென்ற முவனே
அனியாய மனியாய மனியாய மென்கொடுமை
யனியாய மென்ற முவனே
ஆறுது மென்போது மொருபாவி யகிலமதி
லாருளா ரென்ற முவனே
இனியாள்வ ரெவரைய னையைய னேயென்ன
வேங்கித் துடித்த முவனே
இங்கென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம் வைத்தாளு தற்கே

மனமாயை யற்றமன முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. கனம் மாயவினை என்ற சனியன் பிடித்து—பெரிதாகிய மாயை வினை என்கிற சனியன் பிடித்து, கலங்கி தவித்து அழுவனோ - கலக்கமடைந்து தவித்து அழுவேனோ, கால் ஊன்றி மழைபொழிய—நிலையாக நின்று மழை பொழியும் பொருட்டு, உம் கருணை முகில் இனம் - உமது கருணையாகிய மேகக்கூட்டம், கவிய இல்லை என்று அழுவனோ - கவிந்துகொள்ள வில்லையென் றழுவேனோ, அனியாயம் அனியாயம் அனியாயம் என் கொடுமை அனியாயம் என்று அழுவனோ—என்னுடைய கொடுமையானது அனியாயம் அனியாயம் அனியாயம் அனியாய மென்று அழுவேனோ, ஆனாலும் என்போலும் ஒருபாவி—ஆனாலும் என்னைப்போன்ற ஒரு பாவி, அகிலம் அதில் ஆர் உளார் என்று அழுவனோ—பூமியில் யார் இருக்கிறார்களென் றழுவேனோ, இனி ஆள்வர் எவர் ஐயனே ஐயனே என்ன—இனி என்னை யாளுபவர்கள் எவர் ஐயனே ஐயனே என்று, எங்கி துடித்து அழுவனோ—எங்கித் துடித்தழுவேனோ, இங்கு என்ன செய்வன்—இவ்வுலகில் நான் என்னசெய்வேன், அடியேனும் உம்மை நம்பினேன் இஷ்டம்வைத்து ஆளுதற்கு—, மனம் மாயை அற்ற மனம் உள்ள - மனத்தின் மாயையற்ற மனத்தையுடைய, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரு அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணக்குடி வாழும்—குணக்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டவையே. எ-று.

வி—ரை. மனமாயையானது விட்டு நீங்குதல் அரிதாதலால், அதனைச் சனியன் பிடித்ததாகக் கூறினார். காலூன்றுதல்—வேரூன்றுதல். கவித்தல்—மூடுதல். துடித்தல்—பதைத்தல். (க)

தந்தைதாய் முதலான பந்தங்க ளென்றனைச்
சதிசெய்த தற் கழுவனோ
சாதிவரை தள்ளியே சஞ்சரிக் காமெய்த்
தவக்குறை தனக்க ழுவனோ
புத்திமகி ழுண்டுண் டுடுத்துசிற் றின்பவநு
போகந் தனக்க ழுவனோ
புனிதனா னேதயப் பெருவெள்ள மென்றுதான்
பொங்குமோ வென்ற ழுவனோ

எந்தவித மாயினு மிணங்கவிலை யென்மன
மிணங்கவிலை யென்ற ழுவனோ
என்செய்வ னேழையடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வந்துகுதி கொள்ளுநடை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. தந்தை தாய் முதலான பந்தங்கள் — தந்தை தாய் முதலான பந்தங்கள், என்றனை சதி செய்ததற்கு அழுவனோ — என்னை சதி செய்த தற்காக அழுவேனோ, சாதிவரை தள்ளியே சஞ்சரிக்கா — ஜாதியின் எல்லையை தள்ளிச் சஞ்சரிக்காத, மெய்தவக் குறைதனக்கு அழுவனோ - உண்மையான தவக்குறைவுக்கு அழுவேனோ, புந்தி மகிழ உண்டு உண்டு உடுத்து — மனமகிழ உண்டும் உடுத்தும், சிற்றின்ப அனுபோகம் தனக்கு அழுவனோ — சிற்றின்ப அனுபோகத்துக்கு அழுவேனோ, புனிதம் ஞானோதயம் பெருவெள்ளம் — பரிசுத்தமாகிய ஞானோதய மென்கிற பெரிய வெள்ளமானது, என்றுதான் பொங்குமோ என்று அழுவனோ — எப்போது தான் பொங்குமோ என்றழுவேனோ, எந்தவிதம் ஆயினும் — எவ்விதத்தாலாயினும், என் மனம் இணங்கவில்லை இணங்கவில்லை என்று அழுவனோ - என்மனமானது இணங்கவில்லை இணங்கவில்லை என்றழுவேனோ, ஏழையேன் என்செய்வேன் — அறிவில்லாதவனான நான் என்ன செய்வேன், அடியேனும் உம்மை நம்பினேன் இதுவேளை ஆளுதற்கு—, வந்து குதிகொள்ளும் நடை உள்ள — வந்து குதிகொள்ளும் நடையையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. பந்தங்கள் — கட்டுகள். சதி — வஞ்சனை. மகிழ உண்டு என்பது மகிழுண்டு என நிலைமொழி யீற்றகரம் தொகுத்தலாயிற்று. இணங்குதல் — இசைதல். (உ)

மாயாத வோயாவி காரத்தி னலெனது
மனதுநொந் தேய ழுவனோ
வஞ்சப்பிர பஞ்சத்தை நெஞ்சத் திருத்தியே
மதிகெட்டு நின்ற ழுவனோ
தீயனிவ னென்றேசு கின்றவர் நகைக்கின்ற
தீவினை தனக்க ழுவனோ

சீநாயே வோடென் றடித்துத் துரத்துஞ்
சிரிப்பினைப் பட்ட ழுவனே
நாயினுங் கடைகெட்ட நாயினுங் கடைகெட்ட
நாய்போ லலைந்த ழுவனே
நானென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
னன்மைகூர்ந் தாளு தற்கே
வாயாத மாயைசா வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. மாயாத ஓயா விகாரத்தினுல் — கெடாத ஓயா விகாரத்தினுல், எனது மனது சோர்ந்தே அழுவனே — என் மனம் சோர்ந்தே அழுவேனே, வஞ்சப் பிரபஞ்சத்தை நெஞ்சத்து இருத்தி — வஞ்சனையுள்ள பிரபஞ்சத்தை நெஞ்சில் வைத்து, மதிகெட்டு நின்று அழுவனே — புத்தி கெட்டு நின்றழுவேனே, தீயன் இவன் என்று ஏசுகின்றவா நகைக்கின்ற — தீமையுடையவனிவனென்று தூஷிக்கின்றவர்கள் சிரிக்கிறதற் கேதுவாகிய, தீவினை தனக்கு அழுவனே — தீவினைக் கழுவேனே, சீ நாயே ஓடு என்று அடித்து துரத்தும் — சீ நாயே ஓடு என்று சொல்லி அடித்துத் துரத்துகிற, சிரிப்பினைபட்டு அழுவனே — சிரிப்பினை யடைந் தழுவேனே, நாயினும் கடைகெட்ட — நாயைப் பார்க்கிலும் கடையாகக் கெட்ட, நாயினும் கடைகெட்ட — நாயைப் பார்க்கிலும் கடைசியாகக் கெட்ட, நாய்போல் அலைந்து அழுவனே — நாயைப்போலலைந் தழுவேனே, நான் என்ன செய்வன் — நான் என்ன செய்வேன், அடியேனும் உம்மை நம்பினேன்—, நன்மை கூர்ந்து ஆளுதற்கு — நன்மையை அதிகமாகக் கொடுத்து ஆளும்பொருட்டு, வாயாத மாயை சாஉள்ள — பொருந்தாத மாயையின் கெடுதலையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. விகாரம் — வேறுபாடு. ஏசுதல் — வைதல். தீவினை — துஷ்கர்மம் (தீச்செயல்) மாயை சாவுள்ள என்றது மாயையை அழித்த என்றபடி.

பாசக் கயிற்றுவலை வீசிப் பிடிக்கின்ற
பாவையர்க் கேய ழுவனே
பத்தியொடு தந்தைதாய் தந்துமோ சஞ்செய்த
பல்வினை தனக்க ழுவனே

ஆசைப் பெருக்கைப் பெருக்கப் பெருக்கழும்
பாளருக் கேய ழுவனே
அம்மம்ம வென்சொல்லு கேனகில வாழ்வென்னு
மக்கினிகள் சுட்ட ழுவனே
பீசேரு பீறற் றுருத்திசத மென்றதைப்
பேணுதற் கேய ழுவனே
பேயனென் செய்வனடி யேனுமுனை நம்பினேன்
பிழை பொறுத் தாளு தற்கே
மாசிலுப தேசநிலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. பாசம் கயிறு வலை வீசி பிடிக்கின்ற — ஆசையாகிய கயிற்று வலையை வீசிப் பிடிக்கின்ற, பாவையர்க்கே அழுவனே — பெண்களுக்கே யழுவேனே, பத்தியொடு தந்தை தாய் தந்து மோசஞ் செய்த — பத்தி யுடனே தந்தை தாயர்கள் என்னைப் பெற்று வைத்து மோசஞ்செய்த, பல் வினை தனக்கு அழுவனே — பல செய்கைகளுக் கழுவேனே, ஆசைப் பெருக்கை பெருக்க பெருக்கு — ஆசையின் மிகுதியை அதிகமாகும்படி வளர்க்கும், அழும்பாளருக்கே அழுவனே — அழும்பர்களுக் கென் றழுவேனே, அம்யம்ம என் சொல்லுகேன் — அம்மம்ம என்ன சொல்லுவேன், அகில வாழ்வு என்னும் அக்கினிகள் சுட்டு அழுவனே — உலக வாழ் வென்று சொல்லும் அக்கினிகளாலே சுடப்பட்டு அழுவேனே, பீசேரு பீறல் துருத்தி சதம் என்று — மலஞ் சேரும் கிழிந்த துருத்தியைப் போல் வதாகிய சரீரமானது நிலையானதென்று, அதை பேணுதற்கே அழுவனே - அதைக் காப்பாற்றுதற்கே யழுவேனே, பேயன் என் செய்வன் — பேய் போல்பவனாகிய நான் என்ன செய்வேன், அடியேனும் உம்மை நம்பி னேன் பிழை பொறுத்து ஆள்வதற்கு—, மாசு இல் உபதேசம் நிலை உள்ள — குற்றமற்ற உபதேச மார்க்கத்தை யுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக - றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இரு கண் மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே - முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. பாசம் — ஆசை. கயிற்றுவலை — கயிற்றாற்செய்த மோசவலை. வீசுதல் — எறிதல். பாவையர் — பிரதிமைபோலும் உருவுடைய மாதர். (ச)

எமனைப் பழித்தமட வாரல்கு லென்றபா
ழிடிகிணறு வீழ்ந்த ழுவனே
இருகொங்கை யென்றதேள் கொட்டிமண் டைக்கேறி
யெரிவதே யென்ற ழுவனே
நிமையா விழிக்கணை தொடுத்துத் துளைக்கவென்
னெஞ்சந் துடித்த ழுவனே
நெகிழுங் குழன்மயிர்க் கண்ணியிற் சிக்கியதை
நீக்கமுடி யாத ழுவனே
தமியனு னென்செய்வ னென்செய்வ னென்றுபிர
லாபித்து நின்ற ழுவனே
தந்தையே சொந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாறு தற்கே
மமதையில் லாச்சுகுண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

ப—ரை. எமனை பழித்த மடவார் அல்குல் என்ற—எமனைப் பழித்தவர்களாகிய பெண்களது அல்குலென்கிற, பாழ் இடி கிணறு வீழ்ந்து அழுவனே—பாழடைந்த இடிகிணற்றில் வீழ்ந்து அழுவேனே, இரு கொங்கை என்ற தேள் கொட்டி மண்டைக்கு ஏறி—இரண்டு கொங்கைக ளென்கிற தேளால் கொட்டப்பட்டு அவற்றின் விஷம் மண்டைக்கேறி, எறிவதே என்று அழுவனே—எரிகிறதே யென்றழுவேனே, நிமையா விழிக்கணை தொடுத்து துளைக்க—இமைக்காத கண்களாகிய அம்பைத் தொடுத்து என்னைத் துளைக்க, என் நெஞ்சம் துடித்து அழுவனே—என் மனந் துடித்தழுவேனே, நெகிழும் குழல் மயிர் கண்ணியில் சிக்கி—நெகிழ்ச்சியை யுடைய தாய் சுற்றி வளைப்பதான கூந்தலாகிய கண்ணியி லகப்பட்டு, அதை நீக்க முடியாது அழுவனே—அந்தக் கண்ணியை நீக்கமுடியாம லழுவேனே, தமியன் நான் என்செய்வன் என்செய்வன் என்று—அடியேனான நான் என்ன செய்வேன் என்ன செய்வேனென்று, பிரலாபித்து நின்று அழுவனே—பிரலாபித்து நின்று அழுவேனே, தந்தையே சொந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆறுதற்கு—, மமதை இல்லா சுகுணம் உள்ள—மமதையில்லாத நல்ல குணமுடைய, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டவையே. எ—று.

வி—ரை. எமனைப் பழித்த மடவார் என்றது 'கொலைத் தொழிலில் எமனினும் மிக்கவ' ரென்றபடி. கொங்கை — தனம். கண்ணி — வலை. "திண்ணிய நெஞ்சப்பறவை சிக்கக் குழற்காட்டில்-கண்ணிவைப்போர் மாயங் கடக்குநா ளெந்நாளோ" என்றார் தாயுமானவர். (௫)

ஆனந்த மானபர மானந்த மாகா
தவத்தையை நினைந்த ழுவனே
அகிலமுத லானபா ழாசைமா ளாதவநி
யாயந் தனக்க ழுவனே
ஈனப் பெருங்காய மென்னதென் பதிலரு
வேக்கந் தனக்க ழுவனே
எனதாவி யுடல்பொருளை வந்துகைக் கொள்வதினி
யென்றெண்ணி நின்ற ழுவனே
கானலை நிகர்த்தமெய் மெய்யென்ற பொய்தனைக்
கருதுவெறி கொண்ட ழுவனே
கன்மியென் செய்வனடி யேனுமுமை நம்பினேன்
கரையேற்றி யாளு தற்கே
வானாதி பூதமதி லுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. ஆனந்தம் ஆன பரம ஆனந்தம் ஆகாது — ஆனந்த மயமான பரமானந்த மாகாமல், அவத்தையை நினைந்து அழுவனே — அவஸ்தையை நினைந்தழுவேனே, அகிலம் முதலான பாழ் ஆசை மாளாத — பூமி முதலான பாழாசை கெடாத, அநியாயம் தனக்கு அழுவனே — அநியாயத்துக் கழுவேனே, ஈனம் பெரும் காயம் என்னது என்பதில் — ஈனமாகிய பெரிய சரீரம் என்னுடையது என்று சொல்லுவதில், அரு ஏக்கம் தனக்கு அழுவனே — நீங்காத ஏக்கத்துக் கழுவேனே, எனது ஆவி உடல் பொருளை வந்து கைக்கொள்வது — என்னுடைய உயிர் உடல் பொருள் என்பவற்றை வந்து கைக்கொள்வது, இனி என்று எண்ணி நின்று அழுவனே — இனி யென்றோ வென்றெண்ணி நின்றழுவேனே, கானலை நிகர்த்த மெய் மெய் யென்ற — கானலிற்றோன்றும் நீரைப்போல நிலையில்லாத சரீரத்தை நிலையுள்ள தென்கிற, பொய்தனை கருது வெறிகொண்டு அழுவனே — பொய்யைச் சிந்திக்கும் வெறிகொண்டு அழுவேனே, கன்மி என் செய்வன் — கர்மியான நான் என்ன செய்வேன், அடியேனும் உம்மை நம்பினேன் —, கரை ஏற்றி ஆளுதற்கு — (துன்பமாகிற சமுத்திரத்திற் பதிந்திருக்கு மென்னை) முத்திக்கரையி லேற்றி யாளும்பொருட்டு, வான் ஆதி பூதமதில் உள்ள — ஆகாய முதலாகிய பஞ்ச பூதங்களிலிருக்கும், நீர் பின் தொடர — நீர் பின்

தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. ஆனந்தமாகாது — ஆனந்த ரூபமாகாமல். மாளுதல் — அழிதல். ஈனம் — இழிவு. கைக்கொள்வது — ஏற்றுக்கொள்வது. கன்மி — பாவி. (கூ)

கட்டிப் பிடிக்கினுங் கைக்கடங் காமனம்
கவிவதிலே யென்ற ழுவனோ
கருவிகர ணம்பாய்கு வதுகண்டு கண்கலங்
கங்கொண்டு நின்ற ழுவனோ
வெட்டவெளி தன்னிலே விட்டகங் காரமென்னை
மேலிட்ட தற்க ழுவனோ
மெய்யாக நானெனனு நானெ னனக்குளறும்
வெட்கந் தனக்க ழுவனோ
எட்டிரண் டறியாத மூடனா யிருவினைக்
கீடாகி நின்ற ழுவனோ
என்னதான் செய்வனடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம்வைத் தாளு தற்கே
மட்டுனு நிஷ்டைநடு வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. கட்டிப் பிடிக்கினும் கைக்கு அடங்காமனம் — சேர்த்துப் பிடித்தாலும் கைக்கு அடங்காத மனம், கவிவது இல்லை என்று அழுவனோ — கவிவதில்லையென் றழுவேனோ, கருவிகரணம் பாய்குவது கண்டு — கருவி கரணங்கள் பாய்வதைக் கண்டு, கண் கலக்கங்கொண்டு நின்று அழுவனோ — கண் கலக்கமடைந்து நின்றழுவேனோ, வெட்டவெளி தன்னிலே விட்டு அகங்காரம் — வெட்டவெளியிலே விட்ட அகங்காரமானது, என்னைமேலிட்டதற்கு அழுவனோ — என்னை மீறினதற்கழுவேனோ, மெய் ஆக நான் எனனும் — உண்மையாக நானென்று சொல்லுவதும், நான் நான் என குளறும் வெட்கம் தனக்கு அழுவனோ — நான் நான் என்று குழறும் வெட்கத்துக்கழுவேனோ, எட்டு இரண்டு அறியாத மூடனாய் — எட்டு மிரண்டும் அறியாத மூடனாய், இருவினைக்கு ஈடாகி நின்று அழுவனோ — இருவினைக்கு ஈடுபட்டு நின்றழுவேனோ, என்னதான் செய்வன் அடியேனும் உம்மை நம்பினேன் இஷ்டம் வைத்து ஆளுதற்கு—, மட்டு உன்னு நிஷ்டை உள்ள — மட்டுப்

படாத நிஷ்டையின் மத்தியிலிருக்கும், நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை - வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கவிதல் — அடங்குதல். பாய்குவது — விடயங்களின் மேற்செல்லுவது. விடுதல் — விளங்குதல். எட்டிரண்டு — அகார வுகாரார்த்தம். "பட்டி மண்டபமேற்றினை யேற்றினை எட்டினோடிரண்டும் மறியேனையே" என்றார் மணிவாசகரும். ஈடாகி — இலக்காகி. (எ)

நீராள மாகவென் னெஞ்சுருகி நன்னிலையி
னிற்கவிலை யென்ற ழுவனோ
நிஷ்டைக்கு மெட்டாத பேரொளி தியானத்தி
னேர்படவி லென்ற ழுவனோ
காரகந் தங்கள்போ லருள்கவிந் திடவின்று
காண்கிலே னென்ற ழுவனோ
கடவுளைத் தேடியிரு கண்ணீர் ததும்பிக்
கரஞ்சென்னி வைத்த ழுவனோ
மாரிபோற் பேரின்ப மழைபொழிய விலையென்று
வாய்விட் டிரைந்த ழுவனோ
மனதைத் திடைந்தவடி யேனுமுமை நம்பினேன்
வாழ்வுதந் தாளு தற்கே
வாராதி ராதவா முன்னநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. நீராளமாக என்னெஞ்சு உருகி — நீராளமாக என்னுடைய மனமுருகி, நல் நிலையில் நிற்கவிலை என்று அழுவனோ — நல்ல நிலையில் நிற்கவில்லையென் றழுவேனோ, நிஷ்டைக்கும் எட்டாத பேர் ஒளி — நிஷ்டைக்கு மெட்டாத பெரிய சோதியானது, தியானத்தின் நேர்பட இல் என்று அழுவனோ — தியானத்துக்கு நேர்படவில்லையென் றழுவேனோ, கார் அகந் தங்கள்போல் — கணக்கற்ற மேகங்கள்போல, அருள் கவிந்திட — திருவருளானது கவிந்துகொண்டிருக்க, இன்று காண்கிலேன் என்று அழுவனோ— இன்று நான் காணவில்லை யென்றழுவேனோ, கடவுளைத் தேடி இருகண் நீர் ததும்பி — கடவுளைத் தேடிக்கொண்டு இரண்டு கண்களில் நீர் ததும்பி, சென்னி வைத்து அழுவனோ - கையைத் தலையில் வைத்தழுவேனோ, மாரி

போல் பேர் இன்பம் மழை பொழிய இல்லை என்று — மழையைப்போல பேரின்ப மழையானது பொழியவில்லை யென்று, வாய் விட்டு இரைந்து அழுவனே — வாய்விட்டுக் கூவி யழுவேனே, மனம் நைந்து இடைந்த — மனம் நொந்து பின் வாங்கின, அடியேனும் உம்மை நம்பினேன் வாழ்வு தந்து ஆளுதற்கு—, வாராது இராதவரம் உள்ள — வாராமலிராத சிறப்புடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. நீராளமாக — ஜலப்ராயமாக. இயானம் — நினைப்பு. நேர்படுதல்— சந்தித்தல். அருள் கவிதலாவது — அருள் மழை மூடிக்கொள்ளுதல். வாய் விட்டு — வாய்திறந்து. வாராதிராத — வருகிற. (அ)

கட்டழகி தன்னையென் கண்ணிலுங் காண்கிலேன்
காண்கிலே னென்ற ழுவனே
கண்மாரி விண்மாரி போற்பொழிய வழுவனே
கைதலையில் வைத்த ழுவனே
கொட்டாவி விட்டுவிட் டேங்கி யேங்கிக்கொண்டு
குந்தியுட் கார்ந்த ழுவனே
குட்டிச் சுவர்க்களிற் போயிருந் தையையோ
கோவென் றிரைந்த ழுவனே
எட்டாத கொம்பினி லிருக்கின்ற தேனே
யிறங்கிடா யென்ற ழுவனே
ஏதென்று சொல்வனடி யேனுமுமை நம்பினே
னிச்சையுட னாளு தற்கே
வட்டமிடு முகில்கவிகை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. கட்டழகி தன்னை — மிக்க அழகுடையவளை, என் கண்ணிலும் காண்கிலேன் காண்கிலேன் என்று அழுவனே — என் கண்களாலும் காணவில்லை காணவில்லை யென்றழுவேனே, கண் மாரி விண் மாரிபோல் பொழிய அழுவேனே — என் கண்ணிலிருந்து சொரியும் நீர் மேகநீர் போலச் சொரிய அழுவேனே, கைதலையில்வைத்து அழுவனே — கையைத் தலையில் வைத்துக் கொண்டழுவேனே, கொட்டாவி விட்டு விட்டு ஏங்கி

எங்கிக்கொண்டு — பலமுறையுங் கொட்டாவிவிட்டு பலமுறையும் எங்கிக் கொண்டு, குந்தி உட்கார்ந்து அழுவனே — பலமுறையும் உட்கார்ந்தழு வேனே, குட்டிச்சுவர்களில் போய் இருந்து — குட்டிச்சுவர்க ளிடத்துக்குப் போயிருந்து, ஐயையோ கோ என்று இரைந்து அழுவனே — ஐயையோ என்றும் கோவென்றும் கூவி யழுவேனே, எட்டாத கொம்பினில் இருக் கின்ற தேனே — எட்டாத கொம்பிலிருக்கின்ற தேனே, இறங்கிடாய் என்று அழுவனே — இறங்கக்கடவா யென்றழுவேனே, ஏது என்று சொல்வன் அடியேனும் உம்மைநம்பினேன் இச்சையுடன் ஆளுதற்கு—, வட்டம் இடும் முகில்கவிகை உள்ள — வட்டமிடும் மேகம்போன்ற குடையையுடைய, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இற சூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கட்டழகி யென்றது முக்திகாந்தையை. மாரி — மழை. கட வுள் இனிமையாகிய பொருள்க ளெல்லாவற்றினும் இனியனாதலால், "எட் டாத கொம்பினி லிருக்கின்ற தேனே" என்றார். "தேனையா னெயைக் கரும்பினின் றேறலை" என்றார் மணிவாசகரும். (கூ)

என்னசெய் யப்போகி றேனென்று பாவிநா
னிரவுபக லாய ழுவனே
ஏமசா மம்மென் றிலாதுமேதேம் பித்தேம்பி
யெறிமுச் செறிந்த ழுவனே
கன்னலமு தேசீனி கற்கண்டு சர்க்கரைக்
கட்டியே யென்ற ழுவனே
கண்ணாட்டி யானமென் கண்மணியை யென்றுநான்
காண்பனோ வென்ற ழுவனே
நன்னேய ராயமகு மூதுபத நம்பியு
நாளுமிக நொந்த ழுவனே
நைந்தழுது நொந்தவடி யேனுமுமை நம்பினே
னன்புகொண் டாளு தற்கே
மன்னுமதி தனிலுமொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. பாவி நான் என்ன செய்யப் போகிறே னென்று — பாவியா கிய நான் என்ன செய்யப் போகிறேனென்று, இரவு பகலாய் அழுவனே—

இரவும் பகலுமா யழுவேனோ, ஏமம் சாமம் என்று இலாது — ஏமமென்றும் சாமமென்று மில்லாமல், தேம்பித் தேம்பி எறிமூச்சு எறிந்து அழுவனோ — தேம்பித்தேம்பி பெருமூச்செறிந்து அழுவேனோ, கன்னலே அமுதே சீனி கற்கண்டே சர்க்கரைக் கட்டியே என்று அழுவனோ — கரும்பே அமிர்தமே சீனி கற்கண்டே சர்க்கரைக்கட்டியே யென்றழுவேனோ, கண்ணாட்டியான என் கண்மணியை—, என்றுதான் காண்பனோ என்று அழுவனோ—எப்போது தான் காண்பேனோ என்றழுவேனோ, நல்நேயர் ஆய மருமூது பதம் நம்பியும் — நல்ல அன்புள்ளவரான மருமூதின் பாதங்களை நம்பியும், நாளும் மிக நொந்து அழுவனோ — எப்போதும் மிகவும் நொந்தழுவேனோ, நைந்து அழுது நொந்த — சிதிலமாய் அழுது நொந்த, அடியேனும் உம்மை நம்பினேன்—, நண்பு கொண்டு ஆளுதற்கு — சிநேகங்கொண்டு ஆளும்பொருட்டு, மன்னும் மதிதனினும் ஒளி உள்ள — நிலைபெற்ற சந்திரனிலும் பிரகாசமுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. இரவு பகலாய் — இரவும் பகலுமாய். தேம்புதல் — இணைறுதல். கண்ணாட்டியான வென்கண்மணி யென்றது முக்திகாந்தையை. (௯0)

ஆ ந பாடல் - 94.

இறந்தொழி தற்கே யியங்கிய துண்மையின்
மறைந்தொழி யாது மாறா யிருப்ப
தொன்றுவ தென்றோ வொன்ற றோன்றும
னின்றிடேற் கருள்கென நின்றழு திரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

ஞானகுரு நாதனற் பதமிதந் தொழுதழுது
நாடுவது மெக்கா லமோ
நான்மறை தனக்குமெட் டாதநா லாம்படியி
னோ றலெக்கா லமோ
ஊனோ டிருந்தவுற வற்றுமுற வுற்றுவீ
டும்புகுவ தெக்கா லமோ
ஒப்புவமை செப்பரிய கர்ப்பூர தீபமென
வொன்றுவ தெக்கா லமோ

தானே யெனைப்பெற்ற மானே வருந்தியரு
டருவதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானமெல் லாமகிமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தினே.

ப—ரை. ஞான குருநாதன் நற்பதம் — ஞானத்தையுடைய குருநாதனது நல்ல பாதங்களை, நினைந்து அழுது அழுது நாடுவதும் எக்காலமோ — நினைந்து பலமுறையு மழுது தேடுவதும் எந்தக்காலமோ, நால் மறை தனக்கும் எட்டாத — நான்கு வேதங்களுக்கு மெட்டாத, நாலாம்படியில் நான் ஏறல் எக்காலமோ — நாலாவதுபடியில் நானேறுவது எந்தக்காலமோ, ஊன் ஓடு இருந்த உறவு அற்றும் — சரீரத்தோடிருந்த வுறவு நீங்கியும், உறவு உற்று வீடும் புகுவது எக்காலமோ — கடவுளது உறவை யடைந்து மோக்ஷமு மடைவது எந்தக்காலமோ, ஒப்பு உவமை செப்பு அரிய — ஒப்பாகக் கூடிய உவமானஞ் சொல்வதற்கரிய, கர்ப்பூர தீபம் என ஒன்று ஆவது எக்காலமோ — கர்ப்பூர தீபம்போல் ஒன்றாகக் கூடுவது எந்தக்காலமோ, என்னை பெற்ற மான்தானே — என்னைப் பெற்ற தாய்தானே, வருந்தி அருள் தருவது இனி எக்காலமோ — வருந்தி அருளைக் கொடுப்பது இனி யெந்தக் காலமோ, சாவ பிறந்த — சாவதற்காகப் பிறந்த, அடியேனும் உமை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வானம் எல்லாம் மகிமை உள்ள — மேலுலகங்களி லெல்லாம் வியாபித்த மகிமையுடைய, நீர் பின் தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள்நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. சற்குருநாதனது திருவடி பிறவி கடக்கச் செய்வதாதலால், 'நற்பதம்' என்றார். நான்மறை தனக்கு மெட்டாத நாலாம்படி யென்றது — ஞானநிலையை. கர்ப்பூர தீபம்போல என்றது இரண்டற்ற அத்துவித நிலையை. மானே யென்பதற்குப் பெரியோனே யென்றுரைப்பினுமாம். பிறப்ப திறப்பதற்கே யாதலால், சாவப்பிறந்த என்றார். (க)

வேடிக்கை யும்பகட் டும்பிலுக் குஞ்சொகுசும்
விட்டொழிவ தெக்கா லமோ
வீணிரங் கங்களு மூணுறங் கங்களும்
வேராறுவ தெக்கா லமோ

தாடிமீ சைநரைத் துந்தவ மிலாருறவு
சையென்ப தெக்கா லமோ
சண்டைநின் றிடுவதும் மண்டைபிண் டுடைவதுஞ்
சள்ளென்ப தெக்கா லமோ
சாடாது சமயநிலை நின்றுசம ரசமீது
சார்வ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வாடிக்கை யாய்க்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. வேடிக்கையும் பகட்டும் பிலுக்கும் சொகுசும்—வேடிக்கையும் பகட்டும் பிலுக்கும் சொகுசும், விட்டு ஒழிவது எக்காலமோ—விட்டு நீங்குவது எந்தக்காலமோ, வீண் இரக்கங்களும்—வீணான இரக்கங்களும், ஊண் உறக்கங்களும்—உணவு தூக்கங்களும், வேர் அறுவது எக்காலமோ—வேரோடறுவது எந்தக்காலமோ, தாடி மீசைகள் நரைத்தும்—தாடியும் மீசைகளும் வெளுத்தும், தவம் இலார் உறவு சை யென்பது எக்காலமோ—தவமிலாதவர்களுடைய உறவைச் சீயென்று வெறுப்பது எந்தக்காலமோ, சண்டை நின்றிடுவதும்—சண்டைக்கு நிற்பதும், மண்டை பிண்டு உடைவதும்—தலை பிளவுபட்டு உடைவதும், சள் என்பது எக்காலமோ—சள்ளென்று கோபிப்பது எந்தக்காலமோ, சமயம் நிலை சாடாது நின்று—சமயநிலையைக் கெடுக்காமலிருந்து, சமரசம்மீது சார்ந்திடுவது எக்காலமோ—சமரசநிலையில் சார்ந்திருப்பது எந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வாடிக்கையாய் கருணை உள்ள—வழக்கமாகக் கருணை செய்தலையுடைய, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும்—குணங்குடியில் வாழும், என் இரு கண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. பகட்டு—மினுக்கு (வெளி வேடம்.) பிலுக்கு—ஆடம்பரம். சொகுசு—நாகரீகம். ஊணுறக்கங்கள்—ஆஹார நித்ரைகள். தவமிலா என்றது தவஞ்செய்தலிலார் என்றபடி. (௨)

சொல்லரிய சுகவாரி யமிழ்ந்துண் டொடுங்கித்
துடிப்பொழிவ தெக்கா லமோ

சுந்தரச் சோதிமணி மாலையணி மார்பனைத்
தொழுவதினி யெக்கா லமோ
நல்லநட னம்புரிந் தாடுகரு ணாகா
னடம்புரிவ தெக்கா லமோ
நாடிவலு வாகப் பிடித்திழுத் தென்றனையு
நடியென்ப தெக்கா லமோ
சல்லிக் குணங்கெட்ட புல்லர்களை விட்டுத்
தனிப்பதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வல்லிருளை வெல்லுமொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப–ரை. சொல் அரிய சுகவாரி அமிழ்ந்து உண்டு – சொல்வதற்கரிய ஆனந்தக்கடலில் அமிர்தத்தை யுண்டு, ஒடுங்கி துடிப்பு ஒழிவது எக்காலமோ – அடங்கியிருந்து துடிப்பதில்லாம லிருப்பது எந்தக்காலமோ, சுந்தரம் சோதிமணிமாலை அணிமார்பனை – அழகிய பிரகாசமுடைய இரத்தின மாலையணியும் மார்பை யுடையவனை, தொழுவது இனி எக்காலமோ – தொழுவது இனி யெந்தக்காலமோ, நல்ல நடனம் புரிந்து ஆடும் கருணாகரன் – நல்ல நடனத்தைச் செய்து வெற்றியைப்பெற்ற கருணை வடிவானவன், நடம் புரிவது எக்காலமோ – நடனஞ் செய்வது எந்தக்காலமோ, நாடி வலுவாகப் பிடித்து இழுத்து – தேடிப் பலாத்காரமாகப் பிடித்திழுத்து, என்னையும் நடி என்பது எக்காலமோ – என்னையும் நடனஞ் செய்யென்று சொல்லுவது எந்தக்காலமோ, சல்லி – பொய்யையுடைய, குணம் கெட்ட – குணமில்லாத, புல்லர்களைவிட்டு தனிப்பது இனி எக்காலமோ – அறிவில்லாதவர்களைவிட்டு தனித்திருப்பது இனி யெந்தக்காலமோ, சாவப் பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வல் இருளை வெல்லும் ஒளி உள்ள – வலிய இருளை வென்றுவிடும் பிரகாசமுடைய, நீர் பின் தொடர – நீர் பின் தொடரும்படி, வள்ளல் – உதார குணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை – வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் – குணங்குடியில் வாழும், என் இருகண் மணியே – எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்டகையே. எ–று.

வி–ரை. சொல்லரிய என்னும் விசேடணம் சுகத்தை விசேடித்தமையால், சுகம் சொல்லுக்கடங்கா தென்றதாயிற்று. துடிப் பொழிதலாவது –

மனம் பதைப்பற்றிருத்தல். "கொடிய வைவர் பராக்கறல் வேண்டு மனமும் பதைப்பறல் வேண்டும்" என்றார் பிறரும். நாடி வலுவாகப் பிடித்திழுத்தலாவது தடுத்தாட்கொள்ளல். சல்லி—பொய். குணங்கெட்ட என்பதில் குணம் நற்குணம். புல்லர்—அற்பர். (௫.)

நயமே யுறைந்தறிவின் மயமே நிறைந்தபொரு
ணானணைவ தெக்கா லமோ
நல்லறிஞர் பின்சாடி யில்லுறவு பிஞ்சோட
நாள்வருவ தெக்கா லமோ
பயமே குறைந்திரு தயமே செறிந்தவினை
பாழாவ தெக்கா லமோ
பாடைதனி லேறுமுன் னொளித்தோடி யோடியுட்
பதிபுகுவ தெக்கா லமோ
தயவுதந் தெனையாண்ட தேவரீர் பாதமலர்
தனையணைவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
மயிலாடல் போனடன முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமணி னிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. நயமே உரைந்து அறிவின் மயமே நிறைந்த—நயமே பொருந்தி அறிவின் மயமே நிறைவுற்ற, பொருள்—பொருளை, நான் அணைவது எக்காலமோ—நான் சேர்வது எந்தக்காலமோ, நல் அறிஞர் பின்சாடி இல் உறவு பிஞ்சு ஓட—நல் அறிஞர் பின்னே தொடர்ந்து இல்வாழ்க்கையற்று அழிந்து ஓட, நாள் வருவது எக்காலமோ—நாள் வருவது எந்தக்காலமோ, பயமே குறைந்த இருதயமே செறிந்த—பயமேயில்லாத மனத்திற் பொருந்திய, வினைபாழ் ஆவது எக்காலமோ—வினையானது பாழாவது எந்தக் காலமோ, பாடைதன்னில் ஏறும் முன்—பாடையி லேறுவதற்கு முன்னே, ஒளித்து ஓடி—ஓடி—மறைந்தோடி யோடி, உள் பதிபுகுவது எக்காலமோ—உள்ளே யுள்ள பதியிற் பிரவேசிப்பது எந்தக்காலமோ, தயவு தந்து என்னை ஆண்ட—கிருபைசெய்து என்னை யாண்டருளிய, தேவரீர் பாத மலர்தனை அணைவது எக்காலமோ—தேவரீரது திருவடித் தாமரைச் சேர்வது எந்தக் காலமோ, சாவ பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, மயில் ஆடல்போல் நடனம் உள்ள—மயிலாடுவதைப்போல நடனஞ் செய்வதையுடைய, நீர் பின் தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த,

குணங்குடிவாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. நயம் — நன்மை. பாடை — சவாசகம். உட்பதி — உள்ளிடம். (பிரமப்பொருள்.) (௬)

ஈனந் தரும்புழுக் கூடான தேகவுற
வேகுவது மெக்கா லமோ
இன்றுளோர் நாளைக் கிருப்பதும் பொய்யென்ப
தெய்துவது மெக்கா லமோ
யானையொட் டகமேறு முடலும்லொட லொட்டையென்
றறிவதினி யெக்கா லமோ
ஆநந்த மானபொரு ளாநந்த மாயடிமை
யாவதினி யெக்கா லமோ
தானேனே தானேனே தானேனே யென்றுநான்
றானுவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானினுங் கருணைவா னுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற குஞல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. ஈனம் தரும் புழுக்கூடான — தாழ்வைக் கொடுக்கும் புழுக்கூடாயிருக்கப்பட்ட, தேக உறவு ஏகுவதும் எக்காலமோ — தேகசம்பந்தம் போவதும் எந்தக்காலமோ, இன்று உள்ளோர் நாளைக்கு இருப்பதும் பொய் என்பது — இன்றைக்கிருக்குமவர்கள் நாளைக்கிருப்பது பொய் என்னும் அறிவை, எய்துவதும் எக்காலமோ — அடைவது மெந்தக்காலமோ, யானை ஒட்டகம் ஏறும் உடலும் — யானையின் பேரிலும் ஒட்டகத்தின் பேரிலும் ஏறும் உடம்பும், லொட லொட்டையென்று அறிவது இனி எக்காலமோ — லொடலொட்டை யென்றறிந்து கொள்வது இனி யெந்தக்காலமோ, ஆனந்தமான பொருள் — ஆனந்த மயமானபொருள். ஆனந்தமாய் அடிமையாவது இனி எக்காலமோ — ஆனந்தமாக அடிமையாவது இனி யெந்தக்காலமோ, தானேனே தானேனே தானேனே என்று—, நான்தான் ஆவது எக்காலமோ — நான்தானுவது எந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வானினும் — மேகத்தைக்காட்டிலும் சிறந்த, கருணை வான் உள்ள — கருணை மேகத்தையுடைய, நீர் பின்தொடர— நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறகுஞல் வருக -

றருல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்வரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. தேகவுறவு — சரீரப்பற்று. லொடை லொட்டை — பொய். (௯)

கடன்மடை திறந்தென வருண்மடை திறந்தடிமை
　　கண்குளிர்வ தெக்கா லமோ
　கங்கற்ற பேரின்ப வெள்ளத்தின் மூழ்கியென்
　　கலிதீர்வ தெக்கா லமோ
உடல்குழைய நெக்குருகி விழிநீரு மாறாக
　　வூறுவது மெக்கா லமோ
　உள்ளுளே பற்றியெரி யுந்தீயமர்ந் துளமு
　　முட்குளிர்வ தெக்கா லமோ
சடைவஞ்ஞெ மிடைகொண்டு மிடைவஞ்ஞெ தேவரீர்
　　தாம்வருவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
　　சமயமீ தாஞு தற்கே
வடுவேது மற்றவடி வுள்ளநீர் பின்றொடர
　　வள்ளலிற சூல்வ ருகவே
　வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
　　மணியே முகியித் தீனே.

ப—ரை. கடல் மடைதிறந்தது என்ன — கடலின் மடை திறக்கப்பட்டதுபோல, அருள்மடை திறந்து — உமது அருளின் மடை திறக்கப்பட்டு, அடிமை கண்குளிர்வது எக்காலமோ — அடிமையான நான் கண்குளிர்ச்சியடைவது எந்தக்காலமோ, கங்கு அற்றபேர் இன்பவெள்ளத்தின் மூழ்கி— கரையற்ற பேரின்பவெள்ளத்தில் முழுகி, என்கலி தீர்வது எக்காலமோ— என்னுடைய கலியானது தீருவது எந்தக்காலமோ, உடல் குழைய நெக்கு உருகி — சரீரங் குழையும்படியாக மனம் நெக்குருகி, விழி நீரும் ஆறு ஆக ஊறுவதும் எக்காலமோ — கண்களில் நீரும் ஆறுபோலச்சுரப்பது எந்தக்காலமோ, உள்உளே பற்றி எரியும்தீ அமர்ந்து — உள்ளுக்குள்ளே பற்றி எரியும் நெருப்பவிந்து, உள்ளமும் உள் குளிர்வது எக்காலமோ — மனமும் உள்ளிடத்தே குளிர்ச்சியடைவது எந்தக்காலமோ, சடைவஞ்ஞெ — பின்னிடைவேஞ்ஞெ,மிடைகொண்டு மிடைவஞ்ஞெ—, தேவரீர் தாம்வருவது எக்காலமோ— தேவரீர் வருவது எந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வடு ஏதும் அற்ற வடிவு உள்ள — தோஷமொன்று மில்லாத வடிவத்தையுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொட

ரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. திறந்தது என்ன எனற்பாலது திறந்தென்ன என நிலைமொழியீறு தொகுத்தலாயிற்று. கலி — தரித்திரம். நெக்கு — நெகிழ்ந்து. இதில் ‘நெகு’ பகுதி இது ஒற்றிரட்டித் திறந்தகாலங்காட்டியது. மிடை— நெருக்கம். வடு — தீமை (களங்கம்.) ஏதும் — சிறிதும். (சு)

ஈனமின் ஞானோ தயத்தையென் கண்கண்
டிருப்பதினி யெக்கா லமோ
ஏறுத மேட்டுக்கு முத்தலையி னீரிறைத்
திளையாத தெக்கா லமோ
கோனான குருநாத னும்மடிமை நெஞ்சினிற்
குடிகொள்வ தெக்கா லமோ
குறைவற்ற தேசோ மயச்செல்வம் வந்துகுடி
கொள்வதுவு மெக்கா லமோ
தானே மகிழ்ச்சிபெற் றோனேயென் றன்னைநீர்
தழுவுவது மெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தானு தற்கே
வானோர் வணங்குநெறி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. ஈனம் இல் ஞான உதயத்தை — தாழ்வில்லாத ஞானோதயத்தை, என்கண் கண்டு இருப்பது இனி எக்காலமோ — என் கண்ணானது கண்டிருப்பது இனி யெந்தக்காலமோ, ஏறுதமேட்டுக்கு — நீரேறுத மேட்டு நிலத்துக்கு, முத்தலையில் நீர் இறைத்து — மூன்று ஏற்றத்தில் நீரிறைத்து, இளையாதது எக்காலமோ - இளைக்காதது எந்தக்காலமோ, கோன் ஆன குருநாதனும் — தலைவனான குருநாதனும், அடிமைநெஞ்சினில் குடிகொள்வது எக்காலமோ — அடியேனுடைய நெஞ்சில் குடிகொள்வது எந்தக்காலமோ, குறைவு அற்ற தேசோமயச்செல்வம் வந்து — குறைவில்லாத தேஜோமயச் செல்வமானது வந்து, குடிகொள்வதும் எக்காலமோ — என்னிடத்திற்றங்குவதும் எந்தக்காலமோ, தானேமகிழ்ச்சி பெற்றோனே — தானாகவே மகிழ்ச்சி பெற்றவரே, என்றன்னை நீர் தழுவுவதும் எக்காலமோ — என்னை நீர் தழு

விக்கொள்வதும் எந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பி னேன் சமயம் ஈது ஆளுதற்கு—,வானோர் வணங்கும் நெறியுள்ள – தேவர் கள் வணங்கும் நல்ல நெறியையுடைய, நீர் பின்தொடர – நீர் பின் தொட ரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை – வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் – குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே – முகியித்தீன் ஆண்ட கையே. எ-று.

வி-ரை. ஈனமில் ஞானோதயம் – மெய்ஞ்ஞானோதயம். துலை-ஏற்றம். தேசோமயச்செல்வம் – தேஜோரூபமாகிய செல்வம். (எ)

இலைசருகு கந்தமூ லங்களா லென்கும்பி
யெரியொழிவ தெக்காலமோ
என்பெலா நெக்குருகி நிற்குநிலை சொக்கிநின்
றின்புறுவ தெக்கா லமோ
உலையிட்ட மெழுகெனப் பாழான கன்னெஞ்ச
முருகுவது மெக்கா லமோ
ஓடியலை சிந்தையு மாடிய கறங்குபோ
லுழலாத தெக்கா லமோ
சலியாது கான்மலை கடன்மீ துறைந்தருட்
டணையணைவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வலியமலை தன்னினிக அருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. இலை சருகு கந்தம் மூலங்களால் – இலைகளாலும் சருகுக ளாலும் கிழங்குகளாலும் வேர்களாலும், என்கும்பி எரி ஒழிவது எக்கால மோ – என் வயிற்றிலுள்ள எரியான தொழிவது எந்தக்காலமோ, என்பு எல்லாம் நெக்கு உருகி – எலும்புகளெல்லாம் நெக்குருகி, நிற்கும் நிலை சொக்கி – நிற்கும் நிலையில் மயங்கி, நின்று இன்பு உறுவது எக்காலமோ – நிலையாக நின்று இன்பமடைவது எந்தக்காலமோ, உலை இட்ட மெழுகு என்ன – உலையிலிட்ட மெழுகைப்போல, பாழான கல்நெஞ்சம் உருகு வதும் எக்காலமோ – பாழான கல்லைப்போன்ற என்னுடைய நெஞ்சம் உருகுவதும் எந்தக்காலமோ, ஓடி அலை சிந்தையும் – ஓடியலையும் மனமும், ஆடிய கறங்குபோல் – ஆடுகின்ற காற்றாடியைப்போல, உழலாதது எக்

காலமோ — உழலாதது எந்தக்காலமோ, சலியாது கான்மலை கடல் மீது உறைந்து — சலிக்காமல் காடு மலை கடல் இவைகளிலிருந்து, அருள்தனை யடைவது எக்காலமோ — அருளையடைவது எந்தக்காலமோ, சாவப்பிறந்த— சாவதற்காகப்பிறந்த, அடியேனும் உம்மைநம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வலிய மலை தன்னை நிகர் உள்ள — வலியமலையைச் சமான மாகவுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி வள்ளல்—உதார குணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங் குடியில்வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கும்பி — வயிறு. செக்கு — நெகிழ்ந்து. உலை — கொல்லனுலைக் களம். கான் — காடு. (அ)

ஏதமில் லாதகுரு வடிசென்னி மீதெடுத்
தேந்துவது மெக்கா லமோ
ஏழையடி யேனறிவி லாமலுள றுந்தமிழ்க்
கிரங்குவது மெக்கா லமோ
தீதுமத பேதங்க ளற்றுமே யெங்குமிது
செல்வதுவு மெக்கா லமோ
சிறியார் மணற்சோற்றை நிகரிதென் றறிஞர்பிழை
செப்பாத தெக்கா லமோ
சாதிவரை யற்றகுரு நாதனே முத்திநிலை
தருவதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வாதசம யக்கடல் கடந்தநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. ஏதம் இல்லாத குரு அடி — குற்றமற்ற குருவின் பாதங்களை, சென்னி மீது எடுத்து ஏந்துவதும் எக்காலமோ — தலையின்மேல் எடுத்து வைத் தேந்துவதும் எந்தக்காலமோ, ஏழை அடியேன் — அறிவில்லாதவனை அடியேன், அறிவு இல்லாமல் உளறும் தமிழ்க்கு — ஞானமில்லாமற் குழறுந்தமிழுக்கு, இரங்குவதும் எக்காலமோ — நீர் மனம் இரங்குவதும் எந்தக்காலமோ, தீது மதபேதங்கள் அற்றுமே — தீமையான மதபேதங்க ளில்லாமலே, எங்கும் இது செல்வதுவும் எக்காலமோ — எவ்விடத்திலும் இந்தப் பேதமின்மையே செல்லுவதும் எந்தக்காலமோ, மணல் சோற்றை

நிகர் இது என்று — மணற்சோற்றுக்குச் சமானமான திதுவென்று, அறிஞர் சிறியார் பிழைசெப்பாதது எக்காலமோ — அறிவுடையோர்கள் சிறியோர் பிழையைச் செப்பாதது எந்தக்காலமோ, சாதிவரை அற்ற குருநாதனே — ஜாதிக்கட்டுப்பாடு இல்லாத குருநாதனே, முத்திநிலை தருவது இனி எக்காலமோ — மோக்ஷநிலையைத்தருவது இனி யெந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஈது ஆளுதற்கு—, வாதசமயம் கடல் கடந்த — வாதாடுகிற சமயக்கடலைத் தாண்டின, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இரு கண்மணியே — எனது இரண்டுகண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. ஏதமில்லாத குரு — சதாசாரியன் (சற்குரு). மதவேறுபாடுகளெல்லாம் தீமையையே தருவனவாதலால் 'தீது மதபேதங்கள்' என்றார். சாதிவரை — சாதியெல்லை. (௬)

மக்கநக ராளும் முகம்மதி றசூல்பாதம்
  வருவதினி யெக்கா லமோ
வந்தெனது சிந்தைகுடி கொண்டுமகி ழுண்டடிமை
  வாழ்வதுவு மெக்கா லமோ
எக்கால மெக்கால மெக்கால மெக்கால
  மென்றழுவ தெக்கா லமோ
எக்கால மெந்தையே தேவரீர் கூடவந்
  தெனையாள்வ தெக்கா லமோ
தக்கநிலை மீதிலே சொக்கிமன நிற்கவிறு
  சாதருள்வ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
  சமயமீ தாளு தற்கே
வக்கீல்கள் பலகோடி யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

ப-ரை. மக்கநகர் ஆளும் மகம்மது இறசூல் பாதம் — மக்கநகரத்தை யாளும் மகம்மது இறசூலின் பாதமானது, வருவது இனி எக்காலமோ — வருவது இனி யெந்தக்காலமோ, வந்து எனது சிந்தை குடிகொண்டு — வந்து என்னுடைய சிந்தையிற் குடிகொண்டிருக்க, அடிமை மகிழுண்டு வாழ்வதுவும் எக்காலமோ — அடிமையான நான் மகிழ்ச்சியடைந்து வாழ்வடைவதும் எந்தக்காலமோ, எக்காலம் எக்காலம் எக்காலம் எக்காலம்

என்றுஅழுவது எக்காலமோ—, எக்காலம் எந்தையே தேவரீர் கூடவந்து— எந்தக்காலமும் எனது தந்தையான தேவரீர் கூடவேவந்து, என்னை ஆள்வது எக்காலமோ—என்னை யடிமைகொள்வது எந்தக்காலமோ, தக்கநிலை மீதிலே சொக்கி—தகுந்த நிலையில் மனோலயமாகி, மனம் நிற்க இறுசா தருள்வது எக்காலமோ—மனம் நிற்கும்படியான உண்மைநிலையை யருள் செய்வது எந்தக்காலமோ, சாவப்பிறந்த அடியேனும் உம்மை நம்பினேன் சமயம் ஏதுஆளுதற்கு—, வக்கீல்கள் பலகோடியுள்ள—, நீர் பின்தொடர—நீர் பின் தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே— எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி-ரை. மக்கநகர்—ஓர் புண்ணியஷேத்திரம். சொக்குதல்—லயித்தல். இறுசாது—உண்மைநிலை. வக்கீல்கள்—குமாஸ்தாக்கள் (சீடர்கள்.) (கo)

ஆக பாடல் - 104.

அளவிடற் கரிய வரியன காட்சி
யுளபல சமுகத் தினைதுநின் மகிமையைப்
பலகோடி சீடர் பலரிலொரு கோடி
நிலனுறு மடியனு நேர்பெற வருள்கென
முன்னிலைக் குருவா முகியித்தீன்
றன்னிலை நோக்கித் தாழ்ந்துவந் திரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

ஏகறப் பில்ஆல மீனருட் காளான
வேழைபங் காளர் கோடி
எங்கள்மகு பூபின்க ளொருகோடி ஆரிபி
னென்பரெண் ணரிய கோடி
சேகுவொலி மார்க்கண்முறை முறையாக விறுசாது
தேடிவரு வார்கள் கோடி
திவ்யகுண நிலயவுல மாக்களெதிர் கொண்டுநின்
னினென்று வருவர் கோடி
தேகமழியாத நற்பாகம் படைத்தமா
சித்தர்க ளநந்த கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே

மாகோடி சீடர்கண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. ஏகறப்பில் ஆல மீனருட்கு ஆளான — ஏகறப்பில் ஆலமீனின் திருவருளுக்கடிமையான, ஏழை பங்காளர் கோடி — ஏழைபங்காளர் கோடி பேராவர், எங்கள் மகுபூ பீன்கள் ஒரு கோடி — எங்களுடைய மகுபூபீன்கள் ஒருகோடி பேராவர், ஆரிபீன் என்பவர் எண்ணரிய கோடி — ஆரிபீன் என்பவர்கள் கணக்கற்ற கோடிபேராவர், சேகு ஒளிமார்கள் முறை முறையாக — சேகு வொலிமார்கள் வரிசை வரிசையாக, இறசாது தேடிவருவார்கள் கோடி — இறசாதுவைத் தேடி வருமவர்கள் கோடி பேராவர், திவ்ய குணம் நிலய உலமாக்கள்—திவ்வியமான குணத்துக்கு இருப்பிடமான உலமாக்கள் ஆனவர்கள், எதிர்கொண்டு தீன் தீன் என்று வருவர் கோடி—தீன் தீனென்று சொல்லிக்கொண்டு எதிர்கொண்டு வருமவர்கள் கோடிபேராவர், தேகம் அழியாத நல்பாகம் படைத்த — சரீரமழியாத நல்லபாகத்தைப்படைத்த, மாசித்தர்கள் அனந்தகோடி — பெருமைபொருந்திய சித்தபுருஷர்கள் பலகோடி பேராவர், தேவரீர் சீடர் — இவர்களெல்லாம் தேவரீருக்கு சிஷ்யர்களாவர், அடியேனும் உம்மை நம்பினேன்—, தீட்சைதந்து ஆளுதற்கு — தீட்சை கொடுத்து அடிமை கொள்ளும்பொருட்டு, மாகோடி சீடர் கணம் உள்ள — பெரிய கோடியளவான சிஷ்யக்கூட்டமுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. ஏகறப்பில் ஆலமீன் — கடவுள். மகுபூ பீன்கள் — அடியார். ஆரிபீன் — ஒருவகைத்துறவினர். சேகு ஒலிமார்கள் — ஒருவகை ஆசிரியர்கள். உலமாக்கள் — ஒருவகைக்குருக்கள். (க)

அருள்பொழியு ஞானவா நந்தநட னம்புரிந்
தாடிவரு வார்கள் கோடி
அட்டாங்க யோகநிட் டானுபூ தியர்களோ
வளவற்ற கோடி கோடி
நார்தொழுந் தவராஜ சிங்கங்கள் கோடியெந்
நாளுமுள் ளோர்கள் கோடி
நாசச் சரீரத்தை நேசித்த பாசத்தை
நாசமாக் கினவர் கோடி

சிரம்விரித் தவர்கோடி கரம்விரித் தவர்கோடி
சினமறுத் தவர்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளு தற்கே
மருவுற்ற மணிமகுட முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப-ரை. அருள் பொழியும் ஞானம் ஆனந்த நடனம் புரிந்து — அருள் மழை பொழியும் ஞானமயமான ஆனந்தத் தாண்டவஞ் செய்து, ஆடிவருவார்கள் கோடி — ஆடி வருமவர்கள் கோடிபேராவர், அட்டாங்கயோக நிட்டானுபூதியர்களோ அளவற்ற கோடி கோடி — அட்டாங்கயோக நிஷ்டையில் அநுபூதி பெற்றவர்களோ கணக்கற்ற கோடி கோடி பேராவர், நரர்தொழும் தவம்ராச சிங்கங்கள் கோடி — நரர்கள் தொழும் தவராஜ சிங்கங்கள் கோடிபேராவர், எந்நாளும் உள்ளவர்கள் கோடி — எக்காலத்தும் அழியாதிருப்பவர்கள் கோடிபேராவர், நாசம் சரீரத்தை நேசித்த பாசத்தை — நாசமடையும் சரீரத்தை விரும்பிய பாசத்தை, நாசம் ஆக்கினவர் கோடி — நாசஞ்செய்தவர்கள் கோடிபேராவர், சிரம் விரித்தவர் கோடி — தலையை விரித்தவர்கள் கோடிபேராவர், கரம் விரித்தவர் கோடி— கையை விரித்தவர்கள் கோடிபேராவர், சினம் அறுத்தவர்கள் கோடி — கோபத்தை நீக்கினவர்கள் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, மருவுற்ற மணிமகுடம் உள்ள — பொருந்திய இரத்தினகிரீடமுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல்வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என்இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. நாசமாக்கினவர் — அறுத்தவர். சிரம்விரித்தவர் — தலைமயிரை விரித்தவர். (உ)

கதியாசை கொண்டதிக துதிபேசி நின்றெதிர்
கைகூப்பி நிற்பர் கோடி
கனிவாய் திறந்தருள் பொழிந்திட ரோவென்று
கண்மாரி பொழிவர் கோடி
மதியாசை முற்றியிப் பாழாசை யற்றுமுப்
பாழேத்தி னோர்கள் கோடி

பத்திவை ராக்யமொடு முத்திவழி சென்றநிச
பத்தர்கோ டானு கோடி
சிதைவற்ற சிந்தையர்க ளோவனந் தங்கோடி
சின்மயா நந்தர் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சை தந்தாளு தற்கே
மதிகோடி போற்பிரபை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே

ப—ரை. கதி ஆசைகொண்டு அதிக துதிபேசி எதிர் நின்று — நல்ல கதியில் ஆசைகொண்டு அதிகமான தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு எதிரே நின்று, கைகூப்பி நிற்பர் கோடி — கைகூப்பி நிற்குமவர்கள் கோடி பேராவர், கனிவாய் திறந்து அருள் பொழிந்திடீரோவென்று — கொவ்வைக் கனிபோன்ற வாயைத் திறந்து அருள் பொழியமாட்டீரோ என்று, கண் மாரி பொழிவர்கோடி — கண்மாரி பொழியு மவர்கள் கோடிபேராவர், பதி ஆசை முற்றிஇ பாழ் ஆசை அற்று — இறைவன் விஷயத்தில் விருப்பம் அதிகப்பட்டு இந்தப் பாழான உலக ஆசைநீங்கி, முப்பாழ் எத்தினோர் கள் கோடி — முப்பாழைத் துதித்தவர்கள் கோடிபேராவர், பத்தி வைராக்ய மொடு முத்திவழிசென்ற — பக்தி வைராக்கியத்துடன் மோட்சவழி சென்ற, நிசபத்தர் கோடானுகோடி — உண்மையான பக்தர்கள் கோடானு கோடிபேராவர், சிதைவு அற்ற சிந்தையர்களோ அனந்தம் கோடி — கெடுதலில்லாத சிந்தையை யுடையவர்களோ அனந்தமான கோடிபேராவர், சின்மய ஆனந்தர் கோடி — ஞானமயமான ஆனந்தத்தை யுடையவர்கள் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, மதிகோடிபோல் பிரபையுள்ள — கோடிசந்திரர்களைப்போல பிரகாசமுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல்வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை— வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித் தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கதி — நற்கதி (மோக்ஷம்.) கைகூப்பிநிற்றல் — கும்பிட்டு நிற்றல். கண்மாரி — கண்ணீர்ப் பெருக்கு. பக்தி — கடவுளிடத்தன்பு. வைராக்யம் — இகபர போகங்களில் வெறுப்பு. சிதைவு — சலநம். மதி — சந்திரன். ()

நடநமிடு வாசிதனி லேறிவரு வார்கோடி
நாடாளு மன்னர் கோடி

நாதாந்த மூர்த்தியர்கள் கோடிநன் மவுனகுரு
நாதாக்கள் கோடி கோடி
திடஞான வைராக்ய வான்நன்பல கோடிநற்
றிவ்யகுண வான்கள் கோடி
சிந்தையற நீக்குதிற மிக்கவொரு மிக்குநிலை
சென்றநிலை யோர்கள் கோடி
செடிகாடு தனிலுறைந் திலைசருகு பக்ஷணஞ்
செய்தலைந் தோர்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
மடலவிழ் மலர்ப்பாத முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

பத—ரை. நடனம் இடு வாசிதன்னில் ஏறி வருவார் கோடி — நடனஞ் செய்யுங் குதிரையில் ஏறிவருமவர்கள் கோடிபேராவர், நாடு ஆளும் மன்னர் கோடி — நாட்டையாளும் மன்னவர்கள் கோடிபேராவர், நாதாந்த மூர்த்தியர்கள் கோடி — நாதாந்த மூர்த்திகளானவர்கள் கோடிபேராவர், நல் மவுனகுரு நாதாக்கள் கோடிகோடி — நல்ல மௌனகுரு நாதாக்கள் கோடி கோடிபேராவர், திடம் ஞானம் வைராக்கியவான்கள் பல கோடி — திடமானமும் வைராக்கியமு முடையவர்கள் பலகோடிபேராவர், நல் திவ்ய குணவான்கள் கோடி — நல்ல தெய்வத் தன்மையுள்ள குணமுடையவர்கள் கோடிபேராவர், சிந்தை அற நீக்கு திறம் மிக்க — மனத்தின் செயலறும்படி நீக்கும் வலிமைமிகுந்த, ஒருமிக்கும் நிலைசென்ற நிலையோர்கள்கோடி — ஒருமைப்பாடடையும் நிலையிற் சென்ற நிலையை யுடையவர்கள் கோடிபேராவர், செடி காடுதனில் உறைந்து — செடிகளையுடைய காடுகளிலிருந்து, இலை சருகு பக்ஷணம்செய்து அலைந்தோர்கள் கோடி — இலையும் சருகும் உண்டு அலைந்தவர்கள் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, மடல் அவிழ் மலர்பாதம் உள்ள — இதழ்கள் விரிந்த தாமரைமலரைப்போல அடிகளையுடைய, நீர் பின்தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப்போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. நடநயிடு வாசி — ஆட்டக்குதிரை சஞ்சரிக்கிற வாயு. திவ்ய குணவான்கள் — சாந்தகுணமுள்ளவர்கள். சிந்தையற நீக்குதிறம் — மனத்தை வெல்லும் சாமர்த்தியம். (௬)

நாசமா மோசதுன் பங்கடரு சம்பத்தை
நழுவவிட் டவர்கள் கோடி
நாரியென் னுந்தூண்டி லின்மச்ச மாகாத
நடனவுல் லாசர் கோடி
ஆசைக் கடன்மீதி லோடியக் கரைகாணு
மக்கரைக் காரர் கோடி
அவ்வருகு மிவ்வருகு மெவ்வருகு முந்திவந்
தாடிவரு வார்கள் கோடி
தேசோ மயானந்த ஜெயவீர வாண்பிள்ளை
சிங்கங்கள் கோடி கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளுதற்கே
வாசமெவை யினும்வாச முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. நாசம் ஆம் மோசம் துன்பங்கள் தருசம்பத்தை — நாசமாகும் மோச துன்பங்களைத் தரும் சம்பத்தை, நழுவவிட்டவர்கள் கோடி — போக விட்டவர்கள் கோடிபேராவர், நாரி என்னும் தூண்டிலின் மச்சம் ஆகாத — பெண் என்னும் தூண்டிலில் மீனாகாத, நடன உல்லாசர் கோடி — நடன வுல்லாச முடையவர்கள் கோடிபேராவர், ஆசை கடல்மீதில் ஓடி—ஆசைக் கடலில் ஏறி, அக்கரை காணும் அக்கரைக்காரர் கோடி — அந்தக்கரை யைக் காணவேண்டுமென்கிற அக்கரையுடையவர்கள் கோடிபேராவர், அ அருகும் இ அருகும் எ அருகும் முந்திவந்து ஆடிவருவார்கள் கோடி — அவ்விடத்திலும் இவ்விடத்திலும் எவ்விடத்திலும் முற்பட்டுவந்து ஆடி வரு வார்கள் கோடிபேராவர், தேஜோமய ஆனந்தம் — பிரகாசமயமான ஆனந் தத்தையுடைய, ஜெயவீரம் ஆண்பிள்ளை சிங்கங்கள் கோடி கோடி — ஜெய மும் வீரமும் ஆண்பிள்ளைத் தனமுமுடைய சிங்கம் போன்றவர்கள் கோடி பேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, வாசம் எவையினும் வாசம் உள்ள—வாசனைக ளெவற்றினும் மிகுந்த வாசனையுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள் ளல்—உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கட வர், வளரும் அருள் நிறை - வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும்— குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணி யைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. சம்பூத்து – செல்வம். இது நாசத்துக்குக் காரணமாகிய மோச துன்பங்களைத் தருதலால் 'நாசமா மோச துன்பங்க டருசம்பத்து' என்றார். ஆசைக்கரை – ஆசையறுதி (வீடு.) (௫)

பொன்னாசை பெண்ணாசை மண்ணாசை மண்ணான
  பூரணா னந்தர் கோடி
புவிராஜர் கோடிமெய்த் தவராஜர் கோடிநற்
  புனிதகவி ராஜர் கோடி
மென்னிமுட் டக்கண்ட மட்டுமருள் வாரியில்
  வீழ்ந்துமூழ் குவர்கள் கோடி
வேதவே தாந்திகளு மொருகோடி மெய்ஞ்ஞான
  வீடடைந் தோர்கள் கோடி
சின்னவென் னையொத்தவே ழைகளனந் தங்கோடி
  சின்னவெனி லேழை கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
  தீட்சைதந் தாளு தற்கே
வன்னமணி மலர்மாலை யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற குல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

ப—ரை. பொன் ஆசை பெண் ஆசை மண் ஆசை மண் ஆன – பொன்னாசையும் பெண்ணாசையும் மண்ணாசையும் மண்ணைப்போன, பூரணானந்தர் கோடி – நிறைந்த ஆனந்தமுடையவர்கள் கோடிபேராவர், புவிராஜர்கோடி – பூமிக்கரசர்கள் கோடிபேராவர், மெய்த்தவராஜர் கோடி – உண்மையான தவத்துக்கரசரானவர்கள் கோடிபேராவர், நல்புனித கவிராஜர் கோடி – நல்ல பரிசுத்தர்களாகிய கவிராயர்கள் கோடிபேராவர், மென்னி முட்ட கண்டம் மட்டும் – மிடறுமுட்டகக் கண்டத்தளவும், அருள்வாரியில்வீழ்ந்து மூழ்குவர்கள் கோடி – அருட்கடலில் வீழ்ந்து மூழ்குமவர்கள் கோடிபேராவர்; வேத வேதாந்திகளும் ஒருகோடி – வேத வேதாந்தங்களை யுணர்ந்தவர்களும் ஒருகோடிபேராவர், மெய்ஞ்ஞானவீடு அடைந்தோர்கள் கோடி – உண்மையான ஞானமயமான மோட்சத்தை யடைந்தவர்கள் கோடிபேராவர். சின்ன என்னை ஒத்த ஏழைகள் அனந்தம்கோடி – சிறியனான என்னைப் போன்ற அறிவிலார் அனந்தங்கோடி பேராவர், சின்ன என்னில் ஏழை கோடி – சிறியனான என்னைக்காட்டிலும் அறிவிலார் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, வன்னம்மணி மலர்மாலை யுள்ள – பல நிறங்களையுடைய அழகிய மலர்மாலையையுடைய, நீர் பின்தொடர – நீர் பின் தொடரும்படி, வள்ளல் – உதாரகுணமுடைய, இறசூல் வருக – றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும்

அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. மண்ணுன என்றது அற்றொழிந்த என்றபடி. மென்னி — கண்டத்தின் நடுப்பாகம். (குரல்வளை.) (௬)

அண்டகோ டிகளுமோ ரணுவைத் துளைத்ததி
லடக்கவல் லவர்கள் கோடி
அறமியற் றினர்கோடி சரமுயற் றுநர்கோடி
யாளான பேர்கள் கோடி
தொண்டர்சில கோடியுய ரண்டர்பல கோடிநற்
றுறவோ ரநந்த கோடி
சோதிகண் டுச்சிவெளி சென்றபா னம்பெரிய
தொண்டிகண் டோர்கள் கோடி
செண்டென்ன வகிலமே ழையுமெடுத் தாட்டிச்
சிரித்துவரு வார்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
வண்டுலவு மலர்மாலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. அண்டகோடிகளும் — பல அண்டங்களையும், ஓர் அணுவைத் துளைத்து அதில் அடக்கவல்லவர்கள் கோடி — ஒரு அணுவைத்துளைசெய்து அதில் அடக்க வல்லமை யுள்ளவர்கள் கோடிபேராவர், அறம் இயற்றினர் கோடி — தருமஞ் செய்தவர்கள் கோடிபேராவர், சரம் உயற்றுநர் கோடி — சரம்பழகுவோர் கோடிபேராவர், ஆளான பேர்கள் கோடி — அடிமையான பேர்கள் கோடிபேராவர், தொண்டர் சிலகோடி — தொண்டரானவர்கள் சில கோடிபேராவர், உயர் அண்டர் பலகோடி — உயர்ந்த தேவரானவர்கள் பல கோடிபேராவர், நல் துறவோர் அனந்தம்கோடி — நல்ல துறவையுடையவர்கள் பலகோடி பேராவர், சோதிகண்டு உச்சி வெளிசென்று — சோதியைக்கண்டு உச்சி வெளியிலே சென்று, அபானம் பெ:ரிய தொண்டி கண்டோர்கள் கோடி — அபானமாகிய பெரிய தொளையைக்கண்டவர்கள் கோடிபேராவர், செண்டு என்ன அகிலம் ஏழையும் எடுத்து ஆட்டி — பந்தைப் போல ஏழுலகத்தையும் எடுத்தாட்டி, சிரித்துவருவார்கள் கோடி — சிரித்து வருமவர்கள் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சை தந்து ஆளுதற்கு—, வண்டு உலவு மலர்மாலை உள்ள —

வண்டுகள் சஞ்சரிக்கும் மலர் மாலையை யுடைய, நீர் பின் தொடர — நீர் பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக - றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும் — குணங்குடியில்வாழும், என் இருகண் மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே - முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. அடைக்க வல்லவர் என்றும் பாடம். சரமுயற்றுநர் — சரம் பழகுவோர். (வாயுதாரணை செய்வோர்.) உயரண்டர் — மேலான வுலகங்களி லுள்ளவர்கள். சோதி — பிரமதேஜசு. உச்சிவெளி — பிரமரந்திரம். அபாகம் பெரிய தொண்டி கண்டவர் — அதோமுகதாரணை செய்வோர். (எ)

சாசுவத வாநந்த ஞானபத யோகநிலை
சார்ந்தநிறை யோர்கள் கோடி.
சர்வபரி பூரணப் பெரியபொருளைத்தொழுஞ்
சகசநிட் டையர்கள் கோடி
நாசிநுனி மீதுநட னம்புரிதல் கண்டுபுன்
னகைகொண்டு வருவர் கோடி
நாதமுங் கீதமும் வேதமும் மோதிநன்
னடனமிடு வார்கள் கோடி
தேசுறும் பரவெளியை மனவெளியி லுட்கொண்ட
தேசிக ரநந்த கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
வாசக நிறைந்தநிறை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. சாசுவத ஆனந்தம் ஞானபதம் யோகநிலை — சாசுவதமாய் ஆன ந்தமயமாய் ஞானமயமான பதத்தைத்தரும் யோகநிலையை, சார்ந்த நிறை யோர்கள் கோடி — சேர்ந்த நிறையை யுடையவர்கள் கோடிபேராவர், சர்வ பரிபூரணம் பெரிய பொருளைத் தொழும் — சர்வ பரிபூரணமான பெரிய பொருளைத்தொழும், சகச நிட்டையர்கள் கோடி — சகசமான நிஷ்டையை யுடையவர்கள் கோடிபேராவர், நாசிநுனிமீது நடனம் புரிதல்கண்டு — நாசி யின் நுனியில் நடனஞ் செய்வதைப் பார்த்து, புன்நகைகொண்டு வருவர் கோடி — புன்சிரிப்புகொண்டு வருமவர்கள் கோடிபேராவர், நாதமும் கீத மும் வேதமும் ஓதி — நாதத்தையும் கீதத்தையும் வேதத்தையும் ஓதி, நல் நடனம் இடுவார்கள் கோடி — நல்ல நடனஞ் செய்யுமவர்கள் கோடி பேரா

வர், தேசு உறும் பரம்வெளியை—சோதி சொரூபமான பரவெளியை, மனம் வெளியினுள்கொண்ட தேசிகர் அனந்தம் கோடி—மனமாகிய வெளியில் கொண்ட தேசிகர்கள் பலகோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மைநம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, வாசகம் நிறைந்த நிறை உள்ள-சொல்லில்நிறைந்த நிறையையுடைய, நீர்பின்தொடர—நீர் பின்தொடரும்படி, வள்ளல்—உதாரகுணமுடைய, இறசூல்வருக—றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை—வளரும் அருள் நிறைந்த, குணங்குடிவாழும்—குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே—எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே—முகியித்தீன் ஆண்டகையே. எ—று.

வி—ரை. ஞானபதம்—ஞானபதவி. நிறையோர்—அமைவுடையோர். சகச நிஷ்டை—சதாகால நிஷ்டை. பரவெளி—சிதாகாசம். (அ)

அவனன்றி யோரணுவு மசையாத தென்றறிந்
தசைவற் றிருப்பர் கோடி
அகிலாண்ட கோடிக ளனைத்துங் கணத்தில்விளை
யாடிவரு வார்கள் கோடி
நவநாத சித்தியும் முத்தியும் மெத்திசையு
நற்றவஞ் செய்வர் கோடி
நாதனை யுமதுபா தாரவிந் தங்களை
நாடினே னென்பர் கோடி
சிவஞான வருணேசர் கோடானு கோடியுப
தேசிக ளநந்த கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளு தற்கே
மவுனக மனக்குளிகை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழ மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதது என்று அறிந்து—அவ்விறைவனல்லாமல் ஒரு அணுவும் அசையாதது என்றறிந்துகொண்டு, அசைவு அற்று இருப்பர்கோடி — அசைவில்லாம லிருப்பவர்கள் கோடிபேராவர், அகிலாண்டகோடிகள் அனைத்தும்—பல அண்டங்க ளெல்லாவற்றிலும்போய், கணத்தில் விளையாடி வருவார்கள் கோடி—க்ஷணப்பொழுதில் விளையாடி வருமவர்கள் கோடிபேராவர், நவநாத சித்தியும் முத்தியும் எத்திசையும்—நவநாத சித்திகளும் முத்தியும் எத்திசையிலுங் கைவரும்படி, நல்தவம் செய்வர்கோடி—நல்ல தவத்தைச்செய்வோர்கள் கோடிபேராவர்,

நாதனே உமது பாதார விந்தங்களே நாடினேன் என்பர் கோடி — நாதனே உம்முடைய பாதார விந்தங்களையே நாடினேன் என்று சொல்லுமவர்கள் கோடிபேராவர், சிவம் ஞானம் அருள் நேசர் கோடானுகோடி — சிவஞான த்தை யுடையவர்களாய் அருள் நேசரானவர்கள் கோடானுகோடிபேராவர், உபதேசிகள் அனந்தம் கோடி — உபதேசிகளானவர்கள் பலகோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சை தந்து ஆளுதற்கு, மவுன கமனம் குளிகை உள்ள—, நீர் பின்தொடர — நீர் பின்தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தரு ளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. அசைவற்றிருத்தல் — சலனமற்றிருத்தல். நவநாதசித்தி — அநாதி நாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், சத்திய நாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர் என்னும் நவநாதர்களும் விளையாடின சித்திகள். உபதேசிகள் — உபதேசம் செய்யும் குருக்கள். கமனம் — செல்லுதல். கமனக்குளிகை — வாயிலடக்கிக்கொண்டால் நினைத்த இடங்களிற் கொண்டுபோய்விடுகிற குளிகை. (கூ)

முகில்கவியு நயினார் முகம்மதி றசூலென்ற
முத்தொளியி தென்பர் கோடி
மோனகுரு வானசுல்த் தானப்துல் காதிறு
முகியித்தீ னென்பர் கோடி
மகுதூபு சுபுகானி யென்றபேர் வழிமேல்
வாழியென் பார்கள் கோடி
வாந்காலும் வாசகத் தாலுமுமை வாழ்த்துவார்
வாழியென் பார்கள் கோடி
ஜெகஜோதி யானசிற் பரன்வாழி ஜெயஜெயா
ஜெயஜெயா வென்பர் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளு தற்கே
வகுதாவை யாளும்வாழ் வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

ப—ரை. முகில் கவியும் நயினார் முகம்மது இறசூல் என்ற — மேகம் போலக் கவியும் நயினாரான முகம்மது இறசூல் என்கிற, முத்து ஒளி இது

என்பர் கோடி — முத்திஞெளி இது என்பவர்கள் கோடிபேராவர், மோன குருவான சுல்த்தான் அப்துல்காதிறு — மோனகுருவாகிய சுல்த்தான் அப்துல் காதிறு ஆனவர், முகியித்தீன் என்பர் கோடி — முகியித்தீன் என்பவர்கள் கோடிபேராவர், மகுபூபு சுபுகானி என்ற பேர்வழிமேல் — மகுபூபு சுபுகானி என்கிற பேர்வழியின்பேரில், வாழி என்பார்கள் கோடி — வாழியென்று சொல்லுமவர்கள் கோடிபேராவர், வாக்காலும் வாசகத்தாலும் உம்மை வாழ்த்துவார் — வாக்கினுலும் வாசகத்தாலும் உம்மை வாழ்த்துமவர்களும், வாழி என்பார்கள் — வாழியென்பவர்களும், கோடி — கோடி பேராவர், ஜெகஜோதி ஆன சிற்பரன் வாழி — ஜெகஜோதியான சிற்பரன் வாழி, ஜெயஜெயா ஜெயஜெயா என்பர் கோடி — ஜெயஜெயா ஜெயஜெயா என்று சொல்லுமவர்கள் கோடிபேராவர், தேவரீர் சீடர் அடியேனும் உம்மை நம்பினேன் தீட்சைதந்து ஆளுதற்கு—, வகுதாதை ஆளும் வாழ்வுள்ள — வகுதாதையாளும்படியான வாழ்வையுடைய, சீர்பின்தொடர — சீர்பின் தொடரும்படி, வள்ளல் — உதாரகுணமுடைய, இறசூல் வருக — றசூல் என்பவர் எழுந்தருளக்கடவர், வளரும் அருள் நிறை — வளரும் அருள் நிறைந்த, குணங்குடி வாழும் — குணங்குடியில் வாழும், என் இருகண்மணியே — எனது இரண்டு கண்மணியைப் போல்பவரே, முகியித்தீனே — முகியித்தீன் ஆண்டகையே. எ-று.

வி—ரை. கவிதல் — மூடுதல். வாக்கு — வாய்ச்சொல். வாசகம் — பாடல். வகுதாது — முத்தி. (௫0)

ஆ பாடல் - 114.

முகியித்தீனாண்டவர் பேரில் பாடிய

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

அழுக்கைத் துடைத்தணைத் தணைத்துமடி மீதுவைத்தும்
புழுக்கைக் குணமெனக்குப் போவதில்லை யாகையினால்
தழைக்குங் குணங்குடிக்கென் றந்தையே வந்திடுவேன்
பழிக்காம லேழைமுகம் பாருமுகி யித்தீனே.

ப—ரை. அழுக்கை துடைத்து—புழுதியைத் துடைத்து, அணைத்து அணைத்து—தழுவித் தழுவி, மடிமீது வைத்தும்—மடிமே லிருத்தியும், எனக்கு—அடியேனுக்கு, புழுக்கை குணம் — புழுக்கைக் குணமானது, போக இல்லை—நீங்கவில்லை, ஆகையினால்—ஆதலால், என் தந்தையே—என் பிதாவே, தழைக்கும் குணங்குடிக்கு — செழித்த குணங்குடிக்கு, வந்திடுவேன் — வந்துவிடுகிறேன், பழிக்காமல்—என்னை நிந்திக்காமல், ஏழைமுகம் பாரும்—ஏழையாகிய என் முகத்தைப் பார்த்தருளும், முகியித்தீனே—முகியித்தீனாண்டவரே. எ-று.

விரை. அழுக்கு—மலம்; அது ஆணவமலம், மாயாமலம், காமியமலம் என மூவகைப்படும்; இவற்றை மும்மலம் என்பர். துடைத்தல்—போக்குதல். அணைத் தணைத்து என்றது பலகால் தழுவி யென்றபடி. புழுக்கைக் குணம்—அடிமைக்குணம், (இழிகுணம்.) தழைத்தல்—நாளுக்குநாள் அபிவிர்த்தியடைதல். முகம்பார்த்தல்—சக்ஷுதீக்ஷை செய்தல். (க)

பட்டதுவுங் கெட்டதுவும் பாய்முடைந்து விற்றதுவும்
வெட்ட வெளியாய் விடிந்துமின்னம் பாருமையா
கொட்ட மெல்லாம்விட்டுக் குணங்குடிகொள் ளாவீணர்
இட்டமென்னை விட்டொழிவ தில்லைமுகி யித்தீனே.

ப—ரை. பட்டதுவும்—பட்டபாடும், கெட்டதுவும்—கெட்ட கேடும், பாய்முடைந்து விற்றதுவும்—பாய்முடைந்து விற்பனை செய்ததும், வெட்ட வெளியாய் விடிந்தும்—வெட்டவெளியாய் விடிந்துபோயும், இன்னம் பாரும் ஐயா—இன்னமும் பார்த்தருளும் ஐயனே, கொட்டம் எல்லாம் விட்டு — தீங்குகளெல்லாவற்றையும் விட்டு, குணங்குடி கொள்ளா — குணங்குடி கொள்ளாத, வீணர் — வீணருடைய, இட்டம் — சினேகம், என்னைவிட்டு ஒழிவது இல்லை — என்னைவிட்டு நீங்குவதில்லை, முகியித்தீனே — முகியித்தீனாண்டவரே. எ-று.

வி—ரை. பட்டது — பட்ட துன்பம். கெட்டது — கெட்ட அழிவு. வெட்ட வெளியாய் விடிதல் — பற்றற வொழிதல். கொட்டம் — தீங்கு. (தவறு.) வீணர் — பயனில்லாதவர். வீணர்விட்டாலும் அவரோடு பழகின வாசனை விடவில்லை யென்றார். "வீணர் இட்ட மென்னை விட்டொழிவ தில்லை" என்றார். (உ)

நாட்டுறவஞ் சாதிருந்து நம்பிகொலை செய்துமென்னை
ஓட்டாண்டி யாக்கியும்விட் டொழிவதில்லை பாருமையா
கூட்டாவென் கூடக் குணங்குடிக்கு வாரவரை
ஓட்டாமல் வீணரைவிட் டோட்டுமுகி யித்தீனே.

ப—ரை. அஞ்சு ஆறு நாட்டு உறவு இருந்தும் — ஐந்தாறுநாட் டுறவுக ளிருந்தும், நம்பி கொலை செய்தும் — நம்பிக்கை யுண்டாக்கிக் கொலைசெய் தும், என்னை ஓட்டாண்டி ஆக்கியும் — என்னை ஓட்டாண்டியாகச் செய்தும், (அவுருறவு) விட்டு ஒழிவது இல்லை — என்னைவிட்டு நீங்குவதில்லை, பாரும் ஐயா — பார்த்தருளும் ஐயனே, என் கூட கூட்டா — என்னோடு கூட்டாக, குணங்குடிக்கு வாரவரை — குணங்குடிக்கு வருவோரை, ஓட்டாமல் — துரத் தாமல், வீணரை — வீணர்களை, விட்டு ஓட்டும் — விட்டுத் துரத்தும், முகியித் தீனே — முகியித்தீனாண்டவரே. எ-று.

வி—ரை. நாட்டுறவு — உலகத்தாரது சினேகம். ஓட்டாண்டி — ஓட்டைக் கையிலேந்தித் திரியும் பரதேசி. கூட்டா — கூட்டமாக. வருகிறவரை யென் பது 'வாரவரை' எனச் சிதைந்து வந்தது. (ரு)

மேலாங் குணங்குடியின் மெய்ஞ்ஞான வீடுசென்று
நாலாம் படியேறி நானொளித்தி ருப்பனையா
வாலாய மாகவங்கே மவுன மலரணைமேல்
மாலா யென்னையணைய வாருமுகி யித்தீனே.

ப—ரை. மேலாம் குணங்குடியில் — மேலாகிய குணங்குடியிலே, மெய்ஞ் ஞான வீடுசென்று — மெய்ஞ்ஞான வீட்டிற்போய், நாலாம்படி ஏறி — நாலா வது படியிலேறி, நான் ஒளித்திருப்பன் — நான் மறைந்திருப்பேன், ஐயா — ஐயனே, வாலாயமாக — தாராளமாக, அங்கே — அவ்விடத்தே, மவுனம் — மௌனநிலையாகிய, மலர் அணைமேல் — புஷ்பசயனத்தின்மீது, மால் ஆய் — ஆசையாய், என்னை அணையவாரும் — என்னைத்தழுவ வாரும், முகியித் தீனே — முகியித்தீனாண்டவரே. எ-று.

வி—ரை. மேலாம் — மேன்மையாகிய. நாலாம்படி — நான்காவது சௌ பானம் அது ஞானபாதம். ஒளித்திருத்தல் — மறைந்திருத்தல் (லயித்திருத் தல்.) வாலாயம் — தாராளம். மால் — ஆசை. (சு)

முகியித்தீனாண்டவர்

நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா முற்றிற்று.

ஆக பாடல் - 118.

குருவணக்கம்.

அவற்றின் முறைவழி யருந்தவம் யோகப்
எவற்றினு முந்திய தியல்புடை யாசான்
நன்னயக் கருணை தனிகூ ரன்பால்
இன்னய மந்திர மியைத லாதலினால்
திருவருள் பெறுவான் சிந்தித்து மெய்ம்மைக்
குருவருள் வேண்டிக் குரையிரந் தயர்ந்தது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குணங்குடி யார்நற் குணங்குடி யோங்கக்
 கொடுகொடென் றடிக்கடி குணங்குங்
குணங்குடி யார்தூர்க் குணங்குடி போகக்
 குணமெலாந் திரண்டருள பரப்பிக்
குணங்குடி யேறிக் குறைவற நிறைந்து
 குணக்கட லானமெய்ஞ் ஞானக்
குணங்குடி வாழு மகத்தீச னாமென்
 குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

ப—ரை. குணங்குடியார் — குணங்குடியாரது, நல் குணம்குடி ஓங்க—நற்குணங்குடி செழிக்கவும், கொடுகொடு என்று அடிக்கடி குணங்கும் — கொடுகொடென்று அடிக்கடி குணங்குகின்ற, குணங்குடியார் — குணங்குடியாரது, தூர்க்குணம் — தீக்குணங்கள், குடிபோக — குடிவாங்கவும், குணம் எல்லாம் திரண்டு — நற்குணங்களெல்லாம் கூடி, அருள் பரப்பி — அருளைப் பரவச் செய்து, குணங்குடிஏறி — நற்குணங்கள் குடியேறி, குறைவு அற நிறைந்து - குறைவில்லாமல் நிறைந்து, குணக்கடல் ஆன — நற்குணக் கடலாகிய, மெய்ஞ்ஞானக் குணம் — மெய்ஞ்ஞானக் குணங்களில், குடிவாழும் — குடிகொண்டு வாழ்கின்ற, அகத்தீசன் ஆம் — அகத்தீசனாகிய, என்குரு — என் சற்குருநாதனது, பதம் — திருவடிகளை, சிரத்தின்மேல் கொள்வாம் — சிரசாவகிப்போம். எ-று.

வி—ரை. குணங்குதல் — கோணுதல். குடிபோக — குடிவாங்கிப்போக. குடியேறல் — குடிதழைத்தல். மங்களகுணங்களின் பெருக்கத்தால் ' குணக்கடல் ' என்றார். அகத்தீசன் என்பதனை அகத்து + ஈசன் எனப் பிரித்து, மனத்தில் வாழ்கின்ற ஈசன் என்றுரைப்பினு மமையும். சிரத்தின்மேல் - சிரசின் உபரிபாகத்தில் (உச்சியில்.) கொள்வாம் — தாங்குவோம். ()

முதலாவது

குருவருணிலை.

மனத்தைத் தழுவித் தற்காத்துச் சீராடச் செல்வப்பால்
கொடுத்துப் படுக்கவைக்க வரவேண்டும்.

தாயனைய வின்பந் தனைத்தந்து தந்துகை
தழுவிநின் றருள் புரியவுந்
தந்தை தாயுந் தானேயாகவு மிருந்தெனைத்
தற்காத்து னருள் புரியவுஞ்
சேயென் றிரங்கியணை காலியின் கன்றெனச்
சீராட வருள் புரியவுஞ்
செங்கீரை யாடுசிறு மதலைபோற் கொஞ்சிநான்
செல்வமிட வருள் புரியவும்
பாயுமடை கால்கண்டு கரைபுரள வருமதிப்
பால்கொடுத் தருள் புரியவும்
பக்குவத் தோடுமவு னத்தொட்டி லுக்குட்
படுக்கவைத் தருள் புரியவும்
வாயுவைக் கட்டவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தாய் அனைய — தாயை நிகர்த்த, இன்பம்தனை தந்து தந்து — இன்பத்தைப் பலகாலுங் கொடுத்து, கைதழுவிநின்று — கையாலணைத்து நின்று, அருள்புரியவும் — அருள்செய்யவும், தந்தை தாயும் — தந்தை தாயாரும், தானே ஆகவும் இருந்து — தானேயாகியுமிருந்து, என்னை — அடியேனை, தற்காத்து — ரக்ஷித்து, உன் அருள்புரியவும் — உன் அருள்செய்யவும், சேய் என்று இரங்கி — பிள்ளையென் றிரங்கி, அணைகாலியின் கன்று என — அடைந்த பசுவின் கன்றுபோல, சீராட — நான் சீராடும்படி, அருள்புரியவும் — அருள்செய்யவும், செங்கீரைஆடு — செங்கீரையாடுகின்ற, சிறுமதலை போல் கொஞ்சி — சிறுகுழந்தைபோலக் கொஞ்சி, நான் செல்வமிட — நான் செல்வங் கொஞ்சும்படி, அருள்புரியவும் — அருள்செய்யவும், பாயும் மடை கால்கண்டு — பாய்கின்ற மடையானது வாய்க்காலாகக் காணப்பட்டு, கரைபுரளவரும் — கரை புரளும்படிவருகிற, மதி பால் கொடுத்து — சந்திரனது அமிர்தத்தைக் கொடுத்து, அருள்புரியவும் — அருள் செய்யவும், பக்குவத்தோடு — பக்குவமாக, மவுனம் தொட்டிலுக்குள் — மௌனநிலையாகிய தொட்

டிவில், படுக்கவைத்து — படுக்கவைத்து, அருள்புரியவும் — அருள்செய்யவும், வாயுவை கட்டவும் — வாயுவைத் தடுக்கவும், தவராஜ சிங்கமே — தவத்தை யுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவே ண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. இன்பம் — பேரின்பம். காலி — பசு. செங்கீரையாடுதல் — குழந்தை இருகையும் முழங்கால்களுமூன்றித் தலைநிமிர்ந்தாடுதல். மதிப் பால் — சந்திரமண்டலத்தமிர்தம்; இது சிவராஜயோகிகளா லுண்ணப்படு வது. பக்குவத்தோடு — மெதுவாக. வாயுவைக் கட்டுதல் — வாயுவை வசப் படுத்துதல். (க)

மனமிடையாம லெண்ணுமம் பதைத்திடாது பார்த்து
மனமுவந்து வருஷிக்க வரவேண்டும்.

எந்தலையி லிட்டவிதி யென்னம்மோ வென்னநா
னிடையாம லருள் புரியவும்
என்செய்தே னென்றடிமை யெண்ணாத வெண்ணங்க
ளெண்ணும லருள் புரியவும்
பந்தமதி லிட்டமெழு கென்னநெஞ் சுருகிப்
பதைத்திடா தருள் புரியவும்
பாவியா காதென்னைக் கருணைநய னங்கொண்டு
பார்த்துநல் லருள் புரியவும்
மந்திரங் கொண்டுமாங் காய்விழா தாதலான்
மனமுவந் தருள் புரியவும்
மாரியினு நின்கருணை மாரியணு மாருது
வருஷிக்க வருள் புரியவும்
வந்துபணி வார்க்குதவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. எம் தலையில் இட்டவிதி என்னமோ என்ன — எமது தலையி லெழுதின விதி யென்னவோவென்று, நான் இடையாமல் — நான் வருந்தா மல், அருள் புரியவும்—, என் செய்தேன் என்று — என்ன காரியம் செய்தே னென்று, அடிமை — அடிமையாகிய நான், எண்ணாத எண்ணங்கள் எண்ணு மல் — எண்ணாத எண்ணங்களை யெல்லாம் எண்ணுமல், அருள்புரியவும்—, பந்தமதில் இட்டமெழுகு என்ன — பந்தத்தில் வைத்த மெழுகுபோல, நெஞ்சு உருகி பதைத்திடாது — மனமுருகிப் பதைக்காமல், அருள் புரிய வும்—, பாவி ஆகாது — பாவியாகாமல், என்னை — அடியேனை, கருணைநயனம்

கொண்டு — கருணை விழியால், பார்த்து — நோக்கி, நல் — நல்ல, அருள் புரியவும்—, மந்திரம்கொண்டு — மந்திரத்தால், மாங்காய் விழாது ஆதலால் — மாங்காய் விழாதாகையால், மனம் உவந்து — திருவுளமகிழ்ந்து, அருள் புரியவும்—, மாரியினும் — மழையினுஞ் சிறந்த, நின் கருணைமாரி — உன் கருணை மழை, அணுமாறாது வருஷிக்க — அணுவளவும் நீங்காமல் பொழியும்படி, அருள் புரியவும்—, வந்து பணிவார்க்கு உதவு — வந்து வணங்குவோர்க்கு அருள் செய்கின்ற, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. விதி — தலையெழுத்து. பந்தம் — தீக்கொளுத்தும் பந்து. நயனம் கொண்டு என்பதில் 'கொண்டு' மூன்றாவதன் சொல்லுருபு. மாரி — மழை.()

மனந்தானுநச் சகாவென்ற நாடோறும் நகைத்திடாது
தொழும்புகொண்ட துரையே வரவேண்டும்.

தாயாயு மென்றந்தை தானாயு நின்றுநீ
தானாக வருள் புரியவும்
தாபந்த மெல்லா மறிந்தநீ நிஷ்டைச்
சகாவென்ற வருள் புரியவும்
நாயடிய னுய்யும் பொருட்டாக ரட்சித்து
நாடோறு மருள் புரியவும்
நச்சுநச் சென்றெனைய ரற்றாரு னென்றெனை
நகைத்திடா தருள் புரியவும்
தூயனே மாயனே நேயனே காயனே
தொழும்புகொண் டருள் புரியவுந்
தோலா வழக்கனிவ னென்றுசொல் லாமலென்
றுரையேயு னருள் புரியவும்
வாய்மொழி மறக்குமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. என் — எனது, தாய் ஆயும் — தாயாகியும், தந்தைதான் ஆயும் — தந்தையாகியும், நின்று — இருந்து, நீ தான் ஆக — நீயே யாகும்படி, அருள் புரியவும்—, தாபந்தம் எல்லாம் அறிந்த நீ — என் வருத்த முழுது மறிந்தநீ, நிஷ்டை சகா என்ற — நிஷ்டைக் குதவி யென்று சொல்லப்பட்ட, அருள் புரியவும்—, நாய் அடியன் — நாய்போன்ற அடியேன், உய்யும்பொருட்டாக — உய்யும் நிமித்தமாக, ரக்ஷித்து — பாதுகாத்து, நாள்தோறும் — தினந்தோறும்,

அருள்புரியவும்—, நச்சு நச்சு என்று—நச்சு நச்சு என்று, என்னை அரற்று ருன் என்று—என்னை யலட்டுகிருனென்று, என்னை நகைத்திடாது—என் னைச் சிரிக்காமல், அருள்புரியவும்—, தூயனே—பரிசுத்தனே, மாயனே—ஆச்சரியகுண சேஷ்டிதங்களை யுடையவனே, நேயனே—(அன்பரிடத்து) அன்புள்ளவனே, தாயனே—தாயை நிகர்த்தவனே, தொழும்புகொண்டு—என்னை யடிமைகொண்டு, அருள்புரியவும்—, இவன் தோலா வழக்கன் என்று சொல்லாமல்—இவன் தோலா வழக்குடையவன் என்று சொல்லா மல், என்துரையே—, உன்—உனது, அருள்புரியவும்—, வாய்மொழி மறக்கு முன்—வாய்ச்சொல்லை மறக்கு முன்னமே, தவராஜ சிங்கமே—தவத்தை யுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வர வேண்டும், மாகுணக் குடிவாழும்—பெருமையமைந்த குணக்குடியில் வாழ் கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. தாபந்தம்—வருத்தம். சகா—துணை. அரற்றுகிருன் என்பது அரற்றுருன் எனச்சிதைந்துவந்தது. தோலாவழக்கு—பெருவழக்கு. துரை-பிரபு. வாய்மொழி மறத்தல்—வாய்ச்சொல் சோர்தல். (௧௨)

மனமிடையா தின்பமுறைந்திட ஓய்ந்திடாது
குன்றா குகைபருள வரவேண்டும்.

என்றடிமை யாளாவ தென்றென்னி யெண்ணிக்கருத்
திடையாம லருள் புரியவும்
இரவுபக லாயிடை யறுதுருகி நாடிநல்
லின்பமுற வருள் புரியவும்
உன்திருப் பொன்னடியு மென்றன் சிரத்தே
யுறைந்திடற் கருள் புரியவும்
ஓடாம லோடியா னுலகைவலம் வந்துகா
லோய்ந்திடா தருள் புரியவும்
குன்றங்க டோறுமலை யாதுகுகை யுள்ளநற்
குன்றொன்றை யருள் புரியவும்
குருமூர்த்த மாயிருந் துபதேச மோதியக்
குகையுள்வைத் தருள் புரியவும்
மன்றுளின் றுடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்றா னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அடிமை—அடியனேன், ஆள் ஆவது—உன் திருவடிக்காட்படு வது, என்று என்று—எந்நாளென்று, எண்ணி எண்ணி—நினைத்து நினைத்து, கருத்து இடையாமல்—மனம்வருந்தாமல், அருள்புரியவும்—, இரவுபகலாய-

இரவும்பகலுமாக, இடையறாது உருகி — இடைவிடாமல் உருகி, நாடி-தேடி, நல் இன்பம்உற — நல்ல இன்பமடைய, அருள் புரியவும்—, உன் திருபொன் அடியும் — உனது அழகிய பொன்போலுந் திருவடியும், என்றன் சிரத்தே உறைந்திடற்கு — என் தலையின்மீது தங்கும்படி, அருள்புரியவும்—, ஓடாமல் ஓடி — ஓடாதோடி, யான் உலகை வலம்வந்து — நான்உலகத்தை வலம்வந்து, கால் ஓய்ந்திடாது — காலோய்ந்து போகாமல், அருள்புரியவும்—, குன்றங்கள் தோறும் அலையாது — மலைகள்தோறும் அலையாமல், குகை உள்ள நல்குன்று ஒன்றை — குகையோடுகூடிய நன்மையாகிய ஒருமலையை, அருள்புரியவும்—, குருமூர்த்தமாய் இருந்து — குருவடிவாயிருந்து, உபதேசம் ஓதி—உபதேசம் செய்து, அக்குகையுள் வைத்து — அந்தக் குகையுள்ளேயிருத்தி, அருள்புரியவும்—, மன்றுள் நின்று ஆடும் — பொதுவில்நின்று நடனம்பண்ணுகிற, மெய்— உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும்— பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி-ரை. கருத்து என்றது இங்கு மனத்தை யுணர்த்திற்று. நல்லின்பம் — பேரின்பம். உறைதல் — வாழ்தல். வலம்வருதல் — பிரதக்ஷிணம் பண்ணுதல். குகை — மலைமுழை. மூர்த்தம் — வடிவம். மன்று — பொது. அது இங்குபஞ்சகிருத்தியங்களுக்கும் பொதுவிடமாகியசிதாகாயத்தைக்குறித்தது.

மனத்தில் மார்க்கவகை வாழ்த்துச் சுடர் சூக்ஷமமளித்து
அகமுவந் தாதரித்தருள வேண்டும்.

வகையொன்று மறிகிலே னிறைவனே சன்மார்க்க
  வகையொன்ற வருள் புரியவும்
வாழிமேல் வாழியென வாக்குக் கொடுத்தெனையும்
  வாழ்வித்து னருள் புரியவும்
சுகசுகா தீதச் சுயஞ்சோதி யாயெழுஞ்
  சுடரிடற் கருள் புரியவுஞ்
சும்மா விருக்கவுஞ் சொல்லாத சூக்ஷமாதி
  சூக்ஷமமெனற் கருள் புரியவும்
அகமகிழ்ந் திடவும்வந் தகமகன் றிடாதின்
  னகமுவந் தருள் புரியவும்
அஞ்சாதடாவென்று நெஞ்சோ டணைத்தணைத்
  தாதரித் தருள் புரியவும்
மகிழா மகிழ்ச்சியொடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுன தேசிக நாதனே.

ப—ரை. இறைவனே — தலைவனே, வகைஒன்றும் அறிகிலேன் — ஒருவகையையும் அறிந்திலேனாகியநான், சன்மார்க்க வகை ஒன்ற — சன்மார்க்க வகையையடையும்படி, அருள் புரியவும்—, வாழிமேல் வாழி என — வாழிமேல் வாழியென்று, வாக்குக் கொடுத்து — தேவரீர் திருவாக்கருளி, என்னையும் வாழ்வித்து — என்னையும் வாழச்செய்து, உன் அருள் புரியவும்—, சுகசுகாதீதம் — சுகசுகாதீதரூபமாய், சுயம் சோதியாய் — சுயஞ்சோதியாகி, எழும் — தோற்றுகிற, சுடர் இடற்கு — ஒளிசெய்தற்கு, அருள் புரியவும்—, சும்மா இருக்கவும் — சும்மாவிருக்கும்படியாகவும், சொல்லாத — சொல்ல வொண்ணாத, சூக்ஷ்மாதிசூக்ஷ்மம் — சூட்சுமத்தினும் அதிசூட்சுமமா யிருப்பதொன்றை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, அகம் மகிழ்ந்திடவும் — மனமகிழவும், வஞ்சகம் அகன்றிடவும் — வஞ்சகம் நீங்கவும், நின் அகம் உவந்து — உன்மன மகிழ்ந்து, அருள்புரியவும்—, அஞ்சாதடா என்று — பயப்படாதேயடாவென்று, நெஞ்சோடு, அணைத்து அணைத்து — மார்போ டணைத்தணைத்து, ஆதரித்து — காப்பாற்றி, அருள் புரியவும்—, மகிழா மகிழ்ச்சியொடு — களியாத களிப்போடு, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடி வாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. சன்மார்க்கம் — நன்னெறி. வாக்கு — ஆசிமொழி. சுகம் — இன்பம். சுகாதீதம் — இன்பத்தையுங் கடந்தநிலை. சுயஞ்சோதி — தானாகவே பிரகாசிக்கிற ஒளி. சூட்சுமம் — நுட்பம். அதிசூட்சுமம் — அதிநுட்பம். (கூ)

மனத்தினியற்கை யெந்நாளும் வாய்த்திடமாறுமற்
போதுமெனப் பொங்கவரவேண்டும்.

ஈசனே யன்பர்க்கு நேசனே நின்கருணை
யியற்கைபோ டருள் புரியவும்
எம்பிரானே யெமக் கிறைவனே நின்கருணை
யெந்நாளு மருள் புரியவும்
வாசனே ஞானோப தேசனே நின்கருணை
வாய்த்திடற் கருள் புரியவும்
வாதனே யோகனே யேகனே நின்கருணை
மாறும லருள் புரியவும்
போசனே போசமக ராசனே நின்கருணை
போதுமென வருள் புரியவும்
பூரணா னந்தமே சொந்தமாய் நின்கருணை
பொங்கநின் றருள்பு ரியவும்

மாசங்க டோறுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. ஈசனே—, அன்பர்க்கு நேசனே – அன்பர்க் கன்பனே, நின் கருணை இயற்கையோடு – உன் கிருபையாகிய இயற்கையுடன், அருள் புரியவும்—, எம்பிரானே—, எமக்கு இறைவனே—, நின்கருணை - உன் அருளை, எந்நாளும் – எக்காலத்திலும், அருள் புரியவும்—, வாசனே—, ஞானோபதேசனே – ஞானோபதேசம் செய்பவனே, நின்கருணை – உன்னருள், வாய்த்திடற்கு – கிடைக்கும்பொருட்டு, அருள் புரியவும்—, வாகனே – அழகனே, யோகனே – யோகநிலை யுள்ளவனே, ஏகனே – ஒன்று யிருப்பவனே, நின் கருணைமாறுமல்–உன் கிருபை மாறுபடாமல், அருள் புரியவும்—, போசனே - போசனே, போசமகராசனே – போஜ மஹராஜனே, நின்கருணை – உன் அருள், போதும் என – போதுமென்னும்படி, அருள் புரியவும்—, பூரண ஆனந்தமே – நிறைவாகிய ஆனந்தமே, சொந்தமாய் – சொந்தமாக, நின்கருணை பொங்க நின்று – உன் அருள் பெருகும்படி நின்று, அருள் புரியவும்—, மாசங்கள்தோறும் – எல்லாமாசங்களிலும், மெய் – உண்மையாகிய, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் – பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. பிரான் – உபகார குணமுள்ளவன். வாசன் – எங்கும் வியாபித்து வாழ்பவன். வாகு – அழகு. போஜன் – ஒரு சிறந்த அரசன். (சு)

மனம் முன்னின்று முத்தமிடத் தேசோன்மய சின்மயம்
அடிமைகொண்டாடி நின்றருள வரவேண்டும்.

முத்துநவ ரத்நமே முழுவயிர மலையேயென்
முன்னின்று னருள்பு ரியவும்
முச்சுடர் பரப்புசெம் பொற்கமல வடியைநான்
முத்தமிட வருள்பு ரியவுந்
சித்தனே சித்தர்தொழு முத்தனே செவியினுப
தேசமெற் கருள்பு ரியவுந்
தெக்ஷிணா மூர்த்தமே பக்ஷம்வைத் திக்கணஞ்
சின்மயம் மருள்பு ரியவும்
அத்தனே யப்பனே யையனே யுய்யவெனை
யடிமைகொண் டருள்பு ரியவும்
ஆனந்த மானபர மானந்த திருநடன
மாடிநின் றருள்பு ரியவும்

வைத்த கருணைக்குரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்றனருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. முத்து நவரத்தினமே முழுவயிரம் மலையே—முத்து முதலிய நவமணியே முழுவயிரமலையே, என் முன்னின்று உன் அருள் புரியவும்—என்முன் நின்று உனது அருள் செய்யவும், முச்சுடர் பரப்பும்—சோம சூரியாக்கினிகளாகிய மூன்று சுடர்களின் ஒளியை விரிக்கும், செம்பொன் கமலம் அடியை — செம்பொன்னைப்போன்ற தாமரையையொத்த பாதங்களை, நான் முத்தம் இட அருள் புரியவும்—நான் முத்தமிடும்படி அருள் செய்யவும், சித்தனே—சித்தபுருஷனே, சித்தர் தொழும் முத்தனே—சித்தபுருஷர்கள் வணங்கும் முத்த புருஷனே, செவியில் உபதேசம் எற்கு அருள் புரியவும்—செவியினிடத்து உபதேசம் எனக்குச் செய்யவும், தெக்ஷிணாமூர்த்தியே — தெக்ஷிணாமூர்த்தியே, இக்கணம் பக்ஷம் வைத்து — இந்தட்சணத்தில் பட்சம் வைத்து, சின்மயம் அருள் புரியவும் — ஞானமயமான நிலையைத்தரவும், அத்தனே அப்பனே ஐயனே—, உய்ய என்னை அடிமை கொண்டு அருள் புரியவும் — பிழைக்கும்படி என்னை உமக்கடிமையாகக் கொண்டு அருள் செய்யவும், ஆனந்தம் ஆன பரமானந்த திருநடனம் — ஆனந்தமாகிய பரமானந்தத் திருநடனத்தை, ஆடிநின்று அருள் புரியவும் — நீர் ஆடிக்கொண்டு நின்று எனக்கு அருள் செய்யவும், வைத்த கருணைக்கு உரிய—என்னிடத்து வைத்த கிருபைக் குரிமையான, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. முழுவயிரம்—தொளைக்காத வயிரம். ஆனந்தமான பரமானந்த திருநடனம் என்றது அளவற்ற பேரானந்தத்தைத் தருகிற திருநடனம் என்றபடி. (எ)

மனத்தை யிரட்சித்துத் தினந்தினங் கடாக்ஷித்தும்
பதிதந்து தூக்கித்தொழுதிட வரவேண்டும்.

திக்கற்ற பாவியைப் பக்கத்தில் வைத்துரட்
சித்துநல் லருள் புரியவுந்
திருவுள மிரங்கிநின் றிருவடி யளித்துத்
தினந்தினம் மருள் புரியவுங்
கைக்குள்வளர் நெல்லிக் கனிக்கு நிகராகக்
கடாக்ஷித்து னருள் புரியவுங்

கன்மந் தொலைத்தே கடத்தேற்றி வைத்துநற்
கதிதந்து னருள் புரியவுந்
துக்கக் கடற்கடந் தக்கரைப் படவெனைத்
தூக்கிவிட் டருள் புரியவுந்
துன்பங்க ளெல்லாந் தொலைத்தடிமை யுன்பதந்
தொழுதிடற் கருள் புரியவும்
வைக்குமனம் வைத்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. திக்கு அற்ற பாவியை பக்கத்தில் வைத்து — ஒரு திக்குமில்லாத பாவியான என்னை உமது பக்கத்தில் வைத்து, ரட்சித்து நல் அருள் புரியவும் — ரட்சித்து நல்ல அருள் செய்யவும், திரு உள்ளம் இரங்கி நின் திருவடி அளித்து — நீர் திருவுள்ளமிரங்கி உமது திருவடியைக் கொடுத்து, தினம் தினம் அருள் புரியவும் — நாள்தோறும் அருள் செய்யவும், கைக்குள் வளர் நெல்லிக்கனிக்கு நிகராக — கையிலிருக்கும் நெல்லிக்கனிக் கொப்பாக, கடாக்ஷித்து உன் அருள் புரியவும் — கடாட்சஞ்செய்து உமது அருள் செய்யவும், கன்மம் தொலைத்து கடைத்தேற்றிவைத்து — என் கர்மமானதைத் தொலைத்து என்னைக் கடைத்தேற்றிவைத்து, நல் கதி தந்து உன் அருள் புரியவும் — நல்ல கதியைக் கொடுத்து உமது அருள் செய்யவும், துக்கம் கடல் கடந்து அக்கரைபட — துக்கமாகிய கடலைக்கடந்து அக்கரையை யடையும்படி, என்னை தூக்கிவிட்டு அருள் புரியவும் — என்னைத் தூக்கிவிட்டு அருள் செய்யவும், துன்பங்கள் எல்லாம் தொலைத்து — துன்பங்களையெல்லாம் நீக்கி, அடிமை உன்பதம் தொழுதிடற்கு அருள் புரியவும் — அடிமையான நான் உமது பாதங்களைத் தொழுவதற்கு அருள் செய்யவும், வைக்கும் மனம் வைத்து — என் விஷயத்திலே வைக்கவேண்டிய மனத்தைவைத்து, மெய்தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கைக்குள் வளர் நெல்லிக்கனி — கரதலாமலகம் "அங்கையினெல்லிக் கனியெனக் காயினன்" என்றும். "கரதலாமலகமென்னச் சததமறமோன நிலைபெற்றவர்க ளுய்வர்காண்" என்றும். "கையினெல்லிக் கனிபோலக் காட்சியாக" என்றும், இவ்வாறு பிறவி அறிஞர் கூறுதலுங் காண்க. அக்கரை — சுகக்கரை, முத்திக்கரை. தூக்கிவிடல் — கைதூக்கிவிடல்.

(அ)

மனங்கைகாட்டித் தகுந்த சதாநந்த வறிவொன்று
அறிந்திட வரவேண்டும்.

காகமாய் நின்றுகத றிக்கதறி யழுமென்னைக்
கையணைத் தருள் புரியவுங்
கன்மிபடு கண்கலங் கந்தீர வுங்கருணை
காட்டிநின் றருள் புரியவுந்
தாய்கைக் குழந்தையென நீகைக்குள் வைத்துத்
தகுந்தநல் லருள் புரியவுஞ்
சத்தமுகி லெனவின்ப மாமழை சொரிந்திடு
சதானந்த மருள் புரியவும்
ஆகம புராணங்க ளாலுமறி தற்கரிய
வறிவொன்றை யருள் புரியவும்
அளகேச னேதுளப மணிமார்ப னேயுனை
யறிந்திடற் கருள் புரியவும்
வாகனே யேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. காகமாய் நின்று கதறி கதறி அழும் என்னை — காகம்போல நின்று கதறிக்கதறி அழப்பட்ட என்னை, கைஅணைத்து அருள் புரியவும் — கையாலணைத்து அருள் செய்யவும், கன்மிபடு கண்கலக்கம் தீர — கர்மத்தை யுடையேனை நான்படும் கண்கலக்கந் திரும்படி, உம் கருணை காட்டிநின்று அருள் புரியவும் — உமது கருணையைக் காட்டிநின்று அருள் செய்யவும், தாய் கைகுழந்தையென நீ கைக்குள் வைத்து — தாயின் கையிலிருக்கும் குழந்தையைப்போல நீர் உமது கைக்குள்ளே என்னைவைத்து, தகுந்த நல் அருள் புரியவும் — தகுந்ததான நல்ல அருள் செய்யும், சத்த முகில் என்ன இன்பம் மாமழை சொரிந்திடும் — சப்தமேகம்போல இன்பமயமான பெரிய மழை பொழிகின்ற, சதா ஆநந்தம் அருள் புரியவும் — எப்போதும் ஆனந்தத்தைத்தரவும், ஆகமம் புராணங்களாலும் அறிதற்கு அரிய — ஆகமங்களாலும் புராணங்களாலும் அறிவதற்கரிதாகிய, அறிவு ஒன்றை அருள் புரியவும் — அறிவு ஒன்றைத்தரவும், அளக ஈசனே — அளகாபுரிக்குத் தலைவரே, துளவம் அணிமார்பனே — துழாய்மாலைபொருந்திய அழகிய மார்பை யுடையவரே, உனை அறிந்திடற்கு அருள் புரியவும் — உம்மை யறிவதற்காக அருள் செய்யவும், வாகனே — அழகையுடையவரே, ஏகனே — ஒப்பற்றவரே, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ—று.

வி-ரை. சத்தமுகில் — எழு மேகங்கள். அவையாவன: சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்பன. இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ, என்பவற்றைப் பொழிவனவாம். ஆகமம், காமிகம், பவுட்கரம் முதலிய இருபத்தெட்டுமாம். புராணம் — மச்சம், கூர்மம், வராகம், சைவம், இலிங்கம் முதலிய பதினெட்டுமாம். (க)

மனக்கலிதீர்த்துக் கவிகையிட வாட்கொண்டறிந்து
முறவாக மூர்த்திகரமருள வரவேண்டும்.

கன்னலின் னமுதெனவு மின்பங் கொடுத்தெனது
கலிதீர்த்து னருள் புரியவுங்
காலூன்றி மழைபொழியு முகிலின மெனக்கருணை
கவிகையிட வருள் புரியவும்
அன்னையே யுன்னையே நம்பினே னாதரித்
தாட்கொண்டு னருள் புரியவும்
ஆருமெனை யாதரிப் பாரிலைப் பாரினி
லதுவறிந் தருள் புரியவும்
முன்னாக சொன்னதனை மன்னவர்கண் மன்னனே
முறையாக வருள் புரியவும்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனே
மூர்த்திகம் மருள் புரியவும்
வன்னிநிற மென்னமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கன்னல் இன் அமுது எனவும் இன்பம் கொடுத்து — கரும்பைப்போலவும் இனி அமிர்தத்தைப் போலவும் எனக்கு இன்பத்தைக் கொடுத்து, எனது கலிதீர்த்து உன் அருள் புரியவும் — என்னுடைய கலியைத் தீர்த்து உமது அருள் செய்யவும், கால் ஊன்றி மழைபொழியும் முகில் இனம் என — நிலைபெற்று மழைபெய்யும் மேகக்கூட்டம்போல, கருணை கவிகை இட அருள் புரியவும் — கருணையான குடைபிடிக்க அருள் செய்யவும், அன்னையே உன்னையே நம்பினேன் — தாய்போன்றவரே! உம்மையே நம்பினேன், ஆதரித்து ஆட்கொண்டு உன் அருள் புரியவும் — என்னை ஆதரித்து அடிமைகொண்டு உமது அருள் செய்யவும், பாரினில் ஆரும் என்னை ஆதரிப்பார் இல்லை — பூமியில் யாரும் என்னை ஆதரிப்பவர்களில்லை, அது அறிந்து அருள் புரியவும் - அதனையறிந்து அருள் செய்யும், முன்னாக சொன்னதனை — உமக்கு முன்னே நான் சொல்லிக்கொண்டதை,

மன்னவர்கள் மன்னனே — அரசர்களுக்கரசனே, முறையாக அருள் புரியவும் — வரிசையாகத்தரவும், முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனே — முப்பத்து மூன்றுகோடி தேவர்களுக்கும் முதல்வனானவரே, மூர்த்திகம் அருள் புரியவும் — உமது மூர்த்திகத்தைத்தரவும், வன்னிநிறம் என்னமெய் - அக்கினிநிறம்போல தேகத்தையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கன்னல் — கரும்பு. அது இங்கு அதன் சாற்றைக் குறித்தது. அன்றிச் சர்க்கரை யெனினுமாம். கலி — வறுமை. காலூன்றுதல்—வேரூன்றுதல். மூர்த்திகம் — திருவுரு. (௧0)

ஆ பாடல் - 128.

இ ர ண் டா வ து

தவ நிலை.

இதனு லெழுந்த வெவ்வகை வணக்கமும்
அதனு லாகிய வங்கமொத் திறமுமே
அமைதரு தவநிலை யணிபெற வருள்கெனச்
சமைதர விரந்து தாழ்ந்துநின் றுயர்த்தது.

மனம் போதித்துப் போதுமெனக் கறந்து கைகொடுத்துப்
பந்தாடப் பரப்பி வரவேண்டும்.

பொல்லாத காயமல் லாடாது நல்லறிவு
போதித்து வருள் புரியவும்
பொங்குமருண் மெய்ஞ்ஞான வனுபோக நிலையெலாம்
போதுமென வருள்புரியவும்
கல்லாவி னின்பால் பசிக்குப் புசிக்கக்
கறந்துதந் தருள்புரியவும்
கற்பவர்த் தேடியலை யாதபடி கற்பமுறை
கைகொடுத் தருள்புரியவும்
பல்லா யிரங்கோடி யண்டமுங் கைக்குள்ளே
பந்தாட வருள் புரியவும்
பட்டப் பகற்போல வெட்டவெளி யாயொளி
பரப்பிநின் றருள்புரியவும்

வல்லபஞ் சொல்லரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பொல்லாத காயமல் ஆடாது — இந்தப் பொல்லாத சரீரமானது என்னுடன் மல்லாடாமல், நல் அறிவு போதித்து உன் அருள் புரியவும் — நல்ல அறிவைப் போதித்து உம்முடைய அருள் செய்யவும், பொங்கும் அருள் மெய்ஞ்ஞானம் அனுபோகநிலை எல்லாம் — விர்த்தியடையும் அருளையுடைய மெய்ஞ்ஞானத்தின் அனுபோக நிலைகளெல்லாம், போதும் என அருள் புரியவும் — போதுமென்று சொல்லும்படி அருள் செய்யவும், நல் ஆவின் இன்பால் பசிக்கு புசிக்க — நற்பசுவின் இனிய பாலை பசிக்குப் புசிப்பதற்காக, கறந்து தந்து அருள் புரியவும் — கறந்துகொடுத்து அருள் செய்யவும், கற்பவர் தேடி அலையாதபடி — கற்குமவர்களைத் தேடியலையாத படி, கற்பமுறை கைகொடுத்து அருள்புரியவும் — கற்பமுறைகளைக் கையிற் கொடுத்து அருள் செய்யவும், பல் ஆயிரங்கோடி அண்டமும் — பற்பலவான அண்டங்களும், கைக்கு உள்ளே பந்துஆட அருள் புரியவும் — கைக்குள்ளே வைத்துப் பந்தாடும்படி அருள் செய்யவும், பட்டப்பகல்போல — நடுப்பகல் போல, வெட்டவெளியாய் ஒளிபரப்பி நின்று அருள் புரியவும் — பெருவெளியாகி ஒளிவிரித்து நின்று அருள் செய்யவும், சொல்லரிய வல்லபம் — சொல்வதற்கரிய வலிமையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத் தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. மல்லாடமல் — வாது செய்யாமல். அல்லாடாமல் எனப் பிரித்து அலையாமல் என்றுரைப்பினுமாம்.

மனமுப்பாழுன் முச்சுடர்சேவிக்கத் திறப்படத்
தத்துவஞ் சலியாமலருள வரவேண்டும்.

முத்தர்பணி செய்யவுஞ் சற்றேனு முப்பவு
முப்பாழி னருள் புரியவும்
மூச்சைப் பிடிக்கவுங் காய்ச்சற்ற பொன்னை
முச்சுடரி னருள் புரியவும்
சித்துச் சடங்களைத் தெரிசித்து நிற்கவுஞ்
சேவிக்க வருள் புரியவுந்
திருவரு ளிரங்கவுங் குருவடி வணங்கித்
திறப்படற் கருள் புரியவுந்

தத்துவக் கலைகளைப் பற்றறக் களையுமோர்
தத்துவ மருள் புரியவுஞ்
சலியாம லுன்னடிமை கேட்டதெல் லாமனஞ்
சலியாம லருள் புரியவும்
மத்தமத முற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. முத்தர் பணிசெய்யவும் – முத்தர்கள் பணியைச் செய்யவும், சற்றேனும் உய்யவும் – சிறிதாவது பிழைக்கவும், முப்பாழ் இன் அருள் புரியவும் – முப்பாழை யறியும் இனிய அருள் செய்யவும், மூச்சை பிடிக்கவும் – சுவாசத்தைப் பிடிக்கவும், காய்ச்சு அற்ற பொன்னுன முச்சுடரின் அருள் புரியவும் – புடமிட்டுத்தேறின பொன்போன்ற மூன்றுசுடர்களைப் போல அருள்செய்யவும், சித்து சடங்களை தெரிசித்து நிற்கவும் – சித்தையும் சடத்தையும் உள்ளபடிபார்த்து நிற்கவும், சேவிக்க அருள் புரியவும் – உன்னைச் சேவிப்பதற்காக அருள் செய்யவும், திருவருள் இரங்கவும் – திருவருளானது என்மேல் இரங்கவும், குரு அடிவணங்கி திறம்படற்கு அருள் புரியவும் – குருவின் அடிகளைவணங்கி திறமையடைவதற்கு அருள் புரியவும், தத்துவம் கலைகளைபற்று அற களையும் – தத்துவங்களாகிய கலைகளைப்பற்றில்லாமல் நீக்கும், ஓர் தத்துவம் அருள் புரியவும் – ஒருதத்துவத்தை யருள் செய்யவும், உன் அடிமை சலியாமல் கேட்டது எல்லாம் – உன் அடிமையான நான் சலியாமற் கேட்டவைகளையெல்லாம், மனம் சலியாமல் அருள் புரியவும் – நீரும் மனஞ்சலிக்காம லருள் செய்யவும், மத்தமதம் உற்ற – மத்தமதத்தையடைந்த, மெய்தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும்–என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி-ரை. காய்ச்சற்ற பொன் – புடமிட்டு மாற்றி னளவறியப்பட்ட பொன். சித்து – அறிவுடைப்பொருள். சடம் – அறிவிலாப் பொருள். தத்துவம் என்ற இரண்டனுள் முன்னையது தொண்ணூற்றாறு தத்துவங்களையும், பின்னையது உண்மைநிலையையும் உணர்த்தும். தொண்ணூற்றாறு தத்துவங்களாவன: ஆன்மதத்துவம் இருபத்துநான்கும். நாடிபத்தும். அவத்தை ஐந்தும். மலம் மூன்றும். குணம் மூன்றும். மண்டலம் மூன்றும். பிணி மூன்றும். விகாரம் எட்டும். ஆதாரம் ஆறும். தாது எழும். வாயுபத்தும். கோசம் ஐந்தும். வாயில் ஒன்பதுமாம். இவற்றை விரிப்பிற் பெருகுமாதலால் இம்மட்டில் நிறுத்தப்பட்டது. மத்தம் – உன்மத்தம். இது ஞானிகளுக்குள்ள முக்குணங்களுள் ஒன்று; முக்குணங்களாவன: பாலர்குணம், உன்

மத்தர்குணம், பசாசர்குணம். என்பன. "பாலருட னுன்மத்தர் பசாசர் குணம் வருமே" என்றார் பிறரும். (உ)

மனச்சித்திதந்து சித்தம்வைத்துப் பயந்தோடப்பண்ணி
நடனமிட நழுவிடாதருள வரவேண்டும்.

தேவரீர் திருவடிக் காளாக வட்டமா
சித்திதந் தருள் புரியவுஞ்
சித்தர்கண மெல்லா மெனக்கரு ளிரங்கவுஞ்
சித்தம்வைத் தருள் புரியவும்
பாவியடி யேன்செய்த பாவங்களெல்லாம்
பறந்தோட வருள் புரியவும்
பக்குவ மறிந்தெனைப் பக்குவ விசேடனாய்ப்
பண்ணிவைத் தருள் புரியவும்
நாவிட் டுரைக்கொணாச் சோதிநய னத்தூடு
நடனமிட வருள் புரியவும்
நம்பினே னையனே நட்டாற்றி லென்னைக்கை
நழுவிடா தருள் புரியவும்
மாவேக மாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தேவரீர் திருவடிக்கு ஆளாக — தேவரீர் திருவடிகளுக்கு அடிமையாகும்படி, அட்டமாசித்தி தந்து அருள் புரியவும் — அஷ்டமாசித்திகளுங் கொடுத்து அருள் செய்யவும், சித்தர்கணம் எல்லாம் எனக்கு அருள் இரங்கவும் — சித்தர்கள் கூட்டமெல்லாம் எனக்கு அருள் கொடுக்க மனமிரங்கவும், சித்தம் வைத்து அருள் புரியவும் — மனம்வைத்து அருள் செய்யவும், பாவி அடியேன் செய்த பாவங்கள் எல்லாம் — பாவியான அடியேன் செய்த பாவங்களெல்லாம், பறந்து ஓட அருள் புரியவும் — பறந்தோடும்படி அருள் செய்யவும், பக்குவம் அறிந்து — பக்குவதசையையறிந்து, என்னை பக்குவ விசேடனாய் பண்ணிவைத்து அருள் புரியவும் — என்னைப் பக்குவ விசேஷமுடையவனாகப் பண்ணிவைத்து அருள் செய்யவும், நாவிட்டு உரைக்க ஒண்ணாசோதி — நாவைக்கொண்டு சொல்ல முடியாத சோதியானது, நயனத்து ஊடு நடனம் இட அருள் புரியவும் — கண்களினிடத்து நடனஞ்செய்ய அருள் செய்யவும், நம்பினேன்—, ஐயனே — தலைவரே! உம்மையே நம்பினேன்—, நட்டாற்றில் என்னை கைநழுவவிடாது அருள் புரியவும் — நடு ஆற்றில் என்னைக் கைவிடாம லருள் செய்யவும், மாவேகமாக —

பெரிய வேகத்துடன், மெய்தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. பக்குவம் — பரிபாகம். இந்தப் பக்குவம், மந்தம், மந்ததரம் தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். பக்குவ விசேடமாவது இந் நான்கினுள்ளுஞ் சிறந்தது. அது அதிதீவிரபக்குவம். (ரு)

இயல்பிருந்து மெலிந்து மெய்ஞ்ஞானஞ் சிற்சுகஞ்
சாகாது செத்திடவரவேண்டும்.

இயல்புகெட் டோனாகி போனானலைந் திடா
தியல்பொன்ற வருள் புரியவும்
இலைசருகு பக்ஷணம் பண்ணியே காந்தமோ
டிருந்திடற் கருள் புரியவும்
வெயிலூ டுறைந்தெனது தேகமென் பென்பாய்
மெலிந்திடற் கருள் புரியவும்
மெய்த்தவசு மூட்டவும் பொய்த்தவசை யோட்டவு
மெய்ஞ்ஞான மருள் புரியவும்
செயலினை மறுக்கவு முயலினை யறுக்கவுஞ்
சிற்சுகம் மருள் புரியவும்
செத்தசவ மென்னக் கிடக்கவுஞ் சாகாது
செத்திடற் கருள் புரியவும்
மயில்வெட்கு நடனமொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. இயல்புகெட்டோன் — ஆகிபோல் தன்மை கெட்டவன்போல, நான் அலைந்திடாது இயல்பு ஒன்ற அருள்புரியவும் — நான் அலையாமல் என் தன்மை எனக்குப்பொருந்த அருள்செய்யவும், இலைசருகு பட்சணம்பண்ணி— இலையும் சருகும் உண்டு, ஏகாந்த மோடு இருந்திடற்கு அருள் புரியவும்— ஏகாந்தத்தோடிருப்பதற் கருள்செய்யவும், வெயில் ஊடு உறைந்து — வெயிலினிடத்திலிருந்து, எனது தேகம் என்பு என்பு ஆய் மெலிந் திடற்கு அருள்புரியவும் — என்னுடைய சரீரம் எலும்பெலும்பாகி மெலியும்படி அருள் புரியவும், மெய் தவசு மூட்டவும் — உண்மையான தவத்திற் சேர்க்கவும், பொய்தவசை ஓட்டவும் — பொய்யான தவத்தை நிவர்த்திக்கவும், மெய் ஞானம் அருள்புரியவும் — உண்மையான ஞானத்தைத்தரவும், செயலினை மறுக்கவும் — செய்கையை மறுக்கவும், முயலினை யறுக்கவும் — முயற்சியை நீக்க

வும், சிற்சுகம் அருள்புரியவும் — ஞானசுகத்தைக் கொடுக்கவும், செத்த சவம் என்ன கிடக்கவும் — செத்தபிணம்போலக் கிடக்கவும், சாகாது செத்திடற்கு அருள் புரியவும் — சாவாமற் சாவதற்கு அருள்புரியவும், மயில் வெட்கும் நடனமொடு — மயில் வெட்கமடையும் நடனத்துடன், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. இயல்பு — இயற்கை. அது ஞானானந்தங்களாகிய இயற்கை. மூட்டுதல் — விருத்தியடைவித்தல். சாவாது சாதல் — உடலிறவாது கருவிகரணாதிகளிறந் திருத்தல். (ச)

மனத்தைக்குவித்துங் கொடுங்கைதந் தருகணைத்து அவலமாகாமற்பார்த்துப் பதமருள வரவேண்டும்.

கொலைசெயெம னுக்குட் படாதென்னைக் கைக்குட்
குவித்துவைத் தருள்பு ரியவுங்
கோதைய ரிடுக்குங் கொடுங்கைதரு முன்னின்
கொடுங்கைதந் தருள்பு ரியவும்
அலைவாய்த் துரும்பென வலைந்தலகை யாகாம
லருகணைத் தருள்பு ரியவும்
அடியே னுனைத்தேடி யாசைகொண் டதுமவல
மாகாம லருள்பு ரியவும்
பலகா லிரந்தவென் பாலுமன் பான்முகம்
பார்த்துநல் லருள்பு ரியவும்
பன்மலர்க ளேயர்ச் சனைசெய்து தொழவுநின்
பாதமல ரருள் புரியவும்
மலைபோ லெழுந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. கொலை செய் எமனுக்கு உட்படாது — கொலை செய்யும் எமனுக்கு உட்படாது, என்னை கைக்குள் குவித்து வைத்து அருள்புரியவும் — என்னைக் கைக்குள்ளே சேர்த்துவைத்து அருள் செய்யவும், கோதையர் இடுக்கும் கொடுங்கை தருமுன் நின் கொடுங்கை தந்து அருள்புரியவும் — மாதர் இடுக்கில் தமது கொடுங்கை தருமுன்னே, உன் கொடுங்கைதந்து அருள்செய்யவும்—, அலைவாய் துரும்பு என்ன அலைந்து — அலையினிடத்துப் பட்ட துரும்பைப்போல அலைந்து, அலகையாகாமல் அருகு அணைத்து அருள்புரியவும் — பேயாகாமல் அருகே யணைத்து அருள்செய்யவும், அடி

யேன் உன்னைதேடி ஆசைகொண்டதும் – அடியேன் உம்மைத்தேடி யாசை கொண்டதும், அவலம் ஆகாமல் அருள்புரியவும் – வீணாகாம லருள்புரியவும், பலகால் இரந்த என்பாலும் – பலமுறையும் யாசித்த என்னிடத்திலும், அன்பால் முகம்பார்த்து நல் அருள் புரியவும் – அன்புடன் முகம்பார்த்து நல்ல அருள்செய்யவும், பல் மலர்கள் தூவி அர்ச்சனைசெய்து தொழவும் – பலமலர் களைச்சொரிந்து அர்ச்சனைசெய்து வணங்கவும், நின்பாதம் மலர் அருள் புரியவும் – உமது பாதமலர்களைத்தரவும், மலைபோல்எழுந்த – மலையைப்போலச் சலிப்பின்றியெழுந்த, மெய் தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கொடுங்கையென்னும் இரண்டனுள் முன்னது கொடியகை யெனவும், பின்னது வளைந்த கையெனவும் பொருள்படும். அலைகடல் எனினுமாம். பல்மலர்கள் என்றது – பல வகையாகிய மலர்கள் என்றபடி. இந்தப்பல்மலர்களும் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, என்னும் நால்வகை மலர்களுள்ளே யடங்கும். கோட்டுப்பூ – சண்பகம். பாதிரி முதலியன. கொடிப்பூ – மல்லிகை முல்லை முதலியன. நீர்ப்பூ – தாமரை, குவளை முதலியன. நிலப்பூ – தும்பைமுதலியன. இந்நிலப்பூவை செடிப்பூவென்றுங் கூறுவர். (௫)

மனத்தொழும்பு துலங்கிக் கசப்பாகக் கழன்றிட
வெல்லா மெண்ணாமல் வரவேண்டும்.

துச்சனே னாயினும் பட்சம்வைத் தென்றனைத்
தொழுதுகொண் டருள்பு ரியவும்
துரியமா நின்றதுரி யாதீத செஞ்சுடர்
துலங்கிடற் கருள் புரியவும்
கைச்சரச மானசிற் றின்ப வனுபோகங்
கசப்பாக வருள் புரியவும்
கனகவென் றுனந்த பாஷ்பமிரு கண்ணிற்
கழன்றிடற் கருள் புரியவும்
எச்சிற்ற னம்பண்ண வேண்டாமெ னையனே
யெல்லாநீ ரருள் புரியவும்
என்னகுறை வந்துபோ மென்றெண்ணு நீரொன்று
மெண்ணாம லருள் புரியவும்
மைச்சினிச் சரசமொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. துச்சனேன் ஆயினும் பக்ஷம்வைத்து — நான் அற்பனாயினும் என்னிடத்தில் பக்ஷம் வைத்து, என்றனை தொழும்புகொண்டு அருள் புரியவும் — என்னை யடிமைகொண்டு அருள்செய்யவும், துரியமாகின்ற துரியாதீத செஞ்சுடர் — துரியமாகநின்ற துரியாதீதச் செஞ்சுடரானது, துலங்கிடற்கு அருள் புரியவும் — விளங்குவதற் கருள்செய்யவும், கைசரசம் ஆன சிற்றின்ப அனுபோகம் — கைச்சரசமான சிற்றின்ப அனுபோகமானது, கசப்பு ஆக அருள்புரியவும் — கசப்பாகும்படி அருள்செய்யவும், ஆனந்தபாஷ்பம் களகள என்று — ஆனந்தபாஷ்பமானது களகள என்று, இரு கண்ணில் கழன்றிடற்கு அருள்புரியவும் — என் இரண்டு கண்களிலும் விழுவதற்கு அருள் செய்யவும், எச்சில்தனம் பண்ண வேண்டாம் — எச்சிற்றனம் செய்ய வேண்டாம், என் ஐயனே எல்லாம் நீர் அருள் புரியவும் — எனது சாமியே எல்லாவற்றையும் நீரே கொடுக்கவும், என்னகுறை வந்துபோம் என்று எண்ணுநீர் — உமக்கு என்ன குறைவு வந்து விடுமென் றெண்ணுகிறீர், ஒன்றும் எண்ணுமல் அருள்புரியவும் — அப்படி ஒன்று மெண்ணுதபடிக்கு அருள்செய்யவும், மைச்சினி சரசமொடு — மைத்துனி சரசத்துடன், தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வர வேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ—று.

வி—ரை. துச்சன் — அற்பன். தொழும்பு — அடிமை. கசப்பாக என்றது வெறுப்பாக என்றபடி. ஆனந்தபாஷ்பம் — ஆனந்தக்கண்ணீர். எச்சிற்றனம்— அற்பத்தனம். (க)

மனம்புகழ்ந்திடப் பொருடந்து நிராகரித்து நெஞ்சுற
வெதார்த்த மிருந்திட வரவேண்டும்.

புகழுவார் புகழும் புகழ்ந்துரிய நின்னைப்
புகழ்ந்திடற் கருள்பு ரியவும்
புத்திக்கு மெட்டாது புத்திக்கு ளுற்றவான்
பொருடந்தன ருள்பு ரியவும்
நிகழ்பந்த தன்னையும் நிர்த்தூளி யாகிட
நிராகரித் தருள்பு ரியவும்
நிருமல சிதாகாச நிஷ்பிரபஞ் சப்பொருளென்
னெஞ்சுறவு னருள்பு ரியவும்
இகபர மிரண்டென்று வகையுண்ட நீதெனு
மெதார்த்தத்தொ டருள்பு ரியவும்
என்னுள் ளிருக்குமெங் கோமானெனன் னுள்ளே
யிருந்திடற் கருள்பு ரியவும்

மகிழ்வோ டெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. புகழுவார் புகழும் புகழ்க்கு உரிய—புகழுமவர்கள் புகழும் புகழ்க்குரியவரான, நின்னை புகழ்ந்திடற்கு அருள்புரியவும்—உம்மைப் புகழுவதற்கு அருள் செய்யவும், புத்திக்கும் எட்டாது புத்திக்குள் உற்ற—புத்திக்கும்எட்டாமல் புத்திக்குள்ளே பொருந்திய, வான் பொருள் தந்து உன் அருள்புரியவும்—உயர்ந்த பொருளைத் தந்து உமது அருளைத் தரவும், நிகழ் பந்துதன்னையும்-பொருந்திய பந்துக்களையும், நிர்த்தூளி ஆகிட நிராகரித்து அருள்புரியவும்—நிர்த்தூளியாகும்படி நிராகரித்து அருள்செய்யவும், நிருமல சிதாகாச நிஷ்பிரபஞ்சப் பொருள்—நிர்மலமாய் ஞானகாச மயமான நிஷ்பிரபஞ்சப் பொருளானது, என் நெஞ்சு உற உன் அருள்புரியவும்—என் நெஞ்சிற்பொருந்த உமது அருளைக்கொடுக்கவும், இகம்பரம் இரண்டு என்று வகைஉண்டு—இகபரம் என்று இரண்டு வகையுண்டு, அது இது என்னும் எதார்த்தத்தோடு அருள்புரியவும்—அந்தவகை இது என்னும் எதார்த்தத்துடன் அருள்செய்யவும், என் உள் இருக்கும் எம் கோமான்—என் உள்ளத்திலிருக்கும் எமது தலைவன், என் உள்ளே இருந்திடற்கு அருள் புரியவும்—என் உள்ளத்திருப்பதற் கருள்புரியவும், மகிழ்வோடு எழுந்து—சந்தோஷத்துடனெழுந்து, மெய் தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மா குணங் குடிவாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. புகழுமவர்—புகழ்தற் குரிய ஞானியர். நிர்த்தூளியாதல்—மிகுதியாய்ப்பொடிபடல். நிராகரித்தல்—விலக்கல். எதார்த்தம்—உண்மை.

மனத்தைக் கரையேற்றிக் கைக்கொண்டு சமூகந்
தன்மயம்போனின்ற பூரணவருள் வரவேண்டும்.

கங்கற்ற வாழாழி வங்கத்தை யொத்தெனைக்
கரையேற்றி யருள்பு ரியவுங்
கையைக் கொடுக்கவுங் கையைப் பிடிக்கவுங்
கைக்கொண்டு னருள்பு ரியவுஞ்
சங்கைதரு சங்கத்தை நீக்கவுஞ் சங்கைதரு
சமூகம்வைத் தருள்பு ரியவும்
தட்டாத நிஷ்டைமீ திஷ்டமொ டிருத்தவுந்
தன்மயம் மருள்பு ரியவும்
பொங்குஞ் செழுஞ்சுடர் பொருந்துகர்ப் பூரமது
போனின்ற தருள்பு ரியவும்

பொன்னடியும் வாழியுன் புண்ணியமும் வாழிபரி
பூரணு வருள்பு ரியவும்
மங்களந் தங்குமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கங்கு அற்ற ஆழ் ஆழி வங்கத்தை ஒத்து — கரையற்றதாய் ஆழமுடைய கடலின் மரக்கலத்தையொத்து, என்னை கரையேற்றி அருள் புரியவும் — என்னைக் கரையேற்றி அருள் செய்யவும், கையை கொடுக்கவும் — கையைபிடிக்கவும், நீ உன் கையைக் கொடுக்கவும் — நான் உன் கையைப் பிடிக்கவும், கைக்கொண்டு உன் அருள் புரியவும் — கைவசமாக்கிக்கொண்டு உமது அருளைத்தரவும், சங்கைதரு சங்கத்தை நீக்கவும் — சந்தேகந்தரும் கூட்டத்தை நீக்கவும், சங்கைதரு சமுகம்வைத்து அருள் புரியவும் — அடியார் சங்கியைத்தரும் உன் சமுகத்தில் வைத்து அருள் செய்யவும், தட்டாத நிஷ்டைமீது இஷ்டமோடு இருக்கவும் — தடையில்லாத நிஷ்டையில் இஷ்டத்துடனிருக்கவும், தன்மயம் அருள் புரியவும் — தன் மயத்தைக் கொடுக்கவும், பொங்கும் செஞ்சுடர் பொருந்து கர்ப்பூரமதுபோல் நின்றது — விர்த்தியடையும் செழுமையான பிரகாசமுடைய கர்ப்பூரத்தைப் போல் நின்றதை, அருள் புரியவும் — கொடுக்கவும், பொன் அடியும்வாழி — உமது அழகிய பாதங்களும் வாழி, உன் புண்ணியமும் வாழி — உமது புண்ணியமும் வாழி, பரிபூரணு அருள் புரியவும் — எங்கும் பரிபூரணமாக நிறைந்திருப்பவரே நீர் அருள் செய்யவும், மங்களம் தங்கும் — மங்களகரம் பொருந்திய, மெய் தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. வங்கம் — மரக்கலம் (கப்பல்.) சங்கையிரண்டனுள் பின்னது சங்கியையெனப் பொருள்படும்; சங்கியை — எண். (அடியார்தொகை.) சுடர் பொருந்து கர்ப்பூரம் — கர்ப்பூரதீபம். "போனலுங் கர்ப்பூர தீபம்போல" என்றார் மேலோர். மங்களம் — மங்கலகுணங்கள் எனினும் பொருந்தும். ()

மனந்தனைக்கொண்டு தாற்பரியம்பாய்ந்து பருவரல்
தொலைந்து தொடக்கற வரவேண்டும்.

தஞ்சமே தஞ்சமென் றடையுமென் னஞ்சமே
தனைக்கொண்டு னருள்பு ரியவும்
தற்பரஞ் சிற்பரத் தட்பரவி நிற்பதோர்
தாற்பரிய மருள்பு ரியவும்

பஞ்சவர் ணப்பரஞ் சோதிகிளரிப்பத்தி
பாய்ந்திடற் கருள்புரியவும்
பன்மயத் துட்பரவு தன்மயத் துட்பரவு
பருவமொன் றருள் புரியவுந்
துஞ்சுமொளி கொஞ்சவும் நெஞ்சமும் வஞ்சந்
தொலேந்திடற் கருள்புரியவும்
துக்கவலே வீசுமுலே மின்னார்க ளாசைத்
தொடக்கறற் கருள்புரியவும்
வஞ்சியரு மெஞ்சவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. தஞ்சமே தஞ்சம் என்று அடையும் – தஞ்சமே தஞ்சம் என்று சரணடையும், என் அஞ்சலிதனைக்கொண்டு உன் அருள் புரியவும் – என்னுடைய அஞ்சலியை யேற்றுக்கொண்டு உமது அருளைச்செய்யவும், தற்பரம் சிற்பரத்துள் பரவிநிற்பது – தற்பரமானது சிற்பரத்தில் வியாபித்து நிற்பதாகிய, ஓர் தாற்பரியம் அருள் புரியவும் – ஒரு தாற்பரியத்தை யருள் செய்யவும், பஞ்சவர்ண பரஞ்சோதி கிளரி – ஐந்து வர்ணமுடைய பரஞ்சோதியானது உயர்ந்து, பத்திபாய்ந்திடற்கு அருள் புரியவும் – என்னுடைய பத்தியில் பிரவேசிப்பதற்கு அருள் செய்யவும், பல் மயத்துள் பரவு – பலவான மயங்களில் பரவுவதான, தன்மயத்துள் பரவு – தன்மயத்தில் பரவும், பருவம் ஒன்று அருள் புரியவும் – பருவமொன்றை யருள் செய்யவும், துஞ்சும் ஒளி கொஞ்சவும் – நிலேபெற்ற ஒளியானது கொஞ்சவும், நெஞ்சமும் வஞ்சம் தொலேந்திடற்கு அருள் புரியவும் – நெஞ்சமும் வஞ்சயில்லாமலிருப்பதற்கு அருள் செய்யவும், துக்கம் வலேவீசும் முலே மின்னார்கள் – துக்கத்தைத்தரும் வலேயைவீசும் முலேகளையுடைய பெண்களது, ஆசை தொடக்கு அறற்கு அருள் புரியவும் – ஆசையாகிய சம்பந்தம் நீங்குதற்கு அருள் செய்யவும், வஞ்சியரும் எஞ்சவும் – வஞ்சிக்கொடிபோன்ற பெண்களும் நாணவும், தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகனே—, எ-று.

வி-ரை. தஞ்சம் – புகலிடம். அஞ்சலி – கைகுவித்தல். தாற்பரியம் – கருத்து. கிளர்தல் – விளங்குதல். (உயர்தல்.) பன்மயம் – பலவுருவம். தன்மயம் – தத்ரூபம். பருவம் – பக்குவம். தொடக்கு – சம்பந்தம். (௬)

மனதுக்குச் செல்வந்திறந்து முகூர்த்த முடிசூட்டி
ஜெயந்தந்து ஜெயமாக வரவேண்டும்.

தேனைப் பழித்தபே ரின்பந் தரும்பெருஞ்
செல்வமொன் றருள்பு ரியவுஞ்
சின்மயச் சிந்தா மணிப்பொக்கி ஷத்தைத்
திறந்தளித் தருள்பு ரியவும்
மோனசிங் காசன திபனாக வைத்திட
முகூர்த்தமிட் டருள்பு ரியவும்
முச்சுடர் பரப்பியொளி பத்திபா யும்மகுட
முடிசூட்டி யருள்பு ரியவுஞ்
சேனை சமுத்திரத் தொடுநின்று வாழ்த்திச்
செயந்தந்து னருள்பு ரியவும்
ஜெயஜெயா ஜெயஜெயா ஜெயஜெயா வென்றடிமை
ஜெயமா கவருள்பு ரியவும்
வானனைய கருணைகொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. தேனை பழித்தபேர் இன்பந்தரும் – தேனைப் பழித்த பெரிய இன்பத்தைக் கொடுக்கும், பெருஞ் செல்வம் ஒன்று அருள் புரியவும் – பெரிய செல்வ மொன்றைக் கொடுக்கவும், சின்மயம் சிந்தாமணி பொக்கிஷத்தை – ஞானமாகிய சிந்தாமணியைப் போன்றதான பொக்கிஷத்தை, திறந்து அளித்து அருள் புரியவும் – திறந்து கொடுத்து அருள் செய்யவும், மோனசிங்காசன அதிபனாகவைத்திட – மௌனமாகிய சிங்காசனத்துக்குத் தலைவனாக வைக்கும்பொருட்டு, முகூர்த்தமிட்டு அருள் புரியவும் – முகூர்த்தம் வைத்து அருள் செய்யவும், முச்சுடர்பரப்பி ஒளிபத்திபாயும் – மூன்று சுடர்களைவிரித்து ஒளியின் வரிசைபாயும், மகுடமுடிசூட்டி அருள்புரியவும் – மகுடத்தைச் சிரசிற்சூட்டி அருள்செய்யவும், சேனைசமுத்திரத்தோடு நின்று – சேனைசமுத்திரத்துடன் நின்று, வாழ்த்தி செயம்தந்து உன் அருள் புரியவும் – வாழ்த்தி செயத்தைக்கொடுத்து உமது அருளைக் கொடுக்கவும், ஜெய ஜெயா ஜெயஜெயா ஜெயஜெயா என்று—, அடிமை ஜெயம் ஆக அருள் புரியவும் – அடிமையான நான் ஜெயமடையும்படி அருள் செய்யவும், வான் அனைய கருணைகொடு – மேகம்போன்ற கருணையைக்கொண்டு, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. தேனையென்றது தேனின் சுவையை. சிந்தாமணி — நினைத்தவையாவுங் கொடுப்பதோர்மணி, இது இந்திரன் சமூகத்துள்ளது. சேனாசமுத்திரம் — சமுத்திரம் போன்றசேனை. வான் — மேகம். கைம்மாறு வேண்டாத கருணையாதலால் 'வானனைய கருணை' என்றார். (௧0)

ஆக பாடல் - 138.

மூன்றாவது.

துறவினிலை.

நினைப்பும் விளிப்பு நீத்தலுந் தனிப்பு
மனைத்தினு மமைத்திட் டாய்ந்தாய்ந்து நோக்கி
விரத மவுனம் விருப்பொடு வெறுப்பெனும்
இரத மமையா தெழுந்துவெட் டகமும்
பற்றிய தவநிலை பதிந்த பெருநிலை
சுற்றிய மேன்மைத் துறவா கையினால்
அத்துற வியல்பினை யாண்டகை யருள்கென
வெத்திறத் தினுங்குறை யிரந்திரந் துயர்த்தது.

மனங்களைக்கண் டாண்டகல ஒதுக்கியுறைந்திட
வரவேண்டும்.

காமக்கு ரோதமோ கக்கிளை களைந்துநான்
களைதீர வருள்பு ரிபவுங்
கரையாத நெஞ்சக் களிம்பெலாந் துரிசறந்
கண்டுநல் லருள்பு ரியவும்
ஆமைமீன் பறவைபோ லடியேனை யாதரித்
தாண்டணைத் தருள்பு ரியவும்
ஆசைப் பசாசமெனை யணுகா தடித்தடித்
தகலவிட் டருள்பு ரியவும்
ஓமங்கண் முதலான நியமங்க ளெல்லா
மொதுக்குவித் தருள்பு ரியவும்
ஊருங்கு ளூர்திரிந் தலையாம னுமதரு
ளுறைந்திடற் கருள்பு ரியவும்

மாமேரு வொத்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. காமம் குரோதம் மோகம் இனை களைந்து — காமம் குரோதம் மோகம் ஆகிய உறவைநீக்கி, நான் களைதீர அருள் புரியவும் — நான் இளைப்பு தீரும்படி அருள் செய்யவும், கரையாத நெஞ்சம் களிம்பு எல்லாம் — கரை யாத மனத்தின் தோஷமெல்லாம், துரிசுஅற கண்டு நல் அருள்புரியவும் — பற்றற நீங்கும்படிபார்த்து நல்ல அருளைத்தரவும், ஆமை மீன் பறவை போல் — ஆமைமீன் பறவைகள் போல, அடியேனை ஆதரித்து ஆண்டு அணைத்து அருள் புரியவும் — அடியேனை ஆதரவுசெய்து அடிமைகொண்டு அணைத்து அருள் செய்யவும், ஆசை பசாசம் என்னை அணுகாது — ஆசை யான பேய் என்னைச் சேராமல், அடித்து அடித்து அகலவிட்டு அருள் புரியவும் — பலமுறைபு மடித்துத் தூரத்திற் போகவிட்டு அருள் செய்யவும், ஓமங்கள் முதலான நியமங்கள் எல்லாம் — யாகங்கள் முதலிய நியமங்களை யெல்லாம், ஒதுக்குவித்து அருள் புரியவும் — ஒதுங்கும்படிசெய்து அருள் செய்யவும், ஊருக்குள் ஊர்திரிந்து அலையாமல் — ஊருக்குள் ஊராகத் திரிந்து அலையாமல், உமது அருள் உறைந்திடற்கு அருள்புரியவும் — உமது அருளில் பொருந்தி யிருப்பதற்கு அருள் செய்யவும், மாமேரு ஒத்த — மகம் மேருவைப்போன்ற, மெய்தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. களிம்பு — களங்கம். ஆமை மீன் பறவைபோல் ஆதரித்து ஆண்டு அணைத்து என்றது ஆமையைபோல ஆதரித்து, மீன்போல ஆண்டு, பறவைபோல அணைத்து என்றபடி. காமியகன்மங்களாகிய ஓமங்கள் முத லிய யாவும் முத்திநெறிக்குத் தடையாதலால், 'ஓமங்கள் முதலான நியமங்க ளெல்லா மொதுக்குவித் தருள் புரியவும்' என்றார். ஊருக்குளூர் — ஊர் தோறும். (க)

மனந்திந்துசேர்ந்து பக்குவம் பத்தியக்காடுறை
கனன்மூட்ட வரவேண்டும்.

தேய்ந்திட மீராறு கலைகளும் மனமாயை
தீய்ந்திடவு மருள்பு ரியவும்
தீராத வல்வினைக டந்துதிரு வடியினிற்
சேர்ந்திடற் கருள்பு ரியவும்
பாய்ந்தேற வும்வாசி நான்றேற ம்பெரும்
பக்குவ மருள்பு ரியவும்

பத்தியுட் சித்தியும் முத்தியின் முற்றுமோர்
பத்தியு மருள்பு ரியவும்
காய்ந்தசரு கிலைபுனற் காய்கனிக ளுண்டுண்டு
காடுறைய வருள்பு ரியவும்
கட்டையைச் சுட்டுக் கருக்குமெய்ஞ் ஞானமாங்
கனன்மூட்டி யருள்புரி யவும்
மாய்ந்துமா யாதமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப—ரை. ஈராறு கலைகளும் தேய்ந்திடவும் — பன்னிரண்டு கலைகளும் தேய்வடையவும், மனமாயை தீய்ந்திடவும் அருள் புரியவும் — மனத்திலுள்ள மாயையானது தீயும்படியாகவும் அருள் செய்யவும், தீராத வல்வினைகள் தீர்ந்து — தீராத வலியவினைகள் தீர்ந்து, திருவடியினில் சேர்ந்திடற்கு அருள்புரியவும் — உமது திருவடியில் சேர்ந்து விடுவதற்கு அருள்செய்யவும், வாசிபாய்ந்து ஏறவும் நான் தேறவும் — வாசி குதித்தேறவும் நான் தெளிவடையவும், பக்குவம் அருள் புரியவும் — பக்குவநிலையைக் கொடுக்கவும், பத்தியுள் சித்தியும் — பக்தியில் சித்தியும், முத்தியில் முற்றும் ஓர் பத்தியும் அருள்புரியவும் — முக்தியில் முடியும் ஒருபக்தியும் கொடுக்கவும், காய்ந்தசருகு இலை புனல் காய் கனிகள் உண்டு உண்டு — உலர்ந்தசருகும் இலையும் நீரும் காயும் பழமும் பலமுறையும் உண்டு, காடு உறைய அருள் புரியவும் — காட்டிலிருக்க அருள் செய்யவும், கட்டையை சுட்டு கருக்கும் — கட்டையைச் சுட்டுக் கரியாக்கும், மெய்ஞானமாம் கனல்மூட்டி அருள் புரியவும் - உண்மை ஞானமாகிய அக்கினியைமூட்டி அருள் செய்யவும், மாய்ந்து மாயாத — கெட்டுங்கெடாத, மெய்தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகேவரவேண்டும், மாகுணங் குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத் தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கட்டை — சரீரம். கட்டையைச் சுட்டுக் கருக்குதலாவது — சரீரசம்பந்தமாகிய பிறவியையொழித்தல். மாய்ந்தும் மாயாத மெய்த்தவம்— உடலழியவும் தான் அழியாதிருப்பதாகிய மெய்த்தவப்புகழ். (உ)

மனத்தின் பேர்பிடுங்கி நலநாளுதிநீறச்
சித்தித்திட வரவேண்டும்.

பேயைப் பழித்தபெண் பேய்கொண் டிடார்கொண்ட
பேரொன்று மருள்பு ரியவும்
பிள்ளைக ளெனுங்கூளி பலகூளி யென்னைப்
பிடுங்கிடா தருள்பு ரியவும்

நாயைப் பழித்தபேய் நாயினுங் கடையே
னலம்பெறற் கருள்பு ரியவும்
நல்லரு ளிரங்குமுன் பாதார விந்தமெந்
நாளுமெற் கருள்பு ரியவும்
தீயைப் பழித்தசெந் தீயவஞ் ஞானமாந்
தீநீற வருள்பு ரியவும்
சித்தம்வைத் தத்தனே சித்திதரு முத்திசித்
தித்திடற் கருள்பு ரியவும்
மாயைப் பழிப்பற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப-ரை. பேயைபழித்த பெண்பேய் கொண்டிடார்கொண்ட — பேயைப் பழித்ததான பெண் பேய் கொள்ளாதவர்கள் கொண்டிருக்கும், பேர் ஒன்றும் அருள்புரியவும் — ஒருபேரைக் கொடுக்கவும், பிள்ளைகள் என்னுங் கூளி— பிள்ளைகளென்னுங் கூளிகளில், பலகூளி என்னை பிடுங்கிடாது அருள் புரியவும் — பலகூளிகள் என்னைப் பிடுங்காதபடிக்கு அருள்செய்யவும், நாயைப் பழித்த பேய் நாயினும் கடையேன் — நாயைப்பழித்த பேய்நாயைப் பார்க்கிலுங் கடைப்பட்டவனான நான், நலம்பெறற்கு அருள்புரியவும் — நன்மையைப்பெறுவதற்கு அருள்செய்யவும், நல் அருள் இரங்கும் உன் பாதாரவிந்தம் — நல்ல அருளுடன் மனமிரங்கும் உமது பாத தாமரைகளை, நாளும் எற்கு அருள்புரியவும் — எக்காலத்தினும் எனக்கு அருள்செய்யவும், தீயை பழித்த — அக்கினியைப் பழித்த, செம்தீய அஞ்ஞானமாம் — செந்தீயான அஞ்ஞானமாகிய, தீநீற அருள் புரியவும் — தீ நீறும்படி அருள் செய்யவும், அத்தனே — தலைவரே, சித்தம்வைத்து — திருவுள்ளம் வைத்து, சித்தி தரும் முத்தி — சித்தியைத் தரும் முத்தியானது, சித்தித்திடற்கு அருள்புரியவும்— சித்திப்பதற்கு அருள் செய்யவும், மாயை பழிப்பு அற்ற — மாயையான தோஷமில்லாத, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி-ரை. பெண் பேய் கொண்டிடார் — பெண்ணாசை யற்ற ஞானவான்கள். கூளி — பெரும்பருந்து. நீறுதல் — நீற்றுச் சாம்பலாதல். சித்தித்தல் — பலித்தல். (கூ)

மனம் நிலையாகிறுத்திப் பாழாகப்பருவம்
அறைந்தானந்த மருளவரவேண்டும்.

நிசமான தெய்வமுனை யன்றியுண் டென்றடிமை
நினையாம லருள்பு ரியவும்
நீர்க்குமிழி யொத்தகா யத்தைநிலை யன்றென
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
பசுபாச பாசமும் பாவையர்க ணேசமும்
பாழாக வருள்பு ரியவும்
பத்திமார்க் கந்தரும் முத்திமோ கந்தரும்
பருவமொன் றருள்பு ரியவும்
அசரசர பேதமா யாடுவது மீதென்
றறைந்தறைந் தருள்பு ரியவும்
அஞ்ஞான மூடந் துறக்கவு மெய்ஞ்ஞான
வானந்த மருள்பு ரியவும்
வசமான தேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. நிசம் ஆன தெய்வம் — உண்மையான தெய்வம், உன்னை அன்றி உண்டுஎன்று — உம்மை யல்லாமல் வேறே யொன்றுண்டென்று, அடிமை நினையாமல் அருள் புரியவும் — அடிமையான நான் நினையாதபடிக்கு அருள் செய்யவும், நீர் குமிழி ஒத்த காயத்தை — நீரிலெழுந்த மொக்குளைப்போன்ற சரீரத்தை, நிலை அன்று என — நிலையல்ல வென்று, நிறுத்தி வைத்து அருள் புரியவும் — நிலையாகவைத்து அருள் செய்யவும், பசுபாசபாசமும் — பசுபாசங்களின் விருப்பமும், பாவையர்கள் நேசமும் — பெண்கள் ஆசையும், பாழ் ஆக அருள்புரியவும் — பாழாகும்படி அருள்செய்யவும். பத்திமார்க்கம் தரும் — பக்திமார்க்கத்தைக் கொடுக்கும், முத்தி மோகம்தரும் — முத்தி யாசையைக் கொடுக்கும், பருவம் ஒன்று அருள்புரியவும் — ஒரு பருவத்தைக் கொடுக்கவும், அசரம் சரம்பேதமாய் ஆடுவதும் — அசரசர பேதங்களாய் ஆடி வருவதும், ஈதுஎன்று அறைந்து அறைந்து அருள் புரியவும் — இதுதானென்று சொல்லிச் சொல்லி அருள் செய்யவும், அஞ்ஞானமூடம் துறக்கவும் — அஞ்ஞானமாகிய மூடமானது நிவர்த்தியாகவும், மெய்ஞ்ஞான ஆனந்தம் அருள்புரியவும் — மெய்ஞ்ஞான ஆநந்தத்தைக் கொடுக்கவும், வசம்ஆன தேகனே — வசப்பட்ட தேகத்தை யுடையவரே, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும்,

மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பாவையர்கள் — பிரதிமைபோலும் உருவமுடைய மாதர். அசரம் — நிலையியற் பொருள். சரம் — இயங்கியற் பொருள்: மூடம் — அறியாமை. வசமானதேகன் — அழகாகிய சரீரத்தை யுடையவன் எனினும் பொருந்தும். (ச)

மனமெய்தி யெண்ணம் மண்ணாகமடியாமல்
தள்ளென்று தள்ளாது வரவேண்டும்.

எங்களா லொன்றுமிலை யெதுவுமுன் றருமமென்
றெய்த்திடற் கருள்பு ரியவும்
எண்சா ணுடம்பினுஞ் சிரசே பிரதானமென்
றெண்ணமொன் றருள்பு ரியவும்
மங்கையர்கள் கொங்கையெனு மண்கட்டி மீதிஷ்ட
மண்ணாக வருள்பு ரியவும்
மாறுத புண்ணான வல்குலாம் படுகுழியில்
மடியாம லருள்பு ரியவுந்
தங்கத்தை யுஞ்செங்க லென்றெண்ணி யேதள்ளு
தள்ளெனற் கருள்பு ரியவுந்
தந்தையே யுன்றனக் கென்றனை யளிக்கிறேன்
றள்ளாம லருள்பு ரியவும்
வங்கமென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. எங்களால் ஒன்றும் இலை — எங்களாலே ஒன்றுமில்லை, எதுவும் உன் கருமம் என்று எய்த்திடற்கு அருள்புரியவும் — எதுவும் உம்முடைய செயலென்று அறிவதற்கு அருள்செய்யவும், எண்சாண் உடம்பினும்— எட்டுச்சாணளவுள்ள சரீரத்திலும், சிரசே பிரதானம் என்று எண்ணம் ஒன்று அருள் புரியவும் — சிரசே தலைமையானதென்றும் எண்ணமொன்றை யருள்செய்யவும், மங்கையர்கள் கொங்கை என்னும் — பெண்களுடைய முலைகளென்று சொல்லும், மண் கட்டிமீது இஷ்டம் மண் ஆக அருள்புரியவும் — மண்கட்டியின்பேரிலுள்ள விருப்பமானது மண்ணாகும்படி அருள் செய்யவும், மாறுத புண் ஆன அல்குல் ஆம் படுகுழியில் — மாறுதலில்லாத புண்ணான அல்குலாகிய படுகுழியினிடத்தில், மடியாமல் அருள் புரியவும் — அழியாமல் அருள்செய்யவும், தங்கத்தையும் செங்கல் என்று எண்ணியே — பொன்னையும் செங்கல் என்றெண்ணிக் கொண்டு, தள்ளு தள்ளு எனற்கு அருள்புரியவும் — தள்ளுதள்ளு என்று சொல்வதற்கு அருள்செய்யவும், தந்

தையே — தந்தையைப் போன்றவரே, உன்றனக்கு என்றனை அளிக்கிறேன் — உனக்கு என்னைக் கொடுக்கிறேன், தள்ளாமல் அருள் புரியவும் — தள்ளாத படிக்கு அருள் செய்யவும், வங்கம் என ஓடி — கப்பலைப்போல ஓடி, மெய் தவராஜ சிங்கமே. — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி-ரை. எல்லாம் இறைவன் செயலாதலால் 'எதுவு முன்கருமம்' என்றார். மாருத — ஆருத. படுகுழி — பெரும்பள்ளம். (௬)

மனத்தின் வல்லபஞ் சமவுட்குளிர வூடாடிப்
போகாமற்போக வரவேண்டும்.

வலைவீசு முலையரைக் கொலைஞரென் றெண்ணுமோர்
வல்லப மருள்பு ரியவும்
வஞ்சியெனு மெண்சா ணுடம்புவெறு நஞ்சென்று
வஞ்சமற வருள்பு ரியவும்
உலையிட்ட மெழுகெனப் பின்னமா யுருகுமன
முட்குளிர வருள்பு ரியவும்
ஓடாம லுந்தேடி வாடாம லும்மெனது
ளூடாடி யருள்பு ரியவும்
புலருமில வைக்காத்த கிளியெனவு முன்னடிமை
போகாம லருள்பு ரியவும்
பூரணா னந்தமய மானபே ரின்பவனு
போகமொன் றருள்பு ரியவும்
மலசலா திகளற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. வலைவீசம் முலையரை கொலைஞர் என்று எண்ணும் — வலைவீசப்பட்ட முலையையுடைய பெண்களைக் கொலைசெய்யு மவர்களென்று நினைக்கும், ஓர்வல்லபம் அருள்புரியவும் — ஒரு வல்லமையைக் கொடுக்கவும், வஞ்சி என்னும் எண்சாண் உடம்பு — வஞ்சியென்று சொல்லும் எட்டுச்சாணளவுள்ள சரீரமானது, வெறும் நஞ்சு என்று—வெறுமையான விஷமென்று, வஞ்சம் அற அருள்புரியவும் — வஞ்சனை நீங்கும்படி அருள் செய்யவும், உலை இட்ட மெழுகு என பின்னமாய் உருகும் — உலையிலிட்ட மெழுகைப்போல பின்னமாகியுருகும், மனம் உள்குளிர அருள் புரியவும் — மனத்தின் உள்ளிடங்குளிர அருள்செய்யவும், ஓடாமலும் தேடி வாடாமலும் — பல இடங்

களிலுமோடாமலும் பலவற்றையுந்தேடி வாடாமலும், எனது உள் ளூடாடி அருள்புரியவும் — என்னுடைய மனத்தின் உள்ளிடத்தில் ஆடி அருள்செய்ய வும், புலரும் இலவைகாத்த கிளி எனவும் - உலர்ந்த இலவத்தைக் காத்திருந்த கிளியைப்போலவும், உன் அடிமைபோகாமல் அருள்புரியவும்—உமது அடிமையான நான் போய்விடாம லருள்செய்யவும், பூரண ஆநந்தமயமான— நிறைவுற்ற ஆனந்தமயமான, பேர் இன்ப அனுபோகம் ஒன்று அருள் புரிய வும் — பேரின்ப அனுபோக மொன்றைக்கொடுக்கவும், மலசலஆதிகள்அற்ற— மலசலாதிகளில்லாத, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. வஞ்சி — வஞ்சிக்கொடிபோலும் பெண். (௬)

மனஞ்சலியாது தள்ளாதுட்குளிர்ந் தொட்டாது
நேயம் வைத்து நில்லாது வரவேண்டும்.

சக்களத் திப்போர் கொடுக்கிறு னென்றுநீர்
சலியாம லருள் புரியவும்
சண்டிபோற் றிண்டிமிண் டாடுறு னென்றெனைத்
தள்ளாம லருள் புரியவும்
ஒக்கநின் றென்னையு ய்யக்கொண்டு மையமற
வுட்குளிர்ந் தருள்பு ரியவும்
ஒட்டாத மாமாயை யொட்டினுட் சிட்டெனவு
மொட்டாது னருள்பு ரியவும்
நிற்குநிலை காணுது நிற்குநிலை நிற்கநின்
னேயம்வைத் தருள்பு ரியவும்
நீசனிவ னென்றுமே போதிப்பார்கள் போதனையி
னில்லாது னருள்பு ரியவும்
மக்கப் புதைக்குமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாத னே.

ப—ரை. சக்களத்தி போர் கொடுக்கிறான் என்று — சக்களத்தி சண்டை செய்கிறாளென்று, நீர் சலியாமல் அருள் புரியவும் — நீர் சலிப்படையாம லருள் செய்யவும், சண்டிபோல் திண்டுமிண்டு ஆடுகிறான் என்று — சண்டியைப்போல திண்டுமிண்டு ஆடுறுனென்று, என்னைதள்ளாமல் அருள் புரிய வும் — என்னைத்தள்ளிவிடாம லருள் செய்யவும், ஒக்கநின்று என்னை உய்யக்

கொண்டும் — கூடநின்று என்னைப் பிழைக்கும்படி யாட்கொண்டும், ஐயம் அற உள் குளிர்ந்து அருள் புரியவும் — சந்தேகம் நீங்க மனங்குளிர்ந்து அருள் செய்யவும், ஒட்டாத மாமாயை ஒட்டினுள் — கூடாத பெரிய மாயை யாகிய ஒட்டினுள்ளே, சிட்டெனவும் ஒட்டாது — சிட்டுக்குருவிபோலவும் ஒட்டாது, உன் அருள் புரியவும் — உமது அருள் செய்யவும், நிற்கும் நிலை காணாது — நிற்கும் நிலையைக்காணாமல், நிற்கும் நிலைநிற்க — நிற்கவேண்டிய நிலையில் நிற்க, நின் நேயம்வைத்து அருள் புரியவும் — நினது அன்புவைத்து அருள் செய்யவும், நீசன் இவன் என்று போதிப்பார்கள் போதனையில் — இவன் நீசனென்று போதிக்குமவர்கள் போதனையில், நில்லாது உன் அருள் புரியவும் — நிற்காமல் உமது அருள் செய்யவும், மக்கபுதைக்குமுன் — மக்கும் படி பூமியிற் புதைப்பதற்கு முன்னே, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. ஒட்டு — பறவைபிடிக்கும் ஓர்வகைக்கண்ணி. நீசன் — புலையன். போதனை — போதிப்பு. மக்க — மண்ணுண்ண. (எ)

மனம்போகாது போகவென்றெண்ண
வெளிநிற்கைபிடித்துக் காப்பாற்றியருள வரவேண்டும்.

பொந்துதே டித்தேடி மேவாத பேரெனப்
போகாது னருள் புரியவும்
பொருமேட டி யோடியோ டிப்போகு வோரெனப்
போகவிட் டருள்பு ரியவும்
எந்தைமுதல் யாவரும் வந்துகலை யுஞ்சந்தை
யென்றெண்ண வருள்பு ரியவும்
எவராலு மெய்தரிய துறவோடு மற்றுளன
வெளிநிலைற் கருள்பு ரியவுங்
கந்தையைச் சுற்றவுங் கானகஞ் சுற்றவுங்
கைப்பிடித் தருள்பு ரியவும்
கந்தமூ லந்தனைத் தந்துகந் தென்றனைக்
காப்பாற்றி யருள்பு ரியவும்
மந்தைவழி யாயினுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பொந்து தேடிதேடி — பொந்தைத் தேடித்தேடி, மேவாத பேரெனப்போகாது — பகைவர்போலப் போகாது, உன் அருள் புரியவும் —

உமது அருள் செய்யவும், பொருள்தேடி — திரவியத்தைத்தேடி, ஓடியோடிப் போகுவோரென — ஓடியோடிப் போவாரைப்போல, போகவிட்டு அருள் புரியவும் — போகவிட்டு அருள் செய்யவும், எந்தை முதல் யாவரும் — என் தந்தை முதலிய யாவரையும், வந்துகலேயும் சந்தை என்று எண்ண அருள் புரியவும் — கூடிக்கலேயும் சந்தையென் றெண்ணும்படி அருள் செய்யவும், எவராலும் எய்த அரிய — எப்படிப்பட்டவர்களாலும் அடைவதற்கரிய, துற வோடு மற்றுள்ளன — துறவுடன் மற்றுள்ளவைகளே, எளிதில் எற்கு அருள் புரியவும் — எளிதாகவே எனக்கு அருள் செய்யவும், கந்தையை சுற்றவும் — கந்தையைத் தரித்துக்கொள்ளவும், கானகம் சுற்றவும் — காட்டில் திரியவும், கைபிடித்து அருள் புரியவும் — கையைப்பிடித்து அருள் செய்யவும், கந்த மூலம்தன்னை தந்து உகந்து — கந்தமூலங்களைக் கொடுத்துச் சந்தோஷித்து, என்றனைக் காப்பாற்றி அருள் புரியவும் — என்னைக் காப்பாற்றி அருள் செய்யவும், மந்தை வழியாயினும் — மந்தை வழியாகவாவது, தவராஜ சிங் கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங் குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. பொந்து — மரப்பொந்து. மேவாதபேர்—பகைவர். ஓடியோடிப் போகுவோர் — இறப்பவர். மற்றுள்ளன என்றது — மற்றுமுள்ள சமதமாதி யாத்மகுணங்களே. (அ)

மனப்பொதும்பூசி வியாபியாதுவீழ்ந்து
பூவெடுத்தீடேற வரவேண்டும்.

பொன்னைப் பழித்தபொதி கைச்சார்பு மீதிற்
பொதும்பொன்ற வருள்பு ரியவும்
பூவைப் பழித்தநின் பொன்னடியு முன்னடிமை
பூசிக்க வருள்பு ரியவும்
மின்னைப் பழித்தமன முஞ்சஞ்ச லத்தோடு
வியாபியா தருள்பு ரியவும்
வேலைப் பழித்தவிழி யார்முயக் களறுதனில்
வீழ்ந்திடா தருள்பு ரியவும்
என்னைப் பழித்தநா னென்பதனை யென்னைவிட்
டெடுத்தெரிய வருள்பு ரியவும்
எவையும் பழித்ததுற வெய்திவெளி யேறிநா
னீடேற வருள்பு ரியவும்
மன்னைப் பழித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பொன்னைப் பழித்த — பொன்னைப் பழித்ததான, பொதிகை சார்புமீதில் பொதும்பு ஒன்ற அருள் புரியவும் — பொதியமலைச் சாரலிலுள்ள குகையையடைய அருள் செய்யவும், பூவைபழித்த நின் பொன் அடியும் — புஷ்பத்தைப்பழித்த உமது அழகிய பாதங்களையும், உன் அடிமை பூசிக்க அருள் புரியவும் — உமது அடிமையான நான் பூசிக்கும்படி அருள் செய்யவும், மின்னைபழித்த மனமும் — மின்னலைப் பழித்ததான என்மனமும், சஞ்சலத்தோடு வியாபியாது அருள் புரியவும் — சஞ்சலத்துடன் வியாபியாத படிக்கு அருள் செய்யவும், வேலை பழித்த விழியார் — வேலைப் பழித்த கண்களையுடைய பெண்களது, முயக்கு அளறுதனில் — சம்போகமாகிய சேற்றில், வீழ்ந்திடாது அருள் புரியவும் — வீழாதபடிக்கு அருள் செய்யவும், என்னைபழித்த — என்னையே பழித்ததான, நான் என்னை என்பதனைவிட்டு - நான் என்பதனையும் என்னை யென்பதனையும் நீக்கி, எடுத்து எறிய அருள் புரியவும் — எடுத்தெறியும்படி அருள் செய்யவும், எவையும் பழித்த துறவு எய்தி — எவற்றையும் பழித்த துறவை யடைந்து, வெளி ஏறி — வெளிவந்து, நான் ஈடேற அருள் புரியவும் — நான் ஈடேறும்படி அருள் செய்யவும், மன்னைபழித்த — அரசர்களைப்பழித்த, மெய் தவராஜசிங்கமே — தவத்தை யுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பொன்னை — பொன்மலையாகிய மேருவை. பூவை — தாமரை மலரை. எவையும் — எவ்வகையான ஆசிரமத்தையும். மன்னைப்பழித்தமெய் - ராஜசரீரத்தையும் பழித்த சரீரத்தையுடைய. (௧)

மனத்தைப்பார்த்துப் பதமளித்துக் கலிதீர்த்துக்கடாக்ஷித்துப்
பொருடந்து பொன்னடியருள வரவேண்டும்

பையலோ நெஞ்சம் பதைத்துருகி நிற்பதும்
பார்த்தேனு மருள்பு ரியவும்
பாவியடி யேன்படுந் துயரைத் தொலைத்துநற்
பதமளித் தருள்பு ரியவும்
கையில்வெண் ணெயைவைத்து நெய்க்கழு வண்ணமென்
கலிதீர்த் தருள்பு ரியவும்
கன்மங்க ளரவுஞ் செனமசா பல்யங்
கடாக்ஷித் தருள்பு ரியவும்
பொய்யுலக வாழ்வுபிற ருக்கிடவு மெற்குமெய்ப்
பொருடந் தருள்பு ரியவும்
பொன்னுலகு மண்ணுலகு மின்றிலகு முன்றிருப்
பொன்னடியை யருள்பு ரியவும்

மையலொ டெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பையலோ நெஞ்சம் பதைத்து உருகி நிற்பதும் — பையலான நான் நெஞ்சம் பதைத்து உருகி நிற்பதும், பார்த்தேனும் அருள்புரியவும் — பார்த்தாவது அருள்செய்யவும், பாவி அடியேன்படும் துயரை தொலைத்து — பாவியான அடியேன் படுகின்ற துக்கத்தை நிவர்த்தித்து, நல்பதம் அளித்து அருள் புரியவும் — நல்ல பதத்தைக் கொடுத்து அருள் செய்யவும், கையில் வெண்ணெயை வைத்து நெய்க்கு அழாவண்ணம் — கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழாதபடிக்கு, என் கலிதீர்த்து உன் அருள் புரியவும் — என்னுடைய கலியைத் தீர்த்து உமது அருள் செய்யவும், கன்மங்கள் தீரவும் — கர்மங்கள் நிவர்த்தியாகவும், சென்மசாபல்யம் கடாக்ஷித்து உன் அருள் புரியவும் — சென்ம சாபல்லியத்தைப்பார்த்து உமது அருள் செய்யவும், பொய் உலகவாழ்வு பிறருக்கு இடவும் — பொய்யான உலக வாழ்வை உம்மையடையாத பிறருக்குக்கொடுக்கவும், எற்கு மெய் பொருள் தந்து — எனக்கு உண்மையான பொருளைத்தந்து, உன் அருள் புரியவும் — உமது அருள் செய்யவும், பொன் உலகும் மண் உலகும் நின்று இலகும் — தேவலோகத்திலும் பூலோகத்திலும் நின்றுவிளங்கும், உன் திரு பொன் அடியை அருள் புரியவும் — உமது அழகிய திருப்பாதங்களைக் கொடுக்கவும், மையலொடு எழுந்து — என்மீது விருப்பத்தோடெழுந்து, மெய் தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் — பெருமையமைந்த குணங் குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பையல் — பயல். நற்பதம் — நற்கதி. சென்மசாபல்யம்—பிறப்பாலாகியபயன். மெய்ப்பொருள் — உண்மையாகிய பிரமப்பொருள். (௪0)

ஆ பாடல் - 148.

நான்காவது

நியம நிலை.

பொய்கொலை களவு காமம் பொருணசை
யிவ்வகை யைவையு மடக்க லியமமும்
பெற்றதற் குவத்தல் பெருந்தவத் தூய்மை
மற்றறி வுணர்தல் வழிபட னியமமும்
நிற்ற லிருத்தல் கிடத்தல் னடத்தலென்
றுற்றவிந் நான்கா முயரா தனமும்
அவ்விரு வகைக்கு மாதியு மந்தமும்
செவ்விய லாவிவை சிறந்திருந் தமையால்
பிரியாது நியம நிலைபெறற் கருள்கென
விரியா திரந்து வேண்டி யுயர்த்தது.

மனத்தைப்பார்த்துப் பலனிலையாம னில்லாமல்
அணைத் தன்புகூர்ந் தருளவேண்டும்.

பஞ்சரித் துப்பஞ் சரித்தியான் கெஞ்சியது
பார்த்தேனு மருள்பு ரியவும்
பஞ்சைபோ னின்றழும் பாவிக்கிரங்கிப்
பலன்றரவு னருள்பு ரியவும்
நின்சார்பை யன்றிவே றுண்டென் று மென்றென் று
நிலையாம லருள்பு ரியவும்
நெஞ்சம் பதைத்துப் பதைத்தடிமை திக்கற்று
நில்லாம லருள்பு ரியவும்
அஞ்சாம லென்றனக் காதரவு சொல்லவு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்
அருகினி லிருக்கவுந் திருவருள் பொருத்தவு
மன்புகூர்ந் தருள்பு ரியவும்
வஞ்சகரு மஞ்சவுந் தவராஜ சிங்கமே
வரம்வேண்டு மென்ற னருமே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

ப—ரை. பஞ்சரித்து பஞ்சரித்து — உபசரித்து உபசரித்து, யான் கெஞ்சியது — நான் கெஞ்சினதை, பார்த்தேனும் — பார்த்தாயினும், அருள்

புரியவும்—, பஞ்சைபோல் நின்று அழும்பாவிக்கு இரங்கி – எளியவன்போல நின்றழுகின்ற பாவியாகிய என்பொருட்டிரங்கி, பலன்தர – பயன் கொடுக்க, உன் – உனது, அருள் புரியவும்—, நின் சார்பை அன்றி – உன் ஆதரவல்லாமல், வேறு உண்டு என்றும் – வேறாதரவுளதென்றும், என்றென்றும் – எக்காலத்தும், நினையாமல்—எண்ணாமல், அருள் புரியவும்—, நெஞ்சம் பதைத்து பதைத்து – மனம் பதைத்துப்பதைத்து, அடிமை – அடியேன், திக்கு அற்று நில்லாமல் – திக்கற்று நிற்காமல், அருள்புரியவும்—, அஞ்சாமல் – பயப்படாமல், என்றனக்கு – எனக்கு, ஆதரவு சொல்லவும் – தெம்பு சொல்லவும், அணைத்து ஆண்டு – தழுவிக்காத்து, உன் – உனது, அருள் புரியவும்—, அருகினில் இருத்தவும் – சமீபத்தி லிருத்திக்கொள்ளவும், திருவருள் பொருத்தவும் – திருவருளோடு சேர்க்கவும், அன்புகூர்ந்து – அன்புமிகுந்து, அருள் புரியவும்—, வஞ்சகரும் அஞ்சவும் – வஞ்சகரும் பயப்படவும், தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகாதனே—, எ-று.

வி—ரை. பஞ்சரித்தல் – உபசரித்தல். பஞ்சை – இரவலன் எனினுமாம். திக்கு – கதி. (சு)

மனத்தைக் கடாக்ஷித்துங் கரங்கொடுத் தணைத்தடுங்கவைத்துங்
குறைதீர்த்துங் குணமேற்ற வரவேண்டும்.

காணுங் கெறித்தநில வாகாத வண்ணங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
கல்லுங் கிரங்குமழை யாகாத வண்ணங்
கரங்கொடுத் தருள்பு ரியவும்

ஆலைவாய்க் குட்கரும் பாகாத வண்ணமு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்
ஆழித் துரும்பெனவு மாகாத வண்ணமு
மடுக்கவைத் தருள் புரியவும்
கோணைப் பழித்தகுடி யாகாத வண்ணமென்
குறைதீர்த்து னருள்பு ரியவுங்
குருவற்ற சிடனென வாகாத வண்ணநற்
குணமேற்றி யருள்பு ரியவும்
மானம்வைத் துதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. கானுக்கு எறித்த — காட்டிலெறித்த, நிலவு ஆகாத வண்ணம்— நிலவுபோலாகாதபடி, கடாக்ஷித்து — கடைக்கண்சாத்தி, உன் — உனது, அருள் புரியவும்—, கல்லுக்கு இரங்கும் மழை ஆகாத வண்ணம் — மலைக் கிரங்கும் மழைபோலாகாதபடி, கரம் கொடுத்து — கைகொடுத்து, அருள் புரியவும்—, ஆலவாய்க்குள் — ஆலவாயிலகப்பட்ட, கரும்பு ஆகாத வண்ண மும் — கரும்புபோலாகாதபடியாகவும், அணைத்து ஆண்டு—, உன் — உனது, அருள் புரியவும்—, ஆழி துரும்பு எனவும் ஆகாத வண்ணமும் — கடலிற் றுரும்புபோலாகாதபடியாகவும், அடுக்கவைத்து — கிட்டவைத்து, அருள் புரி யவும்—, கோனைபழித்தகுடி ஆகாதவண்ணம் — அரசனைப்பழித்த குடிகள் போலாகாதபடி, என்குறை தீர்த்து — என் குறையைநீக்கி, உன் அருள்புரிய வும்—, குரு அற்ற சீடன் என ஆகாதவண்ணம் — குருவில்லாத சீடன்போ லாகாதபடி, நற்குணம் ஏற்றி — நற்குணம் அதிகமாக்கி, அருள் புரியவும்—, மானம் வைத்து உதவும் — என்னிடத்தில் அபிமானித் தருளுகிற, மெய் — உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

விரை. காட்டுக் கெறித்த நிலவும், கல்லுக் கிரங்கு மழையும், ஆலவாய்க் கரும்பும், ஆழித் துரும்பும், கோனைப் பழித்த குடியும், குறவற்ற சீடனும் எப்படி பயனின்றி யொழியுமோ, அதுபோல நானும் பயனி லியா காதவண்ணங் காத்தருளவேண்டுமென்பது கருத்து. கான் — காடு. ஆழி— கடல். கோ — அரசன். இது 'கோன்' என னகரச்சாரியை பெற்றுவந்தது.

மனங்கதறுதற்குங் கலுழுதற்கு மாறுது மாதவமே
யேற்க வரவேண்டும்.

கண்ணே கருத்தேயெ னின்பமே யென்றடிமை
கதறுதற் கருள்பு ரியவுங்
கண்ணீரு மாறுத புண்ணீரு மாகவுங்
கலுழுதற் கருள்பு ரியவும்
மண்ணுன மூவாசை மண்ணுக வுங்கருணை
மாறுது னருள்பு ரியவும்
மலேநுழைவு பக்கமும் மனவாசி சொக்கவும்
மாதவம் மருள்பு ரியவும்
எண்ணுத வெண்ணமெல் லாமெண்ணி யெண்ணிநெஞ்
சிடையாம லருள்பு ரியவும்
என்னுனே யென்னுடு மொன்றுமிலே யாவுநீ
யேயேற்க வருள்பு ரியவும்

மண்ணுள்ள சித்தரொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கண்ணே கருத்தே என் இன்பமே என்று — கண்ணே கருத்தே என் இன்பமேயென்று, அடிமை — அடியேன், கதறுதற்கு — கதறுவதற்கு, அருள் புரியவும்—, கண்ணீரும் — கண்ணீராவதும், மாறாத — நீங்காத, புண்ணீருமாகவும் — உதிரநீராகவும், கலுழுதற்கு — நான் அழுவதற்கு, அருள்புரியவும்—, மண்ஆன மூவாசை — மண்ணின்கண் உண்டாகிய மூவாசைகளும், மண் ஆகவும் — மண்ணா யொழியவும், கருணைமாறாது — கருணை மாறுபடாமல், உன் அருள் புரியவும்—, மலை நுழைவு பக்கமும் — மலைக்குகைகளில் விருப்பமுண்டாகவும், மனவாசி சொக்கவும் — மனக்குதிரை வசப்படவும், மாதவம் — பெரிய தவத்தை, அருள் புரியவும்—, எண்ணாத எண்ணம் எல்லாம் — எண்ணவொண்ணாத எண்ணங்களையெல்லாம், எண்ணி எண்ணி — எண்ணியெண்ணி, நெஞ்சு இடையாமல் — மனம் வருந்தாமல், அருள் புரியவும்—, என் ஆணை — என்மீ தாணையாக, என்னாலும் — அடியேனாலும், ஒன்றும் இல்லை — ஒரு காரியமுமில்லை, யாவும் நீரே ஏற்க — எல்லாம் நீரே யேற்றுக் கொள்ளும்படி, அருள் புரியவும்—, மண் உள்ள சித்தரொடு — மண்ணுலகத்திலுள்ள சித்தர்களோடு, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழும், என் அகத் தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கண் புறவுறுப்புக்களிற் சிறந்தும் கருத்து அகவுறுப்புக்களிற் சிறந்தும் இருத்தலால் 'கண்ணே கருத்தே' என்றார். கதறுதல்—பெருங்குரலிடுதல். புண்ணீர் — உதிரம். மண்ணாக — பாழாக. மூவாசை — மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை. நுழைவு — குகை. வாசி — குதிரை. சொக்குதல் — வசப்படுதல், (வயப்படுதல்.) (௩)

மனமுய்ய நிஷ்டை மோக்ஷ முதிர்ந்துகத்துங்
கருணைகூர வரவேண்டும்.

நித்தனே நித்தபரி சுத்தனே சிற்றடிய
னேனுய்ய வருள்புரியவும்
நிருவிகற் பங்கொண்ட நின்மலா நந்தசுக
நிஷ்டையைத் தருள்புரியவும்
முத்தனே நற்றவஞ் சித்திக்கவும் முத்தி
மோக்கமொன் றருள் புரியவும்

மூலப் பிராணனென வாலைப் பிராயம்
முதிர்ந்திடுமு னருள்பு ரியவும்
கத்தனே கத்தனே யென்றிடைய றுமலே
சத்துமெற் கருள்பு ரியவும்
கத்தா தடாவென்று பொற்று ளளித்துநற்
கருணைகூர்ந் தருள்பு ரியவும்
வைத்தமோ கத்துடன் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. நித்தனே — சாசுவதனே, நித்த பரிசுத்தனே — சாசுவதமாகிய பரிசுத்தனே, சிறு அடியனேன் உய்ய — சிறிய அடியனேன் உய்யும்படி, அருள்புரியவும்—, நிருவிகற்பம் கொண்ட — நிர்விகற்ப நிலையைக் கொண்ட, நிர்மலம் — மலரகிதமாகிய, ஆநந்த சுகநிஷ்டைவைத்து — ஆநந்த சுகநிஷ்டையில்வைத்து, அருள் புரியவும்—, முத்தனே — முத்தனே, நல் தவம் சித்திக்கவும் — சிறந்த தவம் பலிக்கவும், முத்தி மோக்கம் ஒன்று — முக்தியாகிய மோட்சமொன்றை, அருள்புரியவும்—, மூலப்பிராணன் என — மூலப்பிராணனென்னும்படி, வாலைப்பிராயம் முதிர்ந்திடு முன் — வாலைப்பருவ முதிர்வதற்கு முன்பே, அருள் புரியவும்—, கத்தனே கத்தனே என்று — கர்த்தனே கர்த்தனே யென்று, இடையறுமல் கத்தும் எற்கு — இடைவிடாமல் கத்துகிற எனக்கு, அருள் புரியவும்—, கத்தாதடா என்று — கத்தாதே யடாவென்று, பொன் தாள் அளித்து — பொன்போலுந் திருவடியைத்தந்து, நல் கருணை கூர்ந்து — நல்ல கருணை மிகுந்து, அருள் புரியவும்—, வைத்த மோகத்துடன் — என்மீதுவைத்த விருப்பத்தோடு, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி-ரை. சிற்றடியன் — குற்றேவல் செய்யு மடியவன். நிருவிகற்பம் - வேறுபாடில்லாமை. (களங்கமில்லாமை) முத்தன் — பாசநீக்கமுடையவன். மூலப்பிராணன் — மூலவாயு. பொன்தாள் — அழகியதாள் எனினுமாம். (ச)

மனங்கொள்ளாமற்கொள்ள விதயமலர்ந்து சதாநந்தக்
காட்சிக்கண்ணே யருள வரவேண்டும்.

கொண்டார்க ளைக்கொலும் பெண்டாசை யொன்றடிமை
கொள்ளாம லருள்பு ரியவுங்
கொள்ளிவைத் துடலைக் கொளுத்துமுன் முற்சுடர்க்
கொள்ளிவைத் தருள்பு ரியவுங்

தண்டா மரைக்கமல மென்மட லவிழ்ந்தெனவி
தயமலர்ந் தருள்பு ரியவுந்
தளதளென் றளவில்பே ரொளிகொப்பு ளித்திடு
சதாநந்த மருள்பு ரியவுங்
கண்டாலு மென்கலிக ளெல்லா மகன்றுபோங்
காட்சிதந் தருள்பு ரியவும்
கண்கொண்டு காணவுங் கண்கண்ட தெய்வமே
கண்ணேயு னருள்பு ரியவும்
வண்டாய்ப் பறந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கொண்டார்களை கொல்லும் — கொண்டவர்களைக் கொல்லுகிற, பெண்டு ஆசை ஒன்று — பெண்ணாசை யொன்றனையும், அடிமை கொள்ளாமல் — அடியேன் கொள்ளாதிருக்க, அருள் புரியவும்—, கொள்ளிவைத்து — கொள்ளியிட்டு, உடலை கொளுத்து முன் — உடம்பைக் கொளுத்துவதற்கு முன்பே, முற்சுடர் கொள்ளிவைத்து — முதன்மையாகிய சுடர்க்கொள்ளியை வைத்து, அருள் புரியவும்—, தண்தாமரைப் பூவின் — குளிர்ச்சியாகிய தாமரைமலரின், மெல் மடல் அவிழ்ந்தென — மெல்லிய இதழ்கள் விரிந்தாற் போல, இதயம் மலர்ந்து — இருதயகமலம் மலர்ந்து, அருள் புரியவும்—, தளதளென்று — தளதளவென்று, அளவு இல் — அளவில்லாத, பேர் ஒளி கொப்புளித்திடு — பெருஞ்சோதி ததும்புகிற, சதானந்தம் — சதாநந்தத்தை, அருள் புரியவும்—, கண்டாலும் — பார்த்தாலும், என் கலிகள் எல்லாம் — என் வறுமைகள் யாவும், அகன்றுபோம் — நீங்கிப்போகும்படியான, காட்சி தந்து — உன் தரிசனம் தந்து, அருள் புரியவும்—, கண்கொண்டு காணவும்— கண்ணால் பார்க்கவும், கண் கண்ட தெய்வமே — கண் கண்ட தெய்வமே, கண்ணே — என் கண்ணே, உன் — உனது, அருள் புரியவும்—, வண்டாய் பறந்து — வண்டுபோலப்பறந்து, மெய் — உண்மையாகிய, தவராஜ சிங்கமே— தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. கொண்டார்கள் — கலியாணஞ் செய்துகொண்ட கணவர்கள். முற்சுடர் — முதன்மையாகிய சுடர். (பரஞ்சுடர்) தளதள — ஒலிக்குறிப்பு. சதாநந்தம் — இடையறாத ஆநந்தம். கலி — வறுமை. கண்கண்ட தெய்வம் — பிரத்தியக்ஷதெய்வம். (௬)

மனத்தின் சமர்த்துச் சார்ந்திட வழிவிட்டு மண்ணு
குருவே குறைதீர வரவேண்டும்.

சகச்சூதை மாற்றிச் சுகச்சோதி யேற்றுஞ்
சமர்த்தொன்றை யருள்பு ரியவும்
சாட்சாதி யீசுர சொரூபமே யானுனைச்
சார்ந்திடற் கருள்பு ரியவும்
வகையற்ற சமயக் குதர்க்கங்க டத்திநல்
வழிவிட்டு னருள்பு ரியவும்
மண்ணாசை யேகவும் பெண்ணாசை வேகவும்
மண்ணாமு னருள்பு புரியவும்
குகைசேர வும்மாயை நகைதீர வும்மெங்கள்
குருவேயு னருள்பு ரியவும்
கொண்டாட்ட மாகவுங் கொத்தடிமை யாக்கியென்
குறைதீர்த்து னருள்பு ரியவும்
மகத்துவாய் நின்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. சகச்சூதை மாற்றி—பிரபஞ்ச வஞ்சனையை நீக்கி, சுகச்சோதி ஏற்றும்—இன்பச்சுடரை மிகுவிக்கிற, சமர்த்து ஒன்றை—சாமர்த்தியமொன்றனையும், அருள் புரியவும்—, சாட்சாதி ஈசுரசொரூபமே—சாக்ஷாத்தாகிய ஈசுவரசொரூபமே, யான் உன்னை சார்ந்திடற்கு—நான் உன்னை யடைவதற்கு, அருள் புரியவும்—, வகை அற்ற—விவரமில்லாத, சமயக்குதர்க்கம் கடத்தி—சமயக் குதர்க்கங்களைத் தாண்டுவித்து, நல்வழிவிட்டு—நன்னெறியில்விட்டு, உன்—உனது, அருள் புரியவும்—, மண் ஆசை ஏகவும்—மண்ணாசைபோகவும், பெண் ஆசை வேகவும்—பெண்ணாசை வெந்தொழியவும், மண் ஆம்முன்—நான் மண்ணாவதற்கு முன்பே, அருள் புரியவும்—, குகை சேரவும்—குகையையடையவும், மாயை நகை தீரவும்—மாயையின் விளக்கமொழியவும், எங்கள் குருவே—எங்கள் குருநாதனே, உன் அருள் புரியவும்—, கொண்டாட்டமாகவும்—கொண்டாட்டமுண்டாகவும், கொத்தடிமை ஆக்கி—கொத்தடிமையாகச் செய்து, என் குறை தீர்த்து—என் குறையை நீக்கி, உன் அருள் புரியவும்—, மகத்து ஆய் நின்ற மெய்—மகாத்துமாவாய் நின்ற உண்மையாகிய, தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. சுகச்சோதி — இன்பத்தைத்தருகிற பரஞ்சுடர். சாக்ஷாத் — பிரத்தியக்ஷம். குதர்க்கம் — தர்க்கசாஸ்திரவழியல்லாத வீண்வாதம். நகை — விளக்கம். (ஒளி) கொத்தடிமை — குடியடிமை. (௬)

மனங்கருதாது கைச்சரசம் நையாது நம்பிக் கிருபை
கேட்குமுன் வரவேண்டும்.

கஞ்சாவின் வர்க்கமுங் கஞ்சினிம யக்கமுங்
கருதாது னருள்பு ரியவுங்
கைச்சரச மெல்லாங் கசந்தரச மாகவும்
கைச்சரச மருள்பு ரியவும்
நஞ்சான மூவாசை நஞ்சாக வுந்தேக
நையாது னருள்பு ரியவும்
நாடவும் பாடவுந் தேடவும் மடிமையுனை
நம்பவும் மருள்பு ரியவும்
கெஞ்சாது கெஞ்சுமெற் குன்சார்வு தந்துநற்
கிருபைகூர்ந் தருள்பு ரியவுங்
கேட்டது கொடுக்கநான் கேட்டது கொடுக்கநான்
கேட்குமுன் னருள்பு ரியவும்
வஞ்சமில் பரமார்த்த தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கஞ்சாவின் வர்க்கமும் — கஞ்சாவின் இனமும், கஞ்சினி மயக்கமும் — கஞ்சினியின் மயக்கமும், கருதாது — யான் நினையாதிருக்க, உன் அருள் புரியவும்—, கைச்சரசம் எல்லாம் — கைச்சரசங்கள்யாவும், கசந்தரசம் ஆகவும் — கசந்தரசமாகும்படியாகவும், கைச்சரசம் — உன்கைச்சரசத்தை, அருள் புரியவும்—, நஞ்சு ஆன மூவாசை நஞ்சு ஆகவும் — நஞ்சு போன்ற மூன்றாசைகளும் நஞ்சுபோல வெறுக்கத்தக்கவையாகவும், தேகம் நையாது — சரீரம் அழியாமல், உன் அருள் புரியவும்—, நாடவும் பாடவும் தேடவும்—, அடிமை உன்னை நம்பவும்—, அருள் புரியவும்—, கெஞ்சாது கெஞ்சும் எற்கு — கெஞ்சாமற் கெஞ்சுகிற எனக்கு, உன் சார்வு தந்து — உன் ஆதரவை தந்து, நல்கிருபை கூர்ந்து — நல்ல கருணை மிகுந்து, அருள் புரியவும்—, நான் கேட்டது கொடுக்க — நான் கேட்டது கொடுக்க, நான் கேட்குமுன் — நான் கேட்பதற்கு முன்பே, அருள் புரியவும்—, வஞ்சம் இல் — கபடமில்லாத, பரமார்த்தம் — பரமார்த்தமாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என் னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கஞ்சாவின்வர்க்கம் — கஞ்சாவின் இனமாகிய அபின் சாராயங்கள் முதலிய லாகிரி வஸ்துக்கள். கஞ்சினி — தேவடியாள். பரமார்த்தம் — மேலாகிய பொருள். (எ)

மனநின்று நீந்தாது நாட்ட நாடாமற் கட்டவிழக்
காடுறைய வரவேண்டும்.

நிட்டூர மின்னார்கள் வெட்டையி லழுந்தாது
நின்றிடற் கருள்பு ரியவும்
நீச்சுநிலை யற்றயோ னிக்கேணி யாழ்ந்தடிமை
நீந்தாது னருள்பு ரியவும்
நட்டுங் கருந்தேனை யொத்தமுலை யென்றன்மேல்
நாட்டாம லருள்பு ரியவும்
நாறுநா ரியர்கள்புண் ணாற்றமோர் கனவினு
நாடாம லருள்பு ரியவும்
கட்டையிற் போமுனே கட்டுபா சக்கயிறு
கட்டவிழ வருள்பு ரியவுங்
காலமுஞ் சென்றுசுடு காடுறையு முன்மனங்
காடுறைய வருள்பு ரியவும்
மட்டமே விட்டமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப—ரை. நிட்டூரமின்னார்கள் — நிஷ்டூர வார்த்தைகள் பேசுகிற மாதரது, வெட்டையில் அழுந்தாமல் — காமவெட்டையிற் படியாமல், நின்றிடற்கு — நிற்பதற்கு, அருள் புரியவும்—, நீச்சுநிலை அற்ற — நீச்சு நிலையில்லாத, யோனி கேணி ஆழ்ந்து — யோனியாகிய கேணியி லழுந்தி, அடிமை நீந்தாது — அடியேன் நீந்தித் தடுமாறுமல், உன் அருள் புரியவும்—, நட்டும் கருந்தேனை ஒத்த முலை — கொட்டுகிற கருந்தேன் போன்ற ஸ்தனங்களை, என்றன்மேல் நாட்டாமல் — என்மீது நாட்டாமல், அருள் புரியவும்—, நாறும் — நாறுகின்ற, நாரியர்கள் — மாதரது, புண்நாற்றம் — புண்ணாற்றத்தை, ஓர் கனவினும் நாடாமல் — ஓர் சொர்ப்பனத்திலும் நாடாதிருக்கும்படி, அருள் புரியவும்—, கட்டையில் போம்முன்னே — கட்டைக்குப் போகு முன்பே, கட்டு பாசக்கயிறு — கட்டப்பட்ட பாசக்கயிற்றின், கட்டு அவிழ — கட்டவிழும்படி, அருள் புரியவும்—, காலமும் சென்று — காலமுங் கழிந்து, சுடுகாடு உறையும்முன் — சுடுகாட்டிற்போய்த் தங்குவதற்கு முன்பே, மனம் காடு உறைய — என் மனம் காட்டிற் சஞ்சரிக்கும்படி, அருள் புரியவும்—, மட்டம் மேலிட்டமெய் — இழிதொழில்கள் யாவையும் வென்று மேற்பட்ட

முண்மையையுடைய, தவராஜ சிங்கமே - தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் - என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் - பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீச னே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. நிட்டூரம் - வன்சொல். வெட்டை - சூடு. (காமக்காய்ச்சல்) கேணி - பெருந்துரவு. நட்டுதல் - கொட்டுதல். நாட்டுதல் - ஊன்றுதல். கட்டை - சுடுகொட்டி லடுக்கிவைத்த கட்டை; இதற்குச் சிதையென்றுபெயர். பாசக்கயிறு - ஆசைக்கயிறு. காலம் - ஆயுள்நாள். மட்டம் - இழிவு. (அ)

மனத்திற் குலாவாக் கொள்ளாவக்கரை ஆளாகச்
சிறப்புச் சீராட வரவேண்டும்.

கூசிக் குலாவுமட வார்களைக் கொஞ்சிக்
குலாவாது னருள்பு ரியவுங்
குஞ்சுங் குழந்தையுங் கஞ்சிக்கெ னைக்கோட்டி
கொள்ளாது னருள்பு ரியவும்
ஆசைப் பெருங்கங்கை நீந்தியக் கரைகாணு
மக்கரைக் கருள்பு ரியவும்
ஆளாக வொட்டாத பாழாசை பாழாகி
யாளாக வருள்பு ரியவுந்
தேசிகா நின்றிருச் சமுகதரி சனமாய்ச்
சிறப்புட னருள்பு ரியவும்
செல்வம் பொழிந்தடிமை யுல்லாச மாய்நின்று
சீராட வருள்பு ரியவும்
வாசங் கொழிக்கமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. கூசி குலாவும் மடவார்களை - நாணித் தழுவுகின்ற மாதர்களை, கொஞ்சி குலாவாது - கொஞ்சித் தழுவாதிருக்க, உன் அருள் புரியவும்—, குஞ்சும்குழந்தையும்—, கஞ்சிக்கு - கஞ்சியின் பொருட்டு, என்னைக்கோட்டி கொள்ளாது - என்னைக் கோட்டி கொள்ளாதிருக்க, உன் அருள் புரிய வும்—, ஆசைபெரு கங்கைநீந்தி - ஆசையாகிய பெரிய கங்கையை நீந்தி, அக்கரைகாணும் - அந்தக் கரையைக் காணும்படியான, அக்கரைக்கு - அக் கரை யுண்டாகும்பொருட்டு, அருள் புரியவும்—, ஆள் ஆகவொட்டாத - உனக்கடிமையாக வொட்டாத, பாழ் ஆசை பாழ் ஆகி - பாழாசை பாழ் பட்டு, ஆள் ஆக - உனக்கடிமையாகும்படி, அருள் புரியவும்—, தேசிகா—

சற்குருவே, நின் – உனது, திருச்சமுகதரிசனம் ஆய் – திருச்சமுக தரிசனங் கிடைத்து, சிறப்பு எய்த – யான் மேன்மையடையும்படி, அருள் புரியவும்—, செல்வம் பொழிந்து – செல்வத்தைப் பெய்து, அடிமை – அடியேன், உல்லாசமாய் நின்று சீராட—, அருள் புரியவும்—, வாசம் கொழிக்க – வாசனை வீசும்படி, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி-ரை. குஞ்சு – மிகவும் இளஞ்சிசு. குழந்தை – பாலகன். கோட்டி கொள்ளல் – சூழ்ந்துகொள்ளல். அக்கரை – அந்தக்கரை. விருப்பம். செல்வம் – (முத்திச்செல்வம்) வாசம் – பரிமளம். (சு)

மனமேகி யெட்டுதற்கு மனமுவந்து மருவி ஓரா
துரைசெய வரவேண்டும்.

இனவாச மெல்லா மறந்துவன வாசத்தி
லேகிவிட வருள்பு ரியவும்
எட்டாத பேரின்ப வனுபூதி வலியவந்
தெட்டுதற் கருள்பு ரியவும்
மனமாயை சோரவும் மனவாசி யேறவும்
மனமுவந் தருள்பு ரியவும்
மாங்காயில் வண்டுபோ னீங்காத வண்ணமுண்
மருவிநின் றருள்பு ரியவும்
உனையன்றி யெனையடிமை கொள்வருண் டென்றடிமை
யோராம லருள்பு ரியவும்
ஓயா தரற்றியுங் கேட்கவிலை யோவதுவு
முரைசெய்து னருள்பு ரியவும்
வனிதையர் முயக்கற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. இனவாசம் எல்லாம் மறந்து – இனவாச முழுது மறந்து, வனவாசத்தில் ஏகிவிட – வனவாசத்திற் போய்விட, அருள் புரியவும்—, எட்டாத – எட்டப்படாத, பேரின்ப அநுபூதி – பேரானந்தாநுபவம், வலியவந்து எட்டுதற்கு – வலாத்காரமாய் வந்து கிடைக்கும்படி, அருள்புரியவும்—, மனமாயை சோரவும் – மனமாயை தளரவும், மனவாசி ஏறவும் – மனக்குதிரையி லேறவும், மனம் உவந்து – நீ மனமகிழ்ந்து, அருள் புரியவும்—, மாங்காயில்

வண்டுபோல் — மாங்காயினுள்ளேயிருக்கிற வண்டுபோல, நீங்காதவண்ணம்— நீங்காதபடி, உள் மருவிநின்று — என்னுள்ளே பொருந்திநின்று, அருள் புரியவும்—, உன்னை யன்றி — உன்னை யல்லாது, என்னை அடிமைகொள்வர் உண்டு என்று — என்னை யடிமை கொள்வோ ருண்டென்று, அடிமை ஓராமல் — அடியேன் நினையாதிருக்க, அருள் புரியவும்—, ஓயாது அரற்றியும் — ஓயாமல் கதறியும், கேட்கவிலையோ — உனக்குக்கேட்கவில்லையோ, அதுவும் உரைசெய்து — அதையுஞ் சொல்லி, உன் அருள் புரியவும்—, வனிதையர் முயக்கு அற்ற — மாதரது சேர்க்கையற்ற, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. இனவாசம் — மனை மக்கள்முதலிய உறவினரோடு கூடிவாழும் இல்வாழ்க்கை. வனவாசம் — காட்டில்வாழும் வாழ்க்கை. எல்லா வுயிர்களுள்ளும் கடவுள் தோன்றாமல் மறைந்திருத்தலால், 'மாங்காயில் வண்டுபோல்' என்றார். ஓர்தல் — நினைதல். முயக்கு — புணர்ச்சி. (௪0)

ஆக பாடல் - 158.

ஐந்தாவது

வ னி நி லை.

இம்முறை யகலா தியைந்து தொடர்ந்து
செம்முறை புனையும் யோகஞ் சிறப்ப
உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தப்பரு வளிநிலை
என்னும் பான்மையி னிரேசக பூரகத்
தன்ன வாயுவைக் கும்பித் தடங்கும்
படித்திற னருள்கெனப் பணிந்து பணிந்து
முடித்தலை பராவி முன்னிரந் துயர்த்தது.

மனம் விரித்து வெட்டிவிட்டேன் காவினால் இருடீரப்
பண்புதந்து பரந்தாட வரவேண்டும்.

வெட்டவெளி யாய்ந்ததும் விட்டுவெளி பாய்ந்ததும்
விவரித்து னருள்பு ரியவும்

விட்டகுறை தொட்டகுறை யெட்டியென் கிட்டவா
வெட்டிவிட் டருள்பு ரியவும்
எட்டொன்று மெட்டவும் மீராறு கட்டவு
மெண்காலி னருள்பு ரியவும்
இரவிமதி யேகவும் மிரவுபக லாகவும்
மிருடீர வருள்பு ரியவும்
பட்டமது காற்றூற் பறந்தாடு சூத்திரப்
பண்புதந் தருள்பு ரியவும்
பாராதி யண்டப் பரப்பெலாம் யானும்
பறந்தாட வருள்பு ரியவும்
வட்டந் துதிக்குமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. வெட்டவெளி ஆய்ந்ததும் — வெட்டவெளியை ஆராய்ந்ததையும், விட்டு — நீக்கி, வெளிபாய்ந்ததும் — வெளியிற் பாய்ந்ததையும், விவரித்து — விவரமாகச் சொல்லி, உன் அருள் புரியவும்—, விட்டகுறை தொட்டகுறை — விட்டகுறை தொட்டகுறைகள், எட்டி என் இட்டவர — எட்டி யென் சமீபத்தில்வர, வெட்டிவிட்டு — அவற்றைக் கண்டித்துவிட்டு, அருள் புரியவும்—, எட்டு ஒன்றும் எட்டவும் — எட்டொன்றுமே யெட்டவும், ஈராறு கட்டவும் — பன்னிரண்டைக் கட்டவும், எண் காலின் அருள் புரியவும் — எட்டுக்கால்களால் அருள் செய்யவும், இரவி மதியேகவும் — சூரிய சந்திரர்கள் போகவும், இரவு பகல் ஆகவும் — இரவு பகலாகவும், இருள் தீர — இருள் நீங்கும்படி, அருள் புரியவும்—, பட்டமது — காற்றூடியானது, காற்றூல் — வாயுவினுல், பறந்தாடு — பறந்தாடுகிற, சூத்திரப் பண்பு தந்து - சூத்திரத்தின் தன்மையைக் கொடுத்து, அருள் புரியவும்—, பார் ஆதி — நிலவுலக முதலாகிய, அண்டப் பரப்பு எல்லாம் — உலகப் பரப்பு முழுதும், யானும் பறந்தாட — நானும் பறந்தாடும்படி, அருள் புரியவும்—, வட்டம் துதிக்கு மெய் — பூமண்டலமுழுதும் புகழும்படியான மெய்மையையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ-று.

வி—ரை. வெளி — சிதாகாசம். இருள் — அஞ்ஞானந்தகாரம். சூத்திரம் — யந்திரம். பரப்பு — விஸ்தீர்ணம். வட்டம் — மண்டலம். (ச)

மனப்பசுவைப் படுக்கவைத்துப் பண்பாகக் கட்டுதற்குக்
கருணைவைத்து மென்மேலும் வெருளாமல் வரவேண்டும்.

பாற்பசு தனைப்பக்கு வத்துடன் பதியிற்
படுக்கவைத் தருள்பு ரியவும்
பால்கறந் துண்டுபசி தாகமற யோகநெறி
பண்பாக வருள்பு ரியவும்
காற்பசு தனைக்கா லிரண்டும் முடங்கவெளி
கட்டுதற் கருள்பு ரியவும்
கன்றினுக் குத்தாய் கனிந்திரங் குதலெனக்
கருணைவைத் தருள்பு ரியவும்
மேற்படியி லேற்றியெனை மேலாம் பதந்தந்து
மேன்மேலு மருள்பு ரியவும்
வேதவே தாந்தவெறு வெளிகாட்டி விட்டடிமை
வெருளாம லருள்பு ரியவும்
மாற்படிக் குதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பால்பசு தன்னை — பாற்பசுவை, பக்குவத்துடன் — பக்குவமாக, பதியில் படுக்கவைத்து — (அதற்குரிய) இடத்தில் படுக்கவைத்து, அருள் புரியவும்—, பால் கறந்து உண்டு — பாலைக் கறந்து குடித்து, பசிதாகம் அற — பசிதாகங்கள் நீங்கும்படி, யோகநெறி — யோகமார்க்கத்தை, பண்பாக — நன்றாக, அருள் புரியவும்—, கால்பசு தன்னை — காற்பசுவை, கால் இரண்டும் முடங்க — கால்களிரண்டும் வளையும்படி, வெளி கட்டுதற்கு — வெளியே கட்டிவைப்பதற்கு, அருள் புரியவும்—, கன்றினுக்கு — கன்றுக்கு, தாய் — தாய்ப்பசுவானது, கனிந்து இறங்குதல் என — மனங் கனிந்து இரங்குதல் போல, கருணைவைத்து — கிருபைவைத்து, அருள் புரியவும்—, என்னை மேற்படியில் ஏற்றி — என்னை மேலாம்படியில் ஏற்றி, மேலாம்பதம் தந்து — மேலாகிய பதவியைக் கொடுத்து, மேன்மேலும் அருள் புரியவும்—, வேத வேதாந்தம் — வேத வேதாந்தங்களால் பிரதிபாதிக்கப்படுகிற, வெறுவெளி காட்டிவிட்டு — வெட்டவெளியைக் காட்டிவிட்டு, அடிமை வெருளாமல் — அடியேன் அஞ்சாமல், அருள்புரியவும்—, மால்படிக்கு உதவும்மெய் — மேலாகிய படியை யுடையவர்களுக்கு உதவும்படியான மெய்ம்மையை யுடைய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமை

யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ-று.

வி—ரை. பக்குவத்துடன் — இதமாக. பால்கறந் துண்டலாவது — சந்திர மண்டலத் தமிர்தபானஞ் செய்தல். கால் — வாயு. காற்பசு — வாயுவாகிய பசு. காலிரண்டு என்றது இடைபிங்கலைகளை. மேற்படி — ஞான யோக பாதங்கள். மேலாம்பதம் — மேலாகியநிலை. (முத்தி) (உ)

மனமெட்டொன்றை யேறாமல் வட்டமுற வைத்தாட்டி
யடங்கி வரவேண்டும்.

எட்டெட்டு மெட்டினுட் கட்டவும் மெட்டாத
வெட்டொன்றை யருள்பு ரியவும்
ஈராறு கலையுமிரு நான்குவலை மாட்டிவெளி
யேறாம லருள்பு ரியவும்
மட்டடங் காதபரி யட்டமும் மேற்சோம
வட்டமுற வருள்பு ரியவும்
மதியமிர்த மும்பொங்கி வழியமூ லக்கனலை
வைத்தெடுத் தருள்பு ரியவும்
அட்டமா சித்திநற் சட்டமா யிட்டமா
யாட்டிவைத் தருள்பு ரியவும்
அழிவின்றி விளைகின்ற வெளிகொண்டு வெளியென்
றடங்கிடற் கருள்பு ரியவும்
வட்டமதி போலமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. எட்டெட்டும் எட்டினுள் கட்டவும் — பதினாறினையும் எட்டி லடங்கக் கட்டவும், எட்டாத எட்டொன்றை — எட்டவொண்ணாத எட்டொன்றினை, அருள் புரியவும்—, ஈராறுகலையும் — பன்னிரண்டு கலைகளும், இருநான்கு வலைமாட்டி — எட்டுவலையி லகப்படுத்தி, வெளியேறாமல் — வெளிப்படாமல், அருள் புரியவும்—, மட்டு அடங்காத பரியட்டமும் — அளவுக்கடங்காத பரியட்டமும், மேல் — மேலாகிய, சோமவட்டம் உற — சோம வட்டத்தையுடைய, அருள் புரியவும்—, மதி அமிர்தமும் பொங்கி — சந்திராமிர்தமும் பொங்கி, வழிய — வழியும்படி, மூலக்கனலை வைத்து எடுத்து — மூலாக்கினியை வைத்தெடுத்து, அருள் புரியவும்—, அட்டமாசித்தி — அட்டமாசித்திகளையும், நல்சட்டமாய் — நல்ல ஏற்பாடாகவும், இட்டமாய் — அன் பாகவும், ஆட்டிவைத்து — ஆடும்படிசெய்து, அருள் புரியவும்—, அழிவு இன்றி விளைகின்ற வெளிகொண்டு — அழிவில்லாமல் உண்டாகிற வெளி

யினால், வெளியென்று அடங்கிடற்கு — வெளியென் றடங்குதற்கு, அருள் புரியவும்—, வட்டமதிபோல மெய்—வட்டவுருவாகிய பூர்ணசந்திரன் போன்ற உண்மையாகிய சாந்தகுணத்தையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கலை — மான் என்றும். வலை — அதைப்பிடிக்கும் வலையென்றும் சொன்னயம். பரியட்டம் — சேலை. இதற்கேற்பச் சோமனென்றதும் சொன்னயம். சோமன் — தோவத்தி, சந்திரன். அட்டமாசித்தி — அணிமா, மகிமா முதலியன. (௯)

மனமனை யுறைந்திடற்குச்சரித்து மாட்டிவைத்தடைத்துச்
சார்ந்திடற்குச் சற்றேனும் வரவேண்டும்.

உந்தியின் கீழ்நின்று தித்தசுழு முனைமனை
யுறைந்திடற் கருள்பு ரியவும்
ஒருநான்கு மாகவு மிருநான்குமேவு
முச்சரித் தருள்பு ரியவும்
மந்திரத் தைக்கந் தரத்தூடு வக்கென்று
மாட்டிவைத் தருள்பு ரியவும்
வாயிலோ ரொன்பதும் வன்னிநடு வணையொன்று
வைத்தடைத் தருள்பு ரியவும்
சந்திர சூரிய ரிருவரொரு வரோடொரு வர்நனி
சார்ந்திடற் கருள்பு ரியவுஞ்
சத்தாகி யென்னுளச் சித்தாகி நின்றநீ
சற்றேனு மருள்பு ரியவும்
வந்தவழி யொளிரமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. உந்தியின் கீழ்நின்று — நாபியின்கீழ் நின்று, உதித்த — தோற்றிய, சுழுமுனை — சுழுமுனை நாடியானது, மனை உறைந்திடற்கு—அதற்குரிய வீட்டில் தங்குதற்கு, அருள் புரியவும்—, ஒருநான்கும் ஆகவும் — ஒருநான்கு முண்டாயிருக்கவும், இருநான்கும் ஏகவும் — எட்டும் போகவும், உச்சரித்து— உச்சரித்தல் செய்து, அருள் புரியவும்—, மந்திரத்தை—, கந்தரத்தூடு — கண்டத்தானத்தில், வக்கென்று மாட்டிவைத்து — வக்கென்று தாபித்து வைத்து, அருள் புரியவும்—, வாயில் ஓர் ஒன்பதும் — ஒன்பது வாயில்களையும், வன்னிநடு அணை ஒன்றுவைத்து அடைத்து — நெருப்புருவாகிய நட்

டணை யொன்றைவைத்து, அருள் புரியவும்—, சந்திர சூரியர் இருவர் – சந்திர சூரியர்க ளிருவரும், ஒருவரோடு ஒருவர் – ஒருவருட னொருவர், நனி சார்ந்திடற்கு – மிகவுஞ் சேர்ந்து வாழ்வதற்கு, அருள் புரியவும்—, சத்து ஆகி – உண்மையாகி, என் உள்ளம் சித்து ஆகி – என் மனத்தில் அறிவுருவாகி, நின்றநீ – நிலைபெற்றநீ, சற்றேனும் – சிறிதாயினும், அருள் புரியவும்—, வந்தவழி ஒளிர – வந்தவழி விளங்கும்படி, மெய் – உண்மையுள்ள, தவராஜ சிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. சுழுமுனை – நடுநாடி. கண்டம் ஒரு தியானஸ்தான மாதலால், மந்திரத்தைக் 'கந்தரத் தூடுவைக்கென்று மாட்டிவைத்து' என்றார். சந்திர சூரியர் சார்தலாவது சோமசூர்ய சங்கமம், இதற்கிடம் புருவநடு. வந்த வழி – உடம்பெடுத்தவழி. (௬)

மனமுன்னேற மூட்டிவிளையாட வீடுபுக ஏற்றி
யேகாம லருளவேண்டும்.

மூலவறை யுண்ணின்ற தேசிமேற் கொண்டுநான்
முன்னேற வருள்பு ரியவும்
முன்னே று குதிரைதனை மோனகுற டாக்கொண்டு
மூட்டிவிட வருள்பு ரியவும்
மேலூருவீ தியில் வையாளி போட்டங்கு
விளையாட வருள்பு ரியவும்
மேலுமுச் சந்திமேற் சந்திறல் வந்துமேல்
வீடுபுக வருள்பு ரியவும்
ஏலேலோ மென்றுநா லிரண்டையு மிழுத்துயர
வேற்றுவித் தருள்பு ரியவும்
என்னையே மூட்டவு மெம்பிரா னென்னைவிட்
டேகாம லருள்பு ரியவும்
மாசீயு மேலான தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. மூலவறையுள் நின்ற – மூலவறையினுள்ளே நிலைபெற்ற, தேசி மேற்கொண்டு – தேசியை மேற்கொண்டு, நான் முன் ஏற – யான் முன்னேறும்படி, அருள் புரியவும்—, முன் ஏறு குதிரைதன்னை – முன்னேறின குதிரையை, மோனம் குறடாகொண்டு – மோனநிலையாகிய குறடாவினால், மூட்டிவிட – சாடிவிட, அருள் புரியவும்—, மேல் ஊரு வீதியில் – மேலே

யிருக்கிற தெருவில், வையாளிபோட்டு — வையாளிபோட்டு, அங்கு விளையாட — அவ்விடத்தே விளையாடும்படி. அருள் புரியவும்—, மேலும் — அதன் மேலும், முச்சந்திமேல் சந்தினல் வந்து — முச்சந்தியின் மேலைச்சந்தின் வழியாய்வந்து, மேல் வீடுபுக — மேலாகிய வீட்டிற் பிரவேசிக்க, அருள்புரியவும்—, ஏலேலோ என்று — ஏலேலோ வென்று, கால் இரண்டையும் இழுத்து — இரண்டு கால்களையுமிழுத்து, உயர ஏற்றுவித்து — உயர ஏறும்படிசெய்து, அருள் புரியவும்—, என்னையே மூட்டவும் — என்னையே மூள்விக்கவும், எம்பிரான் என்னைவிட்டு ஏகாமல் — எம்பிரான் என்னைவிட்டுப் போகாமல், அருள் புரியவும்—, மால் ஈயும் — விருப்பத்தையுண்டாக்குகிற, மேலான — மேலாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. தேசி — குதிரை. குறடா — சவுக்கு. வையாளி — குதிரையின் அதிவேககதி. முச்சந்தி — சோமசூரியாக்கினிகள் ஒருமிக்கச்சேருமிடம். இதனைத் திரிவேணிசங்கமம் என்பர் வடநூலார். காலிரண்டு — இடைபிங்கலைகள். மால் — விருப்பம். (௫)

மனமிடையாம லென்னை யேற்குமாளாக வுயர்ந்து
நடனமிட நயனமிட வரவேண்டும்.

இடைபிங்க லைகள்கூடி யங்குசுழி தடையுணின்
றிடையாம லருள்பு ரியவும்
என்னையறி யாமனு மொளித்தெனு ளிருந்தாடு
மென்னையெற் றருள்பு ரியவும்
அடைகாயொ டிலைசருகு பக்ஷணம் பண்ணியா
ளாக வருள்பு ரியவும்
அஷ்டாங்க யோகநித் திரைகொண்டு சும்மா
வயர்ந்திடற் கருள்பு ரியவும்
நடனமிடு பரியுமண் ணளவெளி சென்றுதிரு
நடனமிட வருள்பு ரியவும்
நயனநடு வணையிணைடு வணையுஞ் சுயஞ்சோதி
நயனமிட வருள்பு ரியவும்
வடுவற்ற சடையுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப-ரை. இடபிங்கலைகள் கூடி — இடைபிங்கலைகள் சேர்ந்து, இயங்கு சுழிதடையுள் நின்று — சஞ்சரிக்கிற சுழிமுனையாகிய தடையில் நின்று, இடையாமல் — வருந்தாமல், அருள் புரியவும்—, என்னை அறியாமலும் — என்னையறியாமலே, ஒளித்து — மறைந்து, என் உள் இருந்து ஆடும் — என்னுள்ளேயிருந்தாடுகின்ற, என்னை எற்கு — என்னை யெனக்கு, அருள் புரியவும்—, அடைகாயொடு — கிடைத்தகாயோடு, இலைசருகு — இலைசருகுகளை, பக்ஷணம் பண்ணி — பக்ஷித்து, யான் ஆளாக — நான் உனக்காளாகும்படி, அருள் புரியவும்—, அஷ்டாங்கம்—எண்வகை யுறுப்புக்களையுடைய, யோகநித்திரை கொண்டு — யோகநித்திரையை மேற்கொண்டு, சும்மா அயர்ந்திடற்கு — சும்மா அயர்ந்திருப்பதற்கு, அருள் புரியவும்—, நடநமிடு பரியும் — நடநஞ் செய்கிற குதிரையும், மண்ஆள — மண்ணுலகமுழுதும் ஆளும்படி, வெளி சென்று — வெளியேறி, திருநடநமிட — திருநடநஞ் செய்வதற்கு, அருள்புரியவும்—, நயநநடுவணையின் நடு — கண்ணின் நட்டணையின் நடுவிலே, அணையும் — சேர்ந்த, சுயஞ்சோதி நயநமிட — சுயஞ்சோதியாகிய கண்ணைப்பெற, அருள் புரியவும்—, வடு அற்ற சடை உற்ற — களங்கமற்ற சடையையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. சுழி — சுழுமுனை. சருகு — உலர்ந்தஇலை. பரி — குதிரை அது இங்கு வாயுவைக் குறித்தது. சுயஞ்சோதி — வேறொன்றி னுதவியின்றித் தானே விளங்குமொளி. (௬)

மனத்திற்குக் கொடுத்துக் கொளுத்தாமலூட்டி உட்புகத்
தயைபுரிந்து சார்பொன்ற வரவேண்டும்.

கொள்ளாது வெள்ளம்வரு முன்னணைக் கோலிக்
கொடுத்துநல் லருள்பு ரியவும்
கும்பித்தி ரேசித்த லொடுகொல்ல னுலையிற்
கொளுத்தாம லருள்பு ரியவும்
உள்ளே முளைத்தெழுந் துயர்பனையி னூறுகள்
ளூட்டிவைத் தருள்பு ரியவும்
ஓடுமோ கடகமு மோங்கார சாரமு
முட்புகத் தருள்பு ரியவும்
தள்ளாத படியடிமை கொள்ளவுந் தாயெனத்
தயைபுரிந் தருள்பு ரியவும்
தானொன்று நின்றுதந் காத்திரட் சித்துனது
சார்பொன்ற வருள்பு ரியவும்

வள்ளலாய் நின்றுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கொள்ளாது — இடங்கொள்ளாமல், வெள்ளம் வருமுன்—வெள்ளம் வருவதற்கு முன்பே, அணைகோலி கொடுத்து — அணைகோலித்தந்து, நல் அருள் புரியவும்—, கும்பித்து இரேசித்தலொடு — கும்பித்து இரேசித்தலுடனே, கொல்லன் உலையில்—கொல்லனுலைக்களத்தில் வைத்து, கொளுத்தாமல் — எரிக்காமல், அருள் புரியவும்—, உள்ளே முளைத்து எழுந்த—உள்ளே முளைத்தோங்கிய, உயர் பனையில் ஊறுகள் — உயர்பனையிற் சுரந்தகள்ளை, ஊட்டிவைத்து — உண்பித்து, அருள் புரியவும்—, ஓடுமோர் கடகமும் — ஓடுகின்ற ஒப்பற்ற கடகமும், ஓங்காரசாரமும் — ஓங்காரரசமும், உள்புகற்கு— என்னுள்ளே புகுதற்கு, அருள் புரியவும்—, தள்ளாதபடி — தள்ளிவிடாதபடி, அடிமை கொள்ளவும் — என்னை யடிமைகொள்ளவும், தாய் என தயைபுரிந்து— தாய்போலக் கருணை செய்து, அருள் புரியவும்—, தான் என்று நின்று— தானாகவேநின்று, தற்காத்து இரக்ஷித்து — தற்காத்து ரக்ஷித்து, உனது சார்பு ஒன்ற — உன் சார்பை யடைய, அருள் புரியவும்—, வள்ளலாய் நின்று — வள்ளலாகிநின்று, மெய் — உண்மையையுடைய, தவராஜசிங்கமே— தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கும்பித்தல் — ரேசகபூரகங்களின்றி வாயுவையடக்கல். இரேசித்தல் — வாயுவைவெளிவிடல். உள்ளே முளைத்தெழுந்துயர்பனையி னூறுகள் என்றது சந்திரமண்டலத் தமிர்தத்தை. கடகம் — வட்டவடிவு. சார்பு— ஆதரவு. வள்ளல் — பரமோதாரன் (மிகுகொடையாளன்.) (எ)

வனமுளவுகாட்டிக் கட்டியொட்டி லொத்தூதத்
தேயாமற்றிறப்பட வரவேண்டும்.

காயா புரிக்கோட்டை கைக்கொள்ளு தற்குளவு
காட்டிவிட் டருள்பு ரியவும்
காலோய்ந் தயர்ந்துவிடு முன்கா லிரண்டினைக்
கட்டிவைத் தருள்பு ரியவும்
ஓயாது கும்பித் திரேசித்த லுட்டங்கு
மொட்டொன்றை யருள்பு ரியவும்
ஒத்தூதி யூகா திரண்டுமொன் றேடொன்று
மொத்தூத வருள்பு ரியவும்

தேயாத விரவிமதி யுந்தேய வுஞ்சுழினை
 தேயாம லருள்பு ரியவுந்
தேவரீர் திருவடிக் காளாகி யடியேன்
 றிடப்படற் கருள்பு ரியவும்
மாயா மயக்கற்ற தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுன தேசிக நாதனே.

ப-ரை. காயாபுரிகோட்டை கைக்கொள்ளுதற்கு – காயாபுரிக்கோட்டையைக் கைப்பற்றுதற்கு, உளவுகாட்டிவிட்டு – உளவுகாட்டிவிட்டு, அருள் புரியவும்—, கால் ஓய்ந்து அயர்ந்து விடுமுன் – காலோய்ந்து அயர்ந்துவிடுதற்கு முன்பே, கால் இரண்டினை – இரண்டுகால்களையும், கட்டிவைத்து – பிணித்துவைத்து, அருள் புரியவும்—, ஓயாது – ஓயாமல், கும்பித்து—, இரேசித்தல்—, (இவைகள்) உள்தங்கும் – உள்ளே தங்குதற்குரிய, ஒட்டு ஒன்றை – ஒருபற்றினை, அருள் புரியவும்—, ஒத்து – சமமாய், ஊதி ஊதாது – ஊதி யூதாமல், இரண்டும்—, ஒன்றோடு ஒன்று – ஒன்றுடனொன்று, ஒத்து ஊத – சமமா யூதும்படி, அருள் புரியவும்—, தேயாத இரவி மதியும் தேயவும் – ஒளிமழுங்காத சூரிய சந்திரர்களும் ஒளிமழுங்கவும், சுழினைதேயாமல் – சுழுமுனையொன்றும் ஒளிமழுங்காதிருக்க, அருள் புரியவும்—, தேவரீர் திருவடிக்கு ஆளாகி – தேவரீரது திருவடிக்கு அடிமையாகி, அடியேன் திடப்படற்கு – அடியேன் உறுதிப் படுதற்கு, அருள் புரியவும்—, மாயா மயக்கு அற்ற – மாயையின் மயக்கமில்லாத, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகேவரவேண்டும், மாகுணங்குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. காயாபுரிக் கோட்டை – சரீரமாகிய கோட்டை. உளவு – மர்மம். விரவிமதி – சூரியகலை சந்திரகலை. (அ)

மனத்தைக்கட்டிக் காப்பாற்றிப் பிறமற்பெலப்பாடு
நெருங்க நேரிடவரவேண்டும்.

காற்றைப் பிடிக்கவுங் கரகத் தடைக்கவுங்
 கட்டிவைத் தருள்பு ரியவும்
கரகந் தனைக்காற் றுருத்தியுடை யாமலுங்
 காப்பாற்றி யருள்பு ரியவும்
பிற்றலோ ரொன்பதும் மூடவுங் காற்றதிற்
 பிறும லருள்பு ரியவும்

பின்னுமுன் னும்பிறழ வொட்டாது கட்டும்
பெலப்பாடு னருள்பு ரியவும்
நேத்திர மிரண்டுமுன் றோற்றரவு கொண்டிட
நெருக்குண்டு னருள்பு ரியவும்
நெற்றிநே ரிட்டவெளி பற்றிபா யவுநிஷ்டை
நேரிடற் கருள்ப ரியவும்
வாத்தியா ராகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதேசிக நாதனே.

ப—ரை. காற்றை பிடிக்கவும் — காற்றைப் பிடிக்கவும், கரகத்து அடைக்கவும் — கரகத்திலடைக்கவும், கட்டிவைத்து — (அந்தக் காற்றை) கட்டிவைத்து, அருள் புரியவும்—, கரகம் தன்னை — கரகத்தை, கால்துருத்தி உடையாமலும் — காவாகிய துருத்தியுடையாமலும், காப்பாற்றி அருள் புரியவும்—, பீற்றல் ஓர் ஒன்பதும் மூடவும் — ஒன்பது பீற்றல்களும் மூடவும், அதில் காற்று பீறுமல் — அதினின்றும் காற்று வெளிப்படாமலும், அருள் புரியவும்—, பின்னும் முன்னும் பிறழவொட்டாது — பின்னும் முன்னும் மாறுபடாமல், கட்டும் — கட்டுகிற, பெலப்பாடு — உறுதிப்பாட்டை, உன் அருள்புரியவும்—, நேத்திரம் இரண்டும் — கண்களிரண்டும், முன் தோற்றரவுகொண்டிட — எதிரேதோன்றும்படி, நெருக்குண்டு — நெருக்கப்பட்டு, உன் அருள் புரியவும்—, நெற்றி நேரிட்ட ஒளி — நெற்றியில் தோற்றிய ஒளியானது, பற்றிபாயவும் — பற்றிப்பாயவும், நிஷ்டை நேரிடற்கு—நிஷ்டை கிடைப்பதற்கு, உன் அருள் புரியவும்—, வாத்தியார் ஆக — உபாத்தியாயராக, மெய் — உண்மையையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கால் — காற்று. துருத்தி — தோற்பை. பீற்றல் — தொளை. (கூ)

மனந் துள்ளச் சுற்றக்கட்டிக் காத்துக்கூட்டிப்
பொடிபோட வரவேண்டும்.

துள்ளுமன வாசிமேற் கொள்ளவும் வையாளி
துள்ளவுன் னருள்பு ரியவுந்
தூரநட வாதுமேன் முச்சந்தி வீதியைச்
சுற்றவிட் டருள்பு ரியவுங்
கள்ளரறி யாதுமுள் ளறையிலென் குதிரையைக்
கட்டிவைத் தருள்பு ரியவுங்

கட்டாம லுங்கதவு சாத்தவும் வாயிலிற்
காத்திருந் தருள்பு ரியவுங்
கொள்ளையிட வோலைவந் தாலும் வெருட்டியே
கூட்டிவிட் டருள்பு ரியவும்
கோட்டையுங் கைவசங் கொண்டுகொண் டுன்றன்
கொடிப்போட வருள்பு ரியவும்
வள்ளலென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. துள்ளும் — துள்ளுகின்ற, மனவாசி — மனக் குதிரையை, மேற்கொள்ளவும் — மேற்கொண்டு நடத்தவும், வையாளிதுள்ள — வையாளிதுள்ளியாட, உன் அருள்புரியவும்—, தூரநடவாது — தூரமாய் நடவாமல், மேல் முச்சந்திவீதியை — மேலேயிருக்கிற முச்சந்தி வீதியை, சுற்றவிட்டு — சுற்றிவரவிட்டு, உன் அருள் புரியவும்—, கள்ளர் அறியாதும் — திருடர் அறியாமலும், உள் அறையில் — உள்வீட்டில், என்குதிரையை — என்வாசியை, கட்டிவைத்து — பிணித்து வைத்து, அருள் புரியவும்—, கட்டாமலும் — பிணிக்காமலும், கதவுசாத்தவும் — கதவுமூடவும், வாயிலில்காத்திருந்து — வாசலில் காத்திருந்து, அருள் புரியவும்—, கொள்ளையிட — கொள்ளை யிடும்படி, ஓலைவந்தாலும் — திருமுகம் வந்தாலும், வெருட்டி — அச்சுறுத்தி, கூட்டிவிட்டு — சேர்த்துவிட்டு, அருள் புரியவும் —, கோட்டையும் — கோட்டையையும், கைவசம்கொண்டு கொண்டு — கைவசமாகக்கொண்டு கொண்டு, உன்றன் கொடிபோட — உன் கொடிபோடும்படி, அருள் புரியவும்—, வள்ளல் என ஓடி — வள்ளல்போலஓடி, மெய் — உண்மையையுடைய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்தகுணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. முச்சந்திவீதி — முத்தெருக்கூடுமிடம். கொடிப்போடல் — வெற்றிக்கொடியை நாட்டல். (சo)

ஆக பாடல் - 168

ஆறாவது

தொகைநிலை.

அடங்கா தடங்கி யமைதற் காகினு
மடங்கா தியங்கு மறிபொறி யதனாற்
பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை
ஒருவழிப் படுத றொகைநிலைப் புறனென
ஓதிய முறைபோ லொன்றினோ டொன்று
வாதியன் றடாது மடங்கி யொருங்குற
நன்னிலைப் புணர்த்து நாயக வென்றழு
திந்நிலை யருள்க வென்றிரந் திரந் துயர்த்தது.

மனமிணக்கியேற்றி யடங்கியடைந்து
சார்ந்தொன்றாக வரவேண்டும்.

எந்நாளு மந்திரமு முன்னாத தந்திர
மிணக்கிவைத் தருள்பு ரியவும்
எட்டங் குலத்துக்கு மெட்டாத கந்தரத்
தேற்றிவிட் டருள்பு ரியவும்
அந்நாள மீதுகண் ணாக்குமூக் குச்செவி
யடங்கிடற் கருள்பு ரியவும்
ஆநந்த வொளிகண்டு நான்வந்த வெளிசென்
றடைந்திடற் கருள்பு ரியவும்
தன்னிலே தானா யயர்ந்தடிமை தன்மயஞ்
சார்ந்திடற் கருள்பு ரியவும்
சர்வபரி பூரணா னந்தமோ னப்பிர
சாதமொன் றருள்பு ரியவும்
மன்னுமுனி வர்க்குதவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. எந்நாளும் — எக்காலத்திலும், மந்திரமும் உன்னாத தந்திரம் — மந்திரத்தையும் நினையாத உபாயத்தை, இணக்கிவைத்து — பொருத்தி வைத்து, அருள் புரியவும்—, எட்டு அங்குலத்துக்கும் எட்டாத கந்தரத்து— எட்டங்குலத்திற்கும் எட்டப்படாத கண்டஸ்தாநத்தில், ஏற்றிவிட்டு—, அருள் புரியவும்—, அந்நாளமீது — அந்தநாளத்தின்மேல், கண் நாக்கு மூக்கு

செவி – கண்ணும் நாக்கும் மூக்கும் செவியும், அடங்கிடற்கு – அடங்குதற்கு, அருள் புரியவும்—, ஆநந்த ஒளிகண்டு – ஆநந்த வொளியைப்பார்த்து, நான் வந்த வெளிசென்று அடைந்திடற்கு – நான் வந்த இடமாகிய வெளியிற்போயடைந்திடுவதற்கு, அருள் புரியவும்—, தன்னிலே தானாய் அயர்ந்து – தன்னிலே தானாய்ச் சோர்ந்து, அடிமை – அடியேன், தன்மயம் சார்ந்திடற்கு– தன் மயத்தையடைதற்கு, அருள் புரியவும்—, சர்வபரிபூரணாநந்த மோனப் பிரசாதம் ஒன்று – சர்வபரிபூரணாநந்த மோனப்பிரசாதமொன்றை, அருள் புரியவும்—, மன்னும் முனிவர்க்கு உதவு – நிலைபெற்ற முனிவர்களுக்கு அருள்செய்கிற, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும்– பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. நாளம் – சுழுமுனை நாடி. தன்மயம் – அந்தப் பிரமமயம். (௧)

மனமுழங்க மூட்டி மேலேற்றி மேலுமேற்குச் சந்தான
சதாநிட்டை சார்ந்திட வரவேண்டும்.

மூலப் பிராணனைச் சண்டமா ருதமென
முழங்கவிட் டருள்பு ரியவும்
மும்மண்ட லங்களும் முட்டும் படிக்கங்கி
மூட்டிவைத் தருள்பு ரியவும்
மேலாம் பதங்காட்டு மெய்ஞ்ஞான நூலேணி
மேலேற்றி யருள்பு ரியவும்
மேலுமே லானநா லாம்படி கடத்திமேன்
மேலுமேற் கருள்பு ரியவும்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சந்தான மருள்பு ரியவுஞ்
சாசுவத சாம்ப்ரதா யத்தொடு சதாநிட்டை
சார்ந்திடற் கருள்பு ரியவும்
மாலையணி மார்பனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. மூலப்பிராணனை – மூலவாயுவை, சண்டமாருதம் என்–சண்டமாருதம்போல, முழங்கவிட்டு – முழங்கும்படி விட்டு, அருள் புரியவும்—, மும்மண்டலங்களும் முட்டும்படிக்கு – மும்மண்டலங்களினுஞ் சென்று தாக்கும்படிக்கு, அங்கி மூட்டிவைத்து – நெருப்பு மூள்வித்து, அருள்புரியவும்—,

மேலாம்பதம் காட்டும் — மேலாகிய இடத்தைக் காட்டுகிற, மெய் ஞானம் — மெய்ஞ்ஞானமாகிய, நூலேணிமேல் ஏற்றி — நூலேணிமே லேறச்செய்து, அருள் புரியவும்—, மேலும் மேலான நாலாம்படி கடத்தி — மேன்மையிற் சிறந்த நாலாம்படியைத் தாண்டுவித்து, மேன் மேலும் — மேலு மேலும், எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, சாலோக சாமீப சாரூப சாயுச்ய சந்தானம் — சாலோக சாமீப சாரூப சாயுச்ய சந்தானத்தை, அருள் புரியவும்—, சாசுவத சாம்ப்ரதாயத்தொடு — சாசுவத சாம்ப்ரதாயத்துடனே, சதாநிட்டை சார்ந்திடற்கு — சதாநிட்டையை நானடைவதற்கு, அருள் புரியவும்—, மாலை அணி மார்பனே — மாலையைத் தரித்த மார்பை யுடையவனே, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ—று.

வி—ரை. சண்டமாருதம் — பெருங்காற்று. முழங்கல் — மிக்கொலித்தல். மும்மண்டலங்கள் — சோமசூரியாக்கினி மண்டலங்கள். அங்கி — அக்கியென்னும் வடமொழிச்சிதைவு. மேலாம்பதம் — முத்தி. நாலாம்படி — ஞானபாதம். சாலோகம் — கடவுளுலகத்திருத்தல். சாமீபம் — கடவுளுக்கருகேயிருத்தல். சாரூபம் — கடவுளுருவத்தைப் பெற்றிருத்தல். சாயுச்யம் — கடவுளோடு ஐக்யமாதல். சந்தானம் — சந்ததி (தொடர்பு.) சாம்ப்ரதாயம் — பரம்பரை. சதாநிட்டை — இடையறாதநிஷ்டை. மாலை — படிகமாலை முதலியன. (உ)

மனத்தைத் திறந்து திறவாமல் கட்டிக் கலீரென்ன
ஆட்டி யாளாக்கி யருள வரவேண்டும்.

திண்டுமுண் டானவா ருகார வீடுந்
திறந்து தந்தருள்பு ரியவும்
திருகுமுரு காநின்ற வாயிலோ ரொன்பதுந்
திறவாம லருள்பு ரியவும்
கண்டசர மாலையங் கென்றுகண் டந்தனிற்
கட்டிவைத் தருள்பு ரியவும்
காலினின் ஞுகமணி யோசைக் கலீர்கலீ
ரென்னவே யருள்பு ரியவும்
அண்டர்களு நின்றுதுதி கொண்டிடவு மெனைநடன
மாட்டிவைத் தருள்பு ரியவும்
அஷ்டாங்க யோககன் னிஷ்டையினும் வைத்தென்னை
யாளாக்கி யருள்பு ரியவும்
மண்டல மெலாந்தொழுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதேசிகநாதனே.

ப—ரை. திண்டு மூண்டு ஆன — திண்டு மூண்டாகிய, ஆறு ஆதார வீடும் — ஆறாதார வீடுகளையும், திறந்து தந்து — திறந்து கொடுத்து, அருள் புரியவும்—, திருகுமுருகு ஆய்நின்ற — திருகுமுருகாக நின்ற, வாயில் ஓர் ஒன்பதும் திறவாமல் — ஒன்பது வாயில்களையும் திறவாமல், அருள் புரியவும்—, கண்டசரமாலை — கண்டசர மாலையை, அங்க் என்று — அங்கென்றுச் சரித்து, கண்டம்தன்னில் கட்டிவைத்து—கண்டத்திற்கட்டிவைத்து, அருள் புரியவும்—, காலினில் — காலியினிடத்து, நாதம்—நாதமாகிய, மணியோசை—மணியொலியானது, கலீர் கலீர் என்ன — கலீர் கலீரென் றொலிக்கும்படி, அருள் புரியவும்—, அண்டர்களும் நின்று துதிகொண்டிடவும் — தேவர்களும் நின்று துதிக்கவும், என்னை நடகம் ஆட்டிவைத்து — என்னை நடனமாடும்படி செய்து, அருள் புரியவும்—, அஷ்டாங்கயோகம் — அஷ்டாங்கயோகத்தின், நல் நிஷ்டையிலும் வைத்து — நல்ல நிஷ்டையிலும் இருத்தி, என்னை ஆளாக்கி — என்னை யடிமையாக்கி, அருள் புரியவும்—, மண்டலம் எல்லாம் தொழும் — எல்லா வுலகங்களும் தொழுகின்ற, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில்வாழ் கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. திண்டு மூண்டு — தாறு மாறு. திருகு முருகு — கோணல் மாணல். கண்டசரமாலை — கழுத்திலணியுமோ ராபரணவிசேடம். அங்க்— ஒரு மந்திரபீஜம். காலினில் — வாயுவில். நாதம் — ஓசை, (நாததத்துவம்.)

மனந் தம்பிக்கத் தம்பனம் பஞ்சாகப் பாழ்தந்து
கருணை நகதியளிக்க வரவேண்டும்.

தசநாத மாமுன்ன பானவா யுவினையுட்
டம்பிக்க வருள்பு ரியவும்
தாரணியி லங்கென்று முச்சரித் திடுஜலத்
தம்பன மருள்பு ரியவும்
பசுபாச நேசப் பெரும்பாவ மனவிட்ட
பஞ்சாக வருள்பு ரியவும்
பாழான மூன்றுசை பாழாக வும்மூன்று
பாழ்தந்து னருள்பு ரியவும்
கசமான சிற்றின்ப விடமூண்டு சாகாது
கருணைகூர்ந் தருள்பு ரியவும்
கருணைநிதி யேசரண மடையுமடி யேற்குநற்
கதியளித் தருள்பு ரியவும்

வசியவச னித்தலொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தசநாதம் ஆம் முன் — தசவித நாதங்க ளுண்டாவதற்கு முன்பே, அபான வாயுவினை — அபானவாயுவை, உள் தம்பிக்க — உள்ளே தம்பிக்கும்படி, அருள்புரியவும்—, தாரணியில் — பூமியில், அங்க் என்றும் உச்சரித்திடு — அங்க் என்றும் உச்சரிக்கின்ற, ஜலத்தம்பநம் — ஜலஸ்தம்பனத்தை, அருள்புரியவும்—, பசு பாச நேசம் — பசு பாசநேசமாகிய, பெரும் பாவம் — பெரும் பாவமானது, அனல் இட்ட பஞ்சு ஆக — நெருப்பிலிட்ட பஞ்சுபோலாகும்படி, அருள்புரியவும்—, பாழ் ஆன மூன்று ஆசை — பாழாகிய மூன்றாசைகளும், பாழ் ஆகவும் — பாழாய்ப் போகவும், மூன்றுபாழ் தந்து — முப்பாழைத்தந்து, உன் — உனது, அருள் புரியவும்—, கசம் ஆன — கசமாகிய, சிற்றின்பவிடம் உண்டு — சிற்றின்பமாகிய நஞ்சையுண்டு, சாகாது — இறவாமல், கருணைகூர்ந்து — கிருபைமிகுந்து, அருள் புரியவும்—, கருணை நிதியே — கருணாநிதியே, சரணம் அடையும் அடியேற்கு — சரணடையு மடியேனுக்கு, நல்கதி அளித்து — நற்கதியைக் கொடுத்து, அருள் புரியவும்—, வசியம் — யாவரையும் வசியப்படுத்தும்படியான, வசனித்தலொடு — இன்மொழியோடு, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. தசநாதம் — தசவித நாதங்கள், அவை சிரோபாகத்தில் முழங்குவனவாகிய, பேரி மிருதங்க சங்க காஹளாதி நாதங்கள். அபான வாயு — அதோமுகமாகச் செல்லும் வாயு. தம்பித்தல் — நிறுத்தல். (தடுத்தல்) ஜலஸ்தம்பநம் — கலைஞான மறுபத்து நான்கிலொன்று, அது நீரினியல்பைத்தடுத்தல். பசுபாசநேசம் — உயிர்களிடத் தாசையன்புகள். பசு—உயிர். கசம் — ஒருநோய். கருணைநிதி — கருணைச்செல்வம். (கருணைக்குப் பிறப்பிடம்.) வசனித்தல் — பாஷித்தல், (பேசல்.) (௪)

மனத்தகயானைச் சுத்திசெயச் சொக்கிவிட
மாறிட வற்றாறு தருள வரவேண்டும்.

அத்தியி லுதித்தெழு மகத்தீ யெரித்தே
யகந்திய வருள்பு ரியவும்
அத்தியை நத்தியு மிருந்தே யறந்தங்கி
யானைக வருள்பு ரியவும்
சுத்தபரி சுத்தமது வாகதச நாதமுஞ்
சுத்திசெய் தருள்பு ரியவும்

சோடசந் தன்னையுஞ் சோமவட் டந்தனிற்
சொக்கிவிட வருள் புரியவும்
மத்தியி லிருந்தமதி யமுதூற்றி நரைதிரையு
மாறிடற் கருள் புரியவும்
வாரியை நிகர்த்தவருள் வாரிகரை தத்தவும்
வற்றாற கருள்பு ரியவும்
வத்துமய மாய்நின்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அத்தியில் உதித்து எழும்—கடலிற்றோன்றி யெழுகின்ற. அகத்தீ எரித்து—மனத்தீயினலெரித்து, அகம்தீய—பாபங்கள் வெந்தொழி யும்படி, அருள் புரியவும்—, அத்தீயை—அந்தத்தீயினை, நத்தியு யிருந்து—விரும்பியிருந்து, அறம்தங்கி—தருமம் நிலைபெறப்பெற்று, யான்ஆக—நானே யாகும்படி, அருள் புரியவும்—, சுத்தபரி சுத்தமதுவாக—சுத்த பரிசுத்த மாகும்படி, தசநாதமும்—தசவிதநாதங்களையும், சுத்திசெய்து—சுத்திபண்ணி, அருள் புரியவும்—, சோடசம் தன்னையும்—பதினறினையும், சோமவட்டம் தன்னில் சொக்கிவிட—சோமவட்டத்தில் லயித்துப்போம்படி, அருள் புரி யவும்—, மத்தியில் இருந்த—நடுவேயிருந்த, மதி அமுது ஊற்றி—மதியமு தத்தைவார்த்து, நரைதிரையும்—நரைத்திரைகளும், மாறிடற்கு—நீங்கு தற்கு, அருள்புரியவும்—, வாரியை நிகர்த்த—கடலைநிகர்த்த, அருள்வாரி—அருட்கடலானது, கரைதத்தவும்—கரையில் தவழவும், வற்றாறு—வடியா மல், அருள் புரியவும்—, வத்துமயமாய் நின்ற—பிரமவஸ்துவின் வடிவாய் நின்ற, தவராஜ சிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும்—பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ—று.

வி—ரை. அப்தியென்னும் வடமொழி அத்தியெனவந்தது. அகம்பாவம்.

மனம் வரம் வசிய மடர்ந்தடங்கிச் சோர்ந்து
சுருண்டிட வரவேண்டும்.

வாதனை யிறக்கவுஞ் சாதனை நிறக்கவும்
வரமளித் தருள் புரியவும்
வாசிதனி லேற்றவும் பாசவினை மாற்றவும்
வசியமெற் கருள் புரியவும்
ஆதார மாறினுஞ் சேதாரம் வாரா
தடர்ந்தேற வருள்பு ரியவும்

அங்கென்று கும்பித்து வங்கென்றி ரேசித்
தடங்கென்று னருள்பு ரியவும்
சூதான மானவெறு வெட்டவெளி சென்றங்கு
சோர்ந்திடற் கருள்பு ரியவுஞ்
சோதிமணி மண்டபக் கமலா சனத்திற்
சுருண்டிடற் கருள்பு ரியவும்
மாதவர்க் கரசனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப-ரை. வாதனை இறக்கவும் — வாசனைகள் அழிந்தொழியவும், சாதனை நிறக்கவும் — சாதனங்கள் ஒளி செய்யவும், வரம் அளித்து — வரந் தந்து, அருள் புரியவும் —, வாசிதனில் எற்றவும் — வாசிமீது ஏறுவிக்கவும், பாச வினை மாற்றவும் — பாசவினைகளை நீக்கவும், வசியம் — வசியத்தொழிலை, எற்கு — எனக்கு, அருள் புரியவும் —, ஆதாரம் ஆறினும் — ஆறுதாரங்களினும், சேதாரம் வாராது — சேதமொன்று முண்டாகாமல், அடர்ந்து ஏற — நெருங்கி யேற, அருள் புரியவும் —, அங்க் என்று கும்பித்து — அங்க் என்று கும்பகஞ்செய்து, வங் என்று ரேசித்து — வங் என்று ரேசகஞ்செய்து, அடங்கு என்று — அடங்கி யிருப்பாயென்று, உன் — உனது, அருள் புரியவும் —, சூதானமான — ரகசியமான பெருமையுள்ள, வெறு வெட்டவெளி சென்று — வெறுமையான வெட்ட வெளியிற்போய், அங்கு — அவ்விடத்தில், சோர்ந்திடற்கு — அயர்ந்திருத்தற்கு, அருள் புரியவும் —, சோதிமணி மண்டபம் — ஒளியுள்ள ரத்தின மண்டபத்தில், கமலம் ஆசனத்தில் — பதுமாசனத்தில், சுருண்டிடற்கு — சுருண்டு படுத்துக்கொள்வதற்கு, அருள் புரியவும் —, மாதவர்க்கு அரசனே — பெருந்தவத்தினற்கு வேந்தனே, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே —, எ—று.

வி-ரை. வாதனை — வாசனை, லோகவாசனை முதலியன. சேதாரம் — நஷ்டம். அங்க் வங்க் என்பன — பீஜாக்ஷரங்கள். கும்பித்தல் — போக்குவரவற வாயுவை நிறுத்தல். ரேசித்தல் — வாயுவை வெளியிடல். சூதானம் — ரகசியம். (சு)

மனங் குதித்துக் கூத்தாடக் கிட்டுதற்குக் கிருபைபுகுந் தெப்போது மருள வரவேண்டும்.

குதிகொள்ளு மச்சுமட் டத்தைப் பிடித்துக்
குதித்தேற வருள்பு ரியவும்
கோபுரத் தடியினிற் கொஞ்சிகட னங்கொண்டு
கூத்தாட வருள்பு ரியவுங்

கெதிகொண்டு பாய்ந்துபடி யாறுங் கடந்துளங்
கிட்டுதற் கருள்பு ரியவும்
கெர்ப்பகிர கத்தினிற் குதிரையைக் கட்டவும்
கிருபைதந் தருள்பு ரியவும்
பொதிகைமா மலையது பொதும்பி லடியேனும்
புகுந்திடற் கருள்பு ரியவும்
போதுமென வாழ்வதுஞ் சித்தமென் பாக்யமெப்
போதுமெற் கருள்பு ரியவும்
மதியென வெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. குதிகொள்ளும் – குதிக்கின்ற, அச்சு மட்டத்தை – அச்சுமட்டமென்கிற குதிரையை, பிடித்து – பற்றி, குதித்து ஏற – அதின்மேல் குதித்தேறுதற்கு, அருள் புரியவும்—, கோபுரத்து அடியினில் – கோபுரத்தின் கீழே, கொஞ்சி நடனம்கொண்டு – கொஞ்சி நடனஞ்செய்து, கூத்தாட – கூத்தாடுதற்கு, அருள் புரியவும்—, கெதிகொண்டு பாய்ந்து – கதிகொண்டு பாய்ந்து, படி ஆறும் கடந்து – ஆறு படிகளையுங் கடந்து, உளம் கிட்டுதற்கு – என் மனமானது உம்மை யணுகுவதற்கு, அருள் புரியவும்—, கெர்ப்ப கிரகத்தினில் – கர்ப்ப கிரகத்தில், குதிரையை கட்டவும் – குதிரையைக் கட்டுதற்கும், கிருபைதந்து – கருணைசெய்து, அருள்புரியவும்—, பொதிகை மாமலையது பொதும்பில் – பொதிகை மலையின் குகையில், அடியேனும் புகுந்திடற்கு – அடியேனும் நுழைவதற்கு, அருள் புரியவும்—, போதும் என வாழ்வது – போதும் என்று சொல்லும்படி நான் வாழ்ந்திருப்பது, உன் சித்தம்–என் பாக்கியம், எப்போதும் எற்கு – எப்போது மெனக்கு, அருள் புரியவும்—, மதி என எழுந்து – சந்திரன்போல எழுந்து, மெய் – உண்மையையுடைய, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ-று.

வி–ரை கெதி – வேகம். படி யாறும் என்றது – ஆறாதாரங்களை. (எ)

மனத்தின் றூரணை தம்பிக்கக் கசிந்து கருக்கிப்
பதவிபால் தரவரவேண்டும்.

தசநாடி யும்மூல நாடியு ளொடுங்குறற்
றூரணைக ளருள்பு ரியவுந்

தாதுமுந் நான்குமிரு நான்காக வொருநான்கு
தம்பிக்க வருள்பு ரியவும்
கசியாது சோமவட் டத்துறையு மமிர்தங்
கசிந்திடற் கருள்பு ரியவும்
கனலினாற் றத்துவக் குப்பையைச் சுட்டுக்
கருக்கிவிட வருள்பு ரியவும்
பசியாக மற்றவமு தூற்றவுஞ் சாயுச்சிய
பதவியொன் றருள்பு ரியவும்
பசுவினைப் பதியினிற் கட்டவுங் கற்பகப்
பால்தரற் கருள்பு ரியவும்
வசவிர்த்தி யாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தசநாடியும் — தசவித நாடிகளும், மூலநாடியுள் ஒடுங்கும் — மூல நாடியில் ஒடுங்குதற்குரிய, நல் தாரணைகள் — சிறந்த தாரணைகளை, அருள் புரியவும்—, தாது முந்நான்கும் — பன்னிரண்டு தாதுக்களும், இருநான்கு ஆக — எட்டு தாதுக்களாகும்படி, ஒருநான்கு தம்பிக்க — ஒருநான்கையும் ஸ்தம்பிக்கும்படி, அருள் புரியவும்—, கசியாது — கசியாமல், சோமவட்டத்து உறையும் — சோமவட்டத்தில் தங்கியிருக்கிற, அமிர்தம் — அமுதமானது, கசிந்திடற்கு — கசிவதற்கு, அருள் புரியவும்—, கனலினால் — நெருப்பினால், தத்துவம் குப்பையைசுட்டு — தத்துவக்குப்பையை யெரித்து, கருக்கிவிட — கருக்கிவிடும்படி, அருள்புரியவும்—, பசி தாகம் அற்ற — பசி தாகங்களில்லாமைக் கேதுவாகிய, அமுது ஊற்றவும் — அமிர்தத்தை வார்க்கவும், சாயுச்சிய பதவி ஒன்று — சாயுச்சி பதவியாகிய ஒன்றினை, அருள் புரியவும்—, பசுவினை பதியினில் கட்டவும் — பசுவை அதற்குரிய இடத்திற் கட்டிவைக்கவும், கற்பகம் பால் தரற்கு — கற்பகப் பாலைக் கொடுத்தற்கு, அருள் புரியவும்—, வசவிர்த்தியாக — வசமாக, மெய் தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழும், என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. தசநாடி — பத்துநாடி. அவை : சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி என்பன. இவற்றுள் சுழிமுனை ஆதாரமாறினு மூடுருவிநிற்பது. இடை பிங்கலை யிரண்டும் கத்தரிகைக்கோல்போற் பின்னி நிற்பன. காந்தாரி நாபியிற் றோன்றிச் சத்தமெழுக்கு மேழுநாடியாய்க் கண்டத்துறுவது. அத்தி சிகுவை யிரண்டும் பத்துநாடி யுற்றுக் கண்ணில் நிற்பன. அலம்புடை புருடன் இரண்டும்

செவியில் நூற்றிருபது நரம்புற்றிருப்பன. குகு நாபியிலுறைந்து குய்யத்தைப்பற்றி நிற்பது. சங்கினி உபத்தத்தைப்பற்றி யிருப்பது. (அ)

மனம் வெல்லுதல் விலாசஞ்சு மாறுபடச் சூக்ஷங்கொள்ளாது குலைந்திட வரவேண்டும்.

வெல்லரிய மாயைதனை வெல்லென்று சொல்லவும்
வெல்லுதற் கருள்பு ரியவும்
விரிமறைகள் முரசறையு மறிவுக் ககண்டித
விலாசமொன் றருள்பு ரியவும்
சொல்லரிய வாசாம கோசர சுபாவஞ்
சுமாறுபட வருள்பு ரியவுஞ்
சும்மா விராமலுஞ் சும்மா விராநின்ற
சூட்சமெற் கருள்பு ரியவுங்
கொல்லரிய பேய்க்குரங் காமனம் பாய்ந்துகுதி
கொள்ளாது னருள்பு ரியவுங்
கொலைகேட ரானவைம் புலவேடர் கூட்டங்
குலைந்திடவு னருள்பு ரியவும்
வல்லிரு டொலைக்கவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. வெல்லரிய மாயைதனை — வெல்லுதற்கரிய மாயையை, வெல் என்று சொல்லவும்—வெல்லென்று சொல்வதற்கும், வெல்லுதற்கு—சொன்ன வண்ணம் வெல்லுதற்கு, அருள் புரியவும்—, விரி மறைகள் முரசு அறையும் — விரிந்த வேதங்கள் முழங்குகின்ற, அறிவுக்கு — என் அறிவினுக்கு, அகண்டித விலாசம் ஒன்று — அகண்டிதமாகிய விலாசமொன்றனை, அருள் புரியவும்—, சொல் அரிய — சொல்வதற்கரிய, வாசாமகோசர சுபாவம் — உனது வாசாமகோசர இயற்கையானது, சுமாறுபட — குறைவுபடும்படி, அருள் புரியவும்—, சும்மா இராமலும் — சும்மா இருக்காமலும், சும்மா இராநின்ற — சும்மா இருக்கின்ற, சூட்சம் — உபாயத்தை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, கொல் அரிய — கொல்லுதற்கரிய, பேய் குரங்கு ஆம்மனம் — பேய்க்குரங்காகிய மனமானது, பாய்ந்து குதிகொள்ளாது — பாய்ந்து குதிக்காமல், உன் அருள்புரியவும்—, கொலை கேடர் ஆன—கொலைகேடராகிய, ஐம்புல வேடர் கூட்டம் — ஐம்புல வேடரது கூட்டமானது, குலைந்திட — குலையும்படி, உன் அருள்புரியவும்—, வல் இருள் தொலைக்கவும் — வலிய இருளை தொலைத்துவிடவும், தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி

வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. வாசாமகோசரம் — வாக்குக்கெட்டாதது. குதிகொள்ளல் - ஒரு சொல். குதித்தல் என்பது பொருள். ஐம்புலன் — ஐந்து விடயங்கள். அவை: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. (கூ)

மனமதுகொள்ள வாநந்தங் கடைத்தேறக்கட்டி
நான்புகற்கு நயந்துதந்து வரவேண்டும்.

அஷ்டாங்க யோகமே கிட்டநீ ரிஷ்டம்வைத்
தததுகொள்ள வருள்பு ரியவும்
ஆதிநடு முடிவி லகண்டிதா காரவறி
வாநந்த மருள்பு ரியவும்
கட்டையிற் போமுனே நிட்டைசா தித்துக்
கடைத்தேற வருள்பு ரியவும்
காலைப் பிடித்துமூ லப்பிரா ணன்றனைக்
கட்டிவைத் தருள்பு ரியவும்
நட்டநடு வீதிமீ தோடியுந் தானற்று
நான்புகற் கருள்பு ரியவும்
நாதநா தாந்தவே தாந்தசா ரத்தையு
நயந்துதந் தருள்பு ரியவும்
மட்டறிவ தற்கரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அஷ்டாங்கயோகமே கிட்ட — அஷ்டாங்கயோகமே கிடைக்கும்படி, நீ இஷ்டம்வைத்தது — நீ என்மீது விருப்பம் வைத்ததை, கொள்ள — நான் ஏற்றுக்கொள்ளும்படி, அருள் புரியவும்—, ஆதி நடு முடிவு இல்—ஆதி மத்தியாந்தங்களில்லாத, அகண்டித ஆகாரம் — அகண்டாகாரமாகிய, அறிவு ஆனந்தம் — ஞானானந்தத்தை, அருள் புரியவும்—, கட்டையில் போகுமுன்னே — கட்டைக்குப் போவதற்கு முன்பே, நிட்டைசாதித்து கடைத்தேற— நிஷ்டை சாதித்துக் கடைத்தேறும்படி, அருள் புரியவும்—, காலைப் பிடித்து — காலைப்பற்றி, மூலப் பிராணன் தன்னை — மூலப்பிராணனை, கட்டிவைத்து — பிணித்துவைத்து, அருள் புரியவும்—, நட்ட நடுவீதிமீது ஓடியும் — நட்ட நடுவீதியின்மேல் ஓடியும், தான் அற்று — தானென்பதற்று, நான் புகற்கு — நான் பிரவேசித்தற்கு, அருள் புரியவும்—, நாத நாதாந்த வேதாந்த சாரத்தையும் — நாத நாதாந்த வேதாந்த சாரத்தினையும், நயந்து தந்து — விரும்பிக்கொடுத்து, அருள் புரியவும்—, மட்டு அறிவதற்கு அரிய—

எல்லையறிவதற்கரிதாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கட்டை — சுடுகாட்டில் வடுக்கிவைக்கும் விறகு. (ஈமவிறகு) இதற்கு சிதையென்று பெயர். காலைப்பிடித்து — காற்றைப்பற்றி. தான் அற்று என்றது — அகம்பாவமற்று என்றபடி. (௬O)

ஆ. பாடல் - 178.

ஏழாவது

பொறை நிலை.

தொகுத்துப் பலபுறந் துருவிச் செல்லா
தகத்தே நாட்டி யவ்வரு நிலையொடு
மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையால்
நினைத்த நினைவை நினைவாக் கொண்டு
பொறுக்கு நிலையினைப் பொருந்த வருள்கவென்
றிறுக்குங் கருத்தோ டிரந்திரந் துயர்த்தது.

மனங் கனலை மூட்டிவைத்து முன்னேற்றிச் சீர்பாததீக்ஷை
வைத்துச் சரணமிடச் சரணமிட வரவேண்டும்.

முன்னையே மூட்டுமூட் டென்றமூ லக்கனலை
மூட்டிவைத் தருள்பு ரியவும்
முன்வைத்த காலையும் பின்வாங்கி டாமலென்னை
முன்னேற்றி யருள்பு ரியவுஞ்
சென்னிமீ தெந்தியான் றெண்டனிட் டுய்யவுஞ்
சீர்பாத மருள்பு ரியவும்
தெட்சணா மூர்த்தமாய் நின்றாகரி சனைதந்து
தீக்ஷைவைத் தருள்பு ரியவுஞ்
சந்நிதா னத்திற் சரண்சரண மென்றுநான்
சரணமிட வருள்பு ரியவுஞ்
சட்டமுனி முதலான நாதாக்க ளடியினுஞ்
சரணமிட வருள்பு ரியவும்

வன்னிநடு வணையான தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப—ரை. முன்னையே — முன்பே, மூட்டிமூட்டி என்று—, மூலக்கனலை — மூலாக்கினியை, மூட்டிவைத்து — மூளுவித்து, அருள்புரியவும்—, முன்வைத்த காலை நான் பின்வாங்கிடாமல் — முன்வைத்த காலை நான் பின்வாங்காமல், என்னை முன் ஏற்றி — என்னை முன்னேறச்செய்து, அருள் புரியவும்—, சென்னிமீது ஏந்தி — சிரசின்மேல் தாங்கி, யான் தெண்டனிட்டு உய்யவும்— நான் கும்பிட்டுப் பிழைக்கவும், சீர்பாதம் — உன் சீர்பாதத்தை, அருள் புரியவும்—, தெக்ஷிணாமூர்த்தமாய் நின்று தரிசனை தந்து — தெக்ஷிணாமூர்த்தமாய் நின்று காட்சிதந்து, தீக்ஷைவைத்து — தீக்ஷைசெய்து, அருள் புரியவும்—, சந்நிதானத்தில் — உன் சமுகத்தில், சரண் சரணம் என்று — சரணம் சரண மென்று, நான் சரணமிட — நான் கும்பிட, அருள் புரியவும்—, சட்டமுனி முதலான நாதாக்கள் அடியினும் — சட்டமுனி முதலாகிய பெரியோர்களுடைய திருவடியிலும், சரணமிட — கும்பிட, அருள் புரியவும்—, வன்னி நடுவணையான — நெருப்பின் நடுவணையாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடி வாழும் — பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. உய்தல் — கடைத்தேறல். தீக்ஷை — திருவடிதீக்ஷை. வன்னி நடுவணை — புருவநடு. (௧)

மனந்தனை பம்பரமாட்ட சமர்ப்பொருத குதித்தேறக்
கொடிபோட வாடம்பரமாட்ட வரவேண்டும்.

சாட்டியில் லாதுபம் பரமாட்ட வல்லமை
தனைத்தந்து னருள்பு ரியவுந்
சரவாள் பிடித்தச்சு மட்டமே விட்டுச்
சமர்ப்பொருத வருள்பு ரியவும்
கோட்டைவா யிற்படி கடந்தலங் கத்திற்
குதித்தேற வருள்பு ரியவும்
கொடிமரங் கைக்கொண்டு ஜயமாகி யென்கைக்
கொடிப்போட வருள்பு ரியவும்
ஆட்டுமோர் சக்கரமு மோயாம லாடவா
டம்பர மருள்பு ரியவும்
அகிலாண்ட கோடிக ளனைத்தையு நினைத்தபடி
யாட்டென்று னருள்பு ரியவும்

மாட்டோ மெனுமலே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. சாட்டையில்லாது — சாட்டையில்லாமலே, பம்பரம் ஆட்ட — பம்பரமாட்டுதற்கு, வல்லமைதனை தந்து — வல்லமையைக் கொடுத்து, உன் அருள் புரியவும்—, சரவாள் பிடித்து — சரவாளைக் கையிற் பிடித்து, அச்சுமட்ட மேலிட்டு — அச்சுமட்டத்தின்மேலேறி, சமர்பொருத — யுத்தஞ்செய்ய, அருள் புரியவும்—, கோட்டை வாயிற்படி கடந்து — கோட்டை வாசற்படியைத்தாண்டி, அலங்கத்தில் குதித்து ஏற — மதிலின்மீது குதித்தேறும்படி, அருள் புரியவும்—, கொடிமரம் கைக்கொண்டு — கொடிமரத்தை கையிற் கொண்டு, ஜயமாகி — வெற்றியடைந்து, என் கைகொடிபோட — என் கைக் கொடியைப் போடும்படி, அருள் புரியவும்—, ஆட்டும் — ஆட்டப்படுகிற, ஓர் சக்கரமும் — ஒற்றைச்சக்கரமும், ஓயாமல் ஆட — ஓயாமலாடும்படி, ஆடம்பரம் — ஆடம்பரத்தை, அருள் புரியவும்—, அகிலாண்டகோடிகள் அனைத்தையும் — அகிலாண்டகோடிகளெல்லாவற்றையும், நினைத்தபடி ஆட்டுஎன்று — நினைத்தபடியே யாட்டக்கடவா யென்று, உன் அருள் புரியவும்—, மாட்டோம் என்னுமலே—வரமாட்டோமென்று சொல்லாமலே, தவராஜசிங்கமே— தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. சாட்டை — பம்பரமாட்டுங்கயிறு. "சாட்டையில் பம்பர சாலம் போல்" என்றார் தாயுமானவரும். சரவாள் — ஒரு வாள் விசேடம். அச்சுமட்டம் — அச்சுதேசத்துக் குதிரை. அலங்கம் — மதில். கொடி — துவசம். ஆடம்பரம் — சந்தோஷம். (௨)

மனத்திற்குச் சாயுச்சியஞ் சாதித்துங் கைக்களித்துங் காட்டிப் போதித்துப் பொருத்திவைத்தருள வரவேண்டும்.

சாதனையி லேற்றவும் வாதனையை மாற்றுமொரு
சாயுச்ய மருள்பு ரியவுஞ்
சட்டக் குழப்பமெல் லாம்விட்டு நன்னிஷ்டை
சாதித்து னருள்பு ரியவுங்
காதியுப தேசங்க ளோதவும் மாதவங்
கைகளித் தருள்பு ரியவும்
கரதலா மலகமென வென்னுக்கு ளென்னையுங்
காட்டிவிட் டருள்பு ரியவும்

போதனைக் கெட்டாத போதனைக் கைக்கொண்டு
போதித்து னருள்பு ரியவும்
புத்திக்கு மெட்டாத மத்திபத் தீபம்
பொருத்திவைத் தருள்பு ரியவும்
மாதாபி தாவனைய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. சாதனையில் ஏற்றவும் – சாதனையில் அதிகரிக்கச் செய்யவும், வாதனையை மாற்றி – வாசனைகளை நீக்கி, ஒரு சாயுச்யம் – ஒப்பற்ற சாயுச்சியத்தை, அருள் புரியவும்—, சட்டக்குழப்பம் எல்லாம்விட்டு – சரீரக்குழப்பமெல்லாம்விட்டு, நல் நிஷ்டை சாதித்து – நல் நிஷ்டையைச் சாதித்து, உன் அருள் புரியவும்—, காதில் உபதேசங்கள் ஓதவும் – செவியில் உபதேச மொழிகளைச் சொல்லவும், மாதவம் கைக்கு அளித்து – பெரிய தவத்தைக் கைவசப்படுத்தி, அருள் புரியவும்—, கரதலா மலகம் என – கரதலாமலகம் போல, என்னுக்குள் என்னையும் காட்டிவிட்டு – எனக்குள்ளே யென்னையுங் காட்டிவிட்டு, அருள் புரியவும்—, போதனைக்கு எட்டாத – போதனைக்கு எட்டப்படாத, போதனை கைக்கொண்டு போதித்து – போதனையைக் கைக் கொண்டு போதித்து, உன் அருள் புரியவும்—, புத்திக்கும் எட்டாத – புத்திக்கும் தட்டுப்படாத, மத்திமத்தீபம் – நடுத்தீபத்தை, பொருத்திவைத்து – பொருந்தச்செய்து, அருள் புரியவும்—, மாதா பிதா அனைய – மாதா பிதாக்களை நிகர்த்த, தவராஜ சிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. சாதனை – பழக்கம். (யோகப்பழக்கம்) சட்டகம் – உடம்பு; அது சட்டம் என வந்தது. குழப்பம் – கலக்கம். கரதலாமலகம் என்பதை கரதலம்+ஆமலகம் எனப்பிரித்து, கையிலுள்ள நெல்லிக்கனியெனப் பொருளுரைத்துக் கொள்க. மத்திமம் – நடு. (புருவநடு) மாதா பிதா – தாய் தந்தைகள். (ரு)

மனச்சூது சுருண்டு போதனைபோகங் காதல்
கட்டவிழ வரவேண்டும்.

சூதொன்று மில்லாது சும்மா விராநின்ற
சூதொன்றை யருள்பு ரியவுஞ்
சோம்புதலு மற்றுமாச் சோம்பேறி போலச்
சுருண்டிடற் கருள்பு ரியவும்

போதனைக் கோதற வற்றுமோர் மெய்ஞ்ஞான
போதனை யருள்பு ரியவும்
போகங்க ளற்றபரி பூரணா நந்தசுக
போகமெற் கருள்பு ரியவும்
காதலற வுந்திரு வடித்தூளின் மீதடிமை
காதலுற வருள்பு ரியவும்
கால்களைக் கட்டவுங் கட்டுமா தாரவன்
கட்டவிழ வருள்பு ரியவும்
வாதனை யொழிந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. சூது ஒன்றும் இல்லாது — சூது சிறிதுமில்லாமல், சும்மா இரா நின்ற — சும்மாவிருக்கிற, சூது ஒன்றை — ஒரு சூதை, அருள் புரியவும்—, சோம்புதலு மற்று — சோம்பலு மொழிந்து, மாசோம்பேறிபோல — பெரிய சோம்பேறிபோல, சுருண்டிடற்கு — சுருண்டுகொள்வதற்கு, அருள் புரியவும்—, போதனை கோது — போதனைக்குற்றம், அறவற்றும் — முழுதும் வற்றிப்போதற் கேதுவாகிய, மெய்ஞ்ஞான போதனை — மெய்ஞ்ஞான போதனையை, அருள் புரியவும்—, போகங்கள் அற்ற — போகங்களொழிந்த பரிபூரண ஆநந்த சுகபோகம் — பரிபூரணாநந்த சுகபோகத்தை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, காதல் அறவும் — ஆசை யொழியவும், திருவடி தூளின் மீது — உன் திருவடிப்பொடியின்மேல், அடிமை காதல் உற — அடியேன் ஆசை கொள்ளும்படி, அருள் புரியவும்—, கால்களைக் கட்டவும் — கால்களைப் பிணிக்கவும், கட்டும் — கட்டப்பட்ட, ஆதாரம் — ஆதாரமாகிய, வல் கட்டு அவிழ — வலிய பிணிப்பவிழ, அருள் புரியவும்—, வாதனை ஒழிந்த — வாசனைகளெல்லாம் நீங்கின, மெய் — உண்மையையுடைய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. சூது — உளவு. சுகபோகம் — சுகாநுபவம். கட்டுமாதாரவன் கட்டவிழ என்பதற்கு கட்டப்பட்ட அழகிய ஆதாரமாகிய வலிய கட்டவிழும்படி என்றுரைப்பினுமமையும். தாரம் — மனைவி. (௪)

மனஞ் சுத்திசெயத் துலங்க நின்றிலங்க விறைஞ்சு வீட்டில்
விட்டு விளக்குவைக்க வரவேண்டும்.

சோற்று லெடுத்தசுவ ரானகா யத்தையுஞ்
சுத்திசெய வருள்பு ரியவும்

சூக்குமங் காரண மகாகார ணத்தொடு
துலங்கிடற் கருள்பு ரியவும்
ஏற்றபடி யான்மவடி வென்முகத் தெதிர்நின்
றிலங்கிடற் கருள்பு ரியவும்
இறைவனே யடிமையுனை யேத்தியேத் தித்தொழு
திறைஞ்சிடற் கருள்பு ரியவும்
வேற்றொருவர் காணாத வேதாந்த வீட்டிலெனை
விட்டடுத் தருள்பு ரியவும்
விழிமாயை யிருடீர வொளிருமுச் சுடர்மணி
விளக்கொன்றை யருள்பு ரியவும்
மாற்றாத போற்றுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. சோற்றால் எடுத்த சுவர் ஆன காயத்தையும் — சோற்றாலெழுப்பிய சுவராகிய வுடம்பையும், சுத்திசெய்ய — சுத்திசெய்யும்படி, அருள் புரியவும்—, சூக்குமம் காரணம் மகாகாரணத்தொடு — சூக்குமம் காரணம் மகா காரணத்துடனே, துலங்கிடற்கு — விளங்குதற்கு, அருள் புரியவும்—, ஏற்ற படி — ஏற்றபடியாக, ஆன்மவடிவு — ஆத்மஸ்வரூபம், என்முகத்தெதிர் நின்று இலங்கிடற்கு — என் முகத்துக் கெதிரேநின்று விளங்குதற்கு, அருள் புரியவும்—, இறைவனே — தலைவனே, அடிமை — அடியேன், உன்னை ஏத்தி ஏத்தி தொழுது இறைஞ்சுதற்கு — உன்னைத் துதித்துத் துதித்துத்தொழுது வழிபடுதற்கு, அருள் புரியவும்—, வேறு ஒருவர் காணாத — மற்றொருவரும் அறியாத, வேதாந்த வீட்டில் — வேதாந்தமாகிய வீட்டில், என்னைவிட்டு அடுத்து — என்னைவிட்டு அடுத்திருந்து, அருள் புரியவும்—, விழிமாயை இருள்தீர — கண் மாயையாகிய இருள் நீங்கும்படி, ஒளிரும் — விளங்குகிற, முச்சுடர் — முச்சுடராகிய, மணிவிளக்கு ஒன்றை — ஒருரத்ந தீபத்தை, அருள் புரியவும்—, மாற்றாத போற்றும் — (யாவராலும்) இடையறாமல் வணங்கப் படுகிற, மெய் — உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜ சிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணக்குடி வாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. சூக்குமம் காரணம் மகாகாரணம் — சூக்குமசரீரம் காரணசரீரம். மகாகாரண சரீரம். வேதாந்த வீடு — வேதமுடிவாகிய வீடு. விழி மாயை — கண்மயக்கு. முச்சுடர் — சோம சூரியாக்கினிகளாகிய மூன்று ஒளியுடைப் பொருள்கள். (௯)

மனத்தைப் பிடித்துப் பிரானே தியங்காமற் சித்திக்க
விழுத் திடையறுது வரவேண்டும்.

பீற்றற் றுருத்தியிற் காற்றெலாஞ் சேர்த்துப்
பிடித்தடைத் தருள்பு ரியவும்
பீற்றலாற் காற்றும் புறத்துப் படாதெம்
பிரானேயு னருள்பு ரியவுஞ்
சேற்றினிடை நாட்டுமொரு கம்பமென வென்னிலை
தியங்காம லருள்பு ரியவுஞ்
செத்தாற் பிழைப்பனோ தருணமிது சீக்கிரஞ்
சித்திக்க வருள்பு ரியவும்
ஏற்றபடி. தன்னரசு நாடாக வொட்டா
திழுத்துவைத் தருள்பு ரியவும்
என்றுமா தவமெய்து மென்றிடையு மேழையேற்
கிடையறு தருள்பு ரியவும்
மாற்றமொழி சாற்றுது தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பீற்றல் துருத்தியில் – தொளைகளுள்ள துருத்தியில், காற்று எல்லாம் – காற்று முழுதும், சேர்த்துப் பிடித்து அடைத்து – சேர்த்துப் பிடித்தடைத்து, அருள்புரியவும்—, பீற்றலால் – தொளைகளால், காற்றும் – வாயுவும், புறப்படாது – வெளிப்படாமல், எம்பிரானே – எம்மிறைவனே, உன் அருள் புரியவும்—, சேற்றினிடை நாட்டும் ஒரு கம்பம் என – சேற்றில் நடப்பட்ட ஒரு கம்பம்போல, என் நிலை தியங்காமல் – எனது நிலை யசையாமல், அருள் புரியவும்—, செத்தால் பிழைப்பனோ – இறந்தால் மறுபடியும் பிழைக்கப் போகிறேனோ, தருணம் இது – இதுவேசமயம், சீக்கிரம் – விரைவாக, சித்திக்க – (என் எண்ணங்களெல்லாம்) பலிக்கும்படி, அருள் புரியவும்—, ஏற்றபடி – ஏற்றபடியாய், தன்னரசுநாடு ஆகவொட்டாது – தன்னரசு நாடாகவொட்டாமல், இழுத்துவைத்து – இழுத்திருத்தி, அருள் புரியவும்—, என்று – எந்நாள், மாதவம் எய்தும் என்று – பெரிய தவங் கிடைக்குமென்று, இடையும் – வருந்துகிற, ஏழையேற்கு – எளியேனுக்கு, இடையறுது – இடையறுமல், அருள் புரியவும்—, மாற்றுமொழி சாற்றுது – வேறு வார்த்தை சொல்லாமல், தவராஜ சிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணக்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ—று.

வி-ரை. தாருத்தி—தோற்பை. கம்பம்—தூண். மாற்றமொழி—தடுக்கும்மொழி. சாற்றுதல்—சொல்லுதல். (௬)

மனத்தைக் கனுவென விணக்கிப் பிரிந்து பேரின்பஞ்
சிந்தாது தேவனே யருள்புரிய வரவேண்டும்.

இந்த்ரசா லப்புலைச் சேரிவா தனைகனு
வெனமுடித் தருள்பு ரியவும்
இல்லந் துறக்கவுஞ் சொல்லரிய நல்லறி
விணக்கிவைத் தருள்பு ரியவும்
பெந்தமது பந்தமது கண்டவிரு ளென்னப்
பிரிந்திடற் கருள்பு ரியவும்
பேராசை கொள்ளவும் பாராசை விள்ளுமொரு
பேரின்ப மருள்பு ரியவும்
சிந்தாத பேரருட் செல்வமே யென்சிந்தை
சிந்தா தருள்பு ரியவும்
தேவனே தேவாதி தேவனே பரவாசு
தேவனே யருள்பு ரியவும்
மந்தார வேளையிற் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. இந்த்ரசாலம்—இந்த்ரசாலம் போன்ற, புலைச்சேரி வாதனை—புலைச்சேரியின் வாசனையானது, கனு என முடித்து—கனுவாக முடிவுசெய்து, அருள் புரியவும்—, இல்லம் துறக்கவும்—இல்வாழ்க்கையை விடவும், சொல் அரிய—சொல்லுதற் கரிதாகிய, நல்லறிவு—நல்லறிவை, இணக்கி வைத்து—பொருத்தி வைத்து, அருள் புரியவும்—, பெந்தமது—பெத்த நிலையானது, பந்தம்—பிணிப்பாகும், அது—அது, கண்ட—காணப்பட்ட, இருள் என்ன—இருளுருவென்று, பிரிந்திடற்கு—அதினின்றும்பிரிதற்கு, அருள் புரியவும்—, பேராசை கொள்ளவும்—பெருவிருப்பங்கொள்ளவும், பார் ஆசைவிள்ளும்—உலகவாசைவிட்டு நீங்குதற்குரிய, ஒரு பேரின்பம்—ஒப்பற்ற பேரின்பத்தை, அருள் புரியவும்—, சிந்தாத—அழியாத, பேரருள் செல்வமே—பெரிய அருட்செல்வமே, என் சிந்தை சிந்தாது—என் மனமழியாமல், உன் அருள் புரியவும்—, தேவனே—, தேவாதி தேவனே—, பரவாசுதேவனே—, அருள் புரியவும்—, மந்தாரவேளையில்—மந்தாரகாலத்தில், தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி-ரை. இந்த்ரசாலம் — கலைஞான மறுபத்து நான்கிலொன்று. அது அற்புதங்களைக் காட்டு மோர்வித்தை. பேராசை — பெருவிருப்பம் (பேரின் பத்திச்சை.) மந்தாரவேளை — குளிர்ந்தகாலம். (மப்பாயிருக்குங்காலம்.) (எ)

மனங்கடாக்ஷித்துங் கரைந்திட பதித்துப் பக்குவ
மேகாந்த மேறிட வரவேண்டும்.

கதைபேசி யதிலென்ன காரியம் மேதுங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
கல்விகல் லாக்கருங் கல்லாமெ னெஞ்சங்
கரைந்திடற் கருள்பு ரியவும்
பதியா மனத்தைப் பதைப்பறப் பதியிற்
பதித்துவைத் தருள்பு ரியவும்
பற்றறத் துணிவுதரு முத்தரைப் பணியுநற்
பக்குவம் மருள்பு ரியவும்
இதயந் திறக்கவும் மெதையுந் துறக்குமோ
ரேகாந்த மருள்பு ரியவும்
இல்லாசை யில்லாது வல்லாண்மை கொண்டுவெளி
யேறிடற் கருள்பு ரியவும்
மதிலுங் கடந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. கதைபேசி — கதைசொல்லி, அதில் — அதனால், என்னகாரியம் — என்ன காரியமுடியும், ஏதும் கடாக்ஷித்து — சிறிதாயினும் கடாக்ஷித்து, உன் அருள் புரியவும்—, கல்வி கல்லா — கல்வியைக் கற்காத, கருங்கல் ஆம் — கருங்கல்போன்ற, என் நெஞ்சம் — என் மனமானது, கரைந்திடற்கு — கரைவதற்கு, அருள்புரியவும்—, பதியாமனத்தை — படியாத மனத்தை, பதைப்பு அற — பதைப்பு நீங்க, பதியில் — அதற்குரிய இடத்தில், பதித்துவைத்து — பதியவைத்து, அருள்புரியவும்—, பற்று அற — பற்றறும்படி, துணிவுதரும் — துணிவை யுண்டாக்குகிற, முத்தரை — முத்தான்மாக்களை, பணியும்—வணங்கும்படியான, நல்பக்குவம் — நல்ல பக்குவத்தை, அருள் புரியவும்—, இதயம் திறக்கவும் — இருதயகமலம் விரியவும், எதையும் துறக்கும் — எதையும் விடுகின்ற, ஓர் ஏகாந்தம் — ஒருதனிமையை, அருள் புரியவும்—, இல் ஆசை இல்லாது — இல்வாழ்க்கையில் விருப்பமில்லாமல், வல் ஆண்மைகொண்டு — வலிய ஆண்மையைக் கொண்டு, வெளியேறிடற்கு — வெளியேறுதற்கு, அருள் புரியவும்—, மதிலும் கடந்து — மதில்களையுந் தாண்டி, மெய் — உண்மையாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே

வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ-று.

வி-ரை. காரியம் — பிரயோஜனம் எனினுமமையும். பதைப்பு — துடிப்பு. பற்று — அகப்பற்று, புறப்பற்றுக்கள்; யான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று. முத்தர் — எல்லாவற்றினின்றும் விடுபட்டவர். (சீவன் முத்தர்.) மதில் — ஆவரணம். (அ)

மனமண்ணலே யாநந்தஞ் சோதி சுடரிருந்திட
எந்நாளு மருள வரவேண்டும்.

அகமுதற் சகமயக் ககலம் மகமேவு
மண்ணலே யருள்பு ரியவும்
அல்லலிழ வெல்லவுந் தொல்லையற வெல்லையி
லாநந்த மருள்பு ரியவுஞ்
சுகமீற வும்மனத் தகைமாற வுஞ்சுயஞ்
சோதியெற் கருள்பு ரியவுஞ்
சுருதிமுடி யாய்நின்ற கருதுமடி யாமருஞ்
சுடரொன்றை யருள்பு ரியவும்
இகமொடு பரத்தினு மகமொடு புறத்தினு
மிருந்திடற் கருள்பு ரியவும்
ஏகமற மும்முமது பாதார விந்தமெற்
கெந்நாளு மருள்பு ரியவும்
மகிமைசொல் லற்கரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. அகம் முதல் — வீடு முதலாகிய, சகமயக்கு அகலவும் — உலக மயக்கம் நீங்கவும், அகம் மேவும் — என்மனத்தி லெழுந்தருளி யிருக்கிற, அண்ணலே — பெரியோனே, அருள் புரியவும்—, அல்லல் இழவு எல்லவும்— துக்கமயமாகிய இழவுகளெல்லாம், தொல்லையற — (அவற்றின்) பழமையற்றுப் போம்படி, எல்லை இல் — எல்லையில்லாத, ஆநந்தம் — பேரின்பத்தை, அருள் புரியவும்—, சுகம் மீறவும் — இன்பம் அதிகரிக்கவும், மனத்தகைமாறவும் — மனத்தின் பெருமை யொழியவும், சுயஞ்சோதி — சுயம்பிரகாசத்தை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, சுருதிமுடி ஆய் நின்ற — வேதத்துச்சியாகின்ற, கருதும் அடி ஆம்—எல்லாராலும்நினைக்கப்படுகிற திருவடியாகிய, அருசுடர் ஒன்றை — அருமையாகிய ஒளியொன்றை, அருள் புரியவும்—, இகமொடு பரத்திலும் — இம்மையோடு மறுமையிலும், அகமொடு புறத்திலும் —

அகத்தோடு புறத்திலும், இருந்திடற்கு — இருப்பதற்கு, அருள் புரியவும்—, ஏகம் அறவும் — ஒருபொருளும் இல்லாதொழியவும், உமது பாதாரவிந்தம் — உமது திருவடித்தாமரையை, எற்கு — எனக்கு, எந்நாளும் — எக்காலமும், அருள் புரியவும்—, மகிமை சொல்லற்கு அரிய — மகிமை சொல்லுதற் கரிதாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. இழவு — நஷ்டம். மனத்தகை — விஷயங்களி லிழுத்துச் செல்லுங் குணம். (௬)

மனத்திற் கடாக்ஷங் கதிநிறைத்திட நிறத்திமுதிர்ந்து
முறையாக வரவேண்டும்.

கத்தனே யத்துவித வஸ்துவெற் கேத்துங்
கடாக்ஷம்வைத் தருள்பு ரியவுங்
கருதரிய சிற்பரத் துட்பரவு மெய்ப்பொருட்
கதியளித் தருள்பு ரியவும்
நித்தியா னந்தமோ னந்தனையென் சிந்தையு
ணிறைந்திடற் கருள்பு ரியவும்
நேத்திரத் தூடுமோ னுற்றுமலர் பத்தையு
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
முத்திக்கு வித்தாய் முளைத்தெழுஞ் சோதியு
முதிர்ந்திடற் கருள்பு ரியவும்
முப்பாற் கடத்திவைத் தப்பா னடத்துமுறை
முறையாக வருள்பு ரியவும்
மத்தியி லுதித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கத்தனே — கர்த்தனே, அத்துவித வஸ்து — அத்துவித வஸ்துவை, எற்கு — எனக்கு, ஏத்தும் கடாக்ஷம் வைத்து — துதிக்கும்படியாய்க் கடாக்ஷம் வைத்து, அருள் புரியவும்—, கருது அரிய — நினைத்தற்கரிய, சிற்பரத்துள் பரவும் — சிற்பரத்திற் பரவிய, மெய்ப்பொருள் கதி அளித்து — மெய்ப்பொருளின் கதியைத்தந்து, அருள்புரியவும்—, நித்தியாநந்த மோனந்தனை — நித்தியாநந்த மோனத்தை, என் சிந்தையுள் நிறைந்திடற்கு — என் மனத்தில் நிரப்புதற்கு, அருள்புரியவும்—, நேத்திரத்தூடு — கண்ணினடுவே, மோனுற்று மலர் பத்தையும் — மௌனநதியின் மலர்பத்தினிளையும், நிறுத்தி

வைத்து — தடுத்துவைத்து, அருள் புரியவும்—, முத்திக்கு வித்து ஆய் — மோக்ஷத்துக்குக்காரணமாகி, மூளத்தெழுஞ்சோதியும் — மூளத்தெழுகின்ற ஒளியும், முதிர்ந்திடற்கு — முதிர்வதற்கு, அருள் புரியவும்—, முப்பாழ்—முப்பாழையும், கடத்திவைத்து — தாண்டுவித்து, அப்பால் நடத்தும் முறை — அப்பால் நடத்தவேண்டிய முறைமையை, முறையாக — கிரமமாக, அருள் புரியவும்—, மத்தியில் உதித்த — நடுவேதோன்றின, மெய் — உண்மையாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. அத்துவித வஸ்து — இரண்டற்ற பொருள். கதி — புகலிடம். மத்தியில் உதித்த — புருவநடுவே தோன்றின. (௧0)

ஆக பாடல் - 188.

எட்டாவது

காட்சிக்கிலே.

வளிவசப் பட்டும் பொறிவசப் பட்டும்
தெளிவசத் திருந்த சிந்தையை யணைத்தும்
ஒருவழி யோங்கு முயர்மன வழியே
திருவொளி கனிந்து திவலையிற் றிகழ்ந்து
வெளியி லிரவும் விளங்கிய பகலும்
ஒளியா யிருந்த வுவமை யென்னத்
தோற்றும் தோற்றந் தோற்ற வருள்கெனப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்திரந் துயர்த்தது.

மனமணைந்தர்ச்சிக்கப் பணிந்து வசம்பண்ணிச்
சென்றுடச் சிறியவெற்கருள வரவேண்டும்.

ஆத்தாளை யெனையீன்ற வாலையா நந்தியை
யணைந்திடற் கருள்பு ரியவும்
அம்பிகை மனோன்மணிக் குண்டலித் தாய்பதமு
மர்ச்சிக்க வருள்பு ரியவும்
பார்த்தாளை யாவையுங் காத்தாளை யென்றும்
பணிந்திடற் கருள்பு ரியவும்

பரையாளை மாநல்ல சிறையாளை யென்வசம்
பண்ணிவைத் தருள்பு ரியவும்
சேர்த்தாளை வான்கருணை பூத்தாளை யொத்தபடி
சென்றாட வருள்பு ரியவுஞ்
சிறியாளை மெத்தவும் பெரியாளை யறியவுஞ்
சிறியனேற் கருள்பு ரியவும்
மாற்றுள னுப்பாது தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. ஆத்தாளை – தாயை, என்னை ஈன்ற வாலையாகந்தியை – என்னைப்பெற்ற பாலாகந்தியை, அணைந்திடற்கு – சேர்தற்கு, அருள்புரியவும்—, அம்பிகை மனோன்மணி குண்டலி – அம்பிகை மனோன்மணி குண்டலியென்கிற, தாய் – தாய்மார்களின், பதமும் – திருவடியையும், அர்ச்சிக்க – அர்ச்சிக்கும்படி, அருள் புரியவும்—, யாவையும் – எல்லாவற்றையும், பார்த்தாளை – கண்டவளும், காத்தாளை – காத்தவளுமாகிய பராசத்தியை, என்றும் – எக்காலத்திலும், பணிந்திடற்கு – வணங்குதற்கு, அருள் புரியவும்—, பரையாளை – பரையென்னும் பெயருள்ளவளை, மாநல்ல சிறையாளை – மிகநல்ல வீடுடையவளை, என்வசம் பண்ணிவைத்து – என்வசப்படுத்தி, அருள் புரியவும்—, சேர்த்தாளை – (எல்லாப் பொருள்களையும் தன்னிடத்து) சேர்த்தவளை, வான்கருணை பூத்தாளை – பெருங்கருணை படைத்தவளை, ஒத்தபடி சென்று ஆட – மனமிசைந்தபடிபோய் விளையாட, அருள் புரியவும்—, சிறியாளை – சிறியவளை, மெத்தவும் பெரியாளை – மிகவும் பெரியவளை, அறியவும் – அறிந்துகொள்ளவும், சிறியனேற்கு – சிறியேனுக்கு, அருள்புரியவும்—, மாற்றுள் அனுப்பாது-வேறொருவனையனுப்பாது, தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. பார்த்தாளை யென்றது – அறிந்தவளை யென்றபடி. சிறை—வீடு; அது முத்தி வீடு. சேர்த்தாளை பூத்தாளை யென்றது லயிக்கப்பண்ணினவளை; படைத்தவளை யென்றபடி. சிறியாளை பெரியாளை யென்றது அணுவாயிருப்பவளை மகத்தாயிருப்பவளை யென்றபடி. மாற்றுளனுப்பாது வரவேண்டுமென்றது நீயே வரவேண்டு மென்றபடி. (க)

மனம் பதம்பணிந்து சேவிக்கச் சிறப்பிடு சரண்புகத்
தடையற வரவேண்டும்.

பத்துவய துடையசிறு பெண்ணென வென்றாய்
பதந்தொழற் கருள்பு ரியவும்

பாலான வாமம்வைத் துப்பூசை பண்ணிப்
பணிந்திடற் கருள்பு ரியவுஞ்
சித்தந் தெளிந்துபர தெய்வசந் நிதிசென்று
சேவிக்க வருள்பு ரியவுஞ்
சின்மய சிதாகாச தேவதைக் கென்றுஞ்
சிறப்பிடற் கருள்பு ரியவுஞ்
சத்தியத் தொடுபரா சத்திசமு கத்திற்
சரண்புகற் கருள்பு ரியவுஞ்
சங்கநிதி பத்மநிதி போலுதவி யாய்நின்று
தடையறற்க வருள்பு ரியவும்
மற்றெவ ரிருந்துமென் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. பத்துவயது உடைய — பத்து வயதுள்ள, சிறுபெண் ஆன—சிறு பெண்ணாகிய, என் தாய் — என் தாயின், பதம் தொழற்கு — திருவடியை வணங்குதற்கு, அருள் புரியவும்—, பால் ஆன வாமம் வைத்து — பாலாகிய வாமத்தைவைத்து, பூசைபண்ணி பணிந்திடற்கு — பூசைசெய்து வணங்குதற்கு, அருள் புரியவும்—, சித்தம் தெளிந்து — மனந்தெளிந்து, பரதெய்வ சந்நிதிசென்று — பரதேவதையின் சந்நிதியிற்போய், சேவிக்க — தரிசிக்க, அருள் புரியவும்—, சின்மய சிதாகாச தேவதைக்கு — சின்மய சிதாகாச தெய்வத்துக்கு, என்றும் சிறப்பிடற்கு — எப்பொழுதும் சிறப்புச் செய்வதற்கு, அருள் புரியவும்—, சத்தியத்தொடு — உண்மையோடு, பராசத்தி சமுகத்தில் — பராசத்தியின் சந்நிதியில், சரண்புகற்கு — அடைக்கலம் புகுவதற்கு, அருள் புரியவும்—, சங்கநிதி பத்மநிதிபோல் — சங்கநிதி பத்மநிதிகளைப் போல, உதவியாய் நின்று — உதவியாயிருந்து, தடை அறற்கு — தடையொழிதற்கு, அருள் புரியவும்—, மற்று எவர் இருந்தும் என் — வேறு யாவரிருந்தாலும் என்னபயன், தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடி வாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத் தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பால் — பரிசுத்தம். வாமம் — வாமபூஜா திரவியம் (சக்தி பூசைக்குரிய திரவியம்.) பரதெய்வம் — மேலான தெய்வம். சிறப்பிடல் — திருவிழா முதலியவற்றைச் செய்தல். சங்கநிதி — சங்கின் உருவமா யிருப்பதோர் நிதி. பதுமநிதி — தாமரையின் உருவமா யிருப்பதோர் நிதி. இவ்விரண்டும் இந்திரன் பட்டணத்துள்ளன; இவை குபேரன் நவ நிதிகளினுமுண்டு. (உ)

மனம் முயற்சி மோகங் கடத்திக் காட்டிச் சூக்ஷ்மவகை
தொகையாக வரவேண்டும்.

மூலமுத லாறுவரை தாண்டிமேற் றாண்டவு
முயற்சிதந் தருள்பு ரியவும்
மூலவர்க் கங்களென வாலையைப் பூசிக்க
மோகமெற் கருள்பு ரியவுங்
காலைப் பிடித்திழுத் துக்கந் தரத்தைக்
கடத்திவைத் தருள்பு ரியவுங்
காலனுக் குங்கால னாகவுங் கற்பமுறை
காட்டிநல் லருள்பு ரியவுந்
தூலத்தை விட்டுவிட வொட்டாது சூக்ஷாதி
சூக்ஷமொன் றருள்பு ரியவுஞ்
சுழியின்ன தென்றுசோ டசமின்ன தென்றுவகை
தொகையாக வருள்பு ரியவும்
வாலாய மாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப–ரை. மூலமுதல் ஆறுவரை தாண்டி – மூலமுதலாகிய ஆறுவரைகளை யுங் கடந்து, மேல் தாண்டவும்–அவற்றிற்குமேல் தாண்டுவதற்கும், முயற்சி தந்து – முயற்சியைக் கொடுத்து, அருள் புரியவும்—, மூலவர்க்கங்கள் என – மூலவர்க்கங்கள் போல, வாலையைப் பூசிக்க – வாலையைப் பூசிக்கும் பொருட்டு, மோகம் – விருப்பத்தை, எற்கு – எனக்கு, அருள் புரியவும்—, காலைபிடித்து இழுத்து – காலைப்பற்றி யிழுத்து, கந்தரத்தைக் கடத்தி வைத்து – கண்டத்தை தாண்டுவித்து, அருள் புரியவும்—, காலனுக்கும் காலன் ஆகவும் – யமனுக்கும் யமனாகவும், கற்ப முறை காட்டி – கற்ப முறையை யறிவித்து, நல் அருள் புரியவும்—, தூலத்தை விட்டுவிடவொட் டாது – தூலத்தை விட்டுவிடவொட்டாமல், சூக்ஷாதி சூக்ஷம் ஒன்று – சூக்ஷத்தினும் அதிசூக்ஷமாகிய ஒன்றை, அருள் புரியவும்—, சுழி இன்னது என்று – சுழி யின்னதென்றும், சோடசம் இன்னது என்றும் – சோடசம் இன்னதென்றும், வகை தொகையாக – வகையாகவும் தொகையாகவும், அருள் புரியவும்—, வாலாயமாக – சாதாரணமாக, மெய் – உண்மையுடைய, தவராஜ சிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் – பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. மூலமுதல் ஆறுவரை யென்றது ஆறுதாரங்களே. மேல்தாண்டவும் என்றது அவற்றிற்கு மேற்பட்ட ஸஹஸ்ரார கமலத்தளவுஞ் செல்ல என்றபடி. மூலவர்க்கங்கள் – திருமூலர் இனங்கள். வாலை – வாலாம்பிகை. கால் – காற்று. கற்பம் – வல்லாரை கற்பம் முதலாயின, இவை: உடம்பை புறுதிப்படுத்தி ஆயுளைவளர்க்கும், இவற்றைப் பெரும்பாலும் சித்தர் விரும்புவர். சுழி – சுருக்கு. சோடசம் – பதினாறுகலை. (௩.)

மனத்தைக் கட்டிக் கண்ணே தயைபுரிந்து பிரசாதமென்று
பார்த்துப் பரிகரித்தருள வரவேண்டும்.

கலையாம லீராறு கலையி னிலை குலையுமுன்
கட்டிடற் கருள்பு ரியவுங்
காலைப் பிடிக்கிறே னம்மைகுண் டலியையென்
கண்ணையெற் கருள்பு ரியவுஞ்
சலனமற வுங்கருணை நிதியே தயாளமே
தயைபுரிந் தருள்பு ரியவும்
சரணார விந்தவுன் பாதார விந்தப்ர
சாதமொன் றருள்பு ரியவும்
பலகா லிரந்ததும் பலனாக வென்முகம்
பார்த்துநல் லருள்பு ரியவும்
பாவியடி யேன்படுங் கண்கலக் கங்களைப்
பரிகரித் தருள்பு ரியவும்
மலைமத்த னையுமற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப–ரை. கலையாமல் – சலிக்காமல், ஈராறு கலையின் – பன்னிரண்டு கலைகளின், நிலை குலையுமுன் – நிலை குலையுமுன்பே, கட்டிடற்கு – கட்டுதற்கு, அருள் புரியவும்—, காலைப் பிடிக்கிறேன் – காலைப் பிடித்துக்கொள்ளுகிறேன், அம்மை குண்டலியை என் கண்ணை – அம்மையும் குண்டலியும் என் கண்ணுமாயிருப்பவளை, எற்கு – எனக்கு, அருள் புரியவும்—, சலநம் அறவும் – சஞ்சலம் ஒழியவும், கருணைநிதியே – கருணாநிதியே, தயாளுவே – தயாளுவே, தயைபுரிந்து – தயைசெய்து, அருள் புரியவும்—, சரணாரவிந்த– சரண கமலத்தை யுடையவனே, உன் பாதாரவிந்தம் – உன் திருவடித் தாமரையாகிய, ப்ரசாதம் ஒன்று – பிரசாத மொன்றை, அருள் புரியவும்—, பலகால் இரந்ததும் – பலதரம் இரந்ததும், பலனாக – பயன்படும்படி, என் முகம் பார்த்து—, நல் அருள் புரியவும்—, பாவி அடியேன்படும் கண்கலக் கங்களை பரிகரித்து – பாவியாகிய அடியேன் படுகிற கண்கலக்கங்களைநீக்கி,

அருள் புரியவும்—, மலம் அத்தனையும் அற்ற—மலமுழுதும் நீங்கின, தவ ராஜ சிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும்—பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. தயாளு—தயாளகுணமுள்ளவன். அரவிந்தம்—தாமரை. கண் கலக்கம்—கண்கலங்குதல். (அழுதல்.) மலம்—ஆணவம், மாயை, காமியம் என்னு மும்மலங்கள். இரத்தல்—பிரார்த்தித்தல். (ச)

மனமுத்த முத்திரைத் தண்ணீரைத் தள்ளாமற்
றெளித்து சேவிக்க வரவேண்டும்.

மோகந் தவிர்க்கமுலை யாரையணை யாமலுமை
முத்தமிட வருள்பு ரியவும்
மொழியைத் தவிர்க்கவாய் மூடலுட னேமோன
முத்திரையை யருள்பு ரியவுந்
தாகித்த வென்றனக் கெண்ணெயூட் டாதுநற்
றண்ணீரை யருள்பு ரியவுந்
தாராத வருளெலாந் தந்தடிமை கொள்ளவுந்
தள்ளாம லருள்பு ரியவுந்
தேகத்தை விட்டுவிடு முன்மனந் தேறித்
தெளிந்திடற் கருள்பு ரியவுஞ்
செம்பொனிற மானசிறு வாலையிரு காலையுஞ்
சேவிக்க வருள்பு ரியவும்
மாகத்த ஞனமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப—ரை. மோகம் தவிர்க்க—மோகத்தைத் தணித்துக்கொள்ளும்பொருட்டு, முலையாரை அணையாமல்—தனங்களையுடைய மாதரைத் தழுவாமல், உம்மை முத்தமிட—உம்மை முத்தமிட்டுக்கொள்ளும்படி, அருள்புரியவும்—, மொழியை தவிர்க்க—பேச்சை யொழிக்கும்பொருட்டு, வாய்மூடலுடனே—வாய் மூடுதலோடு, மோனமுத்திரையை—மௌன முத்திரையையும், அருள் புரியவும்—, தாகித்த என்றனக்கு—தாகங்கொண்ட எனக்கு, எண்ணெய் ஊட்டாது—எண்ணெயை யுண்பிக்காமல், நல் தண்ணீரை—நல்ல குளிர்ந்த நீரை, அருள் புரியவும்—, தாராத அருள் எல்லாம் தந்து—தரவொண்ணாத அருள் முழுதுங்கொடுத்து, அடிமைகொள்ளவும்—என்னை யடிமைகொள்ளுதற்கும், தள்ளாமல்-தள்ளிவிடாமல், அருள்புரியவும்—, தேகத்தைவிட்டுவிடு

முன் — உடம்பை விட்டுவிடுவதற்குமுன்பே, மனம் - என்மனமானது, தேறி தெளிந்திடற்கு—தேறித் தெளியும்பொருட்டு, அருள்புரியவும்—, செம்பொன் நிறமான—செம்பொன்னிறத்தையுடைய, சிறுவாலே—சிறிய வாலாம்பிகையின், இருகாலேயும் — இரண்டு திருவடியையும், சேவிக்க அருள்புரியவும்—, மாகத் தான்ஆன—பெரியகர்த்தனாகிய, மெய்—உண்மையையுடைய, தவராஜசிங்கமே- தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. தேறித் தெளிதல் — ஆராய்ந்து தெளிதல். இருகாலே யென்பதற்கு இருபொழுதும் என்றுரைப்பினுமமையும். (சு)

மனத்தின் பேரின்பம் பெண்ணாசை ஆதரிப்பு
நாசமாய் நானாக வரவேண்டும்.

பேசாது மவுனத் திருக்கவும் பேசாத
பேரின்ப மருள்பு ரியவும்
பெண்ணாசை மண்ணாக வும்வாலை யம்பிகைப்
பெண்ணாசை யருள்பு ரியவும்
ஆசாப சாசைத் துறந்துனது திருவடியி
னாசைதந் தருள்பு ரியவும்
ஆதரவு மற்றுா தரிப்பாரு மற்றவெனை
யாதரித் தருள்பு ரியவும்
நாசச் சரீரமு நாசமா முன்புமன
நாசமெற் கருள்பு ரியவும்
நானென்ப தற்றுநா னென்ப துற்றுநா
னாக வருள்பு ரியவும்
வாசாம கோசரத் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பேசாது மவுனத்து இருக்கவும் — பேசாமல் மௌனநிலையிலிருக்கவும், பேசாத பேரின்பம் — சொல்லவொண்ணாத பேரின்பத்தை, அருள் புரியவும்—, பெண் ஆசை மண் ஆகவும் — பெண்ணாசையானது மண்ணாயொழியவும், வாலை அம்பிகை பெண் ஆசை — வாலாம்பிகையாகிய பெண்ணாசையை, அருள் புரியவும்—, ஆசாபசாசை துரந்து — ஆசைப் பேயையோட்டி, உனது திருவடியின் ஆசைதந்து — உன் திருவடிக்கண்ணே யன்பைத்தந்து, அருள் புரியவும்—, ஆதரவும் அற்று — ஆதரவும் இல்லாமல்,

ஆதரிப்பாரும் அற்ற — ஆதரிப்பாரு மில்லாத, என்னை ஆதரித்து — என்னை ஆதரித்து, அருள் புரியவும்—, நாசம் சரீரமும் — அழிவையுடைய வுடம்பும், நாசம் ஆம் முன் — அழிவதற்கு முன்பே, மன நாசம் — மனோநாசத்தை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, நான் என்பது அற்று — நானென்பதை யொழித்து, நான் நான் என்பது உற்று — நான் நானென்பதை யறிந்து, நான் நாளுக — நானே நானாகும்படி, அருள் புரியவும்—, வாசாமகோசரம்— வாக்குக்கெட்டாத, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. ஆதரவு — அஃறிணைப் பொருளினுதரவு. ஆதரிப்பார் — உயர் திணைப் பொருளினுதரவு. (சு)

மனத்தை யாசை யபயந் தடாரித்துத் தாடந்து
பாசம்வைத்துப் பழக்கிவரவேண்டும்.

ஆசரித் தம்பிகை தனைப்பூசை செய்துய்யு
மாசையொன் றருள்பு ரியவும்
அறமியற் றவுமனத் திறமியற் றவுமெனக்
கபயநின் றருள்பு ரியவும்
தாய்செத்த பிள்ளையென வேசற் றிராமற்
றடாரித்து னருள்பு ரியவுந்
தடையினிற் றடைபடா நின்றொளிரு மெய்த்திருத்
தாடந்து னருள்பு ரியவும்
பாசத்தை வீசுமெம னுக்குட் படாதுநின்
பாசம்வைத் தருள்பு ரியவும்
பஞ்சாக் கரத்தையுந் துஞ்சாச் சரத்தொடு
பழக்கிவைத் தருள்பு ரியவும்
வாசங் கடந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. ஆசரித்து — விரும்பி, அம்பிகைதனை — அம்பிகையை, பூசை செய்து உய்யும் — பூசைசெய் துய்யும்படியான, ஆசை ஒன்று — ஆசை யொன்றையே, அருள் புரியவும்—, அறம் இயற்றவும் — தருமத்தைச் செய்ய வும், மனத்திறம் இயற்றவும் — மனவுறுதியைச் செய்துகொள்ளவும், எனக்கு அபயம் நின்று — எனக்கு அபயந் தந்துநின்று, அருள் புரியவும்—, தாய் செத்த பிள்ளை என — தாய் செத்த குழந்தைபோல, ஏசற்றிராமல் — ஏக்

தற்றிராதபடி, தடாரித்து — தைரியந்தந்து, உன் அருள் புரியவும்—, தடையினில் — தடையில், தடைபடாநின்று ஒளிரும் — தடைபடாமல் நின்று விளங்குகிற, மெய் — உண்மையாகிய, திருத்தாள் தந்து — திருவடியைத் தந்து, உன் அருள் புரியவும்—, பாசத்தை வீசும் — பாசத்தை யெறிகின்ற, எமனுக்கு உட்படாது — எமனுக்கு அகப்படாதபடி, நின் பாசம் வைத்து — உன் அன்புவைத்து, அருள் புரியவும்—, பஞ்சாக்கரத்தையும் — ஐந்தெழுத்தையும், துஞ்சா — அழியாத, சாரத்தொடு பழக்கி வைத்து — சாரத்தோடு பழக்கிவைத்து, அருள் புரியவும்—, வாசல் கடந்த — வாயில்களை யெல்லாந் தாண்டின, மெய்த்தவராஜசிங்கமே — உண்மையாகிய தவத்தையுடைய ராஜ சிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. ஆசரித்தல் — வழிபடல் எனினு மமையும். அபயம் — பயப்பட வேண்டா மென்றல். பாசம் — யமன் கைக்கயிறு. சரம் — வாயு. வாசல் — ஆறாதாரங்கள். (எ)

மனங் களித்துங் கணுவென்று நாணாண நற்றவம்
தூணுக்நத் துறையருள வரவேண்டும்.

காணாத காட்சியைக் கண்டடிமை யுள்ளங்
களித்திடற் கருள்பு ரியவுங்
கண்கொண்டு காணப் படாநின்ற வெவையுங்
கணுவென்று னருள்பு ரியவும்
நாணுமட வார்தமைக் கண்ணினிற் காணுமுன்
நாணை வருள்பு ரியவும்
நாவுருசி தேடுதற் காவிகெட் டலையாது
நற்றவம தருள்பு ரியவுந்
தூணைத் துரும்பாக்க வுந்துரும் பைப்பெருந்
தூணுக்க வருள்பு ரியவுந்
துரியமய மாய்நின்ற பெரியபொரு ளைத்தொழுந்
துறையொன்றை யருள்பு ரியவும்
வாணாள் விடாதமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. காணாத காட்சியை கண்டு — காணவொண்ணாத காட்சியைக் கண்டு, அடிமை உள்ளம் களித்திடற்கு — அடியேன் மனங் களிக்கும் பொருட்டு, அருள்புரியவும்—, கண்கொண்டு — கண்களைக்கொண்டு, காணப்

படாநின்ற எவையும் — காண்கின்ற எல்லாப் பொருள்களும், கனு என்று — கனவேயாமென்று, உன் அருள் புரியவும்—, நாணும் மடவார்தமை — காணு கின்ற மாதரை, கண்ணினிற் காணுமுன் — கண்ணாற் காண்பதற்கு முன்பே, நான் நாண — நான் நாணும்படி, அருள் புரியவும்—, நாவுருசி தேடுதற்கு — நாவிற்கு ருசியான பொருள்களைத் தேடும் பொருட்டு, ஆவிகெட்டு அலை யாது — உயிர் அழிந் தலையாமல், நல் தவம் — நன்மையாகிய தவத்தை, அருள் புரியவும்—, தூணை துரும்பு ஆக்கவும் — தூணைத் துரும்பாகச் செய்ய வும், துரும்பை பெரு தூண் ஆக்கவும் — துரும்பைப் பெரிய தூணைச் செய்யவும், அருள் புரியவும்—, துரியமயமாய் நின்ற பெரிய பொருளை — துரியவடிவாய் நின்ற பெரிய வஸ்துவை, தொழும் — வணங்கும்படியான, துறை ஒன்றை — ஒரு வழியை, அருள் புரியவும்—, வாணுள் விடாத — ஆயுளைக்கழியாத, மெய்த்தவராஜ சிங்கமே — உண்மையாகிய தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கனுவென்று — பொய்யென்று. ஆவிகெட்டு என்றது மனஞ் சலித்து என்றபடி. துறை—வழி. வாணுள் விடாத என்றது ஆயுளை வீணே கழிக்காத என்றபடி. (அ)

மனத்தை யடிமைகொண் டனுபூதி முழுத்திட மூடித்
தாண்டித் தந்தருள வரவேண்டும்.

ஆண்டினே டாண்டனந் தங்கோடி வைத்தெனையு
மடிமைகொண் டருள்பு ரியவும்
ஆதிசோ திபரவிக் கிடங்தொளி பரப்புமுன்
னனுபூதி யருள்பு ரியவும்
மூண்டெரியு மங்கியிற் கருவிகர ணங்களை
முழுத்திடற் கருள்பு ரியவும்
மூக்குமுனை வாயிலண் ணாக்கினுனி யாலடைய
மூடிவைத் தருள்பு ரியவுந்
தாண்டுமீ ராறுகலை தாண்டாம லுஞ்சுழினை
தாண்டிடற் கருள்பு ரியவுந்
தண்டாம னின்றமதி மண்டலங் கொண்டவமு
தந்தந்து னருள்பு ரியவும்
மாண்டவையு மாண்டமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதேசிக நாதனே.

ப-ரை. அனந்தம் கோடி — முடிவற்ற கோடிகளாகிய, ஆண்டினோடு ஆண்டுவைத்து — வருஷங்களோடு வருஷங்களளவும் வைத்து, என்னையும் — அடியேனையும், அடிமைகொண்டு — அடிமையாகக்கொண்டு, அருள் புரியவும்—, ஆதிசோதி — ஆதிபரஞ்சோதியானது, பரவிக்கிடந்து — வியாபித்துக் கிடந்து, ஒளிபரப்புமுன் — ஒளியை விரிப்பதற்கு முன்பே, அநுபூதி — அநுபூதியை, அருள் புரியவும்—, மூண்டு எரியும் அங்கியில் — மூண்டெரிகின்ற நெருப்பில், கருவி கரணங்களை முழுத்திடற்கு — கருவி கரணங்களையெல்லாம் மூழ்குவித்தற்கு, அருள்புரியவும்—, மூக்கு முனைவாயில் — நாசி நுனி வழியை, அண்ணாக்கின் நுனியால் — அண்ணாக்கின் நுனியால், அடைய மூடிவைத்து — முழுதும் மூடிவைத்து, அருள் புரியவும்—, தாண்டும் ஈராறு கலை தாண்டாமலும் — தாண்டுகின்ற பன்னிரண்டு கலைகள் தாண்டிச் செல்லாமலும், சுழினை தாண்டிடற்கு — சுழுமுனையைத் தாண்டுதற்கு, அருள் புரியவும்—, தண்டாமல் நின்ற — தடைபடாமல் நின்ற, மதிமண்டலம் கொண்ட — சந்திரமண்டலங் கொண்டிருக்கிற, அமுதம் தந்து — அமிர்தத்தைக் கொடுத்து, உன் அருள் புரியவும்—, மாண்ட எவையும் மாண்ட — மாட்சிமைக் குணங்களெல்லா மிகுந்த, மெய்த்தவராஜ சிங்கமே — உண்மையாகிய தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகேவரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. ஆண்டினோ டாண்டனந்தங் கோடிவைத்து என்றது நீர்க்காயுவாய் வைத்து என்றபடி. அநுபூதி — பிரமாநுபவம். அங்கி — மூலாக்கினி. அண்ணாக்கு — மேணக்கு. மாண்ட எவையும் என்பது மாண்டெவையும் என நிலைமொழி யீற்றகரந் தொகுத்தலாயிற்று. (கூ)

மனத்திற்குச் சுகந்துணை தழுவித்தரித்து ஆட்கொண்டு
ஆளாக்கி யருள வரவேண்டும்.

சுந்தரச் சோதிமணி மார்போ டணைத்துச்
சுகந்தந்து னருள்பு ரியவுஞ்
சொந்தவடி யேன்சிந்தை நொந்திடா வண்ணமே
துணையுநின் றருள்பு ரியவுஞ்
சந்திரோ தயமெனச் சிந்துமொளி தந்துகை
தழுவிநின் றருள்பு ரியவுந்
தளதளென் றவிர்தரு ஜகச்சோதி பரவித்
தரித்திடற் கருள்பு ரியவும்
அந்தரத் திலகவு மனக்குளிகை யொன்றளித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்

அம்பிகை பதம்பணியு மாளாக வும்மென்னையு
மாளாக்கி யருள்பு ரியவும்
வந்தனங் கைக்கொளுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. சுந்தரம் — அழகாகிய, சோதிமணி — ஒளியுள்ள மணிமாலையைத் தரித்த, மார்போடு அணைத்து — மார்போடு அணைத்துக்கொண்டு, சுகம் தந்து — இன்பந்தந்து, உன் அருள் புரியவும்—, சொந்த அடியேன் சிந்தை- சொந்தமான அடியேனுடையமனமானது, நொந்திடாவண்ணமே — நோகாத படிக்கு, துணையும் நின்று அருள் புரியவும் — துணையாக நின்று அருள் செய்யவும், சந்திரோதயம் என — சந்திரோதயம்போல, சிந்தும் ஒளிதந்து — சொரியும் ஒளியைக்கொடுத்து, கைதழுவி நின்று — கையாற் சேர்த்து நின்று, அருள் புரியவும்—, தளதள என்று அவிர்தரு — தளதள என்று விளங்கும், ஜகஜ்ஜோதி பாவி — ஜகச்சோதியானது வியாபித்து, தரித்திடற்கு — பொருந்துவதற்கு, அருள்செய்யவும்—, அந்தரத்து இலகவும் — ஆகாயத்தில் விளங்கவும், மனக்குளிகை ஒன்று அளித்து — மனக்குளிகை யொன்றைக் கொடுத்து, ஆட்கொண்டு — அடிமைகொண்டு, உன் அருள் புரியவும்—, அம்பிகை பதம்பணியும் ஆளாகவும் — அம்பிகையின் பாதங்களைப் பணியுமாளாகவும், என்னையும் ஆளாக்கி — என்னையும் அடிமையாக்கி, அருள் புரியவும்—, வந்தனம் கைக்கொளும் — எனது வந்தனத்தை யேற்றுக் கொள்ளும், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. மணியென்றது — படிகமணிமாலையை. தளதளென்று — ஒலிக் குறிப்பு. அவிர்தல் — விளங்குதல், அவிர்தரு என்பதற்குப் பகுதி அவிர்தா. குளிகை — குடிகையென்னும் வடமொழித்திரிபு. (மாத்திரை) அம்பிகை — ஓர் சத்திவிசேடம். (கo)

ஆக பாடல் - 198.

ஒன்பதாவது

தியான நிலை.

தோற்றிய காட்சியிற் சுயத்தினைப் பற்றி
யேற்றி யேற்றி யிடம்வல முன்பின்
இயங்கா தோங்கி யெழுமனந் தன்னை
யுபங்காத் தோன்றி யுண்மையிற் றிகழ
நிறுத்தி யம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த றியானம்
என்னும் பாங்கி னிம்முறை யருள்கவென்
றுன்னி யுன்னி யுவந்திரந் துயர்த்தது.

மனமோகமதை நாளும் நாட்டிவைத்து விழாமலவிழ்
தேனொழுகச் சிறப்பிட வரவேண்டும்.

நவகண்ட யோகமே நான்கொண்ட மோகமதை
நாளுமெற் கருள்பு ரியவும்
நாவதனை யோட்டிவிட் டந்நாள மாட்டிநிலை
நாட்டிவைத் தருள்பு ரியவும்
அவிழுமொன் பதுவாயி லுங்கட்ட வுங்கட்டு
மவிழாம லருள்பு ரியவும்
அவயவா திகளுநவ கண்டமா யவிடத்
தவிழ்ந்திடற் கருள்பு ரியவுந்
தில்லையொன் றாயினும் புன்னுனியின் மணியெனத்
தேனொழுக வருள்பு ரியவுஞ்
சிற்றாற லூட்டவுஞ் சித்தாந்த முத்திச்
சிறப்பிட்டு னருள்பு ரியவும்
மவுனமணி யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. நவகண்ட யோகமே — நவகண்ட யோகமேயாக, நான் கொண்ட மோகம் அதை — நான்கொண்ட மோகத்தை, நாளும் எற்கு—எப்போது மெனக்கு, அருள் புரியவும்—, நா அதனை ஓட்டி விட்டு — நாவை யோட்டிவிட்டு, அந்நாளம் மாட்டி — அந்த நாளத்தில் மாட்டி, நிலை நாட்டி வைத்து — நிலையாக நாட்டிவைத்து, அருள் புரியவும்—, அவிழும் ஒன்பது

வாயிலும் கட்டவும் — திறக்கும் ஒன்பது வாசலும் கட்டவும், கட்டும் அவிழாமல் — அந்தக்கட்டும் அவிழாமலிருப்பதற்கும், அருள் புரியவும்—, அவயவம் ஆதிகளும் — அவயவமுதலியவைகளும், நவகண்டமாய் — நவகண்டமாகி, அவிடத் தவிழ்ந்திடற்கு — அவ்விடத்தே யவிழ்ந்திடுவதற்கு, அருள் புரியவும்—, திவலை ஒன்றாயினும் — துளி யொன்றாயினும், புல் நுனியின் மணி என — புல்லின் நுனியிலுள்ள மணியைப்போல, தேன் ஒழுக — தேனொழுகும்படி, அருள் புரியவும்—, சிறு ஊறல் ஊட்டவும் — சிறிய ஊறலை உண்பிக்கவும், சித்தாந்த முத்தி சிறப்பு இட்டு — சித்தாந்த முத்திச் சிறப்பில் வைத்து, உன் அருள் புரியவும்—, மவுன மணியான — மவுனநிலையில் மணி போன்றவரான, மெய் — உண்மையாகிய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. நவகண்ட யோகம் — ஓர் யோகவிசேடம்; இது நவகண்டங்களிலுஞ் சென்று சஞ்சரித்தற்குரிய யோகம். நா — மேல்நா. சிற்றூறல் — சிறிய ஊற்றாகிய மணற்கேணிநீர். மவுனமணி — மவுன நிலையினருள்ளே சிறந்தவர். (௬)

மனம் பெரும்பாதையொன்றில் நிர்த்தூளிபண்ணிக் கடந்து
கைப்படற் கூன்றி யொன்றாக்கு மொன்றாக
வரவேண்டும்.

பாலமுந் தாண்டியப் பானடக் கப்பெரும்
பாதையொன் றருள்பு ரியவும்
பாழுங்க ளோவனந் தங்களவை நிர்த்தூளி
பண்ணிவிட் டருள்பு ரியவும்
காரை லடர்ந்துசமர் செய்துதல மாறுங்
கடந்திடற் கருள்பு ரியவும்
கண்டத்தை வென்றுநகா யாபுரிக் கோட்டைபெங்
கைப்படற் கருள்பு ரியவும்
ஓலமிட் டோங்கார வுன்னதக் கம்பமங்
கூன்றிடற் கருள்பு ரியவும்
ஓசைமணி மண்டபஞ் சென்றுநின் றொன்றாக்கு
மொன்றாக வருள்பு ரியவும்
வாலிபம் முதிருமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. பாலமும் தாண்டி—பாலத்தையுந் தாண்டி, அப்பால் நடக்க—அப்பால் நடக்கும்படி, பெரும்பாதை ஒன்று—பெரிய வழியொன்றை, அருள் புரியவும்—, பாறுக்களோ அனந்தங்கள்—காவல்களோ கணக்கற்றனவாகும், அவை நிர்த்தூளி பண்ணிவிட்டு—அவைகளை நிர்த்தூளிசெய்துவிட்டு, அருள் புரியவும்—, காலால் அடர்ந்து—காலாலே நடந்து நெருங்கி, சமர்செய்து—யுத்தஞ்செய்து, தலம் ஆறும் கடந்திடற்கு—ஆறு இடங்களையுங் கடப்பதற்கு, அருள் புரியவும்—, கண்டத்தை வென்று—கண்டத்தை ஜெயித்து, காயாபுரிக்கோட்டை—காயாபுரிக் கோட்டையானது, என் கை படற்கு—என் கைவசமாவதற்கு, அருள் புரியவும்—, ஓலம் இட்டு—ஆரவாரித்து, ஓங்காரம்—ஓங்காரமாகிய, உன்னத கம்பம்—உயர்ந்த கம்பமானது, அங்கு ஊன்றிடற்கு—அங்கே ஊன்றுவதற்கு, அருள் புரியவும்—, ஓசை மணி மண்டபம்—ஓசையையுடைய மணிமண்டபத்தில், சென்று நின்று—போய்நின்று, ஒன்றுக்குள்—ஒன்றான பிரமப்பொருளில், ஒன்றாக—ஒன்றாய்க் கூடியிருப்பதற்காக, அருள் புரியவும்—, வாலிபம் முதிருமுன்—வாலிபமானது முதிர்ச்சியடைவதற்குமுன்னே, தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பாலம்—வாராவதி. (அணை) பாறு—காவல்; இது திசைச்சொல். நிர்த்தூளி—நுண்பொடி. காலாலடர்ந்து என்ற தொடரில் கால் காற்று. தலமாறும்—ஆறாதாரங்களும். ஓங்காரம்—பிரணவம். ஓசை—தசவிதநாதம். வாலிபம்முதிருமுன்—கிழத்தனம் வருமுன்னே. (உ)

மனமுட்புக வொடுங்கிடத் தூங்கிடச் சோபிக்கத்
தனைதீர்ந்திட தேற்றிட வரவேண்டும்.

ஓங்கார மதுகொண் டெழும்பிரண வப்பதியி
னுட்புகற் கருள்பு ரியவும்
உள்ளறையி னுள்ளேயோர் மூலையிற் சென்றங்
கொடுங்கிடற் கருள்பு ரியவும்
தூங்காது தூங்குசிவ யோகநித் திரைவந்து
தூங்கிடற் கருள்பு ரியவும்
சுடருண்ட கர்ப்பூர வுண்டைபோ னின்றுடல்
சோபிக்க வருள்பு ரியவும்
தேங்காத் திருக்கருணை வெள்ளப் படிந்துநகை
தீர்ந்திடற் கருள்பு ரியவும்
தேறாத சிந்தையுந் தேறவு மெனைக்கடைத்
தேற்றிவிட் டருள்பு ரியவும்

வாங்காவி ேனாசையொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாத னே.

ப—ரை. ஓங்காரமது கொண்டு எழும் — ஓங்காரங் கொண்டெழும்பும், பிரணவப்பதியின் — பிரணவமாகிய பதியின், உள் புகற்கு — உள்ளே பிரவேசிப்பதற்கு, அருள் புரியவும்—, உள் அறையின் உள்ளே — உள்ளறைக் குள்ளே, ஓர் மூலையில் சென்று—ஒரு மூலையிற்சென்று, அங்கு ஒடுங்கிடற்கு— அவ்விடத்தில் ஒடுங்குவதற்கு, அருள் புரியவும்—, தூங்காது தூங்கு — தூங்காமற் றூங்கும், சிவயோக நித்திரைவந்து — சிவயோக நித்திரையானது வந்து, தூங்கிடற்கு — தூங்குவதற்கு, அருள் புரியவும்—, சுடர் உண்ட — ஒளியுள்ள, கர்ப்பூர உண்டைபோல் — கர்ப்பூர உண்டையைப்போல, நின்று உடல் சோபிக்க — நின்ற உடலானது பிரகாசமடைய, அருள் புரியவும்—, தேங்கா — இயங்காத, திருக்கருணை — அழகிய கருணையாகிய, வெள்ளம் படிந்து — வெள்ளத்திற் பொருந்தி, நகை தீர்ந்திடற்கு — நகைத்தல் தீருவதற்கு, அருள் புரியவும்—, தேறாத — தேர்ச்சியடையாத, சிந்தையும் தேறவும் — மனமுந் தேர்ச்சியடையவும், என்னை கடைத்தேற்றிவிட்டு — என்னைக் கடைத்தேறும்படிசெய்து, அருள் புரியவும்—, வாங்கா இன் ஓசையோடு — இடையறாத இனிய ஓசையுடன், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜ சிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. பிரணவப்பதி — பிரணவமாகிய இடம். உள் அறை — மனமாகிய அறை. ஒடுங்குதல் — அடங்குதல். தூங்காமற்றூங்குதல் — அறிதுயில் செய்தல். 'தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்' என்றார் பிறரும். சிவயோக நித்திரை — சிவயோகத்தா லுண்டாவதாகிய நித்திரை. (பரமாநந்த நித்திரை.) சுடருண்ட கர்ப்பூரவுண்டை. — எரிகிற கர்ப்பூரவுண்டை. நகை — பிறர் நகைப்பு. (௯)

மனமங்கங்கென் றுள்ளடங்கிப் பக்குவம்பண்ணி அமிர்த
பானந் திருத்தி தீரமருள வரவேண்டும்.

தூயபன் னிருகலையு மாயாது தங்கவும்
மங்கங்கென் றருள் புரியவும்
அங்குசிங் கென்றுமைம் பத்தோ ரெழுத்துள்
ளடங்கென்று னருள் புரியவும்
பாயவும் வாசிகலை தேயவும் பக்குவம்
பண்ணிவிட் டருள்பு ரியவும்

பாலூற வுஞ்சுழுனை மேலேற வும்மமிர்த
பானமெற் கருள்பு ரியவும்
தீயைப் பொருத்தியென் னேயத் திருத்தித்
திருத்திவைத் தருள்பு ரியவும்
தேரத் தெளிக்கவுஞ் சேரப் பழிக்கவுந்
தீரமொன் றருள்பு ரியவும்
மாயையைக் காயவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

ப-ரை. ஆய பன்னிரு கலையும் — ஆகிய பன்னிரண்டு கலைகளையும், ஆயாது தங்கவும் — ஆராயாமற் பொருந்தவும், அங்கு அங்கு என்று — அங்கங்கு என்று, அருள் புரியவும்—, அங்கு சிங்கு என்றும்—, ஐம்பத்தோ ரெழுத்துள் — ஐம்பத்தொரு எழுத்தில், அடங்கு என்று — அடங்குவா யென்று, உன் அருள் புரியவும்—, பாயவும்—, வாசிகலை தேயவும் — வாசியின் கலையானது தேய்வடையவும், பக்குவம் பண்ணிவிட்டு — பக்குவம் செய்துவிட்டு, அருள் புரியவும்—, பால் ஊறவும் — பால் சுரக்கவும், சுழுனைமேலேறவும் — சுழுமுனைமேலேறவும், அமிர்தபானம் — அமிர்தபானத்தை, எற்கு — எனக்கு, அருள் புரியவும்—, தீயை பொருத்தி — தீயைப் பொருந்த வைத்து, என் நேயத்து இருத்தி — என்னுடைய நேசத்தில் வைத்து, திருத்தி வைத்து — திருத்தஞ் செய்துவைத்து, அருள் புரியவும்—, தேர தெளிக்கவும் — தெரியும்படி தெளியவைக்கவும், சேர பழிக்கவும் — சேரும் படி பழிக்கவும், தீரம் என்று — ஒரு தைரியத்தை, அருள் புரியவும்—, மாயையை காயவும் — மாயைக் கோபிக்கவும், தவராஜசிங்கமே — தவத்தை யுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வர வேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ் கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி-ரை. அங் — சிங். ஐம்பத்தோ ரெழுத்து என்பன குருமுகத்தா லறியத் தக்கன வாதலால் அவற்றை விவரித்திலம். அமிர்தபானம் — அமிர்தங் குடித்தல். மாயையைக்காய என்றது மாயையை யழிக்க என்றபடி.(சு)

மனம் வழிமருவச் சமர்செய்யத் தம்பனம் அடைத்துச்
சரணடைய வரவேண்டும்.

வங்குவங் கென்றுரீங் காரமுட னேகமேல்
வழிவிட் டருள்பு ரியவும்
வாசிதனி லேற்றியெனை மாசற்ற பரவெளியின்
மருவவைத் தருள்பு ரியவுஞ்

சங்குசிங் கென்றங்கு சண்டமா ருதமெனச்
சமர்செய்ய வருள்பு ரியவும்
தம்பனங் கும்பித்தி ரேசிக்க வாயுவிட்
டம்பன மருள்பு ரியவும்
அங்கடங் குண்டவமிர் தங்கடைந் தென்கட
மடைத்துவைத் தருள்பு ரியவும்
அம்மைகுண் டலிபாத மாசரித் துச்சர
ணடைந்திடற் கருள் புரியவும்
மங்காத தங்கமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. வங்கு வங்கு என்று — வங்கு வங்கு என்று, ரீங்காரமுடன் ஏக — ரீங்காரத்துடன் போக, மேல்வழிவிட்டு — மேல் வழியைவிட்டு, உன் அருள் புரியவும்—, வாசிதன்னில் ஏற்றி — வாசியிலேற்றி, என்னை மாசு அற்ற பரவெளியின் — என்னைக் குற்றமற்ற பரவெளியினிடத்தில், மருவ வைத்து — பொருந்தவைத்து, அருள் புரியவும்—, சங்கு சிங்கு என்று—, அங்கு — அவ்விடத்தில், சண்டமாருதம் என — சூறைக் காற்றைப்போல, சமர்செய்ய — யுத்தஞ்செய்ய, அருள் புரியவும்—, தம்பனம் கும்பித்து — தம் பனத்தைக் கும்பகஞ் செய்து, இரேசிக்க — இரேசகஞ்செய்ய, வாயுவிட் டம்பனம் — வாயுவிஷ்டம்பனத்தை, அருள்புரியவும்—, அங்கடங்குண்ட — அங்கே தங்கியிருக்கிற, அமிர்தங் கடைந்து — அமிர்தத்தைக் கடைந்து, என் கடம் அடைத்துவைத்து — என்னுடைய பாத்திரத்தில் சேர்த்து வைத்து, அருள் புரியவும்—, அம்மை — தாயான, குண்டலிபாதம் — குண் டலியின் பாதத்தை, ஆசரித்து — சேர்ந்து, சரண் அடைந்திடற்கு — சர ணடைவதற்கு, அருள் புரியவும்—, மங்காத தங்கமே — ஒளி கெடாத பொன்னே, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ—று.

வி—ரை. பரவெளி — சிதாகாசம். வாயுவிட்டம்பனம் — வாயு நிரோதம். அங்கண் — அவ்விடம். (சந்திரமண்டலம்) குண்டலி — ஓர் சத்தி விசேடம். இவளுக்கிடம் மூலாதாரம். (௬)

மனத்திரஞ் சின்மயமெய்தா வென்னுள் சுடர்சொந்தத்
தொடரருள வரவேண்டும்.

செத்தாலும் வைத்தடிபின் வாங்காது முன்னேறு
தீரமொன் றருள்பு ரியவும்

சிற்பர வெளிக்கூடு செய்யவுஞ் சொல்லரிய
சின்மயம் மருள்பு ரியவும்
எத்தாத முத்திநெறி யேற்றவு மற்றெவையு
மெய்தாம லருள்பு ரியவும்
ஏகவுரு வாகிநின் றெங்குநிறை கின்றபொரு
ளென்னுளுற வருள்பு ரியவுஞ்
சுத்தமய படிகச் சுயஞ்சோதி பரவிமுச்
சுடர்கொழித் தருள்பு ரியவும்
சொக்குமதி மோகமுக வாரியமு தூட்டவுஞ்
சொந்தத்தொ டருள்பு ரியவும்
வற்றாத செல்வமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. செத்தாலும்—இறந்த போதிலும், அடிவைத்து—முன்னே அடிவைத்து, பின் வாங்காது—பிறகு பின்வாங்காமல், முன்ஏறுதீரம் ஒன்று—முன்னேறிச் செல்லும் தைரிய மொன்றை, அருள் புரியவும்—, சிற்பர வெளிக்கு ஊடு செல்லவும்—ஞானமயமான பரவெளியினிடத்துப் போகவும், சொல்லரிய சின்மயம்—சொல்வதற்கரிய ஞானமயத்தை, அருள் புரியவும்—, எத்தாத—வஞ்சிக்காத, முத்திநெறி—மோக்ஷமார்க்கத்தில், ஏற்றவும்—என்னை ஏற்றுவிக்கவும், மற்றெவையும் எய்தாமல்—வேறு எவையும் நான் அடையாமல், அருள் புரியவும்—, ஏக உருவு ஆகி நின்று—ஒரேயுருவமுடையதாய் நின்று, எங்கும் நிறைகின்ற பொருள்—எங்கும் வியாபித்திருக்கும் பிரமப்பொருள், என் உள் உற—என் உள்ளத்திற் பொருந்த, அருள் புரியவும்—, சுத்தமய படிகம்—சுத்தமயமான படிகம்போல, சுயம் சோதி பரவி—சுயஞ்சோதியானது வியாபித்து, முச்சுடர் கொழித்து—மூன்று சுடர்களை வீசி, அருள் புரியவும்—, சொக்கும்மதி—அழகிய சந்திர மண்டலத்தி லுள்ள, அமுது—அமிர்தத்தை, மோகம் உக—எனது மோகம் கெடும்படி, வாரி—எடுத்து, ஊட்ட—எனக்கு உண்பிக்க, உம் சொந்தத்தொடு—உமது சொந்தத்துடன், அருள் புரியவும்—, வற்றாத செல்வமே—குறைவுபடாத செல்வமே, தவராஜ சிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங் குடி வாழும்—பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. முத்திநெறி—மோக்ஷமடையும் வழி. அது சிவராஜ யோக நிலை. அன்றி ஞானநிலையுமாம். படிகம்—வெண்மணி. இது ஸ்படிகம் என்னும் வடசொற்றிரிபு. சுயஞ்சோதி—வேறு சகாயமில்லாமல் தானே

விளங்குமொளி. முச்சுடர் — சோம சூரியாக்கினிகள். சொக்குமதி மோக முக என்பதற்கு லயித்தற்கேதுவாகிய அதிமோகங்கெட என்றுரைப்பினு மாம். (௬)

மனத்திஷ்டம் வைத்தென்னை யெற்காய்ந்து அறிவதற்குச்
சித்தம்வைத்துச் செய்யுநல்லருள்புரிய வரவேண்டும்.

இதமாக வேயடிமை பதமாம் பொருட்டாக
விஷ்டம்வைத் தருள்பு ரியவும்
எல்லாம தாயேது மில்லாது மாய்நின்ற
வென்னையெற் கருள்பு ரியவும்
அதுவேய தானவோ ரருமறைப் பொருளையா
ராய்ந்திடற் கருள்பு ரியவும்
அறிவதற் கரியவறி வாகார மானவுனை
யறிவதற் கருள்பு ரியவும்
சிந்தையுமித யத்தையுஞ் சிதையா திருத்தவுஞ்
சித்தம்வைத் தருள்பு ரியவும்
சேவடி கொடுத்திந்த நாயடிய னுக்குதவி
செய்யுநல் லருள்பு ரியவும்
மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அடிமை — அடிமையான நான், இதமாகவே — நன்றாகவே, பதம் ஆம் பொருட்டாக — பதமாவதற்காக, இஷ்டம் வைத்து — விருப்பம் வைத்து, அருள் புரியவும்—, எல்லாமது ஆய் — எல்லாப் பொருளுமாகியும், ஏதும் இல்லாததுமாய் நின்ற — எப்பொருளு மில்லாதது மாகியும் நின்ற, என்னை எற்கு — என்னை யெனக்கு, அருள் புரியவும்—, அதுவே அது ஆன— அதுவே அதுவாயிருக்கும், ஓர் அருமறைப் பொருளை — ஒரு அருமையான வேதப்பொருளை, ஆராய்ந்திடற்கு — ஆராய்வதற்கு, அருள் புரியவும்—, அறிவதற்கு அரிய — அறிவதற்கரிதான, அறிவு ஆகாரம் ஆன உன்னை — ஞான உருவமான உம்மை, அறிவதற்கு — நான் அறிந்து கொள்வதற்கு, அருள் புரியவும்—, சிந்தையும் இதயத்தையும் — சிந்தையும் மனத்தையும், சிதையாது இருத்தவும் — சிதையாமல் வைக்கவும், சித்தம் வைத்து — மனம்வைத்து, அருள் புரியவும்—, சே அடிகொடுத்து — சிவந்த உமது திருவடியைக் கொடுத்து, இந்த நாய் அடியனுக்கு — இந்த நாய்போன்ற அடியேனுக்கு, கவிசெய்யும்— கவிகள் பாடும், நல் அருள்புரியவும்—, மதம் அற்ற — செருக்கில்லாத, மதம் உற்ற — செருக்கையுடைய, தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்

கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத் தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. இதம் — நன்மை. பதம் — பக்குவம். ஆகாரம் — உருவம். இதயம் 'ஹ்ருதயம்' என்னும் வடமொழிச் சிதைவு. கவிசெய்யும் — கவிபாடுதற் கேதுவான. மதமற்றமதம் — விஷயச் செருக்கற்ற பரம்பொருளை யடைந்த ஞானச்செல்வச் செருக்கு. (எ)

மனத்தைத் தூக்கித் துணிந்திருந்து இருக்குநிலை

நெக்குருக வரவேண்டும்.

தொலையாப் பவக்கட றொலைத்துமக் கரையிலே
தூக்கிவிட் டருள்பு ரியவுந்
தொல்லைதரு தொல்லுலகை வெல்லவுந் துறவிற்
றுணிந்திடற் கருள்பு ரியவும்
இலையும் புலர்ந்தசரு குங்கும்பி யெரியற்
றிருந்திடற் கருள்பு ரியவும்
இருகலையி னூடுருவி முக்கலைக் கப்பா
லிருக்குமுன் னருள்பு ரியவும்
நிலையற்ற விதயத்தை நிலையத் திருத்துநன்
நிலயமோன் றருள்பு ரியவும்
நிற்குநிலை சொக்கியா னிற்காது நிற்கவும்
நெக்குருக வருள்பு ரியவும்
மலைவெலாந் தீர்க்கவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

ப—ரை. தொலையா — வடியாத, பவக்கடல் — பிறவிக்கடலை, தொலைத்தும் — நீக்கியும், அக்கரையிலே — மோக்ஷமாகிய அக்கரையில், தூக்கிவிட்டு— தூக்கி விடுத்து, அருள் புரியவும்—, தொல்லைதரு—வருத்தத்தைக் கொடுக்கும், தொல் உலகை — பழமையான உலகத்தை, வெல்லவும் — ஜெயிக்கவும், துறவில் — துறவறத்தில், துணிந்திடற்கு — துணிவடைவதற்கு, அருள் புரியவும்—, இலையும் புலர்ந்த சருகும் — இலையும் உலர்ந்த சருகும் உண்டு, கும்பி எரி அற்று — வயிற்றில் பசியில்லாமல், இருந்திடற்கு — இருப்பதற்கு, அருள் புரியவும்—, இருகலையின் ஊடு — இரண்டு கலையினிடத்தில், உருவி — பிரவேசித்து, முக்கலைக்கு அப்பால் — மூன்றாவது கலைக் கப்புறத்தில், இருக்கும் — இருக்கிற, உன் அருள் புரியவும்—, நிலை அற்ற இதயத்தை — நிலை

யில்லாத மனத்தை, நிலையதிருத்தும் — நிலக்கும்படியாகத் திருத்தமடையும், நல் நிலயம் ஒன்று — நல்ல இடமொன்றை. அருள் புரியவும்—, நிற்கும் நிலை சொக்கி — நிற்கும் நிலையில் மயங்கி, யான் நிற்காது நிற்கவும் — நான் நிற்காமல் நிற்கவும், நெக்கு உருக — நெக்குருகும்படி, அருள் புரியவும்—, மலைவு எல்லாம் தீர்க்கவும் — மயக்கமெல்லாம் தீர்க்கவும், தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் — பெருமை யமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கடத்தற் கரிதாதலால் பிறவியைத் 'தொலையாப் பவக்கடல்' என்றார். அக்கரை யென்றது முத்திக் கரையை. உலகை — உலக வாசனையை. கும்பி — வயிறு. எரி — பசியாகிய நெருப்பு. இருகலை — சந்திர சூரியகலைகள். (இடைபிங்கலைகள்.) முக்கலை — மூன்றாவது கலையாகிய சுழுமுனை. நிலயம் — இடம். சொக்குதல் — வயித்தல். மலைவு — பிரமை. (அ)

மனக்கருத்துக் கற்பித் தொழிந்தொதுங்கி நடந்து
நானென வரவேண்டும்.

கானக விலங்கினிண மாகும்வை ராக்கியக்
கருத்தொன் றானருள்பு ரியவும்
காடுவீ டாகவும் வீடுகா டாகவுங்
கற்பித்த லருள்பு ரியவும்
ஊனிறைந் தோருரு வெடுத்தநா யத்துற
வொழிந்திட வருள்பு ரியவும்
உண்டுடுத் துப்பூணு முலகநடை யெனைவிட்
டொதுங்கிடற் கருள்பு ரியவும்
ஞானதை யங்கண்டு மாறுபி மானம்
நடந்திட வருள்பு ரியவும்
நானென் றகற்றநா னுறும் வண்ணநீ
நானென்ற தருள்பு ரியவும்
வானுச்சி யுலவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கானகம் — காட்டி லிருக்கும், விலங்கின் இனம் ஆகும் — மிருகக் கூட்டமாகும், வைராக்கியக் கருத்து ஒன்று — வைராக்கியக் கருத்தொன்றுக்கு, உன் அருள் புரியவும்—, காடு வீடாகவும் — காடு வீடாகவும், வீடு காடாகவும் — வீடு காடாகவும், கற்பித்தல் — கற்பிப்பதை, அருள் புரியவும்—, ஊன் நிறைந்து — சதை நிறைந்து, ஓர் உருவு எடுத்த — ஒருருவங்

கொண்ட, காயத்து உறவு—சரீரத்தி னுறவு, ஒழிந்திட—நீங்கும்படிக்கு, உன் அருள் புரியவும்—, உண்டு—உணவையுண்டு, உடுத்து—ஆடையை யுடுத்து, பூணும்—ஆபரணங்கள் பூணும், உலக நடை—உலக நடையானது, என்னைவிட்டு—என்னை நீங்கி, ஒதுங்கிடற்கு—ஒதுங்கிவிடுவதற்கு, அருள் புரியவும்—, ஞான உதயம் கண்டு—ஞானத்தின் உதயத்தைக் கண்டு, மானாபிமானம்—மானாபிமானங்கள், நடந்திட—நடப்பதற்காக, உன் அருள் புரியவும்—, நான் என்று—நான் என்று சொல்லிக்கொண்டு, அகற்றும் நான்—நீக்கும் நான், நான் ஆகும் வண்ணம்—நானாகும்படி, நீ நான் என்றது—நீர் நான் என்பதை, அருள் புரியவும்—, வான் உச்சி உலவும்—ஆகாயத்தி னுச்சியில் சஞ்சரிக்கும், மெய்—உண்மையாகிய, தவராஜசிங்கமே—தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும்—என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும்—பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. வைராக்கியம்—பிரபஞ்ச வாசனையில் வெறுப்பு. காயத்து உறவு—பிறவி. வான்—ஆகாயம். அது இவ்விடத்துச் சிதாகாயமெனக் கொள்க. (க)

மனத்தி னடவாஞ் சந்நிதியிற்சென்று திறந்து
வசம் வளர்ந்தேற வரவேண்டும்.

நாசிநடு வணைநட்ட நடுவினின் றுல்லாச
நடனமிட வருள்பு ரியவும்
நாதநா தாந்தம் முழங்குமோர் தெய்வசந்
நிதியில்விட் டருள்பு ரியவும்
தேசுதரு மோசைமணி மாமண்ட பத்தினுட்
சென்றிடற் கருள்பு ரியவும்
திரையைக் கடந்தங் கடங்கவுள் ளறையைத்
திறந்துதந் தருள்பு ரியவும்
வாசங் கொழுத் தகமலாசனத் தையுமென்
வசங் கொடுத் தருள்புரி யவும்
வற்றாத செல்வங்க ளத்தேச காலமும்
வளர்ந்தேற வருள்பு ரியவும்
மாசேது மற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. நாசி நடுவணை—நாசி நடுவணையின், நட்ட நடுவில் நின்று—நட்ட நடுவிலே நின்று, உல்லாச நடனம் இட—உல்லாசமான நடனஞ்

செய்ய, அருள்புரியவும்—, நாத நாதாந்தம் — நாத நாதாந்தமானது, முழங்கும் — கோஷிக்கும், ஓர் தெய்வ சந்நிதியில் விட்டு — ஒரு தெய்வ சந்நிதியில் விட்டு, அருள் புரியவும்—, தேசுதரும் — தேஜசு கொடுக்கும், ஓசைமணி — ஓசையையுடைய மணிகளா லமைந்த, மாமண்டபத்தினுள் — பெரிய மண்டபத்தில், சென்றிடற்கு — போவதற்கு, அருள் புரியவும்—, திரையை கடந்து—, அங்கு அடங்க — அவ்விடத்தில் அடங்கும்படி, உள் அறையை திறந்துதந்து — உள்ளறையைத் திறந்து கொடுத்து, அருள் புரியவும்—, வாசம் கொழுத்த — வாசனை யதிகமான, கமல ஆசனத்தையும் — பதுமாசனத்தையும், என் வசம் கொடுத்து — என் வசமாகக் கொடுத்து, அருள் புரியவும்—, வற்ருத செல்வங்கள் — வடியாத செல்வங்கள், எத்தேசகாலமும் — எந்தத் தேசத்திலும் எந்தக்காலத்திலும், வளர்ந்து ஏற — வளர்ந்து விர்த்தியடைய, அருள்புரியவும்—, மாசு ஏதும் அற்ற — குற்றம் சிறிது மில்லாத, மெய் — உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. நாடு நடுவணை — புருவநடு. நட்டநடு — சரியான நடு. ஓசை மணிமாமண்டபம் — தசநாதங்களும் முழங்குகிற ரத்நமண்டபம். (சிரத்தின் உபரிபாகம்.) திரை — மறைப்பு. (அஞ்ஞானத்தடை) அங்கு — அவ்விடம் (பிரமப்பொருள்.) வற்ருதசெல்வங்கள் — குறையாத ஞானச்செல்வங்கள். ()

ஆக பாடல் - 208.

பத்தாவது

சமாதிநிலை.

ஒன்றியததனை யொன் றற்றுறுகுணம்
இன்றித் தானுந் தன்பெய ரின்றிச்
சேர்ந்துஞ் சேரா திருந்தவுண் டையோ
டார்ந்து மதுவு மகா தாக
அங்ஙனங் குறித்த வம்முதற் பொருளொடு
தான்பிற னுகத் தகையது சமாதி
ஆரு மென்ற வந்நிலே யருள்கவென்
றேக மாகி யிரந்திரந் துயர்த்தது.

மனக் கூடுகொள்ளாம லடங்கியஞ்சி யொடுங்கி
யொழிதற்கு வரவேண்டும்.

கூடுவிட் டுக்கூடு பாயவங் குக்குருடி
கூடுறைய வருள்பு ரியவுங்
கொல்லனுலை மேனின்று கூத்தாடு குறளிகுதி
கொள்ளாம லருள்பு ரியவும்
ஆடுநற் குண்டலிப் பாம்புமெய்ப் புற்றினு
ளடங்கிடற் கருள்பு ரியவும்
அஞ்சாத வஞ்சுபுல வேடர்களு மடியனேற்
கஞ்சிடற் கருள்பு ரியவும்
ஓடியுழல் சிந்தையுங் கணமேனு மூலசன்
றொடுங்கிடற் கருள்பு ரியவும்
ஓவியம் போலவே சும்மா திருக்கமற்
றொழிதற்கு னருள்பு ரியவும்
வாடுத லறிந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. கூடுவிட்டு கூடுபாய — இருக்குங் கூட்டைவிட்டு வேறொரு கூட்டிற் பாயவும், அங்குக் குருடி — அவ்விடத்துக் குருடியின், கூடு உறைய — கூட்டி லிருக்கும்படி, அருள் புரியவும்—, கொல்லன் உலைமேல் நின்று — கொல்லனுடைய உலைக்களத்தின் மேலிருந்து, கூத்தாடு குறளி — கூத்தாடுங் குறளியானது, குதிகொள்ளாமல் — குதிக்காமல், அருள் புரியவும்—, ஆடு — ஆடுகிற, நல் குண்டலி பாம்பு — நல்ல குண்டலியான பாம்பு, மெய் புற்றினுள் — உடம்பான புற்றில், அடங்கிற்கு — அடங்குவதற்கு, அருள் புரியவும்—, அஞ்சாத — அஞ்சுதலில்லாத, அஞ்சுபுல வேடர்களும் — ஐம்புலன்களாகிய வேடர்களும், அடியனேற்கு அஞ்சிடற்கு — அடியேனுக்கு பயப்படும்படியாக, அருள் புரியவும்—, ஓடி உழல் சிந்தையும் — ஓடியுழலும் மனமும், கணம் எனும் — க்ஷணப்பொழுதாயினும், ஊசு என்று ஒடுங் கிடற்கு — ஊசு என்று ஒடுங்குவதற்கு, அருள் புரியவும்—, ஓவியம் போலவே — சித்திரம் போலவே, சும்மா — ஒரு தொழிலுமின்றி, திருக்கம் அற்று — குற்றமற்று, ஒழிதற்கு — ஒழிந்திருப்பதற்கு, அருள் புரியவும்—, வாடுதல் அறிந்து — நான் வாடுவதையறிந்து, மெய் — உண்மையாகிய, தவ ராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடிவாழும் — பெருமை யமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிக நாதனே—, எ-று.

வி—ரை. குறளி — ஓர்வகைப்பேய். மெய்ப்புற்று — உடம்பாகிய புற்று. அஞ்சு புலவேடர் — சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐந்து விடயங்கள். ஊகசு — ஒளிக்குறிப்பு. (க)

மனந் திகழ்ந்து தீயிற் சரிப்படச் சமஸ்தமும்
ஆட்கொண் டடக்கி வரவேண்டும்.

தீபம் பொருந்துகர்ப் பூரமென வுடலந்
திகழ்ந்திடற் கருள்பு ரியவுந்
தீயிலிட் டென்னைக் கருக்குமுன் பொன்னகந்
தீயிலிட் டருள்பு ரியவுஞ்
சாபங்க டீரச் சமாதிநிறை வேறிச்
சரிப்படற் கருள்பு ரியவும்
தடையுறா துதவுகற் பகமா யிருந்தே
சமஸ்தமு மருள்பு ரியவும்
ஆபத்தை யும்மடிமை பாபத்தை யுந்தொலைத்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
ஆங்கார மெல்லா மடக்கியுன் கைக்குள்
ளடக்கிவைத் தருள்பு ரியவும்
மாபதவி சேர்த்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தீபம் பொருந்து — தீபத்திற் பொருந்திய, கர்ப்பூரம் என — கர்ப்பூரம் போல, உடலம் திகழ்ந்திடற்கு — என் சரீரம் விளங்குவதற்கு, அருள் புரியவும்—, தீயில் இட்டு — நெருப்பிலிட்டு, என்னை கருக்கும் முன் — என்னைக் கரியாக்குவதற்கு முன்னே, பொன் அகம் — பொன்னான இடமாகிய, தீயிலிட்டு — நெருப்பிலிட்டு, அருள்புரியவும்—, சாபங்கள் தீர — பெரியோர் என்னைச் சபித்தது தீரும்படி, சமாதி நிறைவேறி — சமாதிநிலை நிறைவேறி, சரிப்படற்கு — தகுதியடைவதற்கு, அருள் புரியவும்—, தடையுறாது உதவு — தடையில்லாமற் கொடுக்கும், கற்பகமா இருந்து — கற்பகம் போல இருந்து, சமஸ்தமும் — எல்லாவற்றையும், அருள் புரியவும்—, ஆபத்தையும்—, அடிமை — அடியேனுடைய, பாபத்தையும்—, தொலைத்து—நீக்கி, ஆட்கொண்டு — அடிமைகொண்டு, உன் அருள் புரியவும்—, ஆங்காரம் எல்லாம் — எல்லா ஆங்காரங்களையும், அடக்கி—, உன் கைக்குள் — உமது கையில், அடக்கிவைத்து அருள் புரியவும்—, மாபதவி சேர்த்து — பெரிய பதவியில் என்னைச் சேர்த்து, மெய் — உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்

னருகே வரவேண்டும், மாகுணக்குடிவாழும் — பெருமையமைந்த குணக்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பொன்னகம் என்றது — பொன்போல விளங்கு மிடமாகிய ஞானநிலயத்தை. கற்பகம் — விரும்புவன யாவுங் கொடுப்பதாகிய ஓர் விருக்ஷம். இது ஐந்தருவி லொன்று. இதுபோல அன்பர் விரும்புவன யாவுங் கொடுத்தற் குரியராதலால் தேசிகரைக் 'கற்பகம்' என்றார். மாபதவி — பெரியபதவி (முத்தி.) (உ)

மனத்தின் றத்துவந் தான்சாவ நான்சாவ நாள்வரு
முன் சித்தி சீக்கிர மருள வரவேண்டும்.

தான்செத் திருந்துலக முழுதுமர சாளுமோர்
தத்துவ மருள்பு ரியவும்
தாஞ்சாவ வும்மருந் துண்பாரி யாரியான்
றன்சாவ வருள்பு ரியவும்
நான்சாமு ளன்சாவ நாடினே ளன்சாமு
ளன்சாவ வருள்பு ரியவும்
நாள்வருமு ளன்சாவ நாள்வந்து நான்சாவ
நாள்வருமு னருள்பு ரியவுந்
தீஞ்சுதிரு பிடிசாம்ப லாகவுந் தானான
சித்தியெ றகருள்பு ரியவுந்
தேகநிலை யல்லவே திருவரு ளிரங்கிமாச்
சீக்கிர மருள்பு ரியவும்
வாஞ்சாலை யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. தான் செத்து இருந்து — தான் இறந்திருந்து, உலகம் முழுதும் — உலகமெல்லாம், அரசு ஆளும் — அரசாள்வதான, ஓர் தத்துவம் — ஒரு தத்துவத்தை, அருள் புரியவும்—, தாம் சாவவும் — தாம் இறக்கவும், மருந்து உண்பார் இயார் — மருந்துண்ணுமவர்கள் யார், இயான் தான் சாவ— யானிறக்கும்படி, அருள் புரியவும்—, நான் சாம் முன் — நான் சாவதற்கு முன்னே, நான் சாவ நாடினேன் — நான் சாவதற்காக விரும்பினேன், நான் சாம்முன் — நான் சாவதற்கு முன்னே, நான் சாவ — நான் சாவதற்காக, அருள் புரியவும்—, நாள் வரும் முன் நான் சாவ — நாள் வருவதற்கு முன்னே நானிறக்கவும், நாள் வந்து நான் சாவ — நாள் வந்து நானிறக்கவும், நாள் வரும் முன் — நாள் வருவதற்கு முன்னே, அருள் புரியவும்—, தீஞ்சு உதிரு — தீய்ந்து உதிரும், பிடிசாம்பல் ஆகவும் — பிடியளவு சாம்ப

லாகவும், தானுன சித்தி – தானேயான சித்தியை, எற்கு – எனக்கு, அருள் புரியவும்—, தேகம் நிலே அல்லவே – சரீரம் நிலேயா யிருப்பதல்லவே, திரு அருள் இரங்கி – திருவருளானது இரக்கமடைந்து, மாசீக்கிரம் – பெரிய சீக்கிரமாக, அருள் புரியவும்—, வாஞ்சாலே ஆன – வாஞ்சை யுள்ளவரான, மெய் – உண்மையாகிய, தவராஜ சிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ–று.

வி—ரை. தத்துவம் – உண்மைப்பொருள். மாசீக்கிரம் – அதிகவிரைவு. வாஞ்சாலே – வாற்சலியமுள்ளவர். (கூ)

மனங்கரைதந் தங்கவிழ்ந்து விளேயாட வீடுபுக
எண்ண மின்புற வரவேண்டும்.

கண்ணாறு விண்ணா றெனப்பொங்க வுங்கங்கு
கரைதந்து னருள்பு ரியவும்
கருணா சமுத்திரம் பரவிவந் தென்னேக்
கவிந்திடற் கருள்பு ரியவும்
விண்ணாடர் போற்றிசெய் யண்ணாவு மென்கூட
விளேயாட வருள்பு ரியவும்
வேதவே தாந்தமெல் லாம்விட்டு நட்டநடு
வீடுபுக வருள்பு ரியவும்
எண்ணரிய ஞானவா நந்தமோ னந்தரு
மெணந்தரற் கருள்பு ரியவும்
ஏகத் துவசொரூபத்தை மோகித் தடிமை
யின்புறற் கருள்பு ரியவும்
மண்ணெளிர விண்ணுலவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. கண் ஆறு – கண்ணீர் வெள்ளமானது, விண் ஆறு என – மேகநீர் வெள்ளம்போல, பொங்கவும் – அதிகரிக்கவும், கங்கு கரை தந்து – வரம்பின் முடிவைக் கொடுத்து, உன் அருள் புரியவும்—, கருணா சமுத்திரம் – கருணேக் கடலானது, பரவிவந்து—, என்னே கவிந்திடற்கு – என்னே மூடிக்கொள்வதற்கு, அருள் புரியவும்—, விண் நாடர் – தேவர்கள், போற்றிசெய் – துதிசெய்யும், அண்ணாவும் – கர்த்தரும், என்கூட விளே யாட – என்னுடன் விளேயாடும்படிக்கு, அருள் புரியவும்—, வேதவேதாந் தம் எல்லாம் – வேத வேதாந்தங்களேயெல்லாம், விட்டு—, நட்ட நடு வீடு

புக — மத்தியிலுள்ள வீட்டிற் பிரவேசிக்க, அருள்புரியவும்—, எண் அரிய — எண்ணுவதற்கரிய, ஞான ஆநந்தம் — ஞான ஆனந்த மயமான, மோனம் தரும் — மௌன நிலையைக் கொடுக்கும், எண்ணம் தறற்கு — எண்ணத்தைக் கொடுப்பதற்கு, அருள்புரியவும்—, ஏக தத்துவ சொரூபத்தை — ஒரே தத்துவமான பிரமசொரூபத்தை, மோகித்து — விரும்பி, அடிமை இன்பு உறற்கு — அடிமையான நான் இன்பமடைவதற்கு, அருள் புரியவும்—, மண் ஒளிர் — பூமி பிரகாசிக்கும்படி, விண் உலவு — ஆகாயத்திற் சஞ்சரிக்கும், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வர வேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே—, எ-று.

வி—ரை. கண்ணாறு — கண்ணீர்ப் பெருக்கு. விண்ணாறு—ஆகாயகங்கையெனினு மமையும். அண்ணா — கர்த்தர். மோகித்தல் — விரும்புதல். (௪)

மனவெண்ண மிரங்கித் தீக்ஷை செய்வித்தொடுங்கி
யுறைந்திட வரவேண்டும்.

இன்றுளோர் நாளையு மிருப்பரென் றெண்ணாத
வெண்ணமொன் றருள்பு ரியவும்
இந்தவடி யானுனது சொந்தவடி யானென
விரங்கிநல் லருள்பு ரியவுந்
தென்றிசைக் கைலாச மாம்பொதிகை வாசனே
தீக்ஷைதந் தருள்பு ரியவுந்
தேசிக சிகாமணிய னேயடிமை பண்படச்
செய்வித்து னருள்பு ரியவும்
ஒன்றுக்கு ளொன்றான வொன்றுக்கு ளொன்றா
யொடுங்கிடற் கருள்பு ரியவும்
உள்ளுக்கு ளுள்ளுருகி யுள்ளுக்கு ளுள்ளே
யுறைந்திடற் கருள்பு ரியவும்
மன்றிலெவ ருந்தொழுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. இன்று உளோர் — இன்றைக்கிருக்கு மவர்கள், நாளையும் இருப்பர் — நாளைக்கு மிருப்பார்கள், என்று எண்ணாத — என்று நினைக்காத, எண்ணம் ஒன்று — ஒரு எண்ணத்தை, அருள் புரியவும்—, இந்த அடியான் — இந்த அடியானுன நான், உனது சொந்த அடியான் என — உமது சொந்த அடியானென்று, இரங்கி — மனமிரங்கி, நல் அருள் புரியவும்—, தென் திசை — தெற்குத்திக்கிலிருக்கும், கைலாசமாம் — கைலாசமாகிய, பொதிகை

யாசனே — பொதிகைமலையில் வசிப்பவரே, தீக்கை தந்து — தீக்ஷையைக் கொடுத்து, தேசிக சிகாமணியனே — ஆசாரியரில் சிகாமணி போன்றவரே, அடிமை பண்பட செய்வித்து — அடிமையான நான் பண்படும்படி செய்வித்து, உன் அருள் புரியவும்—, ஒன்றுக்குள் ஒன்று ஆன — ஒன்றில் ஒன்றாயிருக்கப்பட்ட, ஒன்றுக்குள் ஒன்றாய் — ஒன்றான பிரமப்பொருளில் ஒன்றாய், ஒடுங்கிடற்கு — ஒடுங்குவதற்கு, அருள்புரியவும்—, உள்ளுக்குள் உள்ளுருகி — உள்ளத்துக்குள்ளே உள்ளுருகி, உள்ளுக்குள் உள்ளே — உள்ளத்துக்குள்ளே, உறைந்திடற்கு — பொருந்தி யிருப்பதற்கு, அருள் புரியவும்—, மன்றில் — வெளியில், எவரும்தொழும் — யாவரும்வணங்கும், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வர வேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ—று.

வி—ரை. பொதிகை — தென்பொதியமலை. இது வடகைலாயத்துக்கு எதிரிடையானதால் இதனைத் 'தென்றிசைக் கைலாசமாம் பொதிகை' என்றார். பண்பட — பக்குவப்பட. (கூ)

மனமுனையே தொழ வுன்னின்று மறந்திடாது வாய்த்திட
நானாக நானறிய வரவேண்டும்.

ஊனான காயமுயிர் போமுனடி யேனுனையே
யேதொழற் கருள்பு ரியவும்
உயிரினுக் குயிரா யுறைந்தநீ யென்றுமெற்
குன்னின்று னருள்பு ரியவும்
வானாதி பூதலய மானபெரு மானெனை
மறந்திடா தருள்பு ரியவும்
வாக்குமன மணுகாத பூரணந் தானாக
வாய்த்திடற் கருள்பு ரியவும்
நானாக நின்றநா னாக நின்றுநா
னாக வருள்பு ரியவும்
நான்மறையு மறியாத நான்மறையி னுட்பொருளை
நானறிய வருள்பு ரியவும்
மானென விரைந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. ஊன் ஆன — மாமிசத்தாலான, காயம் — சரீரத்தினின்று, உயிர் போம் முன் — உயிர் போவதற்கு முன்னே, அடியேன் உன்னையே தொழற்கு — அடியேனான நான் உம்மையே தொழுவதற்கு, அருள் புரியவும்—, உயிருனுக்கு உயிர் ஆய் — உயிருக்குயிராகி, உறைந்த நீர் — தங்கின நீர், என்

றும் எற்கு — எக்காலத்திலு மெனக்கு, உள்நின்று — உள்ளத்தினின்று, உன் அருள் புரியவும்—, வானாதி பூதம் — ஆகாயமுதலான பஞ்சபூதங்களுக்கு, லயமான பெருமான் — அடங்குமிடமான எம்பெருமான், என்னை மறந்திடாது — என்னை மறவாதபடிக்கு, அருள் புரியவும்—, வாக்கு மனம் அணுகாத — வாக்குக்கு மனத்துக்கு மணுகாத, பூரணம் — எங்கும் பரிபூரணமான பிரமப்பொருள், வாய்த்திடற்கு — கிடைப்பதற்கு, அருள் புரியவும்—, நான் ஆக நின்ற நான் — நான் ஆக நின்ற நான், நானாக நின்று—, நான் ஆக — நானாகும்படி, அருள் புரியவும்—, நான்மறையும் அறியாத — நான்கு வேதங்களுமே யறியாத, நான்மறையின் உட்பொருளை — நான்கு வேதங்களினிடத்திற் சொல்லப்படும் பிரமப்பொருளை, நான் அறிய — நானறியும்படிக்கு, அருள் புரியவும்—, மான் எனவிரைந்து — மானைப்போல விரைந்து, மெய்— உண்மையாகிய, தவராஜ சிங்கமே - தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. எலும்பு முதலானவை குறைவாகவும் மாமிசம் அதிகமாகவும் இருத்தலால் உடம்பை 'ஊனான காயம்' என்றார். பூதமுதலாகிய யாவும் ஒடுங்குமிடமா யிருத்தலால் இறைவனை 'வானாதிபூதலயமான்' என்றார். (சு)

மனமடர்ந்து பகர்ந்திதென் றிருந்திட
மதமண்ணாக வரவேண்டும்.

அதிமோக மாகிமெய்ஞ் ஞானவா னந்தத்
தடர்ந்தேற வருள்பு ரியவும்
அங்கிங்கெ னுமலெங் கெங்குமாது வானநெருது
வதுபநர்ந் தருள்பு ரியவும்
இதயங்க ளின்றுமித யங்களறி தற்கரிய
தீதென்று னருள்பு ரியவும்
ஏகமா கியபரா பரமுமென் பரமா
யிருந்திடற் கருள்பு ரியவும்
மதமத்த னையுமற்ற மதமூர்த்தி யானுமும்
மதமாக வருள்பு ரியவும்
மனமயக் கந்தரும் மென்மயக் கம்வெறு
மண்ணாக வருள்பு ரியவும்
மதிமுகத் தழகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப-ரை. அதிமோகம் ஆகி — அதிக மோகமுடையவனாகி, மெய்ஞ்ஞான ஆனந்தத்து — மெய்ஞ்ஞான ஆனந்தத்தில், அடர்ந்து ஏற — நெருங்கியேறும்படி, அருள் புரியவும்—, அங்கு இங்கு எனாமல் — அவ்விடத்திலிருக்கிறது இவ்விடத்திலிருக்கிறது என்று பிரித்துச் சொல்லப்படாமல், எங்கு எங்கும்— எவ்வெவ்விடங்களிலும், அதுவானது எது — தானேயாயிருப்பது எந்த பிரமப்பொருளோ, அது பகர்ந்து — அப்பொருளைச் சொல்லி, அருள் புரியவும்—, இதயங்கள் நின்றும் — எல்லா இருதயங்களிலிருந்தும், இதயங்கள் அறிதற்கு அறியது — அந்த இருதயங்கள் அறிவதற்கரிதானது, ஈது என்று— இதுவேயென்று, அருள் புரியவும்—, ஏகம் ஆகிய — ஒன்றாகிய, பராபரமும்— பராபரப்பொருளும், என் பரமா இருந்திடற்கு — என் பரமாயிருப்பதற்கு, அருள் புரியவும்—, மதம் அத்தனையும் அற்ற — செருக்கெல்லாமற்ற, மதம் முற்றி — மதமானது முதிர்ந்து, யானும் உம்மதம் ஆக — நானும் உம்மதமுடையவனாக, அருள் புரியவும்—, மனமயக்கம் தரும் — மனமயக்கத்தைக் கொடுக்கும், என் மயக்கம் — என் மயக்கமானது, வெறும் மண் ஆக — வெறும் மண்ணாகும்படியாக, அருள் புரியவும்—, மதிமுகத்து அழகனே — சந்திரனைப்போன்ற முகத்தையுடைய அழகையுடையவனே, தவராஜ சிங்கமே— தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி-ரை. அதிமோகம் — மிகுமோகம். என்பாமாய் — என்பரமாய். உம் மதம் — உமதுமதம், (அத்வைதமதம்.) வெறு மண்ணாக என்றது நிர்மூலமாக என்றபடி. (எ)

மனமைய மணைகால்பாயக் காத்துப் பாரிசப்
பரமாட வரவேண்டும்.

அடியனே னுய்யவு மாதரவு செய்யவு
  மையமற் றருள்பு ரியவும்
அன்புமழை சொரியவா றுப்பெருகி வந்துமற்
  றனைதத்த வருள்பு ரியவுங்
கடலின்மடை போலுமென் கண்மடை திறக்கவுங்
  கால்பாய வருள்பு ரியவுங்
கதியான பூமியுயி ரேற்றியதை யும்பாது
  காத்துநின் றருள்பு ரியவும்
படுபாதி பங்குபற் றுமனும் முழுதுமென்
  பாரிசத் தருள்பு ரியவும்
பாசமற் றிடவுநன் னேசமுற் றடிமைபம்
  பரமாட வருள்பு ரியவும்
மடமடென நடனமிடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அடியனேன் உய்யவும் — அடியேன் பிழைக்கவும், ஆதரவுசெய்யவும் — ஆதரவு செய்யவும், ஐயம் அற்று — சந்தேகமற்று, அருள் புரியவும்—, அன்பு மழை சொரிய — அன்பான மழை பொழிய, ஆறாய் பெருகி — ஆறாகிப் பெருகி வந்து, அணைதத்த — கரையில் மோதும்படிக்கு, அருள் புரியவும்—, கடலின் மடைபோலும் — கடலின் மடையைப்போல, என் கண்மடை திறக்கவும் — என்னுடைய கண்மடையானது திறக்கவும், கால் பாய — (அந்த மடையானது) கால்வாயாகிப் பாயும்படி, அருள் புரியவும்—, கதியான பூமி — மோக்ஷபூமியில், உயிர் ஏற்றி — என்னுயிரையேற்றி, அதையும் — அதனையும், பாதுகாத்து நின்று — பாதுகாத்து நின்று, அருள் புரியவும்—, பயபாதி பங்குபற்றாமலும் — பயபாதியாகிய பங்குபற்றாமலும், முழுதும் என் பாரிசத்து — முழுதும் என்பங்குக்கே வரும்படி, அருள் புரியவும்—, பாசம் அற்றிடவும் — பாசம் நீங்கவும், நல் நேசம் உற்று — நல்ல நேசத்தை யடைந்து, அடிமை பம்பரம் ஆட — அடிமையான நானும் பம்பரம்போலாடும்படி, அருள் புரியவும்—, மடமட என நடனம் இடு — மடமட என்று நடனஞ் செய்யும், தவராஜ சிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழ் — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. கால்பாய — வாய்க்காலாய்ப்பாய. பயபாதி — சரிப்பாதி. என் பாரிசம் — என்பக்ஷம். பாசம் — ஆசைக்கயிறு. நல்நேசம் — முத்திவிருப்பம். (முமுக்ஷுத்வம்.) (அ)

மனமன்பறிவு வீறு வீடு பதம் பரமடைய வரவேண்டும்.

அகடமுறு சாமர்த்திய மெல்லா மறந்தடிமை
யன்படைய வருள்புரியவும்
அதிகப்ர சங்கங்க ளெல்லா மறந்தடிமை
யறிவடைய வருள்புரியவும்
வெகுளிவினை யாட்டுமுத லெல்லா மறந்தடிமை
வீறடைந் தருள்புரியவும்
வேடிக்கை யொடுபகட் டெல்லா மறந்தடிமை
வீடடைய வருள்புரியவும்
பகடிபரி பாசங்க ளெல்லா மறந்தடிமை
பதமடைய வருள்புரியவும்
பாடிப் படித்தகதை யெல்லா மறந்தடிமை
பரமடைய வருள்புரியவும்
மகுடந் தரித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

ப—ரை. அகடம் உறு — அகடமுடைய, சாமர்த்யம் எல்லாம் மறந்து — சாமர்த்திய மெல்லாவற்றையும் மறந்து, அடிமை அன்பு அடைய—அடிமை யான நான் அன்படையும்படி, அருள் புரியவும்—, அதிகப் பிரசங்கங்கள் எல்லாம் — அதிகப்பிரசங்கங்க ளெல்லாவற்றையும், மறந்து — மறந்துவிட்டு, அடிமை அறிவு அடைய — அடிமையான நான் ஞானமடையும்படி, அருள் புரியவும்—, வெகுளி விளையாட்டுமுதல் — கோபம் விளையாட்டு முதலாகிய, எல்லாம் மறந்து — எல்லாவற்றையும் மறந்து, அடிமை வீறு அடைய — அடிமையான நான் பெருமை யடையும்படி, அருள் புரியவும்—, வேடிக்கை யொடு — வேடிக்கையுடன், பகட்டு எல்லாம் மறந்து — பகட்டு செய்த லெல்லாவற்றையும் மறந்து, அடிமை வீடு அடைய — அடிமையான நான் மோக்ஷமடையும்படி, அருள் புரியவும்—, பகடி பரியாசங்கள் எல்லாம் — பகடியான பரியாசங்க ளெல்லாவற்றையும், மறந்து—, அடிமை பதம் அடைய — அடியேன் பக்குவமடையும்படி, அருள் புரியவும்—, பாடிப் படித்த—, கதை எல்லாம் மறந்து—, அடிமைபாரம் அடைய — அடிமை யான நான் பரம் பொருளை யடையும்படி, அருள் புரியவும்—, மகுடம் தரித்த — கிரீடத்தைத்தரித்த, மெய் — உண்மையாகிய, தவராஜசிங்கமே — தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் — என் னருகே வரவேண்டும், மாகுணங்குடி வாழும் — பெருமையமைந்த குணங் குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுனதேசிகநாதனே—, எ-று.

வி—ரை. அகடமுறு சாமர்த்தியம் — கணிக்க வொண்ணாத சதுரதை. அதிகப்ரசங்கம்—உள்ளதுக்குமேலே பிரசங்கித்தல். பகட்டு — டம்பம். பகடி பரியாசம் — சக்கந்தமும் பரியாசமும். (கூ)

மனம் போகாமற் புணருதற்குச் செழுஞ்சாரல் தினந்தந்து
நான்சார நாளுக வரவேண்டும்

பூஞ்சோலை வாழுமோ னனெனவும் வீணிலென்
போகாம லருள்பு ரியவும்
பொற்ற மறைக்குளத் தவளையா காதலனைப்
புணருதற் கருள்பு ரியவும்
தேஞ்சாறு பாஞ்சாறு பாயுநின் பொதிகைச்
செழுஞ்சார லருள்பு ரியவுந்
திவ்யமா மதுரந் திரண்டமதி யமிர்தம்
தினந்தந்து னருள்பு ரியவும்
நான்சாமு னென்செத்து நாடேறு முன்சமுக
நான்சார வருள்பு ரியவும்

நாதமும் வேதமும் நாதநா தாந்தமு
நானாக வருள்புரியவும்
வாஞ்சித்த லோடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்றனருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுன தேசிக நாதனே.

வி—ரை. பூஞ்சோலைவாழும் – பூஞ்சோலையில் வாழும், ஒணுன் எனவும்- ஒணுனைப்போலவும், வீணின் நாள்போகாமல் – வீணிலே நாள் போகாதபடிக்கு, அருள் புரியவும்—, பொன்தாமரைக் குளத்தவளை ஆகாது – பொற்றுமரைக் குளத்திலிருக்கும் தவளையாகாமல், உன்னை புணருதற்கு – உம்மைச் சேருவதற்கு, அருள் புரியவும்—, தேம்சாறு பாஞ்சு – தேன் சாறானது பாய்ந்து, ஆறுபாயும் – ஆருகப்பாயும், நின்–உமது, பொதிகை செழும் சாரல் – பொதிகை மலையின் செழிப்பையுடைய சாரலை, அருள்புரியவும்—, திவ்யம் ஆம் மதுரம் திரண்ட – திவ்வியமாகிய மதுரமானது கூடிய, மதி அமிர்தம் – சந்திரனிடத் தமிர்தத்தை, தினம் தந்து – எப்போதுங் கொடுத்து, உன் அருள் புரியவும்—, நான் சாம் முன் – நான் சாவதற்கு முன்னே, நான்செத்து—, நாள்தோறும்—, நின் சமுகம் நான்சார – உமது சமூகத்தை நான் சேரும்படி, அருள் புரியவும்—, நாதமும் வேதமும் நாதநாதாந்தமும்—, நான் ஆக – நானுகும்படி, அருள் புரியவும்—, வாஞ்சித்தலோடு – அருளோடு, மெய் – உண்மையாகிய, தவராஜசிங்கமே – தவத்தையுடைய ராஜசிங்கமே, என்றன் அருகே வரவேண்டும் – என்னருகே வரவேண்டும், மாகுணங் குடிவாழும் – பெருமையமைந்த குணங்குடியில் வாழ்கின்ற, என் அகத்தீசனே மவுன தேசிகநாதனே—, எ-று.

வி—ரை. பூஞ்சோலை வாழும் ஒணுன் அப்பூமணத்தை யறியாதது போலவும், பொற்றுமரைக் குளத்தவளை அத்தாமரை மலர்த்தேனை யுண்ணவறியாததுபோலவும், அடியேன் வீணுகாமல் உனக்காட்படுத்தி யருளல் வேண்டும் என்றற்கு 'பூஞ்சோலைவாழு மோணு னெனவும் வீணினுள் போகாம லருள் புரியவும் பொற்றுமரைக் குளத்தவளை யாகாதுனைப் புணருதற் கருள் புரியவும்' என்றார். (௪0)

நேரிசை யாசிரியப்பா.

இவ்வகை யெல்லா மியைந்தும் பயன்கொளும்
அவ்வகை யெவர்க்கே யாயினும் விதியருள்
அருளுவ தாயி னவரே யுலகெலாந்
தெருளுறு மூர்த்தித் திருப்பொரு ளென்ப
நல்வழி தேடு நரர்காள்
சொல்வழி இஃதே துணிந்துகொ ளீரே.

இச்சதகப்பெயரின் கருத்துப்பொருளும், கொள்ளுந் தன்மையும், இச்சதகஞ் சொல்லிய காரணமும், காரியப்படுதலும், இச்சதகத்திற் போந்த அதிகாரமும், இவ்வதிகாரத் துட்பொருளும், இவற்றினியல்பும், ஒழுக்கும், இவற்றிற்குப் பழஞ்சூத்திரக்கோட்பாடும், விளக்கிக் காட்டி, அதிகாரந்தோறும் பன்மையாயொழுகி, ஈற்றிறொருமையாய் முற்றுப்பெற்ற இவ்வகத்தீசர் சதகத்தின்—

அதிகாரத் துறையி னமைத்த
நேரிசை யாசிரியப்பா.

அருந்தவ முனிவர ரனைவரி னுயர்ந்த
பெருந்தவ முனியவர் பெயரே யாயினும்
அமைவ னமைத்த லாகுமே லாமே
நமைவரு தாபதர் கருத்தலீ தன்றால்
அகமும் புறமு மாயெப் பொருட்கும்
வகைபெற விளங்கு மதியா வுண்மையைக்
காரணத் தானுங் காரியத் தானும்
ஆரணத் தானு மருந்தெளி வானுந்
தொகுக்கவு மிவற்றூற் றொகுத்தை மறுத்து
வகுக்கவு மாகா வன்மைபூண் டமையான்
அகத்தீச னுக்கினம் புறத்தீச னென்று
அகத்தீச னென்றே யாளவேண் டியதால்
அவ்வகத் தீசனை யானக்கம் பூத்த
இவ்வகத் தீச ரின்பமோ டிறைஞ்சித்
தன்பெயர் மாறிக் காரணந் தந்து
பின்பெயர் மாறி யறிவெனப் பிறழ்ந்து
மாயை யுடையான் மனமெனத் தோன்றுஞ்
சாயை யுடைய தாடாண்மை வீரனை
அடக்கி யொடுக்கி யணிகா ரணம்பெயர்
மடக்கி மடக்கி வாரா தாக்கித்
தானே தானுந் தன்மையின் விளங்கற்
கானு முறைசெய்வா னகத்தி னமைத்துத்
தவமும் யோகமுந் தகையென வியல்பின்
அவயவ மெல்லா மருளினெ டளித்து
விளக்கியாட் கொள்கென வேண்டி வேண்டித்
துளக்கி யிரந்துயர் தீரக் கேட்டது.

அகத்தீசர் சதகம் முற்றிற்று.

ஆ. பாடல் - 218.

மகுமதுநபியாண்டவரைச்

சுகானுபவமுறத் துதித்தல்

தொண்ணூற்றறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுப் படர்ந்தடரும்
வீசுபா சாட வியெனும்
வினையென்ற பெருமர வனங்கான கங்காடு
வெட்டிநிர்த் தூளி பண்ணி
வெகுளிக ளெனும்பல பறட்டுமுட் காடெலாம்
வேரோ டறப்பி டுங்கி
விரிகருணை வீரகண் டாமணி யணிந்துதுணி
வீரவா யுதம ணிந்து
வெற்றிகொண் டெழுமகங் காரவெங் கைப்புலியை
வேட்டையா டித்து ணித்து
வெட்கமொடு துக்கமும் வெருட்சியு மருட்சியும்
வெருண்டோட வருவி ராகம்
வெஞ்சின மெனுங்கொடிய துஷ்டமிரு கங்களும்
வெடிவா லெடுத்தெ டுத்து
வீறிவிட் டலறியொன் றோடொன்று சேராமல்
வெருவியே கிடவ டித்து
வெல்லரிய மாமாயை யெனுமலைப் பாம்பினை
விவேகமெனு மண்டா விறல்
வெட்டிப் பிளந்தபின் மின்னுகர ணத்தொடு
விரிந்தோடு கருவி வேரை
மீறிய விசாரமெனு மண்வெட்டி கொடுவெட்டி
மேட்டிமைக ளென்னு மரமும்
வெட்டுண்ட மாறோடு முட்களுஞ் சேர்த்ததின்
மெய்த்தவக் கனலை மூட்டி
விண்டலமு மண்டலமு மொன்றாகி நின்றபெரு
வெளிவாயு வதனை யூதி
மெய்யான வடவன லெனச்சுடர் பரந்தபுன்
விளிமாயை யெனுமி ருளெலாம்
விரிகதிர் வரக்கண்ட பனியின்முக மென்னவழி
விட்டுவெளி வாங்கி யேங்க

வெட்டியைக் கட்டிவழி வெட்டிப் பறிக்கின்ற
விணையறக் காடு வெட்டி
சட்டபி னகங்கைதுணை மென்றகற் பாறையைச்
சுழியென்னு முளியி னாலே
சொச்சமற வெட்டிப் பிடுங்கியிடை பிங்கலைச்
சூட்சியென் னுஞ்ச கட்டிற்
றூக்கிவைத் தேற்றியே தொந்தங்க ளென்னுமொரு
தோல்வடக் கயிறு கட்டித்
துட்டத் துடுக்கெனுங் காமாட்டி யாட்களுந்
தோல்வடந் தொட்டி ழுக்கத்
தூயமெஞ் ஞானவை ராக்கியக் கசையினாற்
றெண்டுசெய் யென்ற டித்துத்
தூராத மிடியெனுந் தொல்லைப் பெருங்கேணி
தூர்க்கவத னுனி ரப்பிச்
சொற்ப்ரணவ சொரூபமா நிச்சயக் கருமுகில்
சூழ்ந்துதங் காலூன் றியே
சுற்றிக் கவிந்துகொண் டானந்த மழைமாரி
சோராம லேபொ ழிந்து
சொல்லரிய நெஞ்சக மெனும்பூமி சுத்தவெளி
யாகவச் சுத்தி ருத்திச்
துய்யசதுர் வேதத்தை நாள்வரப் பாக்கியே
துறவெனுங் கிடைம றித்துச்
சுருதிமுடி வென்னுமெய் யறிவுழவு தற்கான
சூத்திர மெனுங்க லப்பை
துன்பமின் பங்களென் பதிரண்டு மாடாய்ச்
சுருங்கிவார் பூட்டி யிதமாய்த்
துள்ளிக் குதித்தெடுத் தேறியே போகின்ற
துடியடக் கின்ற தடமாய்த்
தூலமொடு சூக்குமத் தாசையு நிராசையாய்த்
தொந்தநிர்த் தொந்த மாகிச்
சோதிமய மாமென்ற வித்தகப் பண்ணையா
டொட்டிதய மேழி யதனைச்
சொன்னபடி வந்திடக் கௌரிகுண் டலியெனுஞ்
சுழிமுனைத் தாறெ டுத்துப்
பட்டும் படாதும்வைத் திடைகரிசி லாதுழுது
பல்வருண பேத மென்னும்

பாவிகச் சாதிவரை கின்றகளி யளறது
  பழுக்கவழு கக்க லங்கிப்
பழக்கமெனு மடைதலுங் கட்டியு மிதித்தபின்
  பழகரிய சமர சமெனும்
படிகொண்ட மூலமுத லாதார மாறும்
  பரப்பிப் பரம்ப டித்துப்
பகருமிரு கலைநோக்கு வருசுழுயி லமைகின்ற
  பலனெனுங் கைகரு லுங்கிப்
பாரமலை யோடனு வகண்டமொடு கண்டம்
  பரிக்ஷித் தொளுத விதையைப்
பட்டுமுந் தாதுபிந் தாமலே பாவியே
  பருவமது செய்த பின்பு
பாசட ரெடுப்பரென் றெடுப்புநீ ரதனையும்
  பார்த்துக் கழித்து விட்டுப்
பத்திவை ராக்கியக் கடன்மடை திறந்துகால்
  பாய்ச்சியது பயிரா கவே
பரிபாக பக்குவக் காலமது பிசகாது
  பார்த்துப் பதந்தன் னிலே
பற்றிப் படர்ந்ததொண் ணூற்றாறு தத்துவப்
  பலகளை யறப்பி டுங்கிப்
பரிபூர்ண மாகவே நாளுக்கு நாள்கதிர்ப்
  பலநோ ளறப்ப றித்து
பாளையென் னும்பருவ மூற்றியே முத்திப்
  பலன்பெற்ற சமுசா ரிநீ
படைகொண்ட மும்மண்ட லத்தினு முன்மகிமை
  பற்றிப் படர்ந்த குருவே
பாதபங் கயமதுக் காளடிமை யாகாது
  பாவத் தழுந்து வேனோ
பாசவலை வீசியே மோசமது செய்கின்ற
  பாவையர்க் காளா வனோ
கொட்டிய கருந்தே ணிகர்த்தவிரு மின்னார்
  குவிந்தவிரு பொற்கொங் கையும்
கோசமொடு மும்மத மிறைக்கின்ற கர்விதக்
  குஞ்சரக் கொம்பு தானோ
கொஞ்சுகிளி மொழியார்க ளுவுநல் லரவினது
  கொடியநச் சுப்பை யதோ

கூரிருட் கூந்தலென் சொல்லுகேன் கோடையிடி
குடிகொண்ட கருமேக மோ
கோதையிள மின்னார்கள் யோனிப் பெருங்கேணி
குறையாத யானை மடுவோ
கூறுமுகி லேழும் படர்ந்துவரு டிக்கினுங்
குறையருக் கெடுபள் ளமோ
கொத்துக் கடங்காத மதகரி தனக்குமது
கொப்பமோ படுபள் ளமோ
குருவைத் தொழாமனுக் குப்பைக ளொதுங்குமோர்
குப்பைக் கிடங்கு தானோ
கொலைசெயம னாரிருக் கின்றபடு களமோ
கொடுஞ்சிங்க மிடிபொ தும்போ
குமுகுமென வதிரசத் தேனொழுகு கனியெனக்
கொண்டுநெஞ் சினைவாட் டுதே
கோளடப் பொன்னிலத் தாசைதரு கின்றதே
கோதையர்கள் காத லாலே
கூளமத ரிப்பதே யல்லா திருந்துநான்
குளிர்காய நேர மில்லையே
கூர்குணம சத்துநிற் கின்றபர வெளியெலாங்
குடிகொண் டிருந்த குருவே
கொடியகெடு மாயையைக் கூடா திருக்கின்ற
குறியருள்வ தென்று புகலாய்
கோடானு கோடிமறை யாலுமறி யாக்குணங்
குடிகொண்ட கருணை வடிவே
கூலாயி லாகயில் லல்லாகு வென்பதற்
குரியமகு மூது நபியே.

ப-ரை. வெட்ட வெட்ட — வெட்டுந் தோறும் வெட்டுந் தோறும், தளிர்கள் விட்டு — தளிர்கள் அரும்பி, படர்ந்து அடரும் — படர்ந்து நெருங்கின, வீசு — வெட்டி யெறிதற்குரிய, பாச அடவியென்னும் — பாசாடவியென்கின்ற, வினையென்ற — வினையென்று சொல்லப்பட்ட, பெருமரம் வனம் கானகக்காடு — பெரு மரங்களோடு கூடிய வனமாகிய கானகக் காட்டை, வெட்டி — எறிந்து, நிர்த்தூளிபண்ணி — மிகவும் பொடிசெய்து, வெகுளிகள் என்னும் — கோபங்கள் என்கின்ற, பல பரடு முள் காடு எல்லாம் — பலவாகிய புதல்களோடுகூடிய முட்காடு முழுதும், வேரோடு அற பிடுங்கி — வேருடனே அற்றுப்போம்படி பறித்து, விரிகருணை — மிகுந்த கருணையாகிய, வீரகண்டாமணி அணிந்து — வீரகண்டாமணியைத் தரித்து,

துணி வீரம் ஆயுதம் அணிந்து — வெட்டுதற்குரிய வீர ஆயுதத்தைத்தரித்து, வெற்றிகொண்டு எழும் — ஜெயம் கொண்டு எழுகின்ற, அகங்காரம் — அகங்காரமாகிய, வேங்கைப் புலியை — வேங்கைப் புலியை, வேட்டையாடி துணித்து — வேட்டையாடி வெட்டி, வெட்கமொடு துக்கமும் — நாணத்தோடு துன்பமும், வெருட்சியும் மருட்சியும் — அச்சமும் மயக்கமும், வெருண்டு ஓட — அஞ்சி ஓடவும், வரும் இராகம் — வருகின்ற விருப்பமும், வெம் சினம் — கொடிய கோபமும், எனும் — என்று சொல்லப்பட்ட, கொடிய துஷ்ட மிருகங்களும் — கொடுமையாகிய துஷ்டமிருகங்களும், வெடிவால் எடுத்தெடுத்து — வெடித்த வாலைத் தூக்கித் தூக்கி, வீறிட்டு — கூச்சலிட்டு, அரற்றி — அலறி, ஒன்றோடொன்று சேராமல் — ஒன்றோடொன்று கூடாமல், வெருவியோடிட அடித்து — அஞ்சி ஓடிப்போம்படி அடித்து, வெல் அரிய — வெல்லுதற்கரிய, மாமாயை என்னும் — பெரிய மாயை என்கிற, மலைப்பாம்பினை — மலைப்பாம்பை, விவேகம் என்னும் — அறிவென்கிற, மண்டாலினால் — கோடாலியால், வெட்டி பிளந்தபின் — வெட்டிப் பிளந்தபிறகு, மின்னு கரணத்தொடு — விளங்குகின்ற கரணங்களோடு, விரிந்து ஓடு — பரந்து ஓடுகிற, கருவிவேரை — கருவிகளாகிய வேரை, மீறிய விசாரம் என்னும் — மிகுந்த விசாரம் என்கிற, மண்வெட்டி கொடுவெட்டி — மண்வெட்டியினால் வெட்டி, மேட்டிமைகள் என்னும் மரமும் — மேம்பாடுகளென்கிற மரமும், வெட்டுண்ட மாறோடு — வெட்டுப்பட்ட மாறுகளுடன், முட்களும் — முட்களையும், சேர்த்து — கூட்டி, அதில் — அதனிடத்து, மெய் தவம் கனலை மூட்டி — மெய்த்தவமாகிய நெருப்பை மூட்டி, விண்தலமும் மண்தலமும் — விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும், ஒன்று ஆகி நின்ற — ஒன்றாய் நின்ற, பெருவெளி — பெருவெளியில், வாயு அதனை ஊதி — காற்றை ஊதி, மெய் ஆன — உண்மையாகிய, வட அனல் என — வடவைத் தீப்போல, சுடர் பரந்த — ஒளி விரிந்த, புல் — அற்பமாகிய, விளி — அழிதற்கேதுவாகிய, மாயை என்னும் — மாயை என்கிற, இருள் எல்லாம் — இருள் முழுதும், விரிகதிர் வரக்கண்ட — பரந்த கிரணங்களையுடைய சூரியன் வரக்கண்ட, பனியின் முகம் என்ன — பனியின் முகத்தைப்போல, வழிவிட்டு — வழிவிட்டு, வெளிவாங்கி ஏங்க — வெளிவாங்கி ஏக்கமடையவும், வெட்டியை கட்டி — வழியைக்கட்டி, வழிகட்டிப் பறிக்கின்ற — வழிகட்டிப் பறிக்கிற, வினை அற — தொழில் அற்றொழிய, காடுவெட்டி — காட்டை வெட்டி, சுட்டபின் — சுட்டபிறகு, அகந்தை குணம் என்ற — அகந்தைக் குணம் என்கிற, கல் பாறையை — பாறைக்கல்லை, சுழி என்னும் உளியினாலே — சுழியென்கிற உளியைக்கொண்டு, சொச்சம் அற வெட்டி — மிச்சமில்லாமல் வெட்டி, பிடுங்கி — பறித்து, இடைபிங்கலைச் சூழ்ச்சி என்னும் சகட்டில் — இடைபிங்கலைச் சூழ்ச்சி யென்கிற வண்டியில், தூக்கிவைத்து ஏற்றி — தூக்கிவைத்து ஏறச்செய்து, தொந்தங்கள் என்னும் — தொந்தங்கள் என்கிற, ஒருதோல் வடக்கயிறுகட்டி — ஒரு தோலாற் செய்த வடக்கயிற்றினாற் கட்டி, துட்டத் துடுக்கு என்னும்—துட்டத் துடுக்கென்கிற, காமாட்டி ஆட்களும்—காமாட்டி ஆள்களும், தோல் வடம் — தோல் வடக்கயிற்றை, தொட்டு இழுக்க —

தொட்டு இழுக்கவும், தூய — பரிசுத்தமாகிய, மெய்ஞ்ஞான வைராக்கிய கசையினால் — மெய்ஞ்ஞானமும் வைராக்கியமுமாகிய சவுக்கினால், தொண்டு செய் என்று அடித்து — தொண்டு செய்யக் கடவாய் என்று அடித்து, தூராத — மூடப்படாத, மிடி என்னும் — தரித்திர மென்கிற, தொல்லை — பழமையாகிய, பெருங் கேணி — பெரிய கேணியானது, தூர — மூடிப்போக, அதனால் நிரப்பி — அதனால் நிறைத்து, சொல் — சொல்லப்பட்ட, பிரணவ சொரூபம் ஆம் — பிரணவ சொரூபமாகிய, நிச்சயம் — உண்மையுடைய, கரு முகில் — கரிய மேகங்கள், சூழ்ந்து — வளைந்து, தம் கால் ஊன்றி — தமது அடி ஊன்றி, சுற்றி கவிந்துகொண்டு — சுற்றிலு மூடிக்கொண்டு, ஆனந்த மழைமாரி — ஆனந்த மழைமாரியை, சோராமலே பொழிந்து — அயராமலே சொரிந்து, சொல் அரிய — சொல்லுதற் கரிய, நெஞ்சு அகம் என்னும் பூமி — நெஞ்சிட மென்கிற பூமியானது, சுத்தவெளியாக — சுத்தவெளியாம்படி, வைச்சு திருத்தி — வைத்துத் திருத்தி, துய்ய — பரிசுத்தமாகிய, சதுர் வேதத்தை — நான்கு வேதங்களையும், நால் வரப்பு ஆக்கி — நான்கு வரப்புகளாகச்செய்து, துறவு என்னும் கிடைமறித்து — துறவென்கிற கிடையை மறித்து, சுருதி முடிவு என்னும் — வேத முடிவு என்கின்ற, மெய் அறிவு — உண்மை அறிவானது, உழுவதற்கு ஆன — உழுவதற்குரிய, சூத்திரம் என்னும் கலப்பை — உபாயம் என்கின்ற கலப்பையில், துன்ப இன்பங்கள் என்பது — துன்ப இன்பங்கள் என்பவற்றை, இரண்டுமாடு ஆய் சுருக்கி—இரண்டு மாடுகளாகச் சுருக்கி, வார்பூட்டி — வாரைப்பூட்டி, இதமாய் — மெதுவாய், துள்ளிக் குதித்தெடுத்து — துள்ளிக் குதித்தெடுத்து, எறிபோகின்ற — எறிச் செல்லுகின்ற, துடி அடக்கின்ற திடமாய் — துடி அடக்கும்படியான உறுதியாகி, தூலமொடு சூக்குமத்து — தூலமொடு சூக்குமத்தின், ஆசையும்—விருப்பமும், நிராசையாய் — வெறுப்பாகி, தொந்தம் — தொந்தமானது, நிர்த்தொந்தமாகி — நிர்த்தொந்தமாகி, சோதிமயமாய் ஒன்ற — சோதி உருவாய்ப் பொருந்த, வித்தகப் பண்ணை ஆள் — ஞானமாகிய பண்ணை ஆட்கள், இதயம் — இருதயமாகிய, மேழி அதனை — கலப்பையை, தொட்டு — தொட்டுக்கொண்டு, சொன்னபடி வந்திட — சொன்னபடியேவர, கௌரி குண்டலி என்னும் — கௌரி குண்டலி யென்கின்ற, சுழுமுனை — சுழுமுனையாகிய, தாறு — தாற்றுக்கோலை, எடுத்து — கைக்கொண்டு, பட்டும் படாதும் வைத்து — பட்டும் படாமலும் வைத்து, இடை — இடையில், தரிசு இல்லாது உழுது — ஈரம் இல்லாமல் உழுது, பல் வருண பேதம் என்னும் — பலசாதி பேதம் என்கின்ற, பாவிகம் — பாவனையால், சாதி வரைகின்ற — சாதி எல்லைப்படுத்துகிற, களியாளர் — களியாளர்கள், அது பழக்க — அவ்வெல்லை பழக்கவும், அழுக — அழுகவும், கலக்கி — கலங்கச்செய்து, பழக்கம் என்னும் — பழக்கம் என்கின்ற, மடைதலும் கட்டியும் — மடைதலையும் கட்டியையும், மிதித்தபின் — மிதித்தபிறகு, பழகு அரிய — பழகுதற்கரிய, சமரசம் என்னும் — சமரசமென்கிற, படிகொண்ட — படிகளைக்கொண்ட, மூலம் முதல் — மூல முதலாகிய, ஆதாரம் ஆறும் — ஆறாதாரங்களிலும், பரப்பி — பரவச்செய்து, பரம்பு அடித்து — பரம்படித்து, பகரும் — சொல்லப்

படுகிற, இருகரை நோக்கு—இருகரை நோக்கும், வரு—உண்டாகின்ற, சுழியில் அமைகின்ற — சுழிமுனையில் பொருந்துகின்ற, பலன் என்னும் — பயன் என்கிற, கைகுலுக்கி—கையைக்குலுக்கி, பாரம் மலையோடு அணு — பெரிய மலையோடு அணுவையும், அகண்டமொடு கண்டம்—அகண்டத்தோடு கண்டத்தையும், பரிட்சிக்க ஒண்ணாத — சோதிக்க ஒண்ணாத, விதையை—வித்தை, பட்டு மூந்தாது பிந்தாது—பட்டு மூந்தாமலும் பிந்தாமலும், பாவி—பரப்பி, பருவமது செய்தபின்பு—பக்குவப்படுத்தினபின்பு, பாசடர்—மடைகாரர், எடுப்பர் என்று—எடுப்பார்கள் என்று, எடுப்பு நீர் அதனையும் — எடுப்பு நீரையும், பார்த்து கழித்துவிட்டு—பார்த்து ஒழித்துவிட்டு, பத்தி வைராக்கியம்—பத்தி வைராக்கியங்களென்கிற, கடல் மடை திறந்து—கடல் மடையைத்திறந்து, கால் பாய்ச்சி—காலின் வழியாகப் பாயச்செய்து, அது பயிராக — அது விளைய, பரிபாகம் பக்குவம்—பரிபாகப் பக்குவமாகிய, காலமது பிசகாதுபார்த்து—காலம் தவறால் நோக்கி, பதம் தன்னிலே—பதத்திலே, பற்றிப்படர்ந்த—பற்றிப் பரவின, தொண்ணூற்றாறு தத்துவம்—தொண்ணூற்றாறு தத்துவமாகிய, பலகளை—பலகளைகள், அற பிடுங்கி—அறப்பறித்து, பரிபூர்ணமாக—பரிபூரணமாக, நாளுக்கு நாள்—நாளுக்கு நாள், கதிர்—கதிர்களை, பலகோள் அற—பல துன்பங்கள் ஒழிய, பறித்து—பிடுங்கி, பாளையென்னும் பருவம் முற்றி—பாளையென்கிற பருவமுதிர்ந்து, முத்தி—முத்தியாகிய, பலன் பெற்ற—பயனை அடைந்த, சமுசாரிநீ — சமுசாரி நீயா யிருக்கிறாய், படைகொண்ட — சேனைகளைக் கொண்ட, மும்மண்டலத்தினும் — மூன்று மண்டலங்களினும், உன் மகிமையே—உன் மகிமை ஒன்றுமே, பற்றிப்படர்ந்த — வியாபித்துப் பரவின, குருவே—குருநாதனே, பாத பங்கயமதுக்கு—உன் பாத தாமரைகளுக்கு, அடிமை ஆள் ஆகாது—அடியேன் ஆள் ஆகாமல், பாவத்து—பாவமாகிய கடலில், அழுந்துவேனோ—மூழ்குவேனோ, பாசம் வலைவீசி—பாசமாகிய வலையைவீசி, மோசமது செய்கின்ற—மோசஞ்செய்கிற, பாவையர்க்கு — மாதருக்கு, ஆள் ஆவனோ — அடிமை ஆவனோ, கொட்டிய — கொட்டின, கருந்தேள் நிகர்த்து அவிரும்—கருந்தேள் போன்று விளங்குகின்ற, மின்னார்—மாதரது, குவிந்த—கூம்பின, பொன்—அழகாகிய, இரு கொங்கையும் — இரண்டு தனங்களும், கோசமொடு—கோசத்துடனே, மும்மதம் இறைக்கின்ற—மூன்றுமதங்களை இறைக்கிற, கர்விதம்—செருக்கையுடைய, குஞ்சரம் கொம்புதானோ—யானைக் கொம்புகளோ, கொஞ்சு—கொஞ்சுகிற, கிளிமொழியார்கள் — கிளிமொழியையுடைய மாதரது, நாவு—நாக்கானது, நல் அரவினது—நல்ல பாம்பினது, கொடிய—கொடுமையாகிய, நச்சுப் பையதோ—விஷப்பையோ, கூர் இருள்—மிக்க இருளையுடைய, கூந்தல் — கூந்தலை, என் சொல்லுகேன்—யாது சொல்வேன், கோடை இடி குடிகொண்ட — கோடை யிடியானது குடியாயிருக்கிற, கருமேகமோ—கரிய மேகந்தானோ, கோதை — பூமாலையையணிந்த, இளமின்னார்கள்—இளம் பெண்களது, யோனிப் பெருங்கேணி — யோனியாகிய பெருங்கேணியானது, குறையாத—நீர் வற்றாத, யானை மடுவோ—யானை மடுவுதானோ,

கூறும் முகில் எழும் — சொல்லப்பட்ட ஏழுமேகங்களும், படர்ந்து வருடிக்கினும் — படர்ந்து வருஷித்தாலும், குறை அறு — குறையொழியாத, கெடு பள்ளமோ — கெடுபள்ளந்தானோ, கொத்துக்கு அடங்காத — கொத்துக்கும் அடங்காத, மதகரி தனக்கும் — மதயானைக்கும், அது - அது, கொப்பமோ — கொப்பந்தானோ, படுபள்ளமோ — படுபள்ளந்தானோ, குருவைத்தொழா — சற்குருவை வணங்காத, மனுகுப்பைகள் ஒதுங்கும் — சனங்களாகிய குப்பைகள் ஒதுங்குகிற, ஓர் குப்பைக் கிடங்குதானோ — ஒரு குப்பைக் கிடங்கோ, கொலைசெய் — கொலை செய்கிற, எமனூர் இருக்கின்ற — இயமன் இருக்கிற, படுகளமோ — படுகளந்தானோ, கொடுஞ்சிங்கம் — கொடுமையாகிய சிங்கங்கள் வாழ்கின்ற, மிடிபொதும்போ — சிறு பொந்துதானோ, கும்மு கும்மு என — கும் கும் என்றும், அதிரசம் தேன் ஒழுகு கனி என — மிக்க சுவையையுடைய தேன் ஒழுகுகின்ற கனி என்றும், கொண்டு — கொள்ளப்பட்டு, நெஞ்சினை வாட்டுதே — மனத்தை வாட்டுகின்றதே; கோள் அட — துன்பம் கெட, பொன் நிலத்து ஆசை — பொன் நிலங்களின் விருப்பத்தை, தருகின்றதே — தாராநின்றதே, கோதையர்கள் காதலாலே — மாதர் ஆசையாலே, கூளமது அரிப்பதே அல்லாது — கூளத்தை அரிக்கிறதே அல்லாமல், இருந்து — ஓரிடத்திருந்து, நான் குளிர்காய — நான் குளிர் காய்வதற்கு, நேரம் இல்லையே — நேரம் இல்லையே, கூர் குணம் அசத்து — மிகுந்த குண தோஷங்கள், நிற்கின்ற — இருக்கிற, பரவெளி எலாம் — பரவெளியெல்லாம், குடி கொண்டு இருந்த — குடிகொண்டிருக்கிற, குருவே — சற்குருவே, கொடிய கெடுமாயையை — கொடிதாகிய கெட்ட மாயையை, கூடாது இருக்கின்ற — சேராது இருக்கிற, குறி அருள்வது — குறியை அருள் செய்வது, என்று — எக்காலோ, புகலாய் — சொல்லாய், கோடானுகோடி மறையாலும் — கோடாகோடி வேதங்களாலும், அறியா — அறியப்படாத, குணம் குடிகொண்ட — குணம் குடிகொண்ட, கருணைவடிவே — கருணையுருவே, கூலாயிலாக யில்லல்லாகு என்பதற்கு உரிய — கூலாயிலாக யில்லல்லாகு என்று புகழ்தற்குத் தகுதியான, மகுமூது நபியே — மகுமூது நபி ஆண்டவனே. எ-று.

வி—ரை. பாசாடவி — பாசக்காடு. விராகம் — வெறுப்பு (வைராக்கியம்.) மண்டா — கண்டகோடாலி. மாறு — மிலாறு. வெட்டி — பாதை. சொச்சம் — மிச்சம். கசை — சவுக்கு. மிடி — வறுமை. வரப்பு — வரம்பு. பண்ணையாள் — கடைஞன். தரிசு — கரம்பு. பலகோள் — பலகலை. கொப்பம் — யானை பிடிக்கும் பள்ளம். மனு — மனிதர். அசத்து — தோஷம்.

மகுமது நபியாண்டவரைச் சுகானுபவமுறத் துதித்தல் முற்றிற்று.

ஆக பாடல் - 219.

தவமேபெறவேண்டுமெனல்.

கட்டளைக்கலித்துறை.

ஓடி யலைந்துமிவ் வையக முற்று முழன்றுழன்றுந்
தேடி யெடுத்த திரவியம் யாவையுஞ் செத்தபின்பு
நாடி யெடுப்பது முண்டோ மறந்து நடக்குநெஞ்சே
வாடி யிறந்தறஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே.

ப—ரை. ஓடி அலைந்தும் — ஓடித்திரிந்தும், இ — இந்த, வையகமுற்றும் — உலகமுழுதும், உழன்று உழன்றும் — சுழன்று சுழன்றும், தேடி எடுத்த — தேடிச் சம்பாதித்த, திரவியம் யாவையும் — பொருள் முழுதையும், செத்த பின்பு — இறந்த பிறகு, நாடி எடுப்பதும் உண்டோ — ஆராய்ந்து எடுப்பதும் உளதோ, மறந்து நடக்கும் நெஞ்சே — மறந்து நடக்கின்ற மனமே, வாடி இறந்து — வாடிச் செத்து, அறம் செய்வாய் — அறத்தைச் செய்யக் கடவை, (செய்வையானால்) குணங்குடி வாய்த்திடும் — குணங்குடி கிடைக்கும். எ—று.

வி—ரை. இவ்வையகமுற்றும் ஓடியலைந்தும் உழன்றுழன்றும் என் றியைத்துக்கொள்க. மறந்து நடத்தலாவது — முத்திக்கென்றெடுத்த வுடம் பென்பதை மறந்து பந்தத்துக்கேதுவாக நடத்தல். வாடியிறந்து — உடம்பு வாடி மனமிறந்து. (௯)

பெண்ணாசை யென்கின்ற பேய்பிடித் தாடிய பேதைநெஞ்சே
கண்ணா லதில்வருங் கன்மங்கள் யாவையுங் கண்டிலையோ
எண்ணாத பாவங்க ளெண்ணாமற் செய்புமிப் பேருடம்பு
மண்ணாக நற்றவஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே.

ப—ரை. பெண்ணாசை யென்கின்ற — பெண்ணாசை யென்கிற, பேய் பிடித்து ஆடிய — பேயினால்பிடிக்கப்பட்டு ஆடின, பேதைநெஞ்சே — பேதை மனமே, கண்ணால் — கண்களால், அதில்வரும் — அதனால் வருகின்ற, கன் மங்கள் யாவையும் — கருமங்க ளெல்லாம், கண்டிலையோ — பார்த்திலையோ, எண்ணாத பாவங்கள் — அளவிடப்படாத பாவங்களை, எண்ணாமல் — யோசிக் காமல், செய்யும் — செய்கிற, இ — இந்த, பேர் உடம்பு — பெரிய உடம்பா னது, மண் ஆக — மண்ணுண்டுபோம்படி, நல்தவம் செய்வாய் — நல்ல தவத் தைச் செய்யக்கடவை, (செய்வையானால்) குணங்குடி வாய்த்திடும் — குணங் குடி கிடைக்கும். எ—று.

வி—ரை. புண்ணிய பாவங்களாகிய கர்மங்கள் எல்லாம் கட்பார்வை யால் உண்டாவன வாதலால் 'கண்ணாலதில் வரும் கன்மங்கள் யாவையும்' என்றார். எண்ணாத பாவங்கள் என்றது அளவிடப்படாத பாவங்கள் என்ற படி. உடம்பு மண்ணாக என்றது உடம்புவாட என்றபடி. (௰)

ஆடும் பலிபொரு ளாட்சியென் றங்கிங்கு மாயலைந்து
பாடும் படுவதுன் பாரம தோசொல்லு பாழ்மனமே
கூடும் படுபயன் றேடுமப் பாலுள்ள கூட்டம்விட்டு
வாடும் படும்பெரு முண்மைக் குணங்குடி வாய்த்திடுமே.

ப—ரை. ஆடும் — ஆடுகின்ற, பலிபொருள் — பலிக்கின்ற பொருள், ஆட்சி என்று — அரசாட்சியென்று, அங்கு இங்குமாய் அலைந்து — அங்குமிங்குமாகத் திரிந்து, பாடும் படுவது — பாடுபடுவது, உன் பாரமதோ — உன் பாரமாமோ, சொல்லு — சொல்லுவாயாக, பாழ்மனமே — பாழாகிய நெஞ்சே, கூடும் — சேர்கின்ற, படுபயன் — உண்டாகின்ற பயனனது, தேடும் — தேடப்படும், அப்பால் உள்ள கூட்டம்விட்டு — அப்பாலிருக்கிற கூட்டத்தை விட்டு, வாடும் — வாட்டமடையும், படும் பெரும் — உண்டாகின்ற பெரிய, உண்மை— உண்மையையுடைய, குணங்குடிவாய்த்திடும் — குணங்குடிகிடைக்கும். எ-று.

வி—ரை. ஆட்சி — ஆளுகை. பாடுபடுவது — கஷ்டப்படுவது. (௩)

ஆதி முகம்ம தருளா முகம்ம தருள்விரிந்த
சோதி முகம்மது தோற்ற முகம்மது தூயவுளத்
தோது முகம்மதென் றுண்மைகண் டாலிவ் வுலகினுக்கு
வாதி முகம்மதி னோடுகு ணங்குடி வாய்த்திடுமே.

ப—ரை ஆதி முகம்மது — ஆதியாகிய முகம்மது, அருள் ஆம்முகம்மது— அருளாகிய முகம்மது, அருள்விரிந்த சோதி முகம்மது — அருள்பரந்த ஒளியுள்ள முகம்மது, தோற்றம் முகம்மது — தோற்றத்தை யுடைய முகம்மது, தூய உள்ளத்து ஓது முகம்மது — பரிசுத்தமாகிய மனத்தினால் ஓதப்படுவதாகிய முகம்மது, என்று உண்மை கண்டால் — என்று உண்மையை அறிந்தால், இவ்வுலகினுக்கு — இந்த உலகத்துக்கு, வாதி முகம்மதினோடு — வாதி முகம்மதினுடனே, குணங்குடி வாய்த்திடும் — குணங்குடி கிடைக்கும். எ-று.

வி—ரை. ஆதி — முதன்மை. அருளாம் — அருளாகிய. (௪)

எல்லாப் படைப்பும் படைத்து மிரணங்க ளீபவனே
அல்லா லொருவ னவனன்றி வேறில்லை யாகையினாற்
சொல்லாமற் சொல்லுஞ் சுருதி முடிவினிற் சொல்லிறந்த
வல்லான் குணங்குடி வாழ்ந்திருப் போமினி வாருமினே.

ப—ரை. எல்லாப் படைப்பும் படைத்தும் — எல்லாப் பிறப்புக்களையும் படைத்தும், இரணங்கள் ஈபவனே — அவைகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுப்பவனே, அல்லால் ஒருவன் — அல்லால் ஒருவன், அவன் அன்றி - அவன் அல்லது, வேறு இல்லை — வேறொருவரும் இல்லை. (ஆகையினால்) சொல்லாமல் சொல்லும் — சொல்லாமற் சொல்லுகின்ற, சுருதிமுடிவினில் — வேதமுடிவில், சொல் இறந்த — சொல்லற்று நின்ற, வல்லான் — வல்லவனது, குணங்குடி — குணங்குடியில், இனி வாழ்ந்து இருப்போம் — இனி வாழ்ந்து இருக்கலாம், வாருமின் — வாருங்கள். எ-று.

வி—ரை. எல்லாப் படைப்பும் என்றது — எழுவகைப் படைப்பும் என்றபடி. எழுவகைப் படைப்பாவன: தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. சுருதிமுடிவு — வேதாந்தம். (௬)

அய்யோ வுலகி லழியா வரம்பெற்றி யாரிருந்தார்
அய்யோ வுனக்கந்த வாதர வென்னதி லாசையென்னோ
பொய்யான வாழ்வும் புலையாட்டு நம்பும் புதலர்க்கும்
ஒய்யார முள்ள குணங்குடி யார்க்கு முறவில்லையே.

ப—ரை. அய்யோ — அந்தோ, உலகில் — உலகத்தில், அழியா வரம்பெற்று — அழியாத வரத்தைப்பெற்று, யார் இருந்தார்—யார் இருந்தார்கள், அய்யோ — அந்தோ, உனக்கு — உனக்கு, அந்த ஆதரவு என் — அந்த ஆதரவானது என்ன பயனைச்செய்யும், அதில் ஆசை என்னோ — அதில் ஆசை யாதோ, பொய்யான வாழ்வும் — பொய்யாகிய வாழ்வையும், புலையாட்டும் — புலையாடலையும், நம்பும் — நம்புகின்ற, புதலர்க்கும் — கீழ்மக்களுக்கும், ஒய்யாரம் உள்ள — ஒய்யாரத்தையுடைய, குணங்குடியார்க்கும் — குணங்குடியாருக்கும், உறவு இல்லை — சிநேகம் இல்லை. எ—று.

வி—ரை. ஆதரவு — துணை. புலையாட்டு — இழிதொழில்களைச்செய்தல். (௬)

உற்றா ரிருந்தென்ன பெற்றா ரிருந்தென் னுனக்குதவி
சற்றா யினுமில்லை சொன்னேன்சொன் னேனிது சத்தியமாய்ச்
செற்றாலும் வைத்தடி வாங்காம னிற்கிற் செயம்பெறலாங்
கற்றாற் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே.

ப—ரை. உற்றார் இருந்து என்ன — உற்றார் இருந்தால் என்ன, பெற்றார் இருந்து என் — பெற்றார் இருந்தால் என்ன, உனக்கு உதவி சற்றாயினும் இல்லை — உனக்கு உதவி சிறிதாயினும் இல்லை, சொன்னேன் சொன்னேன் — சொல்லினேன் சொல்லினேன், இது சத்தியமாய் — இது உண்மையாகக்கொண்டு, செற்றாலும் — இறந்தாலும், வைத்தடி வாங்காமல் நிற்கின் — வைத்த அடிவாங்காமல் நின்றால், செயம்பெறலாம் — செயமடையலாம், கற்றால் — (இவ்வாறுநிற்க) கற்பாயானால், குணங்குடி கொண்டிடுவாய் — குணங்குடி கொள்வாய், மனக்கண்மணியே — மனமாகிய கண்மணியே. எ—று.

வி—ரை. செத்தாலும் என்பது செற்றாலும் என எதுகை நோக்கி வந்தது. வைத்த அடி என்பது வைத்தடியெனத் தொகுத்தலாயிற்று. கண்மணி — கண்பாவை. (௭)

எஞ்சா னுயரத் திருக்கும் பனையி னிறங்கியுண்ணும்
பஞ்சாக் கரமெனும் பாரிய கள்ளினைப் பாய்ந்தெடுத்து
தஞ்சாவூ ராளு மகராசன் பாதந் தனைப்பணிந்தால்
நெஞ்சாக் குணங்குடி கொள்வா யிதுபுத்தி பேணெஞ்சமே.

ப—ரை. எண்சாண் உயரத்து இருக்கும் — எண்சாண் உயரமாக இருக்கிற, பனையின் — பனைமரத்தினின்றும், இறக்கி உண்ணும் — இறக்கிக் குடிக்கின்ற, பஞ்சாக்கரம் என்னும் — பஞ்சாக்ஷர மென்கிற, பாரிய கள்ளினை — மிகுதியான கள்ளை, பாய்ந்து எடுத்து — குதித்து எடுத்து, தஞ்சாவூர் ஆளும் — தஞ்சாவூரை ஆள்கின்ற, மகராசன் — மகாராசனது, பாதம் தன்னை — பாதங்களை, பணிந்தால் — வணங்கினால், கெஞ்சா — கெஞ்ச வேண்டாமல், குணங்குடிகொள்வாய் — குணங்குடியை அடைவாய், இதுபுத்தி — இதுதான் உனக்குப் புத்தி, நெஞ்சமேகேள் — மனமே கேட்பாயாக. எ-று.

வி—ரை. எண்சாண் உயரத்து இருக்கும்பனை என்றது எண் சாண் உயரமாகிய தூலசரீரம். கள் — அமிர்தம். (௮)

படிக்கும் படிக்கு நடக்கின்றையோவிப் பழஞ்செருப்பா
லடிக்கட்டுமோவுனக் கொத்தாசை யாரறை பாவிநெஞ்சே
முடக்கிப் படுத்துங்கொண் முச்சந்திக் குப்பையின் மேடுகளி
லடங்கிக் குணங்குடி கொள்வா யதுபர மானந்தமே.

ப—ரை. பாவி நெஞ்சே — பாவி மனமே, படிக்கும்படிக்கு — படிக்கும் விதமாக, நடக்கின்றையோ — நடக்கிறாயோ, இ — இந்த, பழஞ் செருப்பால் அடிக்கட்டுமோ — பழஞ்செருப்பினால் அடிக்கட்டுமா, உனக்கு ஒத்தாசை ஆர் — உனக்கு ஒத்தாசையாய் வருபவர்யார், அறை — சொல்லுவாயாக, முச்சந்திக் குப்பையின் மேடுகளில் — முச்சந்திக் குப்பை மேடுகளில், முடக்கிப் படுத்துக்கொள் — முடக்கிப் படுத்துக்கொள்வாயாக, (கொள்வாயானால்) அடக்கி — கருவி கரணாதிகளை ஒடுக்கி, குணங்குடிகொள்வாய் — குணங்குடி கொள்ளக் கடவை. அது — அப்படிக்கொள்வது, பரமானந்தம் — மேலான இன்பம். எ-று.

வி—ரை. முச்சந்தி — முத்தெருக் கூடும் இடம். (௯)

ஆருக்கு வந்த விருந்தென் றிராம லருமையுள்ள
பேருக்கு வந்த தெனவே நினைந்து பிரியமுற்றூ
ரூருக் கமைந்ததொ ரன்னங்க ளுண்டுண்டொன் றும்முரையாப
பாருக்கு ணல்ல குணங்குடி போய்ப்பள்ளி கொண்டிடுமே.

ப—ரை. ஆருக்கு வந்த விருந்து என்று இராமல் — யாருக்கு வந்த விருந்தோ என்று இருக்காமல், அருமையுள்ள பேருக்குவந்தது எனவே நினைந்து — அருமையுள்ள பேரின் பொருட்டே வந்ததென்று எண்ணி, பிரியம் உற்று — பிரிய மிகுந்து, ஊர் — ஊருக்கு, ஊர்கள் தோறும் — ஊர்கள் தோறும், அமைந்தது — அமைந்திருப்பதாகிய, ஓர் அன்னங்கள் உண்டு உண்டு — ஒப்பற்ற சோறுகளை உண்டு உண்டு, ஒன்றும் உரையா — ஒன்றும் பேசாதவர்களாய், பாருக்குள் — உலகத்தினுள், நல்ல — நன்மையாகிய, குணங்குடிபோய் — குணங்குடிக்குச் சென்று, பள்ளிகொண்டிடும் — பள்ளிகொள்ளுங்கள். எ-று. (௧௦)

மூல முகம்மது முப்பாழ் முகம்மது மோனமுள்ள
பால முகம்மது பத்தியுள் ளோர்களும் பாய்ந்தெடுக்கும்
வேலு முகம்மது வேதாந்த மூல விளக்குடைய
கோலு முகம்மது குன்றாக் குணங்குடி கொண்டவர்க்கே.

ப—ரை. குன்றா — குறையாத, குணங்குடி கொண்டவர்க்கு — குணங்குடி கொண்டவர்களுக்கு, மூலம் - மூலமா யிருப்பதும், முகம்மது — முகம்மதுவே, முப்பாழ் — முப்பாழாயிருப்பது, முகம்மது — முகம்மதுவே, மோனம் உள்ள பாலம் — மௌன நிலையாயிருக்கிற பாலமும், முகம்மது — முகம்மதுவே, பத்தி உள்ளோர்களும் — பத்திமான்களும், பாய்ந்து எடுக்கும் — குதித்து எடுக்கின்ற, வேலு - வேல் வடிவமா யிருப்பது, முகம்மது — முகம்மதுவே, வேதாந்தம் — வேதமுடிவிலுள்ள, மூலவிளக்கு உடைய - மூல விளக்காய் இருக்கிற, கோலு — கோலுருவாயிருப்பது, முகம்மது — முகம்மதுவே. எ-று.

வி—ரை. பாலம் — நெற்றி. பிறவிப் பகையை வெல்லுதற்குரிய ஆயுதமா யிருத்தலால் ‘வேல்’ என்றார். கோல் — செங்கோல். (கக)

நாளை யிருந்திட லாமென வெண்ணி நடுநெஞ்சமே
நாளைக் கிருப்பதை நம்புவ தோவில்லை நானிலத்தில்
நாளைக்கும் பின்னைக்கு நாமிருப் போமென்னு நாட்டமற்றெவ்
வேளைக்கு நல்ல குணங்குடி வாழ்ந்திரு வேளையிதே.

ப—ரை. நாளை இருந்திடலாம் என எண்ணி — நாளைக்கு இருந்திடலாம் என்று நினைத்து, நடு நெஞ்சமே — விரும்புகின்ற மனமே, நாளைக்கு இருப்பதை — நாளைக்கு இருப்போம் என்பதை, நம்புவதோ — நம்புகிறதா, இல்லை— நம்பக்கூடாது, நானிலத்தில் — உலகத்தில், நாளைக்கும் பின்னைக்கும்— நாளைக்கும் பின்னைக்கும், நாம் இருப்போம் என்னும் — நாம் இருப்போம் என்கிற, நாட்டம் அற்று — எண்ணம் அற்று, எவ்வேளைக்கும் — எந்தவேளைக்கும், நல்ல — நன்மையாகிய, குணங்குடி — குணங்குடியில், வாழ்ந்திரு— வாழ்ந்திருப்பாயாக, வேளையிதே — வேளையிதுவேயாகும். எ-று.

வி—ரை. நானிலம் — நால்வகை நிலங்கள். அவையாவன: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. அவற்றுள் குறிஞ்சி-மலை நிலம். முல்லை—காட்டுநிலம். மருதம்-வயல்நிலம். நெய்தல்-கடல்சார்ந்தநிலம். (கஉ)

நாட்டமென் றேயிரு வுன்னிரு பாதத்தி னன்னிலையின்
ஓட்டமென் றேயிரு வொன்றான வக்கர மோதியதின்
ஆட்டமென் றேயிரு தோற்ற மெவையு மழியுடைய
நீட்டமென் றேயிரு நெஞ்சே குணங்குடி நிச்சயமே.

ப-ரை. உன் இருபாதத்தின் — உன் இரண்டு பாதத்திலும், நாட்டம் என்றே இரு — நாட்டமாகவே இரு, நன்னிலையின் ஓட்டம் என்றே இரு —

நல்ல நிலையின் ஒட்டமாகவே இரு, ஒன்றான அக்கரம் ஓதி — ஒன்றான அக்ஷரத்தை உச்சரித்து, அதின் ஆட்டம் என்றே இரு — அதின் ஆடல் என்றே இரு, தோற்றம் எவையும் — காணப்படுகிறயாவும், அலி உடைய — அலியினுடைய, நீட்டம் என்றே இரு - விரிவென்றே இரு, நெஞ்சே — மனமே, குணங்குடி — குணங்குடியானது, நிச்சயமே - உனக்குக் கிடைப்பது நிச்சயமேயாம். எ-று.

வி—ரை. ஒன்றான அக்கரம் — பிரணவம். அலி — மகாத்துமா. (௧௩)

நாடு நகருண்டு நல்லோர் களுமுண்டு நாதனுமுண்
டோடு மெனக்குண் டென்றெண்ணி யுன்கையி லுடல்பசித்தாற்
போடென்று கொண்ட கவளத்தை வாங்கிப் புசித்துக்கொண்டு
பாடு குணங்குடி வாழ்ந்திட லேபர மானந்தமே.

ப—ரை. நாடு நகர் உண்டு — நாடு நகரங்கள் உண்டு, நல்லோர்களும் உண்டு — நல்லவர்களும் உண்டு, நாதனும் உண்டு — இறைவனும் உண்டு, எனக்கு ஓடும் உண்டு — எனக்கு ஓடும் உண்டு, என்று எண்ணி — என்று நினைத்து, உடல் பசித்தால் — உடம்பு பசித்தால், உன் கையில் — உன் கையிலே, போடு என்றுகொண்ட — போடென்று வாங்கின, கவளத்தை வாங்கி — கவளத்தை எடுத்து, புசித்துக்கொண்டு — உண்டுகொண்டு, பாடு குணங்குடி வாழ்ந்திடலே — பெருமையமைந்த குணங்குடியில் வாழ்ந்திடுதலே, பரமானந்தம் — மேலான இன்பமாம். எ-று.

வி—ரை. நாடு — தேசம். நகர் — பட்டணம். நல்லோர்கள் — ஞானிகள். ஓடு — பிக்ஷாபாத்திரம். கவளம் — பிடிசோறு. (௧௪)

தவமே பெறவேண்டுமெனல் முற்றிற்று.

ஆ பாடல் - 233.

குறையிரங்கி யுரைத்தல்.

நேரிசை வெண்பா.

கள்ளினங்க ளுண்ணுங் கழுதைகா ளென்சொலினும்
எள்ளளவு மும்மிதயத் தெய்திலதே—உள்ளம்
இணங்கா மடமாந்த ரெப்படிக் கெட்டாலுங்
குணங்குடியார்க் குண்டோ குறை.

ப—ரை. கள் இனங்கள் உண்ணும் — கள் இனங்களை உண்ணுகிற, கழுதைகாள் — கழுதைகளே, என் சொலினும் — என்ன சொன்னாலும், எள் அளவும் — எள்ளளவாயினும், உம் இதயத்து — உமது இர்தயத்தில், எய்திலதே — புகவில்லையே, உள்ளம் இணங்கா — மனம் இசையாத, மடமாந்தர்-

அறியாமை யுள்ள மனிதர், எப்படிக் கெட்டாலும் — எப்படி அழிந்தாலும், குணங்குடியார்க்கு — குணங்குடியாருக்கு, குறை உண்டோ — குறையுளதோ. எ — று.

வி—ரை. கள் இனங்கள் — கள்ளும் அதற்கினமா யுள்ளனவும். இனமா யுள்ளன — கஞ்சா, அபினி, சாராயம் முதலாயின. (௪)

உற்றா ரழாமலுற வின்முறையார் திட்டாமற்
பெற்றார் பிறந்தார் பிதற்றாமல்—எத்தாலும்
அங்கிங் கெனுதபடி யாரும் பெருவெளியிற்
றங்கல் குணங்குடியே தான்.

ப—ரை. உற்றார் அழாமல் — உற்றார் அழாமலும், உறவின் முறையார் திட்டாமல் — உறவின் முறையார் திட்டாமலும், பெற்றார் பிறந்தார் பிதற்றாமல் — பெற்றவரும் பிறந்தவரும் பிதற்றாமலும், எத்தாலும் — எவ்வகையாலும், அங்கு இங்கு என்னுதபடி — அங்கு இங்கு என்று சொல்லாதபடி, ஆரும் — நிரம்பிய, பெருவெளியில் — பெருவெளியினிடத்து, தங்கல் — தங்குதல், குணங்குடியேதான் — குணங்குடியில் தங்குதல்தான். எ-று.

வி—ரை. உற்றார் என்றது — மனைவி மக்களை. உறவின் முறையார் என்றது — பந்துக்களை. பெற்றார் என்றது — தாய் தந்தைகளை. பிறந்தார் என்றது — கூடப்பிறந்த சகோதர சகோதரிகளை. (௫)

நாசி நுனியி னயனத் திடைவெளியிற்
றேசிகனா ராடுந் திருநடனம்—வாசிகொடுத்
தோரா யெழுவா யுணர்வா யருணெஞ்சே
பாராய் குணங்குடியின் பால்.

ப—ரை. நாசி முனையில் — நாசி நுனியிலே, நயனத்து இடை வெளியில் — கண்களின்நடுவேயுள்ள வெளியின்கண், தேசிகனார் ஆடும் — குருநாதர் ஆடுகின்ற, திருநடனம் — திருநடனத்தை, வாசிகொடுத்து — வாசியிலேறி, ஓராய் — உணர்வாயாக, எழுவாய் — எழுவாயாக, உணர்வாய் — அறிவாயாக, குணங்குடியின்பால் — குணங்குடியினிடத்து, நெஞ்சே — மனமே, அருள் பாராய் — அவனது திருவருளைப் பார்ப்பாயாக. எ—று.

வி—ரை. நாசி நுனி — நாசியின் உபரிபாகம். நயனத்திடை வெளியென்றது — புருவநடு விடத்தை. வாசி — குதிரை. அது இவ்விடத்து வாயுவை யுணர்த்தும். (௬)

பாவிக்குந் தோற்பையைப் பற்றியுளம் பாவையரின்
காவிடுக்கும் நாகம் நரைவனே—மேலெடுக்கும்
உன்னருளை யுங்காட்டி யோங்குங் குணங்குடியின்
றன்னருளை யுங்காட்டித் தா.

ப—ரை. பாலிக்கும் — காப்பாற்றுகிற, தோல்பையை — தோற்பையாகிய உடம்பை, உள்ளம்பற்றி — மனத்தினால் விரும்பி, பாவையரின் — மாதருடைய, கால் இடுக்குக்கு ஆக — கால் இடுக்கின் பொருட்டு, கரைவனோ — மனம் உருகுவேனோ, மேல் எடுக்கும் — மேன்மையாக எடுக்கப்பட்ட, உன் அருளையுங் காட்டி — உன் திருவருளையுங் காட்டி, ஓங்கும் — உயர்ந்த, குணங்குடியின் தன் அருளையும் — குணங்குடியினருளையும், காட்டித்தா — காட்டிக் கொடு. எ—று.

வி—ரை. பாவையர் — சித்திரப் பிரதிமைபோன்ற மாதர், இது உவமையாகுபெயர். கால் இடுக்கு என்றது — அல்குலை. (௭)

நஞ்சுண்ணு மாபோலு நாத னருள்பெறவென்
னெஞ்சேநீ புண்ணாய் நினைப்பதேன்—அஞ்சாதே
என்றுமுத்த னம்முள்ளே யேகா திருப்பதால்
ஒன்று குணங்குடியி னுள்.

ப—ரை. நஞ்சு உண்ணுமாபோலும் — விஷத்தை உண்ணுவதுபோல, நாதன் அருள்பெற — நாதனுடைய கிருபையைப்பெற, என் நெஞ்சே — என் மனமே, நீ புண்ணாய் நினைப்பதேன் — நீ புண்ணாக எண்ணுவதேன், அஞ்சாதே — பயப்படாதே, என்றும் — எக்காலும், முத்தன் — இறைவன், நம் உள்ளே — நமக்குள்ளே, ஏகாது இருப்பதால் — போகாது இருத்தலால், குணங்குடியினுள் — குணங்குடியில், ஒன்று — அடையக்கடவை. எ—று.

வி—ரை. முத்தன் — பாசங்களில் நின்றும் நீங்கினவன். ஒன்றுதல் — அடைதல். (௮)

நீண்டாண் பனைபோலு நெற்பதரைப் போலுமே
யென்றா னெனைப்படைத்தா யென்கோவே—தீண்டாத
கல்லா மிடாவதைநின் கைத்தடியான் மோதினால்
அல்லாற் குணங்குடியா கா.

ப—ரை. நீண்ட ஆண்பனைபோலும் — நீண்ட ஆண்பனைபோலவும், நெல் பதரைப்போலும் — நெற்பதரைப்போலவும், என்னை என்தான்படைத்தாய் — என்னை எதற்காகத்தான் படைத்தனை, என் கோவே — என் இறைவனே, தீண்டாத — தீண்டப்படாத, கல் ஆம் மிடா அதை — கல்லாகிய மிடாவை, நின் கைதடியால் — உன் கைத்தடியினால், மோதினால் அல்லால் — மோதினாலல்லது, குணங்குடி ஆகா — குணங்குடி கிடைக்கமாட்டாது. எ-று.

வி—ரை. நீண்ட ஆண் என்பது — நீண்டாணெனத் தொகுத்தல்பெற்றது. மிடா — சால், இது உடம்பைக் குறித்தது. (௯)

மெத்தத் துணிபோர்க்க மெத்தமெத் தக்குளிருஞ்
சற்றுதுணி போர்த்துவரச் சற்றுகுளிர்—இற்றதுணி

இல்லைக் குளிருமில்லை யில்லையிது தானுளமே
செல்லக் குணங்குடியார் சீர்.

ப-ரை. மெத்தத்துணி போர்க்க – மிகுதியாய்த் துணியைப் போர்த்துக்கொண்டால், மெத்த மெத்த குளிரும் – மெத்த மெத்தக் குளிர் எடுக்கும், சற்று துணிபோர்த்துவர – கொஞ்சங் துணியைப் போர்த்துக்கொண்டால், சற்று குளிர் – கொஞ்சங் குளிரெடுக்கும், இற்ற துணி இல்லை – இழிந்த துணியும் இல்லை, (யானால்) குளிரும் இல்லை இல்லை – குளிரும் சுத்தமாயில்லை, உளமே – மனமே, செல்லக் குணங்குடியார் சீர் – செல்லக் குணங்குடியாரது சிறப்பு, இதுதான் – இதுவேயாகும். எ-று. (எ)

குறையிரங்கியுரைத்தல் முற்றிற்று.

ஆ பாடல் - 240.

தவராஜ மகிமையைச் சாற்றல்.

நாகூர் மீரா சாகிபு அவர்கள்மீது பாடிய

பதினான்குசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

திக்குத் திகந்தமுங் கொண்டாடி யேவந்து
தீன்கூறி நிற்பர் கோடி
சிங்காச னதிபர்க ளதையேந்தி யேவந்து
ஜெயஜெயா வென்பர் கோடி
அங்கனருள் பெற்றபெரி யோர்களொலி மார்களணி
யணியாக நிற்பர் கோடி
அஞ்ஞான வேரறுத் திட்டமெய்ஞ் ஞானிக
ளணைந்தருகு நிற்பர் கோடி
மங்கந ராளும் முகம்மது ரசூல்தந்த
மன்னரே யென்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்கும்
மகிமைசொல வாயு முண்டோ
தங்கபெரி யோனருட் டங்கியே நிற்கின்ற
தவராஜ செம்மே ருவே
தயைவைத் தென்னையாள் சற்குணங் குடிகொண்ட
சாகுற் கமீத ரசரே.

ப-ரை. திக்கு திகந்தமும் – திக்குத் திகந்தங்களிலும், கொண்டாடியே வந்து – கொண்டாடிக்கொண்டே வந்து, தீன் கூறி நிற்பர் – தீன் சொல்லி

நிற்பவர்கள், கோடி — கோடிபேராகும், சிங்காசன அதிபர்கள் — சிங்காசனாதிபர்கள், அதை ஏந்தியே வந்து — அதைத் தாங்கிக்கொண்டே வந்து, ஜெய ஜெயா என்பர் — ஜெய ஜெயா என்பவர்கள், கோடி — கோடிபேராகும், அக்கன் அருள்பெற்ற — அக்கனது அருளைப்பெற்ற, பெரியோர்கள் — பெரியோர்களாகிய, ஒலிமார்கள் — ஒலிமார்கள், அணி அணியாக நிற்பர் — வரிசை வரிசையாக நிற்பவர்கள், கோடி — கோடிபேராகும், அஞ்ஞானம் — அஞ்ஞானத்தை, வேர் அறுத்திட்ட — வேரோடறுத்துவிட்ட, மெய்ஞ்ஞானிகள் — மெய்ஞ்ஞானிகளாய், அருகு அணைந்து நிற்பர் — அருகிலே அணைந்து நிற்பவர்கள், கோடி — கோடிபேராகும், மக்க நகர் ஆளும் — மக்க நகரத்தை ஆளுகின்ற, முகம்மது ரசூல் தந்த — முகம்மது ரசூல் பெற்ற, மன்னரே என்பர் — வேந்தரே என்று சொல்லுவோர்கள், கோடி — கோடிபேராகும், (இவர்களெல்லாரும்) வசனித்து நிற்க — புகழ்ந்து நிற்க, கொலுவீற்றிருக்கும் — கொலுவீற்றிருக்கின்ற, உம் மகிமை சொல்ல — உமது மகிமையைச் சொல்லுதற்கு, வாயும் உண்டோ — வாயும் உளதோ, தக்க பெரியோன் அருள் — தகுதியாகிய பெரியோனது அருளில், தங்கியே நிற்கின்ற — தங்கி நிற்கிற, தவராஜ — தவராஜனே, செம்மேருவே — சிவந்த மேருமலையே, தயையை வைத்து என்னை ஆள் — கிருபையை வைத்து என்னை ஆளக்கடவை, சற்குணம் குடிகொண்ட — நற்குணங் குடிகொண்ட, சாகுற்க மீதரசரே — சாகுற்க மீதரசரே. எ-று.

வி—ரை. திக்கு அந்தம் என்பது — திகந்தம் என வடமொழிச்சந்தி பெற்றது. கொண்டாடுதல் — புகழ்தல். அதை — அந்தச் சிங்காதனத்தை. அக்கன் — ஞானக்கண்ணுள்ளவனாகிய இறைவன். மக்கநகர் — ஒரு புண்ணிய தலம். (௧)

தவராஜமகிமையைச்சாற்றல் முற்றிற்று.

ஆ பாடல் - 241.

வரளருள் பெற்றோர் மனநிலை யுரைத்தல்.

கலி விருத்தம்.

வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்
விஞ்ச வேதழல் மூட்டி யெரிக்கினு
நஞ்சி னாரழ லாக நலியினும்
அஞ்சி டாதவ ரானந்த மாவரே.

ப—ரை. வஞ்ச வேல் கொடு — வஞ்சகமுள்ள வேலாயுதத்தைக்கொண்டு, மார்பில் எறியினும் — மார்பில் எறிந்தாலும், விஞ்ச — மிகுதியாக, தழல் மூட்டி எரிக்கினும் — நெருப்பு மூட்டி யெரித்தாலும, நஞ்சின் ஆர் அழல் -

நஞ்சாகிய மிக்க அழலையுடைய, நாகம் நலியினும் — பாம்பு வருத்தினாலும், அஞ்சிடாதவர் — பயப்படாதவர், ஆனந்தம் ஆவர் — இன்பவடிவமாவர். எ-று.

வி—ரை. வேல்கொண் டெறியினும் நெருப்பில் வீழ்த்தினும் பாம்பு கடித்தாலும் மனங்கலங்கா திருப்பவர் இன்ப உருவாவர் என்பது கருத்து. விஞ்சுதல் — அதிகரித்தல். (அ)

வரனருள்பெற்றோர் மனநிலையுரைத்தல் முற்றிற்று.

ஆ பாடல் - 242.

ஆனந்தக்களிப்பு.

இரங்கத் துணிந்துகொண் டேனே-எனக்
கிருக்குங் குறைமுழு தும் நிகழ்த்திக் கொண்டேனே (இரங்கத்)

ப—ரை. இரக்கத் துணிந்துகொண்டேனே — இரக்கத் துணிந்துவிட்டேனே, எனக்கு இருக்கும் குறை முழுதும் — எனக்கு இருக்கிற குறை முழுதையும், நிகழ்த்திக்கொண்டேனே — சொல்லிக்கொண்டேனே, எ-று.

வி—ரை. இரத்தல் — யாசித்தல்.

கொடிகட்டிக் கொண்டெழுகோடி-தனங்-குவித்தந்த மகிழ்ச்சியாற் கூத்துநாடி; கெடுபுத்தி யுடையோரைக் கூடி-யானுங்-கெட்டலை யாமலே கெதிபெற நாடி—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. கொடி கட்டிக்கொண்டு — துசங் கட்டிக்கொண்டு, எழுகோடி தனம் குவித்து — எழுகோடி திரவியத்தைச் சேர்த்து, அந்த மகிழ்ச்சியால்-அந்த சந்தோஷத்தால், கூத்துகள் ஆடி — கூத்தாடி, கெடு புத்தி உடையோரை கூடி — கெட்ட புத்தி யுடையோரைச் சேர்ந்து, யானும் கெட்டு அலையாமல் — நானும் கெட்டலையாமல், கெதிபெற நாடி — நற்கதியைப்பெற விரும்பி—, (இரக்க) எ-று.

வி—ரை. கெதி — மோக்ஷம். (க)

சொற்கடங் நாச்சுக ஞானம் — தன்னிற் - சும்மாவிருக்குஞ் சுகமந்த மோனம், எட்கிடை யாயினும் பானந்-தன்னை-எடுத்துண் டிருப்பதற் கிச்சித்தே யானும்—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. சொற்கு அடங்கா — சொல்லுக்கு அடங்காத, சுகம் ஞானம் தன்னில் — சுகஞானத்தில், சும்மா இருக்கும் — சும்மா இருக்கிற, சுகமதே - சுகமே, மோனம் - மௌன நிலையாம், எள் இடை ஆயினும் — எள்ளளவாயினும், பானம் தன்னை — அமிர்தபானத்தை, எடுத்து உண்டு இருப்பதற்கு - எடுத்துப் பருகியிருப்பதற்கு, இச்சித்து — விரும்பி, யானும் — நானும்—, (இரக்க) எ-று.

வி—ரை. பானம் — குடித்தல். (உ)

வஞ்சிய ராசையைத் தாட்டி-வீட்டு-வழிபெற்றுக் களிப்புற்று வாசியைப் பூட்டி, துஞ்சாத வறிவினைச் சூட்டி-அற்பத்-தொல்லுல காசை துணித்துவிட்டோட்டி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. வஞ்சியர் ஆசையைத்தாட்டி — மாதராசையைக்கடந்து, வீட்டு வழி பெற்று — மோட்சமார்க்கத்தைப் பெற்று, களிப்பு உற்று — களிப்பை அடைந்து, வாசியைப்பூட்டி — வாசியைப்பூட்டி, துஞ்சாத அறிவினை சூட்டி- கெடாத அறிவினைச் சூடுவித்து, அற்பம் — அற்பமாகிய, தொல் உலகு ஆசை — பழமையாகிய உலக ஆசையை, துணித்துவிட்டு ஓட்டி — அறுத் தோட்டி—, (இரக்க) எ-று.

வி—ரை. வஞ்சியர் — கொடிபோல்பவராகிய மாதர்; இது உவமையாகு பெயர். துஞ்சாத அறிவு — மெய்யுணர்வு. (௩)

அஞ்சுதூ ணுட்டிய மாடி-அது-அஞ்சோடு நால்லோட்டை யடையாமலோடி, பிஞ்சழிந் திடுமென்று நாடி - யானும் - பேரின்ப வீட்டினைப் பிரியமாய்த் தேடி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. அஞ்சு தூண் நாட்டிய — அஞ்சு தூண்களை நாட்டிய, மாடி - மாளிகை, அது — அது, அஞ்சோடு நால் ஓட்டை அடையாமல் — அஞ்சுடன் நான்கு ஓட்டைகளைப் பெறுமல், ஓடி — விரைந்து சென்று, பிஞ்சு அழிந்திடும் என்று நாடி — பிஞ்சு கெட்டுப்போம் என்று ஆராய்ந்து, யானும் - நானும், பேரின்ப வீட்டினை — பேரின்ப வீட்டை, பிரியமாய் தேடி — அன்போடு தேடி—, (இரக்க) எ-று.

வி—ரை. அஞ்சு தூண் — பஞ்சேந்திரியங்கள். அஞ்சோடு நால் ஓட்டை- ஒன்பது துவாரங்கள், இதை நவத்துவாரம் என்பர் வடநூலார். (௪)

நற்பூச்சுந் தநவத்தர் பூசி - மிக - நன்றாக வைத்தாலு நாற்றமே வீசி, எப்போதுங் கொடுமைசெய் தோசி - என்றே - இவ்வுடல் வாழ்வுக ளியாவையும் வீசி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. நல்பூ — நல்ல புஷ்பங்களை அணிந்து, சந்தனம் அத்தர் பூசி — சந்தனத்தையும் அத்தரையும் பூசி, மிக நன்றாக வைத்தாலும் — மிகவும் நன்றாக வைப்பினும், நாற்றமே வீசி — துர்க்கந்தமே வீசி, எப்போதும் — எப்பொழுதும், கொடுமைசெய்—கொடுமையைச் செய்கின்ற, தோசி என்றே — தோசி யென்று எண்ணியே, இவ்வுடல் வாழ்வுகள் யாவையும் — இச்சரீர வாழ்க்கையும், வீசி — அறுத்து—, (இரக்க.) எ-று.

வி—ரை. அத்தர் — ஓர் வாசனைத் தைலம். (ரு)

மாளிகை மேல்வீடு கட்டி - மனை - வாழ்வை நிலையென்று வாழ் கின்ற மட்டி, நாளை யெமன்வந்த தட்டிக் - கொண்டு - நடப்பானென் றறியானை யடுப்பதை வெட்டி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. மாளிகைமேல் வீடுகட்டி - மாளிகையாகிய மேல் வீட்டைக் கட்டி, மனைவாழ்வை — இல் வாழ்க்கையை, நிலையென்று—நிலையானதென்று எண்ணி, வாழ்கின்ற — வாழாநின்ற, மட்டி — மட்டி, நாளை — நாளையத்தினம், எமன் வந்து அதட்டி — எமன் வந்து அதட்டி, கொண்டு நடப்பான் என்று— கொண்டு செல்லுவான் என்று, அறியானை — அறியாதவனை, அடுப்பதை— சார்ந்திருப்பதை, வெட்டி — அறுத்து—, (இரக்க.) எ-று.

வி—ரை. மட்டி — மூடன். (௬)

பட்டும் பணிகளும் பூண்டு - கொண்டு - பாழான வாழ்வினைப் பலனென வாண்டு, கெட்டவர் களைக்கண்டு மீண்டு - கதி - கிடைக்கும்படிக்கு நடப்பதற்கீண்டு—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. பட்டும் — பட்டாடைகளையும், பணிகளும் — ஆபரணங்களையும், பூண்டு கொண்டு — தரித்துக்கொண்டு, பாழான வாழ்வினை — பாழான வாழ்வை, பலன் என ஆண்டு — பயன் தருவதென்று எண்ணி ஆண்டு, கெட்டவர்களை — அழிந்தவர்களை, கண்டு — பார்த்து, மீண்டு — திரும்பி, கதி கிடைக்கும்படிக்கு — கதி கிடைக்கும் பொருட்டு, நடப்பதற்கு — நடத்தற் பொருட்டு, ஈண்டு — இவ்வுலகத்தில்—, (இரக்க.) எ-று.

வி—ரை. வாழ்வு — செல்வம். பலன் — பிரயோசனம். (எ)

காமக்கு ரோதங்க ளற்று - சூழும் - கருவிக ரணஞ்ச கலமு மற்று, நேம நிஷ்டைகளையு மற்று - நின்ற - நிலையு மறந்து குருவடி பெற்று—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. காமக் குரோதங்கள் அற்று — காமக் குரோதங்கள் ஒழிந்து, சூழும் — சூழுகின்ற, கருவி கரணம் சகலமும் அற்று — கருவி கரணங்கள் முழுதும் ஒழிந்து, நேம நிஷ்டைகளையும் அற்று — நியம நிஷ்டைகளையும்

ஒழிந்து, நின்ற நிலையும் மறந்து — நின்ற நிலையையு மறந்து, குரு அடி பெற்று — சற்குரு திருவடியைப்பெற்று—, (இரக்க.) எ-று.

வி-ரை. காமக்குரோதங்கள் — விருப்பு வெறுப்புக்கள். கருவி—தொண்ணூற்றாறு. கரணம் — நான்கு. (அ)

எத்தனை யெத்தனை காலம் - இந்த - என்பு தசையா லெடுக்கின்ற தூலம், மெத்தென வாழுமிந் ஞாலம் - அதை - மேவாது மேவாதெ டுத்திந்தக் கோலம்—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. எத்தனை எத்தனை காலம் — எத்தனை எத்தனை காலமும், இந்த என்பு தசையால் — இந்த எலும்பு தசைகளால், எடுக்கின்ற தூலம் — எடுக்கின்ற சரீரம், மெத்தென வாழும் — மெல்ல வாழாநிற்கும், இ ஞாலம் — இந்த உலகம், அதை மேவாது மேவாது — அதைப் பொருந்தாது பொருந்தாது, (ஆகையால்) இந்தக் கோலம் எடுத்து — இந்த வேஷத்தைப்பூண்டு—, (இரக்க.) எ-று.

வி—ரை. தசை — மாமிசம். தூலம் — தூலசரீரம். (க)

என்னிலே தன்னைய றிந்தே - என்னுள் - இருந்தாடுஞ் சூத்திரம் பொருந்திட மறிந்தே, அன்னிய நிலைகளைத் துறந்தே - குரு - அருளினு லநுதின மருளெலா மறிந்தே—இரக்கத்துணிந்துகொண்டேனே.

ப-ரை. என்னிலே தன்னை அறிந்து — என்னிலே தன்னை அறிந்து, என் உள் இருந்து ஆடும் சூத்திரம் — என்னுள்ளே இருந்து ஆடுகிற சூத்திரமானது, பொருந்து இடம் அறிந்து — பொருந்துகிற இடத்தை அறிந்து, அந்நிய நிலைகளை துறந்து — வேறான நிலைகளைவிட்டு, குரு அருளினால் — குரு கிருபையினால், அநுதினம் — நாள்தோறும், மருள் எல்லாம் — மருள் முழுதும், மறிந்து — இரக்கப்பெற்று—, (இரக்க.) எ-று.

வி-ரை. சூத்திரம் — தந்திரம். மருள் — மயக்கம். (௧0)

ஆழித்து ரும்பென வங்கும் - இங்கும் - அலைந்து திரிவதனலஞ் ஞானந் தங்கும், பாழிற் கெடாதருள் பொங்கும் - படி - பார்த்துத் துணிந்து பரதேசமெங்கும்—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. ஆழி துரும்பு என — கடலில் துரும்புபோல, அங்கும் இங்கும் அலைந்து திரிவதனால் — அங்கும் இங்குமாக அலைந்து திரிவதினால், அஞ்ஞானம் தங்கும் — அஞ்ஞானம் தங்குகின்ற, பாழில் — பாழ் வழியில், கெடாது — அழியாமல், அருள் பொங்கும்படி பார்த்து — திருவருள் பொங்கும்படி நோக்கி, துணிந்து — நிச்சயித்து, பரதேசம் எங்கும் — பரதேசம் எல்லாம்—, (இரக்க.) எ-று.

வி—ரை. ஆழி — ஆழமாயிருப்பது. துரும்பு — திரணம். பரதேசம் — வேறு தேசம். (௧௧)

காடுங் கரையுஞ்சு ழன்று - ஒரு - காட்சியுங் காணேமென வே யுழன்று, தேடும் பருவத்திற் சென்று - திக்குத் - திசை யொன்றுந் தெரியாமற் றெளிதற்கு நின்று—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. காடும் கரையும் சுழன்று — காட்டிலும் கரையிலும் சுழன்று, ஒரு காட்சியும் காணேம் — ஒரு காட்சியும் கண்டிலோம், எனவே உழன்று — என்றே யுழன்று, தேடும் பருவத்தில் சென்று — தேடும் பருவத்தில் போய், திக்கு திசை ஒன்றும் தெரியாமல் — திக்குத் திசை யொன்றும் அறியாமல், தெளிதற்கு நின்று — தெளியும் பொருட்டு நின்று —, (இரக்க.) எ-று.

வி-ரை. கரை — நதிக்கரை. காட்சி — பயன். (௧௨)

ஆடிய கூத்தினைப் போற்றி - அருள் - ஆனந்தஞ் சேரற்கரு ளினிற் றோற்றி, ஓடிய காற்றினை யேற்றி - அதில் - உருகியொழுகு மமிர்தத்தைத் தேற்றி—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. ஆடிய கூத்தினைப் போற்றி — ஆடின கூத்தை வணங்கி, அருள் ஆனந்தம் சேரற்கு — அருளானந்தத்தை யடைதற்கு, அருளினில்தோற்றி — அருளின் கண் உதித்து, ஓடிய காற்றினை — ஓடுகின்ற காற்றை, ஏற்றி — மேலேறச் செய்து, அதில் உருகி ஒழுகும் — அதனின்றும் உருகி ஒழுகா நின்ற, அமிர்தத்தை தேற்றி — அமிர்தத்தைத் தெளியச் செய்து—, (இரக்க.) எ-று.

வி—ரை. அருள் ஆனந்தம் — அருளினு லுண்டாவதாகிய இன்பம். (௧௩)

நாலிரண் டரைமுழ மான - பிண - நாற்றச் சடிலத்து ணானென் று ஞானக், கோலம் விளங்கிய மோன - அருள் - குருவடி திரு வடி வுருவத்தை மான—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. நால் இரண்டரை முழம் ஆன — நான்கு இரண்டரை முழம் ஆகிய, பிணம் நாற்றம் — பிணநாற்றத்தை யுடைய, சடிலத்துள் — சரீரத் துள்ளே, நான் என்று — நான் என்று, ஞானக்கோலம் விளக்கிய — ஞானக் கோலத்தை விளங்கச் செய்த, மோனம் — மௌனநிலையுள்ள, அருள் குரு அடி — அருளுருவமாகிய குருவின் திருவடியின், திருவடிவு உருவத்தை மான — அழகிய வடிவினது ரூபத்தை நிர்க்க—, (இரக்க.) எ-று.

வி—ரை. நால் இரண்டு — எட்டு. அரைமுழம் — சாண். (௧௪)

எறியும கத்தைத் தடுத்தே - அதில் - இச்சித்துப் பசுபதிக வைத்த டுத்தே, அறிவைக்கொண் டறிவைத் தொடுத்தே - அருள்-

ஆனந்தஞ் சேர்க்கின்ற வருளினை யெடுத்தே—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. எறியும் அகத்தை தடுத்து—எம்மை எறிகின்ற பாவத்தைத் தடுத்து, அதில் இச்சித்து—அதில் இச்சைவைத்து, பட்சம்—அன்பை, மிக வைத்து அடுத்து—மிகவும் வைத்து அணைந்து, அறிவை கொண்டு அறிவை தொடுத்து—அறிவைக் கொண்டு அறிவைக் கோத்து, அருள் ஆனந்தம் சேர்க்கின்ற—அருளானந்தத்தைக் கூட்டுகின்ற, அருளினை எடுத்து—அருளையெடுத்துப் புகழ்ந்து—, (இரக்க.) எ-று.

வி—ரை. எறிதல்—வருத்துதல். அகம்—பாவம். (கரு)

பாரினிற் பலவிதங் காட்டி—நல்ல படிகத்தின் குணமெனப் பரவொளி சூட்டி, ஆரிய னருளினைக் கூட்டி—குரு—அருள்செய்த வுடனேயென் வினைகளை யோட்டி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. பாரினில்—உலகத்தில், பலவிதம் காட்டி—பல வகைகளுங் காட்டி, நல்ல படிகத்தின் குணம் என—நல்ல படிகத்தின் குணம்போல, பர ஒளி சூட்டி—பர ஒளியைச் சூட்டி, ஆரியன் அருளினை கூட்டி—ஆரியனது அருளைச் சேர்த்து, குரு—சற்குருவானவர், அருள் செய்த உடனே—அருள் செய்த மாத்திரத்தில், என் வினைகளை ஓட்டி—என் வினைகளைத் துரத்தி—, (இரக்க.) எ-று.

வி—ரை. படிகம்—படிகக்கல். படிகத்தின் குணம்—தனக்கெதிர்ப்பட்ட பொருளைத் தன்னுள்ளே கொண்டு காட்டுதல். (கசு)

மண்டப வுள்ளறைவிண்டு—வரும்—மாமண மூறிய தேமது வுண்டு, உண்டுகளிப்போரைக் கண்டு—யானும்—உள்ளத்திருக்கினைத் தள்ளிக்கைக் கொண்டு—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. மண்டபம்—மண்டபத்தின், உள் அறை—உள் அறையானது, விண்டு—திறந்து, வரும்—வருகின்ற, மாமணம் ஊறிய—பெரிய மணம் சுரந்த, தேம்மது உண்டு உண்டு—இனிய மதுவைப் பருகிப் பருகி, களிப்போரைக் கண்டு—களிப்பவர்களைப் பார்த்து, யானும்—நானும், உள்ளத் திருக்கினை—மனத்தின் மாறுபாட்டை, தள்ளி—விலக்கி, கைக்கொண்டு—கையிலேற்று—, (இரக்க.) எ-று.

வி—ரை. உள் அறை—உள் வீடு. விள்ளல்—திறத்தல். திருக்கு—மாறுபாடு. (கஎ)

மாதவந் தன்னைப் புரிந்து—ரச—வாதங்கள் செய்கிறோமென்று திரிந்து, சூதோடு வாதைப் புரிந்து—கெட்ட சூதரைச் சத்திய மாகப் பிரிந்து—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. மாதவம் தன்னை புரிந்து—பெருந் தவத்தைச்செய்து, ரச வாதங்கள் செய்கிறோமென்று திரிந்து—ரசவாதங்கள் செய்வோமென்று திரிந்து, சூதோடு வாதுபுரிந்து—சூதுடனே வாதுகளைச்செய்து, கெட்ட—அழிந்த, சூதரை—சூதர்களை, சத்ரியமாகப் பிரிந்து—உண்மையாகவிட்டு நீங்கி—, (இரக்க.) எ-று.

வி-ரை. ரசவாதம்—இரும்பு முதலிய லோகங்களைப் பொன்னாகச் செய்யும் வித்தை. (கஅ)

பொறிபுல னடங்கிய காலே - பரி - பூரணப் பொருள் வந்து வாய்க்கு மப்பாலே, அறிஞரு மறியாது போலே — காணும் - ஆனந்த வெள்ளத்தி னாடின தாலே—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. பொறிபுலன்—பொறி புலன்கள், அடங்கிய காலே—அடங்கினபோதே, பரிபூரணப் பொருள் வந்து வாய்க்கும்—பரிபூரணப் பொருள் வந்து கிடைக்கும், அப்பாலே — அதன்பிறகு, அறிஞரும் — பெரியோர்களும், அறியாதுபோல காணும்—அறியாதுபோலக் காணப்படுகிற, ஆனந்த வெள்ளத்தின் — இன்பப் பெருக்கில், ஆடினதாலே — மூழ்கினதனால்—, (இரக்க.) எ-று.

வி-ரை. பொறி—ஐம்பொறிகள். அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி, என்பன. புலன்—ஐம்புலன்கள். அவை: சத்த, பரிச, ரூப, ரச கந்தங்கள். (கக)

நினைவுங் கனவும றந்து - நின்ற - நிலையு மலங்கெழு கலையு மறந்து, இனமு மனமும் மறந்து - பின்னர் - இதனிடைத் தோற்றிய விதங்களு மறந்து—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. நினைவும் கனவும் மறந்து—நினைப்பும் கனவும் மறந்து, நின்ற நிலையும் மறந்து—நின்ற நிலையையும் மறந்து, எழு கலையும் மறந்து—உண்டாகின்ற கலைகளையும் மறந்து, இனமும் மனமும் மறந்து—இனத்தையும் மனத்தையும் மறந்து, பின்னர்—பிறகு, இதனிடை தோற்றிய—இதன் கண்ணே தோன்றின, விதங்களும் மறந்து—வகைகளும் மறந்து—, (இரக்க) எ-று.

வி-ரை. கனவு—சொப்பனம். கலை—சூரியகலை சந்திரகலை. (உ0)

கற்பட்டுப் பாய்கின்ற தோயம் - போலக் - காட்டி மறைக்கும் பிர பஞ்சமாயம், அற்பர்க்குத் தெரியாது பாயம் - என்று - ஆலோசனைசெய்த நியுமுன்காயம்—இரக்கத்துணிந்து கொண்டேனே.

ப-ரை. கல்பட்டு பாய்கின்ற—கல்லில் பட்டு பாய்கின்ற, தோயம் போல—நீர்போல, காட்டி மறைக்கும்—காட்டி மறைக்கின்ற, பிரபஞ்ச மாயம்—உலகமாயம், அற்பர்க்கு தெரிபாது—அற்பருக்குத் தெரியாது,

உபாயம் என்று – உபாயம் என்று, எண்ணி – ஆலோசனை செய்து, காயம் அழியுமுன் – சரீரம் அழியுமுன்னே—, (இரக்க.) எ-று.

வி-ரை. கல்பட்டு – கல்லில் மோதி. தோயம் – வடசொல். (௨௧)

என்னையானென் றறியாத பாடு - என்னை - இக்கோல மாக்கிய தேயதன் கேடு, தனையானு மெதிர்க்கையி னோடு - கொண்டு - சாபத் துட னடந்துகோ பத்தோடு—இரக்கத் துணிந்துகொண்டேனே.

ப-ரை. என்னை யான் என்று – என்னை நான் என்று. அறியாதபாடு - அறிந்து கொள்ளாத பெருமை, என்னை இக்கோலம் ஆக்கியது – என்னை இந்தக்கோலம் ஆக்கிவிட்டது, அதன் கேடுதன்னை – அதன் கெடுதியை, யானும் எதிர்க்கையின் – நானும் எதிர்ப்படுதலால், ஓடுகொண்டு – ஓட்டை ஏந்தி, சாபத்துடன் நடந்து – சாபத்தோடு நடந்து, கோபத்தோடு—கோபத் துடனே—, (இரக்க.) எ-று.

வி-ரை. பாடு – பெருமை. கோலம் – வேஷம். (௨௨)

விண்ணுக்குள் வெளியிருண் மாற்றி - அதில் - வேதாந்தமூல விளக்கினை யேற்றிக், கண்ணுக்குண் மணியாகத் தோற்றி - வரும் - காரண மானக டவுளைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண் டேனே.

ப-ரை. விண்ணுக்குள் – ஆகாயத்துக்குள்ளே, வெளி இருள் மாற்றி - வெளி இருளை நீக்கி, அதில் – அதிலே, வேதாந்தம் – வேதாந்தமாகிய, மூல விளக்கினை ஏற்றி – மூலவிளக்கை ஏற்றி, கண்ணுக்குள் மணியாகத் தோற்றி வரும் – கண்ணுக்குள்ளே மணிபோலக் காணப்பட்டு வருகிற, காரணம் ஆன – காரணமாகிய, கடவுளைப்போற்றி – கடவுளை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி-ரை. வெளி இருள் – புறத்திருள். (௨௩)

எல்லாரு மானிடர் தாமோ - இந்த - இழிவான பிரமைக ளெல்லார்க்கும் போமோ, கல்லெல்லா மாணிக்க மாமோ - என்று - கற்பித்த காரண குருவடி போற்றி—இரக்கத் துணிந்து கொண் டேனே

ப-ரை. எல்லாரும் – யாவரும், மானிடர் தாமோ – மனுடர் தாமோ, இந்த இழிவான பிரமைகள் – இந்த இழிவான பிரமைகள், எல்லார்க்கும் போமோ – எல்லார்க்கும் நீங்குமோ, கல் எல்லாம் – கற்கள் எல்லாம், மாணிக்கம் ஆமோ – மாணிக்கமாகுமோ, என்று கற்பித்த – என்று எனக் குக் கற்பித்த, காரணகுரு அடிபோற்றி – காரண குருவின் திருவடி வணங்கி—, (இரக்க.) எ-று.

வி-ரை. மானிடர் – மனிதர். பிரமை – மயக்கம். (௨௪)

நாதமுங் கீதமுங் கேட்கும் - அந்த நாயகன் சந்நிதி தன்னிடை சேர்க்கும், மாதவ நன்னிலை யாக்கும் - நல்ல மாசறு தேசிகன் பொற்பதம்போற்றி—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. நாதமும் கீதமும் கேட்கும் – நாதமும் கீதமும் கேட்கப்படும், அந்த நாயகன் – அந்த இறைவனது, சந்நிதி தன்னிடை – சந்நிதியில், சேர்க்கும் – கூட்டும், மாதவம் – பெருந்தவமாகிய, நல் நிலை – நல்ல நிலையை, ஆக்கும் – உண்டாக்கும், நல்லமாசு அறும் – நல்ல களங்கம் அற்ற, தேசிகன் பொற்பதம் – குருநாதனது பொன்னடியை, போற்றி – வணங்கி—,(இரக்க.) எ-று.

வி-ரை. நாதமும் கீதமும் – ஓசையும் பாட்டும். (உ௯)

கட்டுப் படுங்கன்மக் குட்டை - வரும்-காலத்தச் சன்கையால் வெட்டிடுங் கட்டை, துட்டத் தொழில்படைத்த மட்டை-இந்தத்-தூலமென் றெண்ணிக்கு ருவருள் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. கட்டுப்படும் – கட்டப் படுகின்ற, கன்மக் குட்டை – கருமக் குட்டை, வரும் – வரப்போகிற, காலத்தச்சன் – காலனாகிய தச்சன், கையால் – தன் கையினால், வெட்டிடும் கட்டை – வெட்டுகிற கட்டை, துட்டத் தொழில்படைத்த மட்டை – துட்டத் தொழிலைக் கொண்டிருக்கிற மட்டை, இந்ததூலம் என்று எண்ணி – இந்தத் தூலசரீரம் என்று நினைத்து, குரு அருள்போற்றி – குருவருளை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி-ரை. குட்டை – சிறுபள்ளம். காலன் – யமன். துட்டத் தொழில் – கெட்டதொழில். மட்டை – மூடன். (௩௰)

போக்கு வரவற்ற போதம்-பஞ்ச-பூதாதி யாலடங் காதெழு நாதம், வாக்கி லமையாத வேதம்-தன்னை-வடித்துப்புகட்டு மகத்துவைப் போற்றி—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. போக்கு வரவு அற்ற போதம் – போக்கு வரவில்லாத ஞானம், பஞ்சபூதாதியால் – பஞ்சபூதாதிகளால், அடங்காது – அடங்காது, எழும் - உண்டாகின்ற, நாதம் – நாதம், வாக்கில் அமையாத வேதம் தன்னை – வாக்கிற் பொருந்தாத வேதத்தை, வடித்து புகட்டும் – வடித்துப் புகட்டுகின்ற, மகத்துவைபோற்றி – மகாத்துமாவை வணங்க—, (இரக்க.) எ-று.

வி-ரை. வடித்துப் புகட்டுதல் – தெளிவித்து ஊட்டுதல். (௩௧)

நரம்பு தசைதோ லெலும்பு - கொண்டு - நாட்டும் வினைகளுக் காட்டுந் துரும்பு, நிரம்புந் துயர்கொளு டம்பு-என்று-நில்லாதென் றென்னுப ரல்லாவைப் போற்றி—இரங்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. நரம்பு தசை தோல் எலும்பு கொண்டு — நரம்பும் தசையும் தோலும் எலும்புமாகிய இவற்றைக்கொண்டு, நாட்டும் — நிலைநிறுத்தப்பட்ட வினைகளுக்கு ஆட்டும் துரும்பு — வினைகளால் ஆட்டப்படுகிற துரும்பு, நிரம்பும் துயர்கொள் உடம்பு — நிறைந்த துன்பத்தைக் கொண்ட உடம்பு, என்றும் — எக்காலமும், நில்லாது என்று — நில்லாதென் றறிந்து, என் — எனது, உயர் — உயர்ந்த, அல்லாவை போற்றி — அல்லாவை வணங்கி—, (இரக்க.) என்றவாறு.

வி—ரை. அல்லா — இறைவன். (௨அ)

ஆழித் திரளெனப் பொங்கும் - அருள்-ஆனந்தஞ்சேர்க்கு மறிவிற்க டங்கும், நாளுங்கு நாளங்கு மிங்குஞ் - சற்றும் - நாதாந்த வேதாந்த நாதனைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. ஆழி திரள் எனபொங்கும் — கடற்கூட்டம்போலப் பொங்குகிற, அருள் ஆனந்தம் சேர்க்கும் — அருளானந்தத்தைச் சேர்க்கும், அறிவிற்கு அடங்கும் — அறிவுக்கு அடங்கும், நாளுக்கு நாள் — நாளுக்கு நாளாக, அங்கும் இங்கும் — அங்குமிங்குமாய், சற்றும் — சிறிதாயினும், நாதாந்தவேதாந்த நாதனைப்போற்றி — நாதாந்த வேதாந்தநாதனை வணங்கி—, (இரக்க) எ-று.

வி—ரை. நாதாந்தம் — நாதமுடிவு. வேதாந்தம் — வேதமுடிவு. (௨௯)

இன்றைக் கிருப்பதும் பொய்யே - இனி - இன்றைக்கிருப்பது மெய்யென்ப தையே, என்று மிருப்பது மெய்யே-என-எண்ணியெண் ணியருளுண்மையைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. இன்றைக்கு இருப்பதும் பொய்யே — இன்றைக் கிருப்பதுவும் பொய்யேயாகும், இனி-இனி, நாளைக்கு இருப்பது மெய்யென்பதையே - நாளைக்கிருப்பது உண்மை யென்பதையே, என்றும் இருப்பது மெய்யே — என்று மிருப்பது உண்மையே, என எண்ணி எண்ணி — என்று நினைத்து நினைத்து, அருள் உண்மையை போற்றி — அருளாகிய உண்மையை வணங்கி—, (இரக்க.) எ-று. (௩0)

பார்க்கப் பலவித மாயும்-ஆகப்-பல்லாயி ரங்கோடி யண்டமதாயும், காக்கு நிலைக்குயி ராயும் - நின்ற - காரண பூரணநா தனைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. பார்க்க — நோக்குமிடத்தில், பலவிதம் ஆயும் — பலவிதமாகியும், ஆக — ஆக, பல் ஆயிரம் கோடி அண்டங்கள் ஆயும் — பல ஆயிரங் கோடி அண்டங்களாகியும், காக்கும் நிலைக்கும் உயிர் ஆயும் — அவற்றை காக்கின்ற நிலையில் உயிராகியும், நின்ற — நிலைபெற்ற, காரண பூரண நாதனை போற்றி — காரண பூரண நாதனை வணங்கி—, (இரக்க) எ-று.

வி—ரை. உயிர் — அந்தராத்மா. காரணம் — மூலம். பூரணம் — நிறைவு. ()

கரும்புசர்க் கரைகற்கண் டாலே - பாகங் - காய்ச்சி யெடுத்துத் திரட்டிய பாலே. அரும்பாவிக் கருத்துங்கை யாலே - அணைத்-தாட் கொளு நாயகன் றாள்களைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண் டேனே.

ப—ரை. கரும்பு சர்க்கரை கற்கண்டாலே — கரும்பு சர்க்கரை கற்கண்டு என்பவற்றாலே, பாகம் காய்ச்சி எடுத்து — பாகமாய்க் காய்ச்சி யெடுத்து, திரட்டிய பாலே — திரட்டின பாலே, அரும்பாவிக்கு — அரும் பாவியாகிய எனக்கு, அருத்தும் கையாலே — உண்பிக்கிற கையினால், அணைத்து ஆட்கொளும் — அணைத்தாட்கொள்கிற, நாயகன் — தலைவனது, தாள்களை போற்றி — திருவடிகளை வணங்கி—, (இரக்க) எ-று.

வி—ரை. திரட்டுதல் — திரளச்செய்தல். அருத்துதல் — உண்பித்தல்.

கற்பங்க ளுண்டோநா மென்றே - வெறி - கஞ்சாவுங் கள்ளு மபினியுந்தின்றே, துப்புங்கெட் டலையாம னின்றே - அருள் - தூய மெய்ஞ் ஞானச் சுடரினைப்போற்றி—இரக்கத் துணிந்து கொண் டேனே.

ப—ரை. கற்பங்கள் — காயகற்பங்களை, நாம் உண்டோம் என்று — நாம் உண்டிருக்கிறோமென்று, வெறி — மயக்கத்தைச் செய்கிற, கஞ்சாவும் — கஞ்சாவையும், கள்ளும் — கள்ளையும், அபினியும் — அபினியையும், தின்று — உண்டு, துப்புகெட்டு அலையாமல் நின்று — திறமைகெட்டுத் திரியாமல் நின்று, அருள் — அருள் செய்கிற, தூய மெய் ஞானச்சுடரினை போற்றி — பரிசுத்தமான மெய்ஞ்ஞான ஒளியை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி—ரை. கற்பங்கள் — உடம்பழியாமல் நெடுங்காலம் நிலைத்திருக்கச் செய்கிற வனமூலிகை முதலாயின. (௩௩)

கருவி வழிதனி லோடி - யானுங் - கால்களு மோய்ந்து விடா மலே தேடி, அருவிக்க யர்ந்துளம் வாடி - அலை - யாமலெனக் கருள் வாமனைப்போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. கருவி வழிதன்னில் ஓடி — கருவிவழியாலோடி, யானும் — நானும், கால்களும் ஓய்ந்தும் — கால்களும் அயர்ந்தும், விடாமலே தேடி — விட்டுவிடாமலே தேடி, அருவிக்கு அயர்ந்து — அருவிக்கு அயர்ந்து, உள்ளம் வாடி — மனம்வாடி, அலையாமல் — அலையாதபடி, எனக்கு அருள்—எனக்கருள் செய்த, வாமனை போற்றி — அழகனை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி—ரை. கருவி — கருவிகள். அவை தொண்ணூற்றாறு; இவற்றுள் புறக்கருவி — அறுபது, அகக்கருவி — முப்பத்தாறு. வாமம் — அழகு. வாமன்— அழகையுடையவன். (௩௪)

நாசி நுனியிடை நின்று - நல்ல - நடனம்பு ரிவதைக் கலீர் கலீ ரென்று, வாசியி லேறிக்கொண் டின்று - காண - வைத்த குரு பர னற்றாளைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. நாசி நுனி இடை நின்று—நாசிநுனியில் நின்று, நல்ல நடனம் புரிவதை—நன்மையாகிய நடனஞ் செய்வதை, கலீர் கலீர் என்று—கலீர் கலீர் என்று, வாசியில் ஏறிக்கொண்டு—வாசிமீதேறிக்கொண்டு, இன்று காணவைத்த—இன்று காணும்படிவைத்த, குருபரன்—குருநாதனது, நல்தாளை போற்றி—நல்ல திருவடியை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி—ரை. நடனம் புரிவதைக் காணவைத்த என்று இயைத்துக்கொள்க. நல் தாள்—நல்ல திருவடி. இவ்வாறு கூறியது பிறவிக்கடலைக் கடப்பித்தற்கு மரக்கலம் போன்றிருத்தலா லென்க. (௩௫)

தேடிய பொருள் புதைப் போரும் - தேசா - தேசங்கள் ராஜாங்க மாண்டிருப் போரும், ஈடெனக் கில்லையென் போரும் - செத் - திறப்போரென் றேமனந் திறப்படப் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப—ரை. தேடிய பொருள் புதைப்போரும்—தேடிய பொருளைப் புதைத்து வைப்பவர்களும், தேசா தேசங்கள்—தேசாதேசங்களை, ராஜாங்கம் ஆண்டிருப்போரும்—அரசாட்சிசெய்துகொண்டிருப்பவர்களும், ஈடெனக்கு இல்லை என்போரும்—எனக்குச் சமானமில்லை யென்பவர்களும், செத்து இறப்போர் என்றே—செத்துப்போகிறவர்களென்றே, மனம் திறப்பட—மனம் உறுதிப்பட, போற்றி—குருநாதனை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி—ரை. புதைத்தல்—மூடிவைத்தல். இறத்தல்—போதல். (௩௬)

ஆனை குதிரைக ளொட்டை - ரதம் - ஆசையோ டேறுமுட லொட லொட்டை, ஞானமி லாதகண் பொட்டை - என்று - நாதன் குருவறி வித்ததைப் போற்றி—இரக்கத் துணிந்து கொண் டேனே.

ப—ரை. ஆனை குதிரைகள் ஒட்டை ரதம்—யானைகள் குதிரைகள் ஒட்டைகள் ரதங்கள் என்பவற்றின்மேல், ஆசையோடு ஏறும்—விருப்பத்தோடு ஏறுகிற, உடல்—உடம்பும், லொட லொட்டை—லொடலொட்டையேயாகும், ஞானம் இல்லாத கண் பொட்டை—ஞானமில்லாத கண் பொட்டைக்கண்ணே யாகும், என்று—என்றருளிச்செய்து, நாதன் குரு—குருநாதன், அறிவித்ததைப்போற்றி—அறிவித்ததாகிய உண்மைநிலையை வணங்கி—, (இரக்க.) எ-று.

வி—ரை. ரதம்—தேர். லொடலொட்டை—பயனற்றது. பொட்டை—குருடு. (௩௭)

அரச ராண்மனைக் கோட்டை-சூழ-அன்பர் நடனம் புரிகின்ற பாட்டை, இரவு பகன்மனச் சேட்டை - வைத்த-இன்பக் குணங்குடி யானருள் போற்றி—இரக்கத் துணிந்து கொண்டேனே.

ப-ரை. அரசர் அரண்மனை கோட்டை — அரசருடைய அரண்மனைக் கோட்டை, சூழ — சுற்றிலும், அன்பர் நடனம் புரிகின்ற பாட்டை — அன்பர்கள் நடனஞ்செய்கிற பாட்டை, இரவும் பகல் மனச்சேட்டை — இரவும் பகலும் மனச்சேஷ்டை, வைத்த இன்பம் — இன்பத்தை யுண்டாக்கிவைத்த, குணங்குடியான் — குணங்குடியானது, அருள் போற்றி — அருளை வணங்கி—, (இரக்க) எ-று.

வி-ரை. அரண் — காவல். பாட்டை — வழி, இது திசைச்சொல். சேட்டை — தொழில். (௩அ)

ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

ஆக பாடல் - 280.

நிராமயக்கண்ணி.

ஆதி முதலே யகண்ட பரிபூரணமென்
றோதுங் குணங்குடிகொண் டோனே நிராமயமே.

இ-ள். ஆதிமுதலே! அகண்ட பரிபூரணமென்று அறிஞரால் சொல்லப் பட்ட குணங்குடி கொண்டவனே! நிராமயமே எ-று.

வி-ரை. அகண்டம் — கண்டிக்கப்படாதது. (௧)

தேசிகனா னென்றே திருநடன மாடுகின்ற
வாசாம கோசரமே வாழி நிராமயமே.

இ-ள். குருநாதன் நானே யென்று திருநடனமாடுகின்ற வாக்குக்கெட் டாத பொருளே நீ வாழ்க, நிராமயமே எ-று.

வி-ரை. வாசாமகோசரம் — வாக்குக்கெட்டாதது (௨)

சுத்தத் திருவடியிற் சொக்கி யருள்பெறுமுன்
செத்திறந்து போனாலென் செய்வே னிராமயமே.

இ-ள். பரிசுத்தமாகிய உன்திருவடியி லழுந்தி உன்னருள் பெறுவதற்கு முன்பே, செத்துப்போனால் என்னசெய்வேன், நிராமயமே எ-று.

வி-ரை. சொக்குதல் — லயித்தல். (௩)

கண்ணே மணியேயென் கண்ணுணிறைந்த காரணமே
விண்ணேமெய்ஞ் ஞான வெளியே நிராமயமே.

இ-ள். கண்ணே, கண்மணியே, என் கண்ணுள் நிறைந்த காரணப் பொருளே, ஆகாயமே, மெய்ஞ்ஞானவெளியே, நிராமயமே எ-று.

வி-ரை. ஞானவெளி — சிதாகாசம் எனினுமாம் (௪)

எந்த விதமென் னிதயந் தெளிவதற்கே
பந்த வினையகலப் பாராய் நிராமயமே.

இ-ள். எந்தவிதத்திலும் என் இருதயம் தெளிவதற்காகவும், வினைக் கட்டு நீங்குதற்காகவும், என்னைக் கடாக்ஷிப்பாயாக, நிராமயமே எ-று.

வி-ரை. பந்தம் — கட்டு. (௫)

இறந்தான் முதலகத்தி லென்னதியா னென்பதெல்லாந்
துறந்தானே யந்நிலையே சொல்வாய் நிராமயமே.

இ-ள். முதலில் எனது யான் என்பதெல்லாம் மனத்திலிறந் தொழிந்தால் துறந்தவனே யாவனாதலால், அந்த நிலையை எனக்குச்சொல்லி யருள வேண்டும், நிராமயமே எ-று.

வி-ரை. எனது — மமகாரம். யான் — அகங்காரம். (௬)

வற்றாச் சமுத்திரமே வள்ளலே வான்பொருளே
சித்தருளத்திற் றெளிவே நிராமயமே.

இ-ள். வற்றாத கடலே, வள்ளலே, மேலான பொருளே, சித்தர்களுடைய மனத்திலுள்ள தெளிவே, நிராமயமே எ-று.

வி-ரை. வள்ளல் — உதாரகுணமுள்ளவன். (௭)

உம்பர்க்கு மெட்டாதென் றொன்றிமறை யோலமிட்ட
செம்பொற் கிரியே செயமே நிராமயமே.

இ-ள். தேவர்களுக்கும் எட்டாதென்று ஒருமிக்க வேதங்கள் முறையிட்ட செம்பொன் மலையே, ஜெயமே, நிராமயமே. எ-று.

வி-ரை. ஒன்றுதல் — ஒருமித்தல். (௮)

பேச்சுக் கடங்காத பேரின்பத் தேனமிர்தங்
காய்ச்சி வடித்த கடலே நிராமயமே.

இ-ள். வார்த்தைக்கடங்காத பேரின்பத்தை யுண்டாக்குகிற தேனையும் அமிர்தத்தையும் காய்ச்சி வடித்த சமுத்திரமே, நிராமயமே எ-று.

வி-ரை. வடித்த — வடிகட்டின. (௯)

அந்தரத்தி லுள்ளேநின் றாடுதிருக் கூத்ததனை
சிந்தை யறிகிலனென் செய்வே னிராமயமே.

இ-ள். ஆகாயத்திலே நின்று ஆடுகிற திருக்கூத்தை என் மனத்தால் அறிந்திலேன்; என்னசெய்வேன், நிராமயமே எ-று.

வி-ரை. அந்தரம் — சிதாகாசம். (௧௦)

மோன மவுனமணி மூடிவைத்த பெட்டகமே
தேனமுத வின்பத் தெளிவே நிராமயமே.

இ-ள். மோனமாகிய மௌனமணியை வைத்து மூடியிருக்கிற பெட்டகமே, இன்பம் தருகிற தேன் அமிர்தங்களின் தெளிவே, நிராமயமே எ-று.

வி-ரை. மணி — ரத்நம். (கக)

மண்பட்ட நெஞ்ச மயக்க மெல்லாந் தீரவருள்
பண்பட்டார்க் கல்லோ பயன்கா ணிராமயமே

இ-ள். மண்ணுலகிற் பிறந்த மனமயக்க முழுதும் தீரும்படி அருளிற் பண்பட்டார்க்கல்லவோ பயனுண்டாவது, நிராமயமே எ-று.

வி-ரை. பண்படுதல் — பழகுதல். (கஉ)

மனவாக் கணுகா மறைந்தவான் செஞ்சுடரே
இனமாதி யற்ற விறைமே நிராமயமே.

இ-ள். மநோவாக்குகள் அணுகவொண்ணமல் மறைந்துநின்ற மேலான செஞ்சுடரே, இனம் முதலியவை யில்லாத இறைவனே, நிராமயமே எ-று.

பார்க்குமிட மெல்லாம் பரிபூரணமாக
ஏற்கையுட னின்ற வியல்பே நிராமயமே.

இ-ள். பார்க்கு மிடங்களிலெல்லாம் பரிபூர்ணமாக வியாபித்துநின்ற இயல்புடையானே, நிராமயமே எ-று. (கங)

விண்ணுமுதன் மண்ணாய் விளங்கிநின்ற மெய்ச்சுடரே
கண்ணேயென் னின்பக் கடலே நிராமயமே.

இ-ள். விண்முதல் மண்ணளவாக விளங்கிநின்ற மெய்யொளியே, கண்ணே, என் இன்பக்கடலே, நிராமயமே எ-று. (கசு)

துன்புறுமென் னெஞ்சத் துயரமெலாந் தீர்க்கவெனக்
கன்புருவாய் நின்ற வருளே நிராமயமே.

இ-ள். துன்பமடைகிற என் மனத்துயரம் யாவையும் நீக்கும்படி எனக்கு அன்புருவமாய்நின்ற அருளே, நிராமயமே எ-று. (கரு)

அங்கிங் கெனவொண்ணு வகண்டபரி பூரணமாய்
எங்கு நிறைந்த விறைமே நிராமயமே.

இ-ள். அங்கு இங்கு என்று சொல்லவொண்ணுத அகண்ட பரிபூரணமாய், எங்கும் நிறைந்திருக்கிற இறைவனே, நிராமயமே எ-று. (கஎ)

நாட்டு மிருவினையு நாட்டா ருனதருளின்
நேட்டாள ரென்ற திறமே நிராமயமே.

இ-ள். உனது அருட்செல்வம் பெற்றவர், இருவினைகளை நிலைக்கச் செய்யார், நிராமயமே எ-று. (கஅ)

படர்ந்த மனங்குடியாம் பக்குவர்பா சாடவியைத்
தொடர்ந்து தொடர்ந்துவெட்டத் துணிவார் நிராமயமே.

இ-ள். படர்ந்த மனமானது குடியப்பெற்ற பக்குவர் பாசக்காட்டை தொடர்ந்து தொடர்ந்து வெட்டத் துணிவார், நிராமயமே எ-று. (௧௯)

உத்தமர்கட் காகா வுலுத்தப் புலையரென்னும்
பித்தர் நெறியினரோ பேசாய் நிராமயமே.

இ-ள். உத்தமர்கட்கு ஆகாத உலுத்தப்புலையர் என்கிற பித்தர் நன்னெறியுடையரோ, சொல்லாய், நிராமயமே எ-று. (௨0)

பாவபுண்ணி யத்தைப் பறக்கவிட்ட பத்தர்க்குமக்
கேவல் விலகவிலை யென்றாய் நிராமயமே.

இ-ள். பாவபுண்ணியங்களைப் பறக்கடித்த பத்தருக்கும் ஏவற்றொழில் நீங்கவில்லையென்றாய், நிராமயமே எ-று. (௨௧)

முத்திதரும் வேத மொழிந்த வழிநடக்கப்
பெற்ற குருவென் பிணைகா ணிராமயமே.

இ-ள். முத்தியைத் தருகிற வேதஞ்சொல்லியபடியே நடக்கப்பெற்ற குருநாதரே எனக்குப் பிணையாவர், நிராமயமே. எ-று. (௨௨)

ஊத்தைப் பிணமா முடலை யிடிசுவரை
ஏற்ற படிவிடுத லீன நிராமயமே.

இ-ள். ஊத்தைநாற்றமுள்ள உடம்பை, இடிசுவரை, ஏற்றபடியே விடுதல் இழிவாகும், நிராமயமே எ-று. (௨௩)

வஞ்ச மழிந்து வருபாசம் விட்டொழிந்து
நெஞ்சந் தெளியநெறி நிற்பார் நிராமயமே.

இ-ள். வஞ்சமழிந்து வருகிற பாசத்தையும்விட்டு நீங்கி நெஞ்சம் தெளியும்படி நன்னெறியில் நிற்பார், நிராமயமே. எ-று. (௨௪)

தொந்தங் கடிந்தே சுபமணையி னல்லாலென்
புந்தி மயக்கம்விட்டுப் போமோ நிராமயமே.

இ-ள். தொந்தங்களை யறுத்துச் சுபத்தை யடைந்தாலன்றி என் புத்தி மயக்கம் விட்டுப் போகுமோ, நிராமயமே எ-று. (௨௫)

வாராக் கருணைமழை வந்துபொழிந் தாலொழியத்
தீரா மனமயக்கந் தீரே னிராமயமே.

இ-ள். வாராத கருணைமழையானது வந்து பொழிந்தாலன்றி தீராத மனமயக்கம் தீரப்பெறேன், நிராமயமே. எ-று. (௨௬)

பாயும் பசுபாச மடிய மடியவரு
டாயனைய வின்பந்தருவாய் நிராமயமே.

இ-ள். பாய்கின்ற பசுபாசம் இறக்க இறக்க அருளோடு கூடியதாய் போன்ற இன்பத்தைத் தரக்கடவாய், நிராமயமே எ-று. (உஎ)

அய்யனே யென்னை யணைத்தாட்கொண் டாளவந்த
மெய்யனே நாத வெளியே நிராமயமே.

இ-ள். ஐயனே, என்னை யணைத்து ஆட்கொண்டு ஆளவந்த மெய்யனே, நாதவெளியே, நிராமயமே எ-று. (உஅ)

கூரு மவத்தைக் குணங்குடிபோ மன்பருக்கில்
யாரை நிகரிடுவ தையா நிராமயமே.

இ-ள். மிகுந்த துன்பக் குணங்களெல்லாங் குடிபோகப்பெற்ற அன்பருக்கு இவ்வுலகில் யாரை நிகராக்குவது, ஐயா, நிராமயமே எ-று. (உகூ)

பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்கு போற்கரணம்
புத்திதனை யலைக்கப் போமோ நிராமயமே.

இ-ள். பித்தம் பிடித்துத் திரிகிற பேய்க்குரங்குபோலக் கரணங்கள் என் புத்தியை அலைக்கவொண்ணுமோ, நிராமயமே எ-று. (௩0)

தஞ்சமெனு ஞானத் தடாகத்தின் மூழ்குநர்க்கு
விஞ்சிய நாதவிளக்கே நிராமயமே.

இ-ள். தஞ்சமென்கிற ஞானத்தடாகத்தில் முழுகுவோர்க்கு மேன்மையாகிய ஞானவிளக்கே, நிராமயமே எ-று. (௩க)

ஆரிருந்தென் னார்போயென் னுயிர்க்குறு துணையாம்
பேறுபெறச் செய்தாற் பிழைப்பே னிராமயமே.

இ-ள். ஆர் இருந்து என், ஆர்போய் என், என் உயிருக்குதவியாகிய முத்திப்பேற்றை யடையச்செய்தால், நான் உய்வேன், நிராமயமே எ-று. ()

போகாக் கவலைப் புழுக்கமெல்லாந் தீர்வதற்கு
வாகா யருள்புரிய வாராய் நிராமயமே.

இ-ள். போகாத கவலையாலுண்டாகிற மனப்புழுக்கமெல்லாம் நீங்குவதற்கு, நன்றா யருள்செய்யும்பொருட்டு நீ வரக்கடவை, நிராமயமே. எ-று.

காமக் கடல்கடக்கக் கர்த்தவியக் கப்பல்வைத்தால்
நேமநிஷ்டைக் கம்பம் நிலைநா ணிராமயமே.

இ-ள். காமக்கடலைக் கடக்கும் பொருட்டுக் கர்த்தவியமாகிய கப்பலை யேற்படுத்தினல் நேமநிஷ்டைகளாகிய கம்பங்கள் நிலைபெறுவனவாம், நிராமயமே எ-று. (௩௪)

நின்னைச் சரண்புகுந்தா னிர்மூட மாகவெனை
யென்னைத்துக் காட்கொண்ட தியம்பாய் நிராமயமே.

இ-ள். உன்னைச் சரணமாக அடைந்தால், நிர்மூடமான என்னை யாது நிமித்தம் ஆட்கொண்டனை, சொல்லாயாக, நிராமயமே. எ-று. (௩௫)

சிந்தை யறிவைச் சிதையவிட்டுன் னருள்பெறவே
வந்தேற்கு நற்கருணை வைப்பாய் நிராமயமே.

இ-ள். என் மனக்கருத்தை ஒழித்து உன் அருளைப் பெறும்பொருட்டு வந்த எனக்கு உனது சிறந்த கருணையைச் செய்யவேண்டும், நிராமயமே எ-று. (௩௬)

தேனமுதே பாகு திரண்ட பெருங்கடலே
வானவர்க்கு மெட்டா மணியே நிராமயமே.

இ-ள். தேன் அமிர்தமே, பாகுதிரண்ட பெரியகடலே, தேவர்களுக்கும் எட்டாத ரத்தினமே, நிராமயமே எ-று. (௩௭)

இந்த விதய மிணங்கி வணங்கவரு
டந்தடிக்காட் கொண்ட தானு நிராமயமே.

இ-ள். இந்த மனமானது எனக்கு இசைந்து வணங்கும்படி அருள் செய்து உன் திருவடிக்கு ஆட்கொண்ட தானுமே, நிராமயமே எ-று. ()

இடம்பொருளே வலெவையு மறந்தகுணங்
குடியார்க் குவமைக் குறியே னிராமயமே.

இ-ள். இடம் பொருள் ஏவல்களாகிய எல்லாவற்றையும் மறந்த குணங்குடியார்க்கு உவமை சொல்ல நினையேன், நிராமயமே எ-று. (௩௯)

ஆழுமாழி தானு மணைகடவா தானைதனிற்
றாழ விலையோவென் றுயே னிராமயமே.

இ-ள். ஆழ்ந்த கடலும் உன் ஆணையால் அணைகடவா திருக்கின்றது, என் மனமோ அணைகடந்து செல்லுகின்றது, நிராமயமே எ-று. (௪0)

தீது நலமறியேன் றிசைநாக மற்றெவையும்
ஏதென் றறியே னெளியே னிராமயமே.

இ-ள். தீமை நன்மைகளை அறியேன், அஷ்டகுல பர்வதங்களை இன்னது இன்னதென்று அறியேன், அறிவிலேன், நிராமயமே எ-று. (௪௧)

மீளா வெளியில் விழற்கிறைத்த நீரெனவும்
பாழி லலைவதுமென் பாவம் நிராமயமே.

இ-ள். மீளவொண்ணாத வெளியில் விழலுக்கு இறைத்த நீர்போல பாழில் அலைவதும் என்பாவமேயாம், நிராமயமே எ-று. (௪௨)

ஈன்றெடுத்த மாதா வென்னையாட்கொண் டாள்வதென
ஆண்டனைப்ப தென்றோ வருளாய் நிராமயமே.

இ-ள். பெற்றெடுத்த தாயானவள் என்னைக் காப்பாற்றுவதுபோல நீ யென்னைக் காப்பாற்றி யருளுதல் எந்நாளோ, நிராமயமே எ-று. (சங)

சாத்திரங்க ளோதுஞ் சழக்கர் தமக்குமருள்
மாத்திரைப்போ தேனும் வருமோ நிராமயமே.

இ-ள். சாத்திரங்களைப் படிக்கின்ற நீசருக்கும் உன்னருளானது எள்ளளவாயினும் உண்டாகுமோ, நிராமயமே எ-று. (சச)

ஐயனே மெய்யருளி லாசையற்ற நீசனுக்கும்
உய்யுந் திருக்கருணை யுண்டோ நிராமயமே.

இ-ள். ஐயனே! உன் திருவருளை அடையும் விருப்பம் சிறிதுமில்லாத நீசனுக்கும் உய்யும்படியான உன் திருவருள் உண்டாகுமோ, நிராமயமே எ-று. (சரு)

காதறருங் கண்ணீர்க் கரைபுரள நின்றவர்க்குச்
சூதுதருங் கண்ணீர் தொலையும் நிராமயமே.

இ-ள். ஆசையாலுண்டாகின்ற கண்ணீரானது கரைபுரளும்படி நின்றவர்களுக்கு வஞ்சத்தாலுண்டாகிற கண்ணீரானதுநீங்கும், நிராமயமே எ-று.

வஞ்சங் குடியிருந்து வாழு மனத்தினருக்
கெஞ்சா திருக்கு மிருப்பே நிராமயமே.

இ-ள். வஞ்சகம் குடியிருக்கிற மனத்தை யுடையோருக்கு வெளிப்படாதிருக்கின்ற நிலையே, நிராமயமே எ-று. (சஎ)

பற்றற்று நின்ற பரம பதத்தினருக்
கெத்தொழிலுஞ் செய்ய வியல்பே நிராமயமே.

இ-ள். பற்றொழிந்துநின்ற மேலாகிய பதத்தை யுடையவருக்கு எத்தொழிலையும் செய்வது இயல்பாமோ, நிராமயமே எ-று. (சஅ)

வாதே யகண்டகுணங் குடிவாழ வைத்தாயே
ஈதே பெருமையெனக் கென்றாய் நிராமயமே.

இ-ள். வாதுகளெல்லாம் ஒழிந்த குணங்குடியில் என்னை வாழவைத்தாயே எனக்கு இதுதான் பெருமை, நிராமயமே எ-று. (சக)

என்றுமிருப் போமென் றெண்ணியெண்ணி யென்னிதயஞ்
சண்டை பிடிக்கச் சரியோ நிராமயமே.

இ-ள். எக்காலத்தும் இருப்போம் என்று நினைத்து நினைத்து, என் மனமானது என்னோடு சண்டைசெய்தல் சரியாகுமோ, நிராமயமே எ-று.()

மட்டுக் கடங்கா மயக்கமெல்லாந் தீர்த்துவெளிப்
பட்டோர்கட் கல்லோ பயன்கா ணிராமயமே.

இ-ள். எல்லைக்கடங்காத மயக்கம் முழுதும் தீர்த்து வெளிப்பட்டோர்களுக்கல்லவா பயன் உண்டாவது, நிராமயமே எ-று. (௯௧)

மன்னு முயிர்க்கு மறலி வரும்பொழுதில்
உன்னையன்றி யார்தா முளரோ நிராமயமே.

இ-ள். நிலைபெற்ற உயிர்களுக்கு யமன் வரும்போது உன்னையல்லாமல் வேறு யார்தான் ஆதரவாயிருப்பவர்கள், நிராமயமே எ-று. (௯௨)

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணி யிடைந்துமனம்
புண்ணாவ தற்கோ புகுந்தே னிராமயமே.

இ-ள். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி இடைந்து மனம் புண்ணாவதற்கோ இவ்வுலகிற் பிறந்தேன், நிராமயமே எ-று. (௯௩)

உள்ள துரியதெல்லா மொழியா துரைத்தவெனைத்
தள்ளி விடத்தான் றகுமோ நிராமயமே.

இ-ள். எனக்கு உள்ளதையும் உரியதையும் மறைக்காமல் சொன்ன என்னைத் தள்ளிவிடுதல் உனக்குத் தகுமோ, நிராமயமே எ-று. (௯௪)

வண்ணத் திருக்கருணை வாழுந் திருவடிக்கே
என்னத்தைச் செய்வே னெளியே னிராமயமே.

இ-ள். அழகிய திருவருள் உருவமான உன் திருவடிக்கு எளியேனாகிய நான் என்ன உபசாரத்தைச் செய்வேன், நிராமயமே எ-று. (௯௫)

கற்றபடி நடக்கக் கல்லாத பாவியெனைச்
சித்தந் தெளியவருள் செய்வாய் நிராமயமே.

இ-ள். கற்றபடியே நடக்கக் கல்லாதபாவியாகிய என்னை மனந்தெளியும்படி அருள் செய்யவேண்டும், நிராமயமே எ-று. (௯௬)

பேச்சற்றுச் சிந்தை பிரக்ஞையு மற்றபதம்
வாய்ச்சார்க்கல் லோமவுனம் வாய்க்கு நிராமயமே.

இ-ள். பேச்சு இறந்து மனநினைவும் அற்ற நிலை கிடைத்தவர்க் கல்லவோ மௌனநிலை கிடைக்கும், நிராமயமே எ-று. (௯௭)

நிஷ்டை நிருவிகற்ப நித்திரைகொண் டேயிருக்க
அஷ்டாங்க யோகமெனக் கருளாய் நிராமயமே.

இ-ள். நிஷ்டையையும் நிருவிகற்ப நித்திரையையும் அடியேன் பெற்றிருக்கும்படி அடியேனுக்கு அஷ்டாங்க யோகத்தை அருள்செய்யவேண்டும், நிராமயமே எ-று. (௯௮)

தொல்லுலகி லல்லற் றுயரமெல்லாந் தீர்க்கவொரு
சொல்லருள வந்த துரையே நிராமயமே.

இ-ள். பழமையாகிய இந்த உலகத்தில் உண்டாகிற துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்கும்பொருட்டு ஒரு மொழியை அருள் செய்யும்பொருட்டு எழுந்தருளிய துரையே, நிராமயமே எ-று. (௫௯)

உயிர்த்துணைவ ரேனு முளந்தெளியா வுலுத்தரையோர்
மயிர்க்குநிகர் குறிக்க மாட்டே னிராமயமே.

இ-ள். உயிர்த்தோழராயினும் மனந்தெளியாத உலுத்தரை ஓர் மயிர்க்குச் சமானமாகவும் நினைக்கமாட்டேன், நிராமயமே எ-று. (௬0)

கொல்லா விரதத்தைக் கொல்லக் கொலைஞருள்ளங்
கல்லாகத் தானே சமைத்தாய் நிராமயமே.

இ-ள். கொல்லாவிரதத்தை அழிக்கும்படி கொலைசெய்வோருடைய மனத்தை கல்லாகத்தானே படைத்தாய், நிராமயமே எ-று. (௬௧)

எத்தனையோ யுத்தி யெடுத்தெடுத்துச் செய்யுமுடல்
உற்றா ரிருக்க வுடையு நிராமயமே.

இ-ள். எத்தனையோ தந்திரம்செய்து காப்பாற்றப்பட்ட உடம்பானது உற்றார் எல்லாரும் இருக்கவும் அழிந்துபோகாநின்றது, நிராமயமே எ-று.()

வாயே புலம்பி வருபாசப் பேய்பிடித்த
நீயனெனச் சொன்னாலென் செய்வே னிராமயமே.

இ-ள். வாய்புலம்பி வருகின்ற பாசப்பேய்பிடித்த நீயன் என்று சொன்னால் யான் என்செய்யக்கடவேன், நிராமயமே எ-று. (௬௩)

தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோது
நீயிருக்க நான்றளர நேரோ நிராமயமே.

இ-ள். தாய் இருக்கப் பிள்ளை ஒருபோதுந் தளராது நீ இருக்க நான் தளருதல் உனக்குத் தகுதியாமோ, நிராமயமே எ-று. (௬௪)

சொல்லுக் கடங்காச் சுகங்காண் டுறவிகட்கு
நல்லறிவு சற்றே நகுங்கா ணிராமயமே

இ-ள். சொல்லுக்கடங்காத சுகத்தைக் காண்கின்ற துறவிகளுக்கு நல்லறிவு சிறிது விளங்கும், நிராமயமே எ-று. (௬௫)

மத்திபத்தி னூடே மறைந்த மணிவிளக்கை
நித்தம் விளங்கவரு ளேரராய் நிராமயமே.

இ-ள். இடையிலே மறைந்த மணிவிளக்கை நாள்தோறும் விளங்கும்படி நீ அருள்செய்யவேண்டும், நிராமயமே எ-று. (௬௬)

மெத்தப் படித்த வெறும்பாசப் பித்தருக்கே
கத்தந் தெளியாதென் செய்கே னிராமயமே.

இ-ள். மிகவும் படித்த பாசப்பித்தருக்கு மனந்தெளியாது அதற்கு யான் என்செய்வேன், நிராமயமே எ-று. (௬௭)

கள்ளா விருளைக் கடிந்துகரை யேறுதற்குத்
தெள்ளியவான் சோதித் திரளே நிராமயமே.

இ-ள். வஞ்சகமாய் இருளைப்போக்கிக் கரையேறும்பொருட்டுத் தெளிவடைந்த மேலான ஒளிப்பெருக்கே, நிராமயமே எ-று. (௬௮)

ஓட்டாதே யுன்னைவிட்டு மோட்டி நயமிடரில்
மாட்டாதே யான்பொறுக்க மாட்டே னிராமயமே.

இ-ள். என்னைத் துரத்தாதே, உன்னைவிட்டுத்துரத்தி சுகதுக்கங்களில் மாட்டிவைக்காதே, யான் பொறுக்கமாட்டேன், நிராமயமே எ-று. (௬௯)

தன்னை யறிந்தாற் றலைவன் றனையறிந்த
தென்னு மொழியேயா யிதங்கா ணிராமயமே.

இ-ள். தன்னை அறிந்தால் தலைவனையும், அறிந்ததாகும் என்கிற மொழியே சுகத்தைத் தருவது, நிராமயமே எ-று. (௭0)

அபயமென்னைக் காப்ப தண்ணலே யுன்னுபய
முபய முபய முனதுபய நிராமயமே.

இ-ள். சரணடைந்த என்னைக்காப்பது பெரியோனாகிய உனக்கே கடமையாகும், நிராமயமே எ-று. (௭௧)

பிரியா வுனதடியைப் பின்றொடர்ந்தார் பின்றொடர
அறியாச் சிறியேனை யாளா நிராமயமே.

இ-ள். பிரியவொண்ணாத உன் திருவடியைப் பின்றொடர்ந்தவர்களைப் பின்றொடர்தற்கு அறியாத சிறியேனான என்னை ஆண்டருள வேண்டும், நிராமயமே எ-று. (௭௨)

துற்குணமே கொண்ட தொழும்பனியான் றொல்லுலகில்
கற்குணத்தா ரென்போலுங் காணே னிராமயமே.

இ-ள். கெட்டகுணமே குடியிருக்கிற என்னைப்போன்ற கல்மனத்தை யுடையோரை இந்தப் பழமையாகிய உலகத்தில் ஒருவரையுங் கண்டிலேன், நிராமயமே எ-று. (௭௩)

பொய்யுங் கவடுமுள்ளே பூட்டிவைத்த பெட்டகமாய்
கையு முடலெடுத்தே னென்கா ணிராமயமே.

இ-ள். பொய்யையும் கபடத்தையும் உள்ளேவைத்து பூட்டப்பட்ட பெட்டகமாய் அழியாநின்ற உடம்பை நான் எடுத்தேன், நிராமயமே எ-று.

கங்குல் பகலொழித்த காரணர்க்கோ நின்னருளைப்
பங்கு கொடுத்தாய் பகராய் நிராமயமே.

இ-ள். இராப்பகல்கள் ஒழித்த காரணருக்கோ உன் அருளைப் பங்கிட்டுக்கொடுத்து விட்டாய், அதனைச்சொல்வாயாக, நிராமயமே எ-று. (எ௫)

தேறாப் பிரபஞ்சத் திடுக்கமெல்லாந் தீர்ந்தவர்க்கு
மாறா வருணிலைதான் வாய்க்கு நிராமயமே.

இ-ள். தெளிவில்லாத பிரபஞ்சத்தின் துன்பமெல்லாம் நீங்கினவருக்கு மாறுபடாத உனது திருவருள் நிலைகிடைக்கும், நிராமயமே எ-று. (எசு)

சருவ தயாநிதியாய்ச் சஞ்சரித்த நெஞ்சினர்க்குப்
பிரியா வருணிலைதான் பேறாம் நிராமயமே.

இ-ள். சருவ தயாநிதிகளாய்ச் சஞ்சரிக்கின்ற மனத்தை யுடையவருக்குப் பிரியாத உன் திருவருள்நிலையே பயனாகும், நிராமயமே எ-று. (எஎ)

பாத முடிநடுவும் பக்கமுன்னும் பின்னுமற்ற
நாத வடிவே நவமே நிராமயமே.

இ-ள். அடிமுடி நடுபக்கம் முன்பின் என்பனயாவும் அற்ற நாதரூபமே, நூதனப்பொருளே, நிராமயமே எ-று. (எஅ)

பேசா திடமறிந்தும் பேய்க்குரங்கு போற்கருவி
ஊசா டுவதே னுரையாய் நிராமயமே.

இ-ள். பேசாதயிடத்தை அறிந்திருந்தும் எனது கருவிகள் பேய்க்குரங்குகள்போல குதிபோடுவது யாது காரணத்தினால், நீயே சொல்லக்கடவை, நிராமயமே எ-று. (எகூ)

எனையாட் கொண் டாளவரு மென்குருநா தன்வடிவந்
தனையார்க்குஞ் சொல்லத் தகுமோ நிராமயமே.

இ-ள். என்னை ஆட்கொண்டு ஆளவருகின்ற என் குருநாதரது உருவத்தை யாவராலும் புகழ்ந்து சொல்லத்தகுமோ, நிராமயமே எ-று. (அ0)

கொப்புவித்தி னுள்ளே குடியிருந்த கொள்கையென
எப்பொருட்குஞ் சித்தா யிருந்தாய் நிராமயமே.

இ-ள். விதைக்குள்ளே கொம்புகுடி யிருந்தாற்போல எல்லாப்பொருள்களுக்கும் வித்தாயிருந்தாய், நிராமயமே எ-று. (அக)

கூறுங் கருவி குடிபோன வன்பருக்கே
யாரும் நிகரோ வென்னையா நிராமயமே.

இ-ள். சொல்லப்பட்ட கருவிகளெல்லாம் குடிபோகப்பட்ட அன்பருக்கு வேறுயாவராயினும் நிகராவாரோ என்னையனே, நிராமயமே எ-று. ()

சிந்தை சிதையாச் சிவராஜ யோகநிலை
வந்தோர்க் கருள்புரிய வந்தாய் நிராமயமே.

இ-ள். மனம் இறந்து சிவராஜயோக நிலைகைவந்தோர்க்கு அருள் செய்யும்பொருட்டு எழுந்தருளினவனே, நிராமயமே எ-று. (அங)

கோடானு கோடிமறை கூறவறி யாதவுனைத்
தேடுகின்ற தென்னறிவென் றிரமே நிராமயமே.

இ-ள். கோடானகோடி வேதங்களும் சொல்லறியாத உன்னை யான் தேடுகின்றது என்ன அறியாமை, நிராமயமே எ-று. (அச)

பிரியா வருணிலையைப் பெற்றார் பெற்றாரெனவு
மறியா வெறியனையா வையா நிராமயமே.

இ-ள். பிரியாத அருள்நிலையைப் பெற்றவர்கள் முத்திநிலையைப் பெற்றார்களென்று அறியாத வெறியன், ஐயனே, ஆண்டருள வேண்டும், நிராமயமே எ-று. (அரு)

எமனார் விருது வெனும்பாசக் கட்டறுத்தோர்
நமனார் தமக்கு நமனா நிராமயமே.

இ-ள். இயமனது விருதாகிய பாசக்கட்டை அறுத்தவர்கள் யமனுக்கும் யமனவர், நிராமயமே எ-று. (அசு)

துலங்கு மருண்மயத்தைத் தோன்றா திருண்மயமாம்
புலனைத் தொலைப்பா யுனக்குப் புண்யம் நிராமயமே.

இ-ள். விளங்குகின்ற அருளுருவத்தைத் தோன்றாமல் மறைக்கின்ற ஐம்புலன்களை தொலைத்து விடுவாயாக, (தொலைப்பாயாயின்) உனக்குப் பெரும் புண்ணியமாகும், நிராமயமே எ-று. (அஎ)

மன்னிக்க வொண்ணா மனக்குறையுந் தாய்பொறுப்பள்
நின்ன தருணமந்த நேராம் நிராமயமே.

இ-ள். மன்னிக்கக்கூடாத மனக்குறையையும் தாய் பொறுப்பாள், உன் திருவருளும் அதற்கு நிகராம், நிராமயமே எ-று. (அஅ)

எந்த வறிவை யெடுத்தெடுத்தே யோதினுமென்
புந்தி மயக்கணுவும் போகா நிராமயமே.

இ-ள். எப்படிப்பட்ட அறிவை எடுத்தெடுத்துச் சொன்னாலும் என் புத்திமயக்கமானது அணுவளவும் நீங்காது, நிராமயமே எ-று. (அகூ)

செகத்துன் மயக்கஞ் சிதறிப் பறக்கவுமென்
றகைப்பறவோர் முத்தந் தருவாய் நிராமயமே.

இ-ள். பிரபஞ்சமயக்கமானது சிதறிப் பறந்தோடவும் என் துன்பங்களெல்லாம் அற்றொழியவும் ஒரு முத்தந் தாக்கடவை, நிராமயமே எ-று. ()

உத்த துணர்வதெல்லா முயிர்க்குயிர்நீ தானெனவுந்
சித்தந் தெளிந்தோர் திறங்கா ணிராமயமே.

இ-ள். ஆராய்ந்தறிகின்ற பொருள்களெல்லாம் உயிர்க்குயிராகிய நீயே என்று மனந்தெளிந்தோர் உறுதியாய்ச் சொல்லுவர், நிராமயமே எ-று. (௧௧)

அனைத்துயிரு நீயென் றறிந்தார் மறப்புமுதல்
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் நிராமயமே.

இ-ள். எல்லா உயிர்களும் நீயே என்று அறிந்தவர்கள் மறப்பு முதலியவற்றை உடையராதல் எப்படிச் சொல்வாயாக, நிராமயமே எ-று. (௧௨)

நின்செயல்க ளென்று நினைப்பு மறப்புமுத
லென்செயல்க ளுண்டோ வியம்பாய் நிராமயமே.

இ-ள். நினைப்பு மறப்பு முதலாயினவை உன் செயல்களென்றால் என் செயல்கள் வேறுயாவை சொல்வாயாக, நிராமயமே எ-று. (௧௩)

எறும்பூர வூர விரும்புமுதற் றேய்வதுபோல்
இறும்பூரு மன்பருள மித்தகையே நிராமயமே.

இ-ள். எறும்பு ஊர இரும்பு முதலியவை தேய்தல்போல உன் அன்பர் மனமும் உன் அருளினால் இப்படியே குற்றங்கள் தேயப்பெறும், நிராமயமே. (௧௪)

கும்பிக் கிரைதேடிக் கொடுப்போர்முகம் பார்த்திதயஞ்
சம்பித் திரியத் தகுமோ நிராமயமே.

இ-ள். வயிற்றுக்கு உணவுதேடிக் கொடுப்போர்களுடைய முகத்தைப் பார்த்து மனம்வாடித் திரியத்தகுமோ, நிராமயமே எ-று. (௧௫)

கடலின்மடை கண்டதெனக் கண்ணீர் கரைபுரளும்
அடியென்முகம் பார்த்திரங்கி யருளாய் நிராமயமே.

இ-ள். கடல்மடை திறந்தாற்போல கண்ணீர் கரைபுரள்கின்ற அடியேனது முகத்தைப்பார்த்து இரங்கி அருளவேண்டும், நிராமயமே எ-று. (௧௬)

பருவமது செய்யப் படர்பயிராம் பக்குவர்க்குக்
கருவா மருணிலையே கனிகா ணிராமயமே.

இ-ள். பருவங்களுக்கேற்ற முயற்சிசெய்தால் மிகுந்த பயிர்கள் விளைந்தோங்கும், அதுபோலப் பக்குவம் அடைந்தவர்களுக்குப் பிறப்பிடமாகிய உன் திருவருள்நிலையே பயனாகும், நிராமயமே எ-று. (௧௭)

நினைப்பு முதிப்புமெலா நின்செயலென் றன்பருளந்
தினைப்போதும் விட்டுத் திரும்பார் நிராமயமே.

இ-ள். நினைப்பும் மறப்புமாகிய எல்லாம் உன் செயலே என்று உன்னன்பர் தம்மனத்தில் எண்ணி உறுதியாயிருப்பார், நிராமயமே எ-று. (௧௮)

சிவராஜ யோகந் தெளிந்த திறத்தினருக்
கெவரைச் சரியிடுவ தெந்தாய் நிராமயமே.

இ-ள். சிவராஜயோகத்தைத் தெளிந்தறிந்த திறமையுள்ளவருக்கு யாரைச் சமமாகச் சொல்லலாம், நிராமயமே எ-று. (௯௯)

அந்திபக லற்ற வகண்டபரி பூரணர்தஞ்
சிந்தை நிறைந்த தெளிவே நிராமயமே.

இ-ள். இராப்பகல்களற்ற அகண்ட பரிபூரணராகிய அன்பரது மனத்தில் நிறைந்திருக்கின்ற தெளிவே, நிராமயமே எ-று. (௧00)

வேதங்க ளாலும் வெளிப்படாச் சுந்தரமாஞ்
சோதியெனக் கென்றோ துலங்கு நிராமயமே.

இ-ள். வேதங்களாலும் அறியப்படாத அழகிய ஒளியானது எனக்கு விளங்குவது எக்காலமோ, நிராமயமே எ-று. (௧0௧)

எப்பொருளுந் தானா யிலங்குமுனைப் பூசைசெய்ய
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே.

இ-ள். எல்லாப் பொருளும் நீயேயாக விளங்குகின்ற உன்னைப் பூசை செய்யும்பொருட்டுப் பூப்பறிக்கவுந் தகுமோ, நிராமயமே எ-று. (௧0௨)

கைப்பொருளைத் தேடக் கடலோடிப் போவரென
மெய்ப்பொருளைத் தேடி மெலிந்தே னிராமயமே.

இ-ள். கையிலுள்ள பொருளைத் தேடுதற்குக் கப்பலேறிப் போகிறவர்போல மெய்ப்பொருளைத்தேடி இளைத்தேன், நிராமயமே எ-று. (௧0௩)

உயிர்க்குளுயி ராயென் னுள்ளுள் ளுலாவியநீ
தயிர்க்குளுறு வெண்ணெயெனத் தானே நிராமயமே.

இ-ள். உயிர்க்கு உயிராய் என்னுள்ளுள்ளே உலாவிய நீ தயிர்க்குள்ளே அடங்கி இருக்கிற வெண்ணெயை நிகர்க்கிறாய், நிராமயமே எ-று. (௧0௪)

மூடு முனிக்கிடையா மூக்குநுனிக் கட்கிடைக்கி
யாடுந் திருநடனத் தாட்டம் நிராமயமே.

இ-ள். நாசிநுனியில் நீ செய்யுந் திருநடனம் அதிநுட்பமானது, நிராமயமே எ-று. (௧0௫)

நீளுங் கரணமுத னெக்குருகி மட்கினர்க்குத்
தாழா வருணிலையைத் தந்தாய் நிராமயமே.

இ-ள். பெரிதாகிய அந்தக்கரண முதலியவை இறந்து ஒழிந்தவர்களுக்கு மேன்மையாகிய உன்னருளைத் தந்தருளினாய், நிராமயமே எ-று. (௧0௬)

கொல்லுதற்கு வந்த கொலைஞரெனப் பாவிமன
மல்லுப் பொருதுதற்கேன் வைத்தாய் நிராமயமே.

இ-ள். கொல்லும்பொருட்டு வந்த கொலைஞர்போல பாவிமனத்தை என்னேடு மல்லுக்கட்டுதற்கு ஏன் படைத்துவைத்தாய், நிராமயமே. எ-று.

பல்லுயிரும் போற்றும் பரம பதத்தினர்க்குச்
சொல்லுஞ் செயலுந் தொலையு நிராமயமே.

இ-ள். எல்லா வுயிர்களும் வணங்குதற்குரிய மேலான நிலையையுடையவர்களுக்கே சொல்லுஞ் செயலும் ஒழியும், நிராமயமே. எ-று. (க0அ)

தன்னை யறிந்தாற் றனக்கொருகே டில்லையெனச்
சொன்ன மொழியே சுகங்கா ணிராமயமே.

இ-ள். தன்னை அறிந்தால் தனக்கு ஒரு கேடில்லை என்று சொன்ன சொல்லே சுகத்தைத் தருவதாகும், நிராமயமே. எ-று. (க0க)

புண்ணாய்க் கசிந்துமனம் பூணுகின்ற வன்பருக்குங்
கண்ணீர் கரைபுரளக் கண்டாய் நிராமயமே.

இ-ள். மனம் புண்ணாகிக் கசிகின்ற அன்பருக்குக் கண்ணீர் கரைபுரளும்படி நோக்கினாய், நிராமயமே எ-று. (கக0)

முன்னூற் சுருதி முறையா லென்னையறித
லுன்னை யறிதற் குளவா நிராமயமே.

இ-ள். முன்னே வேதமுறையாலே என்னையறிவதே உன்னை யறிதற்கு உபாயமாகும், நிராமயமே எ-று. (ககக)

அண்டபகி ரண்ட மகண்டபரி பூரணமாய்க்
கொண்டநின்னை யாரறிந்து கொண்டார் நிராமயமே.

இ-ள். அண்ட பகிரண்டங்களிலும் அகண்ட பரிபூரணமாய் வியாபித்திருக்கிற வுன்னை யாரறிந்துகொண்டார், நிராமயமே எ-று. (ககஉ)

என்னையன்றி வேறொன்று ளதோவுண் டாயினதை
இன்னதுவா மென்றே யியம்பாய் நிராமயமே.

இ-ள். என்னை யல்லது வேறு பொருளுண்டோ, உண்டாயின், அது இன்னபொருளென்று சொல்வாயாக, நிராமயமே எ-று. (ககங)

நெஞ்சகத்தில் வஞ்ச நெகிழாங்கட் டுண்டவருக்
கஞ்சலென்ன நீயொன் றறியாய் நிராமயமே.

இ-ள். மனத்தில் வஞ்சகமொழியாமல் அதிலேகட்டுண்டிருப்போர்க்கு, அஞ்சலென்று சொல்வதற்கு நீ சிறிதும் அறியாய், நிராமயமே எ-று.(ககச)

துக்கவலை யற்ற துரியாதீ தத்தினர்க்கு
நற்கவலை தானே நடிக்கு நிராமயமே.

இ-ள். துன்ப வலையொழிந்த துரியாதீதநிலையை யுடையவர்க்கு, நல்ல முத்திக் கவலையானது தானேவந்து நடிக்கும், நிராமயமே எ-று. (௧௧௫)

விண்ணோடு மண்ணுமுதல் வேணதெலா முன்கருணைக்
கண்ணூ டிடைகிடக்கக் கண்டே னிராமயமே.

இ-ள். ஆகாயம் பூமி முதலிய எல்லாப் பொருள்களும் உன்னிடத்தில் அடங்கி யிருக்கக்கண்டேன், நிராமயமே எ-று. (௧௧௬)

நாய்க்கு விருந்தோ நரிக்கோ புழுக்கூடு
தீக்கு விறகோ தெரியே னிராமயமே.

இ-ள். புழுக்கூடாகிய இந்த வுடம்பானது நாய்க்கு விருந்தோ, நரிக்கு விருந்தோ, நெருப்புக்கு விறகோ, அறியேன், நிராமயமே எ-று. (௧௧௭)

ஈக்க ளெறும்புமுத லென்னதுவா மென்னுமுடல்
பேய்க்க டமக்குப் பெறும்பேறோ நிராமயமே.

இ-ள். ஈ எறும்பு முதலியவை என்னது என்னது என்று தனித் தனியே சொல்லுதற்குரிய இந்த வுடம்பானது, பேய்களுக்குப் பெறுதற் குரிய பயனாகுமோ, நிராமயமே எ-று. (௧௧௮)

விண்ணாதி யாவும் விளங்குவது நீயெனவென்
கண்ணாரவுங் கனவு கண்டே னிராமயமே.

இ-ள். ஆகாயமுதலிய வெல்லாவற்றிலும் விளங்குவது நீயேயென்று என் கண்களாரக் கனவுகண்டேன், நிராமயமே எ-று. (௧௧௯)

இல்லாமை யில்லாதென் றிதயந் தெளிவதற்கென்
வல்லாண்மை கொண்டு வருமே நிராமயமே.

இ-ள். வறுமை வறுமையேயென்று மனந்தெளிவதற்கு என் வல்லமை யால் ஆகுமோ, நிராமயமே எ-று. (௧௨0)

உன்னையன்றி யாவு முளவோவென் றோதியபின்
என்னையென்னத் தில்வைத் திசைப்பாய் நிராமயமே.

இ-ள். உன்னையல்லது வேறு பொருளில்லையென்று சொல்லியபிறகு, என்னை எந்தப்பொருளில் சேர்த்தாய், நிராமயமே எ-று. (௧௨௧)

கானற் சலமாங் கவிபாசங் கட்டுண்டார்
தானுமே னென்னத் தகுமோ நிராமயமே.

இ-ள். கானல்நீர்போன்ற பாசக்கட்டுண்டவர் தானே தானுயினேன் என்று சொல்லத்தகுமோ, நிராமயமே எ-று. (௧௨௨)

காட்டுக் கொலைவேடன் கைக்குள்சிக்கு மானெனவு
மாட்டித் துயருறவு மாட்டே னிராமயமே.

இ-ள். காட்டிலே கொலைசெய்கிற வேடன்கையி லகப்பட்ட மான் போல இந்த மாயையிற்சிக்கித் துன்பமடையமாட்டேன், நிராமயமே எ-று.

கல்லு முருகுமொரு காலத்தி லென்னிதய
அல்ல லிறுவதில்லை யையா நிராமயமே.

இ-ள். ஒருகாலத்தில் கல்லும் உருகும், எனது மனத்துன்பம் ஒரு காலத்திலும் முடிவுபெறுவதில்லை, ஐயனே, நிராமயமே எ-று. (கஉச)

காயக் கருவி கரணமுதற் காயவைத்த
நேய ருளத்தி னிறைவே நிராமயமே.

இ-ள். சரீரத்திலுள்ள கருவிகரணாதிகளையெல்லாம் உலரவைத்த அன்பர் மனத்தில் நிறைவே, நிராமயமே எ-று. (கஉரு)

பல்லா யிரங்கோடி பகிரண்ட மும்மெமையும்
எல்லா முனதடிமை யென்றாய் நிராமயமே.

இ-ள். பல்லாயிரங்கோடி பகிரண்டங்கள் முதலியவெல்லாம் உனக் கடிமையென்று அருள்செய்தாய், நிராமயமே எ-று. (கஉசு)

எனக்கோர் நிகருமில்லை யில்லாரில் வல்லாரில்
உனக்கோர் நிகரொருவ ருண்டோ நிராமயமே.

இ-ள். இல்லாதவர்களுள்ளே எனக்கு நிகராவார் ஒருவருமில்லை, உள்ளவர்களுள்ளே உனக்கு நிகராவார் ஒருவருளரோ, நிராமயமே எ-று.(கஉஎ)

செப்பஞ் செயுஞ்செயலுட் சிந்தித்தல் வந்தித்தல்
எப்போ தெனைவிட் டியங்கு நிராமயமே.

இ-ள். செப்பமாகிய செயலும் சிந்தனை வந்தனைகளும் எக்காலத்தில் என்னையடைந்து விளங்குமோ, நிராமயமே எ-று. (கஉஅ)

நீராற் றிரள்குமிழி நேர்தரு மிவ்வுடலம்
யாரார்க்குக் கைகொடுத்த தையா நிராமயமே.

இ-ள் நீரிலுண்டாகிற குமிழிபோன்று நிலையற்ற இந்த வுடம்பு யார் யார்க்குக் கைகொடுத்தது, ஐயனே, நிராமயமே எ-று. (கஉகூ)

ஒன்றாய்ப் பலவா யுருவருவா யும்முயிராய்
நின்றவுனை யாரறிய நின்றாய் நிராமயமே.

இ-ள். ஒன்றாயும் பலவாயும் உருவாயும் அருவாயும் உயிராயும் நின்ற உன்னை யாரறியும்படி நின்றனை, நிராமயமே எ-று. (கநூ0)

பெற்றெடுத்த மாதா பிதாக்களிருந் தாலுமெனைச்
செத்தவுடன் மண்ணிற் றிணிப்பார் நிராமயமே.

இ-ள். பெற்றெடுத்த தாய்தந்தைய ரிருந்தாலும், யான் இறந்தவுடனே என்னை மண்ணில் புதைத்துவிடுவார், நிராமயமே எ-று. (௧௧௯)

எந்த முயிர்க்கே யெமனாய் வரும்பாச
பந்த மகலமுகம் பாராய் நிராமயமே.

இ-ள். எங்களுயிருக்கே எமனாய் வருகின்ற பாசபந்தவினைகள் நீங்கும்படி, எங்கள் முகம்பார்த் திரங்கவேண்டும், நிராமயமே எ-று. (௧௨௦)

அபய மெனைக்காப்ப தண்ணலே யுன்கடமை
உபய மினியொருவர்க் குண்டோ நிராமயமே.

இ-ள். பெரியோனே, உனக்கு அபயம் என்னைக் காப்பாற்றுவது உன் கடமையாம், இந்தக்கடமை இனிவேறொருவருக்கு உண்டோ, நிராமயமே. எ-று. (௧௨௧)

என்னை யுனதடிக்கீ ழிசைத்தாட்கொண் டாளாத
வின்னலையே யெண்ணி யிளைத்தேன் நிராமயமே.

இ-ள். என்னை உன் திருவடிக்கு அடிமைகொண்டு ஆளாத துன்பத்தையே நினைந்து இளைத்தேன், நிராமயமே எ-று. (௧௨௨)

நாமவத்தை யற்ற நவநாத சித்தர்தமைக்
காமங் கரைபுரளக் காணே னிராமயமே.

இ-ள். அச்சத்தைத் தருகிற அவஸ்தைகளற்ற நவநாத சித்தர்களை என் விருப்பப்படிக் கண்டிலேன், நிராமயமே எ-று. (௧௨௩)

தேங்காய்க் கிளநீர் செழிப்பிற் றிரட்சிதரப்
பாங்கா யருளுவது னுன் பார நிராமயமே.

இ-ள். தேங்காய்க்கு இளநீரானது செழிப்பைத் தருவதுபோல் நான் செழிப்படையும்படி அருள்செய்வது உன்பாரம், நிராமயமே எ-று. (௧௨௪)

கன்னலென வின்பங் கனிந்தொழுகு முன்னடிக்கென்
றன்னாலு மென்னபலன் றாயே நிராமயமே.

இ-ள். என் தாயே, கரும்பஞ்சாறுபோல இன்பத்தைத்தருகிற உன் திருவடிக்கு என்னால் உண்டாவதாகிய பயன் யாது, நிராமயமே எ-று. ()

அமையா மனமமைந்தே யருட்கடிமைப் பட்டவரை
எமனாலு மென்செயலா மெந்தாய் நிராமயமே.

இ-ள். அடங்காத மனம் அடங்கப்பெற்று உன் திருவருளுக்கு அடிமைப்பட்டவரை எமன் என்ன செய்யக்கூடும், நிராமயமே எ-று. (௧௨௬)

ஒன்றுக்கு மெட்டா துரைந்தசுயஞ் சோதியுய
ரண்டர்க்கு மெட்டாதென் றறிந்தே னிராமயமே.

இ-ள். ஒரு பொருளுக்கும் எட்டாமலிருக்கிற சுயஞ்சோதியானது உயர்ந்த தேவர்களுக்கும் எட்டாதென்று அறிந்துகொண்டேன், நிராமயமே எ-று. (கருகூ)

வஞ்சமின் றியென்னை வழிப்படுத் திவைக்கவுனை
யஞ்சலற நானடைந்தே னையா நிராமயமே.

இ-ள். வஞ்சனையில்லாமல் என்னை வழிப்படுத்தி வைக்கும்பொருட்டு உன்னை நான் சரணடைந்தேன் ஐயனே, நிராமயமே எ-று. (கச0)

தாயனைய வின்பந் தரும்பே ரின்பக்கடலில்
வாய்மடுக்கிற் றாகம் வருமோ நிராமயமே.

இ-ள். தாய்போ லின்பந்தருகின்ற பேரின்பக்கடலில் மூழ்கினால் தாகமுண்டாகுமோ, நிராமயமே எ-று. (கசக)

முன்னு ளெமக்கிருந்த மூதறிஞ ரோர்வசனம்
சொன்னா லதுவே சுகந்தா னிராமயமே.

இ-ள். முற்காலத்தில் எம்மவர்களாயிருந்த அறிஞர் வசனத்தைச் சொன்னால் அதுவே எமக்குச் சுகந்தருவதாகும், நிராமயமே எ-று. (கசஉ)

அட்டதிக்கு மண்விண் ணடங்கும் பெருவெளியில்
நட்டநடு விருந்த நாதா நிராமயமே.

இ-ள். அஷ்டதிக்குகளும் மண்ணும் விண்ணும் அடங்குகின்ற பெருவெளியின் நட்டநடுவே யிருந்த நாதனே, நிராமயமே எ-று. (கசங)

தீதுநல முதலாஞ் செய்கையக லவைத்தாய்
ஈதொன்றும் போதுமெனக் கெந்தாய் நிராமயமே.

இ-ள். தீமை நன்மை முதலாகிய செய்கைகளை நீக்கவைத்தால் எனக்கு இது ஒன்றுமே போதும் எந்தையே, நிராமயமே எ-று. (கசச)

கெர்ப்பத் திலென்னைக் கிடத்தியமு தூட்டுமுனக்
கொப்புவமை யாரென் றுரைப்பே னிராமயமே.

இ-ள். தாய்வயிற்றில் என்னைக் கிடத்தி அவ்விடத்திலும் எனக்கு அமுது ஊட்டுகின்ற உனக்குச் சமானமாக யாரை எடுத்துச் சொல்லுவேன், நிராமயமே எ-று. (கசரு)

எவ்வுலகு மேவற் கிணங்காதோ நின்னருடான்
செய்விக்கப் பட்டோர்க்குச் செப்பாய் நிராமயமே.

இ-ள். உன் திருவருளுக்கு உரியவரான ஞானியர்க்கு எல்லா வுலகங்களும் ஏவற்பணிவிடை செய்யாதே சொல்லாய், நிராமயமே எ-று. (கசசு)

தன்றேசம் விட்டுத் தனித்த தபோதனர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பா நிராமயமே.

இ-ள். தன்தேசம்விட்டுத் தனித்திருக்கின்ற தபோதனர்க்குச் சென்ற விடங்களிலெல்லாஞ் சிறப்புண்டாகும், நிராமயமே எ-று. (௧௪௭)

சிந்தைக் கலக்கஞ் சிதறிவிடச் செய்வதுவே
எந்தத் தவத்தினுநன் றெந்தாய் நிராமயமே.

இ-ள். மனக்கலக்கத்தை நீக்கிவிடுவதே எல்லாத் தவத்தினும் நன்றாகும் எந்தையே, நிராமயமே எ-று. (௧௪௮)

தேடுவது நாடுவதுஞ் சிந்தைத் திருநடனை
மாடுவது முன்னடியார்க் காசை நிராமயமே.

இ-ள். உன்னைத் தேடுவதும் தியானிப்பதும் தம்மனத்தில் நீ திருநடனமாடுவதும் உன் அடியார்க்கு ஆசையாம், நிராமயமே எ-று. (௧௪௯)

கண்டபக லிரவுங் காணார்க்குஞ் சூரியனு
றென்றெழுநா மென்ன வியம்பாய் நிராமயமே.

இ-ள். காணப்பட்ட பகலிரவுகளை காணாதவர்க்கு என்று அச்சூரியன் உதயமானால் என்ன நீ சொல்லாய், நிராமயமே எ-று. (௧௫0)

செத்தசவ மென்றுஞ் சின்னஞ் சிறியரென்றும்
முத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே.

இ-ள். செத்தபிணம்போலவும் சிறுகுழந்தைகள்போலவும் இருப்பது சீவன்முத்தர்க்கு முறைமையாகும், நிராமயமே எ-று. (௧௫௧)

சட்டரசங் கள்முதற் சருவமில் லங்கசுத்தி
இட்டர்க்குன தருள்வந் தெய்து நிராமயமே.

இ-ள். அறுசுவை முதலியவற்றை ஒழித்தவர்களுக்கு உன் அருள் வந்து பலிக்கும், நிராமயமே. எ-று. (௧௫௨)

ஆகமத்துங் கெட்டா வகண்டபரி பூரணமாம்
ஏகவெளி யன்றோ வியம்பாய் நிராமயமே.

இ-ள். ஆகமாதிகளுக் கெட்டாத அகண்டபரிபூரணப் பொருளானது ஏகவெளியல்லவா, சொல்லாய், நிராமயமே. எ-று. (௧௫௩)

தேகமுடையு மெனத் தேர்ந்தமனத் தினர்போற்
பாக பக்குவத்தைப் படையே னிராமயமே.

இ-ள். உடம்பு அழியும் என்று தெளிந்த மனத்தை யுடையவர்கள் போலப் பக்குவத்தை நான் அடைந்தேனில்லை, நிராமயமே. எ-று. (௧௫௪)

நாழியுப்பு நாழியப்பும் நாழியாந் தன்மையுமுப்
பாழெய் தினர்க்கோ பகராய் நிராமயமே.

இ-ள். நாழி உப்பும் நாழி நீரும் நாழியேயாகுந் தன்மைபோல முப்பாழை அடைந்தோர்கள் பிரமப்பொருளில் அடங்கிப்போவர், நிராமயமே எ-று. (கருரு)

கொத்தோ டடிமை குடியாக வென்றனையுன்
பத்தருக் கென்றோ படைத்தாய் நிராமயமே.

இ-ள். உன் அடியார்க்குக் கொத்தோடு அடிமைக் குடியாகவோ என்னைப்படைத்தாய், நிராமயமே எ-று. (கருசு)

எந்த வுயிரு மெமதுயிரென் றெண்ணியெண்ணிச்
சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே.

இ-ள். எல்லா உயிர்களும் எம்முயிரே என்று எண்ணி எண்ணி என் மனந்தெளியும்படி அருள் செய்யவேண்டும், நிராமயமே எ-று. (கருஎ)

அந்திபக லற்ற வகண்டிதா காரமுமென்
புந்தி வெளிக்குட் புகுமோ நிராமயமே.

இ-ள். இராப்பகல்கள் அற்ற அகண்டிதாகாரப் பொருளானது என் மனவெளிக்குள் பிரவேசிக்குமோ, நிராமயமே எ-று. (கருஅ)

உள்ளுள் ளுயிரா யுறைந்த வுனைத்தொழவே
பள்ளி யறையேன் பகராய் நிராமயமே.

இ-ள். உயிர்க்குயிரா யிருக்கிற உன்னைத் தொழுவதற்குப் பள்ளிஅறை என்சொல்லாய், நிராமயமே எ-று. (கருகூ)

மேலிட்ட வாணவத்தை மெலியவிட்ட மேலவர்க்கு
மூலத் தெழுந்த முனையே நிராமயமே.

இ-ள். அதிகரித்த ஆணவத்தை அடக்கின மேலோர்க்கு மூலாதாரத் தினின் றோன்றின முதற்பொருளே, நிராமயமே எ-று. (கசு0)

மூலமுத லாறுதல முட்டிநின்ற குண்டலியின்
பாலிற் கதித்தேகப் படுமோ நிராமயமே.

இ-ள். மூலமுதலாகிய ஆறுதலங்களிலும் முட்டிநின்ற குண்டலியினிடத்து விரைந்து போகப்படுமோ, நிராமயமே எ-று. (கசுக)

பஞ்சசுத்தி செய்த பழவடியா ரென்னவுன்னை
யஞ்சலி செய்தே யடைந்தே னிராமயமே.

இ-ள். பஞ்சசுத்திசெய்த பழவடியார்போல உன்னை அஞ்சலிபண்ணி அடைந்தேன், நிராமயமே எ-று. (கசுஉ)

தொண்டர்பணிக் காளாய்ச் சுதைப்படுத்தி விட்டுவிடற்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் நிராமயமே.

இ-ள். கருணைமிகுந்த எந்தையே உன்னடியார் பணிவிடைக்கு நான் ஆளாகும்படிச் செய்தற்கு எந்த காலத்தில் நீ மனமிரங்குவாய், நிராமயமே எ-று. (௧௬௩)

ஓவியத்தைப் போலே யுரைந்த மனத்தினரென்
ஞவிக் கிறுதுணையா மையா நிராமயமே.

இ-ள். சித்திரப்பாவைபோல அசைவற்றிருக்கிற மனத்தையுடையவர் என் உயிர்க்கு உற்றதுணையாவர் ஐயனே, நிராமயமே எ-று. (௧௬௪)

விரிந்த சரியைமுதன் மேவிநின்ற மெய்ஞ்ஞானக்
கரும்புமுதற் கண்டெனவுங் கண்டே னிராமயமே.

இ-ள். சரியைமுதலிய நான்கையும் அடைந்துநின்ற மெய்ஞ்ஞானியர்க்கு நீ கருப்பஞ்சாறு போலவும் கற்கண்டு போலவும் இனித்திருக்கிறு யென்று கண்டுகொண்டேன், நிராமயமே எ-று. (௧௬௫)

அஞ்ஞானம் விட்டே யறந்தாங்கி வந்தவர்க்கு
மெய்ஞ்ஞானந் தானே விளங்கு நிராமயமே.

இ-ள். அஞ்ஞானத்தைவிட்டுத் துறவறம் தாங்கிவந்தவருக்கு மெய்ஞ்ஞானமானது தானே விளங்கும், நிராமயமே எ-று. (௧௬௬)

தின்றுடுத்திப் பூண்டு திரியவெனப் பாவிமனச்
சண்டி புரளச் சரிமோ நிராமயமே.

இ-ள். உண்டு உடுத்துப்பூண்டு திரியவேண்டுமென்று பாவி மனமானது சண்டிபுரளுதல் சரியாமோ, நிராமயமே எ-று. (௧௬௭)

எம்மா லிசைந்த விருவினையும் போகவிட்டுச்
சும்மா விருக்கச் சுகந்தா னிராமயமே.

இ-ள். எங்களால் செய்துகொள்ளப்பட்ட இருவினைகளையும் போக விட்டுச் சும்மாயிருக்கச் சுகமுண்டாகும், நிராமயமே எ-று. (௧௬௮)

பாசவினை யெல்லாம் பறந்திடமெய்ஞ் ஞானவைவாள்
வீசவரு டானே விளக்காய் நிராமயமே.

இ-ள். பாசவினைகளெல்லாம் பறந்தோடும்படி மெய்ஞ்ஞானமாகிய கூர்மைபொருந்திய வாளை வீசும்படி உன் திருவருள் செய்யவேண்டும், நிராமயமே எ-று. (௧௬௯)

தன்னி லிருந்த தலைவன் றனையறியா
தென்னையறிந் தென்னபல னெந்தாய் நிராமயமே.

இ-ள். தனக்குள்ளே இருந்த தலைவனை அறியாமல் என்னைமாத்திரம் அறிந்தால் என்ன பயனுண்டாகும், நிராமயமே எ-று. (௧௭௦)

உன்னை மறப்பிக்க வுருவெடுத்த வாணவப்பேய்
தன்னை மறப்பிக்கத் தகாதோ நிராமயமே.

இ-ள். உன்னை மறப்பிக்கும்படி உருவெடுத்த ஆணவப்பேயை மறப்பிக்கத்தகாதோ, நிராமயமே எ-று. (கஎக)

இல்லாத மாயை யெனைத்தொடரா வண்ணமொரு
சொல்லருள் செய்யென் றுரையே நிராமயமே.

இ-ள். இல்லாதமாயை என்னைத் தொடராதபடி ஒரு சொல்லை அருள் செய்வாயாக என் துரையே, நிராமயமே எ-று. (கஎஉ)

துர்க்குணமே கொண்ட தொழும்பனியான் றொல்லுலகிற்
கற்குணத்த ரென்போலுங் காணே னிராமயமே.

இ-ள். கெட்டகுணத்தையே அடைந்திருக்கிற அடியேன்போல இந்தப் பழமையாகிய உலகத்தில் கடினகுணமுள்ளவர்களைக் கண்டிலேன், நிராமயமே எ-று. (கஎங)

பொல்லாவென் னெஞ்சம் புழுங்க வருகவலை
சொல்லுங் கடங்காச் சுகங்கா ணிராமயமே.

இ-ள். பொல்லாத என்மனம் புழுங்கும்படி உண்டாகின்ற கவலைகள் சொல்லுக் கடங்காதனவாகும், நிராமயமே எ-று. (கஎச)

அலையு மனத்தை யகத்தடக்கு மன்பருளம்
உலையி னிடுமெழுகுக் கொப்பாம் நிராமயமே.

இ-ள். அலையாநின்ற மனத்தை உள்ளே அடக்குகின்ற அன்பர்மனம் உலையிலிட்ட மெழுகுக்கு நிகராகும், நிராமயமே எ-று. (கஎரு)

எழுகடலு மோர்கடுகி னிடையிருத்தக் கற்றாலும்
வழுவு மனத்தினர்க்கு வாயே னிராமயமே.

இ-ள். எழுகடல்களையும் ஒரு கடுகினுள்ளே அடக்கும்படி கற்றிருந்தாலும் மனத்தை அடக்காதவர்க்கு வாய் ஏன், நிராமயமே எ-று. (கஎசு)

போருக்கே வந்தெதிர்த்த போக்கிரிபோ லென்னிதயம்
நேரம்பே சுவதென்ன செய்வே னிராமயமே.

இ-ள். போர்செய்யவந்து எதிர்த்த போக்கிரிகள்போல என்மனம் தைரியம் பேசுவதற்கு நான் என்னசெய்வேன், நிராமயமே எ-று. (கஎஎ)

சோம்பே றிகள்போற் சுருண்ட மனத்தினர்க்குக்
காம விகாரங் கசப்பாம் நிராமயமே.

இ-ள். சோம்பேறிகள்போல சோம்பின மனத்தை யுடையவர்களுக்கு காமவிகாரம் கசப்பாகும், நிராமயமே எ-று. (கஎஅ)

ஒழியாப் பிரபஞ்சத் துறவை மறவார்க்குக்
கழியிற் படுநாரைக் கதிகா ணிராமயமே.

இ-ள். நீங்காத பிரபஞ்சத்தின் உறவைமறவாதவர்க்கு கழிகளில்உள்ள நாரையின் கதியாம், நிராமயமே எ-று. (௧௭௯)

புந்தி யிதமகிதப் பூட்டுவிட்ட மோகர்தமக்
கந்தி பகலறுமென் னையா நிராமயமே.

இ-ள். மனத்தில் இதம் அகிதம் என்னும் பேதம் அற்ற பேர்களுக்கு அந்திபகல் என்பன இல்லையாம், நிராமயமே எ-று. (௧௮௦)

நானே நெருப்பாறு நடக்குமயிர்ப் பாலமும்யான்
றானே யெனுமறிவைத் தாராய் நிராமயமே.

இ-ள். நெருப்பு ஆறும் நானே அதன்மேல் நடக்கிற மயிர்ப்பாலமும் நானே என்கின்ற அறிவை எனக்குத் தந்தருளவேண்டும், நிராமயமே எ-று.

மின்னனைய பொய்யுடலை மெய்யென்ற பொய்யரினி
என்ன கதிபெறுவா ரெந்தாய் நிராமயமே.

இ-ள். மின்போன்ற பொய்யுடம்பை மெய்யென்ற பொய்யர்கள் இனி என்னகதி யடைவார்களோ எந்தையே, நிராமயமே எ-று. (௧௮௨)

கருவிப் பெருவெளியிற் கருத்தைச் செலுத்தாருக்
கருவி சொரியவரு ளாங்கா ணிராமயமே.

இ-ள். கருவிகளாகிய பெருவெளியிலே மனத்தைச் செலுத்தாதவர்களுக்கு அருள்மழை அருவிபோலச் சொரியும், நிராமயமே எ-று. (௧௮௩)

தேயாப்பஞ் சாக்ஷரவா ளீட்டுந் திறத்தினர்க்குக்
காயா புரிக்கோட்டை கைவங்கா ணிராமயமே.

இ-ள். குறையாத பஞ்சாக்ஷரமாகிய வாளை தீட்டுகின்ற திறமை உள்ளவர்க்கு காயாபுரிக்கோட்டையானது கைவசமாகும், நிராமயமே எ-று. ()

பூமிப் பரப்பைவலம் போய்வரினும் பாவிகளைக்
காம வினையகலக் காணே னிராமயமே.

இ-ள். பூமிப்பரப்பு முழுதும்போய்த் திரிந்துவந்தாலும் பாவிகளுக்கு காமத்தொழில் நீங்கியிருக்கக் கண்டிலேன், நிராமயமே எ-று. (௧௮௫)

கோணற் கருப்பிரசங் கோணாத கொள்கையென்றன்
ஆணவத்தி லுந்தனறிவா னிராமயமே.

இ-ள். கோணலாகிய கரும்பினது சாறுனது கோணாத தன்மைபோல என் ஆணவத்தில் உன் ஞானமானது கோணாதிருக்கின்றது, நிராமயமே எ-று. (௧௮௬)

கானலைநேர் பொய்யுடலைக் கல்லாகக் கண்டவர்க்கு
நாணுமை நின்றே நடிக்கும் நிராமயமே.

இ-ள். கானலை நிகர்க்கின்ற பொய்யுடம்பைக் கல்லாகக்கண்டவர்க்கு நாணமில்லாமை நிலைபெற்று நடிக்கும், நிராமயமே எ-று. (க௮எ)

செலக்குமிழி போன்றவென்றன் சிற்றுடற்கு மித்தனையோ
சலக்கமதை வைத்தாயென் கண்ணே நிராமயமே.

இ-ள். நீர்க்குமிழிபோன்ற என் சிறிய உடம்புக்கும் இத்தனை கவலைகளை உண்டாக்கி வைத்தனையே, நிராமயமே எ-று. (க௮௮)

பொய்வாழ்வை நம்பும் புலையர் தமக்குனது
மெய்வாழ்வு வந்து விடுமோ நிராமயமே.

இ-ள். பொய்வாழ்க்கையை நம்புகின்ற புலையர்களுக்கு உன் மெய்வாழ்வுவந்து கைகூடுமோ, நிராமயமே எ-று. (க௮௯)

கனக்கு மிருவினையாங் காவடியைத் தூக்குவதற்
கெனக்குமுடி யாதினிமே லெந்தாய் நிராமயமே.

இ-ள். பெரிதாகிய இருவினைகளென்கிற காலடியைத் தூக்குவதற்கு இனிமேல் எனக்கு முடியாது எந்தையே, நிராமயமே எ-று. (க௯0)

துறவின்றிச் செய்வினையின் றொகைப்பலனை தென்பவர்க்கு
நரகசொர்க்க மென்றே நவின்றாய் நிராமயமே.

இ-ள். துறவடையாமல் செய்கின்ற வினைப்பயன்கள் எவை என்று கேட்பவர்களுக்கு அவை நரகசொர்க்கங்களென்றே சொல்லியருளினாய், நிராமயமே எ-று. (க௯க)

காதொடுகண் வாய்மூக்குங் கண்டமெய்யோ டையறிவும்
வாதாடு தற்கோ வளர்த்தே னிராமயமே.

இ-ள். காது கண் வாய் மூக்கு மெய் என்னும் இவ்வைந்தினையும் நான் வளர்த்தது என்னோடு வாதுசெய்வதற்குத்தானே, நிராமயமே எ-று. (க௯உ)

மாதா பிதாவும் வருந்தி வருத்திவைத்த
போதனையைப் பார்க்கிற் பிழைதா னிராமயமே.

இ-ள். தாய்தந்தையர்களும் வருத்தப்பட்டு எனக்குண்டாக்கிவைத்த போதனையைப் பார்க்குமிடத்து அது பிழையாகவே காணப்படுகிறது, நிராமயமே எ-று. (க௯௩)

செல்லு மளவுஞ் செலுத்துகின்ற சிந்தையினோர்க்
கல்லும் பகலுமறு மையா நிராமயமே.

இ-ள். செல்லுமளவும் செலுத்துகின்ற மனத்தையுடையவர்களுக்கு அல்லும் பகலும் அற்றொழியும், நிராமயமே எ-று. (க௯௪)

வேதச் சுமையதனை வீம்புக்கெடுத்த வுடன்
மாதவத்திற் கெங்கே வளையும் நிராமயமே.

இ-ள். வேதச்சுமையை வீம்புக்கு எடுத்த உடல் பெருந்தவத்தைச் செய்வதற்கு எவ்வாறு வளையும், நிராமயமே எ-று. (௧௯௫)

நரம்பென்பு தோலா னடிக்கின்ற பாவைதனிற்
குரும்புமுத லெல்லாங் குடிகா ணிராமயமே.

இ-ள். நரம்பு எலும்பு தோல் என்பவற்றால் ஆடுகின்ற பாவையாகிய இவ்வுடம்பில் குறும்பு முதலிய எல்லாம் குடியிருக்கின்றன, நிராமயமே எ-று. (௧௯௬)

தூலத்து ளிச்சை தொலைத்தோரிஞ் ஞாலமுதல்
ஆலத்துக் கொப்பென் றறைந்தாய் நிராமயமே.

இ-ள். தூலசரீரத்தில் உள்ள இச்சையைத் தொலைத்தவர்கள் இவ்வுலகத்தார்க்கு விஷத்துக்குச் சமமாவர் என்று சொல்லி யருளினாய், நிராமயமே. எ-று. (௧௯௭)

வானேற நூலேணி வைத்தாற்போ லுன்னடிபால்
நானேறு வேனென்ற நாட்டம் நிராமயமே.

இ-ள். திருவடியில் நான் ஏறுவேன் என்கிற நாட்டமானது ஆகாயத்தி லேறுதற்கு நூலேணிவைத்தாற்போலாகும், நிராமயமே எ-று. (௧௯௮)

மைந்தர்களைப் பெற்றுமற லிக்களித்தா ரென்றேயுன்
சிந்தைநெருப் பாயெரியச் செய்தாய் நிராமயமே.

இ-ள். புதல்வர்களைப்பெற்று யமனுக்குக் கொடுத்துவிட்டார்களென்று உன்மனம் நெருப்பாய் எரியச் செய்தருளினை, நிராமயமே எ-று. (௧௯௯)

நாலுதிக்கி லும்விஜய நாட்டுமன்னர் கோட்டையெல்லாம்
பாலர்மணற் சோற்றின் படியாம் நிராமயமே.

இ-ள். நான்கு திசையிலும் தமது வெற்றியை நிலைபெறுத்துகின்ற அரசரது கோட்டையெல்லாம் குழந்தைகள் சமைத்த மணற்சோற்றுக்கு நிகராம், நிராமயமே எ-று. (௨00)

பாட்டைப் படித்ததனாற் பகர்ஞான வானென்ப
தேட்டுச் சுரைக்காய்க் கியல்பாம் நிராமயமே.

இ-ள். பாட்டைப்படித்து அதனால் நான் ஞானியானேன் என்பது எட்டுச்சுரைக்காய்க்கு நிகராகும், நிராமயமே எ-று. (௨0௧)

நின்னரு ளன்றி நிறைவுகுறை யென்பாருக்
கென்ன கதிமுடிவி லெந்தாய் நிராமயமே.

இ-ள். உன் அருள் இல்லாமல் நிறைவு குறைவு என்று சொல்லுவோருக்கு முடிவில் என்னகதி உண்டாகுமோ, நிராமயமே எ-று. (௨0௨)

தேகாபி மானத் திரைகடந்த தேசிகர்க்கு
மோகங்க ளெங்கே முயலும் நிராமயமே.

இ-ள். தேகாபிமானமாகிய திரையைக்கடந்த தேசிகருக்கு மோகங்கள் எவ்வாறு மேல்விழும், நிராமயமே எ-று. (௨0௩)

சித்தந் தெளிந்த சிவஞா னியருலகப்
பித்த ருறவைப் பிடியார் நிராமயமே.

இ-ள். மனந்தெளிந்த சிவஞானிகள் உலகத்திலுள்ள பித்தர் உறவைப் பற்றமாட்டார், நிராமயமே எ-று. (௨0௪)

புத்தி தெளியாப் புலத்தோர் தமைத்தவத்துன்
மத்த மனுஷரென மாட்டே னிராமயமே.

இ-ள். புத்தித் தெளிவடையாதவர்களைத் தவத்தையுடைய உன்மத்த மனிதர் என்று சொல்லமாட்டேன், நிராமயமே எ-று. (௨0௫)

தொல்லைப் பெருமல்லற் றொலைத்தாருக் கேதொன்றுஞ்
சொல்லத்தா னுண்டோதான் சொல்லாய் நிராமயமே.

இ-ள். பழமையாகிய பெருந்துன்பங்களைத் தொலைத்துவிட்டவர்களுக்கு யாதொன்றும் சொல்லவேண்டியதுண்டோ நீ சொல்லாய், நிராமயமே எ-று. (௨0௬)

போக்கும் வரத்துமெல்லாம் பொய்யென்ற புண்ணியர்க்கு
நீக்கு மருளுண்டோ நிகழ்த்தாய் நிராமயமே.

இ-ள். போக்கும் வரத்துமாகிய எல்லாவற்றையும் பொய் என்று எண்ணின புண்ணியவான்களுக்கு ; நீக்கத்தக்க மருள் உண்டோ சொல்லாய், நிராமயமே எ-று. (௨0௭)

எத்தனையோ கற்றுமித யந்தெளியா தேயிருந்த
பித்தருட னேசம் பிழைநா னிராமயமே.

இ-ள். எத்தனைக் கல்விகற்றும் மனந்தெளியாமலிருந்த பித்தருடன் நேசம் பண்ணுவது பிழையாகும், நிராமயமே எ-று. (௨0௮)

வஞ்சப்ரபஞ்ச மயக்கொழிந்தா லல்லாதுன்
அஞ்சலெனும் பேரருளி லாதே னிராமயமே.

இ-ள். வஞ்சகமாகிய இந்தப் பிரபஞ்சத்தின் மயக்கம் ஒழிந்தாலல்லது உன்பேரருள் என்மீது உண்டாகாது, நிராமயமே எ-று. (௨0௯)

அண்டு மிருவினைப்பே யண்டா தடிப்பவர்க்குத்
தொண்டு செய்வார்க் கன்றோ சுகங்நா னிராமயமே.

இ-ள். வந்துசேருகின்ற இருவினைப்பேய்களைச் சேராதபடி அடிப்பவர்களாகிய ஞானிகளுக்குத் தொண்டுசெய்வார்களுக்கு அல்லவோ சுகம் உண்டாவது, நிராமயமே எ-று. (௨௧0)

என்னெஞ்சந் தானே யெனைக்கெடுக்கு மின்னுமெனைச்
சின்னப் படுத்திலென்ன செய்வே னிராமயமே.

இ—ள். என்மனந்தானே யென்னைக் கெடுக்கின்றது, அது இன்னமும் என்னைச் சின்னப்படுத்தினால் நான் என்னசெய்வேன், நிராமயமே எ—று. ()

மூடு மெனதறிவே மூடி யிருந்தாலுன்
ஆடுமறி வெங்கேநின் றாடு நிராமயமே.

இ—ள். மூடாநின்ற என்னறிவே மூடப்பட்டிருந்தால், உனது ஆடு மியல்புள்ள அறிவானது எங்கேநின்று ஆடும், நிராமயமே எ—று. (௨௧௨)

ஓடியே யுள்ளமட்டு மோடி யிதயம் மயங்கி
வாடியே நின்சமுகம் வந்தே னிராமயமே.

இ—ள். உள்ளமட்டும் ஓடியோடி நன்மையடையாமல் மனமயங்கிவாடி உன் சமுகத்துக்கு வந்தேன், நிராமயமே எ—று. (௨௧௩)

முட்டா ளெனும்பட்ட முழுதுமெனக் கீயவுனக்
கிட்ட மிருந்தா லியம்பாய் நிராமயமே.

இ—ள். முட்டாள் என்கிற பட்டப்பெயரை யெனக்குக் கொடுக்க உனக் கிஷ்டமிருந்தால் சொல்வாயாக, நிராமயமே எ—று. (௨௧௪)

ஆலமுறுந் தூல மனித்தியமென் போர்க்காசை
மாலெங்கே நின்று வருங்கா ணிராமயமே.

இ—ள். பெரிதாகிய இந்தத்தூலசரீரம் அநித்தியமென் றறிந்தவர்களுக்கு, ஆசையானது எங்கே யிருந்துவரும், நிராமயமே எ—று. (௨௧௫)

ஆர்ப்புக் குயிரான அண்டபகி ரண்டமுமாந்
தாற்பரியஞ் சொல்லத் தகுமோ நிராமயமே.

இ—ள். ஆரவாரத்தையுடைய உயிரானது அண்டபகி ரண்டங்களும் தானேயாகின்ற தாற்பரியத்தை சொல்லத்தகுமோ, நிராமயமே எ—று. ()

எண்டிசையுந் தானா யியங்கு முனைத்தொழுதற்
கண்ட சராசரநின் றாடும் நிராமயமே.

இ—ள். அஷ்டதிக்குக்களும் தானாய் விளங்குகின்ற வுன்னை வணங்குதற்கு, அண்டசராசரங்களும் நின்றாடுகின்றன, நிராமயமே எ—று. (௨௧௭)

காற்றாடி போலக் கருத்துவந்து தேடியுனை
ஆற்றா தயர்ந்தேனென் னையா நிராமயமே.

இ—ள். கருத்துண்டாகி, காற்றாடிபோலச் சுழன்று உன்னைத் தேடிக் காணாமையால், சகிக்கமுடியாமல் அயர்ந்தேன், நிராமயமே எ—று. (௨௧௮)

எல்லாம் படித்துநடப் பெய்தினரின் புற்றனர்மற்
றல்லாரை யாரென் றறியே நிராமயமே.

இ-ள். எல்லாம்படித்து அதற்கேற்க நடப்பவர் இன்பமடைந்தார்கள், அப்படிக்கில்லாத மற்றவர்கள் யாரோவென் றறியமாட்டேன், நிராமயமே எ-று. (உகக)

அன்னைசுற்ற மெல்லா மகலவிட்ட வன்பர்தமக்
கின்ன லநலுமற்றெ வர்க்காம் நிராமயமே.

இ-ள். தாய் உறவினர் என்னும் எல்லாவற்றையும்விட்ட அன்பருக்குத் துன்பமொழியும், மற்றவர்க் கொழியாது, நிராமயமே எ-று. (உஉ0)

சாருதனீ யன்றியில்லைச் சத்திய மென்மனத்தை
ஆராய வேண்டாமென் னரசே நிராமயமே.

இ-ள். எனக்கு உன்னையன்றி வேறு ஆதரவில்லை, இது சத்தியம், நீ என்மனத்தைச் சோதிக்க வேண்டுவதில்லை, நிராமயமே எ-று. (உஉக)

தத்து மனத்தினர்க்குத் தாரபலன் போகிறதை
எத்தனையென் றேயுரைப்ப தெந்தாய் நிராமயமே.

இ-ள். தடுமாறுகின்ற மனத்தையுடையவர்க்குப் பயனில்லாமற் போவதை, எவ்வளவென் றெடுத்துச் சொல்வேன், எந்தையே, நிராமயமே எ-று.

கொல்லுங் கொலைக்கஞ்சாக் கொலைஞனெனும் பாவிமனத்
தொல்வினையைத் தீர்க்கச் சுகங்கா ணிராமயமே.

இ-ள். கொல்லுகின்ற கொலைத்தொழிலுக் கஞ்சாத கொலைஞன் என்கிற பாவியாகிய எனது பழைய மனத்துன்பத்தைத் தீர்ப்பாயானால், எனக்குச் சுகமுண்டாகும், நிராமயமே எ-று. (உஉங)

உன்னையின்றி யென்னை யொதுக்கிவைப்ப தெந்தநெறி
அன்னையின்றிச் சேய்தானுண் டாமோ நிராமயமே.

இ-ள். உன்னையல்லாமல் என்னைமாத்திரம் ஒதுக்கிவைப்பது எந்த நெறி தாயில்லாமல் பிள்ளையுண்டாமோ, நிராமயமே எ-று. (உஉச)

பொங்கு கருணைப் புறஞ்சுழித்தாற் கள்ளமன
வங்கமெங்கே யோடி வருங்கா ணிராமயமே.

இ-ள். மிகுதியாகிய உன்கருணைப் பெருக்கானது சுழித்துவந்தால், கள்ளமனமாகிய கப்பல் எங்கே யோடிவரும், நிராமயமே எ-று. (உஉரு)

நல்லாத கல்வியெல்லாங் கற்றுமுயர் ஞானகலை
இல்லார்க்கு மின்பநிலை யேதோ நிராமயமே.

இ-ள். கற்கவொண்ணாத கல்வியெல்லாம் கற்றும் உயர்ந்த ஞானக் கலையைக் கல்லாதவர்களுக்கு இன்பநிலை யெப்படி யுண்டாகும், நிராமயமே எ-று. (உஉசு)

விளக்குஞ் சுடரினையும் வேறுவே றெண்ணுருக்
குழக்குளப்பு முப்பெனவு மொன்று நிராமயமே.

இ-ள். விளக்கும் சுடரும் வேறு வேறு யெண்ணுதவர்க்கு, உழக்கி னுள்ளிருக்கிற நீரும் உப்பும்போல ஒன்றுந் தன்மையுளதாகும், நிராமயமே எ-று. (௨௨௭)

சார்ந்தோரைத் தூடணிக்குந் தப்பிலிக ளோப்புவியில்
ஏற்றான் படைத்ததுதா னெந்தாய் நிராமயமே.

இ-ள். தம்மைச்சார்ந்தவர்களை தூஷிக்கிற தப்பிலிகளை இவ்வுலகத்தில் ஏயன் படைத்தாய், நிராமயமே எ-று. (௨௨௮)

புத்தியகங் காரம் பூணு மனமிறக்கிற்
சித்த மகத்துவத்தைச் சேரும் நிராமயமே.

இ-ள். புத்தி அகங்காரங்களைக் கொண்டிருக்கிற மனமிறந்தால், சித்த மானது மகத்துவத்தையடையும், நிராமயமே எ-று. (௨௨௯)

நானோ திருவடியை நாடுவதுந் தேடுவதும்
ஆனா லதுபெரிதா மையா நிராமயமே.

இ-ள். உன்திருவடியை நாடுவதும் தேடுவதும் நானோ, அப்படியானால் நான் மிகப்பெரியவன், ஐயா, நிராமயமே. எ-று. (௨௩0)

காற்றுத் துருத்தியைந்து கள்வர் புலைக்குடிலே
சோற்று லெடுத்த சுவர்கா ணிராமயமே.

இ-ள். சோற்றுலெடுத்த சுவராகிய உடம்பு காற்றுத் துருத்தியாகும், அன்றியும், ஐந்துகள்வர் வாழ்கின்ற புலைக்குடிலாகும், நிராமயமே எ-று. ()

மன்னுங் கலைஞான மார்க்கமறிந் தோர்க்குமுறும்
அந்நியங்க ளேது மறியார் நிராமயமே.

இ-ள். நிலைபெற்ற கலைஞானமார்க்க மறிந்தோர்கள், வேறு எவற்றையும் அறியார், நிராமயமே எ-று. (௨௩௨)

சென்னிக் கிசையச் சிவராஜ யோகநிலை
வன்ன மலர்ப்பதத்தை வைத்தே னிராமயமே.

இ-ள். சிவராஜ யோகநிலைக்குரிய உனது அழகிய மலர்ப்பதத்தை என் சிரசில் அமைத்துக்கொண்டேன், நிராமயமே எ-று. (௨௩௩)

சென்ம மெடுத்தாற் செகமாயை விட்டொழிந்து
நன்மை பெறுத னயங்கா ணிராமயமே.

இ-ள். பிறவி யெடுத்தால் பிரபஞ்ச மாயையைவிட்டொழிந்து நன்மை யாகிய முத்தியடைதலே அதன் பயனாகும், நிராமயமே எ-று. (௨௩௪)

பாச மறவார் பரமபதத்தினர்போற்
பேசுசிலர் கூடவுநான் பேசே னிராமயமே.

இ-ள். பாசத்தை விடாதவர்களாய், முத்தியடைந்தவர்கள் போலப் பேசுகின்ற சிலருடனே நான் பேசவேமாட்டேன் நிராமயமே எ-று. (உகூ௬)

நேராம் வழிகாட்டி நிச்சயத்தைச் சொல்லவெனக்
காருன்னை யன்றி யாரே நிராமயமே.

இ-ள். நேராகிய வழியைக்காட்டி நிச்சயத்தைச் சொல்வதற்கு, எனக்கு உன்னையன்றி வேறுயாரிருக்கிறார்கள், இறைவனே, நிராமயமே எ-று.

வாசகத்தின் ஞானமெல்லாம் வந்ததுபோற் பேசியையோ
மோசப் படவு முறையோ நிராமயமே.

இ-ள். எல்லாம் தெரிந்ததுபோல வாசாஞானம்பேசி, அந்தோ, நான் மோசம்போவது முறையாகுமோ, நிராமயமே எ-று. (உகூ௭)

பெட்டி நிறையப் பெருக்கிவைத்த பெட்டகத்தார்
குட்டிச் சுவரென்றோ குறித்தாய் நிராமயமே.

இ-ள். இந்த வுடம்பாகிய பெட்டி நிறைய மலமூத்திராதிகள் நிறைந்திருப்பதனால், இதனைக் குட்டிச்சுவரென்றுதானோ நினைத்தாய், நிராமயமே எ-று. (உகூ௮)

மனம்பாச மற்றுநிற்க வாயா லுனைப்புகழும்
இனங்கள் முழுதுமெனக் கெதிர்கா ணிராமயமே.

இ-ள். மனமானது பாசத்தையொழிந்து நிற்கும்படி, வாயாரவுன்னைப் புகழும்படியான இனத்தாரெல்லாரும் எனக்கு இனத்தாரேயாவர், நிராமயமே எ-று. (உகூ௯)

வாசனையைப் போக்கும் வரமுண் டெனவொருசொல்
நீசருக்கு முண்டோ நிகழ்த்தாய் நிராமயமே.

இ-ள். பிரபஞ்சவாசனையைப் போக்குகின்ற மேலான ஒருசொல்லை நீயருளிச்செய்யும்படியான பாக்கியம் நீசருக்கும் உண்டாகுமோ, சொல்வாயாக, நிராமயமே எ-று. (உ௪0)

அன்னை பிதாவு மனைந்தகுரு வாக்கினைக்கா
என்னைப் பிறக்கவைத்தா யெந்தாய் நிராமயமே.

இ-ள். மாதாபிதா குருவாக்கியப்படி நடக்கவோ என்னைப் பிறப்பித்தாய், எந்தையே, நிராமயமே எ-று. (உ௪க)

மாதா பிதாவும் மயற்ந்த வாற்றினுக்கு
வாதோ வெனைப்பிறக்க வைத்தாய் நிராமயமே.

இ-ள். மாதா பிதாவின் வாஞ்சை யொழித்து நிற்பதற்கோ என்னைப் பிறப்பித்தாய், நிராமயமே எ-று. (உ௪உ)

பின்னை யொருவர் செய்யும் பிழைக்குப் பரிகாரம்
என்னைத் தெருவில்விட்ட தேன்கா ணிராமயமே.

இ—ள். வேறொருவர் செய்யும்பிழைக்குப் பரிகாரமாய் என்னைத் தெருவில்விட்டது ஏனோ, நிராமயமே எ-று. (உசங)

தொண்டாசை கொண்டோர் துயிலார் முகத்தணைக்கக்
கண்டுயிலா ரன்பரெனக் கண்டாய் நிராமயமே.

இ—ள். உன் திருத்தொண்டுசெய்ய விரும்பினவர்கள் கண்ணுறக்கங் கொள்ளார், அதனை நீ கண்டிருக்கிறாயல்லவா, நிராமயமே எ—று. (உசச)

ஊனத்துக் கேற்றவுட லென்னதென்ன தென்பதுவும்
ஞானத்துக் கேற்றவர்க்கு நன்றோ நிராமயமே.

இ—ள். ஊனமாகிய இந்தவுடம்பை என்னது என்னது என்று சொல்லுவது, ஞானநெறியிலுள்ளவர்க்கு நன்றாகுமோ, நிராமயமே எ-று. (உசரு)

ஆசைக் கடலி னலைவாய்ப்பட் டேயலைந்து
மோசப் படுதன் முறையோ நிராமயமே.

இ—ள். ஆசைக்கடலின் அலையிற்சிக்கி யலைந்து மோசம்போவது முறையாகுமோ, நிராமயமே எ-று. (உசசு)

எட்டிரண்டு மின்னதென்று மேழையறி யாதபடி
வெட்டவெளிப் பேதையென விட்டாய் நிராமயமே.

இ—ள். எட்டும் இரண்டும் இன்னதென்று ஏழையேன் அறியாதபடி, வெட்டவெளியில் என்னைவிட்டாயே, நிராமயமே எ-று. (உசஎ)

பித்தம் பிடித்தப்பிர பஞ்சத்தார் போலன்றோ
முத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே.

இ—ள் பித்தம்பிடித்த பிரபஞ்சத்தாரைப்போலல்லவா சீவன்முத்தர்க்கிருக்குமுறைமையும், நிராமயமே எ—று. (உச௮)

காமக் குரோதமத மாச்சரியக் காரருக்கே
ஆமோ திருக்கருணை யையா நிராமயமே.

இ—ள். காமக்குரோத மதமாச்சரியக்காரருக்கே உன் திருக்கருணை யுண்டாகுமோ, ஐயா, நிராமயமே எ—று. (உசகூ)

ஜெகத்து மயமாயுந் தேஜோ மயமாயும்
அகத்து டணுவான தன்றோ நிராமயமே.

இ—ள். பிரபஞ்சமயமாகவும் தேஜோமயமாகவும் இருப்பது, உள்ளேயிருக்கிற அணுவேயல்லவா, நிராமயமே எ—று. (உரு0)

கேசாதி பாதமுதல் கெர்ப்பக் குவட்டில்வைத்த
ஈசா வுனக்கே யியல்பாம் நிராமயமே.

இ—ள். கேசாதிபாதம் முதலாகிய உடம்பின்கண்ணுள்ள கர்ப்பமாகிய குழியில் என்னைவைத்த ஈசனே, இது உனக்கேதகும், நிராமயமே எ—று.

எக்கலைக்குஞ் சொக்கா தியங்கு முனைத்தொழுதல்
நிற்கவலைக் கெல்லா நிலைகா ணிராமயமே.

இ—ள். எந்தக்கலைகளிலும் அகப்படாமல் விளங்குகின்ற உன்னை வணங்குதலே உன்னையடையும் நெறிகளுக்கெல்லாம் நிலையாகும், நிராமயமே எ—று. (௨௫௨)

அகத்து விழியுமறி தற்கரி தாயவுன்பால்
முகத்து விழியோ முயலும் நிராமயமே.

இ—ள். மனக்கண்ணினாலும் அறிவதற்கு அரிதாகிய உன்னிடத்து என் முகக்கண்ணோ கண்டு பயனடையும், நிராமயமே எ—று. (௨௫௩)

திக்கு விஜயஞ் சிவராஜ யோகியர்க்காந்
துக்க வலையோர்க்குத் துறையோ நிராமயமே.

இ—ள். திக்குவிஜயமானது சிவராஜயோகியர்க்கே பலிப்பதாகும் அது துன்பவலையிலகப்பட்டோர்க்குப் பலிக்குமோ, நிராமயமே எ-று. (௨௫௪)

வாழுகின்றோ மென்றே வலக்காரம் பேசிலையோ
ஏழாம் நரகுக் கிரைகா ணிராமயமே.

இ—ள். நாம் வாழாகின்றோமென்று வலக்காரம்பேசினால் அந்தோ ஏழாகிய நரகத்துக்கு இரையாக வேண்டும், நிராமயமே எ—று. (௨௫௫)

ஈடெனக் காரென்றே யெதிர்பேசு மட்டியுடல்
நீடூழி கால நிலையோ நிராமயமே.

இ—ள். எனக்குச் சமானமாவார் யார் என்று எதிர்த்துப்பேசுகின்ற மட்டியுடம்பு நீடூழிகாலம் நிலைத்திருக்குமோ, நிராமயமே எ—று. (௨௫௬)

பாகாய்க் கசிந்துருகும் பரம பதத்தினர்க்குத்
தேகாபி மானமெல்லாந் தீயு நிராமயமே.

இ—ள். பாவுபோலக் கசிந்து உருகுகின்ற மேலான பதத்தை யுடையவர்க்கு தேகாபிமானமுழுதும் எரிந்துபோம், நிராமயமே எ—று. (௨௫௭)

ஆவி யுடல்பொருளு மடங்கக்கொள்ளை கொண்டுமெனைப்
பாவியென்று தள்ளப் படுமோ நிராமயமே.

இ—ள். உடல் பொருள் ஆவிகளை முற்றுங் கொள்ளைகொண்டும் என்னைப் பாவியென்று சொல்லித் தள்ளப்படுமோ, நிராமயமே எ—று. (௨௫௮)

அளந்தாலு மிந்தவுல கவ்வளவு மெவ்வளவும்
உளந்தெளியா ருக்கருடா னுண்டோ நிராமயமே.

இ-ள். இந்த உலகமுழுதும் அளவிட்டாலும் சிறிதும் மனந்தெளியாதவர்க்கு அருள் உண்டாகுமோ நிராமயமே எ-று. (௨௫௯)

சொன்ன படிக்கிணங்காத் துட்டன்யா னாகினுமுன்
வன்ன மலர்ப்பதத்தை வைப்பாய் நிராமயமே.

இ-ள். நீசொன்னபடிக்கு இணங்கி நடவாத துஷ்டன் நான் ஆனாலும் உனது அழகாகிய தாமரைமலர்போன்ற திருவடியை என் சிரசின்மீது வைக்கவேண்டும், நிராமயமே எ-று. (௨௬0)

பாத முடியின் பரமார்த்த மானவுனக்
கேது வடிவென்றே யிசைப்பே னிராமயமே.

இ-ள். அடிமுடிகளிலும் பரமார்த்தமான வுனக்கு வடிவம் ஏதென்று சொல்லுவேன், நிராமயமே எ-று. (௨௬௧)

முன்னா ளிருந்த முறைபோலு மூர்த்திகளாய்
எந்நாள் வருவதெனக் கெந்தாய் நிராமயமே.

இ-ள். முற்காலத்திலிருந்த முறைபோல எனக்கெதிரே மூர்த்திகளாய் வருவது எந்நாளோ எந்தையே, நிராமயமே எ-று. (௨௬௨)

மடக்கெடுத்து வீசி மணல்குடித்த நீரதனால்
கடற்குறை யுண்டோவென் கண்ணே நிராமயமே.

இ-ள். அலைகளாலெடுத்து வீசப்பட்டு மணல்குவித்த நீரினால் கடலுக்கு ஒரு குறையுண்டோ, என்கண்ணே, நிராமயமே எ-று. (௨௬௩)

தானேதா னெவ்வுயிர்க்குந் தற்பரமாய் நிற்பதுடல்
ஊனாகிக் கொண்ட வுளவே நிராமயமே.

இ-ள். எவ்வுயிர்க்கும் தானேதானாய் நிற்பது தற்பரம்பொருளாய் இருக்க, மாமிசசரீரத்தைக்கொண்ட உளவுயாது, நிராமயமே எ-று. (௨௬௪)

பாச மொழித்துநெறி பற்றிநின்ற வித்தகர்க்கு
வீசும் திருக்கருணை வீசும் நிராமயமே.

இ-ள். பாசங்களை நீக்கி நன்னெறியிற் பற்றிநின்ற ஞானவான்களுக்கு உனது திருக்கருணை பெருகும், நிராமயமே எ-று. (௨௬௫)

கற்றகல்வி யற்றுக் கன்மமுதல் பாசமற்று
உத்தமர்க்குச் சித்த மொடுங்கு நிராமயமே.

இ-ள். உத்தமர்களுக்குக் கற்ற கல்வியற்று கர்மமுதலாகிய பாசங்கள் அற்று மனம் ஒடுங்கும், நிராமயமே எ-று. (௨௬௬)

சித்த நிரஞ்சனத்திற் சென்றிருக்க வல்லார்க்குப்
புத்தி நிருவிகற்பம் பூணும் நிராமயமே.

இ-ள். மனம் நிரஞ்சனப்பொருளில் சென்றிருக்க வல்லவர்க்கு அவரது புத்தி நிருவிகற்பநிலையை அடையும், நிராமயமே எ-று. (௨௬௭)

நீட்டிக் குறுக்க நெடும்பகையென் பாரதுபோற்
காட்டி மறைக்கக் கணக்கோ நிராமயமே.

இ-ள். நீட்டிக்குறுக்குதல் பெரும்பகை என்பவர்களைப்போலக் காட்டி மறைக்க உனக்குக் கணக்காகுமோ, நிராமயமே எ-று. (௨௬௮)

கற்பூர வுண்டை கரைவதுபோ லக்கரையுந்
தற்போத கர்க்கருளைத் தந்தா ணிராமயமே.

இ-ள். கற்பூர உண்டை சுடரோடுகூடிக் கரைவதுபோலத் தற்போதங் கரையப்பெற்ற ஞானிகளுக்கு, உன் திருவருளைத்தந்து ஆளக்கடவை, நிராமயமே எ-று. (௨௬௯)

தேனோடு பாகாய்த் திரண்டமுத மென்னவுமென்
னூனோ டுடலோ டுறைந்தாய் நிராமயமே.

இ-ள். தேன்போலவும் பாகுபோலவும் அமுதம்போலவும் என் உடம்பினும் உயிரினும் தங்கியிருந்தாய், நிராமயமே எ-று. (௨௭௦)

கண்டித்த வெள்ளுங் கரும்பும்போ லும்மெனது
சண்டித் தனமெய்தற்குச் சார்நீ நிராமயமே.

இ-ள். கண்டித்த உள்ளுப்போலவும் கரும்புபோலவும் எனது சண்டித்தனம் நீங்கிப் பயன் அடையும்பொருட்டு என்னிடத்து நீ தங்கி இருக்க வேண்டும், நிராமயமே எ-று. (௨௭௧)

ஐந்துபுல வேடருக்கே யாளாக்கி னுனக்கு
வந்தபல னென்னோ வழுத்தாய் நிராமயமே.

இ-ள். ஐம்புலவேடருக்கு என்னை அடிமையாக்கினால் உனக்குக்கிடைத்த பயன் யாதோ சொல்லுவாயாக, நிராமயமே எ-று. (௨௭௨)

ஓயாத் தவலைக் குரித்தாம் புழுக்குரம்பை
ஆயெனவருத்த லையா நிராமயமே.

இ-ள். ஒழியாத துன்பங்களுக்கிடமாகிய இந்தப் புழுக்கூடான சரீரத்தை நீ வருத்துவைத்தது யாதுக்கு ஐயனே, நிராமயமே எ-று. (௨௭௩)

ஐவர்க்கு மென்னை யடங்கு நச்சிறை யாக்குவது
உய்யுங் கருணைக் குளதோ நிராமயமே.

இ-ள். ஐம்புலன்களுக்கும் நான் அடங்கி நடக்கும்படி என்னைச் சிறைப்படுத்திவைப்பது உன் கருணைக்கு உரிய குணமாகுமோ, நிராமயமே எ-று.

ஊசிதனைக் காந்த மூகந்தனைக்கு மாறெனவே
பாசத்தைப் போக்கியருள் பாராய் நிராமயமே.

இ-ள். காந்தக்கல்லானது ஊசியை அணைத்துக்கொள்வதுபோல என் பாசத்தைநீக்கி உன் திருவருள் நோக்கஞ் செய்யவேண்டும், நிராமயமே எ-று. (உஎ௫)

உள்ளந் தெளிந்தே யொளியாய்ப் பிறங்கினர்க்குக்
கள்ளந் தெளியக் கனவுகண்டே னிராமயமே.

இ-ள். மனந்தெளிந்து ஒளியுருவாய் விளங்குவோர்க்கு மனக்கள்ளம் முழுதும் தெளிவடையக் கனவுகண்டேன், நிராமயமே எ-று. (உஎ௬)

அற்புதமே நிர்க்குணமே யன்பர்க் கருள்புரியுஞ்
சற்குருவே யெங்கள் சலுவே நிராமயமே.

இ-ள். அற்புதமே நிற்குணமே அன்பர்க்கு அருள்செய்கின்ற சற்குருவே எங்கள் சவிகையே, நிராமயமே எ-று. (உஎஎ)

அழியா வருள்வாரி யன்றியடி யேன்றனக்கா
மழையாய்ப் பொழிந்தாய்நீ வாழி நிராமயமே.

இ-ள். எக்காலமும் அழியாத அருட்கடலே முகந்து அடியேன் பொருட்டு மழையாகப் பொழிந்தனை ஆதலால் நீ வாழக்கடவை, நிராமயமே எ-று. (உஎஅ)

முத்தரும் வாழியெங்கள் முன்னோரும் வாழியருள்
வித்தகரும் வாழியெங்கும் விளங்கும் நிராமயமே.

இ-ள். முத்தரும் வாழக்கடவர் எங்கள் முன்னவரும் வாழக்கடவர், அருளையுடைய ஞானியரும் வாழக்கடவர், எங்கும் விளங்குகின்ற நிராமயமே எ-று. (உஎ௯)

ஒழியா வருள்வாழி யுத்தமர்க ளும்வாழி
அழியாப் பதிவாழி யையா நிராமயமே.

இ-ள். ஐயனே, ஒழியாத உன் திருவருள்வாழி அத்திருவருளைப்பெற்ற உத்தமர்களும் வாழி அவர்களடைகின்ற அழியாத மோக்ஷபதவியும்வாழி, நிராமயமே. எ-று. (உஅ0)

குன்றாக் குணக்குடிகொண் டோராமெம் வித்தகரும்
என்நாளும் வாழியருள் எந்தாய் நிராமயமே.

இ-ள். குறையாத குணக்குடிகொண்டோராகிய எமது ஞானிகளும் எக்காலத்திலும் வாழ்ந்திருக்கக்கடவர், எந்தையே, நிராமயமே எ-று. (உஅ௧)

நிராமயக்கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 543

பராபரக்கண்ணி.

அண்ட புவனமென்று மாடுதிருங் கூத்தினையான்
கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே.

இ-ள். அண்டபுவனங்களில் எல்லாம் எக்காலமும் நீ ஆடுகின்ற திருக்கூத்தை நான் கண்டு மகிழும்படி நீ காட்டவேண்டும், பராபரமே எ-று. ()

ஆதியா யாண்டவனா யஃபததுவாய் நின்றபெருஞ்
சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.

இ-ள். முதல்வனாய் என்னை யாண்டருளினவனாய் அவ்வப் பொருள்களாய்நின்ற பெருஞ்சோதியாய் இருந்த நிர்மலனே, பராபரமே எ-று. (௨)

வேத மறைப் பொருளை வேதாந்தத் துட்கருவை
ஓதி யுணர்ந்தா ருண்டோ பராபரமே.

இ-ள். வேதத்தின் இரகசியப்பொருளும் வேதாந்தத்தின் உட்கருத்தும் ஆகிய உன்னை ஓதி யுணர்ந்தாருண்டோ, பராபரமே எ-று. (௩)

அண்ட புவனமுட னாகாச மென்றுசும்பிக்
கொண்டமெய்ஞ் ஞானக் கூத்தே பராபரமே.

இ-ள். அண்டபுவனங்களோடு சிதாகாயரூபமாயும் நிறைந்திருக்கின்ற மெய்ஞ்ஞானத் திருக்கூத்தனே, பராபரமே எ-று. (௪)

நாவாற் புகழ்க்கெட்டா நாயகனை நாதாந்தம்
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே.

இ-ள். நாவினால் புகழவொண்ணாத நாயகனே, நாதாந்தம் பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய், பராபரமே எ-று. (௫)

பேராற் பெரிய பெரும்பொருளை பேதைதனக்
காரா ரிருந்துபல னாமோ பராபரமே.

இ-ள். பேரினால் பெரியனான பெரும்பொருளே, பேதையேனுக்கு யாரிருந்தும் என்னபயன் உண்டாகும், பராபரமே எ-று. (௬)

மாறாய நற்கருணை மாவருள்சித் தித்திடவே
பாராயோ வையா பகராய் பராபரமே.

இ-ள். உனது பெருங்கருணை எனக்குச் சித்திக்கும்படி உன்கருணை நோக்கால் என்னை நோக்கமாட்டாயோ, ஐயனே, சொல்வாயாக பராபரமே எ-று. (௭)

ஆனாலும் முன்பாதம் யாசித் திருப்பதற்குத்
தானா யிரங்கியரு டாராய் பராபரமே.

இ-ள். உன் திருவடியை நான் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதற்கு நீயே இரங்கி அருளல்வேண்டும், பராபரமே எ-று. (௮)

நாதாந்த மூல நடுவீட்டுக் குள்ளிருக்கு
மாதவத்தோர்க் கான மருவே பராபரமே.

இ-ள். நாதாந்தமூல நடுவீட்டுக்குள்ளே இருக்கின்ற மாதவத்தோர்க்கு உரியமணமே, பராபரமே எ-று. (௯)

உடலுங் குயிரேயென் னுள்ளமே யுன்பதத்தைக்
கடலுமலை யுந்திரிந்துங் காணேன் பராபரமே.

இ-ள். என் உடலுக்குள்ளே இருக்கிற உயிரே, என்மனமே, நான் கடலிலும் மலையிலுந் திரிந்தும் உன் திருவடியைக் கண்டிலேன், பராபரமே எ-று. (௧0)

மாந்திரத்துக் கெட்டா மறைப்பொருளே மன்னுயிரே
சேர்ந்தவெழு தோற்றத்தின் சித்தே பராபரமே.

இ-ள். மந்திரத்துக்கு எட்டாத மறைப்பொருளே, நிலைபெற்ற உயிரே, எழுவகைத் தோற்றத்தின் கண்ணும் நிறைந்த சித்துப்பொருளே, பராபரமே எ-று. (௧௧)

தனியேனுக் காதரவு தாரணியி லில்லாமல்
அனியாய மாவதுனக் கழகோ பராபரமே.

இ-ள். இந்த உலகத்தில் தனியேனுக்கு ஆதரவில்லாமல் அனியாய மாய்ப் போவது உனக்கு அழகாகுமோ, பராபரமே. எ-று. (௧௨)

ஓடித் திரிந்தலைந்து முன்பாதங் காணாமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.

இ-ள். ஓடித்திரிந்து அலைந்தும் உன் திருவடியைக்காணாமல் வாடிக் கலங்குகின்றேன், நீ வந்தருளவேண்டும், பராபரமே. எ-று. (௧௩)

தூராதி தூரந் தொலைத்துமதி யுன்பாதம்
பாராத பாவத்தாற் பயந்தேன் பராபரமே.

இ-ள். தூராதி தூரங்களைக்கடந்து என் அறிவினால் உன் திருவடியை நோக்காத பாவத்தினால் பயமடையப் பெற்றேன், பராபரமே எ-று. (௧௪)

தேடக் கிடையாத் திரவியமே தேன்கடலே
ஈடுனக்கு முண்டோ விறையே பராபரமே.

இ-ள். தேடக்கிடையாத திரவியமே, தேன்கடலே, உனக்கு சமானம் ஆவார் ஒருவர் உண்டோ, இறையே பராபரமே எ-று. (௧௫)

அரிய பெரும் பொருளே யன்பா யொருவார்த்தை
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.

இ-ள். அருமையான பெரும்பொருளே, அன்போடு ஒரு வார்த்தையை எனக்குப் பரிபூரணமாகச் சொல்லவேண்டும், பராபரமே. எ-று. (௧௬)

ஐயோ வெனக்குதவு மாதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே.

இ-ள். ஐயோ எனக்கு உதவுகின்ற ஆதாரவாகிய உன்னை விட்டுவிட்டு மாதரைத் தேடித் தவித்தேன், பராபரமே எ-று. (௧௭)

எத்திசையு நோக்கி னிசையாத் திருக்கூத்தாய்
வித்தைவிளை யாட்டு விளைப்பாய் பராபரமே.

இ-ள். எந்தத்திக்கில் நோக்கினாலும் சொல்லப்படாத திருக்கூத்தாய் உன்வித்தை விளையாட்டுகளைத் தோற்றுவிப்பாய் பராபரமே எ-று. (௧௮)

எப்பொழுது முன்பதத்தி லென்கருத்தே யெய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தா ளிறையே பராபரமே.

இ-ள். எப்பொழுதும் உன்திருவடியில் என் கருத்தானது பொருந்தியிருக்கும்படி இப்பொழுதே என்னைக்கைப்பற்றி ஆண்டருளவேண்டும், பராபரமே எ-று. (௧௯)

வாதுக் கடரவரும் வம்பரைப்போற் றீவினிமனம்
ஏதுக்க டர்வதியா னெளியேன் பராபரமே.

இ-ள். வாதுசெய்யவரும் வம்பரைப்போலப் பாவியாகிய என்மனம் என்னைநலிவது யாதுக்கு, யான் எளியவன், பராபரமே எ-று. (௨0)

கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.

இ-ள். கண்ணே, மனோன்மணியே, கண்பார்வைக்கு எட்டாததும் ஆகாயத்தில் அடங்காததுமாகிய வெட்டவெளியே, பராபரமே எ-று. (௨௧)

அடக்கவரி தாமா யிரம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே.

இ-ள். அடக்குதற்கு அருமையாகிய பொறிகளைக்கட்டிப் படிக்கும்படியான படிப்பை எனக்கு அருள் செய்யவேண்டும், பராபரமே எ-று. (௨௨)

எத்தவங்கள் செய்தாலு மின்பமுட னுன்பதத்தை
முத்த ரொருபோது முறார் பராபரமே.

இ-ள். எந்தத் தவத்தைச்செய்தாலும் இன்பத்தோடு உன்திருவடியை முத்தரானவர்கள் ஒருகாலத்திலும் மறவார்கள் பராபரமே எ-று. (௨௩)

சொல்லுக் கிணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

இ-ள். சொல்லுக்கடங்காத சூத்திரத்தைநோக்கி இருக்க அல்லும்பகலும் எனக்கு ஆசையுண்டு, பராபரமே எ-று. (௨௪)

நாற்றச் சடலமதை நம்பார் முகந்திருக்கப்
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே.

இ-ள். நாற்றச்சடலமாகிய உடம்பை நம்பாதவர்களாகிய ஞானிகள் மோந்துகொண்டிருக்கும்படி பூத்து மலர்ந்திருக்கிற பூவே, பராபரமே எ-று.

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றாம னின்றுகளைத் தழுதேன் பராபரமே.

இ-ள். சோற்றுப்பொதியைச் சுமந்து திரிந்து அலைந்தேன், அதனால் ஆற்றாதவனாய் நின்று களைத்து அழுதேன், பராபரமே எ-று. (௨௬)

காற்றுத் துருத்திதனைக் கல்லா யணைந்திருக்கச்
சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே.

இ-ள். காற்றுத்துருத்தியைக் கல்லைப்போல நிலைத்திருக்கும்படி, எனக்குச் சூத்திரதாரியாய் நின்றாய், சர்வகாரணனே, பராபரமே. (௨௭)

கோலத் திருவடிவு மாதையர்க ளாசையினால்
ஆலைக் கரும்புபோ லானேன் பராபரமே.

இ-ள். அழகிய வுருவையுடைய மாதராசையினால், ஆலையிலகப்பட்ட கரும்புபோல அழிந்தேன், பராபரமே எ-று. (௨௮)

கேளாயோ வென்கவலை கேட்டிரங்கி யேயென்னை
ஆளாயோ வையா பாழானேன் பராபரமே.

இ-ள். என்கவலையைக் காதினால் கேட்கமாட்டாயோ, கேட்டிரங்கி, என்னை யாண்டருளாயோ, ஐயனே, பாழாய்விட்டேன், பராபரமே எ-று.()

எத்தனைதான் குற்ற மெதிர்த்தடிமை செய்தாலும்
அத்தனையு நீபொறுப்ப தழகே பராபரமே.

இ-ள். உன்அடிமையாகிய நான் எத்தனை குற்றங்கள் செய்தாலும், அவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்வது உனக்கழகேயாம், பராபரமே எ-று.()

அல்லல் வினையா லறிவுகெட்ட வான்மாவாய்
நெல்லும் பதருமென நின்றேன் பராபரமே.

இ-ள். துன்பத்தைச்செய்கிற தீவினையால் அறிவழிந்த ஆன்மாவாய் நெல்லும் பதரும்போல நின்றேன், பராபரமே எ-று. (௩௧)

சொல்லரிய ஞானச் சுடரே யொருவார்த்தைச்
செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே.

இ-ள். எல்லாநூல்களாலும் சொல்லப்பட்ட ஞானவொளியே, மோக்ஷ லாபம் கிடைக்கும்படி எனக்கு, ஒருவார்த்தை சொல்லி யருளவேண்டும், பராபரமே எ-று. (௩௨)

நித்த முனைத்தொழா நிர்மூட னாயிருக்கும்
பித்தனை யென்காண் பிறந்தேன் பராபரமே.

இ-ள். நாள்தோறும் உன்னைத்தொழாத நிர்மூடனாகிய பித்தன் நானொருவன், என்பிறந்தேன் பராபரமே எ-று. (௩௩)

உற்றார்க ளாலு முறவின்முறை யோராலும்
பெற்றார்க ளாலுமுனைப் பிரிந்தேன் பராபரமே.

இ-ள். உற்றோராலும், உறவினராலும், பெற்ற தாய்தந்தையராலும், உன்னை விட்டுப்பிரிந்தேன், பராபரமே எ-று. (௩௪)

ஏழை முகம்பார்த் தெனியேனை யெப்பொழுதும்
ஆழாம லாண்டருளென் னையகே பராபரமே.

இ-ள். ஏழையாகிய என்முகத்தைப் பார்த்து அடியேனை எப்பொழுதும் பிறவிக்கடலில் அழுந்தாமல் ஆண்டருளவேண்டும், என்ஐயனே, பராபரமே எ-று. (௩௫)

பாவ வுடலெடுத்துப் பாதகனா யான்பிறந்துன்
ஆவி கெடுவதுனக் கழகோ பராபரமே.

இ-ள். பாவவுடம்பெடுத்துப் பாதகனாய் நான் கெட்டொழிவது உனக் கழகாகுமோ, பராபரமே எ-று. (௩௬)

வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கா லென்றன்முகம்
பாராயோ சற்றே பகராய் பராபரமே.

இ-ள். என்னிடத்திற்கு வாராயோ, வந்து ஒருகால் என்முகத்தைப் பாராயோ சிறிது சொல்லக்கடவை, பராபரமே எ-று. (௩௭)

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருங் குள்ளிருந்தும்
ஆர்க்குந் தெரியாம லானாய் பராபரமே.

இ-ள். பார்க்குமிடத்தில் பலவிதங்களாய்ப் பலவுயிர்களுக்குள்ளே யிருந்தும் ஆர்க்கும் தெரியாமலிருக்கிறாயே, பராபரமே எ-று. (௩௮)

ஆனாலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்
ஏனோ வெடுத்தேனோ னெந்தாய் பராபரமே.

இ-ள். பொல்லாத அரும்பாவியாக உடம்பை ஏனெடுத்தேனோ, என் தந்தையே, பராபரமே எ-று. (௩௯)

கர்ப்பூர தீபக் கனலொளிபோற் காட்சிதர
முப்பாழும் பாழாய் முடித்தாள் பராபரமே.

இ-ள். கர்ப்பூரதீபம்போல எனக்குக் காட்சி கொடுக்கும்பொருட்டு, முப்பாழும் பாழாக முடிவுசெய்து என்னை ஆண்டருளவேண்டும் பராபரமே எ-று. (௪0)

கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்
அரும்பொருளாய் நின்ற வழகே பராபரமே.

இ-ள். கரும்பே, நவரசமே, கடலிற்பிறந்த அமிர்தமே, என் கண்மணிக்குள்ளே அரும்பொருளாகிய பாவையாய்நின்ற அழகே, பராபரமே எ-று.

ஏழை யடியேனை யெப்படியுங் கைப்பிடித்து
ஆளா திருப்பதுனக் கழகோ பராபரமே.

இ-ள். ஏழையாகிய அடியேனை எப்படியாயினும் கைப்பிடித்து ஆண்டருளாதிருப்பது உனக்கு அழகாகுமோ, பராபரமே எ-று. (௪௨)

ஆளாயோ வையா வடியேன் பிதற்றுதலைக்
கேளாயோ வென்றன் கெதியே பராபரமே.

இ-ள். என்னை யாண்டருளாயோ, ஐயனே, அடியேன் புலம்புவதைக் கேட்டருளாயோ, எனது நற்கெதியே, பராபரமே எ-று. (௪௩)

ஊனாகி யுள்ளுயிரி லொட்டாத வக்கருவாய்த்
தானாகி நின்ற தனுவே பராபரமே.

இ-ள். உடலாகி அவ்வுடலுக்குள் இருக்கிற உயிரில் பற்றாத அந்தக் கருவாகித் தானேதானாகி நின்ற மகாகாரண சரீரமே, பராபரமே எ-று. ()

பொன்னான் மயக்கெடுத்துப் புத்திகெட்டு நானெனவே
பன்னாளு நின்றாற் பலனுண்டோ பராபரமே.

இ-ள். பொன்னாசையால் மயங்கி அறிவுகெட்டுப் பலநாளும் நான் நான் என்று அகங்கரித்து நின்றால் பயனுண்டோ, பராபரமே எ-று. (௪௫)

இல்லல்லா கூவென் றெனைமறந்து கொண்டுனையே
சொல்லவருண் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே.

இ-ள். இல்லல்லாகூவென்று என்னை மறந்துவிட்டு உன்னையே சொல்லும்படி அருள்செய்வாயாக, மெய்ஞ்ஞானஒளியே, பராபரமே எ-று. (௪௬)

ஐயோ வடிமைதனக் காரிருந்து மென்னபலன்
கையாற் றவிந்தணைக்கக் காணேன் பராபரமே.

இ-ள். ஐயோ! அடிமையாகிய எனக்கு ஆரிருந்தும் என்னபயன், என்னைத் தம்கையால் தழுவி அணைக்கக்காணேன், பராபரமே எ-று. (௪௭)

ஆனாலு மேழை யடியேனுங் காதரவாய்த்
தானா யிரங்கியருள் தாராய் பராபரமே.

இ-ள். ஏழையாகிய அடியேனுக்கு ஆதரவாகி, நீதானேஇரங்கி, அருள் செய்யவேண்டும், பராபரமே எ-று. (௪௮)

தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்
வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே.

இ-ள். தூங்காநின்று தொழுவோராகிய அன்பரது முகம் பார்க்கின்ற வேங்கைப்புலிபோல என்னை செய்விப்பாய், பராபரமே எ-று. (௪௯)

கண்ணே கருத்தேயென் கண்மணியே கண்ணிறைந்த
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.

இ-ள். கண்ணே, கருத்தே, என்கண்மணியே, கண்ணிறைந்த ஆகாயமும் அடங்காத வெட்டவெளியே, பராபரமே எ-று. (௫0)

காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த
தோஷியாய் நின்றேன் றுணையே பராபரமே.

இ-ள். பணத்தாசைகொண்டு மனங்கலங்கிக் கெட்டலைந்த பாவியாய் நின்றேன் என்னுயிர்த்துணையே, பராபரமே எ-று. (௫௧)

ஐயோ வெனதுதுய ராரிடத்திற் சொல்லிநின்று
கையெடுக்கப் போறேனென் கண்ணே பராபரமே.

இ-ள். ஐயோ! என்துக்கத்தை யாரிடத்திற் சொல்லிநின்று கையெடுத்துத் தொழப்போகின்றேன் என்கண்ணே, பராபரமே எ-று. (௫௨)

என்னதான் செய்திடுவே னென்விதியைச் சொல்லியழ
வுன்னையன்றி வேறெனக்கு முண்டோ பராபரமே.

இ-ள். என்னதாஞ் செய்வேன் என் விதியைச்சொல்லி அழுதற்கு உன்னை அன்றி எனக்கு வேறு திக்குமுண்டோ, பராபரமே எ-று. (௫௩)

முகக்கண் விழியொளியே முத்திதரு முத்தமனே
அகக்கண் டிறந்தோர்க் கறிவே பராபரமே.

இ-ள். முக்கண்களாலும் விழித்துப் பார்த்தற்கு உரிய ஒளியே, முத்தியைக் கொடுக்கின்ற உத்தமனே அந்த மனக்கண் திறந்தோர்க்கு அறிவுருவாயிருப்பவனே, பராபரமே எ-று. (௫௪)

முப்பாழும் பாழாய்நன் முத்திபெற் றிருக்கவெனைக்
கைப்பிடிப்ப தெப்போதென் கண்ணே பராபரமே.

இ-ள். முப்பாழும் பாழாய்ச் சிறந்த முத்தியடைந்திருக்கும்படி என்னை கைப்பற்றுவது எப்பொழுதோ என்கண்ணே, பராபரமே எ-று. (௫௫)

உல்லாச மாக வொளிதான் பரந்திடவுன்
செல்வம் பொழிந்திடவே செப்பாய் பராபரமே.

இ-ள். ஆடம்பரமாக ஞானவொளி வியாபிக்கும்படி உன் ஞானச்செல்வத்தை எனக்கு அருள்செய்யவேண்டும், பராபரமே எ-று. (௫௬)

மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்
காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே.

இ-ள். மாச்சரியத்தை யுண்பெண்ணுகின்ற மதமானது ஒடுங்கப்பெற்று, நான் முத்தியடையும்படி, நீ உன் திருக்காட்சியைத்தருவது எப்பொழுதோ கண்ணே, பராபரமே எ-று. (௫௭)

சண்டாள னென்றென்னைச் சகலருநரை யிட்டாலுங்
கொண்டணைப்ப துன்பாரங் குருவே பராபரமே.

இ-ள். என்னைச் சண்டாளனென்று எல்லாரும் சொன்னாலும் என்னைக் கைவிடாமல் கொண்டணைப்பது உன்பாரமாகும் என் குருமூர்த்தியே, பராபரமே எ-று. (௫௮)

முத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணமற்
செத்திறந்து போனலென் செய்வேன் பராபரமே.

இ-ள். மோட்சத்தைத்தருகின்ற மெய்ஞ்ஞானமாகிய முச்சுடரைக் காணமல் நான் இறந்துபோனல் என்செய்யக் கடவேன், பராபரமே எ-று. (௫௯)

தன்னை யறிந்துணரத் தயையா யொருவார்த்தை
இன்னபடி யென்றே யியம்பாய் பராபரமே.

இ-ள். என்னை நான் அறியும்படி தயையினல் இன்னபடியென்று ஒரு வார்த்தை சொல்லியருளாய், பராபரமே எ-று. (௬0)

களியேகண் டுன்னுடைய கைப்பிடிப்போ மென்றுசற்றே
எளியேன் முகம்பார்த் திரங்காய் பராபரமே.

இ-ள். பித்தனே உன்னைப்பார்த்து உன் கைப்பிடிப்போம் என்று சொல்லி எளியோனுடைய முகத்தை சற்றே பார்த்திரங்கவேண்டும், பராபரமே எ-று. (௬௧)

பாசவினை போக்கிப் பலவினையைப் பாழாக்கி
ஆசைவைப்போர் தங்க ளருளே பராபரமே.

இ-ள். ஆசைவினைகளை நீக்கி பழவினைகளைப்பாழாக்கி உன்மீது அன்பு வைப்போர்க்கு அருள்செய்பவனே, பராபரமே எ-று. (௬௨)

ஆளவரு வோமென் றன்பா யொருவார்த்தை
ஏழை முகம்பார்த் தியம்பாய் பராபரமே.

இ-ள். உன்னை ஆட்கொள்ள வருவோமென்று அன்போடு ஏழையின் முகம்பார்த்து, ஒருவார்த்தை சொல்லவேண்டும், பராபரமே எ-று. (௬௩)

நிலைகாட்டுங் காய நிசமென்று நிச்சயித்த
புலையாட்ட மென்றுதள்ளப் போமோ பராபரமே.

இ-ள். நிலைபோலக் காட்டுகின்ற உடம்பானது நிச்சயமென்று நிச்சயித்த புலையாட்டம் எக்காலத்தில் நீக்கப்போமோ, பராபரமே எ-று. (௬௪)

பார்க்கப் பலவிதமாய்ப் பலசமய மாகவொரு
வாக்கை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே.

இ-ள். பார்க்குமிடத்துப் பலவிதமாய்க் காணப்பட்டாலும் பல சமயங்களும் ஒன்றேயாகுமென்று ஒரு வார்த்தையை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே எ-று. (சுரு)

ஆறு வெளிபேனுங் காதரவே யில்லாமற்
போனுனக் கழகோ புகலாய் பராபரமே

இ-ள். எளியவனுகிய எனக்கு ஒரு ஆதரவு மில்லாமற்போனால் உனக்கு அழகாகுமோ சொல்வாய், பராபரமே எ-று. (சுசு)

நீச்சாப் பெருகிவர நிரம்புமா னந்தவெள்ளம்
பாய்ச்சாயோ வையா பகராய் பராபரமே.

இ-ள். நீச்சுநிலையாக்கிப் பெருகிவரும்படி நிறைகின்ற ஆனந்தவெள்ளத்தை என்மீது பாய்ச்சமாட்டாயோ, ஐயனே, சொல்வாய், பராபரமே எ-று. ()

எத்தனையோ கெஞ்சு மெளியேன் றனக்குதவி
உற்றா ருனைத்தவிர வுண்டோ பராபரமே.

இ-ள். எவ்வளவோ தாழ்வுசொல்லிக் கெஞ்சுகின்ற எளியேனுக்கு உதவியாகவுள்ளவர் உன்னைத்தவிர வேறொருவர் உண்டோ, பராபரமே எ-று.

கன்ன மிடுங்கருவி கரணமதைச் சுட்டோர்கள்
தன்னுக்குட் டானுந் தனுவே பராபரமே.

இ-ள். என் ஆன்மவத்துவைக் கன்னமிட்டுத் தருகின்ற கருவி கரணங்களாகிய திருடர்களைச் சுட்டெரித்தவர்களுக்கு உள்ளே காணப்படுகின்ற சூக்கும சரீரமே, பராபரமே எ-று. (சுக)

காயாமற் காய்த்துங் கனிந்து சொரிவதற்கு
மாயமாய்ப் பூத்த மலரே பராபரமே.

இ-ள். காயாமல் காய்த்து கனிந்து பொழியும்பொருட்டு, மாயமாக மலர்ந்த மலரே, பராபரமே எ-று. (எ0)

உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமைவே
தயையா யெனக்குதவி தந்தாய் பராபரமே.

இ-ள். உயிர்க்குயிராயிருக்கிற உட்கருவுக்குள்ளே அமைந்திருப்பவனே எனக்குத் தயையாக உதவிசெய்தனையே, பராபரமே எ-று. (எக)

அறிவை யறிவோருக் கானந்த வெள்ளமதாய்க்
கரையறவே பொங்குங் கடலே பராபரமே.

இ-ள். அறிவை அறிவோர்களுக்கு இன்பம் பெருக்காய், கரை அழிய பொங்குகின்ற கடலே, பராபரமே எ-று. (எஉ)

மறைப்பொருளைக் காணு மடையனிவ னென்றியம்பிச்
சிரிப்பார் சிரிக்கிலென்ன செய்வேன் பராபரமே.

இ-ள். வேதப்பொருளைக் காணாத மடையன் இவன் என்று சொல்லிச் சிரிப்பார் சிரித்தால் அதற்கு யான் என்செய்வேன், பராபரமே எ-று. (எ௩)

குறிவிளக்குங் குருவடியைக் கொள்கையுடன் போற்றாமல்
அறிவு மயங்குகின்றே னையா பராபரமே.

இ-ள். ஆன்மலட்சியத்தை விளங்கக் காட்டுகிற குருநாதனது திருவடியை அன்போடு வணங்காமல் அறிவு மயங்குகின்றேன் ஐயனே, பராபரமே எ-று. (எ௪)

வல்லாரைக் கெஞ்சி வலியாரக் கால்பிடித்தி
டில்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே

இ-ள். வலியரைக் கெஞ்சி வலியவர்களைக் கால்பிடித்து இல்லாதவர்களை நம்பியிருந்தேன், பராபரமே எ-று. (எ௫)

சொல்லும் பதராற்றிச் சூத்திரத்தைப் பாராமற்
கல்லுநெல்லும் போலங் கலந்தேன் பராபரமே.

இ-ள். சொல்லப்பட்ட பதரை ஆற்றிவிட்டுச் சூத்திரத்தை நோக்காமல் கல்லும் நெல்லும்போலக் கலந்து கிடந்தேன், பராபரமே எ-று. (எ௬)

செகமுழுதுஞ் சுற்றியுமுன் சீர்பாதங் காணாமற்
றிகைத்தழுதே னீயுந் தெரிவாய் பராபரமே.

இ-ள். உலகமுழுதும் சுற்றியும் உன் சீர்பாதத்தைக் காணாமல் திகைத்து அழுதேன் அந்தச் செய்தியை நீயும் அறிந்திருப்பாய், பராபரமே எ-று. (எஎ)

கள்ளக் கருத்துகளைக் கட்டோ டறுத்தவருக்
குள்ளிருக்கு மெய்ஞ்ஞான வொளியே பராபரமே.

இ-ள். கள்ள வெண்ணங்களைக் கட்டோடு அறுத்த அன்பர்களுக்குள்ளே விளங்குகின்ற மெய்ஞ்ஞான ஒளியே, பராபரமே எ-று. (எஅ)

கும்பிக் கிரைவிரும்பிக் கொடுப்பார் தமைத்தேடிச்
சம்பித் திரிந்தே சலித்தேன் பராபரமே.

இ-ள். வயிற்றுக்கு இரையை அபேட்சித்து அதைக் கொடுப்போரைத் தேடி வாடித்திரிந்து, சலித்தேன், பராபரமே எ-று. (எகூ)

காணகலா வாசை கடித்தாலென் கான்முகமும்
வீங்காதோ வையா விதியே பராபரமே.

இ-ள் பாரக்கக்கூடாத ஆசையாகிய பாம்புகடித்தால் என் காலும் முகமும் வீங்கிப்போகாதோ ஐயனே விதியே, பராபரமே எ-று. (அ0)

தூங்காமற் றூங்கித் தொழுதிருக்க வென்றனுடைய
ஆங்கார மெல்லா மகற்றாய் பராபரமே.

இ-ள். தூங்காமல் தூங்கித் தொழுதுகொண்டே யிருக்கும்படி என்னுடைய அகங்காரமுழுதும் நீக்கிவிடுவாய், பராபரமே எ-று. (அக)

தேனமிர்த மூறத் திவ்யமது ரஞ்சொரியத்
தானொ ரொருவார்த்தை தாராய் பராபரமே.

இ-ள். இனிதாகிய அமுதம் ஊறவும் திவ்வியமாகிய மதுரம்பொழியவும் நீதானே ஒருவார்த்தைச் சொல்லி யருளவேண்டும், பராபரமே எ-று.()

சாத்திரங்க ளோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத
சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே.

இ-ள். சாத்திரங்களை ஓதுகின்ற நான்கு வேதங்களையுடைய வேதியர்க்கும் எட்டாத சூத்திரமாகின்ற பரம சூத்திரமே, பராபரமே எ-று. (அங)

வேற்றொருவர் காணாத வேதாந்தத் துட்பொருளைப்
பார்த்தோர்க ளெய்தும் பலனே பராபரமே.

இ-ள். வேறொருவர் காணாத வேதாந்தத்துள்ளே விளங்குகின்ற பொருளை நோக்கினவர்கள் அடையும் பயனே, பராபரமே எ-று. (அச)

சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்
போதும்போ தும்போதும் போதும் பராபரமே.

இ-ள். ஜாதி ஜனத்தோடு கூடியிருந்து நான்பட்ட துன்பம்போதும், போதும், போதும், போதும், பராபரமே எ-று. (அரு)

உற்றாரை நம்பியிருந் தொருபலனுங் காணாமற்
செத்தா லெனக்கதுதான் சின்னம் பராபரமே.

இ-ள். உறவினரை நம்பியிருந்து ஒருபயனும் அடையாமல் இறந்தால் அது எனக்கு மிகவும் இழிவாகும், பராபரமே எ-று. (அசு)

செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற்
கல்லுமரம் போலானேன் கண்ணே பராபரமே.

இ-ள். செல்லும்படியான கிரமத்தையறிந்து அட்டமாசித்து மார்க்கத்தைக் காணாமல் கல்லும் மரமும் போலானேன் என்கண்ணே பராபரமே எ-று. (அஎ)

ஓகோ வுனையறிந்து மொருபலனுங் காணாமற்
போகாமற் காத்தருளென் புணையே பராபரமே.

இ-ள். அந்தோ ! உன்னை அறிந்திருந்தும் ஒருபயனும் காணாதொழியாமல் என்னை நீயே காத்தருளவேண்டும் என் பிறவிக் கடற்குத் தெப்பமாயிருப்பவமே, பராபரமே எ-று. (அஅ)

உன்னை யறிவதற்கோ வுடலெடுத்தே னென்றென்னைச்
சின்னஞ்சொல் வார்கட்கென் செய்வேன் பராபரமே.

இ-ள். உன்னை அறியும்பொருட்டு இவ்வுடம்பு எடுத்தேனென்று என்னை இகழ்ந்து பேசுவோர்களுக்கு என்செய்யக் கடவேன், பராபரமே எ-று. ()

தெரியாத வின்பத் தெளிவா யருண்மயமாய்ப்
பரிபூ ரணமுடனே பாராய் பராபரமே.

இ-ள். யாவரும் தெரிந்துகொள்ள வொண்ணாத இன்பத்தெளிவாகியும், அருள்மயமாகியும் இருக்கிற பரிபூரண கிருபையோடு என்னைப் பார்த்தருளவேண்டும், பராபரமே எ-று. (௯0)

ஆச்சி தனைத்தேடி யாசைவைத் தலையாமற்
பூச்சியா யேனோ பிறந்தேன் பராபரமே.

இ-ள். என்தாயாகிய மனோன்மணியைத்தேடி அவள்மீது ஆசைவைத்து அலையாமல் நான் புழுப்போல என் பிறந்தேன், பராபரமே எ-று. (௯௧)

காசை விரும்பிக் கலங்கிநின் றுன்பாத
ஆசை விரும்பா தலைந்தேன் பராபரமே.

இ-ள். பணத்தை விரும்பிக் கலங்கிநின்று உன் திருவடியை விரும்பாமல் அலைந்தேன், பராபரமே எ-று. (௯௨)

சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்
பாகமா யாகமுகம் பாராய் பராபரமே.

இ-ள். இறவாமல் இறந்து சச்சிதானந்த வுருவமாகிப் பரிபக்குவ மடையும்படி என்னை முகம்பார்த்தருள வேண்டும், பராபரமே எ-று. (௯௩)

வாராயோ வையா வந்திரங்கிக் கொண்டணைக்கப்
பாராயோ சற்றே பகராய் பராபரமே.

இ-ள். ஐயனே என்னிடத்துக்கு வாராயோ, வந்து என்னிடத்து இரக்கஞ்செய்து என்னை அணைத்துக்கொள்ளப்பாராயோ, சற்றே சொல்லக்கடவாய், பராபரமே எ-று. (௯௪)

ஆசைவழிப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து
வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே.

இ-ள். ஆசைவழியாகிய பாசபந்தங்களையெல்லாம் கட்டறுத்து, வாசிமீதிலேற்றி, என்னை ஆண்டருளவேண்டும், பராபரமே எ-று. (௯௫)

வேஷந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்
காசு பணம்பறிக்கக் கற்றேன் பராபரமே.

இ-ள். சந்நியாசி வேஷம்பூண்டு காசுபணங்களை உலகத்தாரினிடத்தினின்றும் பறித்துக் கொள்ளும்பொருட்டு வேதாந்த சாத்திரங்களைக் கற்றுக்கொண்டேன், பராபரமே எ-று. (௯௬)

செய்ததெல்லாங் குற்றஞ் சிறியேன் றனக்கிரங்கிக்
கைதூக்கிக் கொண்டருளென் கண்ணே பராபரமே.

இ-ள். நான் செய்ததெல்லாம் குற்றமே ஆயினும் சிறியேன் பொருட்டு மனமிரங்கிக் கைத்தூக்கி யருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று.

மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான்கழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் னையா பராபரமே.

இ-ள். தொலையாத உலகமயக்கத்தைச் சேதித்து, மனக்களங்கத்தை யொழித்து, உன் திருவடிக்கு என்னை யாளாக்கிக் கொள்ளவேண்டும் என் ஐயனே, பராபரமே எ-று. (௯௮)

நாட்டமங்கு மிங்கிருக்க நாதாந்த முத்திநிலை
காட்டா யணைந்தருளென் கண்ணே பராபரமே.

இ-ள். அங்குமிங்கும் என் நோக்கமிருக்கினும் என் கண்போல்பவனே, நாதாந்த முத்திநிலையை எனக்குக் காட்டியருளவேண்டும், பராபரமே எ-று.

சிந்தை தனைத்தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த
உன்றன் குணங்குடியார்க் குயிரே பராபரமே.

இ-ள். மனத்தெளிந்து சித்தி முத்திகளையடைந்து உயர்ந்திருக்கிற உனது குணங்குடியாகக் கொண்டவர்களுக்கு உயிராயிருப்பவனே, பராபரமே எ-று. (௧00)

பராபரக்கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 663.

றகுமான் கண்ணி.

பார்க்கப் பலவிதமாய்ப் பல்கவண்டங் தன்னையடை
காக்குந் திருக்கருணைக் கண்ணே றகுமானே.

இ-ள். பார்க்குமிடத்தில் பலவிதமான வேறுபாடுகளை உடைய அண்ட கோடிகளையெல்லாம் அடைகாக்கின்ற திருக்கருணைக்கண்ணே றகுமானே எ-று. (௧)

ஈறு முதலுமற்றே யியங்குகின்ற முச்சுடராய்க்
காரணிக்கும் பூரணமே கண்ணே றகுமானே.

இ-ள். இறுதியும் முதலும் அற்று விளங்குகின்ற முச்சுடர்களாகி அம் முச்சுடர்களுக்கும் காரணமாயிருக்கின்ற பரிபூரணப்பொருளே என்கண்ணே, றகுமானே எ-று. (௨)

பாணிக்க வொண்ணாப் பதம்பெறுதற் கென்சிரசைக்
காணிக்கை வைத்தேனென் கண்ணே றகுமானே.

இ-ள். அளவிடப்படாத பதவியைப் பெறுவதற்கு என்சிரசை உனக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௩)

பொய்யடிமை யாயினுமுன் பொன்னடிக்கா ளாக்கியெனைக்
கையைக் கொடுத்தணைத்தாள் கண்ணே றகுமானே.

இ-ள். நான் பொய்யடிமையானாலும் உன் பொன்னடிக்கீழ் என்னை ஆளாக்கிக் கைகொடுத்து அணைத்து ஆண்டருளவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௪)

பெண்டுபிள்ளை யென்றே பிதற்றுதல்பொய் யல்லாமற்
கண்டபல னொன்றுமில்லை கண்ணே றகுமானே.

இ-ள். மனைவிமக்கள் என்று மயங்கித்திரிதல் பொய்யேயன்றி அவர்களால் நான் அடைந்தபயன் ஒன்றுமில்லை என்கண்ணே, றகுமானே எ-று.

பேதலித்தே னுன்னடிமை பேதமில் லாமலுனைக்
காதலித்தே னாண்டருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். உன்னடிமையாகிய நான் மனம் திகைத்தேன் வேறுபாடில்லாமல் பின்னே உன்னை விரும்பினேன், ஆதலால், ஆண்டருளவேண்டும், என் கண்ணே, றகுமானே எ-று. (௬)

ஏகப் பெருவெளியி லிருட்கடலிற் கம்பமற்ற
காகமதா வானேனென் கண்ணே றகுமானே

இ-ள். ஏகமாகிய பெருவெளியிலுள்ள இருளாகிய கடலின்கண் கப்பற் பாய்மரத்தை நீங்கின காகம்போல் ஆனேன் என்கண்ணே, றகுமானே எ-று.

ஐயோ வுனதருளி லாசையற்ற பாவியென்னைக்
கையைநெகிழ்த் தாதருளென் கண்ணே றகுமானே.

இ-ள். அந்தோ உனதருளில் விருப்பமில்லாத பாவியாகிய என்னைக் கைவிடாது ஆதரித்தருளவேண்டும் என்கண்ணே றகுமானே எ-று. (அ)

போதமய மாகவெங்கும் பூரணித்த காரணத்தைக்
காதலித்து நின்றேனென் கண்ணே றகுமானே.

இ-ள். அறிவுருவாக எவ்விடத்தும் நிறைந்த காரணப்பொருளை விரும்பி நின்றேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௯)

எல்லார்க் குமுதவிக்கு மியல்புபோற் றேரைகட்குங்
கல்லுள் ளமுதளிக்குங் கண்ணே றகுமானே.

இ-ள். எல்லார்க்கும் உணவைக் கொடுக்கின்ற தன்மைபோலக் கல்லுட்குள் இருக்கின்ற தேரைகட்கும் உணவைக்கொடுக்கின்ற, என்கண்ணே, றகுமானே எ-று. (௧0)

சொல்லுட் பதர்நீக்கி சும்மா விருந்தருளோக்
நல்லாருங் கல்லேயென் கண்ணே றகுமானே.

இ-ள். சொற்களுக்குள்ளே பயனற்ற சொற்களை யொழித்துச் சும்மா யிருந்து உன்னருளேயே நோக்குவோர்க்கு அருள்மலையா யிருப்பவனே என் கண்ணே, றகுமானே எ-று. (௧௧)

வெட்டவெறும் பாவியென்ன வீணிலெனைத் தள்ளாமற்
கட்டியணைத் தாண்டருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். முழுப்பாவியென்று என்னை வீணிலே தள்ளாமல் கட்டித்தழுவி ஆண்டருளவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௧௨)

யானைரத மேறு மரசர்பெரு வாழ்வுமுதற்
கானற் சலமன்றோ கண்ணே றகுமானே.

இ-ள். யானையின்மீதும் தேரின்மீதும் ஏறுகின்ற அரசரது பெரு வாழ்வு முதலியவும் கானல்நீர்போலப் பொய்யல்லவோ என்கண்ணே, றகுமானே எ-று. (௧௩)

எவருடமை யும்மெடுத்திட் டென்னுடமை யென்பவர்க்கு
நபதில் வருந்துணையே கண்ணே றகுமானே.

இ-ள். யாவர்பொருளையும் கவர்ந்துகொண்டு என் பொருளென்று சொல்வோர்க்கும் அந்தியகாலத்தில் துணையாய் வருகின்றவனே என் கண்ணே, றகுமானே எ-று. (௧௪)

ஊனெடுத்த நாண்முதலா வுபயோக மற்றயான்
கானினில் வானேனென் கண்ணே றகுமானே.

இ-ள். இவ்வுடம்பெடுத்த நாள்முதலாக ஒருபயனும் அடையாத நான் காட்டில் எறித்த நிலாவைப்போலானேன் என்கண்ணே, றகுமானே எ-று.

வாசிதனி லேறி மனமகிழ்ந்து வாழாமற்
காசாசை கொண்டேனென் கண்ணே றகுமானே.

இ-ள். வாசிமீதேறி மனமகிழ்ந்து வாழ்ந்திராமல் பணத்தாசை கொண்டு அலைந்தேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௧௬)

வீடோவென் றேகம் விழுமிடந்தான் வீதிகளோ
காடோ செடியோவென் கண்ணே றகுமானே.

இ-ள். என்சரீரம் வீழ்கின்ற இடமானது வீடோ வீதியோ காடோ செடியோ என்கண்ணே, றகுமானே எ-று. (௧௭)

பாக முடன்வளர்த்த பாழுடனா யுக்கிரையோ
காகங் கருக்கிரையோ கண்ணே றகுமானே.

இ-ள். பக்குவமாக வளர்த்த இந்தப் பாழுடம்பானது நாய்க்கு இரையா குமோ அன்றிக் காகங்களுக்கு இரையாகுமோ என்கண்ணே, றகுமானே எ-று.

ஏங்காம லங்குமிங்கு மேகாந்த மாகவுனைக்
காண்கவந்து பாங்கருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். அங்குமிங்கும் ஏங்கித் திரியாமல் ஏகாந்தமாக உன்னை நான் சேவிக்கும்படி யெழுந்தருளி யென்னிடத்துக் கிருபை செய்தருளவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௧௯)

தொண்டுசெய்ய நின்ற துறவியர்க ளேயருளைக்
கண்டுகொள்ளக் கண்டாயென் கண்ணே றகுமானே.

இ-ள். உனக்கு அடிமை செய்யாநின்ற துறவியர்களே உன்னருளைக் கண்டுகொள்ளும்படி அவர்கள்மீது கடைக்கண் வைத்தருளினாய் என் கண்ணே, றகுமானே எ-று. (௨௦)

அல்லும் பகலு மடிமைமனந் தேம்புதற்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றகுமானே.

இ-ள். இரவும்பகலும் உன்னடிமையாகிய என்மனம் வாட்டமடைதலைக் காணின் கல்லும் உருகிப்போமே என்கண்ணே, றகுமானே எ-று. (௨௧)

வேட்டை பெரிதென்றே வெறிநாயைக் கைப்பிடித்துக்
காட்டிற் புகலாமோ கண்ணே றகுமானே.

இ-ள். வேட்டை புதிதென்றெண்ணி வெறிநாயைக் கையிற்பிடித்துக் காட்டில் பிரவேசிக்கலாமோ என்கண்ணே, றகுமானே எ-று. (௨௨)

அடைத்த மனக்காட்டை யாளுமைந்து கள்வரையுங்
கடத்த முடியவதில்லை கண்ணே றகுமானே.

இ-ள். அடர்ந்த மனக்காட்டை ஆளுகின்ற ஐந்துதிருடரையும் வெல்ல என்றால் முடிகின்றதில்லை என்கண்ணே, றகுமானே எ-று. (௨௩)

மடம்புகுந் நாய்போல மயங்குமென்னை யுன்னைவிடங்
கடத்துவாரைக் காணேனென் கண்ணே றகுமானே.

இ-ள். மடத்தில் நுழைகின்ற நாய்போல மயங்குகின்ற என்னை உன்னை யன்றி ஆதரிப்பார் வேறொருவரைக் கண்டிலேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௨௪)

வையம்பொய் யென்றே மறையோல மிட்டதெல்லாங்
கையுமெய்யு மாச்சுதென்றன் கண்ணே றகுமானே.

இ-ள். இவ்வுலகமானது பொய்யென வேதங்கள் முறையிட்டதெல் லாம் கையுமெய்யுமாகப் பலித்தது என்கண்ணே, றகுமானே எ-று. (௨௫)

சொல்லறு மெய்ஞ்ஞானச் சுடரொளிகண் டாலென்மனக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றகுமானே.

இ-ள். பேச்சிறந்த மெய்ஞ்ஞானச் சுடரொளியைக் கண்டால் என்மன மாகிய கல்லும் கரைந்திடும் என்கண்ணே, றகுமானே எ-று. (௨௬)

மாதா பிதாவுமென்னை மயங்கி மயங்கியுன்னைக்
காதலிக்க வொட்டாரென் கண்ணே றகுமானே.

இ-ள். என்னை யீன்றோராகிய தந்தை தாயார் என்னைமயக்கி உன்னை விரும்பவொட்டாமற் செய்கிறார்கள் என்கண்ணே, றகுமானே எ-று. (உஎ)

வெற்றிதரு மெய்ப்பொருளை வேதாந்தத் துட்கருவைக்
கற்றோர்க் கருள்புரியுங் கண்ணே றகுமானே.

இ-ள். வெற்றியைத் தருகின்ற உண்மைப்பொருளை வேதமுடிவிலுள்ள உட்கருத்தைக் கற்றோர்க்கு அருள்புரிகின்ற என்கண்ணே, றகுமானே எ-று.

உடையா பரணமென வுன்னியுன்னிப் பாவிமனங்
கடையாய் விடலாமோ கண்ணே றகுமானே.

இ-ள். ஆடை ஆபரணமென்று எண்ணியெண்ணிப் பாவியேனது மனம் கடைப்படலாமோ என்கண்ணே, றகுமானே எ-று. (உகூ)

ஓயாக் கவலையினா லுள்ளுடைந்து வாடுதற்கோ
காய மெடுத்தேனென் கண்ணே றகுமானே.

இ-ள். ஓயாத துன்பத்தினால் மனம் உடைந்து வாடுதற்கோ நானிவ் வுடம்பெடுத்தேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௩0)

நேசம்வைத்த துன்னடிமை நின்பதத்திற் கல்லாது
காசுதனக் கோவென் கண்ணே றகுமானே.

இ-ள். உன்னடிமையாகிய நான் விருப்பம் வைத்தது உன்திருவடியின் மீதல்லது பணத்துக்காகவோ என்கண்ணே, றகுமானே எ-று. (௩க)

எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி யுன்னடிமை
கண்ணுக்குட் சிட்டானேன் கண்ணே றகுமானே.

இ-ள். எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணியெண்ணி உன் அடிமையாகிய நான் வலைக்குள் அகப்பட்ட சிற்றுக்குருவிபோல் ஆயினேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௩உ)

பொய்யெடுத்தா னென்று புறக்கணித்தா யாகிலெனைக்
கையணைப்பா ருண்டோவென் கண்ணே றகுமானே.

இ-ள். இவன் பொய்யனென்று என்னை நீக்கிவிடுவாயானால் என்னைக் கையினால் அணைப்பவர்கள் உண்டோ என்கண்ணே றகுமானே எ-று. ()

விண்ணுடார் காணா விரிகருணைச் செஞ்சுடரைக்
கண்குளிரத் தந்தருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். பொன்னுலகத்தாராகிய தேவர்களும் காணாத பெருங்கருணை யுடைய செவ்வொளியை யென் கண்குளிரக் காட்சிதந்தருளவேண்டும் என் கண்ணே, றகுமானே எ-று. (௩௪)

தங்குபே ரின்பமதைச் சார்ந்தகுரு நாதனுக்கே
கங்குல்பக லற்றறுமென் கண்ணே றகுமானே.

இ-ள். பேராநந்தத்தை யடைந்த குருநாதனுக்கே இராப்பகலகள் அற்றொழிந்த என்கண்ணே, றகுமானே எ-று. (௩௫)

தூங்காமற் றூங்கித் தொழுதுதொழு துன்னருளைக்
காணக வெனக்கருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். தூங்காமல் தூங்கித் தொழுதுதொழுது உன் அருளைக் காணும் படி எனக் கருள்செய்யவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௩௬)

இன்றுளோர் நாளைக் கிருப்பதுபொய் யென்பதையான்
கண்டுகொண்டே னையாவென் கண்ணே றகுமானே

இ-ள். இன்றைக் கிருப்போர் நாளைக்கிருப்பது பொய்யென்னுஞ் செய்தியை நான்கண்டுகொண்டேன் ஐயனே என்கண்ணே, றகுமானே எ-று.()

பீற்றற் றுருத்திதனைப் பீக்குழியைச் சாக்கடையைக்
காத்தேன் வளர்த்தேனென் கண்ணே றகுமானே.

இ-ள். தோளைத் துருத்தியை மலக்குழியைச் சாக்கடையைக் காத்தேன் வளர்த்தேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௩௮)

போதத் தனம்புதைத்த புல்லர்க் கிருப்பூசி
காதற் றதும்வருமோ கண்ணே றகுமானே.

இ-ள். ஞானமாகிய திரவியத்தைப் புதைத்துவைத்த அற்பர்களுக்குக் காதற்ற இருப்பூசியும் கூடவருமோ என்கண்ணே, றகுமானே எ-று. (௩௯)

பாடிப் படித்தறிந்தும் பற்றறார் பாசமலைக்
காடுகொண்டு போவாரென் கண்ணே றகுமானே.

இ-ள். பாடியும் படித்தும் அவற்றின் பொருளையுணர்ந்தும் தமது இருவகைப்பற்றறாதவர்கள் பாசமாகிய மலைக்காடுகளால் மூடப்பட்டுப் போவார் என்கண்ணே, றகுமானே எ-று. (௪0)

நிறைந்தபரி பூரணமே நிர்க்குணமே நின்மலமே
கருணைக் கடலேயென் கண்ணே றகுமானே.

இ-ள். எங்கும் வியாபித்த பரிபூரணப்பொருளே நிற்குணமே நின்மலமே கருணைக்கடலே என்கண்ணே, றகுமானே எ-று. (௪௧)

பார்ப்பாயோ வென்றன்முகம் பாவியா காமலென்னைக்
காப்பாயோ வையாவென் கண்ணே றகுமானே.

இ—ள். என்முகத்தைப் பார்த்தருளுவையோ நான் பாவியாகாமல் என்னைக் காத்தருளுவையோ ஐயனே என்கண்ணே, றகுமானே எ—று. (௪௨)

மெய்பெடுத்த நாண்முதலா மெய்யறியாப் பாவியெனைக்
கைவிடவே வேண்டாமென் கண்ணே றகுமானே.

இ-ள். உடம்பெடுத்த நான்முதலாக மெய்ப்பொருளை அறியாத பாவியாகிய என்னைக் கைவிடவேண்டாம் என்கண்ணே, றகுமானே எ-று. (௪௩.)

சோற்றுப் பொதியைச் சுமந்தே யலைந்துசுழற்
காற்றுத் துரும்பானேன் கண்ணே றகுமானே.

இ-ள். சோற்றுப் பொதியைச் சுமந்தலைந்து சுழற்காற்றிலகப்பட்ட துரும்புபோலானேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௪௪)

சேர்ந்தசுற்றந் தன்னைச் சிதறவிட்ட சிந்தையர்க்குங்
காந்த மலையேயென் கண்ணே றகுமானே.

இ-ள். சூழ்ந்திருக்கின்ற சுற்றத்தாரைச் சிதறடித்த உறுதியாகிய மனமுடையார்க்குக் காந்தமலைபோல்பவனே என்கண்ணே, றகுமானே எ-று.

உலையி லிடுமெழுகி னொப்பாக வென்றனுள்ளம்
கலைதலது காரியமோ கண்ணே றகுமானே.

இ-ள். உலையிலிட்ட மெழுகுக்குச் சமானமாக என்மனமானது கரைவது காரியமாமோ என்கண்ணே, றகுமானே எ-று. (௪௫)

ஆவி தனைக்குரங்கா வாட்டுகின்ற வையறிவைக்
காவ லிடவருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். என் உயிரைக் குரங்குபோலாட்டுகின்ற ஐம்பொறிகளையும் காவலிடும்படி யெனக் கருள்செய்யவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று.()

வேஷந் தனைப்போட்டு மெய்ம்மயக்கும் பொய்க்குருவாய்க்
காசு பணம்பறித்தேன் கண்ணே றகுமானே.

இ-ள். பொய்வேஷம் பூண்டு மெய்யை மயக்குகின்ற பொய்க்குருவாகிப் பணங்காசுகளைப் பறித்தேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௪௮)

எட்டிப் பிடிக்கும் விதமறிந்தா லுன்பதத்தைக்
கட்டிப் பிடித்திடுவேன் கண்ணே றகுமானே.

இ-ள். எட்டிப்பிடிக்கின்ற வகை அறிந்தேனானல் உன் திருவடியைக் கட்டிப் பிடித்துக்கொள்வேன், என்கண்ணே, றகுமானே எ-று. (௪௯)

அவியா மனமவிய வாய்கலை யோர்கடமைக்
கவியுந் திருக்கருணைக் கண்ணே றகுமானே.

இ-ள். அடங்காத மனமானது அடங்கும்படி கலைகளை ஆராய்ந்தோரை மூடிக்கொள்ளுகின்ற திருக்கருணையையுடைய என்கண்ணே, றகுமானே எ-று. (௫௦)

சித்திதரும் வேதாந்தச் செழுஞ்சுடரைச் சின்மயத்தைக்
கற்றவர்க்கு முத்திதருங் கண்ணே றகுமானே.

இ-ள். எல்லாச் சித்திகளையுந் தருகின்ற வேதாந்தச் செழுஞ்சோதியைச் சின்மயத்தைக் கற்றவர்க்கு முத்தியைத் தருகின்ற என்கண்ணே, றகுமானே எ-று. (௯௧)

அருவிசொரி யும்படிக் கம்பரத்தி லன்புவைத்தாற்
கருவி பிரியாதென் கண்ணே றகுமானே.

இ-ள். அருவிபொழியும்படி ஆகாயத்தில் விருப்பம் வைத்தால் இவ்வுடற் கருவியானது என்னைவிட்டுப் பிரியாது என்கண்ணே, றகுமானே எ-று. (௯௨)

மாராய வெள்ள மருங்கமிழ்ந்த நின்கருணைக்
காரார் மழைபொழியுங் கண்ணே றகுமானே.

இ-ள். மாயவெள்ளத்தில் அழுந்தின என்மீது உனது கருணைமழை பொழிகின்ற என்கண்ணே, றகுமானே எ-று. (௯௩)

எண்படா தெண்ணமெல்லா மெண்ணியெண்ணி நெஞ்சமொரு
கண்படா தலங்குவதோ கண்ணே றகுமானே.

இ-ள். அளவுபடாத எண்ணங்களை யெல்லாம் எண்ணி எண்ணி என் நெஞ்சமானது சிறிதும் நித்திரை செய்யாது கலங்கலாமோ என்கண்ணே, றகுமானே எ-று. (௯௪)

கோலங் குறியில்லாக் குருவடிதொ ழார்கண்மனங்
கால னிருப்பிடமோ கண்ணே றகுமானே.

இ-ள். குணங்குறிகளில்லாத குருநாதனது திருவடியை வணங்காதவருடைய மனமானது எமனிருப்பிடமோ என்கண்ணே, றகுமானே எ-று. ()

உள்ளுயிரி னுள்ளே யுறைந்தபரஞ் சோதிவரிற்
கள்ளமனந் துள்ளாதென் கண்ணே றகுமானே.

இ-ள். உயிரினுள்ளே உறைகின்ற பரஞ்சோதிவந்தால் என் கள்ள மனம் துள்ளமாட்டாது என்கண்ணே, றகுமானே எ-று. (௯௬)

சேர்க்குந் திரவியமுஞ் சித்ரமணி மண்டபமுங்
காக்குந் துணையோவென் கண்ணே றகுமானே.

இ-ள். சேர்த்துவைக்கின்ற திரவியமும், சித்திரமணி மண்டபங்களும் என்னை நீ காக்குந் துணையாமோ என்கண்ணே, றகுமானே எ-று. (௯௭)

பட்டுடையு மொப்பனையும் பாதகமு மென்னைவிட்டுக்
கட்டோ டொழிவதிலை கண்ணே றகுமானே.

இ-ள். பட்டாடையும், அலங்காரமும், பாதகமும், என்னைவிட்டுக் கட்டோடு நீங்குவதில்லை என்கண்ணே, றகுமானே எ-று. (௯௮)

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணா திருக்குமனங்
கண்ணாடிக் குள்முகமாங் கண்ணே றகுமானே.

இ-ள். எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணாதிருக்கின்ற என் மனமானது கண்ணாடிக்குள்ளே தோற்றுகின்ற முகம்போலும் என்கண்ணே, றகுமானே எ-று. (௮௯)

மண்டபமுந் தண்டிகையு மாளிகையுஞ் சாளரமுங்
கண்டு கழிக்கவருள் கண்ணே றகுமானே.

இ-ள். மண்டபமும் பல்லக்கும் மாளிகையும் சாளரமும் ஆகிய இவற்றைப் பார்த்துக் கழிக்கும்படி அருள் செய்யக்கடவை என்கண்ணே, றகுமானே எ-று. (௯௦)

மன்னுங் கருவி மவுனமணிப் பெட்டகத்தைக்
கன்னமிடப் போமோவென் கண்ணே றகுமானே.

இ-ள். நிலைபெற்ற கருவிகள் மௌனமாகிய மணியைப் பத்திரப்படுத்தி வைத்த பெட்டியைக் கன்னவிடலாமோ என்கண்ணே, றகுமானே எ-று.

என்றுமன்னை சுற்றமுத லெற்குப்பழி காரரெனக்
கண்டறிந்து கொண்டேனென் கண்ணே றகுமானே.

இ-ள். எக்காலத்தும் தாய், சுற்றம்முதலாகிய எல்லோரும் எனக்குப் பழிகாரர்களென்று கண்டுணர்ந்துகொண்டேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௯௨)

கொடிய மனத்துயரைக் கூடா திருப்பவர்க்குக்
கடுக முடுகிவருங் கண்ணே றகுமானே.

இ-ள். கொடிதாகிய மனத்துன்பத்தை யடையாதிருப்பவருக்கு விரைவாக முடுகிவருகின்ற என்கண்ணே, றகுமானே எ-று. (௯௩)

ஏச்சு மதிமயக்கு மில்லார்க ளாலுடைந்தேங்
காய்ச்சிறட்டை யானேனென் கண்ணே றகுமானே.

இ-ள். பழிப்பும் மதிமயக்கமும் இல்லாதவர்களால் உடைந்த தேங்காய்ச் சிறட்டை யானேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௯௪)

விள்ளரிய வேதகம் விறைவுதலை யுங்கடிந்து
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே றகுமானே.

இ-ள். சொல்லுதற்கரிய வேதங்களைக் கற்பதையும்விலக்கி என் கள்ள மனமானது துள்ளுகின்றது என்கண்ணே, றகுமானே எ-று. (௯௫)

வேதக் கருவை விளைகருணைக் குஞ்சரத்தைக்
காதலித்தே னாதரித்தாள் கண்ணே றகுமானே.

இ-ள். வேதத்தின் மூலகாரணத்தைக் கருணைமதம் பொழிகின்ற யானையை விரும்பினேன் ஆதலால் என்னை ஆதரித்தாண்டருளவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௯௬)

அரும்பே மலரேயென் னாசைதரும் வாசனையே
கரும்பே ரசமேயென் கண்ணே றகுமானே.

இ-ள். பூவரும்பே பூவே எனக்காசையை உண்டாக்குகின்ற வாசனையே கரும்பே கரும்பினது ரசமே என்கண்ணே, றகுமானே எ-று. (௬௭)

பூரணமே யற்புதமே பொங்குகரு ணைக்கடலே
காரணமே யென்றனருட் கண்ணே றகுமானே.

இ-ள். பூரணமே அற்புதமே பொங்குகின்ற கருணைக்கடலே காரணமே என்னுடைய அருட்கண்ணே, றகுமானே எ-று. (௬௮)

ஓயாதோ வென்கவலை யுன்னருளா லென்கருவி
காயாதோ வையாவென் கண்ணே றகுமானே.

இ-ள். என் துன்பமானது ஓயாதோ உன் அருளால் என்கருவிகள் தத்தம் விஷயங்கள் ஒடுங்கப்பெற்று உலர்ந்து போகாவோ என்கண்ணே, றகுமானே எ-று. (௬௯)

ராஜாங்கம் வேண்டி ரதகஜங்க ளேறுதற்குங்
காசெங்குங் கேளேனென் கண்ணே றகுமானே.

இ-ள். ராஜாங்கம்வேண்டி தேர் யானைகளில் ஏறுதற்கு எவ்விடத்துஞ் சென்று பணங்கேளேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௭௦)

தந்தைதா யென்றே மயங்குகின்ற பாவிமனக்
கண்திறக்க வந்தருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். தந்தைதாய் என்று மயங்குகின்ற பாவியாகிய என் மனக்கண் திறக்கும்படி நீ எழுந்தருளவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. ( )

அச்சமெமக் கில்லையென வைம்புலனும் பாழ்மனத்தைக்
கைச்சூறை யாட்டிவிடென் கண்ணே றகுமானே.

இ-ள். எமக்கு அச்சம் இல்லையென்று சொல்லும்படி ஐம்புலன்களிற் செல்லுகின்ற பாழாகிய மனத்தைக் கைச்சூறை யாட்டிவிடு என்கண்ணே, றகுமானே எ-று. (௭௨)

இனியவமிர் தம்பொங்கி யெங்குங் கரைதத்திவரக்
கனிவாய் திறந்தருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். இனிமையாகிய அமுதமானது பொங்கி யெவ்விடத்தும் கரைமீது தவழ்ந்துவரும்படி உன் கனிவாய்திறந்து அருள்செய்யவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று. (௭௩)

ஆணையிட்டே னாணையிட்டே னையனே யுன்னருளைக்
காண வெனக்கருள்செய் கண்ணே றகுமானே.

இ-ள். ஆணையிட்டேன் ஆணையிட்டேன் ஐயனே உன் அருளைக்காணும் பொருட்டு எனக்கு அருள்செய்யவேண்டும் என்கண்ணே, றகுமானே எ-று.

அல்லும் பகலு மறிவிலய மாவோர்க்குக்
கல்லும் பிளந்திடுமென் கண்ணே நகுமானே.

இ-ள். இரவும் பகலும் அறிவு லயப்படுவோர்க்குக் கல்லும் பிளந்திடும் என்கண்ணே, நகுமானே எ-று. (௭௫)

புவியு மெழுவானும் பொன்னுலகும் பல்லுயிருங்
கவியுந் திருக்கருணைக் கண்ணே நகுமானே.

இ-ள். இந்தப்பூமியிலும் ஆகாயத்திலும் தேவலோகத்திலும் உள்ள எல்லா வுயிர்களையும் மூடிக்கொள்ளுகின்ற திருக்கருணையையுடைய என் கண்ணே, நகுமானே எ-று. (௭௬)

எண்ணரிய தாக விருந்திடுஞ் சூக்திரமோ
கண்ணிலொளி பாய்ந்ததுவோ கண்ணே நகுமானே.

இ-ள். எண்ணுதற்கரிதாக இருக்கின்ற சூத்திரந்தானோ கண்ணில் ஒளி யானது பாய்ந்ததோ யானறியேன் என்கண்ணே, நகுமானே எ-று. (௭௭)

உழைபோ வழுக்கோவென் னுளங்கழு வக்கழுவக்
கழுவாத் தொடக்கோவென் கண்ணே நகுமானே.

இ-ள். உழை சேரு அழுக்கோ என்மனமானது கழுவக்கழுவக் கழுவப்படாத மலத்தொடர்ச்சியோ என்கண்ணே, நகுமானே எ-று. (௭௮)

உற்ற கிளைத்திரை யுறவின் முறைத்திரையுங்
கத்தரித்து விட்டருள்செய் கண்ணே நகுமானே.

இ-ள். என் நண்பினராகிய திரையையும் உறவினராகிய திரையையும் கத்தரித்துவிட்டு எனக்கு அருள் செய்யவேண்டும் என்கண்ணே, நகுமானே எ-று. (௭௯)

நற்பவளக் கொம்பே நவமணிக்கு மற்புதமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே நகுமானே.

இ-ள். நல்ல பவளக்கொம்பே நவமணிக்குள்ளே அற்புதமான மணியே கைப்பொருள்கள் எல்லாவற்றுள்ளும் மெய்ப்பொருளே என்கண்ணே, நகுமானே எ-று. (௮0)

ஒப்புரவுதப்பி யுணர்வற் றுனைக்கை விட்டுக்
கப்பரையைக் கொண்டேனென் கண்ணே நகுமானே.

இ-ள். உலகநடை தப்பி அறிவழிந்து உன்னைக் கைவிட்டுக் கப்பரையைக் கைக்கொண்டேன் என்கண்ணே, நகுமானே எ-று. (௮௧)

பசப்பிப் பணம்பறிக்கும் பாவிக் குருமுகத்தைக்
கசப்பாகக் கண்டேனென் கண்ணே நகுமானே

இ-ள். பசப்பிப் பணம்பறிக்கின்ற பாவியாகிய குருமுகத்தைக் கசப்பாகக் கண்டேன் என்கண்ணே, நகுமானே எ-று. (௮௨)

வேதியர்க்கு மாதவர்க்கு மெய்யடியார் கட்குமுனைக்
காதலிப்போ ருக்குமருள் கண்ணே றகுமானே.

இ-ள். வேதியர்களுக்கும் மாதவர்களுக்கும் மெய்யடியார்களுக்கும் உன்னை விரும்புகின்ற மற்றெல்லாருக்கும் அருள்செய்கின்ற என்கண்ணே, றகுமானே எ-று. (௮௩)

வேரைவே ரோடறுத்து மெய்யடிமை யாக்குதற்கென்
காரியத்திற் றாமதமென் கண்ணே றகுமானே.

இ-ள். பிறவிக்கு வேராகிய வினைகளை வேரோடறுத்து மெய்யடிமை யாகச் செய்வதற்கு என்காரியத்தில் தாமதம் ஏன் செய்கிறாய் என்கண்ணே, றகுமானே எ-று. (௮௪)

பழகப் பழகிவரும் பாக்கியத்தைப் பைமுதலைக்
களவு கொடுக்கேனென் கண்ணே றகுமானே.

இ-ள். நான் பழகிவருவதனால் என்னிடத்துத் தங்கியிருக்கின்ற பாக்கியத்தைப் பையிலுள்ள முதற்பொருளைக் களவு கொடுக்கமாட்டேன் என் கண்ணே றகுமானே எ-று. (௮௫)

நாமாண்மை கண்முழுது நாசமாங் கார்தமக்குங்
காமவினை போமோவென் கண்ணே றகுமானே.

இ-ள். அச்சத்தைத் தருகின்ற ஆண்மைகள் முழுமையும் நாசஞ்செய் யாதவர்களுக்குக் காமவினை நீங்குமோ என்கண்ணே, றகுமானே எ-று. ()

அடிமை யுனதபய மாகா திருக்கிலுமென்
கடைவழிக்குங் கட்டமுதே கண்ணே றகுமானே.

இ-ள். அடிமையாகிய நான் உனது கருணைக்கு ஆளாகாதிருந்தாலும் என் கடைவழிக்கு நீயே கட்டமுதா யிருக்கின்றாய் என்கண்ணே, றகுமானே எ-று. (௮௭)

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
காதலித்து நின்றேனென் கண்ணே றகுமானே.

இ-ள். வேதமுடிவும் வேதமும் ஆகிய எல்லாவற்றையும்விட்டுக் கடந்து உன்னையே விரும்பி நின்றேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௮௮)

இனமுஞ் சனமுமென வெண்ணியெண்ணி யுன்னடிமை
கனசபுங்குப் பட்டேனென் கண்ணே றகுமானே.

இ-ள். இனமும் ஜனமுமென்று எண்ணியெண்ணி உன் அடிமையாகிய நான் பெருந்துன்பத்துக்கு ஆளானேன் என்கண்ணே, றகுமானே எ-று. ()

நவசூத்தி ரத்தைவிட்டு நன்னினைவெண் ணாதுமனங்
கவலைப் படுவதென்ன கண்ணே றகுமானே.

இ-ள். நூதனமாகிய சூத்திரத்தைவிட்டு நீங்கி நல்ல நினைவு நினைக்காமல் என் மனமானது கவலைப்படுதல் என்ன காரணத்தாலோ அறியேன் என்கண்ணே, றகுமானே எ-று. (௯0)

மடிப்புங் கொலைகளவும் வஞ்சமுமென் னெஞ்சைவிட்டுக்
கடக்க நடப்பதில்லை கண்ணே றகுமானே.

இ-ள். மோசமும் கொலையும் களவும் வஞ்சகமும் என்மனத்தைவிட்டுத் தூரமாகப் போவதில்லை என்கண்ணே, றகுமானே எ-று. (கக)

பலவிடத்தைச் சுற்றிப் பாதவித்துப் பாவிமனங்
கலங்கி மயங்குவதென் கண்ணே றகுமானே.

இ-ள். பலவிடங்களிலுஞ் சுழன்று பரிதபித்துப் பாவியாகிய என்மனமானது கலங்கி வருந்துவதற்குக் காரணம் யாதோ என்கண்ணே, றகுமானே எ-று. (கஉ)

உள்ளக் கருத்த னுவந்துறவு கொள்ளாமற்
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே றகுமானே.

இ-ள். மனக்கருத்தால் விரும்பி உன்னை உறவாகக்கொள்ளாமல் கள்ள மனம் துள்ளுவதற்குக் காரணம் யாதோ என்கண்ணே, றகுமானே எ-று.

மண்ணுமுதன் மற்ற மயக்கமறந் கல்லாரைக்
கண்ணெடுத்துப் பாரேனென் கண்ணே றகுமானே.

இ-ள். மண்ணை முதலியவற்றாலுண்டான மயக்கங்களெல்லாம் அற்றொழிய கல்வி கல்லாதவரை நான் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன் என்கண்ணே, றகுமானே எ-று. (கச)

தேசிகனென் னுந் திருட்டுகுருக் கள்சொல்லோர்
காசாய் மதியேனென் கண்ணே றகுமானே.

இ-ள். நான் தேசிகன் என்று சொல்லுகிற திருட்டுக் குருக்கள் சொல்லை ஒருக்காசுக்கும் மதிக்கமாட்டேன் என்கண்ணே, றகுமானே எ-று.

தன்னை யறிந்து தவம்புரியாத் தன்மையினற்
கன்னெஞ்ச னானேனென் கண்ணே றகுமானே.

இ-ள். என்னை நானறிந்து தவஞ்செய்யாத தன்மையினால் நான் கல்லைப் போன்ற வலியநெஞ்சினை யுடையவன் ஆயினேன் என்கண்ணே, றகுமானே எ-று. (கரு)

மாடகூ டங்கண்மணி மண்டபமு மன்றுகளுங்
காடுகொள்ளக் கண்டேனென் கண்ணே றகுமானே.

இ-ள். மாடகூடங்களும் ரத்நமண்டபங்களும் சபைகளும் காடுகொள்ளப்பார்த்தேன் என்கண்ணே றகுமானே எ-று. (கள)

குரலெரிய வேகதறிக் கூப்பிட்டுங் காணாக்
கருவே குருவேயென் கண்ணே றகுமானே.

இ-ள். குரல் நெரியும்படி கதறிக்கூப்பிட்டும் காணவொண்ணாத கருவே உருவே என்கண்ணே, றகுமானே எ-று. (கஅ)

மருவாத் தவத்தான் மறப்புநினைப் பற்றவர்க்குக்
கருணைக் குணங்குடியாங் கண்மணே றகுமானே.

இ-ள். மருட்சியில்லாத் தவத்தொழிலால் மறப்பு நினைப்புக்கள் இல்லா தொழிந்தவர்க்குக் கருணைசெய்கின்ற குணங்குடியானென்றுந் திருநாமத்தையுடைய என்கண்மணே, றகுமானே எ-று. (கூக)

உத்திக்கு முணர்வன்றி யுணர்வோ டுணர்வொன்றிற்
கத்திக்குங் குணங்குடியென் கண்மணே றகுமானே.

இ-ள். உண்டாகின்ற உணர்வோடு பேருணர்வு பொருந்துமாயின் குணங்குடியாக விருத்தியடையும் என்கண்மணே, றகுமானே எ-று. (௧00)

றகுமான் கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 763.

எக்காலக்கண்ணி.

முத்திதரும் வித்தை முனையில்வைத்துச் சீராட்டி
நித்த மறவாம னினைப்பதினி யெக்காலம்.

இ-ள். மோட்சத்தைத்தருகிற வித்தையைச் சீராட்டி நாடோறும் மறவாமல் நினைப்பது இனி யெக்காலம் எ-று. (௧)

ஆதியின்மே லாசை யடர்ந்தெரித்த வக்கினியின்
சோதியினல் வெந்து சுகம்பெறுவ தெக்காலம்.

இ-ள். முதற்பொருளின் ஆசைமிகுந்து எரித்த நெருப்பின் சுடரால் வெந்து சுகமடைவது இனி யெக்காலம் எ-று. (உ)

காமக் கடல்கடந்தக் கர்த்தவியக் கப்பல்வைத்து
நேமநிஷ்டை கம்ப நிறுத்துவது மெக்காலம்.

இ-ள். காமக்கடலைக் கடப்பதற்குக் கர்த்தவ்யமென்கிற கப்பலை அமைத்து நேமநிஷ்டையென்கிற கம்பத்தை நிறுத்துவதும் இனி யெக்காலம் எ-று. (௩)

பங்கப் பழிப்பேய்ந்த பையன்யா னரையலர்கள்
கொங்கையை நான்பாராக் குருடாவ தெக்காலம்.

இ-ள். பங்கப்பழிப்புக்களையுடைய பையலாகிய யான் மாதரது கொங்கைகளைப் பாராத குருடனவது இனி யெக்காலம் எ-று. (௪)

கொங்கைதனைப் பாராக் குருடா யிருப்பதுடன்
அங்கமுமிழ் மோக மழிவதினி யெக்காலம்.

இ-ள். கொங்கைகளைப் பாராத குருடா யிருப்பதுடன் இந்தச் சரீரத்தின்மீதுள்ள பெரிய விருப்பமானது அழிவது இனி யெக்காலம். எ-று. ()

அங்கமுமிழ் மோக மழிந்தே யறமெலிந்து
வன்கிழடு போல வறண்டுணர்வ தெக்காலம்.

இ-ள். இந்தச்சரீரத்தின்மீதுள்ள பெரியவிருப்பம் அழிந்து மிகவுமெலிந்து பெருங்கிழவன்போல வற்றி உன்னை யறிவது இனியெக்காலம். எ-று.

வாசியினா னேறி வலமிடந்தி ருப்பாமற்
றேசிநடை போலத் திடப்படுவ தெக்காலம்.

இ-ள். வாசிமீதேறி அதனை வலமிடமாகத் திருப்பாமல் குதிரையின் நடைபோலத் திடப்படுத்துவது இனி யெக்காலம் எ-று. (எ)

தேசிநடை போலத் தியங்காச் சுழுமுனையை
நாசி நுனியி னான்மறிப்ப தெக்காலம்.

இ-ள். குதிரைநடைபோல மயங்காத சுழுமுனையை நாசிநுனியில் நான் நிறுத்துவது இனி யெக்காலம் எ-று. (அ)

நாசி நுனிகடந்து நாசமாய்ப் போகாமல்
வாசியுமென் கையில் வசப்படுவ தெக்காலம்.

இ-ள். நாசிநுனியைக் கடந்து நாசமாய்ப் போகாமல் வாசியும் என்கையில் வசப்பட்டு நிற்பது இனி யெக்காலம் எ-று. (கூ)

மையலெனு மாலை மார்புநிறை யப்பூண்ட
தையலர்க ளெல்லாமென் றாயாவ தெக்காலம்.

இ-ள். மையலென்கின்ற மாலையை மார்புநிறைய தரித்த மாதர்களெல்லாம் எனக்குத் தாய்மார் ஆவது இனி யெக்காலம் எ-று. (க0)

கஞ்சா வபினரக்குங் கற்பமென வுண்ணாமல்
எண்சாண் பனங்க ளிறக்கியுண்ப தெக்காலம்.

இ-ள். கஞ்சாவும் அபினும் சாராயமும் கற்பங்களென்று எண்ணி உண்ணாமல் எண்சாண் அளவாகிய பனைமரத்தின் கள்ளை இறக்கி உண்பது இனி யெக்காலம் எ-று. (கக)

பொய்யே மிகுத்த புதர்ப்பாவிப் பையல்யான்
அய்யோவென் றேயழுதுன் னடிபணிவ தெக்காலம்.

இ-ள். பொய்யேமிகுந்த பெரும்பாவிப் பையலாகிய நான் ஐயோ என்று அழுது உன் திருவடியை வணங்குவது இனி யெக்காலம் எ-று. (கஉ)

அய்யோகூ வென்றே யலறவடி யுண்டவென்றன்
பொய்யான மெய்யின் பிழையறுவ தெக்காலம்.

இ-ள். ஐயோ கூவென்று அலறும்படி அடியுண்ட எனது பொய்யாகிய சரீரத்துன்பங்களெல்லாம் அற்றொழிவது இனி யெக்காலம் எ-று. (கங)

மருவு தகைமறந்து மனமு மதமிறந்து
இருகையு மேந்தி யிரந்துண்ப தெக்காலம்.

இ-ள். பெருமை மதம் மானம் முதலியவற்றை நீக்கி இருகையும் ஏந்தி இரந்துண்பது இனி யெக்காலம் எ-று. (௧௪)

இருகையு மேந்தி யிரந்து குடித்தேநான்
சருகா யுலர்ந்து சலிப்பறுவ தெக்காலம்.

இ-ள். இருகையும் ஏந்தி யிரந்துகுடித்து நான் சருகுபோல உலர்ந்து சலனத்தை ஒழிப்பது இனி யெக்காலம் எ-று. (௧௫)

ஆசானைக் காலே யணைந்திருந்து மோந்துகலந்
தூசாடிப் பேசி யுணர்வருள்வ தெக்காலம்.

இ-ள். குருநாதனது திருவடியை அடைந்திருந்து மோந்து கலந்து ஊடாடிப்பேசி மெய்யுணர்வை அவனால் அருள் செய்யப்பெறுவது இனி யெக்காலம் எ-று. (௧௬)

வாசிவா வென்று வருந்தெள் ளமுதமுண்டு
பேசிநான் வாழ்ந்தே பிழைதீர்வ தெக்காலம்.

இ-ள். வாசிவாவென்று ஊறிவருகின்ற தெளிவாகிய அமிர்தத்தை யுண்டு நான் வாழ்ந்து பிழைகள் எல்லாவற்றையும் ஒழிவது இனி யெக்காலம் எ-று. (௧௭)

எக்காலக்கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 780.

கண்மணிமாலைக்கண்ணி.

அத்து விதமே யறிவகண்டா காரக்
கர்த்தவிய மேயென் கண்ணே பராபரமே.

இ-ள். அத்துவிதப்பொருளே, அறிவுருவே, அகண்டாகாரக்கர்த்தவியமே, என்கண்ணே, பராபரமே எ-று. (௧)

தற்பரமே சிற்பரமே தானென்று நின்றுதவுங்
கற்பகமே யற்புதமே கண்ணே பராபரமே.

இ-ள். தற்பரமே, சிற்பரமே, தானென்று நிலைபெற்று அருள்செய்கிற கற்பகத்தருவே, அற்புதமே, கண்ணே, பராபரமே எ-று. (௨)

உடலே யுயிரே யுளங்குளிர்ந்த செந்தேனே
கடலே நிறையமுதே கண்ணே பராபரமே.

இ-ள். சரீரமே, உயிரே, மனம் குளிரும்படியான செந்தேனே, கடலே நிறைந்த அமிர்தமே, கண்ணே, பராபரமே எ-று. (௩)

கொட்டிவைத்த முத்தே குவித்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேயென் கண்ணே பராபரமே.

இ-ள். கொட்டிவைத்த முத்தே, குவித்துவைத்த நவரத்தினமே, கட்டிப் பசும்பொன்னே, எனது கண்ணே, பராபரமே எ-று. (௫)

சட்டரச வர்க்கமே சார்ந்தமதோர் குஞ்சரமே
கட்டழகுப் பெண்ணேயென் கண்ணே பராபரமே.

இ-ள். ஷட்ரஸவர்க்கமே, என்னையடைந்த ஒப்பற்றயானையே, கட்டழகையுடைய பெண்ணே, எனது கண்ணே, பராபரமே எ-று. (௬)

செல்வப் பெருக்கே திரண்டமணி பொக்கிஷமே
கல்விக் களஞ்சியமே கண்ணே பராபரமே.

இ-ள். செல்வப்பெருக்கமே, திரண்ட ரத்நபொக்கிஷமே, கல்விக் களஞ்சியமே, கண்ணே, பராபரமே எ-று. (௬)

இன்னமுதே கண்டே யெனக்கேற்ற முக்கனியே
கன்னறரும் பாகேயென் கண்ணே பராபரமே.

இ-ள். இனிய அமிர்தமே, கற்கண்டே, எனக்குத்தகுந்த முக்கனியே, சர்க்கரைப்பாகே, என் கண்ணே, பராபரமே எ-று. (௭)

பிச்சாத் திரண்டமுதே பிரியாப் பெருவாழ்வே
காய்ச்சாச்செம் பொன்னேயென் கண்ணே பராபரமே.

இ-ள். கறவாதபாலே, என்னைவிட்டு நீங்காத பெருஞ்செல்வமே, காய்ச்சாத செம்பொன்னே, என் கண்ணே, பராபரமே எ-று. (அ)

நற்பவளக் கொம்பே நவின்றமணிப் பெட்டகமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே பராபரமே.

இ-ள். நல்ல பவளக்கொடியே, புகழப்பட்ட ரத்நப்பேழையே, கைப்பொருள்களில் மெய்ப்பொருளே, கண்ணே, பராபரமே எ-று. (௯)

பட்டைக் கருப்புவட்டே பானைகொண்ட சர்க்கரையே
கட்டிக் கரும்பேயென் கண்ணே பராபரமே.

இ-ள். பட்டைக் கருப்புவெல்லமே, பானைநிறைந்த சர்க்கரையே, கட்டிக்கரும்பே, என் கண்ணே, பராபரமே எ-று. (௧0)

துன்பக் கடலைத் தொலைத்தோர் துயர்தீர்க்குங்
கம்பமற்ற பாற்கடலே கண்ணே பராபரமே.

இ-ள். துன்பக்கடலைத் தாண்டினவர்களுடைய துக்கத்தை நீக்குகின்ற, அசையாத பாற்கடலே, கண்ணே, பராபரமே எ-று. (௧௧)

பொய்ப்பொருள்க ளெல்லாம் புறக்கணித்த புண்ணியர்தங்
கைப்பொருள்சித் தித்ததென்றன் கண்ணே பராபரமே.

இ-ள். பொய்ப்பொருள்களெல்லாவற்றையும் கைவிட்ட புண்ணியவான்களுடைய கைப்பொருள் எனக்குக் கிடைத்தது, என்கண்ணே, பராபரமே

பவக்கடலை நீங்கிப் பரிவாய்க் கரையேற்றுங்
கவிழா மரக்கலமே கண்ணே பராபரமே.

இ-ள். பிறவிக்கடலைக் கடத்துவித்து அன்போடு முத்திக்கரையிலேற்றுகிற, கவிழாத கப்பலே, கண்ணே, பராபரமே எ-று. (௧௩)

தம்பனங் கொண்டே தரித்துநின்ற வோங்காரக்
கம்பத் தடியானேயென் கண்ணே பராபரமே.

இ-ள். தம்பனங்கொண்டு தரித்துநின்ற ஓங்காரமாகிய கம்பத்தினடியிலிருப்பவனே, என் கண்ணே, பராபரமே எ-று. (௧௪)

மோகிதங் கொண்டதையான் மண்ணிற் கவிழ்ப்பதற்கோ
கலகம் விளைத்துவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். உன்னிடத்தில் பெருவிருப்பங்கொண்டதை நான் மண்ணில் கவிழ்த்து விடுவதற்கோ, கலகத்தை உண்டாக்கிவிட்டாய், கண்ணே, பராபரமே எ-று. (௧௫)

தெள்ளியவான் சோதி தெளிந்துமெல்ல வந்ததையுங்
கள்ளப் படுத்திவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். தெளிவாகிய பரஞ்சோதியானது தெளிந்து மெல்லவந்ததையும் வஞ்சனை செய்துவிட்டாய், கண்ணே, பராபரமே எ-று. (௧௬)

புண்ணீ ரொழுகிப் புழுங்கு மனத்தினர்போற்
கண்ணீர் கலங்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். உதிரநீரை யொழுகச்செய்து புழுங்குகின்ற மனமுள்ளவர்போலக் கண்ணீர் கலங்கும்படி யென்னைக் கைவிட்டாய், கண்ணே, பராபரமே எ-று. (௧௭)

பித்தர்கள் போலும் பிதற்றிக்கா கம்போலுங்
கத்திநத்திச் சாரவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். பித்தர்போலப் பிதற்றிக் காகம்போலக் கத்திச் சாரும்படி என்னை விட்டுவிட்டாய், கண்ணே, பராபரமே எ-று. (௧௮)

போற்றுமற் சிந்தை பொருதுசமர்க் காட்டாமற்
காற்றாய்ப் பறக்கவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். மனத்தைத் தடுக்கமாட்டாமலும் அதனோடு போர்செய்து வெல்லமாட்டாமலும் காற்றாய்ப்பறக்கும்படி என்னை விட்டுவிட்டாய், கண்ணே, பராபரமே எ-று. (௧௯)

நெற்பதர்க்கே யொப்பாக நிற்பதற்கோ வென்றலையில்
கற்பித்து விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். நெற்பதர்போல நிற்பதற்கோ என்தலையில் கற்பித்து எழுதிவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உ0)

சொல்லாச் சுயஞ்சோதிச் சுடர்கொழிக்க நெஞ்சுகருங்
கல்லாகச் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். சொல்லவொண்ணாத சுயஞ்சோதியின் ஒளி பெருகுகின்ற என் நெஞ்சானது கருங்கல்லாகும்படியாகச் செய்துவிட்டனையே கண்ணே, பராபரமே எ-று. (உக)

அவிழ்ந்தவிழ்ந்து சிந்தையுன்மீ தாசைவைத்த தத்தனையுங்
கவிழ்த்துப்பா ழாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். என்மனமானது உன்மீது மிகுவிருப்பம் வைத்து உருகின உருக்கத்தையெல்லாம் கவிழ்த்துப் பாழாக்கி விட்டனையே கண்ணே, பராபரமே எ-று. (உஉ)

ஓசைமணி மண்டபத்தி னுட்புகா வண்ணமெனைக்
காசினியிற் சுற்றவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். ஓசையையுடைய மணிமண்டபத்துள்ளே பிரவேசிக்காதபடி என்னை இந்தப்பூமியில் சுழலவிட்டாய் என்கண்ணே, பராபரமே எ-று. ()

வீண்காத றந்ததல்லால் மேற்றி லுனைக் கண்ணுனுங்
காண்கவரி தாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். வீணசையை எனக்கு உண்டுபண்ணினதே யல்லாமல் உன்னைக் கண்ணினாலும் நான் காண்பதற்கு அருமையாக்கிவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உச)

சேத்துமத்தி னீப்போலென் சிந்தைநைந் தேங்கவுனைக்
காட்டி மறைந்துவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். கபத்தில் அகப்பட்ட ஈயைப்போல என் மனம்வருந்தி யேங்கும்படி உன்னைக்காட்டி மறைந்துவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உரு)

துட்டமா மாயையினிற் சுட்டெரிந்த கொள்ளிக்
கட்டையிற தாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். துஷ்டத்தனமுள்ள மாயையாகிய நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்ட கொள்ளிக்கட்டையாக என்னைச் செய்துவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உசா)

வேல்விழியார் காம வேட்கை யளற்றிலெனைக்
கால்மாற்ற விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். வேல்போலும் கண்களையுடைய மாதரது வசையாகிய சேற்றில் நான் கால்பதிந்து வருந்தும்படி என்னை விட்டுவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உஎ)

வீடுகா டென்று விதித்ததுவு மல்லாமற்
காடுவீ டாகவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். வீடு காடு என்று விதித்ததே யல்லாமல் எனக்குக் காட்டையே வீடாக்கிவிட்டாய் என்கண்ணே, பராபரமே எ-று. (உ௲)

ஓடாமலோடி யுலகைவலஞ் சுற்றுதற்கோ
காடோட வாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். ஓடாமல்ஓடி உலகமுழுமையும் வலம் வருதற்கோ என்னைக் காட்டுக்கு ஓடும்படி செய்துவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (உ௯)

ஈடோயா னுன்றனக்கு வென்மீதி லேனுவிக்
காடிநயஞ் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். நான் உனக்கு ஈடோ என்மீதில் என்ன காரணத்தாலோ இந்த வன்கண்மை செய்துவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (௩0)

அச்சமிலாப் புல்வேட ரைவருக்கு மென்னறிவைக்
கைச்சூறை யாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். அச்சமில்லாத ஐம்புலவேடருக்கு என்னறிவை சூறையாக்கி விட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (௩க)

வில்லங்க மற்று விளக்கொளிபோ லின்றநெஞ்சைக்
கல்லங்க மாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். துன்பமொழிந்து தீபப்பிரகாசம்போலப் பிரகாசித்துக்கொண் டிருந்த என் மனத்தைக் கல்லுக்குச் சமமாக்கிவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (௩உ)

மண்ணாதி மூவாசை மாமாயை முக்கூட்டுக்
கண்ணியுட்சிட் டாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

இ-ள். மண்ணாசை முதலாகிய மூவாசையென்கின்ற முக்கூட்டு வலையுள் அகப்பட்ட சிட்டுக்குருவிபோல் என்னை யாக்கிவிட்டாய் கண்ணே, பராபரமே எ-று. (௩௩)

கொண்டணைத்துக் கொள்ளுங் குணங்குடியான் சீரடியைக்
கண்டணைக்க நீயருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். என் குற்றங்களையெல்லாம் குணமாகக்கொண்டு என்னை அணைத் துக்கொள்ளுகின்ற குணங்குடியானது மேன்மையாகிய திருவடியைப்பார்த்து அதனையடையும்படி நீ அருள்செய்யவேண்டும் கண்ணே, பராபரமே எ-று.

எட்டி லெழுதொண்ணு விறைவேயுன் றன்வடிவைக்
காட்டிக் கொடுத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். எட்டில் எழுதவொண்ணாத இறைவனே உன்வடிவைக் காட்டிக் கொடுத்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௩௫)

மைச்சினிச்சி போலு மணக்கோலப் பெண்போலுங்
கைச்சரசஞ் செய்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். மச்சினிச்சிபோலவும் மணக்கோலப் பெண்போலவும் என்னோடு கைச்சரசம் செய்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (கூசு)

நிதியாசை யற்று நிரஞ்சனமாய் நின்றிடநற்
கதியாசை தந்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். பொருளாசையற்று நிரஞ்சனமாய் நிற்பதற்கு நற்கதியின்மீது விருப்பத்தை எனக்குத் தந்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. ()

நாதவிந்தால் நின்றதுவு நானென் றுபதேசங்
காதி லுரைத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். நாதவிந்துக்களாய் நின்றதுவும் நானே யாவேனென்று என் காதில் உபதேசஞ் செய்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (கூஅ)

மாதவசி யாகி மலைமுழைபிற் புக்குமென்மேற்
காதலொன்று தந்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். பெரிய தபசியாகி மலைக்குகையில் பிரவேசித்து உன்மீதில் அன்பு செய்யும்படி எனக்குக் கிருபை செய்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (கூக)

நிற்குணத்தைக் கொண்டு நிருவிகற்பஞ் சாதிக்கக்
கற்குணத்தைத் தீர்த்தருளென் கண்ணே பராபரமே.

இ-ள். நிற்குணப்பொருளை யுத்தேசித்து நிருவிகற்பநிஷ்டை சாதிக்கும்படி கல்லைப்போன்ற எனது கடினகுணத்தை நீக்கி யருளவேண்டும் என் கண்ணே, பராபரமே எ-று. (சo)

சென்மந் தொலைத்தடிமை சின்மயமாய் நின்றிடவுங்
கன்மந் தொலைத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். உன் அடிமையாகிய நான்; பிறவியைத் தொலைத்து ஞானமயமாய் நிற்கும்படி என் கர்மங்களை நீ தொலைத்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (சக)

சிந்தை யொளிபரப்பிச் சிதறுவன் கண்டயோ
கந்தனையுந் தந்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். என்மனத்தில் உன் ஞானஒளியைப் பரப்பி அஞ்ஞான இருளைச் சிதறடிக்கிற வலிய கண்டாயோகத்தையும் எனக்குத் தந்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (சஉ)

அஷ்டாங்க யோகமதி லாசைபற வேயெனது
கட்டைவெட்டு முன்னருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். அஷ்டாங்கயோகத்தில் எனக்கு ஆசையதிகரிக்கும்படி எனது சரீரமாகிய கட்டை காலனாகிய தச்சனால் வெட்டுப்படுமுன்னே அருள்செய்ய வேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (சங)

விற்புருவத் தூடு விளங்குமொளி பந்தாடக்
கற்பித் தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். வில்லையொத்த புருவத்தினிடையே விளங்குகின்ற ஒளியானது மேல்மேலும் அதிகரிக்கும்படி நீ கற்பித்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௪௪)

ஒப்பி லருளாழ மோடவடி யேற்குமொரு
கப்பலாய் வந்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். ஒப்பில்லாத உன்னருட்கடலில் ஓடும்படி அடியேனுக்கும் ஒரு கப்பல்போல வந்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௪௫)

உனையாள்வோ மென்றடிமை யுள்ளங் குளிர்ந்திடவுன்
கனிவாய் திறந்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். உன்னை ஆள்வோமென்று அடியேனது மனங்குளிரும்படி உனது கனிவாய்திறந்து அருள்செய்யவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௪௬)

பொய்கோத்த மெய்யதனைப் போட்டுவிடு முன்னமெனைக்
கைகோத் தணைத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். பொய்ப்பொருள்களால் கட்டப்பட்ட இச்சரீரத்தை நிலத்தில் போட்டு விடுமுன்னமே என்னை கைகோர்த்து அணைத்தருள வேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௪௭)

வாய்த்ததெனக் கென்று மகிழ்ந்துநா னின்றிடநின்
காட்சி யளித்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். எனக்குக் கிடைத்ததென்று மனமகிழ்ந்து நான் நிற்கும்படி உன் தரிசனத்தை எனக்குத் தந்தருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று.

மலைக்கு மலைதிரிந்து மனுவாக வேழைமனக்
கலக்கந் தவிர்த்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். மலைகடோறும் திரிந்து அடியேனும் உனக்கு அன்பராகும்படி ஏழையேனது மனக்கலக்கத்தை நீக்கி யருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௪௯)

நாணுமடவாரை நான்கைதொழ வுங்கனவுங்
காணாது காத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். நாணுதமாதரை நான் கையினால் தழுவவும் கனவுகாணாமல் காத்தருள் செய்யவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௫0)

தொண்டரிடஞ் சென்றிடவுந் தொண்டுசெய்து நின்றிடவுங்
கண்டித்து வைத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். உன் திருத்தொண்டரிடத்துச் செல்லவும் அவர்களுக்குத் தொண்டுசெய்து நிற்கவும் என்னை கண்டித்து வைத்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௫௧)

மூலவர்க்க மாக முழுமதிப்பா லுங்கொடுத்துங்
காலபயந் தீர்த்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். மூலவர்க்கமாக முழுமதிப்பாலையுங் கொடுத்து எனக்கு யம பயத்தை நீக்கியருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௩௨)

சோற்று லெடுத்த சுவரிடியா மற்பாது
காத்துமுகம் பார்த்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். சோற்றுலெடுத்த சுவராகிய இந்தச்சரீரம் இடிந்துவிழாமல் பாது காத்து என் முகம்பார்த்து அருளவேண்டும் என்கண்ணே பராபரமே எ-று.

மூலக் கனன்மூட்டி மூட்டிவரு காலரையுங்
காலா லுதைத்தருளாய் கண்ணே பராபரமே.

இ-ள். மூலநெருப்பை மூள்வித்து அடர்ந்துவருகிற காலதூதுவரையும் காலினால் உதைத்தருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று. (௩௪)

சிட்டனென விம்பூசை செய்தேனு மிப்பாவிக்
கட்டைகடத் தேறவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். உன் தொண்டனென்று சொல்லும்படி நான் உன் பூசையைச் செய்தாலும் இப்பாவிக்கட்டை கடைத்தேறும்படி என்மீது கிருபை வைத்து ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௩௫)

எட்டுமோ ரெட்டையுமெட் டெட்டுங் கயிறதனுற்
கட்டவுநல் லிஷ்டம்வைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். பதினாறையும் அறுபத்தினாலு கயிற்றைக்கொண்டு கட்டும்படி உனது அன்பை என்மீதுவைத்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௩௬)

ஆதார மாறு மடுக்கடுக்கா கக்கடத்திக்
காதுங்குமே லேற்றிவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். ஆறாதாரத்தையும் அடுக்கடுக்காகத் தாண்டுவித்துச் சிரகிரிமேல் என்னை யேற்றியருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று. (௩௭)

கும்பித்து ரேசித்துட் கொள்ளும் படிக்குதவிக்
கம்பமுனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். கும்பித்து ரேசித்து உட்கொள்ளும்படிக்கு எனக் கருள்செய்து சுழுமுனையையும் காட்டியருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று. ()

பட்டிப் பசுப்பாலைப் பக்குவத்துடன் காலைக்
கட்டிக் கறந்தடித்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். பட்டிப் பசுவின்பாலைப் பக்குவத்தோடு காலைக்கட்டிக் கறந்து கொடுத்து என்னை யாண்டருள் செய்வாயாக கண்ணே, பராபரமே எ-று.

நில்லா வுடற்கு நிலையங் கொடுக்குமொரு
கல்லாவின் பாலளித்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். நில்லாத பொய்யுடலுக்கு நிலைபேற்றைக் கொடுக்கின்ற ஒருகல்லாவின்பாலை எனக்குக்கொடுத்து என்னை யாண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬0)

சோமப்பா லூட்டிச் சுரந்தவா மப்பாலுங்
காமப்பா லுங்கொடுத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். சோமப்பாலுண்பித்து சுரந்த வாமப்பாலையும் காமப்பாலையும் கொடுத்து என்னை ஆண்டருளவேண்டும் என்கண்ணே, பராபரமே எ-று.

மண்டைநடு மண்டலத்துண் மண்டியமு துண்டிடவுங்
கண்டபங் கடத்திவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். சிரசிலுள்ள சந்திரமண்டலத்தின் நடுவேசென்று அங்குநின்றும் சுரக்கின்ற அமிர்தத்தை உண்ணும்படி என்னை இந்தச் சரீரவிபத்தைத் தாண்டுவித்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬௨)

மூலாதா ரத்துண் முளைகொண் டுயர்ந்தெழுந்து
காலாற் கனலெளித்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். மூலாதாரத்துள்ளே முளைத்து உயர்ந்து எழுந்து காற்றினால் நெருப்பைத் தெளிவித்து என்னை யாண்டருளவேண்டும்; கண்ணே, பராபரமே எ-று. (௬௩)

ஆயுங் கலையிரண்டு மாயா தடக்கியென்றன்
காய நிலைக்கவைத்தாள் கண்ணே பராபரமே.

இ - ள். ஆராயப்படுகின்ற இரண்டு கலைகளையும் ஆராயாது அடக்கி எனதுசரீரம் நிலைப்படுத்திவைத்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬௪)

அற்ப வுடலா லருந்தவமே புரிந்திடவுங்
கற்பமுறை கைக்களித்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். அற்பமாகிய இந்தச் சரீரத்தைக்கொண்டு அரிய தவத்தைச் செய்யும்படி கல்பமுறையை என் கையில்கொடுத்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬௫)

அண்டபிண்ட மென்றுநின் றாடுந் திருக்கூத்தைத்
கண்டுகளி கூரவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். அண்டபிண்டங்களில் எக்காலத்திலும் நின்றாடுகின்ற உன் திருக்கூத்தைக்கண்டு நான் களிக்கும்படி என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬௬)

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணாம லென்றன்மனக்
கண்ணாடிக் குள்ளளித்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணாமல் என் மனமாகிய கண்ணாடிக்குள்ளே அவை யாவும்தந்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௬௭)

எவ்வுலகுந் தானா யிருந்தவனை யான்றொழவுங்
கவ்வுமலக் கட்டறுத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். எவ்வுலகமும் நீயேயாயிருந்த வுன்னை யான்கண்டு வணங்கும்படி என்னைப்பற்றின மலப்பிணிப்பைச்சேதித்து ஆண்டருளவேண்டும் கண்ணே பராபரமே எ-று. (சுஅ)

அற்ப வுடல மழிந்திடுமுன் றீபமிட்ட
கர்ப்பூர மாக்கிவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள் அற்பமாகிய இந்தச்சரீரம் அழிந்துபோவதற்கு முன்னே இதனை கற்பூரதீபம்போலச் செய்தருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (சுகூ)

விலங்கினங்க ளோடு வீறிடவு மேழைநெஞ்சு
கலங்காத வண்ணம்வைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். மிருகங்கள் தம்மினங்களோடுகூடி கூச்சலிட்டாலும் ஏழையேனது மனம் கலங்காதபடி என்னைத் திடப்படுத்தி ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. - (எ0)

அடுத்துங் கெடுக்கு மரிவையர்க்கா ளாகாமல்
கடக்க நடத்திவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். அடுத்துக் கெடுக்கின்ற மாதர்களுக்கு ஆளாகாமல் அவர்களை வெல்லும்படிசெய்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே பராபரமே. ()

நாற்றந் தொலைய நறவணையு நாரியர்தங்
காற்றும் படாதுவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். தமது சரீரத்துர்க்கந்தம் நீங்கும்படி பரிமள திரவியங்களைப் பூசிக்கொள்ளுகிற மாதர்களுடைய காற்றும் என்மேற்படாமல் என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (எஉ)

ஆணிப்பொன் மேரு வாமுனையு முன்னடிமை
காணுங் கருணைவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். ஆணிப்பொன்னுருவாகிய மேருமலைபோன்ற உன்னையும் உன்னடிமையாகிய நான் காணும்படியாகக் கருணைவைத்தருளவேண்டும் கண்ணே பராபரமே எ-று. (எங)

வனவாச மேக வரமளித்துன் பொற்பதத்தைத்
தனமா யிறைஞ்சவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். வனவாசம்பண்ணும்படி வரந்தந்து உனது பொன்னடியை அன்போடு வணங்கும்படி என்னைத் திருத்தி யாண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (எச)

எட்டிப் பிடித்தாலு மெட்டாது நின்றவனைக்
கட்டிப் பிடிக்கவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். எட்டிப்பிடித்தாலும் எட்டாமல்நின்ற உன்னை நான் கட்டிப்பிடிக்கும்படியாகவைத்து என்னை ஆண்டருளவேண்டும் கண்ணே, பராபரமே. ()

மதபேத மோதி மறைக்குமறை சொல்வதெல்லாங்
கதையாய் முடித்துவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். மதவேறுபாடுகளைச் சொல்லி அறிவை மறைக்கின்ற வேத வாக்கியங்களையெல்லாம் கதையாய் முடியவைத்து என்னை ஆண்டருள வேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௭௬)

அண்டபிண்ட மாயுமதற் கப்பாலு நின்றுவெளி
கண்டவுனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே.

இ-ள். அண்டபிண்டங்களாயும் அவற்றிற்கு அப்பாலாயும் நின்று வெளியாகக் காணப்பட்ட உன்னை எனக்குக் காட்டிவைத்து என்னை யாண்டருள வேண்டும் கண்ணே, பராபரமே எ-று. (௭௭)

உலையி லிடுமெழுகா யுள்ளம் பதைத்துருகிக்
கலங்கியதுங் கண்டிலையோ கண்ணே பராபரமே.

இ-ள். உலையிலிட்ட மெழுகுபோல என்மனம் பதைத்துருகிக் கலங்கினதையும் நீ கண்டாயில்லையோ கண்ணே, பராபரமே எ-று. (௭௮)

வெம்பிமிக நொந்தேன் மெலிந்தேனென் கண்ணீருங்
கம்பலையுங் கண்டிலையோ கண்ணே பராபரமே.

இ-ள். மனம்வெதும்பி மிகவும் வருந்தினேன் மெலிந்துவிட்டேன் எனது கண்ணீரையும் கம்பலையையும் கண்டாயிலையோ கண்ணே, பராபரமே எ-று. (௭௯)

மெத்த மயலுற்று விருப்பமொடு பன்னூலுங்
கற்றும்பா ழாக்கிவிட்டேன் கண்ணே பராபரமே.

இ-ள். மிகவும் மனமயங்கி விருப்பத்தோடு பலநூல்களையும் கற்றிருந்தும் அவற்றின் பயனையெல்லாம் பாழாக்கிவிட்டேன் கண்ணே, பராபரமே எ-று.

பாலங் கடந்துபெரும் பாதைநடவாமலும்வீண்
காலங் கடத்திவிட்டேன் கண்ணே பராபரமே.

இ-ள். பாலத்தைத்தாண்டி பெரும்பாதையில் நடவாமல் வீண்காலங் கழித்துவிட்டேன் கண்ணே, பராபரமே எ-று. (௮௧)

பூத்த மலரெடுத்துன் பொன்னடியை யானுமென்றுங்
காத்திருந்து பூசைசெய்வேன் கண்ணே பராபரமே

இ-ள். பூத்தமலரெடுத்து உன் பொன்னடியை யான் காத்திருந்து பூசை செய்வது எக்காலமோ கண்ணே, பராபரமே எ-று. (௮௨)

விண்கொண்டு நின்று விளங்குமுனை யெக்காலங்
கண்கொண்டு கண்டேனோ கண்ணே பராபரமே.

இ-ள். சிதாகாயத்தை யிடமாகக்கொண்டு விளங்குகின்ற உன்னை நான் எக்காலத்தில் என் கண்கொண்டு காணப்பெறுவேன் என்கண்ணே, பராபரமே எ-று. (௮௩)

ஐயோவென் செய்கிற்பே ரொருமற்ற பாவியைநீ
கைவிட லாமோவென் கண்ணே பராபரமே.

இ-ள். ஐயோ ! நான் என்னசெய்வேன், யாருமற்றபாவியாகிய என்னை நீ கைவிடலாகுமோ என் கண்ணே, பராபரமே எ-று. (௮௪)

நட்டநடு வீடுசென்று நானொளித்தி ருந்துனையுங்
கட்டித் தழுவேனோ கண்ணே பராபரமே.

இ-ள். நட்ட நடுவீட்டிற்சென்று நான் ஒளித்திருந்து உன்னையும் கட்டித் தழுவப் பெறுவேனோ என் கண்ணே, பராபரமே எ-று. (௮௫)

அல்லும் பகலு மடியேன் படுந்துயர்க்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே பராபரமே.

இ-ள். இரவும்பகலும் அடியேன் படுந்துன்பத்தைப் பார்த்துக் கல்லுங் கரைந்திடும் என் கண்ணே, பராபரமே எ-று. (௮௬)

பொன்னைப் புதைத்துவைத்துப் போவா ருளந்தோறுங்
கன்னங் கருநிறங்காண் கண்ணே பராபரமே.

இ-ள். பொன்னை மண்ணிற் புதைத்துவைத்துச் சாவாருடைய மனங்கள் கன்னங்கறுநிறமாய் அஞ்ஞான அந்தகாரம் மூடிக்கொண்டிருக்கும் கண்ணே, பராபரமே எ-று. (௮௭)

பணத்தைப் பணமெனவும் பார்த்ததுண்டோ வுன்றனுக்கென்
கணக்குத் தெரியாதோ கண்ணே பராபரமே.

இ-ள். பணத்தைப் பணமென்று பார்த்ததுண்டோ உனக்கு என்கணக்குத் தெரியாதோ கண்ணே, பராபரமே எ-று. (௮௮)

நிற்கும் பொழுதாடை நெகிழ்ந்தா லுபசாரங்
கைக்குஞ் சொலுவதுண்டோ கண்ணே பராபரமே.

இ-ள். நிற்கும்பொழுது ஆடை அவிழ்ந்துபோனால் அவ்வாடையையெடுத்து உடுத்தவேண்டுமென்று கைக்கு உபசாரம் சொல்லுவதுண்டோ கண்ணே பராபரமே எ-று. (௮௯)

தடையி லுலகனைத்துந் தானா யிருந்துமொரு
கடுகிடையு மானாயென் கண்ணே பராபரமே.

இ-ள். தடையில்லாத உலகமெங்கும் நீயாகி வியாபித்திருந்தும் ஒரு கடுகளவாகிய சூக்கும ரூபமாகியுமிருக்கிறாய் என் கண்ணே, பராபரமே எ-று. (௯௦)

உனக்கு ளெனைமறந்தோ ருள்ளக் கருத்திலுண்மாங்
கனிக்குளொரு வண்டானாய் கண்ணே பராபரமே.

இ-ள். உனக்குள்ளே ஐக்கியமாகித் தம்மை மறந்தவர்களாகிய ஞானிகளுடைய மனக்கருத்தினுள்ளே மாங்கனிக்குள் அடைந்திருக்கிற வண்டுபோல அடங்கியிருக்கிறாய் கண்ணே, பராபரமே எ-று. (௯௧)

நெக்குருகி நின்ற நிலைதோன்றா நிர்க்குணத்தார்
கைக்குட்பந் தாடிநின்றாய் கண்ணே பராபரமே.

இ-ள். மனம் நெகிழ்ந்துருகித் தாம் நின்றநிலை தோன்றாமல் நிற்கின்ற நிர்க்குணத்தோராகிய ஞானிகளது கைக்குள்ளேயடங்கி அவர்கள் பந்து போல் எடுத்து விளையாடும்படி நின்றனை கண்ணே, பராபரமே எ-று. ()

பதித்த மனம்வாழி பரமார்த்த மும்வாழி
கதித்த நிலைவாழி கண்ணே பராபரமே.

இ-ள். உன்னிடத்துப்பதிந்த என் மனம் வாழ்க, பரமார்த்தம் வாழ்க, பெருத்த மோட்சநிலை வாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௬௩)

அத்துவிதம் வாழி யறிவகண்டி தம்வாழி
கர்த்தனே நீவாழி கண்ணே பராபரமே.

இ-ள். அத்துவிதம் வாழ்க, அறிவினது அகண்டரூபம் வாழ்க, கர்த்தனே நீவாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௬௪)

தற்பரமே வாழி தாராதுந் தந்ததுவுங்
கற்பகமே வாழியென் கண்ணே பராபரமே.

இ-ள். தற்பரமே வாழ்க, தரவொண்ணாத பொருளையுந்தந்து உதவுகின்ற கற்பகத்தருவே வாழ்க, என் கண்ணே, பராபரமே எ-று. (௬௫)

சிற்பரமே வாழி சிவயோ கியர்வாழி
கற்பனையெல் லாம்வாழி கண்ணே பராபரமே.

இ-ள். சிற்பரமே வாழ்க, சிவயோகியர் வாழ்க, கற்பனையெல்லாம் வாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௬௬)

நற்பதவி யும்வாழி நவின்றான் மறைவாழி
கற்பதா ரிகள்வாழி கண்ணே பராபரமே.

இ-ள். நல்ல பதவியும் வாழ்க, சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் வாழ்க, கற்பதாரிகளும் வாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௬௭)

சித்தர்கணம் வாழி சின்மயந்தான் வாழி
கர்த்தவியம் வாழியென் கண்ணே பராபரமே.

இ-ள். சிட்டர்கணம் வாழ்க, சின்மயம் வாழ்க, கர்த்தவியம் வாழ்க, என்கண்ணே, பராபரமே எ-று. (௬௮)

மாதவத்தோ ரும்வாழி மவுனமுத்தி ரையும்வாழி
காதலித்தோ ரும்வாழி கண்ணே பராபரமே.

இ-ள். மாதவத்தோரும் வாழ்க, மௌனமுத்திரையும் வாழ்க, உன்னை விரும்பின அன்பரும் வாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௬௯)

குவலயத்தோ ரும்வாழி குணங்குடியா ரும்வாழி
கவலையற்றோ ரும்வாழி கண்ணே பராபரமே.

இ-ள். இந்தப் பூமண்டலத்திலுள்ளோரும் வாழ்க, குணங்குடியாரும் வாழ்க, துன்பமற்றோரும் வாழ்க, கண்ணே, பராபரமே எ-று. (௪00)

பராபரக்கண்ணி முற்றிற்று.
ஆ பாடல் - 880.

மனோன்மணிக் கண்ணி.

மெய்தொழவு மேலு மேலுநந்தி கேஸ்வரனைக்
கைதொழ வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். நந்திகேசுவரனைக் காயத்தால் வணங்கவும், மேலும் மேலும் கையால் அஞ்சலிசெய்யவும் கனவு கண்டேன், மனோன்மணியே எ-று. (௧)

கோப்பா கவுமுனையான் கொண்டாடிப் பாடவுநீ
காப்பாக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். உன்னை நான் சிறப்பாகக் கொண்டாடிப் பாடவும், அதற்காக நீ திருவுளமகிழ்ந்து எனக்கு ரக்ஷகமாயிருக்கவும் கனவுகண்டேன், மனோன் மணியே எ-று. (உ)

பெண்கணிர்த்தத் தோடுனையான் பிரியா மணம்புணரக்
கண்களுறங் காக்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். நாட்டியப்பெண்களாடிக்கொண்டிருக்க, நான் உன்னைப்பிரியா மணம்புணர, என் கண்கள் உறங்காத கனவு கண்டேன், மனோன்மணியே எ-று. (௩)

மலர்ந்திருக்கும் பொற்கமல மணவரையி லிருவருங்கை
கலந்திருக்க வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். பரிமளித்துக்கொண்டிருக்கிற பொற்கமலமாகிய மணவறையில், நாமிருவரும் கைகலந்திருக்கக் கனவு கண்டேன், மனோன்மணியே எ-று.

மெய்மஞ்சட் குளிர்ப்புக்கண் விழிப்புமெக் களிப்புமெனைக்
கைமிஞ்ச வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். உடம்புமுழுதும் மஞ்சட்குளிப்பும், கண்விழிப்பும், மிகுகளிப்பும், என்னைக் கைமிஞ்சிப்போகக் கனவுகண்டேன், மனோன்மணியே எ-று.

மைதீட்ட வுங்கயற்கண் மலரின் மலர்முலையிற்
கைபூட்ட வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். சேல்மீன்போன்ற கண்களில் மையெழுதவும், தாமரைமலர்போன்ற தனத்தின்மீது கைபோடவும், கனவுகண்டேன், மனோன்மணியே எ-று

மெய்தழுவ வும்மிருவர் மெய்யோடு மெய்நெருங்கக்
கைதழுவ வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். சரீரத்தைத் தழுவிக்கொள்ளவும், இருவர் சரீரத்தோடு சரீரம் நெருங்கும்படி கையினால் அணைத்துக் கொள்ளவும், கனவு கண்டேன், மனோன்மணியே எ-று. (எ)

வாமப்பா லைப்பெருக மறுவாலி பம்வருக
காமப்பா லுண்ணைக் கனவுகண்டேன் மனோன்மணியே.

இ-ள். வாமப்பால்பெருகவும், மறுவாலிபம் வரவும், காமப்பாலை யுண்ணவும், கனவு கண்டேன், மனோன்மணியே எ-று. (அ)

பாலனாக வுங்கான்ற பாலுணவு மென்னைவிட்டுக்
காலனேக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

இ-ள். பாலனாகவும், கக்கினபாலை யுண்ணவும், காலன் என்னைவிட்டுப் போகவும், கனவு கண்டேன், மனோன்மணியே எ-று. (௯)

வடியா வருளமிர்தம் வடியவடி யக்குணங்
குடியா ரொடுகனவிற் குடித்தேன் மனோன்மணியே.

இ-ள். வற்றாத அருளமிர்தம் வடிய வடிய, நான் குணங்குடியாரொடு கூடி அதனைக் குடித்தேன், மனோன்மணியே எ-று. (௧0)

கோடி பெருமதிகள் கூடு மொருமதிபோல்
வாடியெம் மானேயெம் மானே மனோன்மணியே.

இ-ள். கோடி பூர்ண சந்திரர்கள் கூடி வந்தாற்போல என்னெதிரே யெழுந்தருளடீ, மனோன்மணியே எ-று. (௧௧)

கண்ணேயென் கண்மணியே கண்குளிர்ந்த கட்டழகுப்
பெண்ணே யமிர்தப் பிழம்பே மனோன்மணியே.

இ-ள். கண்ணே, என் கண்மணியே, கண்குளிர்ந்த கட்டழகையுடைய பெண்ணே, அமிர்தத்திரளே, மனோன்மணியே எ-று. (௧௨)

பெண்ணே மயிலினமே பேரனமே யென்றனையென்
கண்ணிற் கிடக்கவென்று காண்பேன் மனோன்மணியே.

இ-ள். பெண்ணே, மயிற்கூட்டமே, பெரியஅன்னமே, உன்னை யென் கண்ணிற்குப் புலப்பட என்றைக்குக் காண்பேன், மனோன்மணியே எ-று.

வன்ன வுடைக்குமுன்றன் வால வயதினுக்கும்
அன்ன நடைக்குமென்றா ளசை மனோன்மணியே.

இ-ள். நிறமுள்ள என் ஆடைக்கும், உன் வாலப் பருவத்துக்கும், அன்னநடைக்கும், நான் ஆசைப்பட்டேன், மனோன்மணியே எ-று. (௧௪)

கூந்த லிலங்கக் குரும்பைத் தனங்குலுங்க
நேர்ந்து நடம்புரிந்து நிற்பாய் மனோன்மணியே.

இ-ள். கூந்தல் விளங்கவும், குரும்பைமுலைகள் குலுங்கவும், எனக் கெதிரேவந்து நடனம்பண்ணி நிற்பாயாக, மனோன்மணியே எ-று. (௧௫)

துவளுந் துடியிடையுந் தோகை மயிலனையும்
பவள விதழுமென்று பார்ப்பேன் மனோன்மணியே.

இ-ள். துவளாநின்ற துடியிடையும், கலாபத்தையுமுடைய மயில் போன்ற உன் அதரத்தையும், நான் என்றைக்குத் தரிசிப்பேன், மனோன் மணியே எ-று. (௧௬)

மலர்மாலை கள்கிடந்து மார்பிற்பின்ன லாடுமுன்றன்
அலர்முலையும் யானென் றணைவேன் மனோன்மணியே.

இ-ள். பூமாலைகள் கிடந்து பின்னலிடுகின்ற உன் மார்பிலுள்ள தனங்க ளில் நான் அணையப்பெறுவது என்றைக்கோ, மனோன்மணியே எ-று. ()

வெய்யிற் பட்டாலும் வெதும்புமுடை லாயுனது
மெய்யிற் றொட்டா லுங்கந்தம் வீசும்மனோன்மணியே.

இ-ள். வெயில்பட்டாலும் வெதும்புகிற திருமேனியை யுடையவளே, உன் திருமேனியைத் தீண்டினாலும் பரிமளம்வீசுமே, மனோன்மணியேஎ-று.

காற்றுப் பட்டாலுங் கலங்குமென் றன் மேனியினீ
பார்த்துத் தொடவின்பம் படைப்பேன் மனோன்மணியே.

இ-ள். காற்றுப்பட்டாலும் அசைகின்ற என் உடம்பை நீ கடாக்ஷித் துத் தீண்டினல் நான் இன்பமடைவேன், மனோன்மணியே எ-று. (௧௯)

பிடியாரைப் போலும் பிடிப்பேன் முலையைக்குணங்
குடியாரைப் போலுங் குடிப்பேன் மனோன்மணியே.

இ-ள். பிடிக்காதவர்களைப்போலவும் முலையைப்பிடிப்பேன், குணக்குடி யாரைப்போலவும் முலைகுடிப்பேன், மனோன்மணியே எ-று. (௨0)

கூந்தலுக்கு நெய்தோய்த்துக் குளிர்மஞ்ச ணீராட்டி
வார்த்துசிங் காரித்து வைப்பேன் மனோன்மணியே.

இ-ள். கூந்தலுக்கு நெய்தோய்த்துக் குளிர்ந்த மஞ்சள்நீராட்டி, உன்னை மிகுதியாய்ச் சிங்காரித்து வைப்பேன், மனோன்மணியே எ-று. (௨௧)

காலிற்பனி நீர்விட்டுக் கழுவிமடி மீதுவைப்பேன்
மேலிலத்த ரும்பூசி விடுவேன் மனோன்மணியே.

இ-ள். உன்காலைப் பன்னீரால்கழுவி மடிமீதுவைத்துக்கொண்டு உன் திருமேனியின்மீது அத்தரும் பூசிவிடுவேன், மனோன்மணியே எ-று. (௨௨)

காதம் பரிமளிக்குங் கஸ்தூரிப் பொட்டிடுவேன்
போதுஞ்ச வாதமணிந்து புணர்வேன் மனோன்மணியே.

இ-ள். காததூரம் வாசனை வீசுகின்ற கஸ்தூரிப்பொட்டிடுவேன்,பூவும் சவ்வாதும் அணிந்து உன்னைப் புணர்வேன், மனோன்மணியே எ-று.(உ௩)

தலைக்கு மினுக்கெண்ணெய் தடவிச்சடை பின்னிவைப்பேன்
முலைக்குவன்னக் கச்சிறுக்கி முடிப்பேன் மனோன்மணியே.

இ-ள். தலைக்கு மினுக்கெண்ணெய் தடவிச் சடைபின்னிவைப்பேன், முலைக்கு ஒளியுள்ள ரவிக்கைதரித்து இறுக்கி முடிவேன், மனோன்மணியே, எ-று. (உச)

கட்டாடை வர்க்கமெல்லாங் கண்டு களித்துயர்ந்த
பட்டாடை வர்க்கம்வைத்துப் படைப்பேன் மனோன்மணியே.

இ-ள். கட்டுகிற ஆடைவகை யெல்லாம் கண்டுகளித்து உயர்ந்த பட்டாடை வகைகளை வைத்துப்படைப்பேன், மனோன்மணியே எ-று. (உ௫)

மூக்குகுத்திக் காதுகுத்தி முழுவயிரந் தூக்கிவைப்பேன்
கோக்குமுத்துந் தூங்குமுத்துங் குவிப்பேன் மனோன்மணியே.

இ-ள். மூக்குகுத்திக் காதுகுத்தி முழுவயிரத் தொங்கவிடுவேன், கோக்குமுத்தும் தூக்குமுத்தும் கொண்டுவந்து குவிப்பேன், மனோன் மணியே எ-று. (உ௬)

கைக்குஞ் சரிகடகங் கல்லுமிழைத் துக்கொடுப்பேன்
மொய்க்குழற்குஞ் சடைப்பில்லை முடிப்பேன் மனோன்மணியே.

இ-ள். கைக்கும் சரிகடகம் கல்லிழைத்துச் செய்துகொடுப்பேன், உன் நெருங்கிய கூந்தலுக்கும் சடைப்பில்லை செய்துமுடிப்பேன், மனோன் மணியே எ-று. (உ௭)

தங்கங்கொலுசுஞ்சிலம்புந் தண்டைரத்ந பாடகமுங்
கொங்கைக்கு மோகனமாலை கொடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். உன் காலுக்கு தங்ககொலுசும், சிலம்பும், தண்டையும், ரத்ந பாடகமும், உன் கொங்கைக்கு மோகனமாலையும் கொடுப்பேன், மனோன் மணியே எ-று. (உ௮)

காலாழி பீலிமுதற் கன்னகையும் பொன்னகையும்
நாலாட் சுமைவேண்டி னடக்கு மனோன்மணியே.

இ-ள். காலாழி பீலி முதலான கல்நகையும் பொன்நகையும் நாலாள் சுமை வேண்டுமானாலும் நான்தருவேன், மனோன்மணியே எ-று. (உ௯)

முடியி தனுமகுட முடிசூட்டு வேனற்குணங்
குடிமா தவர்கள்குலக் கொழுந்தே மனோன்மணியே.

இ-ள். உன் சிரத்தின்மேலும் மணிமகுடத்தை தரிப்பேன், நல்ல குணங் குடி மாதவர்களுடைய குலக்கொழுந்தே, மனோன்மணியே எ-று. (௩O)

சந்நிதா னத்திற் சரணஞ் சரணமென்று
சொன்ன மலர்த்தூவித் தொழுவேன் மனோன்மணியே

இ-ள். உன் சந்நிதானத்தில் வந்து சரணம் சரணம் என்று, பொன் மலர்களால் உன்னை யர்ச்சித்துத் தொழுவேன், மனோன்மணியே எ-று. ()

கர்ப்பூர மேற்றிக் கைத்தீப வாலாத்தி
எப்பாரும் போற்ற வெடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். கர்ப்பூரம் வைத்துக் கைத்தீப ஆலாத்தியை எல்லாவுலகத் தாரும் வணங்கும்படி யெடுப்பேன், மனோன்மணியே எ-று. (கூஉ)

முக்கால மும்பூசை முடிப்பேன்முக் காலமல்லால்
எக்கால மும்பொங்க லிடுவேன் மனோன்மணியே.

இ-ள். மூன்று காலங்களிலும் உன்னைப் பூசைபண்ணுவேன், எக்கால மும் பொங்கலிடுவேன், மனோன்மணியே எ-று. (கூகூ)

சாதந் தளிகை சமைத்துச் சாம்பிராணித் தூபமிட்டுப்
பாதந் தொழுதிட்டுப் படைப்பேன் மனோன்மணியே.

இ-ள். சாதம் தளிகைகள் சமைத்திட்டு சாம்பிராணி தூபமிட்டு, உன் பாதத்தை வணங்கிப் படைப்பேன், மனோன்மணியே எ-று. (கூச)

பச்சைப் பருப்புமுதற் பருப்பிற்பத்து வகைகடைவேன்
அச்சநறு நெய்யுருக்கி வார்ப்பேன் மனோன்மணியே.

இ-ள். பச்சைப் பருப்பு முதலாகப் பத்துவகைப் பருப்புக் கடை வேன், நல்ல புத்துருக்கு நெய் வார்ப்பேன், மனோன்மணியே எ-று. (கூரு)

முட்டை பொரிப்பேன் முழுங்கோழி யும்பொரிப்பேன்
தட்டையிங் கானிற் றருவேன் மனோன்மணியே.

இ-ள். முட்டை பொரிப்பேன், முழுக்கோழியும் பொரித்து வைப் பேன், தட்டைப் பீங்கானில் வைத்துத் தருவேன், மனோன்மணியே எ-று.

ஆட்டுக்கறி யுங்கொள்வே னநேகவகை சமைப்பேன்
கூட்டுங்கறி யும்பண்ணிக் கொடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். ஆட்டுக்கறிவாங்கி அநேகவகைகளாய்ச் சமைப்பேன், கூட்டுக் கறியும் பண்ணிக்கொடுப்பேன், மனோன்மணியே. எ-று. (கூஎ)

குட்டிக் கறிதானுங் குழம்புபண்ணித் தாளித்தோர்
சட்டிக் கறியேனுந் தருவேன் மனோன்மணியே.

இ-ள். குட்டிக்கறியும் குழம்புபண்ணித் தாளித்து ஒரு சட்டிக்கறி வேண்டுமாயினும் தருவேன், மனோன்மணியே எ-று. (கூஅ)

பால்பழமுந் தேனும் பலகார வர்க்கங்களும்
மேலுமே லும்பரப்பி விடுவேன் மனோன்மணியே.

இ-ள். பாலும், பழமும், தேனும், பலகாரவகைகளும் கொண்டுவந்து மேன்மேலும் பரப்பிவிடுவேன், மனோன்மணியே எ-று. (௩௯)

அடிக்கா யிரம்பொன்வி லையானாலு மீந்துகுணங்
குடிக்குண்மாளி கைகட்டிக் கொடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். அடிக்காயிரம் பொன் விலை கொடுத்தாயினும் குணங்குடிக்குள் மாளிகை கட்டிக்கொடுப்பேன், மனோன்மணியே எ-று. (சo)

ஆணிப்பொன் மதிலுயர்ந்த வரண்மனையுந் தீர்ப்பாக
மாணிக்க மேவிளக்கா வைப்பேன் மனோன்மணியே.

இ-ள். ஆணிப்பொன் மதிலும் உயர்ந்த அரண்மனையும்கட்டி, அந்த அரண்மனைக்குள்ளே மாணிக்கத்தையே விளக்காக வைப்பேன், மனோன்மணியே எ-று. (சக)

துலங்குமணி மண்டபமுஞ் சொர்க்கமென வும்மிலங்கா
திலங்குமலங் காரஞ்செய் திடுவேன் மனோன்மணியே.

இ-ள். சொர்க்கலோகமென்று சொல்லும்படி விளங்குகிற அலங்காரத் தோடு ரத்நமண்டபமும் செய்துவைப்பேன், மனோன்மணியே எ-று. (சஉ)

ரத்தினங்கள் வைத்திழைத் திராவைப்பக லாக்குஞ்
சித்திரங்கள் வகைவகையாய்ச் செய்வேன் மனோன்மணியே.

இ-ள். நவரத்தினங்கள் வைத்திழைத்து இராவைப்பகலாகச்செய்யும்படியான சித்திரங்களும் வகை வகையாகச் செய்துவைப்பேன், மனோன்மணியே எ-று. (சங)

மண்ணூ யழுந்தாமன் மனமே முழுவதிலுங்
கண்ணாடி யாயிருக்கக் காண்பேன் மனோன்மணியே.

இ-ள். மண்ணாகி அழுந்திப்போகாமல் மனமே எல்லாவிடங்களிலும் கண்ணாடிபோல் விளங்கக் காண்பேன், மனோன்மணியே எ-று. (சச)

மங்கா தொளிபரப்பும் மவுனமணி யாலுமொரு
சிங்கா சனமேடை செய்வேன் மனோன்மணியே.

இ-ள். மழுங்காமல் ஒளியைப் பரப்புகிற மவுனமணியாலும் ஒரு சிங்காசன மேடைசெய்து வைப்பேன், மனோன்மணியே. எ-று. (சஇ)

நாற்காலி கட்டில்பல நற்பவள வாசனங்கள்
நீங்காமற் சுற்றும் நிறைப்பேன் மனோன்மணியே.

இ-ள். நாற்காலிகள், கட்டில்கள், பலவாகிய நல்ல பவள ஆசனங்கள், இவையாவையும் சுற்றும் நிறைத்துவைப்பேன், மனோன்மணியே எ-று. ()

பாதம்பூ சித்துப் பணிவிடைகள் செய்துநிற்க
மாதர்க ளோரவனந்தம் வைப்பேன் மனோன்மணியே.

இ-ள். உன்பாதத்தைப் பூசித்துப் பணிவிடைகள் செய்யும்பொருட்டு அநேகமாதரை அமைத்துவைப்பேன், மனோன்மணியே எ-று. (சஎ)

புவனத் தரசரெல்லாம் போற்றிப் பணியவென்றன்
மவுன மலரணைமேல் வாழ்வாய் மனோன்மணியே.

இ-ள். பூலோகத்தரசரெல்லாம் வணங்கும்படி உன்னை எனது மவுன மலரணைமேல் வைப்பேன், மனோன்மணியே எ-று. (சஅ)

கட்டிலினுங் கூடி களிகூர்ந்து கொண்டிருப்போம்
தொட்டிலினு மாடிச் சுகிப்போ மனோன்மணியே.

இ-ள். கட்டிலின்மேலுஞ்சேர்ந்து களிப்பு மிகுந்திருக்கலாம், தொட்டிலிலும் ஆடிச் சுகித்திருக்கலாம், மனோன்மணியே எ-று. (சகூ)

முடிமன்னர் தம்வாழ்வு முதலெவையு மெங்கள்குணங்
குடிமன்னர் தம்வாழ்வுங் கொடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். முடிமன்னர் வாழ்வு முதலாகிய யாவும் எங்கள் குணங்குடி மன்னர்வாழ்வும், உனக்குக் கொடுப்பேன், மனோன்மணியே எ-று. (ருO)

சொர்ன்ன மலைமலையாய்த் தொகைவகையி லாதளிக்குங்
கர்ன்ன னெனவுமெனைக் காண்பாய் மனோன்மணியே.

இ-ள். பொன்னை மலைமலையாகத் தொகை வகையில்லாமற் கொடுக்கின்ற கர்ணன் என்று சொல்லும்படி என்னை நீ பார்ப்பாய், மனோன்மணியே எ-று. (ருக)

போதத் தனங்குவித்த பொக்கிஷமுங் கைகூவிப்பேன்
பாதத்தி னும்வீழ்ந்து பணிவேன் மனோன்மணியே.

இ-ள். மிகுதியாகப் பொருளைக் குவித்துவைத்த பொக்கிஷமும் உன் கைவசமாக்குவேன், உன் பாதத்தின் வீழ்ந்தும் பணிவேன், மனோன்மணியே எ-று. (ருஉ)

கிடையாப் பொருள்களெல்லாங் கிடைக்குமுன்ன நீயுமென்றாற்
படையாப் பொருள்களெல்லாம் படைப்பாய் மனோன்மணியே.

இ-ள். கிடைக்காத பொருள்களெல்லாம் கிடைக்கும், நீயும் முன்னே படைக்காத பொருள்களெல்லாம் என்றால் படைப்பாய், மனோன்மணியே எ-று. (ருங)

தான சமுத்திரம்போற் சான்றோர்க்கெல் லாமளிப்பாய்
சேன சமுத்திரமுஞ் சேர்ப்பாய் மனோன்மணியே.

இ-ள். தானக்கடல்போல பெரியோர்களுக்கெல்லாம் நீ தானஞ் செய்வாய், சேனைகடலையும் சேர்ப்பாய் மனோன்மணியே எ-று. (ருச)

முடிதூக்கு மன்னர் முதலெவரு முன்வாயிற்
படிகாக்கும் வாழ்க்கை படைப்பாய் மனோன்மணியே.

இ-ள். முடிமன்னர் முதலாகிய எல்லாரும் உன் வாசற்படியில் காத்திருக்கும்படியான பெருவாழ்வை படைப்பாய் மனோன்மணியே எ-று. (௩௩)

கவிராஜ ரும்விருது கட்டியங்கள் கூறிநிற்பார்
தவராஜ ரும்போற்றத் தவறார் மனோன்மணியே.

இ-ள். கவிராஜரும் விருதுகட்டி எங்களைச் சொல்லிநிற்பர், தவராஜரும் வணங்குவார்கள், மனோன்மணியே எ-று. (௩௪)

உன்மீதி லாசித் துயிர்பொருளுநான் றாட்களிப்ப
என்மீதி லாசையுனக் கிலேயேன் மனோன்மணியே.

இ-ள். உன்மீதில் ஆசைவைத்து உயிரையும் பொருளையும் உன் திருவடிக்கீழ் நான் சமர்ப்பித்திருக்க, என்மீதில் ஆசை உனக்கு இல்லாததற்கு காரணம் யாது, மனோன்மணியே எ-று. (௩௭)

உள்ள துரியதெல்லா மொப்புகொண்ட பின்னலவோ
கள்ள மனம்படைக்கக் கற்றாய் மனோன்மணியே.

இ-ள். உள்ளதும் உரியதுமாகிய எல்லாப்பொருள்களையும் என்னிடத்தினின்றும் நீ ஏற்றுக்கொண்ட பின்பல்லவோ நீ கள்ளமனம் படைக்கக் கற்றுக்கொண்டாய், மனோன்மணியே எ-று. (௩௮)

வேசைக் குணத்தை விரும்புவா யென்றறிந்தாற்
காசைப் பணத்தைநான் காட்டேன் மனோன்மணியே.

இ-ள். வேசைக்குணத்தை நீ விரும்புவாய்!என்று நான் முன்னே அறிந்திருப்பேனானால் நான் உனக்குக் காசையாகிலும் பணத்தையாகிலும் காட்டவேமாட்டேன், மனோன்மணியே எ-று. (௩௯)

படையாதெல் லாமென்னாற் படைத்துப்பர தேசிகுணங்
குடியாரை யோதேடிக் கொண்டாய் மனோன்மணியே.

இ-ள். படையாத பொருள்களெல்லாம் நீஎன்னால் படைத்துப் பரதேசியாகிய குணங்குடியாரையோ தேடிக்கொண்டாய், மனோன்மணியே எ-று.()

உத்தமி பெண்ணென் றுவந்தேனிப் போதுன்றன்
பத்தினித் தனத்தைநன் றாய்ப்பார்த்தேன் மனோன்மணியே.

இ-ள். உத்தமிப்பெண்ணென்று உன்னை நினைந்து களித்திருந்தேன், இப்பொழுது உன் பத்தினித்தனத்தை நன்றாய்ப் பார்த்தேன், மனோன்மணியே எ-று. (௪௧)

என்பத் துனக்கிருந்தா லிராஜ ராஜேஸ்வரியாய்
ஐம்பத் தறுதேசமுநீ யாள்வாய் மனோன்மணியே.

இ-ள் உனக்கு என்னிடத்து விருப்பமிருந்தால் ராஜராஜேஸ்வரியாய் ஐம்பத்தாறு தேசங்களையும் நீ ஆள்வாய், மனோன்மணியே எ-று. (௪௨)

உள்ள மணவாள னுனக்கெவனோ வென்னைவிடக்
கள்ளமண வாளனிச்சை கடிதோ மனோன்மணியே.

இ-ள். உனக்கு என்னைவிட வேறாயுள்ள மணவாளன் எவனோ அந்தக் கள்ளமணவாளனுடைய ஆசை யவ்வளவு பெரிதோ மனோன்மணியே எ-று

வேசியென்ற பேர்படைத்து வெளியிற்புறப் பட்டவளைத்
தாசியென்று சொல்லத் தகாதோ மனோன்மணியே.

இ-ள். வேசையென்ற பேர்படைத்து வெளியே புறப்பட்டவளைத் தாசி யென்று சொல்லத்தகாதோ, மனோன்மணியே எ-று. (கூச)

ஆடாது மாடி யவிசாரி யானவுனைப்
பாடாதும் பாடிலென்ன பயமோ மனோன்மணியே.

இ-ள். ஆடாத ஆட்டமெல்லாமாடி அவிசாரியான உன்னை வையாத வையெல்லாம் வைதால் எனக்குப்பயமோ, மனோன்மணியே எ-று. (கூரு)

மூக்கு முனக்குமுழம் மூன்றேனோ பத்தினிபோல்
நாக்கு முனக்குமுழ நாலேன் மனோன்மணியே.

இ-ள். உனக்கு மூன்றுமுழம் மூக்கு ஏனோ, உனக்குப் பத்தினிப்போல் நாக்கு நாலுமுழம் ஏனோ, மனோன்மணியே எ-று. (கூசு)

பானைச்சோ றெல்லாம் பதம்பார்த்துத் தின்றவினி
மான மழியிலுயிர் மயிர்தான் மனோன்மணியே.

இ—ள். பானைச்சோறு முழுதும் பதம்பார்த்துத் தின்றபின்னே மான மழிந்தால் உயிரானது மயிர்க்குச் சமானந்தான், மனோன்மணியே எ-று. ()

இனிக்கண் டறிந்துகொள வினான் பிள்ளையானாற்
றனிக்கண்ட போதுபுத்தி தருவான் மனோன்மணியே.

இ—ள். இனி கண்டறிந்து கொள்வதற்கு இவன் ஆண்பிள்ளையானால் தனியாகக் கண்டபோது உனக்குத் தகுந்த புத்தியைச் செய்துவைப்பான், மனோன்மணியே எ-று. (கூஅ)

பல்லை யிதழ்கடிக்க பானை தடிபொடிக்கக்
கல்லைத்தேங் காயுடைக்கக் காண்பாய் மனோன்மணியே.

இ—ள். பல்லை இதழ்கடிக்கவும், பானை தடியை யொடிக்கவும், கல்லைத் தேங்காயுடைக்கவும், காண்பாய், மனோன்மணியே எ—று. (கூகூ)

தடிபோ லிருந்துனையான் சாதிகெட்ட பாழுங்குணங்
குடியார்க்கெப் படிகூட்டிக் கொடுப்பேன் மனோன்மணியே.

இ-ள். நான் தடியனைப்போலிருந்து உன்னை ஜாதிகெட்ட பாழாகிய குணக்குடியார்க்கு எப்படிக் கூட்டிக்கொடுப்பேன் மனோன்மணியே எ-று.()

போனதெல்லாம் போச்சுப் பொழுதும் விடிந்ததினி
யானதெல் லாமனத்தி னாடேன் மனோன்மணியே.

இ-ள். போனதெல்லாம் போச்சுது, பொழுது விடிந்தது, இனி நடந்ததெல்லாவற்றையும் உன் மனத்தில் நாடாதே, மனோன்மணியே எ-று. (எக)

மல்லாந்து நான் படுத்து மார்பிற்றுப்பிக் கொண்டுமிழினும்
பல்லைக்குத்தியு முதாரந்தோய பார்ப்பேன் மனோன்மணியே.

இ-ள். நான் மல்லாந்து படுத்துக்கொண்டு மார்பில் உமிழ்ந்துகொண்டு பல்லைக்குத்தி உதிரம்வரப் பார்ப்பேன், மனோன்மணியே எ-று. (எஉ)

என்னைவிட்டால் மாப்பிளைமா ரெத்தனையோ வுன்றனுக்கே
உன்னைவிட்டாற் பெண்ணெனக்கு முண்டோ மனோன்மணியே.

இ-ள். உனக்கு என்னைவிட்டால் எத்தனையோ மாப்பிள்ளைமாருண்டு அதுபோல எனக்கு உன்னைவிட்டால் பெண் கிடைப்பதுண்டோ, மனோன்மணியே எ-று. (எங)

தடித்தனமே செய்தாலுஞ் சமுசாரத் திற்படிந்து
குடித்தனஞ்செய் தாலென்மனங் குறையோ மனோன்மணியே.

இ-ள். தடித்தனமே செய்தாலும் சமுசாரத்தில் மூழ்கிக் குடித்தனஞ் செய்தால் என்மனம் குறையாகுமோ, மனோன்மணியே எ-று. (எச)

தொடுத்தணைத்துக் கொண்டே துயில்வன்மற்ற நேரமெல்லாம்
எடுத்தணைத்துக் கொண்டே யிருப்பேன் மனோன்மணியே.

இ-ள். உன்னைக் கட்டியணைத்துக்கொண்டே தூங்குவேன், மற்றை நேரமெல்லாம் கையால் எடுத்தணைத்துக் கொண்டே இருப்பேன், மனோன்மணியே எ-று. (எரு)

படுத்துப் படுத்துநெஞ்சிற் பளிச்சுபளிச் சென்றுமுத்தங்
கொடுத்து கொடுத்துநான் கொள்வேன் மனோன்மணியே.

இ-ள். உன் மார்பின்மீது நான் பலகாலும் படுத்து பளிச்சு பளிச்சென்று முத்தங் கொடுத்துக்கொடுத்து உன்னைக் கூடிக்குலாவுவேன், மனோன்மணியே எ-று. (எசு)

வன்னச் செழும்பவள வாயிதழூ றற்சுவைத்துன்
கன்னத்தில் வீழ்ந்து கடிப்பேன் மனோன்மணியே.

இ-ள். நிறமுள்ள செழுமையாகிய பவளம்போன்ற வாய் இதழ்த்தேனைச் சுவைத்துக் கன்னத்தில் வீழ்ந்து கடிப்பேன், மனோன்மணியே எ-று.

கச்சிறுக்கு மாதரின்பங் கைச்சிறுக்கும் போதவின்பம்
வைச்சிறுக்குக் கொங்கையிற்கை வைப்பேன் மனோன்மணியே.

இ-ள். மாதரின்பம் கசக்கும்படி ஞான இன்பத்தை அமைத்து வைத்திருக்கின்ற உன் கொங்கையின்மீது கைவைப்பேன், மனோன்மணியே எ-று.

தித்தித் தொழுகுகாம தேனமிர்த வூறலுண்பேன்
முத்திதழு வித்தழுவி முகப்பேன் மனோன்மணியே.

இ-ள். தித்தித்து ஒழுகாநின்ற காமத்தேனாகிய அமிர்தத்தை உண்பேன், தழுவித்தழுவி முத்திதந்து முகப்பேன், மனோன்மணியே எ-று. ()

படியோர்க்கெல் லாமுயன்ற படியோர்க ளானகுணங்
குடியோர்கள் போலுமின்பங் கொள்வேன் மனோன்மணியே.

இ-ள். உலகத்தார்க்கெல்லாம் உயர்ந்த நிலையுடையோர்களான குணங்குடியோர்போல இன்பத்தைக் கொள்ளுவேன், மனோன்மணியே எ-று. ()

சேயாயு மென்மடியிற் செங்கீரை யாடியருட்
டாயாயு மங்கை தருவாய் மனோன்மணியே.

இ-ள். என் மடியின்மீது குழந்தை வடிவாகியும் செங்கீரையாடி அருட்டாயாயும் கைதரவேண்டும், மனோன்மணியே எ-று. (௮௧)

அங்கைதந்து தந்தே யணைத்தா யருளமிர்தங்
கொங்கைதந்து தந்தே கொடுப்பாய் மனோன்மணியே.

இ-ள். உன் அங்கையால் அணைத்ததுபோல உன் கொங்கைதந்து அருளமிர்தம் கொடுக்கவேண்டும், மனோன்மணியே எ-று. (௮௨)

தாவி யணைத்தென் றாயே யுனையென் றிந்தப்
பாவி மடியில்வைத்துப் பார்ப்பேன் மனோன்மணியே.

இ-ள். என்தாயே எக்காலத்தில் உன்னைத்தாவி யணைத்து இந்தப்பாவியாகிய நான் மடியில்வைத்துப் பார்ப்பேன், மனோன்மணியே எ-று. (௮௩)

ஏங்கியழு வேனோவுன் னிணையடியைக் காணாமற்
றூங்கிவிழு வேனோவென் றோழி மனோன்மணியே.

இ-ள். என்தோழியே உன்னை நினைந்து ஏங்கி யழுவேனோ, உன் இணையடியைக் காணாமல் தூங்கிவிழுவேனோ, மனோன்மணியே எ-று. (௮௪)

உலைபோ லெரியுமென்ற னுளங்குளிர மேல்வளர்ந்த
மலைபோ லெழுந்தருளி வருவாய் மனோன்மணியே.

இ-ள். உலைக்களம்போல் எரிகின்ற என்மனம் குளிரும்படி மேலோங்கி வளர்ந்த மலைபோல் நீ என் எதிரே எழுந்தருளுவாயாக, மனோன்மணியே எ-று. (௮௫)

கன்ம மறுவதெந்தக் காலமோ யானறியேன்
நன்மை தருவதெந்த நாளோ மனோன்மணியே.

இ-ள். என் கர்மபந்தங்கள் அற்றொழிவது எந்தக்காலமோ நீ நன்மையைத் தருவது எந்தக்காலமோ, யான் அறியேன், மனோன்மணியே எ-று.

பன்னீ ரொழுகுமுன்றன் பாத மலரையென்றன்
சென்னிமீ தென்றுமருள் செய்வாய் மனோன்மணியே.

இ-ள். பன்னீர் ஒழுகாநின்ற உன் பாதமலரை என் சிரத்தின்மேல் என்றும் பொருத்தி வைத்தருளவேண்டும் மனோன்மணியே எ-று. (அஎ)

தாயினுமிக் காங்கருணைத் தயாநிதியே யிவ்வுறையை
நாயினுமிக் காங்கடையே னவின்றேன் மனோன்மணியே.

இ-ள். தாயினுஞ் சிறந்த கருணையையுடைய தயாநிதியே நாயினும் மிக விழிந்த கடையேன் இந்தத் தோத்திரத்தைச் செய்தேன், மனோன் மணியே எ-று. (அஅ)

கால்பிடித்துக் கண்ணில்வைத்துக் கைகுவித்து மெய்மயங்கி
மால்பிடித்துச் சொன்னதெல்லா மகிழ்வாய் மனோன்மணியே

இ-ள். உன் திருவடியைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கை குவித்து மெய்மயங்கி ஆசைமிஞ்சிச் சொன்ன என் துதிமுழுதும் அங்கீ கரித்து நீமனம் மகிழ்ந்தருள வேண்டும், மனோன்மணியே எ-று. (அகூ)

அடியானை யுன்னடியார்க் கடியாளு மாக்கிகுணங்
குடியா னெனப்பிரியங் கொடுப்பாய் மனோன்மணியே.

இ-ள். அடிமையாகிய என்னை உன்னடியார்க்கு அடியாராகச் செய்து குணங்குடியானென்று யாவரும் சொல்லும்படி கிருபைசெய்தருளவேண்டும், மனோன்மணியே எ-று. (கூ0)

உச்சிதவச் சிரமலையே யொப்பில்லா மாணிக்கமே
கச்சிதப் பச்சைமர கதமே மனோன்மணியே.

இ-ள். உச்சிதமாகிய வச்சிரமலையே, ஒப்பில்லாத மாணிக்கமே, கச்சித மான பச்சைநிறமுள்ள மரகதமே, மனோன்மணியே எ-று. (கூக)

செப்புறு வாணிமுத்தே சிறந்தபவ ளக்கொடியே
புட்பராகக் கமலப் பூவே மனோன்மணியே.

இ-ள். சொல்லவொண்ணாத ஆணிமுத்தே, சிறந்த பவளக்கொடியே, புட்பராகக் கமலப்பூவே, மனோன்மணியே எ-று. (கூஉ)

கோமே தகமே குளிர்ந்தவயி டூரியமே
மாமேரு வேநீல மலையே மனோன்மணியே.

இ-ள். கோமேதகமே, குளிர்ந்த வைடூரியமே, மகாமேருவே, நீல மலையே, மனோன்மணியே எ-று. (கூங)

வற்றா வருட்செல்வ வாழ்வே கருணாநிதியே
பொற்றா மரைக்கமலப் பொருட்டே மனோன்மணியே.

இ-ள். வற்றாத அருட்செல்வ வாழ்வே, கருணாநிதியே, பொற்றாமரைக் கமலப்பொருட்டே, மனோன்மணியே எ-று. (கூச)

அல்லி மலரே யலர்செங் கழுநீர்மலரே
மல்லிகைக் கொத்து மலரே மனோன்மணியே.

இ-ள். அல்லிமலரே, அலர்ந்த செங்கழுநீர்மலரே, கொத்தாகப் பூத்த மல்லிகைமலரே, மனோன்மணியே எ-று. (கசு)

பொன்மலரே பன்மலரே புகழ்தருபன் னீர்மலரே
மன்மத பாண மாமலரே மனோன்மணியே.

இ-ள். பொன்மலரே, பன்மலரே, புகழ்தற்குரிய பன்னீர்மலரே, மன்மதபாணமென்று சொல்லப்படுகின்ற அழகியமலரே, மனோன்மணியே எ-று.

குடலை நிறைந்தொரு கொக்கலரிச் செம்மலரே
மடலவிழ்ந்த செந்தாழை மலரே மனோன்மணியே.

இ-ள். குடலை நிரம்பின ஒரு கொக்கலரிச் செம்மலரே, மடலவிழ்ந்த செந்தாழைமலரே, மனோன்மணியே எ-று. (கஎ)

பூர்ங்கு மருண்மலரே புளிக்காத மாமலரே
வாக்கு மலரேகண் மலரே மனோன்மணியே.

இ-ள். மலர்ந்த அருள்மலரே, வாடாத பெருமையுள்ள மலரே, வாக்கு மலரே, கண்மலரே, மனோன்மணியே எ-று. (கஅ)

வஞ்சியர்செய் மோசமுடன் மறலிசெயு நாசத்திற்
நஞ்சி யுனக்கடிமை யானேன் மனோன்மணியே.

இ-ள். மாதர் செய்கின்ற மோசத்தோடு எமன் செய்கின்ற நாசத்திற்கு அஞ்சி உனக்கு அடிமையானேன், மனோன்மணியே எ-று. (கக)

அடியாரும் வாழியிந்த வடியேனும் வாழிகுணங்
குடியாரும் வாழிகுணக் குன்றே மனோன்மணியே.

இ-ள். அடியாரும் வாழி, இந்த அடியேனும் வாழி, குணங்குடியாரும் வாழி, குணக்குன்றே, மனோன்மணியே எ-று. (க00)

உமையாள் பாதமுன்னிற்க.

ஆதியந்தங் கடந்தவுமை யாடன் பாதம்
அகண்டபரி பூரணமா மையர் பாதஞ்
சோதியந்தங் கடந்தகண பதியின் பாதந்
தொழுதிறைஞ்சிக் கரங்குவித்துப் போற்றி செய்து
வாதியந்தங் கடந்தநந்தி பாதமென்றும்
வாலைமனோன் மணியம்மை பாத மென்றும்

ஓதிபந்தங் கடந்தண்ட மிரண்ட தாக
ஒன்றுமறி யாவறிஞ னுரைசெய் தானே.

இ-ள். ஆதியந்தங்கடந்த உமையவள் பாதத்தையும், அகண்டபரிபூரண ரூபியாகிய சிவபெருமான் பாதத்தையும், ஒளியினால் முடியெல்லை கடந்த கணபதியின் பாதத்தையும், வணங்கித் துதித்து கைகுவித்து அஞ்சலிசெய்து ஆதியந்தங்கடந்த ஸ்ரீ நந்திப்பெருமான் பாதத்தையும், வாலை மனோன்மணி யம்மை பாதத்தையும், என்றும் ஓதி ஒன்றுமறியாத அறிஞனாகிய குணங்குடியான் இத்தோத்திரத்தை உரைசெய்தார் எ-று.

மனோன்மணிக்கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 763.

நந்தீஸ்வரக்கண்ணி.

ஆதியந்தங் கடந்தவுமை யாளருணா தாந்தச்
சோதியந்தங் கடந்தசெழுஞ் சுடரேநந் தீஸ்வரனே.

இ-ள். அடிமுடிகடந்த உமையாளாகிய அருட்சத்தியோடுகூடி விளங்குகின்ற நாதாந்த சோதியந்தங்கடந்த செழுஞ்சுடரே நந்தீஸ்வரரே எ-று.

முடியடியாய் நின்றநடு மூல மணிவிளக்கே
அடிமுடியாய் நின்றநடு வணையேநந் தீஸ்வரனே.

இ-ள். முடி அடிகளாய்நின்ற மூலமணிவிளக்கே அடிமுடியாய் நின்ற நடுவணையே, நந்தீஸ்வரரே எ-று. (உ)

கர்த்தனே யானுன் கருணை திருவடிக்கே
எத்தனைதான் றெண்ட னிடுவேநந் தீஸ்வரனே.

இ-ள். கர்த்தனே நான் உனது கருணையுருவான திருவடிக்கு எத்தனை தண்டனிடுவேன், நந்தீஸ்வரரே எ-று. (௩)

தீர்க்கதெண்ட னிட்டேன் திருவடியைப் போற்றிசெய்தேன்
வாக்கு நடக்க வருமருணந் தீஸ்வரனே.

இ-ள். தீர்க்கதண்டனிட்டேன், திருவடியைப் போற்றிசெய்தேன், எனக்கு வாக்குச்சொல்லும்படி வரம் அருளிச்செய்வாயாக, நந்தீஸ்வரரே எ-று. (௪)

மாசில் பரவெளியே மவுனமணி மாளிகையில்
வாயிற் பெருவழியே மகத்தேநந் தீஸ்வரனே.

இ-ள். களங்கமற்ற பரவெளியே, மௌனமணி மாளிகையின் வாயில் பெருவழியே, மகத்துவத்தையுடையோனே, நந்தீஸ்வரரே எ-று. (௫)

மகத்தோனே ஞான மழையே யருள்வெள்ள
முகத்தோனே மோன முளையேநந் தீஸ்வரனே.

இ-ள். மகத்துவனே, ஞானமழையே, அருள்வெள்ளம் பொழிகின்ற முகத்தோனே, மோனமுளையே, நந்தீஸ்வரரே எ-று. (சு)

ஞானம் விளைவேற்று நல்லசமு சாரிகட்கு
மோனமழை யூற்று முகிலேநந் தீஸ்வரனே.

இ-ள். ஞானப்பயிரை விளைக்கின்ற நல்ல சமுசாரிகட்கு மோனமழையைப் பொழிகின்ற மேகமே, நந்தீஸ்வரரே எ-று. (எ)

மும்மூல யோக முழுதுஞ்சித்தி செய்துதர
உன்னுலே யாகு முயிரேநந் தீஸ்வரனே.

இ-ள். மும்மூல யோகமுழுதும் சித்திக்கும்படிசெய்ய உன்னுலேயாகும், என் உயிரே, நந்தீஸ்வரரே எ-று. (அ)

சமர்கொடுத்து வென்றோங்கு சாம்பவியைக் கைப்படுத்தித்
தமர்விடுத்து நீக்கித் தருவாய்நந் தீஸ்வரனே.

இ-ள். போர்செய்து வென்று உயர்ந்த சாம்பவியை கைவசப்படுத்தி உறவினரைவிட்டு நீக்கித் தருவாயாக, நந்தீஸ்வரரே எ-று. (கூ)

நல்லோர்க்கு நீகாட்ட நல்குங் குணக்குடிவாழ்
வெல்லோர்க்கு நேர்காட்ட வெளிதோநந் தீஸ்வரனே.

இ-ள். நல்லோர்களுக்கு நீ காட்டுதற்கு இசைகின்ற குணக்குடி வாழ்வு எல்லார்க்கும் நேரே காட்டுதற்கு எளிதாமோ, நந்தீஸ்வரரே எ-று. (க0)

இல்வி னிடங்கூட்டி யிதழ்விரியுஞ் செங்கமல
வல்லி னிடங்காட்டி வைப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். வீட்டினிடஞ்சேர்த்து இதழ் விரியாநின்ற செங்கமலவல்லியினிடம் காட்டிவைப்பாயாக, நந்தீஸ்வரரே எ-று. (கக)

சாமிதனை யுஞ்சுத்த சைதந்ய மானசிவ
காமிதனை யும்மென்று காண்பேனந் தீஸ்வரனே.

இ-ள். சாமியையும், சுத்த சைதன்னியமாகிய சிவகாமியையும், நான் ஒன்று காண்பேன், நந்தீஸ்வரரே எ-று. (கஉ)

உமையாளு னுமையா யுவந்தடிமை கொள்ளும்வண்ணம்
எமையாளு மையா விறையேநந் தீஸ்வரனே.

இ-ள். உமையாள் உன் மருகு இருக்க உவந்து அடிமைகொள்ளும் வண்ணம் எம்மை ஆட்கொள்ளுகின்ற ஐயனே, இறையே, நந்தீஸ்வரரே எ-று. (கங)

கேசரத்தைக் காட்டி கிளரொளியா டன்னருட்பால்
ஆசரித்தே பூட்ட வருள்வாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கேசரத்தைக் காட்டி விளங்குகின்ற ஒளியை யுடையவளாகிய அச்சத்தியின் அருட்பாலை விரும்பியூட்டும்படி அருள் செய்வாயாக, நந்தீஸ் வரரே. எ-று. (கச)

சத்தி சிவமுதலாச் சாம்பவியம் பாளருளிற்
செத்த சிவமுதலாச் சித்தாநந் தீஸ்வரனே,

இ-ள். சத்தி சிவம் முதலாக சாம்பவி அம்பாளுடைய அருளினால் செத்த சிவம் முதலான சித்தனே, நந்தீஸ்வரரே எ-று. (கரு)

சித்தாளை யீன்ற சிறுபெண்ணாந் தாளிரண்டு
பொற்றாளை யென்றோ புணர்வனாந் தீஸ்வரனே.

இ-ள். சித்தாளையீன்ற சிறுபெண்ணாகிய சத்தியின் திருவடி இரண்டை யும் நான் அடைவது எக்காலமோ, நந்தீஸ்வரரே. எ-று. (கசு)

பத்து வயதுடைய பாவையரை யன்றோநீ
சித்தர்க்கெல்லாந் தாயாச் செய்தாய்நந் தீஸ்வரனே.

இ-ள். பத்துவயதுடைய மாதையல்லவோ நீ சித்தர்க்கெல்லாம் தாயா கச் செய்தாய், நந்தீஸ்வரரே எ-று. (கஎ)

காமரூபி யாநித்திய கல்யாண சுந்தரியை
ஓமரூபி யையெற்கு முதவுநந் தீஸ்வரனே.

இ-ள். காமரூபியாகின்ற நித்திய கலியாணசுந்தரியை ஓமரூபியை எனக்குத் தந்தருள்வாயாக, நந்தீஸ்வரரே எ-று. (கஅ)

கேசரியா டன்கருணை கிட்டினன்றோ வாசாம
கோசரவாழ் வெல்லாங் கொடுப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கேசரியாளுடைய கருணை கிடைத்தாலல்லவோ வாசாமகோசர வாழ்வு முழுதும் கொடுப்பாய், நந்தீஸ்வரரே எ-று. (கக)

மூலவொளி சூட்டி மோனக் குணங்குடிக்கும்
மேலவழி காட்டி விடுவாய்நந் தீஸ்வரனே.

இ-ள். மூலப்பிரகாசத்தை எனக்கு அருளச்செய்து மோனக் குணங் குடிக்கும் மேல்வழி காட்டிவிடுவாயாக, நந்தீஸ்வரரே எ-று. (உ0)

கண்டப்பா லங்கடத்தி கமலா சனத்தேற்றி
அண்டப்பா லுங்கொடுத்தே யருள்வாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கண்டமாகிய பாலத்தைக் கடத்திக் கமலாசனத்திலேற்றி அண்டப்பாலையும் கொடுத்தருள்வாயாக, நந்தீஸ்வரரே எ-று. (உக)

செங்கமல பூடச் செல்வியர்தாஞ் சித்தம்வைத்தாற்
றங்கமலை கூடத் தருவாணந் தீஸ்வரனே.

இ-ள். செங்கமல பூஷணத்தையுடைய செல்வியர் மனம் வைத்தால் அமலையாகிய சிவசத்தியும் தனது அருளைத்தருவாள், நந்தீஸ்வரரே எ-று.

போதகத்தைப் பூட்டிப் புருவமையத் தாயுமெற்கும்
வாதவித்தைக் காட்ட வருவாய்நந் தீஸ்வரனே.

இ-ள். ஞானத்தை மூள்வித்துப் புருவ நடுவிலிருக்கிற என் தாயானவள் எனக்கும் வாதவித்தைக் காட்ட வருவாள், நந்தீஸ்வரரே எ-று. (உ௩)

ரசயோக சித்து நயனருளி னுலடிமை
நிசயோக முற்று நிலைப்பேனந் தீஸ்வரனே.

இ-ள். ரசயோகசித்துக்களுடைய பிரயோசனத்தை அருள் செய்தால் அடிமையான நான் நிஜயோகத்தைப் பொருந்தி நிலைபெறுவேன் நந்தீஸ்வரரே எ-று. (உ௪)

மகாவித்தை காய்ப்பதற்கு மதியமிர்த வூறலுண்டே
லகிரியுற்று நிற்பதற்கு லபிப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். வகரவித்தை கிடைக்கும்பொருட்டு மதியமிர்த்தையுண்டு மயக்கமடைந்து நிற்பதற்கு நீ எனக்கு வாய்க்கவேண்டும், நந்தீஸ்வரரே எ-று. ()

குப்பை வழலையெனுங் கோழையெல்லாங் கக்கவைத்துக்
கற்ப வழலைவரக் காட்டுநந் தீஸ்வரனே.

இ-ள். குப்பைவழலை யென்னும் கோழையெல்லாம் கக்கவைத்து கற்ப வழலை வரும்படி காட்டுவாயாக, நந்தீஸ்வரரே எ-று. (உ௬)

கற்ப வழலைவரக் காட்டி கற்ப முண்டதற்பின்
பற்ப வழலைமுறை பகர்வாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கற்ப வழலை வரக்காட்டி கற்பம் உண்டபிறகு பற்ப வழலை முறையை எனக்குச் சொல்லியருளாய், நந்தீஸ்வரரே எ-று. (உ௭)

சூதமுத னீற்றிச் சொன்னமதி யமிர்தப்ர
சாதமதி லூற்றித் தருவாய்நந் தீஸ்வரனே.

இ-ள். சூதத்தை முதலிலே நீற்றி, சொல்லப்பட்ட மதியமிர்த பிரசாதத்தில் ஊற்றித் தருவாய், நந்தீஸ்வரரே எ-று. (உ௮)

அற்பமாந் தேகமதா யடியே னெடுத்தவுடல்
கற்பதேக மாகக் கனிப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். அடியேன் எடுத்த அற்பதேகத்தை நெடுங்காலம் நிற்கும்படியான கற்பதேகமாகக் கருணைசெய்து அருளவேண்டும், நந்தீஸ்வரரே எ-று.

உமைநம்பி ஞேர்வாழு மோங்கு குணங்குடியார்க்
கெமனும் பிறையாரு மெதிரோநந் தீஸ்வரனே.

இ-ள். உம்மை நம்பினோர்கள் வாழ்கின்ற குணங்குடியார்க்கு யமனும் வேறு யாவரும் எதிராவரோ, நந்தீஸ்வரரே எ-று. (கூ0)

மூரீஸ்வரரி லொன்ருய் முடித்தருள்வா யாகிலென்னைச்
சரீஸ்வரர் கூடச் சாட்டாய்நந் தீஸ்வரனே.

இ-ள். மூரீஸ்வரரில் ஒன்ருய் முடித்தருள்வாயாஞல் என்னைச் சரீஸ்வரன்கூட அணுகமாட்டான், நந்தீஸ்வரரே எ-று. (கூக)

காலனும் போய்விடுவான் காலங் கடந்துசிறு
பாலனும் மாய்விடுவேன் பரமேநந் தீஸ்வரனே.

இ-ள். காலனும் போய்விடுவான், காலனைவென்று சிறுபாலனும் ஆய்விடுவேன் பரமே, நந்தீஸ்வரரே எ-று. (கூஉ)

கவன மணிமுதலாய்க் கட்டியென் கைநளிக்க
மவுன மணித்தாய்க்கு வகுப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கவனமணி முதலானவற்றைக்கட்டி என் கையிற் கொடுக்கும்படி மௌனமணித்தாயிக்கு நீ சொல்லி யருளவேண்டும், நந்தீஸ்வரரே எ-று. (கூகூ)

மாயை வலைவீசி மயக்காம லென்றன்மேல்
நேய வலைவீச நிகழ்த்துநந் தீஸ்வரனே.

இ-ள். மாயை வலையைவீசி மயக்காமல் என்றன்மேல் நேயவலையை வீசும்படி நீ சொல்லி யருளாய், நந்தீஸ்வரரே. எ-று. (கூச)

தோகை யிளமின்ஞர் சுகபோக மும்பசியும்
போக வழிச்சொன்ஞற் போதும்நந் தீஸ்வரனே.

இ-ள். இளமாதரது சுகபோகமும் பசியும் ஒழியும்படி வழி சொன்ஞல் அது எனக்குப்போதும், நந்தீஸ்வரரே எ-று. (கூரு)

பெண்ணு யுலகமெல்லாம் பிணங்காட தாக்கியையோ
மண்ணுய் மடிவதென்ன மாயம்நந் தீஸ்வரனே.

இ-ள். உலகமெல்லாம் பெண்ணுருவாகிப் பிணக்காடாக்கி ஐயோ மண்ணுய் மடிவது என்ன மாயம், நந்தீஸ்வரரே எ-று. (கூசு)

சையோகப் பித்தைவெல்லச் சமர்த்தோடு கச்சைகட்டு
மெய்யோக யுத்திசொல்ல வேண்டும்நந் தீஸ்வரனே.

இ-ள். சையோகப் பைத்தியத்தை வெல்லுதற்குச் சமர்த்தாகக் கச்சைகட்டுகின்ற உண்மையாகிய யோகயுத்தி சொல்லவேண்டும், நந்தீஸ்வரரே எ-று. (கூஎ)

பாஷாண் டிகடோறும் பலமென்று மின்றிவெறும்
வேஷாண்டி யாக்கி விடுகாணாந் தீஸ்வரனே.

இ-ள். பாஷாண்டிகள் எல்லாம் பயன் சிறிதுமின்றி வெறும் வேஷாண்டி யாக்கிவிடுவாயாக, நந்தீஸ்வரரே எ-று. (கூஅ)

பிணம்பிடுங்கித் தின்னும் பேய்போற் சிலநுளையர்
பணம்பிடுங்கித் தின்பதென்ன பாவம்நந் தீஸ்வரனே.

இ-ள். பிணம் பிடுங்கித் தின்னுகின்ற பேய்கள்போல் சிலநுளையர் பணம் பிடுங்கித்தின்பது என்னபாவம், நந்தீஸ்வரரே எ-று. (கூகூ)

பணமுடியா னென்றும் பலம்பிடியா னென்றுமெனைக்
குணங்குடியா னென்றுங் குறிப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். பணத்தை முடியாதவனென்றும், பலத்தைப் பிடியாதவனென்றும் குணங்குடியானவனென்றும் என்னை நீ குறித்தருளவேண்டும், நந்தீஸ்வரரே எ-று. (சO)

உன்னையன்றி யேழை யேனோ ரொருவரையும்
அன்னையென்று மாளா வருள்வாய்நந் தீஸ்வரனே.

இ-ள். உன்னையன்றி ஏழையாகிய அடியேன் வேறு ஒருவரையும் நம்பமாட்டேன், தாய்போல என்னை ஆளவருவாய், நந்தீஸ்வரரே எ-று. (சக)

ஆத்தாளைத் தேடி யலைந்தலைந்து விண்பறக்குங்
காற்றாடி யானேனென் கண்ணேநந் தீஸ்வரனே.

இ-ள். ஆத்தாளைத்தேடி அலைந்தலைந்து ஆகாயத்திற் பறக்கின்ற காற்றாடி ஆனேன், என் கண்ணே, நந்தீஸ்வரரே எ-று. (சஉ)

மான்பிரிந்த கன்றாய் மயங்குதற்கென் றாய்வயிற்றி
லேன்பிறந்த கன்றே யிருந்தேநந் தீஸ்வரனே.

இ-ள். மானைப்பிரிந்த கன்றுபோல மயங்குதற்கு என் தாய்வயிற்றில் ஏன்பிறந்து அவளைவிட்டு நீங்கி யிருந்தேன், நந்தீஸ்வரனே எ-று. (சங)

ஏனோ வெனையீன் றாளெந்தாயிவ் வாறுசெய்த
தானோ வினுமென்செயத் தானோநந் தீஸ்வரனே.

இ-ள். என் தாயானவள் என்னை ஏன் பெற்றாளோ, இப்படி செய்யத்தானோ, இன்னம் எப்படிச் செய்யத்தானோ, நந்தீஸ்வரரே எ-று. (சச)

தாய்தாயே யென்றே தலைப்புறட்டங் கொண்டுவெறு
வாய்வாயை மென்றோடி மடிவேனந் தீஸ்வரனே.

இ-ள். தாய் தாய் என்றே தலைப்புரட்டம் கொண்டு வெறுவாயை வாயைமென்று ஓடிமடிவேன், நந்தீஸ்வரரே எ-று. (சரு)

தாயைவிட்டுப் பிள்ளை தவிப்ப தறிந்தவுடன்
சேயையிட்டம் வைத்தணைக்கச் செய்வாய்நந் தீஸ்வரனே.

இ-ள். தாயைவிட்டுப் பிள்ளை தவிப்பதை அறிந்தவுடனே பிள்ளையைத் தாயானவள் இஷ்டம்வைத்து அணைக்கும்படி செய்வாய், நந்தீஸ்வரரே எ-று.

கன்றினுக் கேயிரங்கும் காலியென வென்னனைதான்
என்று மெனக்கிரங்க விசைப்பாய்நந் தீஸ்வரனே.

இ-ள். கன்றுக்கு இரங்கும் பசுப்போல என்தாயானவள் என்றும் எனக்கு இரங்கும்படி நீ சொல்லி யருளாய், நந்தீஸ்வரரே எ-று. (௪௭)

மாயை மணமுடித்து மயக்கா தெனையீன்ற
தாயை மணமுடித்துத் தருவாய்நந் தீஸ்வரனே.

இ-ள். மாயையை மணமுடித்து என்னை மயக்காமல் என்னைப்பெற்ற தாயை மணமுடித்துத் தருவாய், நந்தீஸ்வரரே எ-று. (௪௮)

தற்பரத்தி னல்லொளியே சர்வபரி பூரணமே
சிற்பரத்தி னேரொளியே சிவமேநந் தீஸ்வரனே.

இ-ள். தற்பரத்தின் நல்லொளியே, சர்வபரிபூரணமே, சிற்பரத்தின் நேர்ஒளியே, சிவமே, நந்தீஸ்வரரே எ-று. (௪௯)

முத்தரெல்லாம் வாழியெங்கண் மோனமணித் தாயருளுஞ்
சித்தரெலாம் வாழிசுத்த சிவமேநந் தீஸ்வரனே.

இ-ள். முத்தரெல்லாம் வாழ்க, எங்கள் மோனமணித்தாய் அருளும் சித்தரெல்லாம் வாழ்க, சுத்தசிவமே, நந்தீஸ்வரரே எ-று. (௫0)

குற்றம் பலநீக்கிக் குணங்குடியென் றேமேவுஞ்
சிற்றம் பலம்வாழ் சிவமேநந் தீஸ்வரனே.

இ-ள். பல குற்றங்களையும் நீக்கிக் குணங்குடியென்று சொல்லப்பட்ட சிற்றம்பலத்தில் வாழ்கின்ற சிவமே, நந்தீஸ்வரரே எ-று. (௫௧)

கட்டளைக்கலித்துறை.

மடக்கி மடக்கி வருமா யினுஞ்சொல்லு மாண்பொருளும்
அடங்கி யடக்கிக் கிடக்குங்கண் டீர்பல னாய்ந்துகொள்வார்
நடக்கினு மாமன வுண்மையி னுள்ளி நடையொழிந்து
கிடக்கினு மாமென் றறிதர நாடிக் கிளத்தியதே.

பொ-ரை. பயனை ஆராய்ந்து கொள்வோர் நடக்கினும் ஆகும், மன உண்மையினுல் நினைத்து நடையொழிந்து கிடக்கினும் ஆகும், என்று அறிந்துகொள்ளும்படி ஆராய்ந்து சொல்லியது இப்பாடல். ஆதலால் மடங்கி மடங்கி வருமாயினும் சிறந்தசொல்லும், பொருளும், இதனுள் அடங்கியடங்கிக்கிடக்கும். எ-று. கண்டீர்-அசை.

நந்தீஸ்வரக்கண்ணி முற்றிற்று.

ஆக பாடல் - 933.

மஸ்தான்சாகிபு அவர்கள் பாடிய

கீர்த்தனைகள்.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

பாமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி
பார்த்து வருவோம் வாருங்கள்

அநுபல்லவி.

வாமுத்தர் சுரர்கணந் தாமுற்ற வர்களிரு
பாமொய்த் தினியதுதி தாமுத்தி யருளுநம் (பாமுத்)

சரணங்கள்.

க சாத்திர வேதஞ் சலாம்-சலாம் சலாமென்ன
ஜகஜோதி மின்னல் பளீர்-பளீர் பளீரென்ன
பேர்த்துளம் போற்றும் றகீம்-றகீம் றகீமென்ன
பிசுமில்லா கிற்றகு மானிற்ற கீமென்றுள்
அசையாம லொருநிலை விசுவாச மருளுநம் (பாமுத்)

உ. கரும மத்தளதாளந் திடீல்-திடீல் திடீலென்ன
கைம்மணி யோசை கணீல்-கணீல் கணீலென்ன
திருவருளாட்டந் திடும்-திடும் திடுமென்ன
தினந்தந்தோந் தினத்தந்தோம் மனத்தொந்தோ மனத்தொந்தோம்
உளத்தி லனைத்தையு நினைத்த படியாகநம் (பாமுத்)

ந. நாசச் சரீரம் நரேல்-நரேல் நரேலென்ன
நஞ்சு வினைகள் சரேல்-சரேல் சரேலென்ன
வீசு மருட்கள் விறீல்-விறீல் விறீலென்ன
வேதவா ளெடுத்தோதி சோதிவா சியிலேறி
ஆதி பிசுமிலுடனேதித் கலிமாவைநம் (பாமுத்)

ச. நாடாத பேர்கள் பயம்-பயம் பயமென்ன
நம்பிய பேர்கள் ஜயம்-ஜயம் ஜயமென்ன
தேடிய பேர்கள் நயம்-நயம் நயமென்ன
திக்குத் திசைநளெங்கு மிக்க வொளிபரப்பி
ஒக்க வுலகமொரு கைக்குள் ளடக்குநம் (பாமுத்)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

இல்லல் லாகூவென் றென்னை மறந்துகொண்
டிருப்பா யென்னெஞ்சமே

அநுபல்லவி.

அல்லா கூவென்ற வதண்டித கண்டமா
நல்லா யிருக்குது காணும்-ஒரு
சொல்லாலே இப்படி தோணும்-வெகு
உல்லாசமா லாயிலாக (இல்லல்)

சரணங்கள்.

க. அண்ட புவனங்க ளென்று மிருப்பதை
யாதென் றறியாது தானே-எங்கும்
நின்று நிறைந்து மறைந்து சிறந்த
நெடிய நிராமயந் தானே-முதல்
பண்டு பழகிய நாட்டத்துக் கேயது
பாவைக் கூத்தானது தானே-நீ
கண்டு களித்துச் சகலமும் விட்டுங்
கரையேறி நல்நலந் தானே-தான்
சென்ற விடஞ்செயந் தானே-தன்னைக்
கண்டுகொண்டு லாயிலாக (இல்லல்)

உ. கெட்ட மனத்தை யுடைய வெருமைக்
கிடாவினைப் போலவு முண்டோ-காசைக்
கட்டிப் புதைத்து கடைசியிற் சாகின்ற
கழுதைகட் கும்பல னுண்டோ-சுத்த
மட்டிப் பயல்கள் மனத்தைக் கரைக்க
மருந்துகள் மாத்திரை யுண்டோ-வெகு
சட்டம தாகிய கிட்டை யிராத
சண்டாளர்க்குச் சாஸ்திர முண்டோ-இந்தத்
துட்டரைப் போலவு முண்டோ-நீ
கெட்டியுடன் லாயிலாக (இல்லல்)

ங. இல்லல் லாகூவென் றேநா னிராமல்
இணைபடவு மிருந் தேனே-மெத்த
நல்ல நோன்புடன் றொழுகையும் விட்டு
நலங்களையு மறந்தேனே-தன்னை

வெல்லுங் குருபரன் சொல்லிய தீக்ஷை
விளவாமல் விட்டிருந் தேனே-அதை
அல்லும் பகலு மறியாம லென்னுள்ளே
ஆபாச மாக்குவித் தேனே-இது
எல்லா மறிந்திடுந் தானே-சொல்லுஞ்
சொல்லுஞ் சொல்லும் லாயிலாக (இல்லல்)

௪. பூசைகள் செய்கிறே னென்று திரிந்து
புலம்பிய பாபமும் போக்கி-பெண்கள்
ஆசையி லேயகேர் தரங்கள்
அடிபட்ட தும்லகு வாக்கி-எங்கள்
ஈசன் றிருவடி யாசையுள் ளானபின்
என்னைக்கை யாலவர் தூக்கி-அந்தத்
தோஷித் தனங்க டொலையைத் தொழுகற்
றுறைகளைப் போதனை யாக்கி-கெட்ட
பாசங்க ளைவிட்டு நீக்கி-தந்த
வாசியுடன் லாயிலாக (இல்லல்)

௫. எண்சா ணுயரத் திருக்கும் பனங்க
ளிறக்கி யுண்ணேன் மனக் கண்ணே-கெட்ட
கஞ்சாவுங் கள்ளு மாக்கு மபினுங்
கலப்பதை விடுவெறு மண்ணே-நீ
தஞ்சா வூராளு மகராஜன் பாதந்
தணிந்து நமஸ்காரம் பண்ணே-என்றன்
கொஞ்சப் பெலனுள்ள காயா புரியென்ற
கோட்டை யிடித்திடு மெண்ணே-அவர்
அஞ்சா திடிப்பரென் றெண்ணே-இனிக்
கொஞ்சிக் கொஞ்சி லாயிலாக (இல்லல்)

௬. என்ன விதமென்று சொல்வேன் முழக்க
முழங்குவ தென்னுக்குள் ளாலே-ஒரு
அன்ன மிருந்தே யழகு பிறக்க
அசைந்தசைந் தாடுவ தாலே-அதன்
முன்னுமேல யான்செய்த பாக்கியங் கண்டு
மூன்றாசை யில்லாத தாலே-அது
தன்னுமேல யானந்த வெள்ளம் பெருகித்
தடையறப் பாய்வத னாலே-பயிர்

அன்ன பிடிப்பத ஞேலே-உனக்
கென்ன குறை லாயிலாக (இல்லல்)

௭. வாசனை யாகிய மாசற்ற வஸ்துவும்
வாக்கு மனத்துக் கெட்டாதே-அதில்
ஆசைக் கடல்பொங்கி யோசை யுடனலே
ஆடிடு மொன்றுங் கட்டாதே-இந்த
நாசச் சரீரத்தை வாசியிற் றீட்டிடில்
நாசத்தை யண்ட வொட்டாத-நல்ல
யோசனை செய்யுங் குணங்குடி வந்திடில்
யோக முனக்குக் குன்றாதே-ஒரு
மாசறற் கூடுவன் றேறுதே-காசில்
ஆசைவிட்டே லாயிலாக (இல்லல்)

இராகம்-பந்துவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையுங் கேட்டையும்
பேசுவோ மேநெஞ்சமே.

அநுபல்லவி.

சங்கையும் போக்கிச் சதிமான மாகச்
சகசண்டி யாக்குவித் திடுவாள்-வெகு
பங்கப்படுத்தி விட்டிடுவாள்-அந்த
மங்கையராசைவைத் தையையோ வையத்தில் (பெண்)

சரணங்கள்.

௧. தங்க நகையு முகப்பணிச் சேலையுந்
தாவென வேகுராங் காட்டுவாள்-என்றன்
செங்கை வளையுந் தலைநெண்ணெய் சீப்புஞ்
சிறப்பொடு தாவென மாட்டுவாள்-வன்னக்
கொங்கைக் கிசைந்த ரவிக்கையுங் கோலப்
பணியுங் கொடுவென மூட்டுவாள்-அட
வெங்கப் பயனீயே ஞமக் கேனென்று
வீட்டில் வராதேயென் றோட்டுவாள்-வெகு
பங்கப் பழிப்பினி ஞட்டுவாள்-அந்த
மங்கையராசைவைத் தையையோ வையத்தில் (பெண்)

௨. ஆதியைத் தேடி யருள்பெற நாடி
அழுதழுது மடி பிடிப்பாள்-நீதான்
ஏதென்னை விட்டுப் பிரிவது மென்றவள்
ஏங்கியேங்கித் துடி துடிப்பாள்-இன்னும்
வாதாரீ செய்யுந் தவம்பலி யாதென
வாழ்த்தி வசைகொடை கொடுப்பாள்-கெட்ட
தேவி புத்தி படைத்தவ ளாகி
மூரணுக்கு மாரடி துடிப்பாள்-வெகு
வேதனை யாய்மட மடப்பாள்-அந்த
வாதிக ளாசைவைத் தையையோ வையத்தில் (பெண்)

௩. நாடிக் குருவடி தேடி நடக்கின்ற
நற்செய லைக்கசப் பாக்குவாள்-எங்கும்
ஓடித் திரிந்தே யலைந்து பணங்கள்
ஒருக்காலே தேடென்று தாக்குவாள்-அவன்
தேடும் பொருடனைக் காணி னுமங்கெதிர்
தேசத்தி லாரென்று தூக்குவாள்-இன்னும்
ஆடென்றும் மாடென்றும் வீடென்றுந் தேடென்றும்
ஆண்டவனைமறப் பாக்குவாள்-பின்பு
ஈடொன் றிலாநினை வாக்குவாள்-அந்த
கேடிக ளாசைவைத் தையையோ வையத்தில் (பெண்)

௪. நீராட்ட மாடிமை யிட்டுப் பொட்டிட்டு
நிரம்ப வுடைமைக ளிடுவாள்-வந்து
போராட்ட மாகவே சீராட்டச் செய்துன்றன்
புத்தியைப் போக்கடித் திடுவாள்-பின்பு
பாராட்டம் பண்ணியுன் றன்னையும் விட்டுப்
பலர்முகம் பார்த்தவள் கெடுவாள்-சுத்த
மாராட்ட மாகு மனந்தெளி யார்க்கு
மருண்மறை யேபொழிந் திடுவாள்-கெட்ட
சீராட்டி யாய்வந்து முடிவாள்-அந்த
நாரிக ளாசைவைத் தையையோ வையத்தில் (பெண்)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாடையிலே துறவடைந்து பரமடைந்த குணங்குடியார் பகர்ந்த ஞானம், பாடையிலே துறவடைந்து பரமடைந்தா னந்த சுகம் படைத்தி டாரைப், பாடையிலே போட்டுமிடு காட்டிவிடப் படுமுனையும் பலருமந்தப், பாடையிலே போட்டெடுக்க நாள்வரு மென் றலைந்திலையே பாவிநெஞ்சே.

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எத்தனை யாட்டநீ யாடினும் பதைப்பற்
றிருந்திடுவாய் நெஞ்சமே. (எத்தனை)

அநுபல்லவி.

புத்தி சற்றேனும் படைத்தா யெனிலந்தப்
போதனை யேயுனைத் தேற்றும்-மூன்று
வாதனை யும்மற மாற்றும்-யோக
சாதனை மீதினு மேற்றும் (எத்தனை)

சரணங்கள்.

க. நற்றவஞ் சித்திக்கு முத்தி தருந்தச
நாதத்தை யுஞ்சுத்தி யாக்கும்-கட்டிச்
சுற்று மறுதலைக் கட்டு மவிழ்ந்திடச்
சோடசப் பின்னலை நீக்கும்-பாயும்
பத்தோ டிரண்டு கலையுமெட் டாகப்
பராபர மும்மகம் பார்க்கும்-நல்ல
சுத்த மாய்ப்படி கச்சயஞ் சோதிச்
சுழிமுனை யுந்தலை காக்கும்-எமன்
உத்தியோ கந்தனைப் போக்கும்-வந்து
வெற்றிக் குணங்குடி வாய்க்கும் (எத்தனை)

உ. காற்பசு தன்னை வெளியில் விடாமலுங்
கட்டி தொழுவினின் மாட்டும்-வீட்டில்
பாற்பசு வைப்பக்கு வத்துடன் வைத்ததன்
பாலைக் கறந்துனக் கூட்டும்-ஏழை
போற்பசி தன்னையும் போக்கித் தபசுக்குப்
போவென்ன நேர்வழி காட்டும்-அதன்
மேற்படைக் காலா லுதைத்து வுதைத்தின்னும்
விட்டேனோ வென்றுனை தீட்டும்-உன்றன்
மாற்படி யாவையுஞ் சாட்டும்-மாட்டை
மேய்ப்பக் குணங்குடி யோட்டும் (எத்தனை)

ங. வஞ்ச மறலி வரவிடு தூதான
வஞ்சிய ராசைவிட் டோடும்-மெத்தப்
பிஞ்ச பழங்கந்தை யானபுன் மாயையைப்
பேயர் தலையினிற் போடும்-நாளும்

தஞ்சமென் றென்குரு நாதன் றிருவடி
தன்னைத் தொழுதிட நாடும்-இனி
என்செய லேதுமி லையென் றவரிடம்
ஏங்கியேங்கி நையம் பாடும்-நின்று
அஞ்சாம லஞ்சியே வாடும்-மிக்க
கெஞ்சிக் குணங்குடி கேடும் (எத்தனை)

ச. இடையிங் கலைக்கிடை யில்லடை யுஞ்சுழி
எளிதிற் றடையற மீறும்-பாயும்
மடைகண்டு வருமதி யமுதமுட் கொண்டு
வரவரக் காயமுந் தேறும்-இந்த
உடலோ டிருந்து தபஞ்செய்ய வுங்கற்பம்
உண்மை கண்டமும் மாறும்-பின்பு
குடங்கவிழ் நீரென்ன நீசெய் பலன்களுங்
கொட்டுண்டு மண்மீது சாரும்-முன்னைத்
தொடரிரு வினைவெந்து நீறும்-அருள்
பருடன் குணங்குடி யேறும் (எத்தனை)

ரு. ஆதார மாறினுஞ் சேதாரம் வாரா
தடுக்கடுக் காகவே விடுக்கும்-எமன்
பாதை பார்த்துநிற்குங் கண்ட மெனுமயிர்ப்
பாலத்தையு மெள்ளக் கடக்கும்-பின்பு
காதுகண் ணுக்கொடு மூக்குமொன் றாகக்
கவிந்துமந் நாளத்தை யடக்கும்-என்றுஞ்
சூதான மாகிய வெட்ட வெளிசென்று
சொக்கி மயக்குண்டு படுக்கும்-குரு
நாத னருளடை கிடைக்கும்-பரஞ்
சோதி குணங்குடி படுக்கும் (எத்தனை)

சு. உந்தியின் கீழ்நின் றெய்த்த சுழுமுனை
ஓங்காரக் கோதண்டம் பிடிக்கும்-வருஞ்
சந்திரன் சூரியன் மேல்வைத்துத் தாக்கிச்
சமர்பொரு துஜெயம் படைக்கும்-சற்றே
குந்தி யிருந்தினைப் பாறி தெளிந்து
குசாலாகச் சாய்ந்தங்கே படுக்கும்-அதற்

நந்தியுஞ் சந்தியு முச்சிமுக் காலமும்
ஆசரித்துப் பூசை நடக்கும்-தேவ
இந்திரன் போனின்று நடக்கும்-இங்கே
வந்து குணங்குடி கொடுக்கும் (எத்தனை)

எ. சொல்லித் திரிதற் கறிவுக ற்றதோஷ
தோஷத்தை நாசத்தி லாக்குங்-கற்றும்
நல்ல வறிவற்ற புலையரைக் காண்கி
னடுங்கி யுடலெங்கும் வேர்க்கும்-மலே
கெல்லி யெலிபிடித்த கதைபோற் காசுக்
கேயலே யாதுனைக் காக்கும்-பாயும்
வல்லயம் போல்வரு மாயை யாஞ்சண்டி
மாட்டுக்கும் மாசண்டி யாக்கும்-கரு
நெல்லிக் கனிநைக்குள் வாய்க்கும்-அருள்
முல்லைக் குணங்குடி பூக்கும் (எத்தனை)

அ நாமக்கு ரோதக் களையைக் களைந்து
கடுஞ்சுழிக் காற்றிலே தூற்றும்-யோக
பூமிக்குள் மோன வித்தைப் பதித்துப்பரி
பூரண மாய்ப்பயி ரேற்றும்-மேற்
சோமன் மதிவட்ட மீது சுழுமுனைச்
சொக்கித் தெளிந்திடத் தேற்றும்-தாயை
வாமம் வைத்துப்பூசை பண்ணிப் பணிந்திட
வாரி யமிர்தத்தை யூற்றும்-நல்ல
நேமத் துடனுனைப் போற்றும்-என்றுஞ்
சேமக் குணங்குடி யேற்றும் (எத்தனை)

கூ. இல்லந் துறந்து வரும்பல தொல்லைகள்
எல்லா மெடுத்தெடுத் தெறியும்-மூடும்
வல்லிரு ளாகிய மாமாயை தந்த
மயக்கும் விட்டுவிட்டுப் புரியும்-ஒரு
எல்லையில் பேரின்ப வெள்ளப்-பெருக்கில்
எடுத்துண்டுந் தன்வயி னிறையும்-பின்பு
அல்லும் பகலுஞ் சுகானந்த நிஷ்டையிலே
அண்டமும் பிண்டமுந் தெரியும்-எங்கும்
சொல்லு மருண்மழை சொரியும்-மெத்த
நல்ல குணங்குடி புரியும் (எத்தனை)

௧௦. கூசிக் குலாவு மடவாரைக் கொஞ்சிக்
குலாவாம லுங்கையை விடுக்கும்-வன
வாசத்துக் கேகித் தவம்புரி தற்கிச்சை
வைத்துவைத் துத்துடி துடிக்கும்-கெட்ட
ஆசைப் பசாசைத் துரத்தித் துரத்திவந்
தண்டவொட் டாமலே யடிக்கும்-ஞான
தேசிகன் பாதார விந்தத்தையே மோனச்
சின்முத் திரையாகப் பிடிக்கும்-உப
தேசத்துக் காரைப்பந் தடிக்கும்-நமக்
கீசன் குணங்குடி கிடைக்கும் (எத்தனை)

௧௧. செத்தாலும் வைத்தடி வாங்காம னிற்கின்ற
தீரத்தை யேதீர மாக்கும்-சற்றும்
மெத்தாதி புத்திவந் தெற்றும லுன்றனை
மேவி விழுந்துனை தூக்கும்-எங்கள்
சித்தாதி கட்கருள் செய்தநன் முத்தியுஞ்
சித்தியும் வெற்றியும் வாய்க்கும்-நின்று
எத்தா வினிபிழைப் போமென வெண்ணுமல்
எங்கோ னருட்பாது காக்கும்-ஒரு
மித்த பவங்களைப் போக்கும்-மோன
வித்தை குணங்குடி வாய்க்கும் (எத்தனை

௧௨. எண்ணுத வெண்ணத்தி னூடே படர்ந்தெழும்
இன்ப வினோதத்தை வீட்டும்-கெட்ட
மண்ணுன மூவாசை புண்ணுகவு நல்ல
மாணுபி மானத்தை யோட்டும்-என்றன்
கண்ணே மணியேயென் கண்ணுத லேயெனக்
கண்ணீரு முண்ணீரு மூட்டும்-பின்பு
தண்ணீரு மண்ணுங் கலந்ததுபோற் சிந்தை
தத்தளிக்க நிலை நாட்டும்-நடம்
பண்ணும் பரவெளி சூட்டும்-உய்யும்
வண்ணக் குணங்குடி காட்டும் (எத்தனை)

௧௩. வித்தக னூர்சொன்ன புத்திபுன் மாயையை
வேங்கைப் புலியெனச் சாடும்-நம்மை
வெற்றிகொண் மாதர் முபக்களற் கேணி
விரிவோ டவுங்காயப் போடும்-உன்னைப்

பெற்றார் பிறந்தார் சுற்றத்தார் முதலான
பித்தர்க் கெல்லாமுகம் வாடும்-நல்ல
பத்தரை மாற்றுப் பசும்பொன்னை யொத்த
பரவொளி பம்பர மாடும்-மேலுங்
கத்த னருளுங்கை கூடும்-நாளும்
சித்துங் குணங்குடி யாடும் (எத்தனை)

௧௪. எங்கு நிறைந்த பெரும்பொரு ளென்னுள்ளே
இருந்து கொண்டேவிளை யாடும்-ஒரு
நங்கு கரையறப் பொங்கிப் பாவிக்
கருணைக் கடல்வந்து மூடும்-அருள்
வங்கமுந் தங்காம லிங்குவந் தென்னை
மகிழ்ந்தடுத் தேற்றிக்கொண் டோடும்-நாளும்
மங்காத தங்க மவுனப் பொருளு
மலைமலை யாகக்கை கூடும்-இன்னும்
பங்கு கொடுக்கவு நாடும்-யோகம்
தங்குங் குணங்குடி சூடும் (எத்தனை)

௧௫. வாசாம கோசர வான்பொரு ளென்றன்
மடிமீது செங்கீரை யாடும்-மோன
தேசிகன் பாதார விந்தந் தெய்கத்தத்
தெய்யெனக் கூத்துகள் போடும்-எங்கள்
ஈசன் றிருவரு டாணை கொட்டிப்போர்
இன்பக் கோலாகலம் பாடும்-எம
பாச மறுத்துக்கொண் டென்னச் சமட்டமும்
பரய்ந்து மடமடென் றோடும்-கோட்டை
வாயிற் கடந்துட்சென் றேறும்-மேலே
பேசுங் குணங்குடி கூடும் (எத்தனை)

கொச்சகக்கலிப்பா.

ஐயையோ வென்விதியை யாரிடத்திற் சொன்னாலும்
ஐயையோ வென்றே யழுங்கவலை கொள்வார்தாம்
ஐயையோ வையகத்தி லாருமிலை யுன்னையன்றி
ஐயையோ வடிமையைக்கை யணைப்பாய் குருபரனே.

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயையோ நானென் செய்வேன்-என்விதிவசம்
ஆருட னேசொல்லி யழுவேன்.

அநுபல்லவி.

மெய்யெடுத் ததுபொய்யாய் வீணாள் கழிந்துபோச்சு
பொய்யி லாதவென் னையாருளது
கையு மெய்யுமாக் கண்ணிற்காணேனே (ஐயை)

சரணங்கள்.

க. பார்க்கப் பலவித மறைவாய் நமையலான
பதினாலு லோகமு நிறைவாய்
வாக்கு மனமுமதி ஞேக்க மதுவாய்நின்றுந்
தீர்க்க மாயதி யாமற் றேடியே
பார்க்குள் ளேயலைந் தலைந்துங்காணேனே (ஐயை)

உ. முன்னோர்செய் திடுபாவலாபமோ பாதகமோவென்
மூதேவித் தனங்கொள்பிர தாபமோ
என்னகொடுமைகளோ வென்றலை விதிதானோ
இன்ன பேதமில் லாத சோதியை
இன்னு மென்னுட் கண்ணிற் காணேனே (ஐயை)

ங. ஆசாபா சங்களெல்லாத்தையும் விட்டு அனுதினம்
ஆனந்த வெள்ளத்து ளகப் பட்டும்
ஓசைமணி பூரகத் துள்ளெங்குந் தேடியும்
வாச மொய்த்த குணங்குடிப்பர
தேசி யெய்த்து மினைத்துங் காணேனே (ஐயை)

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சூத்திரப் பாவை கயிற்று வீழுமுன்
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா-அதி
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா

அநுபல்லவி.

நேத்திரம் ரண்டினும் நேரே யிலங்கிய
நீடொளி போன்றது தேடரி தாகிய

காத்திரமுள்ளது யாவும் பொதிந்தது
கையிலுங் காலிலு மெட்டப் படாததோர் (சூத்திர)

சரணங்கள்.

க. சாத்திர வேதஞ் சதகோடி கற்றாலும்
சமய நெறிகளி னாசாரம் பெற்றாலும்
பாத்திரமேந்திப் புறத்தி லலைந்தாலும்
பாவனை யாவுட னுள்ள முனைந்தாலும்
மாத்திரை யேனு மெமன்வரு மப்போது
மற்றொன் றுதவா துதவா துதவாது
சூத்திரமாகிய தோணி கவிழுமுன்
சுக்கானைநேர்பகுத் திக்கணமே சொன்னேன் (சூத்திர)

உ. உற்றுற வின்முறை யார்சூழ்ந் திருந்தென்ன
உருட் சனங்களெல் லாரும் பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டிரும் பிள்ளை யிருந்தென்ன
பேணும் பெருஞ்செல்வ வாணவந் தானென்ன
கர்த்தன் பிரிந்திடச் செத்த சவமாச்சு
காணாது காணாது கண்டதெல்லாம் போச்சு
எத்தனை பேர்நின்று கூக்குர லிட்டாலும்
எட்டாமற் போய்விடும் கட்டை யல்லோவிந்தச் (சூத்திர)

ங. மாயப் பிறவி வளையை யடைத்திட
மாறுத்தி யான மனத்தி னினைத்திட
நாயா புரிக்கோட்டை கைக்கு ளகப்பட
காணு மணிச்சுடர் தானே விளங்கிட
ஆயு மறிவுடன் யோகத்தி னாலெழும்
ஆனந்தத் தேனையுண் டன்புடனே தொழும்
தாயா யுலகத்தை யீன்ற குணங்குடி
தற்ப ரனைக்கொண்டு வப்புடனே சென்று (சூத்திர)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வங்கெனுமோர் மொழியாதி பீடமியோ கத்தினது மகிமைபெற்றோர், வங்குசொறி யுங்கொடுக்கும் பெண்களல்குற் புண்களுக்குண் மடியமாட்டார், வங்குசொறி யுங்கொடுக்கும் பெண்களல்குற் கண்களுக்குண் மடியா வண்ணம், வங்கெனுப தேசமெங்கள் குணங்குடிமா தவனெனக்கும் வைத்திடானே.

இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வங்கெனு முபதேச மெங்கள் குணங்குடி-
வள்ளலென் றோதுவதோ.

அநுபல்லவி.

அங்கென்றெ னட்சரங் கும்பித்தடங்கவும்
ஐம்பத்தோ ரக்ஷரந் தம்பித்தொடுங்கவும் (வங்)

சரணங்கள்.

௧. உடல்பொரு ளாவியோ டெவையுங்கைக் கொள்ளவும்
உவந்தென்னையு முய்யக் கொள்ளவும்
நொடிக்குமுன்மனவாசி மேலேறிக் கொள்ளவும்
நாலணிமேலேறிக் கொள்ளவும்
படிமுடிச்சானவா ரூதாரம் விள்ளவும்
படிக்குப்படி கடந்து கொள்ளவும்
கடினத்துடன்கண் டதையுங்கீழ் தள்ளவும்
காதளவுக்குமேற் கொள்ளவும்
நடனமிடும்பரி துள்ளாட்ட மெடுக்கவும்
நடித்துநடித்துக்கொண்டாட்டங் கொடுக்கவும்
இடைபிங்கலைகண்டத் தாட்ட மொடுக்கவும்
எனக்குபயந்தெம னோட்டம் பிடிக்கவும் (வங்)

௨. கம்பமற்றவருட் கடலுள்வாய் மடுக்கவும்
களகளென்றேசும்மா குடிக்கவும்
செம்பொற்கமலா சனமீதில் படுக்கவும்
செங்கீரையாடித் துடிக்கவும்
வம்பரைப்போல்விளையாட்டுப் படிக்கவும்
வாசியிலேறி நடிக்கவும்
ஒன்பதுவாயிலி னிலையைப் பிடிக்கவும்
ஒளியிலேறுகாலை மடிக்கவும்
தம்பிரானெனு மெல்லை சூட்டவும்
தாக்குச்சுழுமுனைவில்லைப் பூட்டவும்
எம்பிரானென்னுங் கல்லை யோட்டவும்
எனக்குப்பயந்தெமன் பல்லைக் காட்டவும் (வங்)

கூ. தொட்டுபதேசித்த வுடன்சோதி தட்டவுந்
தொடுமுன்னேசிவயோகங் கிட்டவும்
எட்டுகயிற்றிலென் கால்ரண்டுங் கட்டவும்
எட்டியவன்காலைக் கட்டவும்
கட்டைப்பனைதனி லுங்களைக் கட்டவும்
கள்ளுக்கள்ளாச்சும்மா கொட்டவும்
கொட்டியகள்ளுண்ட பின்போதை மூட்டவும்
குதிகொண்டுகெக்கரி கொட்டவும்
நிஷ்டைபடைத்தனுபூதி மிஞ்சவும்
நிருவிகற்பசமாதி துஞ்சவும்
இஷ்டப்படிக்கருணைநின்று கொஞ்சவும்
எனக்குப்பயந்தெமனின்று கெஞ்சவும் (வங்)

ச. கத்தன்றிருவடி பெற்றவ னாகவும்
கட்டைக்கடைத்தேற லாகவும்
நற்றவமுற்றவஞ் சித்தனு மாகவும்
நாவுமங்காளத்து வேகவும்
பத்துவகைநாத முஞ்சுத்த மாகவும்
பத்தோடிருகலை சாகவும்
ஒற்றைக்காலன்மயிர் பாலத்தி லேகவும்
ஒருபாய்ச்சலிற்றாண்டிப் போகவும்
வைத்ததீக்ஷையுந் திருத்த மாகவும்
வாலையம்பிகை பொருத்த மாகவும்
எய்த்தவெருத்த மெருத்த மாகவும்
எனக்குப்பயந்தெமனொருத்தன் சாகவும் (வங்)

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

யானையுனைநம்பினேன்-குணங்குடி
யானேயென்னாண்டவனே.

அநுபல்லவி.

யானையுனைநம்பி னேன்சாகச் செய்வையோ
யானாகநின்றென்னை நான்சாகச் செய்வையோ
பேய்நாய்கண்டசிறு மானாகச் செய்வையோ
பெருமானுமெம்பெரு மானாகச் செய்வையோ (யா)

சரணங்கள்.

க. பாவையரைப்பாவி கூடிடச் செய்வையோ
பாவையர்க்குப்பயந் தோடிடச் செய்வையோ
பாவங்கள்வந்தென்னை மூடிடச் செய்வையோ
பாவமெல்லாம்விட்டுச் சாடிடச் செய்வையோ
பாவிகள்போன்முகம் வாடிடச் செய்வையோ
பரஞ்சோதியம்பா மாடிடச் செய்வையோ
பாவாணர்போல்வீணிற் பாடிடச் செய்வையோ
பரிபூரணானந்தம்பாடிடச் செய்வையோ (யா)

உ. சண்டாளரைவாழ்த்திக் கொண்டாடச் செய்வையோ
சற்குருவைப்போற்றி கொண்டாடச் செய்வையோ
தொண்டாசையென்னையுந் துண்டாடச் செய்வையோ
தொண்டாசைதன்னையுந் துண்டாடச் செய்வையோ
முண்டரைப்போற்றிரண்டு முண்டாடச் செய்வையோ
முத்திதந்துதுதி கொண்டாடச் செய்வையோ
வண்டாய்த்துவண்டு துவண்டாடச் செய்வையோ
வந்தருடந்தெனைப் பரந்தாடச் செய்வையோ (யா)

ந. வெட்டவெளியிலென்னை விட்டிடச் செய்வையோ
வித்தகன்பாதத்தைக் கட்டிடச் செய்வையோ
பட்டதெல்லாங்கேடு கெட்டிடச் செய்வையோ
பட்டதற்கும்பலன் கிட்டிடச் செய்வையோ
நெட்டைமரம்போலப் பட்டிடச் செய்வையோ
நீசனுக்குமரு டெட்டிடச் செய்வையோ
மட்டியென்றென்கையை விட்டிடச் செய்வையோ
வாசியும்பாவிக்குக் கிட்டிடச் செய்வையோ (யா)

ச. மதபேதமோதப் படித்திடச் செய்வையோ
மதமற்றஞானம் படித்திடச் செய்வையோ
விதியற்றுப்பிச்சை யெடுத்திடச் செய்வையோ
வேதாந்ததீக்ஷை யெடுத்திடச் செய்வையோ
விதிவந்தென்னுயிரைப் பிடித்திடச் செய்வையோ
விதியென்றுகாலைப் பிடித்திடச் செய்வையோ
மதுவென்றுகள்ளைக் குடித்திடச் செய்வையோ
மதியமிர்தத்தைக் குடித்திடச் செய்வையோ (யா)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லாரு மானிடரோ வெங்கள் குணங் குடியானை யிறைஞ்சி னோர்கள், எல்லாரு மானிடரா மெங்கள் குணங் குடியானை யிறைஞ்ச வேண்டும், எல்லாரு மானிடரே யெங்கள் குணங் குடியானை யிறை யேயென்றே, எல்லாரு மிறைஞ்சுமெங்கள் குணங் குடியான் பொற் பதமெற் கெய்திடாதோ.

இராகம்-அசாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எங்கள்குணங்குடி யாண்டவன்பாதத்தை
என்றிந்தப்பாவிகள் நண் கண்டிடுமோ.

அநுபல்லவி.

பொங்குந்திருவருளும் தங்கும்படிக்கருளும்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

சரணங்கள்.

க. கூட்டிக்கருணைவிழி காட்டிக்காட்டிக் கையைக்
கொடுத்துக்கொடுத்தணைத்துப் பிடித்துப் பிடித்து மெய்யை
பூட்டிப்பூட்டியருள் சூட்டிச்சூட்டித்தரும்
பூரணமயமாய்நின்ற காரணக்கடவுளான (எங்கள்)

உ. முத்திவித்தாய்ப்பதிந்தும் மொய்த்தபயிராயெழுந்தும்
மூன்றுமண்டலத்தை முட்டிமூடி யொளியால்விளைந்தும்
புத்தியுமெற்றுதுபூக்த பொற்பையற்புதத்தருளும்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

ங. வாதனைமாற்றியோக சாதனை யேற்றியேற்றி
வாக்குமனமணுகா வாழ்வினை வாழ்த்தியேத்தப்
போதும்போதுமெனப் போதித்தருள்புரியப்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

ச. சிற்பரத்துக்குட்சிறந்த தற்பரத்துக்குட் பிறந்த
சிற்பரத்துக்குட்பிறந்து சொற்படிகம்போற்சிறந்து
பொற்பிரபைக்கொப்புளிக்கும் அற்புதகர்ப்பூரமாகி
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அன்றெழுதினவ னெவர்க்கு மெங்கள் குணங் குடியானுமவன் கையாலே, அன்றெழுது மெழுத்தை யழித் தெழுதிடவல் லபமெ

வர்க்குண் டார்க்குமில்லை, அன்றெழுது மவனேதா னழித்தெழுத வல்லவன்கா ணாதலாலே, அன்றெழுது மெழுத்தழித்தே மண்டையிற்று னல்லெழுத்தொன் றழுத்திடானே.

இராகம்-பியாகடை-தாளம்-அட்சாப்பு

பல்லவி.

ஆண்டவ னென்செய்வனோ-குணங்குடி
ஆண்டவனென் செய்வனோ.

அநுபல்லவி.

ஆண்டவனைத்தென்னை யருகில்வைத்திடுவனோ
தீண்டியும் பார்க்காமற்றெருவில்விட் டிடுவனோ (ஆண்)

சரணங்கள்.

௧. தேனைப்பழித்தபே ரின்பங் கொடுப்பனோ
தேவடியார்கள்சிற் றின்பங் கொடுப்பனோ
மோனவருட்பரி வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும்பட்டங் கொடுப்பனோ (ஆண்)

௨. உச்சிக்குள்வைத்த பொருளைக் கொடுப்பனோ
உச்சந்தலையில்ரண்டு குட்டுக் கொடுப்பனோ
முச்சுடரொடுசோம வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனோ (ஆண்)

௩. வற்றாவருட்செல்வங் கொள்ளை கொடுப்பனோ
மண்ணைத்தானள்ளிக்கைகொள்ளக் கொடுப்பனோ
முத்திதருமோன வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும்பட்டங் கொடுப்பனோ (ஆண்)

௪. நாக்கந்தாளவாயிற் காக்கக் கொடுப்பனோ
நாய்போல்வாயில்தோறுங் காக்கக் கொடுப்பனோ
மூக்குமுனையில்வன்னி வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனோ (ஆண்)

௫. சிட்டனாகவும்வாசி கட்டிக் கொடுப்பனோ
செட்டையிற்றுனிரண்டு தட்டிக் கொடுப்பனோ
முட்டமுட்டச்சட்ட திட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும்பட்டங் கொடுப்பனோ (ஆண்)

கூ. கண்டங்கடக்கத்தான் காட்டிக் கொடுப்பனோ
காலனுக்கென்னைத்தான் காட்டிக் கொடுப்பனோ
முண்டம்படாகிலே விட்டுக் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும்பட்டங் கொடுப்பனோ (ஆண்)

எ. செத்துப்போமுன்காய சித்தி கொடுப்பனோ
செத்துப்போவென்று சாபத்தைக் கொடுப்பனோ
முத்தமிட்டிட்டுநல் லிஷ்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும்பட்டங் கொடுப்பனோ (ஆண்)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயையோவென்விதிவசம் ஆருடன்சொல்வேன்

அநுபல்லவி.

நையுமுடல்மெய்யென்றெண்ணிப் பொய்யனுகினேன் (ஐயை)

சரணங்கள்.

பெண்டுபிள்ளையென்று மனம்பித்துக் கொள்ளுதே-நாம்
என்றுமிருப்போமெனவுஞ் சண்டைதுள்ளுதே (ஐயை)

பழிங்கோவென்னுடலைப் படைத்து வளர்ப்பேன்-இதை
புழுங்கோநாய்நரிங்கோ பிடுங்கக்கொடுப்பேன் (ஐயை)

கையில்வெண்ணெய்தனைவிட்டு நெய்யைத்தேடுறேன்-எங்கள்
ஐயன்பாதந்தனைவிட்டுப் பொய்யைக் கூடுறேன் (ஐயை)

மாதுமக்களென்று மென்மதி மயங்குதே-இது
சூதுசெய்வாரோடு கூடிவாது பேசுதே (ஐயை)

வாங்குமனமனுகாது வான் பொருளுள்ளே-அதை
நோக்கிநோக்கிப்பார்ப்பார்க்கு வாய்க்குமோகொள்ளை (ஐயை)

புத்திமகிழுண்டுடுங்கச் சிந்தை துள்ளுதே-தீய
அந்தகாரந்தன்னை யகமாக்கிக் கொள்ளுதே (ஐயை)

காயிலையுதிர்ந்த சருகு களிதின்று-நாம்
ஆயுமறைமுடிவைத் தேடிப்போவது மென்று (ஐயை)

தேகத்தினென்பு வெளியாக வாடினோர்-அவர்
ஆகமச்சொற்படிக்கே யருளைக் கூடினோர் (ஐயை)

ஆழிகரையின்றி நிலைநிற்க வில்லையே-யான்
பாழிலலையாதெனக் கோர்பாதை யில்லையோ (ஐயை)

ஆசைபாசமற்றவ ரருளைப் படைப்பார்-அவர்
தேசிகன்குணங்குடி தெருவி லிருப்பார் (ஐயை)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

என்றலைபி லிட்டபொல்லா விதியானற் குணங்குடி வாழ் வினங்குவதில்லை, என்றலைபி லிட்டபொல்லா விதிக்கெண்ணெ யிட்டாலு மேகுதில்லை, என்றலைபி லிட்டவிதிக் கினியெவர்பட் டுக்தொலைப்பாரெனநின்றேங்கி, என்றலைபி லிட்டவிதி தனைநினைந்து பாவியா னிடைகின்றேனே.

இராகம்-ஆகிரி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ஏதேதுசெய்திடுமோ பாவிவிதி ஏதேதுசெய்திடுமோ

அநுபல்லவி.

ஏதேதுசெய்து வெனேமோசஞ் செய்யுமோ
மாதவஞ்செய்து மனுவாகச் செய்யுமோ (ஏதே)

சரணங்கள்.

௧. சற்றுநல்லறிவற்ற மாடாகச் செய்யுமோ
சாகாவரம்பெற்றுக் காடேகச் செய்யுமோ
கற்றறிமூடர்கட் கீடாகச் செய்யுமோ
கர்த்தன்குணங்குடி வீடாகச் செய்யுமோ (ஏதே)

௨. கத்திக்கத்திப்பாவி செத்திடச் செய்யுமோ
கர்த்தன்றிருவருள் பெற்றிடச் செய்யுமோ
கொத்தும்பெண்ணரவெனைக்கொத்திடச் செய்யுமோ
குணங்குடிவாழ்நைவக் தெய்திடச் செய்யுமோ (ஏதே)

௩. செத்தபிணத்தோடு சேர்ந்திடச் செய்யுமோ
சித்தர்கணத்தோடு சார்ந்திடச் செய்யுமோ
மெத்தபணந்தேடி மாய்ந்திடச் செய்யுமோ
மேலைக்குணங்குடி வாழ்ந்திடச் செய்யுமோ (ஏதே)

௪. பாழானகாயத்தைப் பாழாகச் செய்யுமோ
பாழாகப்போமுன்முப் பாழாகச் செய்யுமோ
தேளானபெண்களுக் காளாகச் செய்யுமோ
தேறிக்குணங்குடிக் காளாகச் செய்யுமோ (ஏதே)

௫. தேவடியாள்வீட்டு நாயாகச் செய்யுமோ
தேவடியாளுமென் றாயாகச் செய்யுமோ
நாவுருசிகொண்டு பேயாகச் செய்யுமோ
நாதன்குணங்குடிக்கே யாளாகச் செய்யுமோ (ஏதே)

இராகம்-பரிசு-தாளம்-சாப்பு.

பல்லவி.

அல்லாகூவென்னுங்கள்-சதாகாலம்
அல்லாகூவென்னுங்கள்

அநுபல்லவி.

அல்லாகூவென்னுங்கள் அஞ்ஞானந்தனைவிட்டு
எல்லாரும்வெளிப்பட்டு இப்போதெதிர்ப்பட்டு (அல்)

சரணங்கள்.

க. வகுத்தஜோதிமெய்ஞ்ஞான வாரியைமன முன்ன
வஞ்சமில்பரமார்த்த குருவருளிய தென்ன
செகஜாலவலைதன்னுட் சிக்கிப்பலவு மின்ன
சிற்சொரூபந்தெரியாமற்செத்திறந்துபோமுன்னம் (அல்)

உ. அல்லாகூவென்ற வரும்பொருளா மென்ன
அனந்தமறைகளு மப்படியே பன்ன
நல்லறிவாளரு நாளுமெடுத்துச் சொன்ன
நன்மையெல்லாமனக் குண்மையிலே மன்ன (அல்)

ங. ஆசாபாசமென்னும் அழிபுத்திகளு மற்று
அளவிட்டறியவொண்ணு தருள்ஞானந்தனைப்பெற்று
மாசற்றொளிருமுன் மனமிருவினை யற்று
மாதாபிதாவெனு மயல்முழுவது மற்று (அல்)

ச. மும்மலக்காட்டினை முழுவதையு மரிந்து
மூலநெருப்பினை மூட்டமூட்ட வரிந்து
சின்மயசெகஜோதித் தெளிதரவே தெரிந்து
தேசிகன்குணங்குடி தெருவீதியி லிருந்து (அல்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

புனிதகுணங் குடிவாழ்க்கை போகாமற் பொங்கு மிச்சை பொங்கிப் பொங்கிப், புனிதகுணங் குடிபடைத்துப் போதபரி பூரணபோதகமும் பூண்டு, புனிதகுணங் குடியானைப் போற்றுது போற்றுவார் போனு மந்தப், புனிதகுணங் குடியானைப் போற்ற வித்தப் புல்லனும் வாய் புலம்பு வானே.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

சத்திசத்தித்தொண்டையுங் கட்டிச்செத்தேனே
காணுமெங்கள் குணங்குடிச்சித்தனே.

அநுபல்லவி.

முத்தனேமுத்தனே முத்தனே யென்றும்
கர்த்தனேகர்த்தனே யென்று முனைத்தேடி (சத்தி)

சரணங்கள்.

க. நாயனேநாயனே நாயனே என்றும்
மாயனேமாயனே மாயனே யென்றும்
தூயனேதூயனே தூயனே யென்றும்
நேயனேநேயனே யென்று முனைத்தேடி (கத்தி)

உ. ஏகனேயேகனே யேகனே யென்றும்
யோகனேயோகனே யோகனே யென்றும்
மோகனேமோகனே மோகனே யென்றும்
வாகனேவாகனே யென்று முனைத்தேடி (கத்தி)

ந. நாதனேநாதனே நாதனே யென்றும்
நீதனேநீதனே நீதனே யென்றும்
போதனேபோதனே போதனே யென்றும்
தூதனேதூதனே யென்று முனைத்தேடி (கத்தி)

ச. நித்தனேநித்தனே நித்தனே யென்றும்
சுத்தனேசுத்தனே சுத்தனே யென்றும்
பத்தனேபத்தனே பத்தனே யென்றும்
அத்தனே அத்தனே யென்று முனைத்தேடி (கத்தி)

ரு. ராஜனேராஜனே ராஜனே யென்றும்
போஜனேபோஜனே போஜனே யென்றும்
தேசனேதேசனே தேசனே யென்றும்
வாசனேவாசனே யென்று முனைத்தேடி (கத்தி)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கண்டதெல்லாங் கனவாகக் கண்டகுணங் குடியார்கற் கருணை காட்டில், கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள்கொண் டவராகக் கருணை காட்டுங், கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள் கொண்டவர்போலக் கன்மியாலே, கண்டதெல்லாங் கனவாகக் கண்டிடவோர் கனவேனுங் கண்டிலேனே.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கனவுங்கண்டிலனே-பாவியொரு
நினைவுகண்டிலனே

அநுபல்லவி.

கனவுங்கண்டிலன் காட்சி கொடுக்கவுங்
கர்த்தனருளடை காத்துக் கிடக்கவும்
மனமுந்தேறிப்பொய் வாழ்வை விடுக்கவும்
மாகுணக்குடிமெய் வாழ்வைப் படுக்கவும் (கன)

சரணங்கள்.

க. மானுபிமான மடமைப் போக்கவும்
மாதர்க்கடிமைப் படாதெனைக் காக்கவும்
வானுதிபூத லயம்வந்து வாய்க்கவும்
வாசாமகோசர வாழ்க்கையுஞ் சாய்க்கவும்
மோனமவுன மணிமாலே நோக்கவும்
மூக்குமுனையைச் சுழுமுனை யாக்கவும்
ஞானத்திருநட நாதமுங் கேட்கவும்
நாதன்குணங்குடி பாதையும் பார்க்கவும் (கன)

உ. நாதாந்தமான குருபதம் போற்றவும்
நாவைமடக்கியந் நாளத்து ளேற்றவும்
வேதாந்தவீட்டின் வெளிவாயில் காத்தவும்
வித்தகன்வந்து விளக்கெடுத் தேற்றவும்
சீதமதிதன் னமிர்தத்தை யூற்றவும்
சின்முத்திரையைவைத் தென்மனந் தேற்றவும்
பூதலபத்துட் பொறிகளைத் தாழ்த்தவும்
புண்ணியன்குணங்குடி பொங்கிட வாழ்த்தவும் (கன)

ங. பாங்காயுதவுமெங் கோன்வந் தடிக்கவும்
பஞ்சகோசமெனுங் கோட்டை பிடிக்கவும்
ஓங்காரவீட்டினுக் குள்ளே யடிக்கவும்
ஒன்றுக்குளொன்று யொடுக்கிப் படிக்கவும்
தேங்காமரத்தினிற் கள்ளு வடிக்கவும்
தேறற்றெளித்துத் தெளித்துக் குடிக்கவும்
மாங்காயுள்வண்டாய் மயங்கிக் கிடக்கவும்
வாசிகுணங்குடி வாயி லடைக்கவும் (கன)

ச. கள்ளக்கருத்துகள் கட்டோடே வேகவும்
கன்மந்தொலைந்து கடைத்தேறிப் போகவும்
கொள்ளித்தேளான மனமாயை சாகவும்
கூர்விழியாரிஷ்டங் கொட்டுண்டு போகவும்
உள்ளத்திருக்குமற் றுத்தம னாகவும்
ஒப்புறவுந்தப்பி யூரைவிட் டேகவும்
வெள்ளத்திருக்கருணை யூடு நேரகவும்
மெய்யன்குணங்குடி பையலு மாகவும் (கன)

ரு. வேசையராசையை வேரோ டறுக்கவும்
வெற்றிக்கொடிகட்டி மீசை முறுக்கவும்
பேசறிபாவுமர் போனு னிருக்கவும்
பேயரைப்போலும் பிதற்றிச் சிரிக்கவும்
வாசிநடத்தி வழியைக் குறுக்கவும்
வாசற்படிகிட்ட வந்து நெருக்கவும்

ஓசைமணிமண்ட பத்தைத் திறக்கவும்
உச்சக்குணங்குடிக் குட்சற் றிருக்கவும் (கன)

௬. என்னைக்கெடுக்குமென் றன்னைக் கெடுக்கவும்
என்குருபாதத்தை யெட்டிப் பிடிக்கவும்
பின்னியபாசந்தன் பின்னல் விடுக்கவும்
பித்தம்பிடித்த மனத்தை யொடுக்கவும்
மன்னும்பரவெளி யுந்தந் தடிக்கவும்
மாயாபசாசினை மண்ணின் மடிக்கவும்
கன்னலையொத்தபே ரின்பம் படைக்கவும்
கர்த்தன்குணங்குடிச் சித்தங் கிடைக்கவும் (கன)

௭. வஞ்சமறலிக்கு மஞ்சா திருக்கவும்
வஞ்சியரைமுத்தங் கொஞ்சா திருக்கவும்
கஞ்சாவபின்வர்க்கங் கசப்பா யிருக்கவும்
காசாசைகொண்டு கலங்கா திருக்கவும்
நஞ்சாம்பிரபஞ்சர்க்கு நஞ்சா யிருக்கவும்
நவகண்டயோகநா லஞ்சா யிருக்கவும்
நெஞ்சம்பதைப்பற்ற நெஞ்சா யிருக்கவும்
நித்தன்குணங்குடி நித்த மிருக்கவும் (கன)

௮. பட்டிப்பசுவையுங் கட்டிமே போடவும்
பாற்பசுவுங்கட் டவிழ்த்துக்கொண் டோடவும்
மட்டங்குதித்துக் குதித்துக்கொண் டோடவும்
மதிமண்டலஞ்சென்று மருவியூ டாடவும்
கட்டமுதுண்டு களைதீர நாடவும்
காலனைக்காலைக் கொண்டுதை போடவும்
பட்டப்பகற்போ லருள்வந்து மூடவும்
பாக்யகுணங்குடிப் பாக்யனைக் கூடவும் (கன)

௯. மண்ணுனமூவாசை மாட்டேனென் றோடவும்
மாறுவனுபூதி வந்தெனை மூடவும்
எண்ணுதவெண்ணமெல் லாம்விட்டுப் போடவும்
என்றன்பிரானரு ளென்றனைத் தேடவும்
புண்ணாளர்போலும் புலம்பிநான் வாடவும்
போதப்பரவெளி பம்பர மாடவும்
விண்ணுடர்போற்றி செயவிளை யாடவும்
மேலைக்குணங்குடி சாலையைக் கூடவும் (கன)

௧0. அத்துவிதப்பிர ணவம்வந் தெற்றவும்
ஆனந்தமான பரமும்வந் தெற்றவும்
கர்த்தவியத்தின் கடாக்ஷம்வந் தெற்றவும்
கங்கற்றபேரருள் கங்கைவந் தெற்றவும்

முத்திக்குவித்தான மோனமவர் தெற்றவும்
முப்பாழ்முடிவான மோக்ஷமவர் தெற்றவும்
சத்துசித்தாநந்தஞ் சற்றுவர் தெற்றவும்
சாந்தக்குணங்குடி தானுமவர் தெற்றவும் (கன)

கக. கண்டனவெல்லாங் கனவாகக் காணவும்
கண்ணுடிக்குள்ளொளி போன்முகங் காணவும்
தொண்டாசைமூன்றுந் தொலைந்திடக் காணவும்
சுத்தமயப்படி கச்சுடர் காணவும்
எண்டிசையுந்தொழு மெங்கோனைக் காணவும்
ஏகபராபர வாகனைக் காணவும்
கண்டங்கடந்தநா தாங்களைங் காணவும்
கடவுளெனுங்குணங் குடியானைங் காணவும் (கன)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

நம்பினபேர்க் கருடருநற் குணங்குடியா னைகுரு நாதன்பாதம் [மேலே
நம்பினபேர்க் கும்பர்களும் பணிசெய்வ ரெனமறைக ணவில்கையா
நம்புமன்பர் போனுமிந்தப் பாவியெ னெந்நாளு நாடிநாடி
நம்பினதற் கந்தகுணங் குடியான்செய் ததுவுமென்ன ஞாயந்தானே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நம்பினதற்குக் குணங்குடியான்செய்த
ஞாயத்தை யென்னசொல்வேன்

அநுபல்லவி.

பம்பரம்போற்சுற்றி யயராமனுமழியாப்
பதிதந்தெனைப்பதித் திடவும்-பர
கதிவந்தெனக்கெதிர்த் திடவும்-ஞான
மதியிருந்தெனக்குதித் திடவும் (நம்பின)

சரணங்கள்.

க. உள்ளதெல்லாங்கொள்ளை கொண்டுகொண்டேயொரு
ஓட்டையோடென்கையிற் கொடுத்தான்-கேளுங்
கள்ளரைப்போற்கொள்ளை கொண்டதும்பற்றுமற்
காவற்கிடங்கினு மடைத்தான்-அந்த
கொள்ளிக்கண்ணனென்னை யுள்ளுக்குள்ளேவிட்டுக்
கொல்லாமலேகொன்று மடித்தான்-ஒரு
எள்ளளவேனு மிரக்கமில்லாமலே
என்காலுக்கும்விலங் கடித்தான்-சொந்தத்

தொள்ளியைப்போல்வைத்து படைத்தான்-காய
முள்ளுமுள்ளாகவும் வடித்தான்(நம்பின)

உ. பஞ்சைகள்போலென்றன் பாட்டிற்றிரிந்தேன்
பிடாரியைப்போல்வந்துப் பிடித்தான்-யார்க்கும்
அஞ்சாதகண்டனே வாவென்றெனைப்பார்த்
ததட்டிப்பல்லைபல்லைக் கடித்தான்-யானுங்
கெஞ்சக்கெஞ்சவாயை மூடுமூடென்றெனைக்
கீழேதாலிவாரி யடித்தான்-கள்ளுங்
கஞ்சாபின்வகை கொள்வார்க்கேயான்றேடின
கன்மமெல்லாம்வாரிக் கொடுத்தான்-என்னைக்
கஞ்சிக்குச் சாம்படிக் கடித்தான்-அவன்
நெஞ்சிலிருந்ததை முடித்தான் (நம்பின)

ந. பெற்றதகப்ப னமக்கிவன்றானென்றும்
பெற்றாள்பிறந்தாரை மறந்தேன்-கொஞ்ச
புத்தியினாலவன் பின்னாலேயேநான்
புழுக்கப்பயல்போலுந் திரிந்தேன்-என்னை
முற்றிலுங்காப்பாற்று வானென்றுநம்பி
முடிமேலும்மேற்றிக்கொண் டிருந்தேன்-அதைச்
சற்றேனுமெண்ணாம லென்முகநோக்கிநீ
சாவக்கடவதென் றறைந்தான்-இன்னும்
மெத்தமெத்தவெல்லாம் பறைந்தான்-ஒரு
மித்துரின்றிப்படிக் கிரைந்தான் (நம்பின)

ச. உண்டுடுத்துப்பூண்டு சையோகித்துச்செல்வந்
தேடுநாளில்வந் தடுத்தான்-எந்தச்
சண்டாளனென்னத்தைக் காதிலுரைத்தானோ
சடுதியில்வந்தெனைக் கடுத்தான்-உள்ளப்
பண்டம்படுதலை யெல்லாங்கைக்கொண்டுமென்
பண்டகசாலையுங் கெடுத்தான்-தன்னை
அண்டினபேரெல்லா மாளாகவும்வாரி
அளவற்றபாக்யத்தைக் கொடுத்தான்-பின்னுந்
தொண்டுசெய்யென்றெனைத் தடுத்தான்-யானுங்
கொண்டபூவாசையை விடுத்தான் (நம்பின)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

எங்கள் குணங்குடியானே தனக்கேதா னானவனு மின்னங் கேளீர், எங்கள் குணங்குடியானே யெனக்குமவன் றனக்குமிடை யில்லையென்றான், எங்கள் குணங்குடியானே தனக்குமற்றை யெவர்க்குமா யெங்குமானால், எங்கள் குணங்குடியானை யென்றைக்கோ காண்பேனென் றிரங்கி னேனே.

இராகம்-தன்னியாசி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எங்கள்குணங்குடிபாவை என்றைக்கேநாகாண்பேன்

அநுபல்லவி.

தங்குபேரின்பந்தரு மென்றம்பிரானை (எங்கள்)

சரணங்கள்.

க. அங்கிங்கெனுதெங்கும் பிரகாசமாய்நின்ற
செங்கமலபீடமிசை செங்கீரையாடும் (எங்கள்)

உ. சாசுவதவானந்த சகசநிஷ்டையில்
ஓசைமணித்தீபமதி லொன்றிக்கொண்டுநான் (எங்கள்)

ங. பொற்ப்ரபைக்கொப்பான கர்ப்பூரதீபம்போல்
விற்புருவமையமணி விளங்காய்நின்ற (எங்கள்)

ச. உனக்குள்நாணகவும் என்றனக்குள்நீயாகவும்
எனக்குள்நானுனக்குள்நீ யென்றதாய்நின்ற (எங்கள்)

ரு. அவனன்றிபணுவொன்று மசையாவென்னுமொழிக்
கிவனென்றுசொல்லவும் வல்லவனுகியேநின்ற (எங்கள்)

சு. அண்டபிண்டமதற்கு மப்புறத்துக்கப்புறமுங்
கொண்டபெரும்பெருமையுங் கொண்டபெரும்பொருளான (எ)

எ. ஆர்க்குமரிதாகியபே ராசைமிகவுங்கொண்டு
பார்க்கக்கண்ணுயிரமும் படைத்துக்கொண்டுநான் (எங்கள்)

அ. நோக்கினுலுநோக்கொண்ணுது நோக்குக்குநோக்காய்நின்று
வாக்குமனமற்ற பெருமானவனைப்நின்ற (எங்கள்)

கூ. பொன்னிலமாதராசையும் பூமிதனந்நேயமித்து
மன்னுமுனிவர்க்குதவு மன்னவன்றனை (எங்கள்)

க0. வஞ்சகமனன்வஞ்சி யருமஞ்சிபெஞ்சவும்
அஞ்சுபுலனேவடருமென் றனைக்கெஞ்சிபஞ்சவும் (எங்கள்)

கக பெண்கொண்டபேர்போலென்னையு மண்கொண்டேபோமிக்
கண்கொண்டமணியாய்நின்று காட்சியேதரவும் (எங்கள்)

கொச்சகக்கலிப்பா.

என்னை யறிந்தே னிருந்தேன் வெகுகாலம்
என்னை மறந்திப்போ திறந்தா லிதுநலமோ
என்னை யறிவா லறியவெளி யில்மகிழ ...
என்னை யறிவித்தாளா யெந்தாய் குருபானே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஏகம்.

பல்லவி.

என்னையறிந்தேனே-இனி
ஏகாந்தமானேனே

அநுபல்லவி.

தன்னைமறந்து தலைகீழாய்நில்லாமல்
என்னைமறந்து முனைநினைந்திட்டபோ (தென்னை)

சரணங்கள்.

க. பார்க்குந்தினந்தோறும் பரிபூரணங் கண்டேனே
நோக்குமிடந்தோறும் நல்லநூலினிற் சென்றேனே
ஏற்கையுடனே யிருள்வெளியாயிட
வாக்குமனமறத் தாக்கியபோதினில் (என்னை)

உ. உப்புக்குறித்தான உடலுக்கு ளிருந்தேனே
செப்பமுடனழகா யெற்கதுசிங்கா தனந்தானே
சப்பரம்போலதைத் தப்பாமற்சோடித்தும்
இப்புறமப்புற மொப்புறவாக்கும்போ (தென்னை)

ங. நாடுமலைகளெங்கும் பெருங்கானல் பிறந்ததுபோல்
ஆடியசங்கரமா யகண்டா நிறைந்ததினால்
பாடியநூலினைப் பார்த்தலையாமலவ்
வேடிக்கைவீட்டில் விளையாடும்போதினில் (என்னை)

ச. கன்னமிடுங்கருவி கரணங்களைச் சுட்டேனே
சின்னப்படுஞ்சடத்தைச் சிறைச்சாலையி விட்டேனே
திண்ணயமான குணங்குடிநாதனை
உன்னியெல்லாம்புற மோட்டியபோதினில் (என்னை)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பெண்களுக்குப் பேயுமன மிரங்கிடுமென் றெவ்வுலகம் பேசக் கேட்டேன், பெண்களுக்கும் பேயுமன மிரங்கியொரு பேச்சேனும் பேசக் கேளேன், பெண்களுக்கு மண்களிக்கப் பெற்றபிள்ளை யாகி யென்மேற் பிரியம் வைத்த, பெண்களுக்குங் குணங்குடிவாழ் வெய்துமா றுபதேசம் பேசுவேனே.

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாய்மார்களேபாவி சொல்வதைத்தான்சற்றுந்
தள்ளாமற்கேட்டுக்கொள்வீர்

அநுபல்லவி.

பூமாதேவியானை யாகநரகத்திற்
போகாமலும்பாது காக்குந்-தீயில்
வேகாமலுங்கைகளைத் தூக்கும்-பாவி
ஆகாமலுமுகம் பார்க்கும்(தாய்மார்)

சரணங்கள்.

௧. பொன்னைகாட்டிப் பருடருமையொரு
புண்யமும்செய்யாமற் கொடுப்பார்-பின்பு
சொன்னத்தைவாரி யிறைப்பார்-கடைசியில்
தோட்டிக்கையிலுமை விடுப்பார்-உங்கட்
கென்னசொன்னாலும் தெரியவில்லையினி
ஏதுபதேசத்தைப் படிப்பேன்-ஐயோ
தன்னாலேதாங்கெட்டா லண்ணாவியென்செய்வான்
தண்ணீரைக்கண்ணினால் வடிப்பன்-அவன்
சொன்னதைக்கேட்கிற்கைப் பிடிப்பன்-உன்னை
முன்னேகுணங்குடி கொடுப்பன்(தாய்மார்)

௨. பெண்ணாலேகெட்டோமென் றுங் களைத்திட்டாக
பேரையுலகத்திற் கண்டிலேன்-என்றன்
கண்ணையுங்களுங் கொத்தாசைசொல்லிக்
கருத்திலுவப்பாரைக் கண்டிலேன்-நாளு
மண்ணாசைவாசை மயக்கங்கொண்டேபாவ
மண்ணைவாயிற்போட்டுங் கொள்ளுறீர்-இன்னும்
நண்ணருஞ்சொர்க்கப் பதத்தையும்விட்டு
நரகக்கனல்மூட்டிக் கொள்ளுறீர்-அதை
எண்ணமற்றுன்விட்டு நீக்கினால்-உமக்
கண்ணல்குணங்குடி வாய்க்குமே(தாய்மார்)

௩. புதுப்பானை தன்னையுங் கரிப்பானை யாக்குவார்
பொன்னனமேனியும் போக்குவார்-சோதி
மதிப்போலிவர்முகம் வரவாடுபோலாக
வாலைப்பருவத்தைப் போக்குவார்-இன்னும்
முதுகிற்கூனுமாக்கிக் கோலுங்கைகொடுத்துங்கள்
மூர்க்கமெல்லாமறப் போக்குவார்-இவன்
கதிகெட்டகிழநாரி யென்றுபுறந்திண்ணையிற்
கடத்திவைத்துயிரையும் போக்குவார்-அந்தச்
சதிகேடருறவைத்தா னீக்கினால்-பர
கதிதருகுணங்குடி வாய்க்குமே(தாய்மார்)

௪. தாங்காதமையலுங் கருகுவர்பின்பும்மை
தளருநரையெருமை யாக்குவார்-தூங்கித்
தூங்கிவிழுந்தொத்த லானரம்பென்புந்
தோலுந்துருத்திரி மாக்குவார்-முகம்

வீங்கித்தலைநடுங்கிக் கையுங்காலுமுடங்கி
மேவடிக்கையாங்கிழவி யாக்குவார்-மூச்சை
வாங்கிக்கொக்குக்கொக்கென் றிருமியிருமிக்கொண்டு
வலிக்குங்கிடைபிணமு மாக்குவார்-அந்த
தீங்கர்களுறவைத்தா னீக்கினால்-அருள்
ஓங்குங்குணங்குடி வாய்க்குமே(தாய்மார்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மாவர்நோ முகத்தின் மயிர்விரித் தோரெல்லா, மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மெவனவன்காண் குணங் குடிபால் விரைந்து கொண்டோன், மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மாகாதா னெதற்காவான் விசைபோ டென்போல், மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மொன்கூட மூலைவிட்டு வெளிவராமே.

கண்டனம்.

இராகம்-அடாணா-தாளம்-சாப்பு.

பல்லவி.

மீசையுள்ளாண்பிள்ளைச் சிங்கங்களென்கூட
வெளியினில் வாருங்கள்காணும்

அநுபல்லவி.

நாசிகிரம்பவு மயிர்தா-னிரண்டுகால்
நடுவினுமொருகூடை மயிர்தான்
ரோசங்கெடுவார்களென் கடைமயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசை)

சரணங்கள்.

க. படிக்கும்படிநடக்கப் படிக்காலோபிகள்மோக்ஷப்
பதமற்றுப்போனாலும் போகட்டும்-அவர்
முடிக்குமுடிதரித்து முடியமுடியவாழ்ந்து
முடிந்துமுடிபோனாலும் போகட்டும்-இன்னும்
குடிக்நக்கஞ்சியுமற்றுக் குண்டிக்குந்துணியற்றுக்
குருடராய்ப்போனாலும் போகட்டும்-என்னை
அடித்தாலுமெனும்பெல்லாமொடித்தாலுமவர்க்கஞ்சேன்
அடித்தாலடித்துக்கொண்டு போகட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

உ. மடையரெல்லாங்கூடி கூத்தாடிக்கூத்தாடி
வையாளிபோட்டாலும் போடட்டும்-இன்னும்
விடியவிடியவும் பரத்தையர்மடிகளில்
விளையாடினும்விளை யாடட்டுங்-கள்ளுக்
குடியரெல்லாங்கள்ளைக் குடித்துகுடித்தவர்கள்
குடிகெட்டுப்போனாலும் போகட்டும்-ஞானம்

படியாரெல்லாமென்னைப்பழித்துப்பழித்துக்கொண்டு
பகைத்தாற்பகைத்துக்கொண்டு சாகட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

௩. நெடுமரம்போலோங்கி வளர்ந்துமறிவற்றவர்
நெருப்புண்ணப்போனாலும் போகட்டும்-அவர்
இடுகுட்டிச்சுவரைப்போ லிருந்தென்னவிறந்தென்ன
எப்படிப்போனாலும் போகட்டும்-இன்னுங்
கொடும்புமிடும்பும்வம்புங் குடிகேடுங்குடிகொண்டு
கூத்தாடினாலுங்கூத் தாடட்டும்-என்னை
மடியிற்கைபோட்டிழுத் தலகிலைடிபோட்டு
மல்லாடினாலுமல் லாடட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

௪. கடிநாய்க்குட்டிகளான படுசுட்டிகண்மாயைக்
கதவிடுக்கினிற்பட்டே சாகட்டும்-புலிக்
கடுவாய்க்குங்கொடிதான படுநோக்கிலிகள்சும்மா
கடுநரகில்விழுந்தே வேகட்டும்-சுற்றங்
கெடுபூண்டாகமுளைத்த கொடுமாடுபிடிங்கிகள்
கெடுபூண்டுகளாய்த்தானே போகட்டும்-இன்னும்
நெடுமரம்போற்கொத்த மடவொப்பாங்குடிக்கிகள்
நெடுமரம்போற்றானே யாகட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாகாமற் செத்திருக்குஞ் சற்குருவின் குணங்குடியைச் சார்ந்தோ மாகிற், சாகாமற் செத்திருக்குஞ் சாயுச்ய பதந்தருஞ் சாட்சாதி யாக்குஞ், சாகாமற் செத்திருக்குந் தன்மயத்தோர்க் குற்ற பெருந் தகையுங் காட்டுஞ், சாகாமற் செத்திருக்கு முத்தியுஞ் சித்தித்திடுங்காண் டனக்குத் தானே.

இராகம்-பரிசு-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோங்குணங்குடிக்கெல்லோரும்-புறப்படுங்கள்
போவோங்குணங்குடிக்கெல்லோரும்.

அநுபல்லவி.

பாவங்கள்சோர்ந்திடுங் காய்ந்திடுநீந்திடும்
மாய்ந்திடுமோய்ந்திடுந் தீய்ந்திடுமிக்ஷணம் (போ)

சரணங்கள்.

௧. அண்டம்புவனங்கொண்ட நிட்டை-சாதிக்கவழியா
முண்டம்முழுதும்பட்ட கட்டை-மணித்தேரோடு

தண்டிகையானைகுதிரை பொட்டை-வைத்தேறிவாழுஞ்
சண்டியுடலொட லொட்டை-மின்னார்களின்பங்
கொண்டுமயக்கிக்காம வெட்டை-நஞ்சுண்டுசாமி
ரண்டுங்கெட்டவினைபேய் மட்டை-அவனுக்கந்தத்
தொண்டாசைகால்ரண்டுந்தான் குட்டை-விழிகுருடர்
நண்டளந்தநாழியவர்நமக்கேன்காணாந்தத்தெஷ்டை (போ)

௨. கோத்திரலாணையானபொய்க் கூடு-ஒருவருக்குஞ்
சாற்றங்காகாநாற்றக்கரு வாடு-சொறிமலமு
மூத்திரமுமூற்றிவைத்த வோடு-இடுமடையர்
போற்றுதற்கேற்றசண்டி மாடு-உயிர்விடுக்குங்
கூற்றுவன்கையாயுதத்திற் கீடு-எங்கெந்தத்திங்கிற்
பார்த்தாலும்பிறனுள்ள வீடு-சமைக்கெடுத்த
சோற்றுற்குவித்துவைத்த மேடு-இவையறியார்
ஏற்றபடிகெட்டலைவரேனமக்கு மந்தங்-கேடு (போ)

௩. செட்டுசெய்யவேண்டிய தில்லை-பரதேசிகள்
சட்டிபெடுப்பதுவுந் தொல்லை-பிச்சைநஞ்சிக்குத்
திட்டமுடன்வேணுமோ கல்லை-உறங்குதற்குக்
குட்டிச்சுவர்களிலுண் டெல்லை-ஈடுநமக்குப்
பட்டினத்திலெவரு மில்லை-அறிவுகெட்ட
மட்டியறியாளிந்தச் சொல்லை-மனக்குரங்கைக்
கட்டிவைத்தாலுங்காட்டும் பல்லை-அதைப்பிடித்த
துட்டமாமாயைப்பசாசைத்துரத்தித்துரத்திக்கொல்ல (போ)

௪. சோமனுதயம்பாடு சாயும்-எழுஞ்சூரியன்
நாமமில்லாமலறத் தேயும்-பரவெளியில்
நேமமுடன்சுழினை யாயும்-மதியமிர்த
வாமமடைதிறந்து பாயும்-தத்வாதியோடு
காமக்குரோதங்களைத் தீயும்-தீயாதுயோக
பூமியினையுமரு ணையம்-விளைந்தபோகம்
நாமோனைக்கொள்ளும்படி ஞாயம்-கிடைப்பதற்குச்
சாமுன்செத்தசற்குருபாதம் சார்ந்திருப்பதுவேயுபாயம் (போ)

௫. நொங்கும்நுரையுமாகப் பொங்கும்-காமக்கடலுள்
முங்கும்பாவியுடலைச் சொங்கும்-சொறிசிரங்கும்
வங்குந்நமநமென்று திங்கும்-நரம்புந்தோலுந்
தொங்குமினுமினுப்பு மங்கும்-இல்லந்துறந்த
சிங்கங்கட்கில்லைகாணும் பங்கம்-மேனியுயர்ந்த
தங்கமயமாய்மின்றி லங்கும்-அவர்கட்கன்றோ
தங்குஞ்சாயுச்யபதந் தங்கும்-நமக்குமதிற்
பங்குந்தந்துதவிப் பராபரமருளிரங்கும் (போ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று ளாய்ந்து பார்த்தேன், ஐயன்குணங் குடியானை யன்றிவே றொன்று மென்னு ளாய்க்காணேன், ஐயன்குணங் குடியானேயானேயென் றறிந்தபின் னென்னறிவாய் நின்ற, ஐயன்குணங் குடியானே யதிமோகத் திரு நடனம் மாடுவானே.

இராகம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

அதிமோகத்திருநடனம் புரிந்தானெங்கள்
ஐயன்குணங்குடியான்

அநுபல்லவி.

அதிமோகத்திரு நடனம்புரிந்தானையன்
ஆர்க்குந்தெரியாதென் றன் மூக்குமுனைக்குமேனின்று (அதி)

சரணங்கள்.

க. கஞ்சினிகளைப்போலுங் காலிற்சதங்கை தொட்டுக்
கானன்மயில்போனின்றுகளித்து நடனமிட்டு
வஞ்சியர்க்காளாக்க வருமூவாசையை விட்டு
வஞ்சநமனைக்காலா லுதைத்தொருகான்மட்டு
மடித்துக்கொண்டெனக்கையிற் பிடித்துக்கொண்டருண்முறை
படித்துக்கொண்டொத்தன்பு துடித்துக்கொண்ட (அதி)

உ. முத்திக்கெதிர்நின்று முச்சடரும்பம்பர மாட
மோகமணிமாலைபொன் முலைமேற்பின்னலு மாட
வருத்தபரஞ்சோதிநின் றருகிற்பாய்ந்து பந்தாட
வாலையம்பிகைகாலை மடித்து நடனமாட
வடித்துக்கொண்டமிர்தத்தைக் குடித்துக்கொண்டானந்தம்
படித்துக்கொண்டடிக்கடி நடித்துக்கொண்ட (அதி)

ந. பஞ்சரிக்கும்பல மறைகடாளங்கள் போடப்
பரிபூரணானந்தம் படிந்துமத்தளம் போடக்
கொஞ்சுமனவாசியுங் கொஞ்சிவையாளிகள் போடக்
கோலாகலங்கள்பாடிக் கூத்துமேற்கூத்துகள் போடக்
குதித்துக்கொண்டவன்றனை மதித்துக்கொண்டருடன்னை
பதித்துக்கொண்டெனைவாழ்த்தித் துதித்துக்கொண்ட (அதி)

ச. கலசநிறையமிர்த கதிருமிழ்மதிப் பாலை
கலகலெனவேபூட்டிக் களைதீர்க்கமணி மாலை
மலைபோலெழுந்துவந்து மகிழ்ந்திந்தப்பயன் மேலே
மாருக்கருணைவைத்து வைத்துத்தலைமேற் காலை
மடித்துக்கொண்டவன்பல்லை கடித்துக்கொண்டெமன்னைக்கை
ஒடித்துக்கொண்டுமெய்த்தவம் முடித்துக்கொண்ட (அதி)

கீர்த்தனைகள் -முற்றிற்று.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

எங்கள்குணங் குடியானே யெண்ணரும்பே ரருளாய் நின்
றிலங்கை யாலே, எங்கள்குணங் குடியானே யெண்ணரும்பே ரரு
ளேயென் றிறைஞ்ச வேண்டும், எங்கள் குணங்குடியானே யெண்
ணரும்பே ரருளேயென் றிறைஞ்சி நின்றால், எங்கள்குணங் குடி
யானே யெண்ணரும்பே ரருளாய்நின் றிரங்கு வானே.

ஆனந்தக்களிப்பு.

எங்கள்குணங்குடி யானே-நமக்
கின்னுமருள்புரிவானடிமானே (எங்கள்)

அத்துவிதப்பொருள்காப்பாம்-எனக்
கானந்தமானபராபரங்காப்பாம்
கர்த்தவியத்தருள்காப்பாம்-என்று
காட்டத்தன்காரணங்காப்பருளித்தான்-எங்கள். (௧)

முத்தரெல்லாரையும்போற்றாய்-தவ
மோனநிலைக்குருநாதனைப்போற்றாய்
சித்தரெல்லாரையும்போற்றாய்-என்று
சிறந்குந்தன்போற்றுதலையருளித்தான்-எங்கள். (௨)

கட்டுப்படாவச்சிமட்டங்-காலைக்
கட்டவறியாரைக்காலினால்வெட்டும்
வெட்டியகால்களைவெட்டும்-என்று
வேகத்துடனேவிதித்தருளித்தான்-எங்கள் (௩)

மூலப்பிராணனைநோக்கும்-நோக்கின்
முத்திவீடுமுமக்கேவந்துசாய்க்கும்
வாலப்பிராயமும்வாய்க்கும்-என்று
வாசியினாற்றமகிழ்ந்தருளித்தான்-எங்கள். (௪)

பன்னிருகால்வெளிமானே-வெளி
பாயாமலுள்ளே மடக்கிடத்தானே
சென்னியிலூறுஞ்செந்தேனே-என்று
சிந்தைவைத்துக்கட்டித்தந்தருளித்தான்-எங்கள். (௫)

தேகாபிமானத்தைவெல்லும்-யோக
தீக்ஷைபெற்றோர்க்கு மனமதிற்செல்லும்
மோகாதிபோகத்தைவெல்லும்-என்று
முற்றச்செய்தேமுழுதும்மருளித்தான்-எங்கள். (௬)

ஆயுங்கலையைக்குறைக்கும்-ஆறும்
அங்கணக்கோபுரவாயிற்றிறக்கும்
பாயும்மதிப்பால்சுரக்கும்-என்று
படிக்கும்படியேறும்படிக்கருளித்தான்-எங்கள். (௭)

மூலக்கனலினைமூட்டும்—ஒளி
 மூக்குமுனையிற்றிருநடனங்காட்டும்
பாலைக்கறந்துனக்கூட்டும்-என்று
 பட்சம்வைத்தென்னைப்படைத்தருளித்தான்-எங்கள். (௮)

கண்டங்கடத்திவைத்தேற்றும்-இன்னும்
 காரணமானகடவுளைப்போற்றும்
மண்டியமிர்தத்தைத்தேற்றும்-என்று
 மாசிலுபதேசம்வைத்தருளித்தான்-எங்கள். (௯)

கற்பமுறைநையிற்காட்டும்-வருங்
 காலரைக்காலாலுதைத்துவிட்டோட்டும்
அற்பவுடற்கமுதூட்டும்-என்று
 ஆசைபூட்டிபூட்டியாண்டருளித்தான்-எங்கள். (௧௦)

ஒங்காரதீக்ஷையுஞ்சொல்லும்-நாளும்
 உன்றனைக்கொல்லுமனந்தனைக்கொல்லும்
ஆங்காரந்தன்னையும்வெல்லும்-என்று
 ஆகரித்தாதரித்தாண்டருளித்தான்-எங்கள். (௧௧)

ஒங்காதுயோகமும்வாய்க்கும்-தீப
 நெற்றிக்கண்மத்தியில்வைத்தொளியாக்கும்
தூங்காததூக்கமுந்தூக்கும்-என்று
 தூண்டித்தூண்டிமுச்சுடரருளித்தான்-எங்கள். (௧௨)

பாங்கானஞானம்படைக்கும்-ஐந்து
 பாழ்ப்புலவேடரைப்பல்லையுடைக்கும்
தாங்காதமையல்கிடைக்கும்-என்று
 சாதுரியமாய்த்தடுத்தருளித்தான்-எங்கள். (௧௩)

மேலூருவெட்டியைக்கூடும்-கூடி
 மேலைமுச்சந்தியில்வையாளியோடும்
காலாறிக்கொள்ளவுநாடும்-என்று
 காட்டாமற்காட்டிக்கணித்தருளித்தான்-எங்கள். (௧௪)

வஞ்சியராசையைவிள்ளும்-விழி
 மாயாமயக்கத்தைவிணென்றுதள்ளும்
நொஞ்சிக்குதிரைமேற்கொள்ளும்-என்று
 கோபத்தைக்காட்டிக்குணமருளித்தான்-எங்கள். (௧௫)

பாலைப்புசித்திடவேண்டும்-என்றும்
 பராபராமுன்றன்பார்வைக்குத்தோன்றும்
காலைப்பிடித்திடமீண்டும்-என்றும்
 கள்ளக்கனமாய்க்கதியருளித்தான்-எங்கள். (௧௬)

தூலத்தையுங்கெட்டியாக்கும்-பின்பு
சூக்ஷத்தைக்காணமிகவெளிதாக்கும்
ஞாலத்தையும்விட்டுநீக்கும்-என்று
ஞாயமொப்பித்துநவின்றருளித்தான்-எங்கள். (கஎ)

முண்டங்கென்றுமுபதேசம்-ஓதும்
மூன்காலிறுதங்கலீரென்றுபேசும்
கண்டங்கடக்கவுங்கூசும்-என்று
கண்டங்கடக்குங்கணக்கருளித்தான்-எங்கள். (கஅ)

தங்குதல்தம்பித்தலாகும்-நின்று
தங்காதுகும்பித்தல்ரேசித்தலாகும்
பொங்குதல்பூரித்தலாகும்- என்று
பூசைமுறையும்புகன்றருளித்தான்-எங்கள். (ககூ)

முப்பாழ்முடிந்ததும்புத்தி-அந்த
மூன்றுக்குமுந்திநடந்ததுசித்தி
அப்பாழ்விடிந்ததுவெற்றி-என்றே
யாருமறியாவறிவருளித்தான்-எங்கள். (உ0)

பொற்ப்ரபைபோலொளிபூணும்-அதிற்
பொல்லாதகாயமிறந்திடுங்காணுஞ்
செப்புதற்கும்மனநாணும்-என்று
செப்பித்திரித்திச்சிரித்தருளித்தான்-எங்கள். (உக)

சோம்பலுந்தூக்கமுநீக்கும்-போது
சுகமதுகொள்ளவும்போகாமலாக்கும்
பாம்பானபெண்ணாசைபோக்கும்-என்று
பாவிமுகத்தையும்பார்த்தருளித்தான்-எங்கள். (உஉ)

ஓங்காரவீடுகிடைக்கும்-அதன்
ஒன்பதுவாயிலுமொக்கவடைக்கும்
தேங்காயுங்கல்லையுடைக்கும்-என்றும்
தேங்காய்தனைத்தின்னும்பாங்கருளித்தான்-எங்கள். (உங)

சுத்தனருளுங்கைகூடும்-முகக்
கண்முன்பரவொளிபம்பரமாடும்
சித்தகனைத்தினந்தேடும்-என்று
வேதத்தினல்விவரித்தருளித்தான்-எங்கள். (உச)

பூட்டையுடைத்திடவேணும்-மனப்
பூட்டையுடைக்கவைராக்கியம்வேணும்
ஓட்டையுடைத்துக்கொள்ளாணும்-என்றே
ஒருவர்க்குமாகாவுரையருளித்தான்-எங்கள். (உரு)

மூடியமாயைவிடியு-முன்னை
மோசப்படுத்துமூவாசைமடியும்
ஓடியமிர்தம்வடியும்-என்றே
ஓதாமலோதியுரைத்தருளித்தான்-எங்கள். (உசு)

எட்டெட்டையோரெட்டுட்கட்டுந்-தூக்கும்
எண்ணான்கையுமந்தவோரெட்டுகட்டும்
முட்டுமீரெட்டையுங்கட்டும்-என்று
முன்னான்கைக்கட்டிமுடித்தருளித்தான்-எங்கள். (உஎ)

பொங்குந்திருவருள்வாழி-பரி
பூரணமானபரம்பொருள்வாழி
தங்குங்குருவருள்வாழி-என்று
தன்னருள்வாழியைத்தானருளித்தான்-எங்கள். (உஅ)

வாழி விருத்தம்.

வாழிமேல் வாழி வாழி மருள்வாரி வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி மருணேயம் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழுஞ் சிவஞானம் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழுங் குணங்குடி வாழி வாழி.

ஆக பாடல் - 1011.

மஸ்தான்சாகிபு அவர்கள் பாடல்

முற்றிற்று.

பிசுமில்லாகி

மஸ்தான் சாகிபு அவர்கள்

திருப்பாடலகராதி